T. N. L.A. Debates

OFFICIAL REPORT

VOL: XL No: 1 and 2, 3

FEB 11 and 2, 4

1983

C

D
211,31 N83
N83.40.1-3
135925

MISSIONER OF TAMILNADU
...IVES & HISTORICAL RESEARCH
24 SEP
EGMORE, MADRAS-8

Sno 140(S5/5
2655

தமிழ் நாடு

# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

...வாய்க்கிழமை 1983 பிப்ரவரி 1-தொகுதி XL எண் 1

**'uesday 1st February 1983—Volume XL No. 1**

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை—600009

**Legislative Assembly Department, Fort St. George, Madras-600009**

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கூடும் ஏழாவது சட்டமன்றப் பேரவையின் ஆறாவது கூட்டத்தொடர்.

உள்ளடக்கம்.

1-2-1983.

(i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

(ii) Personnel of the Government of Tamil Nadu

(iii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

(iv) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியல் (தொகுதிகள் உள்பட அகரவரிசையில்.


1. இரங்கல் குறிப்பு:
முன்னாள் உறுப்பினர் திரு. கே. மாரப்ப கவுண்டர மறைவு. 1—2

2. வினாக்கள்—விடைகள்:
உடுக்குறியிட்ட வினாக்கள். 2—37

3. தகவல் கோரல்:

(அ) உறுப்பினர்கள் விடுதியில் மின்தூக்கி, தொலைபேசி சரிவர இயங்காமை 37—38

(ஆ) தஞ்சையில் அரிசித் தட்டுப்பாடு 39

(இ) அரசாங்க விழாக்களில் தொகுதி உறுப்பினர்கள் இடம் பெறச் செய்வது. 40—41

(ஈ) உறுப்பினர்கள் விடுதியில் தண்ணீர் தட்டுப்பாடு 41

4. கவன ஈர்ப்பு:
கஸ்தூரிபாய் காந்தி மருந்துவமனையில் அரசு மருத்துவர் இறப்பு 41

5. அறிவிப்புகள்:

(அ) கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1983 (ஆ.இ) 47

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

Governor of Tamil Nadu.

Thiru S. SUNDAR LAL KURANA.

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Hon. Thiru M. G. RAMACHANDRAN (Chief Minister)—Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Deputy Collector, Police, Prevention of Corruption, Planning, Molasses and Archaeology.

2. Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Finance)—Finance, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. Hon. Thiru S. RAMACHANDRAN, (Minister for Electricity. Electricity, Iron and Steel Control.

4. Hon. Thiru K. A. KRISHNASAMY. (Minister for Rural Industries) Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. Hon. Thiru S. D. SOMASUNDARAM (Minister for Revenue)— Revenue, Commercial Taxes, Excise and Census.

6. Hon. Thiru R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments) – Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and Grant of Liquor Permits.

7. Hon. Thiru C. ARANGANAYAKAM. (Minister for Education)—Education including Technical Education, Official Language and Handlooms.

8. Hon. Dr. K. KALIMUTHU (Minister for Agrtculture), Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. Hon. Thiru C. PONNAIAN, (Minister for Co-operation and Law) Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. Hon. Thiru P, KULANDAIVELU. (Minister for Local Administration), Municipal Administration Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

(ஆ) கேளிக்கை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1983. (ஆ.இ.) — 57

6. அரசினர் சட்ட முன் வடிவுகள்:

(அ) கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன் வடிவு, 1983. — 48

(ஆ) கேளிக்கை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1983. — 51

7. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்- விவாதம் (தொடர்ச்சி). — 52

| | |
|---|---|
| திரு. சோ. அழகர்சாமி | 52—67 |
| திரு. குமரி அனந்தன் | 67—83 |
| திரு. என். சங்கரய்யா | 83—104 |
| திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப் | 104—121 |
| மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு | 117 119, 121 |
| மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் | 57—61,105—108 |
| மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே | 20—22, 42-47 |
| மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் | 77 |

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். — 121—1_3



D
Y211,31 N83
N83 . 40.1-3
135925
சென்னை-600 008


தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

தமிழ்நாடு ஆளுநர்

திரு சுந்தர்லால் குரானா.

அமைச்சரவையின் உறுப்பினர்கள்!

1 மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) —பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல். இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரை பாகு கழிவு, தொல்பொருள் இயல்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்) —நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன்வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு,முன்னாள் ராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்) —மின்சாரம், இரும்பு எஃகுக் கட்டுபாடு.

4 மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் துறை அமைச்சர்). கிராம குடிசை சிறுதொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் திப்புத்துறை, முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் [வருவாய்த்துறை அமைச்சர்)— வருவாய்கள், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு இராம. வீரப்பன் [செய்தி அறநிலையத் துறை அமைச்சர்] — செய்தி மற்றும் விளம்பரம், திரைப்பட தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக்கழகம், திரைபடச்சட்டம், இந்து அறநிலையத்துறை, வனங்கள், சின்கோனா, மது அனுமதிச் சீட்டு வழங்கல்,

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் [கல்விஅமைச்சர்]— தொழில் நுட்பக்கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சிமொழி, கைத்தறி

8. மாண்புமிகு டாக்டர். கா. காளிமுத்து [வேளாண்மைத்துறை அமைச்சர்) — வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் [கூட்டுறவு—சட்ட அமைச்சர்] —சட்டம் நீதிமன்றங்கள் சிறைகள், எடைகள் மற்றும் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல் நிறுவனங்கள் பதிவு, கடன் வழங்கல் மீதான நிவாரணச்சட்டம், சீட்டு பற்றிய சட்டம், கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித்துறை அமைச்சர்) நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் சமுதாய வளர்ச்சி, கிராமப்புறக் கடன் நிவாரணம், பூமிதானம் கிராமதானம், நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) — தொழிலாளர் வீட்டுவசதி, குடிசைமாற்று வாரியம், புள்ளிவிவரங்கள் தமிழ்நாடு, குடிநீர்வடிகால் வாரியம் நகரஅமைப்பு. இடவசதிக்கட்டுப்பாடு.

12, மாண்புமிகு டாக்டர். எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) —மக்கள் நல்வாழ்வுத்துறை.

13. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (நீர் பாசனத்துறை அமைச்சர்) —வேளாண்மைப் பணி, கூட்டுறவு சங்கங்கள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத்திட்டங்கள், வஃப்,

14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்கு வரத்துத்துறை அமைச்சர்)— அரசுடமையாக்கப்பட்ட போக்குவரத்து இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (தொழில்துறை அமைச்சர்)— பெருந்தொழில்கள், சுரங்கங்கள், கனிப் பொருள்கள் நெசவாலைகள்,

16. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் (கதர்மற்றும் பொதுபணித்துறை அமைச்சர்)-கதர், மது அனுமதிசீட்டு வழங்கல், நீங்கலாக மது விலக்கு பயண இசைவுச் சீட்டு பொதுப்பணித் துறை மற்றும் பொதுப் பணித் துறை அலுவலகள் சம்பந்தமாக.



215

17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்)—ஆதிதிராவிடர் நலம், எழுதுபொருள், அச்சுத் துறை, அரசுஅச்சகம், அச்சு காகிதக்கட்டுபாடு, மலைவாழ்பழங்குடியினர் பிணைத்தொழிலாளர், வேலைவாய்ப்புபயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதிசீனிவாசன் (சமூகநலத்துறை அமைச்சர்)— மகளிர் குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூகநலம் கால்நடைப் பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அநாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப் பட்டவர்கள் நலம் சீர்திருத்த நிர்வாகம்.

11. Hon. Thiru S. RAGHAVANANDHAM (Minister for Labour)—Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. Hon. Dr. H. V. HANDE (Minister for Health) Health.

13. Hon. Thiru K. RAJA MOHAMMED (Minister for Irrigation —Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. Hon. Thiru S. MUTHUSAMY (Minister for Transport) Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. Hon. Thiru S. THIRUNAVUKKARASU (Minister for Industries)—Large Scale Industries, Mines and Minerals and Textiles.

16. Hon. Thiru S. N. RAJENDRAN (Minister for Public Works and Khadi) Handlooms, Khadi, Prohibition excluding grant of Liquor permits, Passports Public Works Department and Establishment matter relating to Public Works Department.

17. Hon. Thiru M. VIJAYASARATHI (Minister for Adi-Dravidar Welfare)—Adi-Dravidar Welfare, Stationery, and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. Hon. Thirumathi GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare)— Social welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indian Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

### பேரவைத்தலைவர் ;

*மாண்புமிகு திரு. க. இராசாராம்.

### பேரவைத் துணைத்தலைவர்:

*மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

### ** மாற்றுத்தலைவர்கள் பட்டியல்.

1. திரு. க. பாலசுப்பிரமணியன்.
2. திரு. ஆர். டி. கோபாலன்.
3. திரு. ப. பொன்னுரங்கம்.
4. திருமதி. தா. இராசம்பாள்
5. திரு. கு. ரமணி.

### சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி.மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன்.

திரு. இரா. பாலகுரு, பி.ஏ.

திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ.பி.ஜி.எல்.

திரு. கா. சீனிவாசன். பி. எஸ். சி. (குழு அலுவலர்.)

திரு. வி. சீதாராமன், பி. காம்., பி.ஜி.எல். (சார்புச் செயலாளர்)

திரு. பெ.பள்ளிக்கொண்ட பெருமாள், பி. ஏ., பி. எல். (சார்புச் செயலாளர்.)

திரு. செ.சு. ஜானகிராமன், பி.ஏ, பி.எல். (சார்புச் செயாலாளர்)

திரு. பெ. பாலகிருஷ்ணன், பி. காம். (சார்புச்செயலாளர்.)

திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி. ஏ. (சார்புச் செயலாளர்.)

திரு. கே. தியாகராஜன் பி.ஏ. பி. எல். (எஸ்டேட் அலுவலர்)

திரு. பி. கோதண்டராமன் (பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்.)

திரு. சீ. பாலசுப்பிரமணியன் (தலைமை நிருபர்). (விவாதப் பதிப்பாளர்.)

திரு. வி. இராமச்சந்திரன், எம். ஏ., எல். எல். பி.

---

*21— 6— 1980 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.

** 27—1—1983 அன்று நியமனம் செய்யப் பெற்றார்கள்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப் பெற்ற) பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும் (1) | தொகுதியின் பெயர் (2) |
|---|---|
| 1. அங்குசாமி திரு.ச. | திருவாடானை |
| 2. அண்ணாதாசன் திரு. எம். | திருவரும்பூர் |
| 3. அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர் |
| 4. அப்பாதுரை, திரு. மு. | ஓட்டப்பிடாரம் (செ.வ) |
| 5. அம்பிகாபதி, திரு. மு. | மன்னார்குடி |
| 6. அரங்கநாதன், திரு. எஸ். | தர்மபுரி |
| 7. அரங்கநாதன், திரு. மு. | கூனூர் (செ.வ.) |
| 8. அரங்கநாயகம், திரு. செ. | கோவை (மேற்கு) |
| 9: அரங்கராசன், திரு. வெ. | உப்பிலியாபுரம் |
| 10. அருணகிரி, திரு. இரா. | திருப்புத்தூர் |
| 11. அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ.வ) |
| 12. அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி |
| 13. அன்பழகன், திரு. க. | புரசைவாக்கம் |
| 14. அன்பழகன், திரு. தி. | நாட்ராம்பள்ளி |
| 15. அன்பில் தர்மலிங்கம், திரு. | லால்குடி |
| 16. ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 17. ஆண்டித் தேவர், திரு. எஸ். | உசிலம்பட்டி |
| 18. அறுமுகம், திரு. எம். | அவினாசி (செ.வ.) |
| 19. சேலம் ஆறுமுகம், திரு. மு. | சேலம்—2 |
| 20. ஆறுமுகம், திரு. த. | அரியலூர் |
| 21. அனூர் ஜெகதீசன், திரு. பு.கோ. | செங்கல்பட்டு |
| 22. இரத்தினம், திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 23. இராச குமார், திரு. மெ. அ. | மருங்காபுரி |
| 24 இராசமாணிக்கம், திரு. இ. ரெ. | குத்தாலம் |
| 25 இராசரத்தினம், திரு. து. | பூந்தமல்லி |
| 26 இராசாம்பாள், திருமதி. தா. | தலைவாசல் (செ.வ) |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 27 | இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 28 | இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம் |
| 29 | இராசு, திரு. ஜே. எஸ். | பெரம்பலூர் (செ.வ.) |
| 30 | இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி |
| 31 | இராமச்சந்திரன், திரு. எம்.ஜி. | மதுரை (மேற்கு) |
| 32 | இராமச்சந்திரன், திரு கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 33 | இராமச்சந்திரன், திரு. ச. | பன்ருட்டி |
| 34 | இராமச்சந்திரன், திரு செஞ்சி. ந. | செஞ்சி |
| 35 | இராமசாமி, திரு. எஸ்.என். | சாத்தான்குளம் |
| 36 | இராமசாமி, திரு. த. | இராமநாதபுரம் |
| 37 | இராமசுப்பிரமணியன் திரு. இ. | ஸ்ரீவைகுண்டம் |
| 38 | இராமலிங்கம், திரு. ஏ. | காட்டுமன்னார் (செ.வ.) |
| 39 | இராமலிங்கம், டாக்டர். கே.பி. | இராசிபுரம் |
| 40 | இராமலிங்கம், திரு. செ. | திருவிடைமருதூர் |
| 41 | இராஜசேகரன், திரு. வே. | இராதாகிருஷ்ணநகர் |
| 42 | இராஜாராம்நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி |
| 43 | இராஜேந்திரன், திரு. எஸ்.எஸ். | ஆண்டிப்பட்டி |
| 44 | இளையபெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ.வ.) |
| 45 | ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம். திரு. பி. | அம்பாசமுத்திரம் |
| 46 | உகம்சந்த், திரு. எஸ். டி. | மதுராந்தகம் |
| 47 | உச்சி, திரு. கே. | கூடலூர் |
| 48 | உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செவ) |
| 49 | உமாநாத், திரு. ரா. | நாகை |
| 50 | கண்ணன், திரு. ம. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 51 | கணபதி, திரு. கே. ஆர். | சிதம்பரம் |
| 52 | கணேசன், திரு. இ. | எடப்பாடி |
| 53 | கணேசன், திரு. சி. | அச்சரப்பாக்கம் (செ.வ. |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 54 | கந்தசாமி, திரு. கா.வே. | கிணத்துக்கடவு |
| 55 | கந்தசாமி, திரு. பி. | பொங்கலூர் |
| 56 | கபாலி, திரு. டி. கே. | மைலாப்பூர் |
| 57 | கருணாநிதி, டாக்டர். மு. | அண்ணாநகர் |
| 58 | கருப்பசாமிப்பாண்டியன், திரு. வி. | பாளையங்கோட்டை |
| 59 | கருப்பையா, திரு. இரா. | குளித்தலை |
| 60 | கருப்பையா, திரு. ஏ. டி. | வால்பாறை |
| 61 | கல்லன், திரு. கே. | உதகமண்டலம் |
| 62 | கலித்தீர்த்தான், திரு. கோ. | சங்கராபுரம் |
| 63 | கலியமூர்த்தி, திரு. பெ. | மங்களூர் (செ. வ. |
| 64 | கலையரசன், திரு. நன்னிலம். அ. | நன்னிலம் (செ. வ |
| 65 | காளிமுத்து, டாக்டர், கா. | திருப்பரங்குன்றம் |
| 66 | கிட்டப்பா, திரு. எஸ். | மாயவரம் |
| 67 | கிருஷ்ணசாமி, திரு. கா.கோ. | காங்கேயம் |
| 68 | கிருஷ்ணசாமி, திரு. கே, ஏ. | ஆயிரம் விளக்கு |
| 69 | கிருஷ்ணமூர்த்தி, திரு. சா. | ஆண்டி மடம் |
| 70 | கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம் |
| 71 | கிருஷ்ணராஜ், திரு. ஜி. | சேலம்—1 |
| 72 | கிருஷ்ணன், திரு. ரா. | வாசுதேவநல்லூர் |
| 73 | குப்புசாமி, திரு. என். | மொரப்பூர் |
| 74 | குப்புசாமி, திரு. கே. | ஒட்டன் சத்திரம் |
| 75 | குப்புசாமி, திரு. செ. | வந்தவாசி, (செ.வ.) |
| 76 | குமரி அனந்தன், திரு. | திருவெற்றியூர் |
| 77 | குருசாமி, திரு. ப. | அந்தியூர் (செ.வ.) |
| 78 | குலசேகர், திரு. ஏ. டி. | சிங்காநல்லூர் |
| 79 | குலசேகரப் பாண்டியன், திரு. ந. | வாணியம்பாடி |
| 80 | குழந்தைவேலு, திரு. ப. | உடுமலைப்பேட்டை. |
| 81 | அமிர்தராஜ், திரு. (வெற்றிடம்) | திருச்செந்தூர் |
| 82 | கோபால், திரு. சி. | சோளிங்கர் |
| 83 | கோபால கிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம் |

| | தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 85 | கோமதிசீனிவாசன், திருமதி | வலங்கை (செ.வ.) |
| 86 | கோவேந்தன், திரு. எம்.ஆர். | பேராவூரணி |
| 87 | கோவைத் தம்பி, திரு. | பேரூர் |
| 88 | சக்கரபாணி, திரு. ஆர். | பொன்னேரி |
| 89 | சங்கரய்யா, திரு. என். | மதுரை (கிழக்கு) |
| 90 | சட்டநாத கரையாளர், திரு. கி. | தென்காசி |
| 91 | சண்முகம், திரு. இரா. | திருத்தணி |
| 92 | சண்முகம், திரு. ஏ. சி. | ஆரணி |
| 93 | சத்தியமூர்த்தி, திரு. வ. | கடலாடி |
| 94 | சந்திரசேகரன், திரு. ஏ. | சோழவந்தான் |
| 95 | சபாபதி, திரு. சி. | ஆரூர் (செ.வ) |
| 96 | சமரசம், டாக்டர். கே. | காவேரிப்பட்டிணம் |
| 97 | சாகுல் ஹமீதுதிரு. ஏ. | கடையநல்லூர் |
| 98 | சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம் |
| 99 | சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 100 | சிதம்பரம், திரு. சி. த. | காரைக்குடி |
| 101 | சிவகாமி, திரு. செ. | இளையான்குடி |
| 102 | சிவஞானம், திரு. ந. | திருவோண்ம் |
| 103 | சிவப்பிரகாசம், திரு. சீ. | சேந்தமங்கலம் (செ.வ |
| 104 | சிவப்பெருமாள், திரு. மு. | ஓமலூர் |
| 105 | சிவராமன், திரு. எஸ். | சின்னசேலம் |
| 106 | சின்னசாமி, திரு. எம். | கரூர் |
| 107 | சின்னதுரை, திரு. ஏ. | மேல்மலையனூர் |
| 108 | சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |
| 109 | சின்னராசு, திரு. மா. | தொண்டாமுத்தூர் |
| 110 | சுந்தரம், திரு. கே. ஆர். | குடியாத்தம் |
| 111 | சுந்தரம், திரு. ப. | திருப்பத்தூர் |
| 112 | சுந்தரம், திரு. மு. | ரிஷிவந்தியம் |
| 113 | சுந்தரமூர்த்தி திரு. ஆர். | முகையூர் |
| 114 | சுந்தரராஜ், திரு. நா. | திருமயம் |
| 115 | சுந்தரராஜன், திரு. மு. | விருதுநகர் |
| 116 | சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை |
| 117 | சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ். | போடிநாய்க்கனூர் |

| | தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 118 | சுப்பிரமணியன், திரு. மா. | திருவையாறு |
| 119 | சுப்பிரமணியன், திரு. வி. | திருநாவலூர் |
| 120 | சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர் |
| 121 | சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி |
| 122 | செங்கோட்டையன், திரு. அ. | கோபிசெட்டிப்பாளைய |
| 123 | செம்மலை, திரு. செ. | தாரமங்கலம் |
| 124 | செல்லமுத்து, திரு. எம. | திருவாரூர் (செ.வ.) |
| 125 | செல்வராஜன், திரு. அ. | துறைமுகம் |
| 126 | சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ. | அரவக்குறிச்சி |
| 127 | சேதுராமன், திரு. ஏ. எம். | ஆற்காடு |
| 128 | சொக்கலிங்கம், திரு. கெ. | திருப்போரூர் |
| 129 | சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை |
| 130 | சோமு, திரு. என். வி. என். | பூங்காநகர் |
| 131 | சௌந்திரராஜன், திரு. கே. | திருச்சி-2 |
| 132 | டாக்டர். திரு. சௌரிராசன், கே. | தி. நகர் |
| 133 | தங்கமணி, திரு. | திண்டிவனம் |
| 134 | தங்கராசு திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 135 | தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம் செ.வ |
| 136 | தங்கவேலு, திரு. பி. | செயங்கொண்டான் |
| 137 | தவசி, திரு. ஆர். | பரமக்குடி (செ. வ.) |
| 138 | தனபால், திரு. ப. | சங்கரி (செ.வ.) |
| 139 | தனுக்கோடித் தேவர், திரு. கே. | முதுகளத்தூர் |
| 140 | தாமரைக்கனி திரு. இரா. | ஸ்ரீவில்லிப்புத்தூர் |
| 141 | தியாகராசன், திரு. ஆர். | விருத்தாச்சலம் |
| 142 | திருச்சி சௌந்திரராசன், ஆர். திரு. | ஸ்ரீரங்கம் |
| 143 | திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 144 | திருமாறன், திரு. பெ. | ஆலங்குடி |
| 145 | திருமான், திரு. இரா. | ஏற்காடு (செ. வ.) |
| 146 | திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம் |
| 147 | தீர்த்தராமன், திரு. ப. | பென்னகரம் |
| 148 | துரைசாமி, திரு. பி. எஸ். | பர்கூர் |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 149 | துரைமுருகன், திரு. | ராணிப்பேட்டை |
| 150 | துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 151 | துரைராஜ், திரு. பி. | சங்கரநயினார் கோவில் (செ.வ.) |
| 152 | தேவராஜ், திரு. வி. எம். | வேலூர் |
| 153 | நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர் |
| 154 | நரசிம்மன், திரு. பூ. மு. | பள்ளிப்பட்டு |
| 155 | நல்லப்பன், திரு. தி. கா. | பெருந்துறை |
| 156 | நவநீதகிருஷ்ண பாண்டியன் திரு. ஆர். | ஆலங்குளம் |
| 157 | நாச்சிமுத்து, திரு. கே. பி. | மேட்டூர் |
| 158 | நாராயணசாமி, திரு. கே. | திருவண்ணாமலை |
| 159 | நாராயணன், திரு. பி. டீ. | பவானி |
| 160 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | திருநெல்வேலி |
| 161 | நெடுமாறன், திரு. ப. | மதுரை (மத்திய) |
| 162 | பக்கீர் முகமது, திரு. இ. என் எம். | கும்பகோணம் |
| 163 | பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர் |
| 164 | பம்மல் நல்லதம்பி, திரு. | தாம்பரம் |
| 165 | பரமசிவ கவுண்டர், திரு. பி. எ. | பல்லடம் |
| 166 | பலராமன், திரு. இல. | போளூர் |
| 167 | பழனிசாமி, திரு. சு. | மேட்டுப்பாளையம் |
| 168 | பழனிமுத்து திரு. சி. | ஆத்தூர் |
| 169 | பழனியப்பன் திரு. கு. பா. | விழுப்புரம் |
| 170 | பழனிவேல், திரு. என். | பழனி (செ.வ.) |
| 171 | பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி |
| 172 | பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர் |
| 173 | பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு |
| 174 | பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ.வ.) |
| 175 | பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி |
| 176 | பாலகிருஷ்ணன், திரு. பி. | சிவகாசி |
| 177 | பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ.வ.) |
| 178 | பாலசுப்பிரமணியன், திரு. வி. பி. | வேடசந்தூர் |
| 179 | பாலன், திரு. சு. | பெரம்பூர் (செ.வ.) |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 180 | பாலுச்சாமி, திரு. ஏ. | சமயநல்லூர் (செ.வ.) |
| 181 | பிச்சை, திரு. எம். | அருப்புக்கோட்டை |
| 182 | பிரபாகரன், திரு. ஜே. சி. டி. | வில்லிவாக்கம் |
| 183 | புருஷோத்தமன், திரு. து. | சைதாப்பேட்டை சென். |
| 184 | பூங்காவனம், திரு. என். ஏ. | காட்பாடி |
| 185 | பெரியசாமி, திரு. ஏ. | தாராபுரம் (செ.வ.) |
| 186 | பெயசாமி, திரு. ரா. | தொட்டியம் (செ.வ.) |
| 187 | பெருமாள், திரு. என். | வரகூர் (செ.வ.) |
| 188 | பெருமாள், திரு. ரா. கு. | விளாத்திகுளம் |
| 189 | பொன்னம்மாள், திருமதி. ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.) |
| 190 | பொன்னுரங்கம், திரு. ப. | இராயபுரம், சென்னை. |
| 191 | பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| 192 | மணி, திரு. டி. | விளவங்கோடு |
| 193 | மணிமாறன், திரு. ஆர். | திருப்பூர் |
| 194 | மாணிக்கம், திரு. எம். எல். | வேதாரண்யம் |
| 195 | மாரிமுத்து, திரு. த. | குளத்தூர் (செ.வ.) |
| 196 | முகமது இஸ்மாயில், திரு. பி. | பத்மநாபபுரம். |
| 197 | முசிறிப்புத்தன், திரு. பி. | திருச்சி-1 |
| 198 | முத்துக்கிருஷ்ணன், திரு. சு. | கன்னியாகுமரி |
| 199 | முத்துசாமி, திரு. சு. | ஈரோடு |
| 200 | முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம் |
| 201 | முத்துவேல், திரு. என். | வானூர் (செ.வ.) |
| 202 | முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 203 | முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| 204 | முனுசாமி, திரு. மு. ப. | பாலக்கோடு |
| 205 | மூர்த்தி, திரு. ஜி. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 206 | மொக்கையன், திரு. பி. | ராஜபாளையம் (செ.வ.) |
| 207 | யசோதா, திருமதி. டி. | ஸ்ரீபெரும்புத்தூர் (செ.வ.) |
| 208 | ரகுமான்கான், திரு. அ. | சேப்பாக்கம் |
| 209 | ரங்கசாமி, திரு. ஆர். | சத்தியமங்கலம் |
| 210 | ரங்கசாமி, திரு. க. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 211 | ரமணி, திரு. கு. | கோயம்புத்தூர் (கிழக்கு) |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 212 ராம்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை |
| 213 ராஜமாணிக்கம், திரு. எம். கே. | முசிறி |
| 214 ரெத்தினராஜ், திரு. எஸ். | குளச்சல் |
| 215 வரதராஜன், திரு. என். | திண்டுக்கல் |
| 216 விசயலட்சுமி, செல்வி. வி. | வீரபாண்டி |
| 217 வின்சென்ட், திரு. மி. | நாகர்கோவில் |
| 218 விஜயசாரதி, திரு. எம் | அரக்கோணம் (செ. |
| 219 விஜயபாலன், திரு. என். | பூம்புகார் |
| 220 விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர் |
| 221 விஸ்வநாதன், திரு. கோ. | அணைக்கட்டு |
| 222 வீராசாமி, திரு. த. | ஒரத்தநாடு |
| 223 வீராணம்பலம், திரு. க. வெ. | மேலூர் |
| 224 வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. | காஞ்சிபுரம் |
| 225 வெங்கடரெட்டி, திரு. டி. | ஒசூர் |
| 226 வெங்கடேசன், திரு. பி. எம் | பெரணமல்லூர் |
| 227 வெள்ளைச்சாமி, திரு. ஆ. | ஆத்தூர் |
| 228 வேணுகோபால், திரு. த. | தண்டாரம்பட்டு |
| 229 வேலப்பன், திரு. சி. வி. | கபிலர்மலை |
| 230 ஜகத்ரட்சன், திரு. எஸ். | உத்திரமேரூர் |
| 231 ஜான் வின்சென்ட், திரு. மு. | நான்குனேரி |
| 232 ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி |
| 233 ஹாஜா செரீப், திரு. கே. எஸ். ஜி. | திருவல்லிக்கேணி |
| 234 ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டார் |
| 235 மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி | நியமன (உறுப்பினர்) |

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்கள்

1 மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்—அமைச்சர்
2 மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்
3 மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—அமைச்சர்
4 மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது—அமைச்சர்
5 திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி—தலைமை வழக்கறிஞர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1983, பிப்ரவரி 1

தை 19, துந்துபி திருவள்ளுவர் ஆண்டு 2014

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்

நுண்பொருள் காண்பது அறிவு."

தான் சொல்லுவதை எளிதாக விளங்கும் சொற்களால் பிறர் மனத்தில் பதியும்படி சொல்ல வேண்டும், பிறர் சொல்லும் சொற்களில் உள்ள நுட்பமான பொருளை ஆராய்ந்து அறியவும் வேண்டும். இவ்வாறு சொற்களைப் பயன்படுத்தும் ஆற்றலையும் புரிந்து கொள்ளும் திறனையும் உடையவரே அறிவுடையவர் ஆவார்.

### 1. இரங்கல் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் திரு. கே. மாரப்ப கவுண்டர் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. கே. மாரப்ப கவுண்டர் அவர்கள் 19-11-1982 ஆம் தேதியன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. மாரப்ப கவுண்டர் அவர்கள் 1957 ஆம் ஆண்டிலிருந்து 1962 ஆம் ஆண்டு வரையும் மற்றும் 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரையும் இரு முறை கோயம்புத்தூர் மாவட்டம் அவினாசி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். அவினாசி கூட்டுறவு ஒன்றியத்தின் தலைவராகவும், அவினாசி கூட்டுறவு பால் விநியோக சங்கத்தின் தலைவராகவும், அவினாசி கூட்டுறவு அங்காடியின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## இரங்கல் குறிப்பு

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நின்றனர்.)

## 2. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### புதுக்கோட்டை மாவட்டத்தில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 81—திரு. பெ. திருமாறன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—.

புதுக்கோட்டை மாவட்டம் அலங்குடியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடியில் துணை மின் நிலையம் அமைக்க நிலம் கையகப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இத்துணை மின் நிலையம் நடப்பு நிதி ஆண்டில் இயக்கி வைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. பெ. திருமாறன்: தலைவரவர்களே, ஆலங்குடியில் துணை மின் நிலையம் அமைக்க நீண்ட நாட்களாக அந்தத் திட்டம் பரிசீலனை செய்யப்பட்டு அந்த இடத்தைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது காலதாமதம் ஆவதால் அங்கேயுள்ள 110 கடலை மில்களும், ஏறக்குறைய 500-க்கும் மேற்பட்ட வடகாடு, கொத்தமங்கலம் பகுதிகளில் உள்ள பம்பு செட்டுகளும், நிஜாம் பேப்பர் மில்லும், மேலும் இன்னும் பல தொழிற்சாலைகளும் அங்கே நடைபெற்றுக் கொண்டிருப்பதால் இந்தத் துணை மின் நிலையத்தைத் துரிதப்படுத்திக் கட்டி முடித்தால் மின்சாரம் சீராகக் கிடைப்பதற்கு ஏதுவாக இருக்கும். எனவே, அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து துரிதப்படுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, 18-9-82 அன்று நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. அரசு விரைவில் இக்காரியத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கும்



### மேச்சேரி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளுக்கு வழங்கப்படும் மின்சாரம்,

*வினா எண் 82— திரு. செ. செம்மலை: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேச்சேரி ஊராட்சி ஒன்றிய பகுதிகளுக்கு மேட்டூர் துணை மின் நிலையத்திலிருந்து நேரிடையாக மின்சாரம் செல்லாமல் சுற்றுப்பாதை வழியாக நீண்ட தூரம் எடுத்துச் செல்லப்படுவதால் வோல்டேஜ் (Voltage) குறைந்து அதனால் விவசாய பம்ப் செட்டுகளின் காயில்கள் (Coils) தீய்ந்து போவதால் விவசாயம் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அப்படிப்பட்ட நிலைமையைப் போக்க அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) மேச்சேரி ஊராட்சி ஒன்றிய பகுதியின் கடைகோடி பகுதியில் சீரான மின் அழுத்தம் போதிய அளவு இல்லையென்று அரசு அறியும், விவசாய பம்ப் செட்டுகளின் காயில்கள் தீய்ந்துபோனதாகத் தகவல் இல்லை.

(ஆ) 3.85 கி. மீ. தூரத்திற்கு இரண்டு 11 கிலோ வோல்ட் உயர் மின் அழுத்த தொடர் அமைக்கப்பட்டுள்ளது. இதன் பயனாக இப்பகுதியில் வழங்கப்படும் மின்சாரத்தின் வோல்டேஜ் தற்போது உயர்ந்துள்ளது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத்தலைவரவர்களே, நீண்ட நாட்களாக இருந்து வந்த இந்தப் பிரச்னையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் தலையிட்டு பரிகாரம் செய்து கொடுத்ததற்காக என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மேச்சேரி ஒன்றியப் பகுதிகளுக்கு மேட்டூர் 1.10 கே. வி.யிலிருந்துதான் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேட்டூரில் புதிய தொழிற்சாலைகள் ஏற்பட்டுக்கொண்டு வருகின்றன, அந்த தொழிற்சாலைகளுக்கும் 1.10 கே. வி. யிலிருந்து மேச்சேரி ஒன்றியப் பகுதிகளுக்கும் தேவையான மின்சாரத்தை அந்த மின் நிலையம் சப்ளை செய்ய முடிவதில்லை. ஆகவே, புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கின்ற நங்கவல்லி துணை மின் நிலையத்திலிருந்து மேச்சேரி பகுதிகளுக்கும் மின்சாரம் விநியோகம் செய்வதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இது நல்ல யோசனை; கவனிக்கப்படும்.

### அந்தியூர் வனச்சரகக் காடுகளிலுள்ள யானைகள்

*வினா எண் 86—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் பவானி தாலுகா அந்தியூர் அருகே அரசுக்கு சொந்தமான காடுகளில் உள்ள யானைகளை கொன்று தந்தங்களை எடுப்பதாக அரசுக்கு 1981-ம் ஆண்டு புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** 2-2-1981-ல் வரட்டுப் பள்ளம் அணைக்கு அருகில் யானைத் தந்தங்களைக் கொண்டு வந்ததாக இருவர் கைது செய்யப்பட்டு வழக்கு நடைபெற்று வருகிறது. 4-2-1981-ல் செல்லம்பாளையம் வீட்டில் ஆள்வார் சரகத்தில் சந்தேகத்திற்கிடமான இரண்டு நபர்களை கைது செய்து கோபிச் செட்டிப்பாளையம் நீதி மன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகிறது. இதுபோன்ற குற்றங்கள் ஏற்படாமல் இருக்க கவனமாக இருக்கும்படி இப்பகுதி சரக அலுவலர்கட்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன் என்பது பழமொழி அந்தக் காலத்தில். இந்தக் காலத்தில் யானையைப் பாதுகாப்பது நமது கடமையாகிவிட்டது. யானையைத் தந்தங்களுக்காகக் கொல்லுபவர்களுக்குத் தூக்கு தண்டனை விதிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, சட்டம் எந்த அளவுக்கு அனுமதிக்கின்றதோ அந்த அளவுக்கு நடவடிக்கை எடுக்க அரசு முயற்சிக்கும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே கடலிலே மிகப் பெரிய பிராணியான நீர்த் திமிங்கலத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று சர்வதேச பாதுகாப்புக் கழகம் முடிவெடுத்து, ஜப்பானில் திமிங்கலத்தையே நம்பி உள்ள பெரிய தொழிற்சாலையையே மூடிவிட்டு, திமிங்கலத்தைப் பாதுகாக்கிறார்கள். எனவே நிலத்திலே பெரிய பிராணியான யானையைப் பாதுகாக்க சர்வதேச அளவில் ஏற்பாடு செய்ய அரசு முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, பெரிய மிருகங்கள் என்கிற அளவிலே மாத்திரம் அல்ல. எந்த மிருகங்களானாலும் அவை பாதுகாக்கப்படவேண்டும் என்று கடுமையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு இருக்கிறது.

**திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த யானைகளைச் சுட்டு தந்தங்களை வெளி மாநிலங்களுக்குத் திருட்டுத்தனமாகக் கொண்டுபோய் விற்பதாகக் கேள்விப்படுகிறோம். அப்படி



விற்கின்றவர்களைப் பற்றி அரசாங்கத்திற்குத் தகவல் இருக்கிறதா? அப்படி விற்கின்றபோது போலீசுக்குத் தகவல் கொடுத்துப் பிடிக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த யானைத் தந்தங்களை வேறு மாநிலங்களுக்குக் கொண்டுபோய் விற்கின்ற நேரத்தில் அவர்களைப் பிடிப்பதற்கு இப்போது மத்திய அரசின் அளவிலே எந்தச் சட்டமும் இல்லை. ஆனால் மாநில எல்லையோரங்களில் இப்படிப்பட்ட குற்றங்கள் நடைபெறுகின்றபோது தகவல் வருகின்ற நேரத்தில், கடுமையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு, வழக்குமன்றத்திலே தண்டனைக்காக நிறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. ரா. கிருஷ்ணன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த யானைகளைச் சுடுவது ஒரு குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று அறிகிறோம். அதேபோல வாங்குவதும் ஒரு குறிப்பிட்ட பகுதியினர் என்பதையும் அறிகிறோம். சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் தகவல் வந்திருக்கலாம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் தந்தத்தை அதிகமான விலை கொடுத்து வாங்குவதால் இப்படிப்பட்ட திருட்டு நடைபெறுகிறது என்பதை அரசு அறியுமா? ஆகையினாலே இதைக்கட்டுப்படுத்துவதற்காக வாங்கக் கூடியவர்களுக்கு கடுமையான தண்டனையை வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போதுள்ள சட்டத்தின்படி இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனை அல்லது இரண்டாயிரம் ரூபாய் அபராதம் அல்லது இவை இரண்டும் சேர்த்து வழங்கப்படலாம் என்று விதி இருக்கிறது. ஆனால் வைத்திருப்பவர்களுக்கு அல்லது வாங்குபவர்களுக்கு திருட்டுச் சொத்துக்களை வாங்கினால் எந்த தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்களோ அந்த விதி இதற்கும் செல்லுபடியாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை தக்க நேரத்தில் பரிசீலிக்கப்படும்.

தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலா வழிகாட்டிகள்

***வினா எண். 87—திரு. என். விஜயபாலன்:** மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தற்போது எந்தெந்த மாவட்டங்களில் சுற்றுலா வழிகாட்டிகள் (guides) இருக்கிறார்கள்?

(ஆ) எல்லா மாவட்டங்களிலும் வழிகாட்டிகளை நியமிக்கும் உத்தேசம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மத்திய அரசினால் அங்கீகரிக்கப்பட்ட சுற்றுலா வழிகாட்டிகள் சென்னையில் 63 பேரும், மதுரையில் 4 பேரும், மற்றும் திருச்சிராப்பள்ளியில் ஒருவரும் கன்னியாகுமரியில் ஒருவரும் சுற்றுலா வழிகாட்டிகளாக பணிபுரிகின்றனர்.

(ஆ) தமிழகத்தில் உள்ள முக்கியமான சுற்றுலா இடங்களில் பயன்படுத்த 30 பேர்களுக்கு சுற்றுலா வழிகாட்டிகளாக (Tourism Promoters) பயிற்சி அளிக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

(முற்பகல் 9-10)

திரு. உ. சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, வெளிநாடுகளில் சில இடங்களில் கல்லூரி மாணவ மாணவியர்கள் பகுதிநேர வழிகாட்டிகளாக வருகிறார்கள், அதேபோல் இங்கேயுள்ள மாணவ மாணவியர்கள் பகுதிநேர வழிகாட்டிகளாக வருவதற்கு பயிற்சி கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே இந்த சுற்றுலா வழிகாட்டிகளுக்கு என்ன தகுதிகள் இருக்க வேண்டுமென்று மத்திய அரசு அதற்கென சில விதிகளை நிர்ணயித்திருக்கிறார்கள். அதிலே பட்டம் பெற்றவர்கள், அல்லது தகுதியான பட்டத்தைப் பெற்றவர்கள்தான் சுற்றுலா வழிகாட்டிகளாக வரவேண்டுமென்று விதிகளில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது ஆகவே படித்துக்கொண்டிருக்கிற மாணவர்கள் பகுதி நேர வழிகாட்டிகளாக வருவதற்கு விதிப்படி இடம் இல்லை.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாடு சுற்றுலா மையங்களைப் பற்றி விரிவாக விளக்கி அதற்கான குறிப்பேடுகளை வெளிநாடுகளில் விளம்பரம் செய்வதுபோல், தமிழகத்திலே உள்ள சுற்றுலாப் பயணிகளுக்கு அவைகளை கொடுக்க அரசு ஏற்பாடு செய்திருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே. மத்திய அரசினுடைய சுற்றுலாத் துறையும் மாநில அரசினுடைய சுற்றுலாத் துறையும் அப்படிப்பட்ட வெளியீடுகளை வெளியிட்டு இருக்கிறது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கன்னியாகுமரியில் ஒரே ஒரு வழிகாட்டியைக் கொண்டு அந்த வேலைகளை செய்ய முடியவில்லை என்று சொல்லப்படுவதால், மேலும் அதிகமான வழிகாட்டிகளை நியமிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, அதனாலேதான் 30 பேர்களுக்கு பயிற்சி அளிக்கும் ஒரு திட்டத்தை உருவாக்குவதற்கு 70, 250 ரூபாய் செலவிடப்படலாம் என்று அரசு அனுமதி வழங்கியிருக்கிறது.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சுற்றுலாப் பயணிகளுக்கு வழிகாட்டுவதற்காக பட்டதாரிகளை எடுத்து பயிற்சி கொடுப்பதாக சொல்லியதோடு அவர்கள் பகுதிநேர ஊழியர்களாக வைக்கப்படுவார்கள் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் பகுதிநேர ஊழியர்கள் என்கின்றபோது வேறு வேலைக்குச் செல்ல முடியாது. ஆகவே பட்டதாரிகளுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளத்தை அவர்களுக்கும் கொடுக்க அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, பகுதிநேர ஊழியர்களாக வைக்க முடியாது என்றுதான் பதிலில் நான் தெரிவித்தேன். பட்டம் பெற்றவர்கள், போஸ்ட் கிராஜுவேட்டாக இருப்பவர்கள், 20 வயதிலிருந்து 40 வயதுக்குட்பட்டவர்களாக இருக்கவேண்டும். அவர்கள் எழுதுகிற பரீட்சையிலும், நேர்முகத் தேர்விலும் பயிற்சி திட்டத்திலும் தேற வேண்டும் என்று மத்திய அரசு தெரிவித்திருக்கிறது. அப்படி அந்தத் தகுதியைப் பெற்றவர்கள் முழுநேர வழிகாட்டியாகத்தான் நியமிக்கப்படுகிறார்கள்.

திரு. பாபு ஜனார்த்தனன்: தலைவர் அவர்களே, இந்த வழிகாட்டிகளாக இருப்பவர்கள் சரித்திர உண்மைகளைச் சொல்லாமல் அவர்களுக்குத் தெரிந்ததைச் சொல்லி மக்களை ஏமாற்றுகிறார்கள். ஆகவே அவர்களுக்கு அந்தச் சரித்திரத்தை தெரிந்து கொள்வதற்கு புத்தகங்களைக் கொடுத்து, அவர்களுக்குச் சரியான சரித்திர வரலாற்றைச் சொல்லிக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படித் தவறான விவரம் சொன்னவர்கள் எல்லாம், வழிகாட்டிகளாக இருந்து வெளிநாடுகளிலேயிருந்து அல்லது வெளிமாநிலங்களிலேயிருந்து வருகின்றவர்களுக்கு தவறான தகவல்களைத் தருகிறார்கள் என்பதை அறிந்துதான் மத்திய அரசு விவரம் தெரிந்த படித்த பட்டதாரிகளை, தொல்பொருள் வரலாறு பற்றி அறிந்தவர்களை எல்லாம் இப்படிப்பட்ட வழிகாட்டிகளாகப் பயிற்சிப் பெற்றவர்களை, நியமிக்க இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. என். விஜயபாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல சுற்றுலா இல்லங்களில் நடுத்தர மக்கள் வந்து தங்குவதற்கான முறையில் கட்டண விகிதத்தைக் குறைத்து

அவர்கள் தங்குவதற்கான வாய்ப்பு அளிப்பதற்காக அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் அதற்கான விவரம் தரப்படும்.

இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் நிதி உதவியுடன் தமிழகத்தில் ஒரு ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் திட்டம்.

* வினா எண் 88— திரு. ஜே ஹேமச்சந்திரன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்திய விவசாய ஆராய்ச்சி கழகத்திடமிருந்து ஒரு புது ஆராய்ச்சி நிலையம் தமிழகத்தில் அமைப்பதற்கான திட்டம் வரப்பெற்றுள்ளதா?

(ஆ) அதற்காக கன்னியாகுமரி மாவட்டத்தில் இடங்கள் பார்த்து பரிசீலிக்கப்பட்டதா?

(இ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) ஆம்.

(இ) தேசீய வேளாண்மை ஆராய்ச்சி திட்டத்தின்கீழ் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் நிதி உதவியுடன் குமரிமாவட்டத்தில் ஒரு புதிய பல்பயிர் ஆராய்ச்சி நிலையம் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக 7—10—1980 அன்று தடிக்காரன்கோணம் என்ற கிராமத்திற்கு அருகில் ஓர் இடத்தை பார்வையிட்டு அந்த இடத்தில் ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்கு பரிந்துரை செய்துள்ளது. இந்த இடம் வனத் துறைக்குட்பட்டது. இந்த இடத்தைக் கொடுக்க இயலாது என்று வனத்துறை தெரிவித்துள்ளதால், மாற்று இடமொன்றை பெறும் முயற்சியில் பல்கலைக்கழகம் ஈடுபட்டுள்ளது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த தாடிக்காரன்கோணம் என்ற இடத்தை ஆராய்ச்சிக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் பார்த்ததற்குப் பிறகு இந்த ட்ராபிகல் கன்ட்ரிசிலே உற்பத்தி செய்யும் பொருள்கள், அதாவது விவசாயப் பொருள்கள் உற்பத்தி செய்வதற்கு தகுந்த இடம் என்று சொல்லப்பட்டதனாலே இந்த இடம் வன இலாகாவுக்குச் சொந்தமா அல்லது தனியாருக்குச் சொந்த மானதா என்பது பற்றி சம்பந்தப்பட்டவர்களுக்கு இடையே வழக்கு நடந்து வருகிறது. ஆகவே அதை வனம் என்று



சொல்வதற்கு இல்லை. மற்ற இடங்கள் மாதிரித்தான் அந்த இடமும் இருக்கிறது. ஆகவே வன இலாகா மத்திய அரசை அணுகி அந்த இடத்தை இந்த ஆராய்ச்சி நிலையத்திற்கு கொடுக்குமே யானால் அது மிகச் சிறப்பாக இருக்கும் என்ற காரணத்தால் வேளாண்மைத்துறைக்கு அந்த இடத்தை அரசு வாங்கிக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : வனத்துறை சம்பந்தப் படாத காரணங்களுக்காக வனத்துறை இடத்தைக் கொடுக்க இயலாது என்று அவர்கள் கொள்கை முடிவு செய்திருக்கிறார்கள். ஆகவே மாற்று இடத்தைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டிருக் கிறோம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய திட்டத்தின் ஒரு பகுதியாக இது வருவதன் காரணத்தாலும், இன்று மத்திய அரசுக்கு அதிகமான அளவிற்கு அன்னியச் செலாவணி சம்பாதித்துக் கொடுக்கிற ரப்பர் மரங்கள் அந்த மாவட்டத்தில்தான் தமிழகத்தில் இருக்கிறது என்பதாலும் இன்று ரப்பர் மரங்களுக்கு அதிகமான நோய் ஏற்பட்டு பெரிய அளவிற்கு கெடுதல் எற்பட்டுக்கொண்டிருப்பதால் இதை பிரத்தியேக விஷயம் என்ற முறையில் மத்திய அரசு பரிசீலித்து வனத்துறை இடங்களைக் கொடுக்கமுடியாது என்ற வரம்பு கிடையாது—மத்திய அரசின் அனுமதியோடு கொடுக்கப்படலாம் என்ற ஒரு நிலை மத்திய அரசால் கடைப்பிடிக்கப்பட்டிருப்பதால் மத்திய அரசை அணுகி அந்த ஆராய்ச்சி நிலையத்தினை வாங்கிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மத்திய அரசை அணுகி அங்கிருந்து அனுமதி பெற்று இந்த ஆராய்ச்சி நிலையத்தினை அமைப்பதற்கு காத்திருப்பதைவிட வேறு இடம் தேடுவது நல்லது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : இந்த ஆராய்ச்சி நிலையம் ஆரம்பிப்பதற்கு உண்டான இடம் கன்னியாகுமரி மாவட்டத்தில் இல்லை என்றால் வேறு மாவட்டத்தில் இடம் தேடி அதைக் கொண்டுவருவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? அந்த ஆராய்ச்சி நிலையத்தில் எத்தகைய ஆராய்ச்சி செய்ய இருக்கிறார்கள் என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : இது ஒரு பல்பயிர் ஆராய்ச்சி நிலையம். ஆனால், குமரி மாவட்டத்ினுடைய தட்பவெட்ப நிலைகள், சூழ்நிலைகளையொட்டித்தான் இந்த ஆராய்ச்சி நிலையம் அமைய இருக்கிறது. வேறு மாவட்டத்திற்கு இதைக் கொண்டுவர இயலாது.

திரு. டி. மணி : இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகத்திடமிருந்து ஒரு புது ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்காக சில ஏற்பாடுகளை செய்கிற நேரத்தில் கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் குழித்துறை வந்தபோது அங்கு இன்னொரு இடத்தைக் குறிப்பிட்டு. புயூலிர் குறிச்சி கோட்டை அங்கு போதுமான இடம் இருக்கிறது என்றும் அப்பகுதியில் நல்ல தண்ணீர், மண் இருக்கின்றன என்றும் கூறி இருக்கிறோம். நாம் கேட்கிற பள்ளக்குளம் கிடைக்கவில்லை என்றால் இந்தப் பகுதியைத் தேர்ந்தெடுத்து அங்கே இந்த ஆராய்ச்சி நிலையத்தை நிறுவ அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பரிசீலிக்கும்.

ஆராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ள அதிக மகசூல் தரும் நெல், கரும்பு ரகங்கள்.

* வினா எண் 89— திரு. இல. பலராமன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாய ஆராய்ச்சி மூலம் 1979—1980, 1980—1981, 1981—1982-ம் ஆண்டில் அதிக மகசூல் தரும் சத்துள்ள நெல், கரும்பு கண்டுபிடிக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில் எந்தெந்த மாவட்டங்கள் இதனால் பயனடைந்துள்ளன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஆம். 1979-80, 1980-81 மற்றும் 1981—82 ஆகிய ஆண்டுகளில் பத்து புதிய நெல் ரகங்களும், ஒரு கரும்பு ரகமும் கண்டுபிடிக்கப்பட்டன.

(ஆ) புதிய கண்டு பிடிப்பான 10 நெல் ரகங்கள் ஒவ்வொன்றும் சில சில மாவட்டங்களுக்கு ஏற்றவையாக அமைந்துள்ளன. பொதுவாக இந்த புதிய நெல் ரகங்களால் செங்கல்பட்டு, வடஆர்காடு, தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, தர்மபுரி ஆகிய மாவட்டங்கள் பயனடையும். இந்த ரகங்கள் தமிழகமெங்கும் பயிரிட உகந்தது. புதிய கண்டுபிடிப்பான கரும்பு (கோ. க. 80.1) தென்ஆற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களில் அதிக பயன் கொடுக்கக்கூடியவை.

திரு. இல. பலராமன் : பத்து புதிய நெல் ரகங்கள் கண்டு பிடிக்கப்பட்டதாகக் கூறினார்கள். அந்த பத்து புதிய ரகங்கள் எவை எவை? அவை மத்திய அரசின் ஆராய்ச்சி நிலையத்தினால் கண்டுபிடிக்கப்பட்டதா? அல்லது மாநில அரசின் ஆராய்ச்சி நிலையத்தினல் கண்டுபிடிக்கப்பட்டதா? கரும்பு எந்த ரகத்தைச் சேர்ந்தது? அது ஏக்கர் ஒன்றுக்கு என்ன விகிதம் இலாபம் தரகூடிய கரும்பாக இருக்கிறது என்ற விவரங்களை அமைச்சர்



மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : இவை தமிழ்நாடு வேளாண்மைத் துறையால் வேளாண்மைப் பல்கலைக் கழக ஆராய்ச்சிக்கூடத்தில் கண்டுபிடிக்கப்பட்டவை. அவை, கோ. 41, 42, ஆடுதுறை 33, 34, 35, மதுரை 1, புதுவைப் பொன்னி, புனிதவதி, பையூர் 1, அம்பாசமுத்திரம் 15, ஆகியனவாகும். கரும்பு கோ. க. 8101 அதிக சர்க்கரைச் சத்துள்ளது. இது தென் ஆற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களில் முன்பருவத்தை யொட்டி அதிக விளைச்சல் கொடுக்கக்கூடியது.

திரு இல. பலராமன். : கரும்பு ஒரு ஏக்கருக்கு சராசரி எவ்வளவு விளைச்சல் தருகிறது? நெல்லில் இருந்து எவ்வளவு மகசூல் கிடைக்கும் என்ற விவரம் பற்றி அமைச்சர் அவர்களிடம் தகவல் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : அதைப்பற்றிய தகவல் இல்லை.

(முற்பகல் 9–20)

திரு. பழ. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தமிழக வேளாண்மைத் துறையின ஆராய்ச்சி நிலையங்களிலே பணியாற்றக்கூடிய ஆராய்ச்சியாளர்கள் நம்முடைய நாட்டிலே மிகச் சிறப்பானவர்கள் என்று பெயர் பெற்றவர்கள். இந்த ஆராய்ச்சியாளர்களுக்கு இருக்கக்கூடிய குறைகளைப் பற்றி அமைச்சர் அவர்கள் அறிவார்கள். அந்தக் குறைகளைத் தீர்ப்பதற்கு இதுவரை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆராய்ச்சிப் பண்ணையிலிருந்து ஆராய்ச்சியாளர்களிடம் போனால் எப்படி முடிப்பது ? மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக கொண்டுவரப்பட்ட கரும்பு ரகங்கள் 8001, 671 ஆகிய ரகங்களில் சர்க்கரை பிடிப்புச் சத்துமட்டும் அதிகமாக இருக்கிறது. ஆனால், உற்பத்தி செய்கிற விவசாயிக்கு அதிகமான எடையில்லாத அளவுக்கு எடை குறைவாக இருக்கிறது. அப்படி விவசாயிகள் நஷ்டப்படுவதை ஈடுகட்டுகிற வகையில் விலை கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இந்தக் குறையை நிவர்த்தி செய்யத்தக்க அளவுக்குப் புதிய ரகத்தைக் கண்டுபிடிக்க ஆராய்ச்சித் துறை முயற்சி செய்யும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே தற்போது கடுமையான வறட்சி நிலவிக் கொண்டிருக்கிறது. தண்ணீர் பற்றாக்குறை என்பது எப்பொழுதும் நிரந்தரமாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகையினாலே, இப்பொழுது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட விதை ரகங்கள், தண்ணீரை குறைவாகப் பாசனம் செய்து, அதன் மூலமாகப் பயன்படுகின்ற ரகங்களாக இருக்கின்றனவா? அல்லது மொத்தம் உற்பத்தி செய்யும் நாட்கள் குறைந்து அதிக மகசூல் வருகின்ற அளவுக்கு அந்த முயற்சி ஏதேனும் இதிலே கடைப்பிடிக்கப்படுகிறதா? அந்த விவரம் இருந்தால் தருவீர்களா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இப்பொழுது ஐ. ஆர். 50 என்ற நெல் ரகத்தை, வறட்சி தாங்கக்கூடிய, ஓரளவு தண்ணீர் குறைவாக இருந்தலே போதும். குறைந்த வயதுடையது என்கிற வகையிலே பரிந்துரை செய்திருக்கிறோம்.

பாபநாசம் மேல் அணைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட சீரமைப்புப் பணிகள்.

* வினா எண் 90—திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியில் உள்ள மேல்பாபநாசம் அணைசாலையில் கி.மீ. 10 முதல் கி.மீ. 24 வரையில் வெள்ளப் பாழ் சீரமைப்புப் பணியின்கீழ் அணைப்புத் தளம் சட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன?

(இ) திட்ட மதிப்பீடு எவ்வளவு?

(ஈ) வேலை எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : விடை (அ, ஆ, இ, மற்றும் ஈ) 1979-ஆம் ஆண்டு நவம்பர் மாத வெள்ள நிவாரணத் திட்டத்தில் பாபநாசம் மேல் அணை சாலையில் சுமார் ரூ. 2.00 இலட்சம் மதிப்பீட்டில் வெள்ள நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. வெள்ள நிவாரணத்திற்கான மதிப்பீட்டில் தடுப்பு வேலைகள் உடனடியாக தேவைப்பட்ட அளவிற்கு போடப்பட்டிருக்கின்றன. ரூ. 2 லட்சம் செலவில் நிவாரண வேலைகள் யாவும் செய்யப்பட்டு முடிக்கப்பட்டுவிட்டன.

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, தேவைப்பட்ட அளவுக்கு வேலைகள் கொடுக்கப்படுகின்றன என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். தேவைப்பட்ட அளவுக்குப் பூராவும் வேலைகள் முடிவடையவில்லை



என்ற குறையை அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு கொண்டு வரவிரும்புகிறேன். சமீபத்தில்கூட அந்த வேலை சரியாக முடிக்கப்படாததன் விளைவாக லாரி ஒன்று பின்னுக்குத் தள்ளப்பட்டு ஒரு ஆள்கூட இறந்து போய்விட்டார் அரசலார் கோயிலினுடைய மடையிலே. ஆகவே, அந்த விட்டுப் போன வேலைகளை மீண்டும் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா என்பதைத் தெரிந்து காள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, வேலைகள் விடப்பட்டிருந்தால், அவை தொடர்ந்து நடைபெறும்.

ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள உபரி நிதியினைப் பயன்படுத்தும் திட்டம்.

*வினா எண் 91—திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சியில் நிதி இல்லாமல் இருந்து அதே சமயம் ஊராட்சி ஒன்றியங்களில் உபரிநிதி இருப்பின் ஊராட்சிக்கு டெலிவிஷன், குடிநீர் வசதி மற்ற வசதிகள் ஒன்றிய நிதியிலிருந்து செலவு செய்ய அரசு உத்தரவு அளிக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: போதிய நிதி வசதி இல்லாதிருப்பின், டெலிவிஷன் பெட்டியை வாங்கவும், பராமரிக்கவும் ஆகும் செலவை, ஊராட்சி ஒன்றியமும், சம்பந்தப்பட்ட ஊராட்சியும் பகிர்ந்துகொள்ள ஏற்கெனவே அரசாணை உள்ளது. அதேபோல ரூ. 3 இலட்சத்திற்கு மேல் உபரி நிதியுதவி ஊராட்சி ஒன்றியங்கள் உபரியுள்ள தொகையில் 25 சதவீதம். வரை குடிநீர் வசதிக்காகச் செலவிடலாமென ஏற்கனவே ஆணை உள்ளது.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி உபரி நிதி இருக்கிற சில ஒன்றியங்களில் டெலிவிஷனுக்கு ஒரு பகுதியைத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். முழுத் தொகையையும் தரலாம். அதே போல, குடிநீர் வசதி. தெருக்குழாய்கள் இழுப்பது. தரைப் பாலங்கள், கல்வெட்டு கட்டுவது, பல்புகளைக் குழாய் விளக்குகளாக மாற்றுவது, இவகளுக்கெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவரே அங்கீகாரம அளிக்கக்கூடிய அளவிலே இருக்கவேண்டும். இப்போது டி. ஆர். டி. அளவிலே அங்கீகாரம் பெறவேண்டும். முன்பெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவரே உபரி நிதியை கிராமங்களுக்குச் செலவு செய்ய அங்கீகாரம் கொடுத்தார்கள். அந்த முறையை மீண்டும் கொண்டு வந்து, மாவட்ட ஆட்சித் தலைவரே, அங்குள்ள நிலைமையை அனுசரித்து,

அங்கீகாரம் அளிப்பதற்கு அமைச்சர் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, ஏற்கனவே இருந்தது போல இல்லாமல், இப்பொழுது நிர்வாகத்திற்கென்று தனியாக இயக்குநர் இருக்கிறார். ஆகவே, இயக்குநர் அவர்களிடமிருந்து ஒப்புதல் பெற்றுத்தான் அந்த வேலைகளையெல்லாம் செய்ய வேண்டுமென்று ஆணை உள்ளது அதன்படிதான் நடந்து வருகிறது.

**திரு. பாபு ஜனார்த்தனன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டம் என்ற பெயரால் செய்யப்பட்டாலும் பல இடங்களில் இன்னும் பல தரைப் பாலங்கள் இருந்தால்தான் கிராமத்திற்கு செல்லும் நிலைகளிருக்கின்றன. அதேபோல தெருக் குழாய்கள் இல்லாமல் பல கிராமங்கள் அவதிபட்டுக் கொண்டிருக்கின்ற நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன. அதற்கெல்லாம் இலட்சத்திற்கு மேற்பட்டு செலவாகின்ற நிலைமை இருக்கிற காரணத்தினால், மிக அத்தியாவசியமான கிராமத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குக் குறைந்த அளவுக்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அங்கீகாரம் அளிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, அதுபோன்ற யோசனை இல்லை.

**திரு. பு. கே. ஆனூர் ஜெகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஆண்டொன்றுக்கு 3 ஊராட்சிகளுக்கு மட்டுமே தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்க அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது. அந்த நிலைமையை மாற்றி நிதி வசதி உள்ள எல்லா ஊராட்சிகளுக்கும் தேவையான அளவுக்குத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்க அரசு உத்தரவுகள் வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, தொலைக்காட்சிப் பெட்டிகளைப் பொறுத்தவரையில் சென்னை யிலும் சென்னையில் இருந்து 100 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கக்கூடிய அனைத்து ஊராட்சி மன்றங்களுக்கும் தொலைக் காட்சிப் பெட்டிகளை வாங்கித் தர வேண்டும் என்று நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. கடந்த ஆண்டிலும், அதற்கு முந்திய ஆண்டிலும் 25 பெட்டிகள், 50 பெட்டிகள் என்று கொடுக்கப்பட்டு இருக்கின்றன. இந்த ஆண்டு அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே, தொலைக் காட்சிப் பெட்டிகளைப் பொறுத்தவரையில் அதிலே தன்னிறைவு ஏற்படுத்தவேண்டும் என்ற வகையில் நாங்கள் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. என். ஏ. பூங்காவனம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் ஊராட்சி மன்றப் பகுதிகள் மட்டும் இப்பொது எடுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. பேரூராட்சி பகுதிகளில் ஆங்காங்கே சில பகுதிகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆகவே, பேரூராட்சிப் பகுதிகளை ஒருங்கிணைத்து, இந்த தன்னிறைவுத் திட்ட வேலை களைச் செய்வதற்கு அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்வ தோடு............

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூலகேள்வி தொலைக் காட்சிப் பெட்டிகளை வழங்குவது பற்றியதாகும்.

**திரு. என். ஏ. பூங்காவனம்:** தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** உங்கள் கேள்வி எனக்குப் புரிந்து விட்டது. நான் பதில் சொல்லிவிடுகிறேன்.

**திரு. ரா. உமநாத் :** அவர் கேள்வியை முடிப்பதற்கு முன்பே அமைச்சர் தனக்கு கேள்வி புரிந்துவிட்டது, பதில் சொல்லிவிடுகிறேன் என்று சொல்கிறார் ஆனால் அவையில் இருப்பவர்களுக்குப் புரியவேண்டாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்கள் இரண்டுபேரும் ஒப்புக்கொண்டபிறகு, நீங்கள் ஏன் இடையில் வருகிறீகள்?

**திரு. ரா. உமாநாத்:** தலைவர் அவர்களே, இரண்டுபேருக் குள்ளே உள்ள பிரச்னை என்று சொன்னால் இந்த அவையில் அது வரக்கூடாது. அவர்கள் அறையில் அதைப் பற்றிப் பேச வேண்டும். Once the question is put, it is the property of this House. He is replying not just to the Member but to the House. ஆகவே, அவைக்கு அந்தக் கேள்வி என்ன என்பது முழுமையாகத் தெரியவேண்டும்.

**திரு. என். ஏ. பூங்காவனம்.** தலைவர் அவர்களே. நான் கூறுவது எல்லாம், ஊராட்சி மன்றங்கள் என்றும், பேரூராட்சி மன்றங்கள் என்றும் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, வேலைகள் எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். பேரூராட்சிகள் என்று சொல்கிற பகுதியில் ஒன்றிரண்டை எடுத்து, அவற்றில் தன்னிறைவுத் திட்ட வேலைகள், ரோடு போடுதல், தண்ணீர் வசதி செய்தல் போன்றவற்றைச் செய்து இருக்கிறார்கள், ஆகவே, எல்லாப் பேரூராட்சிகளையும் ஒருங்கிணைத்த முறையில் தன்னிறைவுத் திட்டத்தை அமலாக்கவேண்டும் என்று கோருவ தோடு, என்னுடைய தொகுதியில் உள்ள திருவலம் என்ற இடத்தில் ரூ. 100 கூட முதல் கிடையாது, அதற்கு பேரூராட்சி என்று பெயர். அங்கே அந்த வேலைகளை எடுத்துக்கொள்வதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு. திரு. ப. குழந்தைவேலு. தலைவர் அவர்களே, கிராம ஊராட்சி மன்றங்களை அடுத்து பேரூராட்சிகளில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் பணிகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன. கடந்த 1982–83 ஆம் ஆண்டில் தமிழகத்தில் இருக்கக்கூடிய 606 பேரூராட்சிகளில் 146 பேரூராட்சிகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன. அதற்கு ஏறத்தாழ 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, முதல்கட்ட வேலைகள் தொடங்கப்பட்டு நடந்து கொண்டு இருக்கின்றன. இந்த ஆண்டிலே 200-க்கும் மேற்பட்ட பேரூராட்சிகளை எடுப்பதாக இருக்கிறோம். அதற்கு 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டை அரசு கொடுத்து இருக்கிறது. எல்லாப் பேரூராட்சிகளையும் ஒரே காலத்தில் எடுத்துக்கொண்டு அந்தப் பணிகளைச் செய்ய முடியாது என்பதால்தான், 3 கட்டங்களாக அவை பிரிக்கப்பட்டு, முதல் கட்டத்தில் 146 பேரூராட்சிகளையும், இரண்டாவது கட்டத்தில் 200-க்கும் மேற்பட்ட பேரூராட்சிகளையும், அதற்கு அடுத்த ஆண்டில் மீதமுள்ள அனைத்துப் பேரூராட்சிகளையும் எடுத்துக்கொண்டு தன்னிறைவு அடையச்செய்யும் சூழ்நிலையில் ஏற்படுத்தலாம் என்று திட்டமிட்டு இருக்கிறோம்.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: தலைவர் அவர்களே, உபரி நிதியுள்ள ஊராட்சி ஒன்றியங்களில் 25% குடிநீருக்காக ஒதுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை 50% என்று மாற்ற அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, அதுபோன்ற நிலையில்லை.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்குவதற்காக ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். குறைந்தபட்சம் வானொலிப் பெட்டிகள் அனைத்து ஊராட்சி மன்றங்களுக்கும் நிதி இல்லாத ஊராட்சி மன்றங்களுக்கும் கொடுப்பதற்கான முறையில் அரசு உத்தரவிடுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, வானொலிப் பெட்டிகளைப் பொறுத்தவரையில் நமக்கு வேண்டிய அளவிற்கு எல்லா ஊராட்சி மன்றங்களுக்கும் வானொலிப் பெட்டிகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. சில வானொலிப் பெட்டிகள் இயங்காமல் இருக்கலாம். அதை வைத்துக்கொண்டு எல்லா இடங்களிலும் அப்படி இருப்பதாகக் கருதக்கூடாது. 40,000-க்கும் மேற்பட்ட வானொலிப் பெட்டிகள் இன்று தமிழகத்தில் இருக்கின்றன.



(முற்பகல் 9-30)

திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் டெலிவிஷன் வாங்குவது சம்பந்தமாக சொன்னார்கள். ஆனால், குறிப்பாக பல ஊர்களிலே வானொலிப் பெட்டிகளே இல்லாமல் இருக்கின்றன. அவ்வாறு இருந்தாலும், அவைகள் இயக்கப் படாமல் பழுதடைந்திருக்கின்ற காரணத்தினால், அந்தக் கிராமங்களிலே உள்ள மக்கள் நல்ல செய்திகளைக் கேட்க முடியாமல் இருக்கிறார்கள். எனவே, அவ்வாறு இருக்கக் கூடிய கிராமங்களில் வானொலிப் பெட்டிகளும், 100 அல்லது 150 மைல்கள் அளவிலுள்ள ஊராட்சி ஒன்றியங்களில் டெலிவிஷன் பெட்டிகளும் வைப்பதற்கு அரசு அனுமதி அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, வானொலிப் பெட்டிகள் எந்த ஊர்களில் இயங்காமல் இருக்கின்றனவோ, அவைகள் இயங்குவதற்குரிய ஏற்பாடுகளை செய்ய வேண்டுமென்று நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறோம். எந்தெந்த ஊர்களில் இப்படி இயங்காமல் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும். தொலைக்காட்சியைப் பொறுத்த அளவில், ஏற்கனவே இந்த தொலைக்காட்சி நிலையத்திலிருந்து நமக்கு கிடைத்திருக்கின்ற தகவல், சென்னையிலிருந்து 100 கிலோ மீட்டர் தூரத்திற்கு நன்கு தெரியும் என்று அவர்கள் அறிவித்திருக்கின்ற காரணத்தினால், அந்த அறிவிப்பின் அடிப் படையில் தொலைக்காட்சிப் பெட்டிகள் 100 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்களில் அமைக்க, அவைகளை வாங்கிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழகத்தில் செயல்பட்டு வரும் கோபார் கேஸ்கள்.

*வினா எண் 92. திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எத்தனை கோபார் கேஸ்கள் (Gopar Gas Plant) செயல்படுகின்றன?

(ஆ) அவைகளை விரிவாக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) 1982-ம் ஆண்டு நவம்பர் மாத இறுதி வரை சுமார் 8084 அமைப்புகள் தமிழகத்தில் செயல்படுகின்றன.

(ஆ) மாநில அளவில் தீவிரமாக செயல்படுத்த தனி அதிகாரிகளை அமர்த்தியும், உயர் மட்ட குழுக்களை அமைத்தும், அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கோபர் காஸ் பிளாண்டை ஒரு வீட்டில் அமைக்க வேண்டுமென்றால், எத்தனை மாடுகளின் சாணம் அதற்குத் தேவைப்படுகிறது? இந்த கோபார் காஸ் பிளாண்டினால் லைட் எரிவதற்கு வசதி ஏற்படுமா? அது மாத்திரமல்ல! இதிலே எஸ். சி. களுக்கு மானியம் வழங்கப் படுவதாகச் சொல்லுகிறார்கள். இதர ஜாதியினருக்கும் இது வழங்கப்படுமா அதற்கு வழிவகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, கோபார் காஸ் பிளாண்ட் ஏற்படுத்துவதற்கு எவ்வளவு மாடுகளின் சாணம் தேவைப்படுகின்றது என்ற குறிப்பு என்னிடத்தில் இல்லை. ஆனால், மாடு எவ்வளவு தீனி சாப்பிடுகிறதோ, அதைப் பொறுத்துத்தான் இருக்கிறது (சிரிப்பு). ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே, இந்த கோபர் காஸ் பிளான்ட் திட்டம், 20 அம்சத் திட்டத்தில் ஒரு அங்கமாக இருந்து கொண்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் 3,500 என்றும், இந்த ஆண்டு 5,000 செய்ய வேண்டுமென்றும் விதிமுறை இருக்கிறது. ஏற்கனவே அதற்கான நடவடிக்கை எடுத்துக் கொண்டு வரப்படுகிறது.

திரு. க. ரங்கசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கோபார் காஸ் பிளான்ட் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. இது அதிகம் செலவாகின்ற காரணத்தினால், சாதாரண மக்கள் இதைப் பயன்படுத்த முடியவில்லை. குஜராத் போன்ற மாநிலத்தில் இதை ஒரு கம்யூனிடி பிளான்டாகப் போட்டு, வீடுகளுக்கு பிரித்துக் கொடுக்கிற முறையை வைத்திருக்கிறார்கள். அது போன்ற திட்டத்தை கிராமப் புறங்களில் அமைத்து, பெரிய அளவில் அமைத்து, வீடுகளுக்கு அதைப் பயன்படுத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே அதற்காக கொத்தனார்களுக்கெல்லாம் தனிப் பயிற்சி வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலே கொடுத்து, அவர்கள் மேற்பார்வையில் இந்த கோபார் காஸ் பிளான்ட் போடப்பட்டு வருகின்றது. ஆகவே, இதை குஜராத் மாநிலத்தில் உள்ளதைப் போல் செய்யவேண்டுமென்று சொன்னால், அதற்குரிய நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டும். ஆனால், இது மத்திய அரசாங்கத்தின் திட்டம், எனவே, மத்திய அரசாங்கத்தின் ஆலோசனையையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் சொன்ன யோசனையையும்கண்டிப்பாக பரிசீலனை செய்யலாம்





திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னபோது, இது ஒரு மத்திய அரசின் திட்டம், 20 அம்சத் திட்டம் என்று சொன்னார்கள். ஒரு பிளான்ட் அமைப்பதற்கு எவ்வளவு தொகை செலவாகிறது? அதிலே மத்திய அரசின் பங்கு என்ன? மாநில அரசின் பங்கு என்ன? என்பதை அறிவிப்பதோடு, இந்த நடப்பு ஆண்டில் எத்தனை பிளான்டுகள் போட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு. திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இது மத்திய அரசாங்கத்தின் முழுமையான திட்டம். 20 அம்சத்திட்டத்தில் ஒரு அங்கமாக இருக்கிறது. சுமார் 5,000 ரூபாய் ஒரு பிளான்ட் அமைப்பதற்குச் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கின்றது.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: தலைவரவர்களே, இந்த 'கோபார் காஸ் பிளான்ட்' மூலம் ஒரு குடும்பத்திற்கு வேண்டிய 'காஸ்' வேண்டுமானால் அவர்கள் 4, 5 மாடுகளை வைத்து பாதுகாக்க வேண்டியிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் அவர்கள் இந்த பிளான்டை நிறுவுவதற்கு செலவும் அதிகமாகிறது. ஆகவே, அரசு கொடுகின்ற மானியத்தையும் கடன் தொகையையும் அதிகப்படுத்துக்கொடுக்க உத்தேசம் இருக்கிறதா; அதற்குரிய பரிசீலனை இருக்கிறதா என்பதை அறிய, விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே அதற்குரிய வழிவகைகளை மத்திய அரசிடமிருந்துதான் நாம் பெறவேண்டியிருக்கிறது. ஒரு குடும்பத்திற்கு எவ்வளவு தேவை என்பது அந்தக் குடும்பத்தில் இருக்கிற எண்ணிக்கையைப் பொறுத்தது. அதைப்போன்று அவர்கள் எவ்வளவு விளக்குகளை வைத்திருக்கிறார்கள், வேறு என்னென்ன சாதனங்களை வைத்திருக்கிறார்கள் என்பதைப் பொறுத்து இந்த பிளான்டின் செலவு அமைந்திருக்கும்.

## பிரிட்டிஷ் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நடமாடும் மருத்துவ வண்டிகள்.

*வினா எண். 93 திரு செ. சிவசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புற மருத்துவ வசதிக்காக பிரிட்டிஷ் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நடமாடும் மருத்துவ வண்டிகள் எத்தனை?

(ஆ) இந்த வண்டிகள் வழங்கப்பட்டதற்கு விழா நடத்தப் பட்டதா?

(இ) எத்தனை வண்டிகள் உபயோகத்தில் இருக்கின்றன?

(ஈ) ஒரு வண்டியின் மதிப்பு என்ன?

(உ) எத்தனை வண்டிகள் இன்னும் உபயோகிக்காமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே.—(அ) இருபத்தி ஏழு.

(ஆ) ஆம். சென்னை மருத்துவக் கல்லூரியிலும் மற்றும் கோவை மருத்துவக் கல்லூரியிலும் விழா நடத்தப் பட்டது.

(இ) இருபத்தி ஏழு

(ஈ) சுமார் 8.5 இலட்சம்

(உ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. செ. செம்மலை: தலைவரவர்களே, மருத்துவக் கல்லூரி மாணவர்களை கிராமங்களுக்கு அனுப்பி, அங்குள்ள நிலைமைகளைத் தெரிந்து வரக்கூடிய 'ரீ ஓரியன்டேஷன் ஆஃப் மெடிக்கல் எஜுகேஷன்' என்ற திட்டத்திற்கு இத்தகைய ஊர்திகளைப் பயன்படுத்தும் திட்டம் இருக்கிறதா? அப்படியானால் அதற்கு நிதி ஒதுக்கீடு ஏதாவது செய்யப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, இந்த 27 ஊர்திகளில் 3 ஊர்திகள் கிறித்துவ மருத்துவக் கல்லூரிக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. மீதியுள்ள 24 ஊர்திகள் தமிழக சர்க்காருடைய பராமரிப்பிலுள்ள 8 மருத்துவக் கல்லூரிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. ரீ ஓரியன்டேஷன் ஆஃப் மெடிக்கல் எஜுகேஷன் என்றால் கிராமப் பகுதிகளுக்கு மருத்துவக் கல்லூரி மாணவர்களை அனுப்பி, அவர்கள் நல்லமுறையில் பயிற்சி பெற வசதி அளிக்கின்ற ஒரு திட்டம். அதற்காக ஒவ்வொரு மருத்துவக் கல்லூரிக்கும் இந்த ஊர்திகள் வழங்கப் பட்டு, பயிற்சிக்காக 4.79 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல. ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கும் இந்த ஊர்தி போய் பணியாற்றும் வாய்ப்பும் இருக்கிறது. ஆரம்பச் சுகாதார நிலையங்களை மேம்படுத்த 9 இலட்சம்



ரூபாய் ஒவ்வொரு ஊர்திக்கும் தரப்படுகிறது என்றால் ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கும் 3.2 இலட்சம் ரூபாய் செலவாகிறது, ஒரு ஊர்தி ய மூன்று ஆரம்பச் சுகாதார நிலையங்கள் பயன்படுத்துகின்றன. அந்த வகையில் 3.2 இலட்சம் ரூபாய் ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கும் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு கொடுக்கப்பட்டுள்ள இந்த ஊர்திகளை இயக்குவதற்கு வேண்டிய டிரைவர் மற்றும் உள்ள வேலை ஆட்களை நியமிப்பதற்கான உத்தரவு கொடுக்காமல், போஸ்ட் சாங்ஷன் செய்து கொடுக்காமல் இருப்பதால் அந்த ஊர்திகள் முறையாக வேலைசெய்ய முடியவில்லை என்று செய்தி அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா? அப்படிப்பட்ட நிலைமை அங்கே இருக்கிறது. ஆகவே, ஊர்திகளை சரியாக இயக்க, டிரைவர் உட்பட மற்றுள்ள வேலையாட்களையும் போதுமான அளவுக்கு நியமிக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே; கோவை மெடிக்கல் கல்லூரியைப் பொறுத்தவரையில் மூன்று ஊர்திகள் கொடுக்கப்பட்டு, அவை நல்லமுறையில் இயங்கி வருகின்றன. பெரியநாயக்கன் பாளையம்; தொண்டாமுத்தூர் மற்றும் ஒரு பகுதி ஆகிய இடங்களுக்குச் சென்று இந்த மூன்று ஊர்திகளும் சென்று பணியாற்ற வாய்ப்பு நல்லமுறையில் இருக்கிறது. டிரைவர் இல்லை என்கின்ற குறை வேறு ஒரு ஊர்திக்கு என்று கருதுகிறேன். அது இந்த தலைப்பில் வராது. 'ரீ ஓரியன்டேஷன் ஆஃப் மெடிக்கல் எஜுகேஷன்' என்ற தலைப்பில் வருகின்ற மூன்று வண்டிகளும் நல்லமுறையில் வருகின்றன. வேறு ஒரு ஊர்திக்கு போஸ்ட் சாங்க்ஷன் ஆக வில்லை என்று சொன்னார்கள். அதற்கு உடனடியாக உத்தரவு போட்டிருக்கிறோம். இன்னும் ஏதாவது தகவல் இருந்தால், அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறோம்.

திரு எஸ். இளையபெருமாள்: தலைவரவர்களே, இப்போது கொடுக்கப்பட்டிருக்கிற ஊர்திகளுக்கு வழங்கப்படுகின்ற பெட்ரோல் சம்பந்தப்பட்ட பிரச்சினையினால் சில இடங்களில் கல்லூரி மாணவர்கள் சென்றுவர இடையூறுகள் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஊர்திகள் சரியாக இயங்காமலிருப்பது மற்றொரு பிரச்சனை. அப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தால் அவற்றை உடனடியாகக் கவனித்து தகுந்த நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

(முற்பகல் 9–40)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்களுக்கு இந்த ஊர்தி யப் பற்றி சரியான தகவல் கிடைக்க பெறவில்லை என்று நினைக்கிறேன். மாணவர்களை அழைத்துக் கொண்டு போவதற்காக பயன்படுத்தப்படும் ஊர்தி அல்ல அது. நடமாடும் மருத்துவமனை என்று செல்லப்படும் மொபைல் ஹாஸ்பிடல்லாக re–ori ntation of medical educat on என்ற தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்ட ஊர்தி. ஒரு மருத்துவமனைக்கு தேவையான எல்லா வசதிகளும் இருக்கின்றன. மாணவர்களையும ஹவுஸ் சர்ஜன்களையும், மற்றும் டாக்டர்களையும் அழைத்துப்போவதற்காக தனியாக 1 இலட்சம் ரூபாய் செலவில் வேறு ஒரு ஊர்தி இருக்கிறது. ஆனால் நடமாடும் மருத்துவமனைகளாக 24 ஊர்திகள் செயல்படுகின்றன. இவைகள் முறையாக திறமையாக செயல்பட்டு வருகின்றன; நானும் போகிற போதெல்லாம் பார்த்துக் கொண்டு வருகிறேன். திடீரென்று சோதனைகளும் செய்திருக்கிறேன். தனியாக செக்கிங் சிஸ்டம் ஒன்றையும் ஏற்படுத்தியிருக்கிறேன். ஆகவே. இதிலே பிரச்னை எதுவும் இல்லை.

ஈரோட்டிலுள்ள மாவட்ட தலைமை மருத்துவமனை

*வினா எண் 94—திரு ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு நகரில் உள்ள பெரியார் மாவட்ட தலைமை மருத்துவமனையில் காசநோய்ப் பிரிவில் இடவசதியும், படுக்கை வசதியும் மிகவும் குறைவாக உள்ளதால், நோயாளிகள் அவதிப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) படுக்கைகள் அதிகப்படுத்தும் அளவிற்கு புதிய கட்டடம் ஒன்று காசநோய் பிரிவிற்கு கட்ட அரசு நிதி உதவி அளிக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) & (ஆ): பெரியார் மாவட்டத்திலுள்ள தலைமை மருத்துவமனையில் முழு அளவில் பயன்தரக்கூடிய காசநோய் நிலையம் ஒன்று உள்ளது. இது நல்ல இடவசதிருள்ள தனிக் கட்டிடத்தில் அமைந்துள்ளது. இம்மருந்தக நிலையத்தில் 12 படுக்கைகள் கொண்ட காசநோய் வார்டு ஒன்றும் 20 படுக்கைகள் கொண்ட காசநோய் வார்டு ஒன்றும் 1–10–81 முதல் இயங்கி வருகின்றன.



போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணிகள் கட்டணத்தை உயர்த்தும் திட்டம்.

*வினா எண் 95—திரு.எஸ். ஆண்டித்தேவர், திரு ப.நெடுமாறன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு போக்குவரத்து பேருந்துகளில் பயணிகள் கட்டணத்தை உயர்த்த அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) மற்ற மாநிலங்களுக்கும் நமது மாநிலத்திற்கும கட்டண விகிதங்களில் உள்ள வித்தியாசம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ)&(ஆ) விவர அறிக்கை ஒன்று ** அவைமுன் வைக்கப்படுள்ளது.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, வினா பிரிவு (ஆ)வில் மற்ற மாநிலங்களுக்கும் நமது மாநிலத்திற்கும் கட்டண விகிதங்களிலுள்ள வித்தியாசம் என்ன என்று கேட்டிருக்கிறார்கள். கொடுக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையிலே அண்டை மாநிலங்களாக இருக்கிற 3 மாநிலங்களின் விவரங்களை மட்டும் கொடுத்திருக்கிறார்கள். அண்டை மாநிலங்கள் என்றால் இந்தியா முழுவதும் உள்ள மாநிலங்களும் அடங்கும். மேற்கு வங்காளத்தில் இதே விவரங்களை நான் கேட்டபோது எல்லா மாநிலங்களுக்குமான விவரங்களை ஒரு நாளைக்குள்ளாகவே திரட்டி, தயாரித்துக் கொடுத்தார்கள் அவர்களால் கொடுக்க முடியும் என்றால் உங்களால் மட்டும் கொடுக்க முடியாதா?

அப்படி அவர்கள் கொடுத்த விவரப்படி அங்கே 7 கிலோ மீட்டர் வரையிலும் 30 பைசா என்றிருக்கிறது, ஆனால், தமிழகத்தில் 50 பைசா, இப்படி மற்ற மாநிலங்களை கம்பேர் பண்ணும்போது நம்முடைய மாநிலத்தில் அதிகமாகவே இருக்கிறது. ஒருவேளை அதற்காகத்தான் எல்லா விவரங்களையும் கொடுக்கவில்லையோ என்னவோ? பொதுவாகவே நம்முடைய கட்டண விதம் அதிகமாக இருக்கும் நிலையில், இன்னும் உயர்த்த வேண்டியதற்கு பரிசீலன்ன செய்ய வேண்டிய அவசியம் என்ன என்று கேட்க விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அண்டை மாநிலங்கள் என்னும்போது, வழக்கமாக 2,3 மாநிலங்களைத்தான் ஒப்பிட்டுக்கொண்டிருக்கிறோம். காரணம் அந்த மாநில வண்டிகள் இங்கே வருகின்றன, இங்கேயிருந்து அங்கே போகின்றன. அந்த அடிப்படையில்தான் ஒப்பிடப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் விவரங்களை பார்க்கமாட்டார்கள் என்று நினைக்க முடியாது. அவர்களுக்கு தேவையென்றால்

**122-123 பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது

திரு. இல. பலராமன்: தலைவரவர்களே, டாக்கா மீட்டர் என்பது அரசு ஒரு ஆணையினைப் பிறப்பித்து அதன்படி அந்த வேகக்கட்டுப்பாட்டுக் கருவியிலே பொருத்தப்பட்டிருக்கும். இன்றைக்கு அது நீக்கப்பட்டிருக்கின்றது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா?......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேகக் கட்டுப்பாட்டுக் கருவியைத் தயாரிக்கும் தொழிற்கூடம் பற்றியது இந்த கேள்வி. எனவே மீட்டர் பொருத்துவது பற்றிக் கேட்காதீர்கள்.

திரு. இல. பலராமன்: தலைவரவர்களே, அந்த அளவுக்கு இப்போது அந்தக் கருவி தேவையில்லை என்ற கருத்து இருக்கின்றபோது அதைத் தயாரிக்கும் தொழிற்சாலையினை ஏற்படுத்துவது இலாபகரமாக இருக்குமா என்பதைப்பற்றி அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, சேரன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரை இதற்காக ஒரு பெரிய முதலீடு போட்டு தனியாகத் தொழிற்சாலை ஆரம்பிக்கவில்லை. இன்று இருப்பதை வைத்துக்கொண்டுதான் தயாரித்து வருகிறார்கள். எனவே இதற்கென்று ஒரு புதிய முதலீடு இல்லை, எனவே இலாப நஷ்டம் பார்க்க வேண்டிய அவசியமும் இல்லை.

போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பொருத்தப்பட்டுள்ள
வேகக் கட்டுப்பாட்டுக் கருவிகள்

*வினா எண் 97—திரு.பெ.சு. திருவேங்கடம்: திரு.ரா.இருஷ்ணன்: திரு கே. நாராயணசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு போக்குவரத்து கார்ப்பரேஷன்களின் பேருந்துகளில் வேகக்கட்டுப்பாட்டுக் கருவி எத்தனை வண்டிகளுக்குப் பொருத்தப்பட்டுள்ளன?

(ஆ) வேகக்கட்டுப்பாட்டுக் கருவிகள் பொருத்தப்பட்ட பின் விபத்துகள் குறைந்துள்ளனவா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) 6,584 பேருந்துகளில் பொருத்தப்பட்டுள்ளன.

(ஆ) ஆம் ஓரளவு குறைந்துள்ளது.

திரு.பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஸ்பீடோ மீட்டர் பொருத்தப்பட்டதற்குப் பிறகு விபத்துக்கள் ஓரளவுக்கு குறைந்துள்ளதாக அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறார்களா? நாங்கள் எல்லாம் பஸ்ஸிலே பிரயாணம் செய்கிறவர்கள். இவை பொருத்தப்பட்டிருக்கின்ற வண்டிகளிலே ஒன்று கூட வேலை செய்யவில்லை என்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா? அப்படி அறிந்திருந்தால் இது தேவை இல்லை என்பதைப் பற்றி உணர்வார்களா?



மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவரவர்களே விபத்துக்கள் ஏற்படுகிறபோது அதிவேகத்தில் சென்றதன் காரணமாக ஏற்பட்டது என்றுதான் நாமும் சொல்கிறோம். எனவே அவ்வாறு கேட்கப்படுகின்றபோது அரசாங்கம் அதற்காக நடவடிக்கை எடுக்கிறது. அந்த நடவடிக்கையின்படி அவ்வாறு வேகக்கட்டுப்பாட்டு கருவி பொருத்தப்பட்டால் பின்னர் அது தேவையில்லையே எடுத்துவிடலாமே என்று சொல்கிறார்கள். எனவே எனக்குள்ள வேதனை என்னவென்றால் உறுப்பினர்கள் பிரயாணம் செய்கின்றபோது அவ்வாறு அந்தக் கருவி இயங்காமலிருப்பதைக் கண்ட பிறகு ஏன் அதுபற்றி சொல்லத் தயங்குகிறார்கள் என்பதுதான். எனவே அப்படிப்பட்ட கருவிகள் சரியான முறையிலே பராமரிக்கப்படாமலோ அல்லது பயன்படுத்தப்படாமலோ இருப்பது பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு தயார். அதற்கு எல்லாரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-50)

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே அரசு போக்குவரத்துக் கழகங்களில் செல்கின்ற வண்டிகளில் இந்த ஸ்பீடா மீட்டர் பொருத்தப்பட்டுள்ளது. ஆனால் தனியார் வண்டிகளில் இந்தக் கருவி இல்லாத காரணத்தினால் அவர்கள் விரைவாக சென்றுவிடுகிறார்கள். அதனால் பிரயாணிகள் இந்த அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு வருவது இல்லை. நடைமுறையில் சிக்கல் இருக்கிறது. அவ்வாறு பிரயாணிகள் வராததால் அரசு போக்குவரத்துக் கழகங்களிலே வேலை செய்யும் தொழிலாளர்களே அந்த வண்டியில் உள்ள மீட்டர்களை வேலை செய்யாதவாறு செய்துவிடுகிறார்கள். இதைப் போக்க எல்லாப் பஸ்களிலும் இந்த மீட்டரைப் பொருத்தவேண்டும் இல்லை எனறால் இப்போது அரசு போக்குவரத்துக் கழகங்களில் உள்ள மீட்டர்களை நீக்க வேண்டும். இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் முதலாவதாகச் சொன்ன யோசனையில் கவனம் செலுத்தி நடவடிக்கை விரைவாக எடுக்கப்படும்.

மற்ற விவரங்களை தரத் தயாராக இருக்கிறோம். தவிரவும், அரசு பரிசீலனை செய்கிறது என்று சொன்னால், உயர்த்தித்தான் ஆகவேண்டும் என்பது அல்ல, எப்படி வேண்டுமானாலும் முடிவு எடுக்கலாம். உயர்த்தாமலும் இருக்க வாய்ப்பிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, உறுப்பினர்களுக்கு பாதுகாப்பை நான் கேட்கிறேன். (குறுக்கீடு) கேள்வி கேட்கவில்லை கேட்டால் மற்ற மாநிலங்களுக்கும் கொடுக்கமுடியும் என்று சொல்லுகிறார்களே; ஏற்கெனவே கேள்வியில் கேட்கப்பட்டிருக்கிறதே. பதிலளிக்கும்போது முழு விவரங்களையும் கொடுக்கவேண்டியதுதானே.

Why should the House be deprived of it? Why should the House wait for it?

மற்ற மாநிலங்களாலே அந்த விவரங்களைத் தர முடிகிறபோது உங்களால் தர முடியாதா? மூலக்கேள்வியிலேயே கேட்கப்பட்டிருக்கிறபோது, எல்லா விவரங்களையும் தரவேண்டியதுதானே.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்கள் என்று சொல்கிறபோது, சாதாரணமாக 4,5 மாநிலங்களைத்தான் ஒப்பிட்டுச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். மற்ற மாநிலங்கள் எல்லாம் என்றும் இதிலே குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை என்பதையும் எடுத்துக்கொள்ளலாம். மற்ற மாநிலங்களுக்கும் தேவை என்று கேட்டால் தருகிறோம். இதைப்போய் பெரிய தவறாகக் கருதி எடுத்துக்கொள்ளக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லா மாநிலங்களின் விவரங்களையும் வேண்டுமானால் கொடுக்கலாம். அதைக் கொடுப்பதில் கஷ்டம் ஒன்றும் இல்லை. எனவே இனிமேல் அவ்வாறு வருகின்றபோது அப்படிக் கொடுக்கலாம்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கட்டண உயர்வுப் பற்றிப் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். இப்போதுள்ள கட்டணத்தையே ஏழை எளிய மக்கள் கொடுப்பதற்குக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்திலே மேலும் உயர்த்துவது நல்லதல்ல. சமீபத்திலேதான் 50 சதவீதம் உயர்வு செய்யப்பட்டிருக்கின்றது. எனவே மேலும் கட்டணத்தை உயர்த்தாமல் நிர்வாகத்தைத் திறமையாகவும்



சீராகவும் மெயின்டேய்ன் பண்ணுவதன் மூலம் ஒர்க்ஷாப்பிலே வேலை செய்கின்ற பணியாளர்களின் எண்ணிக்கையினை அதிகப்படுத்தி பேருந்துகளைச் சீர்படுத்தி நல்ல முறையிலே இயக்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? கட்டணத்தை உயர்த்தாமல் இருப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இருக்கின்ற பல்வேறு நிலைமைகளை விளக்கி ஒவ்வொரு பகுதியிலிருந்தும் அரசாங்கத்திற்கு எழுதி இருக்கிறார்கள். அதன்மீது முடிவு எடுக்கவேண்டியது அரசினுடைய கடமை. எனவே அதுபற்றி பரிசீலனையில் இருக்கின்றபோது உடனே அதற்கு நான் பதில் சொல்ல முடியாது. நிர்வாகத்தை இன்னும் சீர்படுத்தவேண்டும் என்பதில் எங்களுக்கு மிகுந்த ஆர்வம் இருக்கின்றது. இன்று மற்ற இடங்களை விட நிர்வாகம் நல்ல முறையில் இங்கே இருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

### பொள்ளாச்சியில் வேகக்கட்டுப்பாட்டுக் கருவிகள் தயாரிக்கும் தொழிற்கூடம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 96—திரு. எம். பி. இரத்தினம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சியில் வாகனங்களுக்கு வேகக்கட்டுப்பாட்டு (டாகாமீட்டர்) கருவியைத் தயாரிக்கும் தொழிற்கூடம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆமெனில் எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ)&(ஆ) பொள்ளாச்சியில் உள்ள சேரன் பொறியியல் கழகத்தின் தொழிற்கூடத்திலேயே வேகக் கட்டுப்பாட்டுக் கருவி தயாரிக்கப்படுகிறது.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக ஒதுக்கப்பட்ட முதலீடு ஏதாவது இருக்கின்றதா? வேகக் கட்டுப்பாட்டுக் கருவிகளைப் பொறுத்தவரையிலே ஆண்டு உற்பத்தித் திறன் எவ்வளவு என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, இதற்கென்று போக்குவரத்துக் கழகங்களிலே பொறுப்பு ஏற்கின்ற காரணத்தால் தனியாக அரசு பணம் ஒதுக்கவேண்டிய அவசியம் இல்லை. மேலும் ஆண்டுக்கு எவ்வளவு உற்பத்தி என்று கணக்கிடப்படுவதில்லை. எவ்வளவு தேவை என்று ஆர்டர்கள் கொடுக்கிறார்களோ அதற்கேற்ப உற்பத்தியினை அவர்கள் செய்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, ஏற்கனவே வாங்கப்பட்ட இந்த கருவி பெங்களூரிலுள்ள ஒரு தனியார் கம்பெனியிடமிருந்து வாங்கியதாக நான் அறிகிறேன், அதனுடைய விலை என்ன? இப்போது சேரன் போக்குவரத்து கழகத்தின் மூலம் தயாரிக்கும் கருவியின் உற்பத்தி செலவு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, நாம் ஏற்கனவே வாங்கிய கருவியின் விலை 5,500 ரூபாய், இப்போது நாம் உற்பத்தி செய்கின்ற இந்தக் கருவியின் உற்பத்தி செலவு எவ்வளவு என்ற கணக்கு இல்லை. அதை பின்னால் தருவதற்குத் தயாராக இருக்கிறேன்.

திரு. ரா, கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, இப்போது விபத்துக்களை பொறுத்தவரை அநேகமாக பேருந்துகளில் லாரிகள்தான் வந்து மோதுவது அதிகமாக இருக்கிறது, ஆகையால் குறிப்பாக லாரிகளிலும் தனியார் வண்டிகளிலும் இதை பொறுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதே கேள்வியைத்தான் திரு. பெ. சு. திருவேங்கடமும் கேட்டார். வேறு கேளுங்கள்.

மாண்புமிகு திரு.சு.முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் அவர்கள் பஸ்ஸை மட்டும் கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணன் அவர்கள் லாரியையும் சேர்த்து கேட்கிறார். அதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு என். ஏ. பூங்காவனம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேகக்கட்டுப்பாடுகருவி பொருத்தியதின் விளைவாக பொருத்திய ஆண்டுக்கு முன் ஆண்டில் எவ்வளவு விபத்துக்கள் நடந்தன? பொருத்திய ஆண்டில் எவ்வளவு விபத்துக்கள் குறைந்து இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன். வெளி மாநிலங்களிலிருந்து ஏராளமான வண்டிகள் நம்முடைய மாநிலத்திற்கு வருகின்றன. அதற்கு வேகக்கட்டுப்பாடு கிடையாது. இங்கே தனியார் வண்டிகளில் இந்த வேகக் கட்டுப்பாடு கிடையாது. இந்த சூழ்நிலையில் ஏராளமான விலை கொடுத்து தனியார்கள், சின்ன வண்டிகள் வைத்திருப்பவர்கள் இந்த மீட்டரை வாங்கி பொருத்த முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது வேண்டுகோள் தான் கேள்வி கிடையாது.





டாக்டர் கே.சௌரிராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லாரிகளில் வேகக்கட்டுப்பாடு பொறுத்துவது அவசியம் இல்லை என்று உயர்நீதி மன்றத்தில் தடை இருக்கிறது என்பது எனக்கு ஞாபகம். லாரி ஓனர்ஸ் அசோஸியேஷன் உயர்நீதிமன்றத்திற்கு சென்று இந்த ஆணையை எங்கள் மேல் சுமத்தக் கூடாது என்று கூறி தடை வாங்கியிருக்கிறார்கள். இது அமைச்சர் அவர்களுக்கு தெரியுமா? அதன் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.சு.முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே அது தடை தான். முடிவு இல்லை. நீக்கிவிட்டதாக தகவல் வந்திருக்கிறது. அது சரிதானா என்பதை தெரிந்து சொல்கிறேன்.

கிராமபுறங்களுக்கு போக்குவரத்து வசதி செய்யும் திட்டம்

*வினா எண் 98 செல்வி ப. விசயலட்சுமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புறங்களுக்கு போக்குவரத்து வசதி செய்யும் திட்டத்தின் கீழ் இதுவரை எவ்வளவு பேருந்துகள் விடப்பட்டுள்ளன?

(ஆ) இதனால் எவ்வளவு கிராமங்கள் பயனடைந்துள்ளன?

மாண்புமிகு திரு. சு முத்துசாமி: (அ) 2864 பேருந்துகள்

(ஆ) 4976 கிராமங்கள்

திரு ஏ.தங்கராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களுக்கு போக்குவரத்து வசதி செய்யும் திட்டத்தின் கீழ் பேருந்து நிலையத்திலிருந்து 30 கிலோ மீட்டர் வரைதான் அங்கே டவுன் பஸ் விடமுடியும் என்று சொல்கிறார்கள் அப்படி பார்க்கிறபோது உள்பகுதியில் உள்ள கிராமங்கள் போக்குவரத்து வசதி இழந்துவிடுகிறது அதை மாற்றி உள் பகுதி கிராமங்களும் பயன் பெறும் வகையில் 30 கிலோ மீட்டர் என்பதை 35 கிலோ மீட்டர் என்று மாற்றி அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு.முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 25 கிலோ மீட்டர் என்பதை 30 கிலோ மீட்டர் ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள் அதனால் 25லிருந்து 30 ஆக மாற்றினோம் இப்போது 30லிருந்து 35 ஆக மாற்ற வேண்டும் என்று கேட்கிறார்கள் இப்படியே போய்க் கொண்டிருந்தால் முடிவு இல்லாமல் போய்விடும் அதனால் 30 கிலோ மீட்டர் என்று முடிந்த முடிவாக எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு தி. அன்பழகன்: தலைவர் அவர்களே, பெரிய பேருந்துகளை கிராமப்பகுதிகளிலே விடுகிற போது லாபம் வருமா நட்டம் வருமா என்று கணக்குப் பார்த்து விடப்படுகிறது. ஆனால் பேருந்து வசதிகள் இல்லாத கிராமங்களிலே இழப்பை ஓரளவிற்குக் குறைக்கிற வகையில் மினி பஸ்களை விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: லாபம் இருக்கிறதா நட்டம் இருக்கிறதா என்று ஆராய்வது உண்மைதான். பேருந்துகள் இல்லாத கிராமங்களிலே இவைகளையெல்லாம் பார்க்காமல் விட்டுக் கொண்டு இருக்கிறோம். நட்டத்தைக் குறைக்கிற அளவுக்குத்தான் மினி பஸ்களை விடமுடியும். அந்த ஏற்பாட்டைத்தான் அரசு செய்து கொண்டிருக்கிறது.

### பாம்கோலா யூனிட்டிற்கான அரசு மானியம்

*வினா எண் 99—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாம்கோலா யூனிட்டிற்கு அரசு அளித்து வந்த மானிய தொகை நிறுத்தப்பட்டது உண்மையா?

(ஆ) ஆம் என்றால் அதன் காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு எஸ். என். இராசேந்திரன்; (அ) மற்றும் (ஆ): தமிழகத்தில் தற்போது செயல்பட்டு வரும் 8 பாம்கோலா யூனிட்டுகளில் தர்மபுரி மாவட்டம் மத்தூரிலுள்ள பனைப் பொருள் திட்டத்தில் செயல்பட்டு வரும் ஒரு பாம்கோலா யூனிட்டிற்காக மட்டும் வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டத்தின் கீழ் ரூ. 1.34 இலட்சம் மானியம் வழங்கப்பட்டது. அதன் மானியம் யூனிட் ஆரம்பித்து ஓராண்டு செயல்படுத்துவதற்காக அனுமதிக்கப்பட்டதாகும். அம்மானியம் அடுத்தடுத்த ஆண்டுகளுக்கு வழங்கப்படுவதில்லை. அம்மானியம் தவிர மற்ற பாம்கோலா யூனிட்டுகளுக்கு, மானியம் ஏதும் வழங்கப்படவில்லை. எனவே வழங்கி வந்த மானியத் தொகையை அரசு நிறுத்துவது பற்றி பிரச்சனை எழவில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்திலே பாம்கோலா யூனிட்டுக்கு ஒரு ஆண்டுக்கு மானியம் கொடுக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பாக்கியுள்ள 7 யூனிட்டுகளுக்கும்—நாங்கள் நேரிலே போய் பார்த்தோம், நான் அதனால்தான் இந்தக் கேள்வியைப் போட்டேன்—ஒரு யூனிட்டுக்கு என்ன அடிப்படையிலே மானியம் கொடுக்கப்பட்டதோ அதைப் பரிசீலனை செய்து மற்ற 7 யூனிட்டுகளுக்கும் கொடுக்க அரசு பரிசீலனை செய்யுமா?



மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்; தலைவர் அவர்களே மானியம் கொடுக்கிற பிரச்சினையே எழவில்லை, என்றுதான் கேள்விக்குரிய பதிலாகச் சொன்னேன். ஆகவே மற்ற யூனிட்டுகளுக்குக் கொடுக்க வேண்டியதைப் பற்றி பரிசீலிக்க வேண்டியதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மி. வின்சென்ட்: தலைவர் அவர்களே, இந்த பாம்கோலா பல்தொழில்கள் சம்பந்தப்பட்ட தொழில் மையங்களை மூலப் பொருட்கள் அதிகமாக கிடைக்கக்கூடிய தொழிலாளர்கள் இருக்கக் கூடிய கன்னிய குமரி மாவட்டத்திலே விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு எஸ். என். இராசேந்திரன்: பாம்கோலா யூனிட்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர் கோவிலில் இயங்கி வருகிறது. மேலும் அந்த யூனிட்டில் அடங்கிய பனைப்பொருட்கள் தயாரிக்க மேலும் ஒரு யூனிட்டை கன்னியாகுமரி மாவட்டதிலே தொடங்குவதற்காக வாரியம் முடிவு செய்து 25 லட்ச ரூபாய் செலவீட்டில் எந்த இடத்தில் அமைக்கலாம் என்று பரிசீலனை செய்து வருகிறது. மார்த்தாண்டம் அல்லது வேறு இடத்தில் அமைக்க வேண்டுமென்று கேட்கிறார்கள், எங்கே அமைக்கலாம் என்று பரிசீலனை செய்து பல்மைரா காம்ப்ளக்ஸ் ஒன்று அமைக்க ஏற்பாடு செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### விதவைகள் அரசுப்பணிகளில் சேர முன்னுரிமை அளிக்கும் திட்டம்.

*வினா எண் 100—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விதவைகள் அரசுப்பணிகளில் சேர முன்னுரிமை அளிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: ஆதரவற்ற விதவைகளுக்கு அரசு மருத்துவ நிறுவனங்களில் உள்ள செவிலியர் உதவியாளர்கள், ஆயா, பெருக்குபவர்கள், துப்புரவு பணியாளர்கள், மருத்துவமனை ஊழியர்கள், சமையல் செய்பவர்கள், சமையல் உதவியாளர்கள் மற்றும் தண்ணீர் பணியாளர்கள் பதவிகளுக்கான பணியிடங்களில் வேலை வாய்ப்பகம் மூலம் நியமனம் செய்வதில் முன்னுரிமை கொடுக்கலாம் என்றும் அப்படி தேவையான அளவு விதவைகள் வேலை வாய்ப்பகம் மூலம் கிடைக்கவில்லையென்றால் நேரடியாக நியமன அதிகாரி பணியில் நியமனம் செய்யலாம் என்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்

சத்துணவு திட்டத்தின் கீழ் பணியிலமர்த்தப்படும் குழந்தைகள் நல அமைப்பாளர்கள் மற்றும் உதவியாளர்கள் தேர்விலும் ஆதரவற்ற விதவைத் தாய்மார்களுக்கு முன்னுரிமை வழங்குமாறு அரசு பணித்துள்ளது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, முதல்வரின் சத்துணவுத் திட்டம் மக்கள் நல்வாழ்வு துறை போன்ற துறைகளிலே கொடுத்திருப்பது போன்று அரசுத் துறைகளிலேயும் நகராட்சி மன்றங்கள் ஊராட்சி ஒன்றியங்கள் இவைகளில் நியமிக்கப்படும்போதும் விதிவிலக்கு அளிக்கப்படுமா? செவிலியர் பயிற்சி, ஆசிரியர் பயிற்சி போன்ற பயிற்சிகளிலும் அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10—00)

மாண்புமிகு திருமதி. கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதரவற்ற விதவைகளுக்கு அரசுப்பணிகளில், உள்ளாட்சி மன்றங்கள், அரசு தன்னாட்சி நிறுவனங்கள், அரசு உதவி பெறும் நிறுவனங்கள் ஆகியவைகளில் எந்த ஒரு பணியிடத்திற்கும் கல்வி மற்றும் பிற தகுதிகள் இருந்தால் அவர்களுக்கு தனி சலுகை அளிக்கலாம் என்பதை அரசு பரிசீலனை செய்து வருகிறது. பயிற்சி நிலையங்களில் சேர்வதற்கும் ஆதரவற்ற விதவைகளில் தகுதியைப் பெற்றிருந்தால் அவர்களுக்கு அந்தச் சலுகை அளிக்கலாம். ஆனால் கல்வித் தகுதிகளிலிருந்து விதிவிலக்கு அளிக்கக்கூடாது என்றும் இன்றைக்கு தமிழக முதல்வர் புரட்சித்தலைவர் அவர்களுடைய அரசின்கீழ் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, விதவைகளுக்கு முன்னுரிமை அளிப்பதில் வயது ஒரு முக்கிய காரணமாக இருக்கிறது. 40 வயதில் கணவன் இறந்து விட்ட பிறகு 40 வயதிற்கு மேல் குடும்பத்தை காப்பாற்றுவதற்கு அரசு கொடுக்கிற முன்னுரிமை அடிப்படையில் வேலை வாங்கவேண்டுமென்றால் வயது வரம்பு ஒரு சிக்கலாக இருக்கிறது. எனவே விதவைகளுக்கு அரசுப் பணிகளில் சேர்வதற்கு வயது வரம்பை முற்றிலும் நீக்கிட அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, வயதுவரம்பை பொறுத்த வரையில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு வயது வரம்பு எவ்வளவு தளர்த்தப்பட்டு இருக்கிறதோ, அதே வயது வரம்பு எல்லா இனத்திலும் உள்ள ஆதரவற்ற விதவைகளுக்கு தளர்த்தலாம் என்று இன்றைக்கு அரசு பரிசீலனை செய்து வருகிறது.



திரு. என். பழனிவேல்; மாண்புமிகு தலைவர் அவர்களே, விதவைகளுக்கு வேலை வாய்ப்புகளில் முன்னுரை கொடுப்பதில் தகுதிகள் இருந்தால் தான் கொடுக்கப்படுகிறது. ஆகவே விதவைகளின் பிள்ளைகளுக்கு அந்த முன்னுரிமை கொடுப்பதற்கு அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, ஆதரவற்ற விதவைகளின் குழந்தைகள் படிக்கவேண்டுமென்றால் அரசாங்கம் இன்று புத்தகம் வாங்குவதற்காக உதவித் தொகை கொடுத்துக் கொண்டு இருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் ஆதரவற்ற விதவைகளின் மகள் திருமணத்திற்கு ஆயிரம் ரூபாய் வீதம் ஆயிரம் பெண்களுக்கு உதவிட இன்று 10 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, திருமண ஏற்பாடுகளை அரசு செய்து வருகிறது.

திரு. மு. ப. முனுசாமி : தலைவர் அவர்களே, ஆதரவற்ற விதவைகள் பல்கலைக்கழகங்களில் படித்து பட்டம் பெறுகின்ற மாணவிகளுக்கும் முன்னுரிமை கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆதரவற்ற விதவைகளாக இருந்தால் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதிலே தகுதி அடிப்படையிலே முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது.

நீலகிரி மாவட்டத்திலுள்ள கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள்

வினா எண் 38—திரு. கே. ரமணி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் எவ்வளவு உள்ளன?

(ஆ) அவைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் எவ்வளவு பேர்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ)நீலகிரி மாவட்டத்தில் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் 13. இவற்றில் இரண்டு தொழிற்சாலைகள் ஆரம்ப கட்டத்தில் இருக்கின்றன.

(ஆ) 1,161 தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள்.

திரு.கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்த 13 தொழிற்சாலைகளில் இரண்டு தொழிற்சாலைகள் செயல்படவில்லை. ஆரம்ப நிலையில் இருப்பதாக குறிப்பிட்டார்

கள். இந்த தொழிற்சாலைகள் அத்தனைக்கும் சேர்த்து தொழிலாளர்கள் எண்ணிக்கையை அரசு எப்படி நிர்ணயித்தது இந்த அளவிற்கு தான் வேலை கொடுக்க வேண்டும் என்று நிர்ணயிப்புகளை ஏதாவது கமிட்டி மூலமாகவோ அல்லது தொழிற் சங்கங்களை கலந்தோ ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 13 தொழிற்சாலைகளில் இரண்டு தொழிற்சாலைகள் ஆரம்ப கட்டத்தில் இருப்பதாகச் சொன்னேன். அந்த இரண்டு தொழிற்சாலைகள் இப்போது அமைத்துக் கொண்டிருக்கிற பணியில் இருக்கின்றன. பதினோறு தொழிற்சாலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. எப்படி தொழிலாளர்கள் எடுக்கப்பட்டார்கள் என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. தகவலை மாண்புமிகு உறுப்பினருக்கு அனுப்பி வைக்கிறேன்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு தலைவர் அவர்களே, அவர்கள் தொழிற்சாலைகளில் வேலை செய்யக் கூடிய தொழிற்சாலை தொழிலாளர்கள் என்ற முறையில் அவர்களுக்கு குறைந்தபட்ச ஊதியமும், மற்ற விதமான சலுகைகளும், தொழிற்சாலை தொழிலாளர்களுக்கான சலுகைகளும், மற்ற தொழிற்சாலைகளில் கொடுப்பதைப் போல இங்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தொழிற்சாலைகளில் மற்ற தொழிற்சாலையில் இருப்பதை போல அங்கே பணிபுரிகிற தொழிலாளர்களுக்கு மினிமம் வேஜஸ் சட்டம் அமல் செய்யப்படுகிறது. மினிமம் வேஜஸ் என்ற வகையில் குறைந்தபட்ச கூலியாக 6 ரூபாய் சட்ட ரீதியாக கொடுக்கப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் அவர்களுக்கு சீருடைகளும் மற்ற உரிமைகளும் வழங்கப்படுகிறது.

திரு. மு. அரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்குள்ள தனியார் தொழிற்சாலைகளில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்குச் சுமார் ரூ. 12 அளவுக்கு அதிகமாக கூலியிருந்தும், அரசுக்குச் சொந்தமான இந்த கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு ரூ. 6 என்பது மிகவும் குறைவு. வேலை பளுவும் அதிகம். அதனால் அவர்களுடைய கூலிகளை உயர்த்துவதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, நிபார்வார், தேயிலைத் தொழிற்சாலைகள் தற்போது மந்த நிலைமையில் இருக்கிற காரணத்தால் இன்றைய தினம் அவர்களுக்குக் குறைந்தபட்ச அளவுக்குச் கொடுக்கப்படுகிறது. விரைவில் இலாபம் பெறுகின்ற நேரத்திலே, உரிய அளவு ஊதியம் உயர்த்தப்படும்.





திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, இந்த நீலகிரி மாவட்டத்திலே உள்ள கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள், சிறு சிறு அளவில் தேயிலை உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுக்காக ஆரம்பிக்கப்பட்டதாகும். அமைச்சர் அவர்கள் ரூ. 6 குறைந்தப்பட்சக் கூலி என்று சொன்னார்கள். விவசாயத் தொழிலாளர்களுக்கே குறைந்தபட்சக் கூலி ரூ. 7 என்று நிர்ணயித்திருக்கும் போது ஒரு பாக்டரியிலே வேலை பார்க்கிறவர்களுக்கு ரூ 6 தான் நிர்ணயிக்கப்பட்டுள்ளது சீரான நிர்வாகமும் இலாபமும் வந்தால், அது உயர்த்தப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது சீரான நிர்வாகமும் இல்லாமல், இலாபமும் இல்லாமல் இருப்பதற்கு காரணம், தொடர்ந்து, இந்த கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலைகளுக்கு தேர்தல் வைக்காமலேயே, தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பின் கீழே நிர்வாகம் இயங்காமல் இருப்பதுதான் என்று தெரிந்து, உடனடியாக அந்தத் தேயிலை தொழிற்சாலைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக அமைப்பை கூடிய சீக்கிரம் கொண்டு வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தக்க நடவடிக்கை நிச்சயம் எடுக்கப்படும்.

விளாத்திக்குளம் தொகுதியில் பட்டுப்பூச்சி வளர்க்கும் சங்கம் அமைக்கும் திட்டம்

வினா எண் 81.— திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் விளாத்திகுளம் தொகுதியில் பட்டுப்பூச்சி வளர்க்கும் சங்கம் அமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில் எந்த ஊரில் எப்பொழுது ஆரம்பிக்கப்படும்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:

(ஆ) ஆம் (அ) மற்றும் நெல்லை மாவட்டம் விளாத்திகுளம் தொகுதியில் பட்டுத் தொழில் செய்யும் விவசாயிகளின் கூட்டுறவு சங்கம் நாகலாபுரம் என்ற ஊரில் இவ்வாண்டுக்குள் ஆரம்பிக்கப்படும்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, இந்தப் பட்டுபூச்சி வளர்க்கும் சங்கம் தற்போது உற்சாகமாக இல்லை என்பது உண்மை. காரணம் என்னவென்றால், விற்பனைக்கு வருகின்ற அந்தப் பட்டுப்பூச்சிக்கான விலை போதுமானதாக, கட்டுப்படியாகக் கூடியதாக இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அதை உயர்த்துவதற்கு, அந்த விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலை கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டு விவசாயத் தொழிலாளர்கள் உற்சாகமாக இல்லையென்று சொன்னார்கள், உற்சாகமாகத்தான் இருக்கிறார்கள். தக்க விலை கொடுக்கப்படுகிறது.

டான்சி தயாரிக்கும் பொருட்களின் விலை

**வினா எண். 85**— திரு. எம். சின்னசாமி. மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டான்சி தயாரிக்கும் பொருட்களின் விலை வெளியிலுள்ள தனியார் நிறுவனங்கள் தயாரிக்கும் பொருட்களின் விலையைக் காட்டிலும் அதிகமாக இருப்பது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அரசு என்ன நடவடிக்கை எடுக்க உள்ளது?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:**

(அ) டான்சி தயாரிக்கும் பொருட்களின் விலை தனியார் நிறுவனங்கள் தயாரிக்கும் அதேயளவு தரமான பொருட்களின் விலையை விட அதிகமாக இல்லை. காலணிகளைப் பொருத்தவரை முக்கிய தனியார் நிறுவனங்களின் பொருட்களைவிட டான்சி பொருட்களின்விலை குறைவாகவே உள்ளன. மரம், எஃகு ஆகியவைகளிலான மேசை நாற்காலிகள், நிலையறையப்பெட்டிகள், (cubboards) போன்ற பல்வகைத் துணைப் பொருட்களைப் பொருத்தவரை, தனியார் நிறுவனங்களின் அதேயளவு தரமுள்ள பொருள்களின் விலைகளோடு ஏறத்தாழ ஒத்தேயிருக்கின்றன. ஆயத்தீர்வுக்குட்படாத சிறு தொழில்கள் தயாரிக்கும் பொருட்களின் விலை மற்றும் தரமுள்ள மூலப்பொருட்களை கொண்டு செய்யப்படாத சில தனியார் நிறுவனங்களின் பொருட்களின் விலை டான்சி பொருட்களின் விலையைவிட குறைந்திருக்கலாம், ஆனால் அவைகளை மட்டும் ஒத்துப்பார்ப்பது சரியாகாது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. என் எஸ். வி. சித்தன்;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்க அலுவலகங்களிலேயும் இன்னும் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனங்களிலேயும் இப்படி பொருள்கள் வாங்குகின்ற நேரத்திலே, டான்சியிலே வாங்குவதற்குப் பதிலாக தனியார் நிறுவனங்களிடம் வாங்குவதாலே அவர்களுக்குச் சில சலுகைகள் இருக்கலாம். ஆனால், டான்சியிலே வாங்கினால், டர்ன் ஓவர் அதிகமாகி, அதனாலே விலை குறைய வாய்ப்பிருக்கிறது. ஆகவே இம்மாதிரி அரசாங்க நிறுவனங்களெல்லாம், டான்சியிலேதான் வாங்க வேண்டும், வெளியிலே வாங்கக்கூடாது என்ற தடையை அரசாங்கம் விதிக்குமா? அதன் மூலமாக, நிறைய பொருட்கள் வாங்கப்பட்டால், விலை குறைய வாய்ப்பிருக்குமே, மேலும் விலையைக் குறைக்கலாமே, அதை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி;** மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்பொழுதும் அந்த நடைமுறை தான் இருக்கிறது. மீண்டும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய ஆலோசனையை ஏற்று, அந்த கட்டாயப்படுத்தப்படும். வற்புறுத்தப்படும்.

**திரு. கே. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத்* தலைவர் அவர்களே, டான்சி வார்ப்பட தொழிற்சாலையிலே உற்பத்தி செய்கிற இரும்பு குழாய்கள் அதிகவிலை உள்ளதாக இருக்கிறது அதனால் குடிநீர் வடிகால் வாரியமும், வீட்டு வசதி வாரியமும், அங்கே வாங்காமல் வெளியிலே வாங்குகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அப்படி இருந்தால், அதை நீக்குவதற்கு அந்த நிறுவனத்திடமே வாங்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10–10)

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அது பற்றிய தகவல் என்னிடத்திலே இல்லை. மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வினைப் பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்— விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் விடுதியில் மின்தூக்கி, தொலைபேசி, சரிவர இயங்காமை.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே சட்டமன்ற உறுப்பினர்களுக்கான இரண்டு முக்கியமான பிரச்சனைகளைப் பற்றித் தங்களுடைய கவனத்திற்கு கொண்டு வர நான் விரும்புகிறேன். தற்போது சென்னையிலே உள்ள ஆறு மாடி சட்ட மன்ற உறுப்பினர் விடுதியிலே 6 லிப்ட்டுகள் உள்ளன. ஆனால் அதில் இரண்டு லிப்ட்டுகள் எப்போதும் நிரந்தரமாக இயங்குவதில்லை. மீதி உள்ள 4 லிப்ட்டுகளில் கூட இப்போது ஒரே ஒரு லிப்ட்டு தான் இயங்குகிறது. எங்களைப் போன்ற இளைஞர்கள் ஐந்து ஆறு மாடிகளில் ஏறிச் செல்வதில் பிரச்னை இல்லை. ஆனால் வயதான சட்டமன்ற உறுப்பினர்களும், மற்றும் பார்க்க வருகிறவர்களும் ஐந்தாறு மாடிகள் ஏறி வருவது என்பது சிரமமாக இருக்கிறது. எனவே, அந்த லிப்ட்டுகள் சீக்கிரமாக இயங்குவதற்கு வழி செய்ய வேண்டுமென்டு கேட்டு கொள்கிறேன்.

அடுத்த பிரச்னை, இதில் கட்சி வேறுபாடு இருக்காது என்றே கருதுகிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் உள்ள தொலைபேசி நிரந்தர கோளாறாகவே [illegible]

என்று குறிப்பிடுவதற்காக நான் வருந்துகிறேன். பல சமயங்களில் நாங்கள் பிறருடன் தொடர்பு கொள்வதாக இருந்தாலும் அல்லது வெளியார் எங்களுடன் தொடர்பு கொள்வதாக இருந்தாலும் அந்த தொலைபேசிகள் சரியாக இருக்குவது கிடையாது. கேட்டால் கெப்பாசிட்டிக்கு அதிகமாக இணைப்பு கொடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள். இது மிகவும் முக்கியமான பிரச்னை சட்டமன்றம் கூடியுள்ள இந்த நேரத்தில் பலரோடு பேச வேண்டிய நிலைமை இருக்கிறது. எனவே, இன்று இல்லாவிட்டாலும் நாளைக்காவது இந்தக் குறைபாடுகளை நீக்குவதற்கு தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: லிப்டை பொருத்தவரைக்கும் நயன்று சப்ளை செய்த அந்தக் கம்பெனி ஸ்டாக்கில் இருக்கிறது. அதனால் இரண்டு லிப்ட்டுகள் சரியாக வேலை செய்ய முடியவில்லை. மற்ற இரண்டு லிப்ட்டுகள் வேலை செய்கின்றன. மின்சாரத் தடை இல்லாத நேரம் பூராவும் அவைகள் வேலை செய்கின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன்: ஒன்றுதான் வேலை செய்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் இப்போது கேட்டேன். இரண்டு லிப்ட்டுகள் வேலை செய்கின்றன. மற்ற இரண்டு லிப்டுகள் வேலை செய்யாததற்கு காரணம் சப்ளை செய்த அந்தக் கம்பெனியில் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் இருப்பதால் அவர்கள் வந்து வேலை செய்ய முடியவில்லை. வேலைநிறுத்தம் முடிந்த பிறகு அவர்கள் வந்து பார்ப்பார்கள். (குறுக்கீடு) ஏதாவது ஒரு கம்பெனியை வைத்துச் சரி செய்யப் பார்க்கிறோம்.

தொலைபேசியைப் பொறுத்தவரையிலும் நீங்கள்தான் பொறுப்பு. மத்திய சர்க்காரிடத்திலே சொல்லி ஏதாவது செய்ய வேண்டும். (குறுக்கீடு) ஸ்டீபன் அமைச்சராக இருந்தபொழுது முடியவில்லை. அவரே பலமுறை சொல்லியிருக்கிறார். தொலைபேசியில் அடிக்கடி கரகரப்பு. முடிந்த அளவிற்கு குறைபாடு இல்லாமல் செய்யப் பார்க்கலாம். குறைபாடு இல்லாத தொலைபேசி இந்தியாவிலேயே கிடையாது. ஆகவே ஹாஸ்டலுக்கு மட்டும் அப்படித் தனியாக வரும் என்று நான் கருதவில்லை. ஆறு பேர் கூட்டு மொத்தமாக தொலைபேசியை எடுத்தால் ஜாம் ஆகிறது என்று சொல்கிறார்கள், ரெக்டிஃபை செய்வதற்கு, ரிப்பேர் செய்வதற்கு அங்கேயிருந்துதான் ஆள் வரவேண்டியிருக்கிறது. குறைபாட்டை நீக்குவதற்கு நாம் பலமுறை எழுதியாகிவிட்டது. அவர்கள் இதுவரையில் வந்து குறையை நீக்கவில்லை. வேறு என்ன வழி என்று பார்க்க வேண்டும். அமெரிக்காவிலேயிருந்து பெல் கம்பெனி மாதிரி வரச்சொல்லி ஏதாவது பண்ணினால்தான் உண்டு. நம் நாட்டில் அதே மாதிரி கிடையாது.



## (ஆ) தஞ்சையில் அரிசித் தட்டுப்பாடு

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முக்கியமான ஒரு பிரச்னை எழுந்திருப்பதால் உங்கள் வனத்திற்கு நான் இதைக் கொண்டு வருகிறேன். மாண்புமிகு லீடர் ஆப் தி ஹவுஸ் இதைக் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். தஞ்சை டவுனில் நேற்று முழுவதும் ரைஸ் கிடைக்கவில்லை என்று பிரஸ்ஸிலே வந்திருக்கிறது.

"There is absolute non-availability of rice in Thanjavur". ஏன் கலகம் வராது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வந்தவுடன் நீங்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கலாம். மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு அது நன்றாகத் தெரியும்.

திரு. ரா. உமாநாத்: ஒத்திவைப்புத் தீர்மானம் என்றால் அதற்கு அப்ரூவல் வேண்டும் என்றால் அதற்கு மூன்று நான்கு நாட்கள் ஆகிவிடும். பிறகு, what will happen? Rice must be rushed up to that place.

இம்மாதிரி விஷயத்தில் லீடர் ஆஃப் தி ஹவுஸ் ரஷ் செய்து இதற்கு ஏதாவது செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்திரிகையிலே வந்த செய்தியைப் பார்த்து விட்டுச் சொல்கிறீர்கள் என்று கருதுகிறேன்.

திரு. ரா. உமாநாத்: இல்லையில்லை, டிரங்க் கால் வந்தது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்களே, அரசாங்கமே முழுக் கொள்முதல் செய்ய வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருந்தது. இருந்தாலும் அங்கே சில்லரைக் கடைகளில் அரிசி கிடைப்பதிலே இருக்கின்ற சிரமத்தை உணர்ந்து, சில்லரை வியாபாரிகளை ஏற்கனவே அவர்கள் எவ்வளவு சில்லரை வியாபாரம் செய்தார்களோ அந்த அளவுக்கு அவர்கள் விவசாயிகளிடத்திலே நேரடியாகக் கொள்முதல் செய்து கொள்ளலாம் என்கின்ற உத்தரவை இப்போது பிறப்பித்திருக்கிறோம். (குறுக்கீடு) ஆணையிடச் சொல்லி விட்டோம். அது பத்திரிகையிலேயும் வந்திருக்கின்றது. வெளிவந்து ஒரு நாள், இரண்டு நாள்கள் ஆகின்றன. ஆகவே அவர்களே நேரடியாகக் கொள்முதல் செய்து சில்லரைக் கடைகளிலே தஞ்சை மாவட்டத்திற்குள்ளாக விற்பனைக்கு தடையில்லை, விற்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அரசாங்கம் மற்றொரு பக்கத்திலே கொள்முதல் செய்தாலும், சில்லரை வியாபாரிகளும் கொள்முதல் செய்து விற்கலாம். இந்த இடர்பாடுகள் ஓரிரு நாட்களிலே நீங்கிவிடும் என்று நான் கருதுகிறேன். அதற்கான தக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதையும் கூறிக்கொள்கிறேன்.

(இ) அரசாங்க விழாக்களில் தொகுதி உறுப்பினர்கள் இடம் பெறச் செய்வது.

**திரு. எல். இளையபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அவை முன்னவர் அவர்கள் முன்பே உறுதிமொழி கொடுத்திருக்கிறார்கள். அதாவது எந்த ஒரு சட்டமன்ற உறுப்பினரின் தொகுதியிலே நடைபெறுகின்ற அரசாங்க விழாக்களுக்கும், நிச்சயமாக அந்தந்த தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்படும். அவர்களையும் சேர்த்து அந்த விழா கொண்டாடப்படும் என்று ஏற்கனவே 2, 3 முறை உறுதி கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இன்றைய தினம் மாலையில் என்னுடைய எழும்பூர் தொகுதியில் ஒரு மருத்துவமனை திறப்புவிழா நடைபெறும் என்று அறிவிக்கப் பட்டிருக்கின்றது. ஆனால் அது குறித்து எனக்குத் தகவல் இல்லை. அதேபோன்று 3 மாதங்களுக்கு முன்னால் தாலுகா அலுவலகத்தின் கால்கோள்விழா என்னுடைய தொகுதியில் நடைபெற்றது. அதற்கும் எனக்குத் தகவல்தரப்படவில்லை. செய்தியும் கொடுக்கப்படவில்லை. இதற்கு என்னகாரணம் என்பதை விளக்குவாரா? இப்படி நிகழாமல் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோன்று நான் இங்கே ஏற்கனவே தெளிவுபடுத்தி சொல்லி இருக்கிறேன். சட்டப்பேரவை உறுப்பினர்களுடைய தொகுதிகளில் அங்கே அரசு நிகழ்ச்சிகள் நிகழுமேயானால், அந்தத் தொகுதிக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் இடம் பெறச் செய்வது முறையென்று சொல்லி, அதை எல்லா இலாகாவினர்க்கும் எடுத்துக் சொல்லி இருக்கிறோம். இன்னும் கூட ஒரு படி மேலே போய் சொல்லி இருக்கிறேன். மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளாவிட்டாலும் கூட, அந்த நிகழ்ச்சிகளிலே பெயர்களைப் போட்டு வையுங்கள் என்றுதான் சொல்லி இருக்கிறேன். நான் கலந்து கொள்ளுகின்ற பல்வேறு நிகழ்ச்சிகளிலே அவர்கள் கலந்து கொண்டாலும், கலந்து கொள்ளாவிட்டாலும் அவர்கள் அந்தத் தொகுதியைச் சேர்ந்த சட்டமன்ற பேரவை உறுப்பினர்கள் என்பதையாவது மக்கள் தெரிந்து கொள்ளட்டும் (குறுக்கீடு) என்ற அளவிற்குப் போடச் சொல்லி இருக்கிறேன். பொதுவாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையினாலே அவர்கள் வராவிட்டாலும் கூட, ஒவ்வொருவரையும் ஒரு குறிப்பிட்ட நாளில் 4 நாள், 3 நாட்களிலே நிகழ்ச்சி ஏற்பாடு செய்கின்றபோது ஒவ்வொருவருடைய இசைவுப் பெற்று—நீங்கள் வருகின்றீர்களா? இல்லையா என்று கேட்டுத் தெரிந்து போட முடியாத சூழ்நிலை இருப்பதன் காரணமாக அவர்களுடைய பெயர்களை எல்லாம் போட்டு வையுங்கள்; வராவிட்டாலும் கூட பரவாயில்லை என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது.



மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் கூறுவது போன்று அவருடைய தொகுதியிலே நடைபெறுகின்ற நிகழ்ச்சியிலே அவருடைய பெயர் விடுபட்டிருக்குமானால் அது வருந்தத்தக்கது. அதற்கான காரணங்கள் என்ன என்பதைக் கண்டறிந்து அதை நீக்குவதற்கான முயற்சிகளை அந்தந்த துறையினரும் மேற்கொள்வார்கள்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் சொன்ன இந்தப் பதிலே எல்லா துறையினர்களுக்கும் எடுத்துக் காட்டாக அமைந்து எதிர்காலத்திலே நடந்து கொள்வதற்கு வழி முறையாக அமையும் என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாடாளுமன்ற உறுப்பினர்கள் வேண்டுமானால் வராமல் இருக்கலாம். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தொகுதிக்குப் போவதைத் தவிர வேறு வேலை கிடையாது. அதனாலே சட்டமன்ற உறுப்பினர்கள் விட்டுப்போகாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

(ஈ) உறுப்பினர்கள் விடுதியில் தண்ணீர் தட்டுப்பாடு.

**திரு. ரா. கிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்படுகின்ற சிரமத்தைத் தவிர்ப்பது பேரவை தலைவரான உங்களுடைய பொறுப்பாகும். நேற்றைய தினம் இரவிலே சட்டமன்ற விடுதியில் சிறிதளவு கூட தண்ணீர் இல்லை. குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஏற்கனவே அங்கே 'வாட்டர் கூலர்' இருந்தது. இப்போது அதனுடைய ஸ்டான்டு மட்டும்தான் அங்கே இருக்கின்றது. எனவே உறுப்பினர்களுக்கு ஏற்பாடு குறைந்தபட்ச குறைபாடுகளை தீர்ப்பதற்கு முயற்சி செய்யப்படுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நல்லபடியாக தீர்த்து வைக்க முயற்சிகள் எடுக்கப்படும்.

(முற்பகல் 10-20)

## 4. கவன ஈர்ப்பு

கஸ்தூரிபாய்காந்தி மருத்துவமனையில் அரசு மருத்துவர் இறப்பு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ப. வெங்கடசுப்பிரமணியம், டாக்டர் கே. சௌரிராஜன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, "சென்னையிலுள்ள அரசினர் கஸ்தூரிபாய் காந்தி மருத்துவ மனையில் அரசு மருத்துவர் ஒருவர் மருத்துவக் கருச்சிதைவினால் இறந்தது பற்றிய" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்டமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

சென்னை, திருவல்லிக்கேணியில் உள்ள கஸ்தூரிபாய் காந்தி மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியாற்றி வந்த டாக்டர் திருமதி கன்னியம்மாள், என்பவர் வயது 37, 50 நாட்களாக மாதவிடாய் நின்ற காரணத்தினால் (அமினோரியா) பாதிக்கப்பட்டிருந்தார். 19-1-983 அன்று அவர்மேற்படிகஸ்தூரி பாய் காந்தி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேருவதற்குமுன் பெண் குறியின் வாயிலாக இரண்டு தினங்களாக இரத்தக் கசிவு இருந்து வந்தது என்று பரிசோதனையின் மூலம் தெரியவந்தது. திடமாகவும், போஷாக்கு உடைய நிலையிலும் இரத்தசோகை இல்லாத நிலையில் அவர் உடம்பு இருப்பது பரிசோதனையில் தெரியவந்தது. அவருக்கு கால்களில் வீக்கம் (Pedal Oedema) இல்லை எனவும் தெரிய வந்தது. இதயத்துடிப்பு மற்றும் சுவாசகோசம் அசாதாரண நிலையில் இல்லையெனவும் தெரிய வந்தது. அடிவயிறு, ஈரல் மற்றும் கல்லீரல் சாதாரண நிலையில் இருந்தன. வேறு எந்த கட்டியோ, கசிவோ தெரியவில்லை. இடுப்பின்கீழ் கைவைத்து பரிசோதனை செய்தபோது (Bimanual Pelvic Examination) கருப்பையின் கழுத்துப் பகுதி (Cervix) கீழ் நோக்கியும், கருப்பையின் வாயில் முடியும் இருப்பது தெரிய வந்தது. கருப்பை தலைகீழாகவும், மிருதுவாகவும், வீக்கமடைந்தும் காணப்பட்டது. சிறுநீரில் உப்பும் சர்க்கரையும் இல்லை. கருப்பை சுத்திகரிப்புக்காகவும் அதிலுள்ள சிதைவுற்ற கட்டியை வெளியெடுப்பதற்காகவும் நிர்ணயம் செய்யப்பட்டது. பொது மயக்க மருந்து (General Anaesthesia) அளித்து அடிவயிற்றை பெண் உறுப்பு வாயிலாக சோதனை செய்து பார்த்த போது, கருப்பையின் கழுத்துப்பகுதி கீழ் நோக்கியும், கருப்பையின் வாயில் முடியும், கருப்பை தலைகீழாகவும் வீங்கியும் அசைவுறக் கூடிய நிலையிலும் இருந்தது. பெண் குறியின் வாயிலாக இரத்தக் கசிவு இருந்தது. 3 செ.மீ., 2 செ.மீ. அளவுள்ள தடியான கட்டி இருந்தது. கருப்பையின் உள் நீள அளவு 8 செ.மீ ஆகும். இந்நிலையில் நாடித்துடிப்பு திடீரென வலுவிழந்து காணப்பட்டதால் மேற்கொண்டு நடவடிக்கை நிறுத்தப்பட்டது. நாடித்துடிப்பை வலுவடையச் செய்யும் முயற்சி மேற்கொள்ளப் பட்டது. ஆனால் உடனே இதயத்துடிப்பு நின்றுவிட்டது. இதயத் துடிப்பு தொடர்வதற்காக நேர்முகமாக இருதயத்தைத் துடிக்க



வைக்கும் முயற்சி அட்ரினலின் (Intracardial adrenaline) ஊசி மருந்து செலுத்திஇருதயத் தடவல் (Cardiac massage) கொடுக்கப் பட்டது. இதன் பயனாக இருதயத்தில் துடிப்பு உருவாக்கப் பட்டது. ஆனால் இது நிரந்தரமானதாக இல்லை. ஆகவே அறுவை சிகிச்சையின் மூலமாக இருதயத்துடிப்பு ஏற்படுத்த இருதயத்தை தடவி (massage) கொடுக்கப்பட்டது. உடனே சென்னை பொது மருத்துவமனையிலிருந்து இருதயயியல் நிபுணர் வரவழைக்கப்பட்டார். அவரும் தம்மால் இயன்ற அனைத்தையும் செய்தார். இருந்தபோதிலும் இருதயத்துடிப்பு தொடரவில்லை. இருதயத் துடிப்பு நின்றுவிட்டதால் டாக்டர் திருமதி கன்னியம்மாள் இறந்து விட்டார்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, இறந்துபோன அந்த மருத்துவர் சிறந்த மருத்துவர். அவரே ஒரு எக்ஸ்பர்ட் ஆக இருந்தவர். அந்த மருத்துவர் முறையாக கவனிக்கப்படாத காரணத்தால் அவர் இறந்துவிட்டதாகத் தெரிகின்றது. இதுபோல் ஏற்பட்ட ஒரு நிகழ்வினால் குடும்பக் கட்டுப்பாடு இயக்கம் மக்களிடையே வெறுப்பைப் பெறக்கூடிய ஒரு நிலை ஏற்படுகின்றது என்பதை அரசு அறியுமா அந்தக் குறைபாடுகளை நீக்க அரசு நடவடிக்கை எடுக்குமா எனத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு கருத்துக்களை தெரிவித்திருக்கிறார்கள். முதலாவதாக கவனிப்பு இன்மை, கவனக் குறைவு காரணமாக என்று தெரிவித்திருக்கிறார்கள். இந்த விபத்து ஏற்பட்ட உடனே எல்லா விவரங்களையும் வரவழைத்து மிகக் கூர்மையாக' கவனிப்பாக பார்த்தபோது, கவனக் குறைவு அங்கே ஏற்பட்டதாக இல்லை. அது மட்டும் அல்லாமல் இன்னும் ஒரு தவறான கருத்து • பத்திரிகையின் வாயிலாக பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். இது ஏதோ கருத்தடை ஆப்பரேசனுக்காக அவர் அங்கே சென்றார்கள் என்றும், அதனாலே குடும்பக் கட்டுப்பாடு பாதிக்கப்படும் என்று ஒரு தவறான கருத்து-குடும்பக் கட்டுபாட்டிற்கும் இதற்கும் எந்தவிதமாக சம்பந்தமும் கிடையாது. அங்கே அவர்கள் ஒரு காரணத்திற்காக ஒரு வியாதிக்காக, மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டார்கள். உடனடியாக ஆப்பரேசன் செய்யவேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டது. ஆகவே அறுவை சிகிச்சை வேறு ஒரு காரணத்திற்காக செய்யப்பட்டது. அது குடும்பக் கட்டுப்பாட்டிற்காகவோ அல்லது கருத்தடைக்காகவோ அங்கு செல்லவில்லை. ஒரு விபத்து ஏற்பட்டதனாலே, ஒரு வியாதி ஏற்பட்டதினாலே பிளீடிங் ஏற்பட்டதினாலே அங்கே சென்றார்கள். அதற்கு சிகிச்சை செய்யப்பட்டது. அனஸ்திசியா கொடுக்கிற நேரத்திலே ஏற்பட்ட விபத்து என்று அங்கே பார்த்துச் சொன்னார்களே தவிர, அது கருத்தடை ஆபரேசனுக்கும், இதற்கும் சம்பந்தம்

கிடையாது. அதனாலே எந்தவிதமான நம்முடைய கருத்தடை ஆப்பரேசன் பாதிக்கப்படாது, அது நன்றாக நடந்து கொண்டிருக்கிறது. தயவுசெய்து அதற்கு யாரும் மாசு கற்பிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதன் மேல் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானமே கொடுத்து இருந்தேன். ஆனால் தாங்கள் என்ன காரணத்தாலோ அதை கவன ஈர்ப்புத் தீர்மானமாக மாற்றிவிட்டீர்கள். இருந்தபோதிலும் கருச்சிதைவு செய்துகொள்வது குற்றம் என்று இருந்த காலத்திலே ஏராளமான தாய்மார்கள் அங்காங்கே பயிற்சி பெறாதவர்கள், நாட்டு வைத்தியர்கள், குவாக்ஸ் என்று சொல்கிறார்களே அவர்களிடம் கருச்சிதைவு செய்து கொண்டு, அதனாலே ஏராளமான தாய்மார்கள் உயிர் இழந்தார்கள் என்ற ஒரே காரணத்திற்காக பாராளுமன்றத்திலே சட்டம் திருத்தப்பட்டது, லீகலைசேஷன் ஆஃப் அபார்ஷன் கருச்சிதைவு செய்வது சட்டப்படி செல்லும் என்ற ஒரு சட்டம் கொண்டு வந்தபிறகு இப்படி ஒரு நிகழ்ச்சி, அதுவும் மருத்துவருக்கே ஏற்படுகிறது என்று சொன்னால் உள்ளபடியே பாராளுமன்றம் கொண்டு வந்த சட்டத்தினுடைய அடிப்படை நோக்கமே தகர்த்து எறிவதாக இருக்கிறது இந்த நிகழ்ச்சி என்பதைப் பற்றி நான் மிகவும் வருத்தப்படுகிறேன். நான் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கொடுத்து இருக்கின்ற விவர அறிக்கையைப் படித்தேன்.

'The reply is totally unsatisfactory. I am not satisfied with the explanation given by the Hon. Minister for Health.' காரணம் என்ன வென்றால், அவைகளிலேயிருந்து கீழ்க்கண்ட கேள்விகளை நான் கேட்க விரும்புகிறேன். அதற்கு அவர் பதில் அளிக்க முடியுமா என்பதை நான் கேட்டுக் கொள்ள ஆசைப் படுகிறேன். Was the patient admitted for termination of pregnancy alone? Was the consent of the husband obtained? Was the M.T.P. sterilisation given?

(The Hon. Minister for Health rose)

DR. K. SOURIRAJAN; I am not yielding.

MR. SPEAKER; You need not yield. Under Rule 54, you can ask only two questions. But you are making a statement. You are going on asking a series of question. You don't make it as a practice

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தயவுசெய்து டாக்டர் சௌரிராஜன் அவர்கள் அமைதியாக-எனக்கு ஒன்றும் பிரச்னை கிடையாது. இதிலே நன்றாகவே, தெளிவாகவே, வித்தவுட் ஹாசிங் யுவர் டெம்பர், அமைதியாக-ஏன் என்றால், இந்த இடத்திலே அமைதியின்மை காரணமாக வேறு திசையிலே



திருப்பாமல் கேள்விகளைக் கேளுங்கள். ஆனால் பட்டியல் மாதிரிப் போடதீர்கள். நான் பதில் சொல்வதற்குத் தயாரா இருக்கிறேன். ஆனால் நம்முடைய 54வது விதியின் அடிப்படையிலே நீங்கள் கேள்வி கேளுங்கள். நான் பதில் சொல்கிறேன். அடுத்து இன்னொரு கேள்வி கேளுங்கள், மாண்புமிகு பேரவைத் தலைவர் அனுமதித்தால் நான் பதில் சொல்கிறேன். எத்தனை கேள்விகள் கேட்டாலும் எனக்கு அதைப்பற்றி ஆட்சேபனை கிடையாது. நீங்கள் 10, 15 கேள்விகளைப் போட்டு நான் எல்லாவற்றையும் பற்றி வியாக்யானம் செய்து, அதை பேரவைத் தலைவர் அனுமதித்தால் அதற்கும் நான் தயாராக இருக்கிறேன். ஆனால் விதிகளை எப்படி நடைமுறைப்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர்தான் முடிவு செய்ய வேண்டும்.

டாக்டர் கே. சௌரிராஜன்: நான் ஒத்திவைப்புத் தீர்மானமே கொடுத்து இருந்தேன். ஆகவே, நான் விளக்கமாகக் கேள்விகள் கேட்க வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் ஒத்தி வைபபுத் தீர்மானம் என்ற அடிப்படையில் கொடுத்து இருந்தாலும், அது கவனஈர்ப்பு என்ற முறையில் அனுமதிக்கப் பட்ட பிறகு, அந்த விதிகளுக்கு உட்பட்டுத்தான் விவரங்களைப் பெறமுடியும்.

டாக்டர் கே. சௌரிராஜன்: முதன்முதலாக நான் கேட்க விரும்புவது, அந்த மருத்துவ அதிகாரியின் கணவரின் அனுமதி பெறப்பட்டதா என்பதற்கு இங்கே சரியாகச் சொல்லப் படவில்லை. அடுத்தபடியாக, இந்த அறிக்கையிலே, அந்த மருத்துவ அதிகாரி இறந்தது 'அனஸ்திஷியா' கொடுக்கின்ற போதா அல்லது 'டைலடேஷன்' செய்கிற நேரத்திலா என்பது சரியாகக் கொடுக்கப்படவில்லை. அனஸ்திசியா கொடுக்கின்ற போது இறந்து இருப்பார்கள் என்றால், ஏற்கனவே நான் பல முறை இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொண்டு வந்த நேரத்தில் சொல்லி இருக்கிறேன். அனஸ்திசியா கொடுக்கின்ற போது இறந்து இருப்பார்கள் என்றுசொன்னால், அனஸ்திசியா கொடுப்பதற்கு என்ன மருந்து கொடுக்கப்பட்டது.

'Was Pentacol sodium used? It is a sub-standard drug'. அதற்கு ஏதாவது நடவடிக்கையை இந்த அரசு எடுத்து இருக்கிறதா என்பதை இங்கே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: இந்தக் கேள்விகளுக்கு நான் முதலில் பதில் சொல்லிவிடுகிறேன், கடைசியாக நீங்கள் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லிவிடுகிறேன்.

'pre-medication' என்ற முறையில் pethedene கொடுக்கப்பட்டது. பின்னர், Dullopholin கொடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு அனஸ்திசியா கொடுக்கப்பட்டது. இன்னொரு கேள்வியைக் கேட்டு இருக்கிறார்கள். நோயாளியின் கணவரின் அனுமதி பெறப்பட்டதா? இதற்கு மிகத் தெளிவாக நான் முன்பே பதில் சொல்லியிருக்கிறேன். அவர் கருச்சிதைவு செய்து கொள்வதற்காக வரவில்லை.

D.U,B. Disfunction Uterine bleeding. என்ற வகையில் திடீரென்று பிளீடிங் ஏற்பட்டது. அதனுடைய விளைவாக உடனடியாக மருத்துவ மனையில் ஒரு நோயாளியாக அனுமதிக்கப்பட்டார்கள். நோயாளியாக அனுமதிக்கப்பட்ட உடனேயே அவருக்கு என்னென்ன செய்யவேண்டும் என்று பார்த்து, சிகிச்சை அளிக்க வேண்டிய கடமை டாக்டர்களுக்கு இருக்கிறது. அந்த வகையில் அவருக்கு 'இன்ட்ராவீனஸ்' கொடுக்கப்பட்டது. நீங்கள் கேட்காத மற்றொரு கேள்வியையும் நான் டாக்டர்களிடத்தில் கேட்டு இருக்கிறேன் 'பிரி–மெடிகேஷன்' செய்யப்பட்டதா என்று கேட்டு, அதற்கு விடை வரவழைத்து, அந்த விடையைக் கேட்ட பின்புதான் நான் திருப்தி அடைந்தேன்; கருச்சிதைவுக்கு அவர்கள் சேர்க்கப்படவில்லை. ஒரு நோயாளி என்ற வகையில்தான் அவர்கள் வந்தார்கள். அதற்கு மருத்துவச் சிகிச்சை செய்யப்பட்டது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன்: தலைவர் அவர்களே, அங்கே மரணம் நிகழ்ந்தது. 'கார்டியாக் அரெஸ்ட்டா' அதாவது இதயத் துடிப்பு நின்று விட்டது என்று சொல்கிறார்கள். இதயத்துடிப்பு நின்று விட்டது என்று சொன்னால் 'whether the e is cordiac ar est due to A.C. stelin or due to any othe reason' அப்படி இதயத் துடிப்பு நின்று இருக்குமானால் 'co diac deep fiburulator என்று ஒரு கருவியிருக்கிறது. அந்தக் கருவியை உபயோகித்திருந்தால் நிச்சயமாக அந்த டாக்டரின் உயிர் காப்பாற்றப்பட்டிருக்கும். பல மருத்துவமனைகளில் இப்படிப்பட்ட கருவி 'co diac deep fibu ulator' வேண்டும் என்று அரசாங்கத்திடம் எடுத்துச் சொல்லியும் கூட, அவர்கள் அதைப் பற்றி யோசிக்காமல், மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அதை காதில் வாங்கிக்கொள்ளாமல் இருக்கிறார்கள். அந்தக் கருவியை எல்லா மருத்துவ மனைகளிலும் 'ப்ரொவைட்' செய்து இருந்தால் இந்த உயிர் காப்பாற்றப்பட்டு இருக்கும். அப்படிப்பட்ட கருவி அந்த மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதா என்பதை அறியவிரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, நாங்கள் எவ்வளவோ பொறுமையோடு இங்கே கேள்விகளுக்கு பதில் அளிக்கிறோம். நல்வாழ்வுத் துறை அமைச்சர் காதில் வாங்கிக் கொள்ளவில்லை என்று சொல்கிறபோதும் பொறுமையின் உச்சக்கட்டத்தில் நின்று, நான் அதற்கு 'ரி-ஆக்ட்' செய்யாமல் பதில் சொல்கிறேன்; அதற்கு உடனடியாக பதில் ஏதாவது என்னாலும் சொல்லமுடியும். ஆனால் எனக்கு இருக்கும் வேதனையெல்லாம், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் அவர்கள் சற்று முன்பாக வந்து, ஒழுங்காக இந்த அறிக்கையைப் படித்து இருப்பார்களானால். இந்தக் கேள்விக்கு இடம் இருந்து இருக்காது.

'External cordiac massage was started and it was brought back to stimula ion'

என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

மருத்துவ மனைகளில் cordiac deep fiburulator என்ற அந்தத் கருவி வாங்கிவைக்கப்படவில்லை என்று குற்றஞ்சாட்டி, காதில் அது கேட்கவில்லை என்று சொன்னார்கள். அந்த மெஷின் அங்கே இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், One of the best Thorasic surgeon Victor Solomon has done the external cordiac massage செய்திருக்கிறார்கள். ஆகவே, எல்லா வகையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில், நான் உறுதியாகச் சொல்வேன். டாக்டர்கள் எதைச் சொல்கிறார்களோ அதை மட்டும் நான் அப்படியே ஏற்றுக்கொள்வது இல்லை. மீண்டும் மீண்டும் ஆயிரம் கேள்விகளைக் கேட்டு—மாண்புமிகு அமைச்சர் ராகவானந்தம் அவர்களுக்கு தெரியும்—நீங்கள் கேட்காத கேள்விகளையெல்லாம் கூட நான் கேட்டு அந்த டாக்டர்களிடமிருந்து நான் பதிலை வரவழைத்து இருக்கிறேன். சொன்னதை மட்டும் அப்படியே ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே, cordiac deep fiburulator பயன்படுத்தப்பட்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு டாக்டர் சௌரிராஜன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அவர்பாணியில் பேச நான் தயாராக இல்லை.

(முற்பகல் 10–30)

## 5. அறிவிப்புகள்

### (அ) கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1983 (ஆ இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

## 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்

### (அ) கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்; தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: "தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட" முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, நான் இது சம்பந்தமாக டிஸ்ஸப்ருவல் நோட்டீஸ் கொடுத்திருக்கிறேன். ஆகவே, அறிமுக நிலையிலேயே என்னுடைய எதிர்ப்பை நான் தெரிவிக்க வேண்டும். அதற்கு தாங்கள் அனுமதிக்க வேண்டும்.

தலைவரவர்களே, 'காம்பவுண்டிங் டாக்ஸ்' கொண்டு வருகிற காரணத்தால் வரி விதிப்பு விகிதம் அதிகமாக இருக்கிறது. அதைக் குறைக்க வேண்டுமென்று முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறிமுக நிலையில் இதையெல்லாம் சொல்லக்கூடாது. விதிமுறைகளை ஒட்டி ஏதாவது சொல்வதாக இருந்தால் சொல்லலாம். அறிமுக நிலையில் விவாதம் செய்யக்கூடாது. பாராளுமன்றத்தில் இந்தமுறையை அனுமதிப்பதில்லை. டிஸ்ஸப்ருவல் நோட்டீஸ் கொடுத்திருக்கிறீர்கள் என்றால் விவாதம் வரும்போது ஸ்டேஜ் பை ஸ்டேஜாக உங்கள் கருத்தைச் சொல்லலாம்; இப்போது இல்லை.

திரு. அ. ரகுமான்கான்: நம்முடைய விதிமுறையில் இடம் இருக்கிறது. அதன்படி நான் நோட்டீஸ் கொடுத்திருக்கிறேன். அறிமுக நிலையிலேயே கருத்துச் சொல்ல வழிவகை இருக்கிறது. என்னுடைய 'ரைட்டை கட்' செய்யாதீர்கள். ப்ரொசிஜரை மாற்றாதீர்கள். சுருக்கமாகச் சொல்லி முடித்துவிடுகிறேன்.

Mr. Speaker; If a motion for leave to introduce abill is opposed, the speaker, after permit ing, 'if he think; fit'

அதன் பிறகுதான் நீங்கள் ', 2, 3 என்று உங்கள் கருத்துக்களைச் சொல்லலாம்; எவ்வளவு வேண்டுமானாலும் சொல்லலாம். ஆனால் அறிமுக நிலையில் இதை 'எதிர்க்கிறேன்' என்று சொல்லலாம்; விவாதம் நடத்த முடியாது.

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, இப்போதும் சொல்லலாம். அதற்காகத்தான் டிஸ்ஸப்ருவல் நோட்டீஸ் கொடுத்தேன். அதுவும் அப்ருவ் பண்ணி வந்திருக்கிறது.





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, சட்டமன்ற மரபுப்படி ஒரு சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கின்றபோது 'அறிமுகம் செய்வதை எதிர்க்கிறேன்' என்று சொல்லலாம். மற்ற கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்றால் சட்டமுன்வடிவு விவாதத்திற்கு வருகிறபோது விளக்கமாக கருத்துக்களைச் சொல்லலாம். அதன்பிறகு 'ரீடிங்' என்று வருகிறபோதும் கருத்துக்களைச் சொல்லலாம். ஆனால் அறிமுகம் செய்யும்போது விவாதம் செய்ய இடமில்லை.

திரு. ப. பொன்னுரங்கம்; தலைவரவர்களே, Under Rule 124 (8)if a motion for leave is to intr dncea Bill oppose , the Speaker, after permitting if he thinks fit brief statement from the member who moves and from a member who oppose the motion may without further debate put the question thereon
என்று இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த விதியின்படி அவர் எதிர்க்கலாம். 'அறிமுகம் செய்வதை எதிர்க்கிறேன் என்று சொல்லலாம். ஆனால் விவாதம் செய்ய இடமில்லை.

திரு. அ. ரகுமான்கான் நடைமுறையில் இருக்கக்கூடிய விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். நாங்கள் உறுப்பினர்களின் உரிமையைப் பாதுகாக்க வேண்டும். அறிமுக நிலையிலேயே என்னுடைய எதிர்ப்பைத் தெரிவிக்காமல் வேறு எப்போது எதிர்ப்பைத் தெரிவிக்க முடியும்? ஆகவே, சுருக்கமாகச் சொல்வதற்கு அனுமதி அளிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் நேரத்தை வீணாக எடுத்துக் கொள்கிறீர்கள்.

திரு. அ. ரகுமான்கான்: நான் அதிக நேரத்தை எடுத்துக் கொள்ளவில்லை. சுருக்கமாகப் பேசி முடித்துவிடுகிறேன். இது வரையிலும் தொடர்ந்து இப்படி அப்போஸ் பண்ணும்போது பேசிக் கொண்டுதான் வருகிறோம். (குறுக்கீடு) என்னுடைய ரைட்ஸ்களை கர்டெயில் பண்ணாதீர்கள். ரூலை வேண்டுமானால் பாருங்கள். நோட்டீஸ் கொடுத்துவிட்டு சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் தொடர்ந்து எதை எதையோதான் பேசுகிறீர்கள். அதெல்லாம் எடுத்துக் கொள்ள முடியாது. ரூலிலே கிளியராக இருக்கிறது.

'if a motion for leave to intr duce a Bill is opposed the Speak r after permitting if he thinks fit

புரிகிறதா? திரு. பொன்னுரங்கம் அவர்களுக்கும் சேர்த்துத்தான் சொல்லுகிறேன்—நான் விரும்பினால்தான் உங்களை பேச அனுமதிக்க முடியும்.

திரு. அ. ரகுமான்கான்: சார். இங்கே நீங்கள் தான் ஆல் இன் ஆல், அதிலே பிரச்னை இல்லை முடிவு எடுப்பது நீங்கள்தான் என்னை அனுமதித்திருந்தால் இதற்குள் நான் சொல்ல நினைத்த ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்லி முடித்திருப்பேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஏதாவது காரண காரியங்களோடு எடுத்து சில விவரங்களை மட்டும் சொன்னால் நான் பாராட்டி வரவேற்கத் தயாராக இருக்கிறேன். முழுவதுமாக பில் ஆய்வு செய்யப்படும்போது பேசுவதுபோல் பேசிக் கொண்டிருந்தால் அவையை எப்படிச் செம்மையாக நடத்த முடியும்?

மாண்புமிகு திரு. எஸ் டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தச் சட்ட முன்வடிவினை எதிர்க்கிறார்கள் என்றால், காம்பவுண்டிங் முறையை எதிர்க்கிறேன் என்று சொல்லட்டும். அது குறித்து விரிவாக விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க அன்பழகன்: தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் அவர்கள் எதிர்ப்பதன் கருத்து, கொண்டு வரப்பட்டிருக்கும் பில்லிலே காம்பவுண்டிங் முறையில் சில சிக்கல்கள், இடையூறுகள் ஏற்படுகின்றன ஆகவே அது தேவையில்லை என்ற முறையிலேயே எதிர்க்கிறார்கள்.

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் தலைவர் அவர்களே, பேராசியர் அவர்களின் கருத்துக்களையே தாங்கள் அடாப்ட் செய்துக் கொள்ளலாம். நான் வேறு ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் ரைஸ் பண்ண அனுமதி அளிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சற்று இருங்கள். பில்லை அவையிலே அறிமுகப்படுத்தட்டும். பிறகு நீங்கள் பேசலாம்.

பேரவை முன்புள்ள கேள்வி: ''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இச்சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்டமுன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

### 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

கேளிக்கை வரி (இரண்டாவ திருத்த) சட்டமுன்வடிவு, 1983 (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

### அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

(ஆ) கேளிக்கை வரி (இரண்டாவது திருத்த) சட்டமுன் வடிவு, 1983.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன் வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெறுவதை நான் எதிர்க்கிறேன். ஏனெனில் இந்த காம்பவுண்டிங் டேக்ஸ் முறையில் பல சிக்கல்கள் நடைமுறையில் இருக்கின்றன ஊட்டியிலே இருக்கக்கூடிய.—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் முதலிலேயே தெளிவாகக் குறிப்பிட்டு கேட்டுக் கொண்டேன், அறிமுக நிலையில் தயவுசெய்து விளக்கம் அதிகம் வேண்டாம் என்று. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், காம்பவுண்டிங் முறையில் என்னென்ன குறைபாடுகள் என்று விளக்கமாக பேச ஆரம்பித்திருக்கிறார்கள். ஊட்டி என்று கொடைக்கானல் என்றும் இதிலே விளக்கமாக போய்க் கொண்டிருக்க நியாயமில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்; தலைவர் அவர்களே, உங்களுக்கே மிக நன்றாகத் தெரியும். காம்பவுண்டிங் டாக்ஸ் முறையில் இருக்கும் சில அடிப்படை குறைபாடுகள் ஊட்டியிலே 6 தியேட்டர்கள் கட்டப்பட்டிருக்கிறன. அங்கிருக்கும் ஜனத் தொகை கணக்கின்படி வசூல் அவ்வளவு சிறப்பாக இல்லை ஆகவே நஷ்டம் வருகிறது என்று சொல்கிறார்கள். 21 காட்சிகள் காட்ட முடிவதில்லை 17 காட்சிகள் தான் காட்ட முடிகிறது. புதுக்கோட்டையிலே 80,000 பேர்கள்தான் இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. 12 தியேட்டர்கள்

இருக்கின்றன. 12 தியேட்டர்களிலும் கலெக்ஷன் குறைவாகத் தான் இருக்கிறது. இந்த காம்பவுண்டிங் டாக்ஸை அப்ளை செய்தால் எங்களால் சமாளிக்க முடியாது என்று 4 தியேட்டர்களை மூடிவிட்டதாக கேள்வி. முனிசிபாலிட்டியாக இருந்தாலும், டவுன் ஷிப் ஆக இருந்தாலும் 25 சதவீதம்—

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவர் அவர்களே, இவற்றையெல்லாம் தாங்கள் அனுமதிக்கிறீர்களா?

(முற்பகல் 10·40)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி ''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**7. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்—தொடர்ச்சி**

**திரு. சோ. அழகாசாமி;** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது எங்களுடைய உறுப்பினர்கள் பல வேறு கருத்துக்களை முன்வைத்திருக்கிறார்கள். அதையொட்டி நானும் எனது கருத்தினை இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த ஆளுநர் உரையிலே இரண்டு விஷயங்களைச் சரியாகச் சொல்லி இருக்கிறார்கள். தென்மேற்குப் பருவமழையும், வடகிழக்குப் பருவமழையும் பொய்த்துவிட்டது என்பதை உறுப்பினர் அனைவரும் அறிவார்கள். இந்த மாநிலத்தில் தற்போது நிலவுகிற வறட்சி நிலைமையானது நம்முடைய நினைவுக்குத் தெரிந்த வரையில் இதுவரை இப்படிப்பட்ட ஒரு மோசமான நிலைமை இருந்தது இல்லை. எனவே வறட்சி நிலைமை மிகவும் மோசமாக சந்தேகத்திற்கு இடமின்றி இருந்தது. கடுமையாக உள்ளது என்பதைக் கூறி இருக்கிறார்கள். ஆனால் இதனுடைய பாதிப்பு தமிழகத்தைத் தாக்காமல் இருப்பதற்கு காலாகாலத்திலே இந்த அரசு உஷாரான நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றதா என்றால் இல்லை. ஆனால் இனிமேல் என்ன செய்யப்போகிறார்கள் என்பது பற்றியும் ஆளுநர் உரையிலே சொல்லவில்லை. பொதுவாக இன்றைக்குத் தமிழகத்திலே உள்ள நிலைமையினைப் பார்த்தால் இந்தியாவிலே உள்ள மொத்தமான நிலைமையினை ஒப்பிட்டுப் பார்க்கும்போது வறுமைக்கோட்டுக்கு கீழே வாழக்கூடிய மக்களின் எண்ணிக்கை இங்கே மிக மிக





அதிகம். இன்றைக்கு தமிழகத்திலே ஒட்டுமொத்தமாக 55·8 சதவீதம் பேர் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறார்கள் வறுமைகோட்டிற்கு கீழே வாழக்கூடிய மக்களின் எண்ணிக்கை இப்படி இருக்கிறது என்றும் அதாவது கிட்டத்தட்ட 60 சதவீதம் பேர் இருக்கிறார்கள் என்று உங்களுடைய குறிப்பே கூறுகின்றது.

அடுத்து வேலையில்லாத் திண்டாட்டத்தை எடுத்துக் கொண்டாலும் தமிழ்நாட்டிலே 31 இலட்சம் பேர் உழைக்கின்ற சக்தி உள்ளவர்களுக்கு, உழைக்கின்ற திறன் உள்ளவர்களுக்கு, வேலை இல்லை என்று கூறுகிறீர்கள். இது நம்முடைய மாநிலத்திலே உள்ள மக்களில் 16 சதவீதம் பேர்களுக்கு இவ்வாறு வேலை இல்லை என்று உங்களுடைய ஐந்தாண்டுத் திட்ட அறிக்கையிலே கூறப்பட்டு இருக்கின்றது. ஆனால் இந்தியா பூராவு ஒட்டுமொத்தமாக கணக்கெடுத்தால் வேலை செய்ய சக்தி உள்ளவர்களில் 8·5 சதவீதம் மக்களுக்கு வேலையில்லாமல் இருக்கின்றது. ஆனால் தமிழகத்திலே இரண்டு மடங்கு அதாவது 16 சதவீத மக்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்பதும் உங்களுடைய கணக்குத்தான். எனவே வறுமையும் வேலையின்மையும் இந்த அளவுக்கு இருக்கும்போது இப்படிப்பட்ட அடிப்படையான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறீர்களா அல்லது எடுப்பதற்கு வேண்டிய யோசனை ஏதாவது வைத்திருக்கிறீர்களா என்று கேட்டால் இல்லை.

கடைசியில் ஒன்று சொல்லி இருக்கிறீர்கள். குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை என்று சொல்லி இருக்கிறீர்கள். அதை எப்படி கொடுக்கப் போகிறீர்கள் என்பது தெரியவில்லை. ஆனால் இது ஒன்றும் புதிதல்ல. பலபேர் பல வருஷங்களாக சொல்லிச் சொல்லி புளித்துப்போன ஒரு விஷயம். மத்திய அரசிலே உள்ள பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் கூட உங்களை விட மிக வேகமாக வீட்டிற்கு ஒருவருக்கு வேலை என்று சொல்லி இன்றைக்கு வேலை செய்பவர்கள் இரண்டு பேருக்கு வேலை இல்லாமல் போகக்கூடிய நிலைமை நாட்டிலே ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே இதை எல்லோரும் சொல்கிறார்கள். அந்த வகையிலே நீங்களும் சொல்கிறீர்கள். எனவே 15 கோடி ரூபாயில் வீட்டிற்கு ஒருவருக்கு வேலையினை எப்படிச் கொடுக்கப் போகிறீர்கள்? ஆனால் நாட்டிலே இப்படிப்பட்ட நிலைமை இருப்பதற்குக் காரணம் முழுமையாக மாநில அரசு மட்டும்தான் என்று நாங்கள் சொல்லவில்லை. மத்திய அரசின் முதலாளித்துவ ஆதரவு கொள்கை காரணமாகவும், மக்கள் விரோதமான நடவடிக்கை காரணமாகவும் நாடு பூராவும் இப்படி ஒரு மிகப்

பெரிய நெருக்கடி இன்றைக்கு இருக்கின்றது. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துக்கொண்டு போகின்றது என்பதோடு மட்டுமல்லாமல் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழக்கூடிய மக்களின் எண்ணிக்கையும் தமிழ்நாட்டிலே அதிகரித்துக் கொண்டு போகிறது, இருக்கின்ற தொழிற்சாலைகளும் சீராக நடைபெறாமல் அதில் வேலை செய்கின்றவர்கள் வேலை இழக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஒரு மோசமான நிலைமைக்கு காரணம் சகல வல்லமைப் படைத்த மத்திய அரசு சரியான நடவடிக்கைகளில் திட்டம் இல்லை. அதை எதிர்த்து பேசக்கூடிய தைரியம் நமது தமிழக அரசுக்கு அறவே கிடையாது, இதற்கும் மேலாக பார்லியமெண்டில் உங்களுடைய உறுப்பினர்களும் சரி அல்லது இந்த அரசும் சரி, வேறு முற்போக்கான அரசுகள் நடவடிக்கைகளில் ஈடுபடுகிற மாதிரி நீங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறீர்களா? எடுக்கவில்லை.

நீங்கள் சொல்லக்கூடிய குடும்பத்தில் ஒருவருக்கு வேலை. சத்துணவுத் திட்டம் இந்த மாதிரி திட்டங்கள் மூலம் வறுமையை ஒழிக்க முடியாது. நாட்டிலுள்ள மக்களின் தேவையை மனதில் கொண்டு திட்டங்களைத் தீட்டி அதை செயல்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மக்களை வறுமைகோட்டுக்கு மேலே கொண்டு செல்வதற்கு என்ன திட்டங்கள் வைத்து இருக்கிறீர்கள். இதற்கு முன்னால் போட்ட திட்டங்கள் எல்லாம் மக்களை வறுமை கோட்டுக்கு மேலே கொண்டு செல்ல உதவி இருக்கிறதா என்பதை நீங்கள் யோசித்துப் பார்க்கவேண்டும். வேலை இல்லாதவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே போகிறது. இன்றைக்கு இந்தப் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு சரியான திட்டங்கள் இல்லை. ஆளுநர் உரையிலும் இதைப்பற்றி எதுவும் அறிவிக்கவில்லை.

இன்றைக்கு தமிழகத்தில் எவ்வளவு பெரிய மோசமான வறட்சி எற்பட்டிருக்கிறது. இந்த வறட்சி எப்போது ஏற்பட்டது என்று சொன்னால் தென்மேற்கு பருவ மழை தவறிய போதே அதாவது 6,7, மாதங்களுக்கு முன்னாலேயே நமக்குத் தெரியும், இது மாதிரி வறட்சி ஏற்படும் என்று. அரசு ஏன் முன் எச்சரிக்கையாக நடவடிக்கை எடுக்கவில்லை. அதை தடுப்பதற்கு நீங்கள் தவறி விட்டீர்கள் என்ற குற்றச் சாட்டை சுமத்த நான் விரும்புகிறேன், மாநில அரசு உடனடியாக மற்ற மாநிலங்களைப் போல மத்திய அரசிடத்திலே ஒரு தொகையினைப்பெற ஏன் முயற்சிக்கவில்லை. மேற்கு வங்கத்தில் வறட்சி நிலைமை வந்தபோது உடனடியாக 121 கோடி ரூபாய் வேண்டும் என்று அதனுடைய முதலமைச்சர் அவர்கள் கேட்டார்கள். ஆனால் இப்போது தான் நீங்கள் கோரிக்கை அனுப்பியிருக்கிறீர்கள். தென்மேற்கு பருவ மழை தவறிய அப்போதே உடனடியாக நடவடிக்கை எடுத்து இருக்க





வேண்டும். காரணம் தென்மேற்கு பருவ மழை மூலம் தான் அணைகள் எல்லாம் நிரம்பத் வேண்டும். வடகிழக்கு பருவ மழையினால் உள்நாட்டைப் பொறுத்தவரையிலே தண்ணீர் கிடைக்கும். ஆனால் தென்மேற்கு பருவ மழை மூலமாகத் தான் பெரும்பாலும் நமக்கு தண்ணீர் வந்து ஆகவேண்டும், அணைகள் நிரம்பவேண்டும். அது தவறிய உடனேயே நீங்கள் உஷாராக நடவடிக்கை எடுத்து இருக்க வேண்டும். நீங்கள் தவறி விட்டீர்கள். வறட்சி நிவாரணத்திற்கு மத்திய அரசிடம் கேட்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். எவ்வளவு கிடைக்கும், எப்போது கிடைக்கும் என்று சொல்லமுடியாது. கிடைக்குமா, கிடைக்காதா, என்ற உத்திரவாதம் கொடுக்க முடியாது.

உணவு அமைச்சர் அவர்கள் ஜூன் மாதத்திலிருந்து நாங்கள் அரிசி கேட்டுக்கொண்டிருக்கிறோம் அவர்கள் அனுப்பவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதேபோல் மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் நாங்கள் நிலக்கரி கேட்டிருக்கிறோம் அவர்கள் அனுப்பவில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இப்படி நீங்கள் கேட்டுக்கொண்டு இருக்கிறீர்கள் அவர்கள் மறுத்துக்கொண்டு இருக்கிறார்கள் என்றால், மக்கள் செத்துக் கொண்டு இருக்கவேண்டுமா? ஆகவே தெளிவான ஒரு நடவடிக்கை உங்களிடம் இல்லை. நீங்கள் முன்யோசனையோடு செயல்பட்டிருந்தால் காலாகாலத்தில் காரியங்களை செய்திருந்தால், இப்படிப்பட்ட நிலைமை வந்திருக்காது. அதை செய்ய தவறியிருக்கிறீர்கள்.

இன்றைக்கு தமிழகத்திலே பஞ்சம் புதிது அல்ல 3, 4 வருடங்களுக்கு ஒரு முறை வறட்சி அல்லது சில மாவட்டங்களில் பஞ்சம் என்ற நிலமை ஏற்பட்டு வருகிறது, வறட்சி நிலமை ஏற்பட்டவுடனே மக்களுக்கு பாதிப்பு ஏற்படாமல் இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நீங்கள் காலாகாலத்தில் ஏன் செய்யவில்லை. இன்றைக்கு மின்சார வெட்டு 100 சதவீதம் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை ஏன் காலாகாலத்தில் எடுக்கவில்லை. தமிழகத்தில் மொத்தம் உற்பத்தி 3400 மெகாவாட் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதில் அனல் மின் நிலயங்களின் மூலம் 1700 மெகாவாட் என்றும், நீர் மின் நிலையங்கள் மூலம் 1700 மெகாவாட் உற்பத்தி செய்யப்படுகிறது என்றும் சொல்லியிருக்கிறீர்கள்.

(முற்பகல் 10-50

தண்ணீர் இல்லாமல் நீர்மின் நிலையங்கள் செயல்பட முடியாது என்று சொல்லலாம். ஆனால் அனல் மின்சார நிலையங்களிலே கரியை வரவழைத்தாவது அல்லது ரிப்பேர் செய்தாவது காலாகாலத்திலே ஏற்பாடுகளைச் செய்யவில்லை இந்த அரசு. இன்றைக்கு 100 சதவீதம் மின் வெட்டு இருக்

கிறது என்றால் மக்கள் எவ்வளவு கஷ்டத்திற்கு ஆளாவார்கள் என்று உங்களுக்குத் தெரியாதா? கடைசி நேரத்திலே ஓடி ஓடி ரிப்பேர் செய்கிறீர்கள், தூத்துக்குடி மின் நிலையத்திற்கு, எண்ணூர் மின் நிலையத்திற்கு, பேசின்பிரிட்ஜ் மின்நிலையத்திற்கு ஓடி ஓடி நீங்கள் ரிப்பேர் செய்தும் அதற்குப் பிறகும்கூட மின்சாரம் சீராகக் கிடைக்கக் கூடியநிலைமை இல்லை. கரியில்லை என்றால் எங்கிருந்தாவது கொண்டுவந்து செய்திருக்கவேண்டும். மத்திய அரசு அனுமதிக்கவில்லை என்று இன்றைக்குச் சொல்கிறீர்களே, அன்றைக்கே மத்திய அரசோடு சண்டைபோட்டு கொண்டு வருவதற்கு நீங்கள் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

தமிழகத்திலே பல இடங்களிலே ஜமீன்காலத்திலிருந்து பல குளங்கள் இருக்கின்றன, அவைகள் எல்லாம் ஒவ்வொரு மாவட்டத்திலேயும் நூற்றுக்கணக்காக இருக்கின்ற குளங்கள் மேடாகி குடியிருப்புகளாக மாறி கொண்டே வருகின்றன. நீர் நிலைகளிலே ஏரி, குளம், கண்மாய்களிலே மண்ணை அகற்றுவதற்காக காலகாலத்திலே ரிப்பேர் செய்து மழைநீர் வரக்கூடிய காலங்களிலே தேக்கி வைப்பதற்கு ஏற்பாடுகளை நீங்கள் செய்யாததன் காரணமாக, அதற்கு வேண்டிய நிதியை காலாகாலத்திலே ஒதுக்காததன் காரணமாக, அப்படியே ஒதுக்கினாலும் கூட காண்ட்ராக்டர்கள் பணத்தை மோசடி செய்து விடுவதன் காரணமாக, அந்த நீர் நிலைகள் எல்லாம் மேடாக இருக்கின்றன, அவைகளிலே குடியிருப்புகள் வந்துகொண்டிருக்கின்றன என்ற நிலைமையைத்தான், பார்க்கிறோம், இன்றைக்கு தமிழகத்திலே மிகப்பெரிய தட்டுப்பாடு ஏற்பட்டு இருக்கிறது. குடிப்பதற்குக்கூட தண்ணீர்கிடையாது. 3,00,400 கண்மாய்களைப் போட்டாலும்கூட தண்ணீர் வராத நிலைமைதான் இருக்கிறது. ஆகவே கண்மாய்களை கால்வாய்களை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்; கடந்த ஆட்சிக் காலத்திலேயும் நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவிரி நீர் சம்பந்தப்பட்ட பிரச்சினையில் மத்திய அரசு காலாகாலத்திலே வேண்டிய நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டும். 24-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் புதிய ஒப்பந்தம் ஏற்பட வேண்டும், அதுவரையில் 28 லட்சம் ஆயக்கட்டுகளுக்கு பாசனத்திற்கு தண்ணீர் பெறுவதற்கு நமக்கு உரிமை இருக்கிறது. மத்திய அரசு உடனடியாகத் தலையிட்டு கர்நாடகத்திடம் சொல்லி தண்ணீர் பெற்று தருவதில் சுணக்கம் காட்டுகிறது என்றால் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நீங்கள் காலாகாலத்திலே செய்திருக்க வேண்டும், அவர்கள் ஹேமாவதி போன்ற 2,3 அணைகளைக் கட்டியிருக்கிறார்கள் என்றால் நாம் அதைப்பற்றியெல்லாம் சர்வகட்சி கூட்டங்கள் போட்டோம், பேசினோம் என்ற அளவிலே நிற்கிறோம், முனைப்பான நடவடிக்கையை இந்த



அரசு எடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இனியாவது உடனடியாக அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சாரம் சம்பந்தமாக தகுந்த நடவடிக்கையை சாலா காலத்தில் எடுக்காததன் காரணமாக தொழில்கள் ஆராவிற்கும் மின்சாரம் 100 சதவீதம் வெட்டு. தொழிலாளர்களுக்கு அதனால் இன்றைக்கு வேலை கிடையாது. தொழிலாளர்கள் வேலை செய்யக் கூடியநேரத்திலேயே கஷ்டம், வேலையில்லாத நேரத்திலே எப்படி கஷ்டப்படுவார்கள் என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். தொழிற்சாலைகள் இன்றைக்கு மூடப்பட்டிருக்கின்றன. பம்புசெட்டுகளுக்கு 6 மணி நேரம் மின்சாரம் தரப்படும் என்று சொன்னார்கள். நேற்றைக்கு என் தொகுதியிலிருந்து தகவல் வந்து இருக்கிறது. 6 மணி நேரம் என்று நீங்கள் சொல்கிறீர்கள், பத்திரிகையில் வந்திருக்கிறது என்றாலும் 1 மணிநேரம் வருகிறது, திடீரென்று ஆப் ஆகி விடுகிறது. இதனால் விவசாயிகளுக்கு பம்புசெட்களுக்கு கரண்ட் கிடைக்கவில்லை. லட்சக்கணக்கான விவசாயிகள், 1, 2 ஏக்கர் வைத்திருக்கின்றவர்கள் இன்றைக்கு அவதிப்படுகிறார்கள், மின்சாரம் அவர்களுக்குத் தொடர்ந்து கிடைக்கவில்லை. அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டு போட்ட முதலையும் எடுக்கமுடியாமல் விவசாயம் சீரழிந்து வருகிறது. குறுவை உற்பத்தி 20 சதவீதம் குறைந்ததாகச் சொன்னார்கள். 7 லட்சம் பம்புசெட்டுகள் இன்றைக்கு ஓடாததால் உணவுத் துறையில் தன்னிறைவு ஏற்பட்ட தமிழகத்திலே.....

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு அழகர்சாமி அவர்கள் மின்சாரம் சம்பந்தமாக சில தகவல்களைச் சொன்னார்கள். மின்வாரியத்திற்கு என்று தனி விவாதம் இருப்பதால் நான் குறுக்கிட வேண்டாம் என்று கருதினேன். ஆனாலும் அவர்கள் விவசாயிகளுக்கு 6 மணி நேரம் மின்சாரம் தரப்படவில்லை என்று சொன்னார்கள். என்னிடத்திலே இருக்கின்ற ஆதாரங்களின்படி குறிப்பாக ஜனவரி மாதம் 2 ஆம் தேதியிலிருந்து நாம் சில கட்டுப்பாடுகளை தொழில் துறைக்கு விதித்த பிறகு தமிழகத்திலே எல்லாப் பகுதிகளிலும் விவசாயிகளுக்கு குறைந்தது 6 மணி நேரம் தவறாமல் தரப்படுகிறது. எங்கேனும் தரப்படவில்லை என்ற தகவல் அவருக்கு இருக்குமானால் நிச்சயமாக மின்வாரியம் அதற்கான நடவடிக்கை எடுக்கும். ஆகவே ஆறு மணி நேரம் தரப்படவில்லை என்பது சரியான கருத்தல்ல.

திரு. சோ. அழகர்சாமி: துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. ஆரம்பத்தில் அவர்கள் சொன்னபடியே ஒரு வாரம், இரண்டு வாரத்திற்கு

5 மணி நேரம், சில இடங்களில் 6 மணி நேரம் விவசாய பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் வந்தது. அதற்கு பிறகு இப்போது ஒரு வார காலமாக ஒரு மணி நேரம் வந்து திடீரென்று பிறகு நின்று விடுகிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் துணைத் தலைவர் அவர்களே, எங்கு, எப்படி நின்றது என்ற விவரம் எனக்கு சொல்ல வேண்டும். எந்த லைனில், எந்த ஊர்களில் இல்லை என்பதை அவர்கள் சொல்வார்களானால் உடனடியாக அவர்களுக்கு தக்க பதில் சொல்ல தயாராக இருக்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: நெல்லை மாவட்டத்தில் கயத்தாறு சப்டிவிஷனில் அப்படி இருக்கிறது. நேற்றைக்கு கூட தகவல் வந்தது. இரவு நேரங்களில் ஐந்து மணி நேரம் கரன்ட் என்று போனால் நின்று போவதாகவும். தண்ணீர் பாய்ச்ச முடியவில்லை என்றும் சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: குறுக்கிட்டு சொன்னதற்கு காரணம் தினசரி காலையில் எந்தெந்த மின் நிலையங்களில் எவ்வளவு உற்பத்தி ஆகிறது? எங்கெங்கு எவ்வளவு விநியோகம் ஆகிறது? எந்தெந்த லைனில் மின்சாரம் தரப்படவில்லை என்ற விவரங்கள் எனக்கு வந்து கொண்டிருக்கிறது. அதனால் தான் சொன்னேன். குறிப்பாக ஜனவரி மாதம் 2 ம் தேதியிலிருந்து மின்நிறுத்தம் என்பது எங்கும் கிடையாது. ஆறு மணி நேரம் தவறாமல் தரப்படுகிறது. ஆகவே யாரேனும் பழைய தகவல்களைச் சொன்னால் அதை தயவுசெய்து அவர்கள் நம்ப வேண்டாம். அண்மையில் ஏதாவது குறைபாடுகள் இருந்தால் எனக்கு வந்த தகவல்களையும் நான் சரிசெய்ய வேண்டிய நிலையில் இருக்கிறேன். அதனால் தான் நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறபோது குறிப்பிட்டுச் சொல்லுங்கள் என்றேன்.

திரு. சோ. அழகர்சாமி: துணைத் தலைவர் அவர்களே இப்போது அமைச்சர் அவர்கள் வேகமாக செயல்படுவதற்கு நான் பாராட்டு தெரிவித்துக்கொள்கிறேன். முன்னாலேயே இவ்வளவு சுறுசுறுப்போடு செய்திருந்தால் இவ்வளவு சேதாரத்தை......

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பெட்டியிலேயிருந்தால் தான் அகப்பையில் வரும் என்பது பழமொழி. ஆகவே இல்லாத குறையே விவர ஜாக்கிரதை இல்லாமல் போய்விட்டதனால் என்பது அல்ல. இருக்கிறதை வைத்து இப்போது விவசாயத்திற்கு முன்னுரிமை தந்ததால் ஓரளவிற்கு நிலைமை சீரடைந்துள்ள



திரு. சோ. அழகர்சாமி: அப்போதே செய்திருந்தால் சேதாரத்தை தவிர்த்திருக்க முடியும். இப்போது கூட கொடுப்பதை பகல் நேரத்தில் கொடுங்கள். இரவு நேரத்தில் நீர் பாய்ச்ச முடியாது. அது மட்டுமல்லாமல் 5 நாள் பகலில், 5 நாள் இரவில் என்று சொன்னால் 5 நாள் தண்ணீர் பாய்ச்சவில்லை என்றால் கதிர் தீய்ந்து விடும். ஆகவே கொடுப்பதை பகலில் தினம் மூன்று பகுதியாகவோ, இரண்டு பகுதியாகவோ பிரித்துக் கொடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஓரளவிற்கு நிலைமை சீரடைந்த பின் பரிசீலிக்க தயார். நான் கேட்டுக் கொள்வது இனிமேலாவது இரவிலோ, பகலிலோ சப்ளை இல்லை என்று சொல்கிறவர்களை நம்பாமல் இருப்பீர்களா?

திரு. சோ. அழகர்சாமி: நானே நேராக பார்த்தேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நான் கேட்பது நீங்கள் பார்த்திருந்தால் சொல்லுங்கள் என்று கேட்டுக் கொண்டேன். நீங்கள் இன்னும் சொல்லவில்லை.

திரு. சோ. அழகர்சாமி: கயத்தாறு சப் டிவிஷனில் அதுபோல இருக்கிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: கயத்தாறு 230 கிலோவாட் சப்டிவிஷன், 120 கிலோவாட் சப்டிவிஷன்; ஆகவே கயத்தாறு என்பது ஐந்தாறு மாவட்டங்களுக்கு அங்கேயிருந்து விநியோகம் ஆகிற மிகப் பெரிய துணை மின் நிலையம். அதைச் சொன்னால் அதற்கும் இதற்கும் சம்பந்தமே இல்லை.

திரு. சோ. அழகர்சாமி: நேற்றைக்குக் கூட என்னுடைய தொகுதியிலே இருந்து வந்திருக்கிறார்கள். வந்தவுடனே நானே அந்த விவரங்களைக் கேட்டேன். அவர்கள் சொன்னார்கள், முதலில் சரியாக வந்தது. இப்போது ஒரு வார காலமாக சரியாக வரவில்லை. திடீரென்று நின்றுவிடுகிறது என்று சொன்னார்கள். அதைத்தான் மின்சார அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தேன். உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரொம்பவும் சாமர்த்தியமாக பேசுகிறார்கள். மிகவும் அனுபவம் வாய்ந்த உறுப்பினர். ஸ்ட்ரிக்ட்டாக சொல்லியிருக்கிறோம், கிராமங்களில் மின்சாரம் கொடுக்கிற போது குறைந்தது ஆறு மணி நேரம் கொடுக்கவேண்டும். எந்த காரணத்தைக் கொண்டும் நிறுத்தக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். திரும்பவும் சொல்கிறேன், இரண்டாம் தேதியிலிருந்து எங்கேயும் குறைபாடுகள்

வந்ததாக இதுவரையில் தகவல் இல்லை. (குறுக்கீடு) கோவில்பட்டி என்று நகரமும் உள்ளது. அந்த சப்டிவிஷனை நானே நேரில் சென்று பார்த்தேன். நான் தூத்துக்குடிக்குப்

(முற்பகல் 11-00)

போனபொழுது கோவில்பட்டிக்குச் சென்று பார்த்தேன். கோவில்பட்டி துணை மின் நிலையத்தில் ஒன்று நகரத்திற்கு வருவது இருக்கிறது. மூன்றோ, நான்கோ கிராமப்புறங்களுக்குப் போவது இருக்கிறது. ஆகையினாலே, ஏதாவது குறிப்பிட்ட லைனிலே, இந்த ஊரிலே, இந்த தேதியிலே, இவ்வளவு நேரம் எங்களுக்கு மின்சாரம் வரவில்லை 6 மணி நேரம் வரும் என்று எதிர்பார்த்தோம், வரவில்லையென்று சொன்னால்தான் எனக்கு உதவியாக இருக்குமே தவிர, எங்கள் வட்டாரத்திலே அப்படி இருக்கிறது என்று சொன்னால், அது பயன் தராது.

திரு. சோ. அழகர்சாமி : தகவலுக்காக நான் சொல்கிறேன், கோவில்பட்டியை ஒட்டியுள்ள மணியாச்சி, தட்டாங்குளம், மல்லிப்பூ என்ற 3 கிராமங்களிலே நேற்றைக்கு முந்தைய நாள் திடீரென்று ஒரு மணி நேரம் நின்றுவிட்டது......

திரு. துரைமுருகன்: ஒன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : என்ன சொல்லப் போகிறீர்கள்? மின்சார வாரிய பட்ஜெட்டிலே அவர் இதைப் பற்றி பேச வேண்டுமென்று சொல்லப் போகிறீர்கள், அவ்வளவு தானே?

திரு. துரைமுருகன்: நான் அப்படிச் சொல்ல வரவில்லை, அவர் பெரியவர், எதிர்க்கட்சித் தலைவர், பேசட்டும். மாண்புமிகு உறுப்பினர் நம்முடைய திரு. அழகர்சாமி அவர்கள், அவர்கள் தொகுதியிலே ஏற்பட்டிருக்கிற மின்சாரக் குறையைப் பற்றி சொல்கிறார். அங்கத்தினர்கள் குறைகளைச் சொல்வது வழக்கம் அல்லது அவர்கள் சொல்லித்தான் ஆகவேண்டும். ஆனால், அமைச்சர் அவர்கள் எல்லாவற்றையும் குறித்து வைத்துக் கொண்டு, நாளையதினம் மின்சார பட்ஜெட் வரும்போது, சேர்த்து பதில் சொல்லிவிட்டால், டைம் மிச்சமாகும் பாருங்கள், அடிக்கடி எழுந்திருக்கிறதாலே, நம்முடைய டைம் போய்விடுகிறது, அதனாலே சொல்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: உடனே சொன்னால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துரைமுருகன் சொல்வதைப் போல நான் பேசாமல்தான் இருந்தேன். அவர் முதலிலே மின்சாரத்தைப் பற்றிப் பேசிவிட்டு அதற்குப் பிறகு குளங்கள்





ஏரிகள் எல்லாம் பற்றிப் பேசினார். சரி, விட்டுவிட்டுப் போய் விட்டார் என்று நினைத்தேன். மறுபடியும் மின்சாரத்திற்கு வந்தார். ஆகவேதான் விளக்கம் சொன்னேன்.

திரு. சோ. அழகர்சாமி: விளக்கம் கொடுத்ததற்காக ரொம்ப நன்றி. நெய்வேலியிலே மொத்த உற்பத்தி 1,000 மெகாவாட் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். இப்பொழுது தமிழகத்திற்கு 530 மெகாவாட்தான் தருவதாகச் சொல்கிறார்கள். கொஞ்சம் அதிகமாகப் பெறுவதற்கு வேண்டிய முயற்சியை அமைச்சர் அவர்கள் செய்யவேண்டும். அதோடு கேரளாவிலேயிருந்து....

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆயிரம் மெகாவாட் அல்ல, 600 மெகாவாட்தான் நெய்வேலியில் மொத்த உற்பத்தி. அதிலே அவர்களால் 400-லிருந்து, 450 மெகாவாட்தான் கொடுக்க முடியும். முழு உற்பத்தியிருந்தால்கூட மற்றவைகள் அவர்களுக்குப் பயன்படுகின்றது. நீங்கள் ஆயிரம் மெகாவாட் என்று சொன்னதனால் குறிப்பிடுகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: பத்து மெகாவாட் சக்தியுள்ள சிறுசிறு மின் உற்பத்தி நிலையங்களைத் துவக்குவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு மத்திய அரசாங்கத்தின் அனுமதி பெறவேண்டுமென்று இருக்கிறது. ரூ. 1 கோடிக்கு மேலே செலவு செய்யும் திட்டங்களுக்கு மைய அரசு அனுமதி பெற வேண்டுமாம். ஆகவே, ரூ. 10 கோடி வரை நாமே மத்திய அரசு அனுமதி இல்லாமலே செய்துகொள்ளலாம் என்ற வகையில், மத்திய சர்க்கார் நமக்கு அதிகாரம் வழங்க வேண்டுமென்ற முறையிலே வற்புறுத்தி, நாமே, சிறிய, சிறிய, எங்கெங்கு வாய்ப்பிருக்கிறதோ, அங்கெல்லாம், 10 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு நிலையங்களைத் துவக்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைத் துரிதமாகச் செய்வதற்கு, முதல் காரியமாக அதைச் செய்துமுடிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார் என்று நம்புகிறேன். செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மிக முக்கியமான விஷயம், தமிழகத்திலே நம் அத்தனை பேரையும் பாதிக்கக்கூடிய உணவு நிலைமை அது இன்றைக்கு ரொம்பவும் இக்கட்டான நிலைமைக்குக் கொண்டு வந்துவிட்டது. நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் நேற்றோ அல்லது அதற்கு முந்தைய நாளிலோ, கையிருப்பில் 1 இலட்சம் டன் அரிசி இருக்கிறது, 2 இலட்சம் டன் நெல் இருக்கிறது என்று சொன்னார். அது ஏறக்குறைய 1 மாதத்திற்கோ அல்லது 2 மாதத்திற்கோதான் போதும். ஆகவே, மேற்கொண்டு என்ன செய்வது? மத்திய அரசு அனுப்பவில்லை. ஆனால், மாநிலத்திலே இன்றைக்கு மகசூல் ரொம்பக் கம்மி. மார்க்கெட்டில், அதிகமாக விற்கக்கூடிய அளவுக்கு விவசாயம் உபரியாக, அதிகமாகப் பெருகவில்லை. கடந்த காலத்திலே நம்முடைய கட்சிகள் கடைபிடித்த நடைமுறைகள் காரணமாக,

விளைச்சல் குறைந்திருக்கிறது. இன்றைக்கு எவ்வளவு ஒரு இக்கட்டான நிலைமை ஏற்பட்டுள்ளது? விவசாய உற்பத்தி குறைந்திருக்கிற நேரத்தில நமது மாண்புமிகு உமாநாத் அவர்கள் காலையில் சொன்னார்கள, தமிழகத்திற்கு உணவு அளிக்கக்கூடிய தஞ்சை நகரத்திலேயே நேற்று அரிசி கிடையாது என்று. சென்னையிலே ஒரு கிலோ ரூ. 5. இன்னும் கொஞ்ச நாளல் படி ரூ. 10 ஆகிவிடும். கிலோ ரூ. 6 என்றால், படி அரிசி ரூ. 10 தானே. படி ரூ. 10 என்றால், ஏழை மக்கள் எப்படி வாங்கிச் சாப்பிட முடியும்? அதைக் கொஞ்சம் யோசனை செய்து பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சாவூரிலே உள்ள விவசாயிகள் இந்தத் தரணிக்கு அதிகமாக நெல்லை உற்பத்தி செய்து கொடுக்கக் கூடியவர்கள். அதற்கடுத்துதான் தென்னாற்காடு மாவட்டம், திருச்சி மாவட்டம், நெல்லை மாவட்டம் எல்லாம் வரும். அந்த மாவட்டத்தினுடைய விவசாயிகள் தொடர்ந்து என்ன கேட்கிறார்கள். தங்களுக்கு ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ. 150 விலை வேண்டுமென்று கேட்கிறார்கள். நம்முடைய அரசாங்கம் என்ன சொல்கிறது. உற்பத்திச் செலவு ரூ. 147 என்று கணக்குப் போட்டுச் சொல்கிறார்கள். ஆகவே, விலை கேட்பது ரூ. 150 தான். ஆனால், நீங்கள் இப்பொழுது போட்டிருக்கிற உத்திரவு ரூ. 112. சர்க்கார் விலை கொடுத்து வாங்குவது ரூ. 137 வறட்சி நிதி உதவி 15 ரூபாயையும் சேர்த்தால், சாதாரணமாக அரிசியை குவிண்டாலுக்கு 137 ரூபாய் என்றும், சன்ன ரகத்திற்கு 141 ரூபாய் என்றும், கொள்முதல் செய்யப் போகிறீர்கள். ஒரு குவிண்டாலுக்கு 150 ரூபாய் என்று கொடுத்தாலும் 1½ குவிண்டாலுக்கு 225 ரூபாய் ஆகிறது. 15 ரூபாயையும் அறவைக் கூலியையும் சேர்த்து 34 ரூபாய் என்று வைத்துக் கொண்டாலும் 259 ரூபாய் ஆகிறது. இன்னும் 1 ரூபாய் அதிகம் போட்டாலும் 260 ரூபாய் என்று வந்துவிடுகிறது. எனவே, 150 ரூபாய் என்று விவசாயிகளுக்குக் கொடுத்து கொள்முதல் செய்தாலும்கூட ஒரு கிலோ அரிசி ரூ. 2.60 என்று தமிழகத்திலுள்ள அத்தனை கோடி மக்களுக்கும் கொடுக்க முடியும். அரசாங்கமே மொத்த வியாபாரம் செய்தாலும், சிறு கடைகளின் மூலம் விநியோகம் செய்தாலும் ரூ. 2.60 க்குக் கொடுக்க முடியும். ஆனால் இன்றைக்கு 5 ரூபாய் 20 பைசாவுக்கு விற்கிறது. இந்த லாபம் யாருக்குப் போகிறது? இடையிலே உள்ளவர்கள் கொள்ளையடிப்பதற்கு ஏன் இடங்கொடுக்க வேண்டும்? உற்பத்தி செய்யும் விவசாயிக்கு 100 ரூபாய்க்கு மேலே கிடைக்கவில்லை. 57 கிலோ கொண்ட ஒரு மூட்டை நெல்லுக்கு 57 ரூபாய்க்கு மேல் இன்றைக்கு அவர்களுக்குக் கிடைக்கவில்லை. சர்க்கார் கொள்முதல் செய்வதோ ஒரு குவிண்டாலுக்கு 141 ரூபாய் என்றும், 144 ரூபாய் என்றும் கொடுத்துக் கொள்முதல் செய்கிறது. வேறு யாருக்கும் விற்கக் கூடாது என்று சொல்லி அதனால் விவசாயிகளுக்கும் நல்ல விலையும் கிடைக்கவில்லை, வாங்கிச் சாப்பிடுகின்றவர்களுக்கும் சீராக அரிசி கிடைக்கவில்லை. நடுவே இருப்பவர்கள் கொள்ளையடிக்கிறார்கள். இப்படித்தான் உங்களுடைய உணவுக் கொள்கை இருக்கிறது.



நாங்கள் தொடர்ந்து இந்த மன்றத்திலே சொல்லி வருகிறோம். விவசாயிகள் தங்களுக்குக் கட்டுப்படியாகாத விலையின் காரணமாக உற்பத்தியைக் குறைக்கிறார்கள அவர்களால் உற்பத்தி செய்ய முடியவில்லை. ஆகவே, உற்பத்தி குறைகிறது. இந்த உற்பத்தி சீராக நடப்பதற்கு நியாயமான விலையைக் கொடுங்கள். விவசாயிகளுக்கு 50 ரூபாய் கொடுத்தால்கூட விலையேறாமல் சன்ன ரக அரிசியை ரூ 2.60-க்குத் தாராளமாகக் கொடுக்க முடியும். 1½ குவிண்டாலுக்கு 225 ரூபாய் என்று கொடுத்து மற்றச் செலவுகளுக்கும் சேர்த்து 34 ரூபாய் என்று கொடுத்தாலும் மொத்தம் 259 ரூபாய் என்று வந்தாலும் ரூ. 2.60 க்குக் கொடுக்கமுடியும். இதைச் செய்வதற்கான நடவடிக்கையை நீங்கள் எடுப்பீர்களா என்று கேட்க விரும்புகிறேன். இதை நீங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மொத்த வியாபாரத்தையுமே அரசாங்கம் எடுத்து விவசாயிகளுக்கும், மக்களுக்கும் பயன்படும் வகையில் செய்தால் நல்லது. ஒரு குவிண்டாலுக்கு 50 ரூபாய் வீதம் கொடுத்து சீராக விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது பல நியாயவிலைக் கடைகளில் அரிசி கிடையாது, மண்ணெண்ணெய் கிடையாது. ஆகவே, இம்மாதிரி கஷ்டப்படும் மக்கள் 5 ரூபாய், 6 ரூபாய் என்று கொடுத்து ஒரு கிலோ அரிசியை வாங்கும் நிலைமையை மாற்றி சீராக விநியோகம் செய்வதற்கான நடவடிக்கையை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்றால், விவசாயிகள், சாதாரண ஏழை எளிய விவசாயத் தொழிலாளிகள், வேலையில்லாதவர்கள் மிகப் பெரிய பாதிப்புக்கு ஆளாவார்கள். எனவே, இதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு விவசாய உற்பத்தி பெரிதும் பாதிப்பிற்கு ஆளாகி, விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டு, அவர்கள் போட்ட முதலைக் கூட எடுக்க முடியவில்லை. இன்றைக்குக் கடன் நிவாரணம் சம்பந்தமாகத் தொடர்ந்து இந்த மன்றத்தில் சொல்லி வந்திருக்கிறோம். இதுவரையில் செய்யவில்லை. உயர் மட்டக் குழு போடப்பட்டது. வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டும், அசலைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கட்டுகிறோம் என்று சொல்கிறார்கள். அதை ஆளும் கட்சியில் உள்ள மாமன்ற உறுப்பினர்கள்கூடச் சொல்லுவார்கள். ஆனால் கட்சிக் கட்டுப்பாடு என்ற காரணத்தினால் உங்களிடத்தில் நேராகச் சொல்வதற்குப் பயந்தாலும்கூட, அவர்களோடு நாங்கள் நேராகப் பேசும்பொழுது சொல்கிறார்கள். இன்றைக்கிருக்கின்ற வட்டி பூராவையும் தள்ளுபடி செய்து விட்டு, அசலை மாத்திரம் கொஞ்சம் கொஞ்சமாகக் கட்டி விடுகிறோம் என்று சொல்கிறார்கள். வட்டியும் சேர்ந்து சேர்ந்து அவர்கள் தலையிலே வைக்கப்பட்டு அவர்கள் எந்தவிதமான உற்பத்தி

யிலேயும் ஈடுபட முடியாமல், உற்சாகம் இல்லாமல், உற்பத்தி செய்வதற்கு மனமில்லாமல் பாதிப்புக்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆகவே, அதைச் செய்ய வேண்டும், அவர்களுக்கான நிவாரண நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரம், தண்ணீர், உணவு, தொழில் ஆகியவைகளில் உங்கள் அரசு செலுத்திய கவனம் போதாது. ஆகவே, தமிழ்நாட்டிலே சிராகத் தொழில்கள் வளர்வதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஏழைகளுக்கு உணவு அளிப்பது தர்மம்தான். அதைச் செய்ய வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் அது ஏழை எளிய மக்களுக்கு உதவுமா என்பது சந்தேகம்தான். இது ஏழை மக்களைப் பாதிக்குமா, அல்லது வளர்ச்சிக்கு உதவுமா, இது வளர்ச்சிக்கு உரிய திட்டமா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தன்னிறைவுத் திட்டம்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். கிராமப் பகுதிகளிலேயும், நகரப் பகுதிகளிலேயும் இந்தத் திட்டம் நடைபெறுவதைப்பற்றிக் கேள்விப்படும்பொழுது கவலை அளிக்கின்ற பல செய்திகள் வருகின்றன. ஆகவே, நான் சொல்கிறேன், உள்ளாட்சிகளுக்குத் தேர்தல்கள் நடைபெற வில்லை; அங்கே தேர்ந்தெடுக்கப்பெற்ற அமைப்பு இல்லை. எனவே, அங்கே நடைபெறுகின்ற வேலைகள் சிராக நடக்கின்றனவா என்பதை ஆய்வுசெய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தன்னிறைவுத் திட்டம் முடிந்தவுடன் குடிநீர்த் திட்டம் முடிந்து விட்டது; ரோடுகள் போட்டாகி விட்டது; எல்லா விதமான காரியங்களையும் செய்தாகிவிட்டது என்று சொல்கிறார்கள். ஆனால் அவைகளைப் பழுது பார்ப்பதற்கான நிதி உதவி ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கிடையாது என்று சொல்கிறீர்கள்.

(முற்பகல் 11-10)

ஆகவே போட்ட வேலை அப்படியே இருக்கிறது. அடுத்த படியாக இதிலே ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது. 22.56 கோடி ரூபாய் செலவில் கிராமங்களுக்கு கழிப்பிடங்கள் கட்டப்படும் என்று இருக்கிறது. இது ஏற்கனவே இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் பல கிராமங்களிலே கட்டப்பட்டு அவை எல்லாம் இப்போது இடிந்து போய். அப்போது இருந்த ஆட்சியினுடைய காட்சிப் பொருளாக இருந்து கொண்டிருக்கின்றன நான் கழிப்பிடம் வேண்டாம் என்று சொல்லவில்லை அப்படி கழிப் பிடங்களைக் கட்டினால் அதை மெயின்டெயின் செய்வதற்கு தண்ணீர் வசதி தேவை. அதைத் துப்புரவு செய்வதற்கு ஏற்பாடுகள் உண்டா? பஞ்சாயத்திலே இதற்கு வருமானம் கிடையாது. பஞ்சாயத்திலே வருகின்ற வருமானம் கிளார்க்கு களுக்குச் சம்பளம் கொடுக்கவே காணவில்லை. எனவே இப்போது



கட்டப்படவிருக்கின்ற கழிப்பிடங்கள் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் கட்டப்பட்டு இப்போது காட்சிப் பொருளாக இருப்பதைப் போன்று மாறிவிடாமல் இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கைத்தறித் தொழிலுக்கு சம்பந்தப்பட்ட நூல் 30 சதவிகிதத்திலே இருந்து 50 சதவிகிதமாக உயர்ந்து விட்டது. இதன் காரணமாக மதுரை, பரமக்குடி, இராஜபாளையம் பகுதியிலே உள்ள நெசவாளர்கள் தொழிலும் இல்லாமல், வேலையும் இல்லாமல், வருமானமும் இல்லாமல், கிளர்ச்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். இதை உடனடியாகக் கவனிக்கவேண்டும். இப்படிப்பட்டவர்களுக்கு மலிவு விலையில் நூல் கொடுத்து அவர்களுடைய தொழிலை சீரான முறையில் ஆக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கடந்த 1928 ஆம் ஆண்டு ஏற்பட்ட அண்ணாமலைப் பல்கலைக் கழக சட்டத்தை திருத்துவதாகச் சொன்னார்கள். இது 1980 ஆம் ஆண்டு ஆளுநர் உரையிலேயே கூறப்பட்டிருக் கின்றது. ஆனால் இன்றுவரையிலும் அந்தத் திருத்தம் கொண்டு வரப்படவில்லை. அங்கே ஆசிரியர்களும், மாணவர் களும் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அங்கே இன்ஜினியரிங் கல்லூரிக்கு அண்மையில் தேர்வு நடைபெற்றது. மொத்தமுள்ள 325 மாணவர்களில் 100 பேர்கள் பார்வார்டு கம்யுனிட்டியைச் சேர்ந்தவர்கள் அவர்களிலே குறைவாக மார்க்கு வாங்கி இருப்பவர்களும் சேர்க்கப்பட்டு, அதிலே மிகப்பெரிய ஊழல் நடைபெற்றிருப்பதாகச் சொல்லப் படுகிறது. இதை அரசு கவனித்து, உடனடியாக 1980 ஆம் ஆண்டு ஆளுநர் உரையிலே சொல்லப்பட்ட அந்த அண்ணாமலை பல்கலைக் கழக சட்ட திருத்தத்தைக் கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கடைசியாக இந்த அரசாங்கத்தினுடைய போலீஸ் துறை நிர்வாகத்தைப்பற்றி ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். தர்மபுரி மாவட்டத்திலே ஊத்தங்கரை வட்டாரத்திலே கோவிந்தபுரம் என்ற கிராமத்திற்கு போய் இருந்தேன். அந்தக் கிராமத்திலே சுப்பிரமணியம் என்பவரை, பக்கத்திலுள்ள வீட்டிலே ஒரு ரேடியோ காணாமல் போய் விட்டதாகச் சொல்லி, போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று, அங்கே அவர் அடித்துக் கொல்லப்பட்டிருக்கிறார். இது குறித்து 3-6-1982-இல் எல்லா கட்சிகளைச் சேர்ந்த அனைவரும், அ.தி.மு.க. கட்சியினரும் சேர்ந்து, நியாயம் கேட்பதற்காகச் சென்றபோது, துப்பாக்கிச் சூடு நடந்து அதனால் 4 பேர்கள் இறந்துபோனார்கள். அதை விசாரிப்பதற்கு சென்ற தாசில்தார், ஆர்.டி.ஓ. போன்றவர்கள் மீதும் துப்பாக்கி சூடு நடந்து. தாசில்தார் வெங்கடசாமி அவர்கள் மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டிருந்தார். தலைவர்கள் அனைவரையும் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று மிகவும் அருவருக்கத்தக்க

முறையில் நடத்தினார்கள். இந்த சம்பவத்தின் காரணமாக, தாசில்தார் வெங்கடசாமிக்குக் கூட உதவித் தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இறந்துபோன சுப்பிரமணியத்தின் தாயாருக்கு எந்தவிதமான உதவித் தொகையும் கொடுக்கவில்லை. அவர் அவருக்கு ஒரே மகன். எனவே அந்தத் தாயாருக்கு நிவாரணம் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று செங்கோட்டை காவல் நிலையத்தில் காளிமுத்து என்ற அரிசன வாலிபன் அடித்துக் கொல்லப்பட்டான். இது குறித்து சட்டமன்றத்திலே எல்லோரும் தீர்மானம் கொடுத்து அதுகுறித்து விசாரணை நடந்தது. அதனுடைய முடிவு என்ன ஆயிற்று என்று தெரியவில்லை.

அடுத்து தென்னாற்காடு மாவட்டத்தில் திருவெண்ணை நல்லூரில் கிராவு என்ற கிராமத்திலே நிலச்சுவான்தார்களுடைய நிலத்திலே சாகுபடி செய்த விவசாயிகளை வேண்டுமென்றே பொய் வழக்குப் போட்டு, இன்று வரையிலே இழுத்தடித்துக் கொண்டு வருகிறார்கள்.

திருச்சியிலே அரியலூர் வட்டாரத்திலே எங்கள் இயக்கத்தினுடைய செயலாளர் கிருஷ்ணமூர்த்தியினுடைய மனைவி, வீட்டிலே உறங்கும்போது கொலை செய்யப்பட்டார். அந்தக் கொலை சம்பந்தமாக போலீஸ் ஸ்டேஷனிலே போய் புகார் சொல்லப் போனால், புகார் கொடுக்கின்ற அவரைப் பார்த்து ஏன் நீயே கொலை செய்து இருக்கக் கூடாது என்று சொல்லி மிரட்டுகின்ற மோசமான நிலை இன்றைக்கு அந்தப் போலீசிலே இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேமாதிரியாக இன்றைக்கு நாகம்மாள் என்ற ஒரு பெண்மணி இன்றைக்கு எஸ்.டி. நாயுடு என்ற கலைக் கல்லூரியிலே பேராசிரியராகப் பணியாற்றுகிறார்கள். அவருடைய கணவரும் ஒரு பேராசிரியர். வரதட்சணை காரணமாக, அந்தக் கொடுமையாலே, அந்த அம்மாள் அடித்துக் கொல்லப்பட்டார். என்று அந்த வட்டாரம் பூராவும் பேசப்படுகிறது. அது சம்பந்தமாக வேண்டுமென்றே மிகப் பெரிய அரசியல் செல்வாக்கு உள்ளவர்கள் தலையீட்டின் காரணமாக சரியான விசாரணை இல்லாமலே அந்தக் கொலையைச் செய்தவர்களை, கண்டுபிடிக்காமல், வழக்கும் போடாமல் இன்று அந்தக் கொலை செய்தவர் தப்பித்துப் போய்விட்டார். இதன் மீது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதேமாதிரியாக பல இடங்களில் போலீசாருடைய நடவடிக்கை சரியாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு....(மணி அடிக்கப்பட்டது.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் 25 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள். உங்களுக்கு முதலில் 15 நிமிடங்கள் தான் கொடுக்கப்பட்டது. சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.



**திரு. சோ. அழகர்சாமி:** விவசாயத் தொழிலாளர்களுக்கு பென்சன் தரப்போவதாக முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆகவே விவசாயத் தொழிலாளர்கள் அந்தப் பென்சனுக்காக மனுப் போட்டு அதற்காக அலைந்துகொண்டிருக்கிறார்கள். இங்கே இருக்கக்கூடிய சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 30 ஆயிரம் பேர்களுக்கு மொத்தம் 98 லட்சம் ரூபாய் கொடுக்கப்போவதாக சொன்னார்கள் சென்ற ஆண்டு. ஆகவே தமிழகத்திலே இன்றைக்கு எந்தவிதமான ஊதியமும் இல்லாமல், இருக்கின்ற உழைப்பைச் சக்தியை நம்பி இருக்கின்ற விவசாயத் தொழிலாளர்கள் தங்களுடைய மகன் கூட சாப்பாடு போடமுடியாமல்—மகன் இருந்தால்தானே சாப்பாடு போடுவதற்கு—மகன் இல்லாவிட்டால் எந்தவிதமான ஊதியமும் இல்லாமல் பிச்சை எடுத்துக்கொண்டு,....

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அழகர்சாமி, உங்களுக்கு பதில் வேண்டுமா, வேண்டாமா? நான் நேற்றே உங்களைக் கேட்டேன். 1 மணி நேரம் கூட அதிகமாகப் பேசுங்கள் என்று சொன்னேன். நேற்றுப் பேசியிருந்தால் அதிகமாகப் பேசியிருக்கலாம். சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. சோ. அழகர்சாமி:** விவசாயத் தொழிலாளர்கள் தகுதி உள்ள தொழிலாளர்களுக்கு. மனுபோட்ட அத்தனை பேருக்கும் பென்சன் கொடுக்கக்கூடிய, கேரளா சர்க்கார் செய்தது மாதிரி நீங்கள் செய்யவேண்டுமென்று வற்புறுத்தி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது சில கருத்துக்களை, காந்தி-காமராஜ் தேசியக் காங்கிரஸ் சார்பிலே எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். மேழ்நாட்டில் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிற நிலவரங்களுடைய பிரதிபலிப்பாக ஆளுநர் உரை அமையவில்லை. மின்சாரப் பற்றாக்குறை என்று சொல்வதை விட மின்சாரம் நம் நாட்டிலேயே பல வளமான பொருட்களினுடைய பற்றாக்குறையை ஏற்படுத்திவிடுமோ என்று சால்லுகின்ற அளவிற்கு நிலைமைகள் இன்று உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஆளுநர் உரையிலே சொல்லியிருக்கிறார்கள். இன்னும் அணுமின் நிலையங்கள் நிறையவேண்டும் என்று கேட்கிறார்கள். அதனை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் 1961-லே ஆரம்பிக்கப்பட்டு, 1971-லே நமக்கு மின்சாரத்தைக் கொடுக்கும் என்று எதிர்பார்த்து இருந்த கல்பாக்கம் இன்னும் எந்தவிதமான உற்பத்தியும் தொடங்காத நிலையிலே இருந்துகொண்டிருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். அதற்குத் தேவைப்படுகின்ற ஹெவி வாட்டர் என்று சொல்லப்படுகின்ற அந்தப் பொருளை உற்பத்தி செய்கின்ற தூத்துக்குடி நிலையத்திலேயிருந்து நமக்கு மிகமிக

குறைவாக 27½ டன் என்று சொல்கிறார்கள்—240 டன்கள் தேவைப்படுவதற்கு 27½ டன் என்று கொடுக்கிற அளவிற்கு தமிழ்நாடு உற்பத்தியும்,—ஒரிஸ்ஸாவிலேயும். ராஜஸ்தானிலிருந்து கொண்டிருக்கின்ற மற்ற ஹெவி வாட்டர் உற்பத்தி செய்கின்ற நிலையங்களிலேகூட சரியான வகையிலே வேலை செய்யவில்லை என்று சொல்வதைப் பார்க்கும்போது நம்முடைய நாட்டிலே அந்த உற்பத்தியைக் கூட பாதக்கின்ற அளவிற்கு யாருடைய சதியோ நடைபெறுகிறது என்று சொல்கிற அளவிற்கு எனக்கு அச்சம் ஏற்படுகிறது. நீண்டகாலமாகவே அந்த வகையிலே இந்த உற்பத்தியை செம்மைப்படுத்த முயன்றும்கூட ஏதாவது ஒரு கோளாறு அங்கே வந்து கொண்டிருப்பதைப் பார்த்தால், இந்தியா ஒற்றுமையாக முன்னேறுவதைக்கூட யாரோ தடை செய்வதிலே முயல்கிறார்கள் என்ற ஐயப்பாடு ஒரு நிலை ஏற்படுகிறது. எனவே கல்பாக்கம் போன்றவைகள் உடனடியாக செயல்பட்டால் தான் ஓரளவு நாம் தப்பிப் பிழைக்க முடியும் என்று சொல்லுகின்ற நிலை ஏற்படுகிறது. அதோடு நமக்கு நிலக்கரி பற்றாற்குறை என்று சொல்கிற காரணத்தாலே உற்பத்தி குறைகிறது என்று சொல்கிறோம். சில நாட்களுக்கு முன்பு எண்ணூரிலே இருக்கின்ற அதிகாரிகள் ஒன்றுக்கும் உதவாத சாம்பலைக்கூட போட்டு நமக்கு மின்சாரத்தைத் தந்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். பாராட்டு கிறோம். ஆனால் நமக்கு என்று வந்துகொண்டிருக்கக்கூடிய அந்த நிலக்கரிகளை தமிழகத்திற்கு எட்ட விடாமல் விஜயவாடாவிற்கு மாற்றினார்கள் என்று சொல்கிறார்களே அப்படி மாற்றுவதற்கு உரிய உத்தரவை கொடுத்தது யார் என்றும், ஏன் மாற்றினார்கள் என்றும் தமிழ்நாடு அரசாங்கம் இதனை வினா தொடுத்து மத்திய அரசாங்கத்தின் கவனத்தை ஈர்த்ததா என்பதைக் கேட்டுக் காள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-20)

ஆக நமக்கு இவ்வளவு பற்றாக்குறை இருக்கிற நேரத்தில் கூட, நமக்கு எங்கிருந்தோ வந்துகொண்டிருப்பதைக்கூட வேறு எங்கோ திருப்புகின்ற ஆற்றல் யாருக்கு இருக்கிறது என்பதையும் அவர்கள் இப்படி நினைப்பதற்கு காரணம் என்ன என்பதையும், அப்படி திருப்பிக் கொண்டு போய் விட்டால் கூட தமிழ்நாடு அரசாங்கம் எதுவும் கேட்காது, அவர்களுக்குக் கேட்கத் தெம்பு கிடையாது, அவர்களுக்குக் கேட்கும் பழக்கம் கிடையாது என்று நினைத்து விட்டார்களா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

இன்று நம் தொழிற்சாலைகள் முடங்கிக் கிடப்பதைப் பார்க்கிறோம். பெரிய பெரிய தொழிற்சாலைகள் மூடிக் கிடப்பதால் ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்து இருக்கிறார்கள். இது ஒருபுறம் இருக்க பெரிய தொழிற்சாலைகள் மூடிக்கிடப்பதால் அதை ஒட்டி சிறுசிறு உதிரி பாகங்கள் செய்கிற தொழிற்சாலைகளும்



மூடிக்கிடக்கின்றன. இவைகளையெல்லாம் பார்க்கின்றபோது மத்திய அரசாங்கம் நமக்குச் செய்யவேண்டியதைச் செய்யாதது ஒரு புறம் இருக்க, நாம் செய்யச் சொல்லவேண்டியதைச் செய்யச் சொல்லவில்லையோ என்கிற எண்ணமும் என் மனதிலே இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அதைப்போலவே ஜெர்மனியிலிருந்து ஆர். டபிள்யூ. இ. என்ற கம்பெனியிடமிருந்து கன்சல்டன்சி பெற்று, எண்ணூரில் மின்சார உற்பத்தியை அதிகரிக்கலாம் என்ற தகவல் வந்து இருக்கிறது. இதை நாம் வரவேற்கலாம். வெளிநாட்டிலிருந்து கிடைக்கின்ற நல்ல ஆலோசனைகளை, நல்ல தொழில் நுட்பத்தை நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். ஆனால் இன்னும் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் அந்த டியூப் என்று சொல்கிற குழாய், கொதிகலன் குழாயில்தான் அடிக்கடி அங்கே பொத்தல் ஏற்பட்டு விடுகிறது, அதனால் தான் மின்சார உற்பத்தி பாதிக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். அந்தப் பொத்தலை இப்படி அடிக்கடி ரிப்பேர் செய்துகொண்டு இருப்பதை விட, அந்தக் கொதிகலனையே புதிதாக பாரத் ஹெவி எலெக்டிரிகல் நிறுவனத்தின் மூலம் வாங்கி வைத்துவிட்டால் ஏறத்தாழ 56 கோடி ரூபாய் செலவில் மிகச்சிறப்பான முறையில் அதைச் சீர் செய்து விடமுடியும் என்கிற விவரமும் விவரம் தெரிந்த நிபுணர்களால் கூறப்படுகிறது. அதையும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இது தொடர்பாக நான் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். அது என்னவென்றால், நம்முடைய நாட்டில் கிடைக்கின்ற மின்சாரத்தைக் கூட சீரான முறையில் நாம் பகிர்ந்து கொடுக்க முடியாமல் இருக்கிறோம். 24 மணி நேரம் அறிவிப்பு கொடுத்த பின்னாலே தான் மின்சாரம் நிறுத்தப்பட வேண்டும் என்ற நிலை இருந்தும் கூட நம்முடைய மின்உற்பத்தியில் இடர்ப்பாடு இருந்த காரணத்தால், பருவமழை தவறிவிட்டதன் காரணத்தால், நமக்கு பருவமழை உதவாது இருந்த காரணத்தால், முன்னெச்சரிக்கையாக நாம் செய்ய வேண்டிய சில நடவடிக்கைகளை மேற்கொள்ளாத காரணத்தால், 24 மணி நேரம் அறிவிப்புக்கூட கொடுக்காமல், தொழிற் சாலைகளை அப்படி அப்படியே நிறுத்த வேண்டிய நிலை வந்தது, மின்சாரம் இல்லாத காரணத்தாலே. அதன் காரணமாக பல லட்சக்கணக்கான ரூபாய் இழப்பு ஏற்படும் நிலையேற்பட்டுள்ளது. இனிமேல் அந்தத் தொழிற்சாலைகளை மீண்டும் தொடர்ந்து நடத்த முடியுமா என்கிற நிலைமையும் தமிழகத்தில் ஏற்பட்டு இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குடிநீர் திட்டத்தைப் பொறுத்தவரையில் நமது தமிழக அரசாங்கம் பல முயற்சிகளைச் செய்துகொண்டு இருக்கிறது. இதிலே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நமக்குச் சில தகவல்களைத் தருவதோடு நிறுத்திக்கொண்டு, நம்முடைய

[திரு. குமரி அனந்தன்] [1983 பிப்ரவரி 1

ஆளுநர் உரையில் வேறு எதுவும் சொல்லாது இருப்பது கண்டு நான் மெத்த வருத்தப்படுகிறேன். மத்திய அமைச்சர் கங்கையை கன்னியாகுமரிக்குக் கொண்டு வரமுடியாது என்று இங்கே வந்து ஒரு கூட்டத்தில் சொல்லிவிட்டால் அது தான் வேதவாக்கு என்று தமிழ்நாடு எடுத்துக்கொள்ளத் தேவையில்லை. மத்திய அரசாங்கம் சொல்லிவிட்டது, மத்திய அரசாங்கமே கங்கையை இனிமேல் கன்னியகுமரிக்குக் கொண்டு வர முடியாது என்று சொல்லிவிட்டது, அந்தத் திட்டம் வராது என்று சொல்லிவிட்டது என்று நினைத்துக்கொண்டு இருக்காமல், அது நாம் வாதிட்டுப் பெறவேண்டிய ஒரு பெரிய திட்டம் என்பதை இந்த அரசாங்கம் உணரவேண்டும்.

வடக்கே வெள்ளப் பெருக்கத்தால் ஆண்டுக்காண்டு கோடிக் கணக்கான ரூபாய்களை நாம் செலவழித்துக்கொண்டு இருக்கிறோம், இங்கே வறட்சி என்று கோடிக்கணக்கான ரூபாய்களை நாம் செலவழித்துக்கொண்டு இருக்கிறோம். இப்படி இரண்டு பக்கமும் கோடிக்கணக்கான ரூபாய்களை இந்திய அரசாங்கம் செலவழித்துக்கொண்டு இருக்கிறது. ஆகவே, வடக்கே ஓடிக்கொண்டிருக்கிற, கங்கோத்திரியில் உற்பத்தியாகின்ற கங்கை நதியை, கன்னியாகுமரியோடு சேர்ப்பதற்கு உரிய திட்டங்கள் உண்டு என்று மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. அண்மையில் கூட இதே மாமன்றத்தில் நான் அந்தச் செய்திகளை இங்கே எடுத்துச்சொல்ல வாய்ப்பு ஏற்பட்டது. பத்திரிகைக்காரர்கள் அத்தனை பேரும் சேர்ந்து ஒரு அருமையான நூலை வெளியிட்டு இருக்கிறார்கள். 'தி இந்தியா ஆப் அவர் டிரீம்ஸ்' அதன் ஆசிரியர் ஆர். கே. கரஞ்சியா அவர்கள். அவர்கள் அதிலே மிகத் தெளிவாக எழுதியிருக்கிறார்கள். யுகோஸ்லோவியா நாட்டில் 1947-ம் ஆண்டில் யூத் ரயில்வே ப்ராஜெக்ட் என்ற அருமையான ஒரு திட்டத்தை பாபிலோனியா மக்கள் எப்படி செய்து முடித்தார்களோ அதைப்போலவே நிலப்படை அமைத்து, இளைஞர்களை அமைத்து, மாணவர்களைத்திரட்டி, அங்கே கங்கோத்திரியில் இருந்து கங்கையை இங்கே கொண்டு வரமுடியும் என்று சொல்கிற அருமையான திட்டத்தை, நாம் கனவு காணுகிற அந்தத் திட்டத்தை 'இந்தியா ஆப் அவர் டிரீம்ஸ்' என்ற புத்தகத்தில் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த அளவிற்கு நமக்குச் செய்திகள் வந்துள்ளன. அது மட்டுமல்ல, மத்தியில் இருப்பவர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? இதற்கு 30 ஆண்டுகள் ஆகும். 50,000 கோடி செலவாகும். எனவே இதைப் பற்றிச் சிந்திக்காதீர்கள். இது வராது என்று சொல்கிறார்கள். 50000 கோடி என்பது அகண்டு விரிந்து பரந்து இருக்கும் பாரதத்திற்கு பெரிய தொகையல்ல. அவர்கள் சொல்கிற ஆண்டுகளோடு கணக்கிட்டுக் பார்த்தால், ஒரு ஆண்டுக்கு 1,666 கோடி ரூபாய் தான் வருகிறது. அவ்வளவு தான்.



1983 பிப்ரவரி 1] [திரு. குமரி அனந்தன்]

ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்கு நாம் செலவு செய்திருப்பதோ 1,700 கோடி ரூபாய் என்பதை நாம் சிறிது சிந்தித்துப் பார்த்தால் விளையாட்டுக்கு என்று இவ்வளவு செலவு செய்கின்ற நாம் நல்ல தானியம் விளையட்டும் என்பதற்காக 1666 கோடி ரூபாயை ஆண்டுதோறும் செலவு செய்வதிலே எந்தவிதமான இடர்ப்பாடும் வந்துவிடாது; படபடப்பும் வந்து விடாது.

இன்னும் ஒருபடி மேலே போய் சிந்திப்பதாக இருந்தால், இதற்கு 30 ஆண்டுக் காலம் ஆகும் என்று சொல்வதுகூட கற்பனைக்கு எட்டாத ஒன்றாகும். 30 ஆண்டுக் காலம், ஆகவே ஆகாது. இப்போது வந்திருக்கிற விஞ்ஞான யுக்திகளை கையிலே வைத்துப்பார்த்தால், விந்தியத்தைக் கடப்பதற்கு என்ன செய்ய வேண்டுமென்று சிலர் சொல்கிறார்கள். தண்ணீரை மேலே ஏற்றிக்கொண்டு வருவதற்கு எவ்வளவு மின்சாரம் தேவைப்படும் என்றெல்லாம் சொல்கிறார்கள். அவர்களைப் பார்த்துக் கேட்கிறேன். எவ்வளவோ விஞ்ஞான சக்திகள், விஞ்ஞான கருவிகள் வந்திருக்கிற இந்த நேரத்திலே மலைகளைக் குடைந்து தண்ணீரைக் கொண்டுவர முடியாதா? நிச்சயமாகக் கொண்டுவர முடியும். கேரளத்திலே இதை நாம் சாதித்திருக்கிறோம். ஆரியங்காவிலே இருந்து செங்கோட்டை வரையிலே மலையைக் குடைந்து நம் ஒரு பாதையை அமைத்திருக்கிறோம் என்று சொன்னால், எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னால் அந்தப் பாதையை அமைத்திருக்கிறோம் என்று சொன்னால் விந்திய மலையைக் குடைந்து அந்தத் தண்ணீரைக் கொண்டு வருவது என்பது கடினமான ஒரு காரியம் அல்ல. எனவே, சாத்தியமற்றது என்று எப்போது மத்திய அரசு சொல்கிறதோ அப்போது இது சாத்தியம் உள்ளது என்று வற்புறுத்த வேண்டியது தமிழக அரசினுடைய கடமை. இந்தப் பிரச்சனையிலே இந்த தமிழக அரசு தமிழக பேரவையிலே இருந்து கொண்டிருக்கிற அத்தனைக் கட்சிகளுடைய ஆதரவோடு உரத்த குரலிலே சாத்தியமுள்ளது என்று சொல்ல வேண்டும். விஞ்ஞான அறிவை, விஞ்ஞானத் தெளிவை, விஞ்ஞானக் கருவிகளை உலகம் கண்டுபிடித்திருப்பதை நினைவிலே கொண்டுவாருங்கள் என்று மத்திய அரசுக்கு சொல்லவேண்டிய கடப்பாட்டில் இருக்கின்ற இந்த அரசு ''மத்திய அரசு சொல்லிவிட்டது, சொல்லிவிட்டது'' என்று சொல்லிக்கொண்டிருந்தால் மத்திய அரசு சொல்லுகின்றதற்கெல்லாம் தலையாட்டுகின்ற பொம்மைகள் நாம் என்று உலகுக்கு எடுத்துக்காட்டிக் கொண்டிருப்பது நல்லதல்ல என்பதை மெத்தப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப் போலதான் சென்னையிலே இன்று குடிநீர்ப் பஞ்சம். தமிழ்நாட்டின் பல பகுதிகளிலே குடிநீர்ப் பஞ்சம் இருக்கிறது. சென்னையிலே இன்று குடிநீர்ப் பஞ்சம் என்பதாலே ஐ.ஐ.டி. டைரக்டர் சொல்லியிருக்கிறார், இனிமேல் லாரிகளில்

தான் தண்ணீர் கொண்டுவர வேண்டும்; குழாய்களில் இனிமேல் தண்ணீர் விடுவது நல்லதல்ல; இருக்கிற முக்கிய குழாய்களில் கடல் நீரைத்தான் கொண்டுவர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்.

நமது மாண்புமிகு அமைச்சரவர்களும் நானும் இதுபற்றி சிறிது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு ஏற்பட்டது. இந்தத் துறையின் பொறுப்பிலே இருக்கிற அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்களிடம் பல செய்திகளைச் சொன்னேன். அந்த நேரத்திலே அவர்கள் விளக்கம் சொல்வதுபோலே பல செய்திகளைச் சொன்னார்கள். ஆனாலும் என் உள்ளத்திலே உள்ளதைச் சொல்லவேண்டுமென்று விரும்புகிறேன்.

பழவேற்காடு ஏரியிலிருந்து சென்னைக்கு தண்ணீர் கொண்டு வரலாம். அப்படி பழவேற்காடு ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டு வருகிறபோது அங்கே வாழ்ந்து கொண்டிருக்கின்ற மீனவர்களுக்கு கிஞ்சித்தும் இன்னல்கள், இடையூறுகள் ஏற்படாமல், அவர்கள் வாழ்க்கையிலே வளம் குறைந்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்; அவர்களுடைய வாழ்க்கை ஒன்றை மட்டுமே முக்கியமாக வைத்துக்கொண்டு, அதை செய்து முடித்த பின்னால் அவர்களுடைய வாழ்க்கை மேன்மைப் படுவதற்கு, அவர்களுக்கு நல்ல வருமானம் வருகின்றவகையில் ஏற்பாடுகளைச் செய்த பிறகு, அதற்கான வழிவகைகளைக் கண்டதற்குப் பின்னாலே அந்த பழவேற்காடு ஏரியிலிருந்து தண்ணீரை சென்னைக்குக் கொண்டுவர முடியும்.

இங்கே இருக்கிற செம்பரம்பாக்கம் ஏரியாக இருந்தாலும் சரி, புழல் ஏரியாக இருந்தாலும் சரி, வேறு ஏதாவது ஏரியாக இருந்தாலும் சரி, அவை எல்லாம் நம்பியிருப்பது கொற்றலை ஆறு ஒன்றைத் தான். அந்த கொற்றலை ஆற்றைத்தான் நாமும் நம்பிக்கொண்டிருக்கிறோம். அந்த கொற்றலை ஆற்றை நம்பியிருக்க—பழவேற்காடு ஏரியில் மூன்று நதிகள் போய் பாய்கின்றன. ஒன்று அகதி ஆறு, மற்றொன்று கலஞ்சி, இன்னொன்று சொர்ணமுகி, இந்த மூன்று நதிகளும் போய் விழுகின்றன.

இப்போது நம்முடைய சென்னை மாநகருக்கு தண்ணீர் கொடுத்துக் கொண்டிருக்கிற தேக்கங்களுக்கு எங்கிருந்து தண்ணீர் வருகிறது என்றால் கிட்டத்தட்ட 200 சதுர மைல் கொண்ட நீர்ப்பிடிப்புப் பகுதியிலிருந்து வருகிறது. ஆனால் நான் சொல்லுகின்ற பழவேற்காடு ஏரி 1,692 சதுர மைல் நீர்ப்பிடிப்புப் பகுதியைக் கொண்டது. 1,692 சதுர மைல் நீர்ப்பிடிப்புப் பகுதி, அங்கே கொட்டுகின்ற மழை, ஓடுகின்ற தரை கெட்டியாக இருக்கிறது, பாறையாக இருக்கிறது. எனவே பூமி உறிஞ்சுவது கொஞ்சம். மீதி எல்லாம் அந்த பழவேற்காடு ஏரிக்குப் போய்ச் சேருகிறது. அப்படி போய்ச் சேருகின்ற காரணத்தாலே நல்லமுறையிலே அதிகமாக தண்ணீர் தேங்குவதற்கு வழி ஏற்படுகிறது. ஆனால் கடலிலே ஒரு பகுதி அதோடு தொட்டுக் கொண்டு இருக்கிறது என்பதற்காக, அது உப்பு நீராக இருக்கிறது என்பதற்காக அந்தத் தண்ணீரை சென்னைக்குக் கொண்டுவந்து பயன்படுத்த முடியுமா என்று நாம் சிந்திக்க வேண்டிய தேவையில்லை, ஏனென்றால் அந்தக் கடல் பகுதியும் அந்த பழவேற்காடு ஏரியும் இணைந்து கிடக்கின்ற இடம் ஏறத்தாழ 5 மீட்டர் கூட இருக்காது. அந்த இடத்திலே நீண்ட பெரும் சுவரை எழுப்பிவிட்டால் கடல் நீர் உள்ளே வராமல் தடுத்துவிடலாம். கடல் நீர் வரவில்லை என்றால் குடிக்கின்றவர்களுக்கு அந்தத் தண்ணீரைக் கொண்டுவரலாம்; மூன்று ஆறுகளும் அங்கே பாய்கின்ற காரணத்தினாலே நிறைய தண்ணீர் இருக்கிறது என்று நான் சொல்கிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த பழவேற்காட்டிலிருந்து தண்ணீர் கொண்டுவருவது பற்றி மாண்புமிகு உறுப்பினர் நேரிலும் பேசினார்கள். மிக அக்கறையோடு பேசினார்கள்; பல அறிக்கைகளும் விட்டிருக்கிறார்கள். அதன் காரணமாக அங்கிருந்து தண்ணீர் கொண்டுவருவதற்கு சாத்தியக்கூறு இல்லை என்று தெரிவித்துள்ள நிபுணர்கள் அறிக்கையை அவர்களுக்குக் காட்டினேன். அவர்களும் படித்துப் பார்த்தார்கள். ஆனால் மீண்டும் இப்போது அவர்கள் கருத்தை வலியுறுத்திச் சொல்கிறார்கள். நிபுணர்கள் அறிக்கையைப் பார்த்த பின்னாலும் பழவேற்காட்டிலிருந்து சென்னைக்குத் தண்ணீர் கொண்டுவர முடியும் என்று சொல்கிறார்கள் என்றால், அதற்கான சாத்தியக் கூறு இருக்கிறது என்று சொன்னால், அதை அரசுக்குத் தெரிவித்தால் அதைப் பற்றியும் இந்த அரசு பரிசீலிக்கும்.

(முற்பகல் 11-30)

திரு. குமரி அனந்தன் : நான் மெத்த மகிழ்ச்சியோடு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கருணை கூர்ந்து என்னோடு சில செய்திகளைப் பகிர்ந்துக் கொண்டதற்கும் நான் மீண்டும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனாலும் கூட, என்னிடம் தொடர்பு கொண்டிருக்கிற அறிஞர்களிடம் கேட்டு, தொழில் வல்லுநர்களைக் கேட்டு, நான் அதை மீண்டும் இந்த மாபெரும் அவையிலே வைத்தால், அது மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வரும், பரிசீலனைக்கு வரும் என்றுதான் சொன்னேன். அவர்களும் அதை ஏற்றுக் கொண்டதற்கு நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

அப்படி அதிலே ஒரு சுவர் எழுப்புவதாக இருந்து, அந்த சுவர் வழியாக தண்ணீர் கசிந்து, உப்பு நீராகவே இருக்கின்ற நிலை தொடர்ந்து இருக்குமானால் என்ன செய்வது என்று கேட்டால்—இது கூட அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட கருத்துக்களிலே சொல்லப்பட்டிருக்கிறது— அந்த உப்புக் கலந்த தண்ணீரை

மாற்றுவதற்கு வழிகள் பல இருக்கின்றன என்று உலக விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். அந்தத் துறையிலே கற்று குறை போக்கிய வித்தகர்கள் சொல்லுகிறார்கள். ஏனென்று சொன்னால் அந்தத் தண்ணீரை ஒரு நாளைக்கு இரண்டு தடவைகள், பிளஷ்—அவுட் என்கிற முறையில் வெளியேற்றி விட்டோம் என்று சொன்னால், அதை அங்கேயிருந்து அப்புறப்படுத்திவிட்டோம் என்று சொன்னால், இரண்டு பருவ மழைகள் பெய்தால், அந்த உப்பு நீர் கொஞ்சம் கொஞ்சமாக வெளியேறி விடும் என்று சொல்கிறார்கள். அப்படியே அந்த உப்புநீர் முழுமையாக வெளியேறவில்லை என்றாலும் கூட, உப்புத் தன்மை முற்றிலும் போகவில்லை என்றாலும் கூட, இப்போது பேராசிரியர் இந்திரேசன் அவர்கள் சொல்கிறார்களே, கடல்நீரை கொண்டு வாருங்கள் குழாய் வழியாக என்று, அதற்குப் பதிலாக அந்த உப்புத் தன்மை ஓரளவுக்கு குறைக்கப்பட்ட அந்தத் தண்ணீரை எடுத்துக்கொண்டு வந்தால், குடிப்பதற்கு இல்லை என்றலும், குளிப்பதற்கு, துவைப்பதற்கு, கழிவறைகளுக்குப் பயன்படுத்துவதற்கு என்று வைத்துக் கொள்ளலாம்.

ஏனென்று சொன்னால் இன்று நமக்கு கிடைத்துக் கொண்டிருக்கும் தண்ணீரைப் பற்றிய ஒரு சிறு கணக்கு ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். டெல்லியிலே வாழ்ந்துக் கொண்டிருக்கிற மக்களுக்கு ஒரு நபருக்கு 218 லிட்டர் தண்ணீர் கிடைக்கிறது. கல்கத்தாவிலே வாழ்ந்து கொண்டிருக்கிறவர்களுக்கு 210 லிட்டர் தண்ணீர் கிடைக்கிறது. பம்பாயிலே வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு 125 லிட்டர் தண்ணீர் கிடைக்கிறது. பெங்களூரிலே வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு 122 லிட்டர் தண்ணீர் கிடைக்கிறது. நாம் 70 லிட்டர் என்று கொடுக்க ஆரம்பித்து, இப்போது 40 லிட்டரும் அதற்குக் குறைவாகவும் சாதாரணமான காலங்களிலேயே கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதிலே 4 முதல் 5 லிட்டர்தான் குடிப்பதற்கும், சமைப்பதற்கும் பயன்படுகிறது. மீதி எல்லாம் குளிப்பதற்கு, தோட்டத்திற்கு, துவைப்பதற்கு, கழிவறைகளுக்குப் போய்க் கொண்டிருக்கிறது. எனவே, அந்தத் தண்ணீர் முற்றிலும் குடிப்பதற்கு பயன்படுத்தப்படவில்லை என்று சொன்னாலும், இப்படிப்பட்ட காரியங்களுக்கு பயன்படுத்தலாம் என்பதைத்தான் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வைக்க விரும்புகிறேன்.

நமது அன்பிற்குரிய மாண்புமிகு சபாநாயகர் அவர்களுடைய அனுமதியோடு, இன்னும் ஒரு செய்தியையும் நான் சொல்ல விரும்புகிறேன். இங்கே கவர்னர் அவர்களுடைய உரையிலேயிருந்து ஒரு பகுதியை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். என்ன என்று கேட்டால் ''நாடு விடுதலை அடைந்து பல பத்தாண்டுகள் ஆன பின்னர் இப்போது தான், இத்திட்டத்தின் காரணமாக, ஏழை இளஞ்சிறார்கள் ஒரு நாளைக்கு ஒரு



வேளையாகிலும் நல்ல சத்துள்ள உணவை உட்கொள்ள முடிகிறது'' என்று ஆளுநர் உரையில் இருக்கிறது. சுதந்திரம் பெற்று, அதாவது நாடு விடுதலை அடைந்து பல பத்தாண்டுகள் ஆன பின்னாலும், இப்போதுதான் — இதற்கு முன்னால் எப்போதும் இல்லாமல் — இப்போதுதான் சத்துணவு திட்டம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் புதியதாக கொண்டு வரப்பட்டதாக சொல்கிறார்கள், ஆளுநர் உரையிலே — ஆளுநர் நமக்கு செய்தியாக தந்திருக்கிறார்கள்.

நாடு விடுதலை பெற்று ஒரு பத்தாண்டுகளுக்குள்ளாகவே தமிழகம் எங்கும் இருக்கிற ஏழை எளிய மாணவர்களுக்கெல்லாம் மதிய உணவை வழங்கியது பெரும் தலைவர் காமராசர் என்பது உலகறிந்த உண்மை. இந்த ஆளுநர் அவர்களுக்கும் அது தெரிந்திருக்கும் என்றுதான் நாம் நினைத்திருந்தோம். ஆனால் சரித்திரத்தையே மாற்றுவது போல நான் மேலே குறிப்பிட்ட வாசகங்கள் ஆளுநர் அவர்களுடைய உரையிலே இருக்கிறது.

சான்றாக வேண்டுமானால் நான் உங்களுக்குச் சொல்கிறேன். தமிழ்நாடு அரசாங்கத்தினுடைய பாடநூல் நிறுவனம் வெளியிட்ட 3-வது வகுப்பு தமிழ் பாடநூலில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பதை — நமது மதிப்பிற்குரிய ஆளுநர் உரை அரசாங்கத்தின் உரை என்ற காரணத்திற்காகவும், இதுவும் அரசாங்கத்தினுடைய வெளியீடு என்ற காரணத்திற்காகவும் — 3-வது வகுப்பு பாடநூலை நான் படிக்கிறேன் — சபாநாயகர் அவர்கள் அனுமதிக்க வேண்டுகிறேன். தலைப்பு 'காமராசர்' என்பது. "காமராசருடைய ஆட்சிக் காலம் சிறந்தது என்று போற்றப்படுகிறது. அவர் காலத்தில் ஆயிரக்கணக்கில் பள்ளிகளை நிறுவினார்கள். ஏழை மாணவர்களின் பசியை ஆற்ற — கவனிக்க வேண்டும் — ஏழை மாணவர்களின் பசியை ஆற்ற நண்பகல் மதிய உணவு திட்டத்தை உருவாக்கினார் — கவனிக்க வேண்டும் — மதிய உணவு திட்டத்தை உருவாக்கினார். சீருடை திட்டத்தைக் கொண்டு வந்து மாணவர்களிடையே வேறுபாட்டு உணர்வை நீக்கினார்'' என்ற செய்தி இருக்கிறது.

மதிய உணவுத் திட்டத்தை உருவாக்கினார்கள். சீருடைத் திட்டத்தைக் கொண்டு வந்து மாணவர்களிடையே வேறுபாட்டு உணர்வை நீக்கினார் என்ற செய்தி இருக்கின்றது. ஆக மதிய உணவுத் திட்டத்தை உருவாக்கினார் காமராஜர் என்று தமிழ்நாடு அரசாங்கமே தமது பாட நூல் நிறுவனத்தின் மூலம் மூன்றாவது வகுப்பு மாணவர்களுக்குரிய புத்தகத்திலே பதிக்கின்ற நேரத்திலே பல பத்தாண்டுகளுக்குப் பின்னால் இப்போதுதான் ஏழைச் சிறுவர்களுக்கு உணவு கொடுக்கப்படுகின்றது என்ற தகவல் தவறான தகவலைத் தருகின்றது என்பதோடு மட்டுமல்லாமல் சரித்திரத்தையே புரட்டிப் போடுகின்ற ஒன்றாக இருக்கின்றது. பெருந்தலைவரின் புகழுக்கு இழுக்கு தேடுகின்ற வகையிலே இந்த வரிகள் இருக்கின்றது.

அடுத்து இரண்டாவது செய்தியாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு நல்ல திட்டத்தை அரசாங்கம் அறிவித்தது. அந்தத் திட்டத்தின்படி விசைப்படகு என்று சொல்கின்ற இயந்திரம் பொருத்தப்பட்ட படகுகளைப் பயன்படுத்தக் கூடியவர்கள் ஆழ்கடலிலே சென்றுதான் மீன் பிடிக்க வேண்டும். காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை உள்ள இடை நேரத்திலே அவர்கள் கரையிலே வந்து மீன் பிடிக்கக் கூடாது என்று அறிவிக்கப்பட்டது......

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக்குப் போகின்ற குழந்தைகளுக்கு மதிய உணவு கொடுக்கின்ற திட்டம் முன்பு இருந்தது. ஆனால் பள்ளிக்குப் போகாத குழந்தைகளுக்கும், ஏழைக் குழந்தைகளுக்குப் மதிய உணவு கொடுக்கின்ற திட்டத்தைக் கொண்டு வந்தவர் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : தலைவரவர்களே, பெருந்தலைவர் காமராஜர் கொண்டு வந்த திட்டத்தினுடைய விரிவாக்கம்தான் இது என்று முதலமைச்சர் அவர்கள் தொடக்க காலத்திலே சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, பள்ளியிலே படிக்கின்ற குழந்தைகளின் வயதையும், எண்ணிக்கையினையும் கணக்கில் எடுத்துக் கொண்டு அதனை விரிவாக்கி இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படவில்லை. இது ஒரு புதுத் திட்டம் முன்பு பள்ளிக்குப் போன குழந்தைகளுக்கு அதாவது ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவுத் திட்டம் என்பது இருந்தது. ஆனால் பள்ளிக்குப் போகின்ற வாய்ப்பே இல்லாமல் இருக்கின்ற இலட்சக்கணக்கான குழந்தைகளுக்கு ஏழ்மையிலே வாழ்கின்ற குழந்தைகளுக்கு உணவிட்டு அவர்களைக் காப்பாற்றவேண்டும் என்றும் ஏழைத் தாய்மார்களுக்கு அவ்வாறு உதவவேண்டும் என்ற வகையில் தாய் உள்ளத்தோடு இந்தத் திட்டத்தை தன் முதலாக புரட்சித் தலைவர் அவர்கள்தான் கொண்டு வந்தார் என்பதை மாண்புமிகு உறுப்பினர் ஒத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. ப. நெடுமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அளித்த விளக்கத்திற்கு .... (குறுக்கீடு) ...... ஆனால் தேவையில்லாமல் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் கொண்டு வந்த திட்டமல்ல இது என்பதை நீங்கள் திரும்பத் திரும்ப வலியுறுத்தி அதையே மேடைகளிலும், மன்றங்களிலும் சொல்வதுதான் எங்களைப் போன்றவர்களுக்கு மன வருத்தத்தைத் தருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பள்ளியிலே உள்ள



குழந்தைகளுக்கு இலவசமாக உணவு அளிக்கின்ற திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஆனால் நீங்கள் அதை விரிவு படுத்தி எல்லோருக்கும் கொடுத்திருக்கிறோம் என்று சொல்வதுதான் உங்களுக்கு பெருமையே தவிர அவர்களின் பெருமையைக் குறைக்கின்ற வகையிலே நீங்கள் பேசுவது உங்களுக்குப் பெருமையல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமரி அனந்தன் அவர்களே பதில் சொல்வார்கள்.

திரு. குமரி அனந்தன் : தலைவரவர்களே, அவர்கள் கூறுவது....

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு மதிப்பிற்குரிய நெடுமாறன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். நான் திரும்பவும் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். காமராஜர் கொண்டுவந்த திட்டமல்ல என்று நாங்கள் சொல்லவில்லை. அதற்கும் இதற்கும் வேறுபாடு இருக்கின்றது என்பதைத்தான் சொல்லி இருக்கிறோம். அதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்று கருதுகிறோம். எனவே யாரையும் இழிவுபடுத்தவேண்டும் என்ற நோக்கமும் இல்லை, காமராஜருடைய நோக்கத்தை நாங்கள் குறைத்து மதிப்பிடவும் இல்லை என்பதை மீண்டும் நான் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் ஒரு தகவலைச் சொன்னார்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு ரகுமான்கான் இப்போது குறுக்கிடத் தேவையில்லை.

திரு. குமரி அனந்தன் : தலைவரவர்களே, அருமைக்குரிய தொழில் துறை அமைச்சர் அவர்களும் நமது முதலமைச்சர் அவர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள் ......

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, தொழில் துறை அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அது குறித்து....

(முற்பகல் 11-40.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொழில்துறை அமைச்சர் என்ன சொல்லியிருக்கிறார்கள்? அதில் மேல் என்ன விளக்கம்? அவர் தகவல்தான் சொன்னார்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் அவர்கள் சொன்னது சம்பந்தமாக ஒரு கிளாரிபிகேஷன். அமைச்சர் அவர்கள் ஒரு தவறான தகவலை கொடுத்திருக்கிறார்கள்.... (கூச்சல்—குழப்பம்)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அவையிலே பேசிக்கொண்டிருப்பவர் மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் அவர்கள். அவர்கள் பேசுகின்ற பேச்சில் ஐயப்பாடோ, மற்றவைகளோ ஏற்படுமானால் அதற்கு வேறு ஒரு உறுப்பினர் குறுக்கிட இடம் உண்டு. அதற்கு அவர்களுக்கு இடம் அளிக்க இடம் உண்டு. மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தனை பொறுத்துத்தான் விவாதங்கள் வரவேண்டுமே தவிர அவரைவிட்டு விலகி ஒருவருக்கொருவர் பதில் சொல்கின்ற அளவுக்கு விவாதம் போகக்கூடாது.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்துறை அமைச்சர் அவர்கள் தவறான தகவலைக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக நாங்கள் பேசுகிறோம்.... (கூச்சல்—குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப்பற்றி பேராசிரியர் அவர்கள் பேசுகிறபோது பேசச் சொல்லுங்கள். அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்ல கடமைப்பட்டிருக்கிறார்கள். அதனால் விளக்கம் அளித்திருக்கிறார்கள்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்களை மட்டும் பேச அனுமதித்தீர்கள். தொழிற்துறை அமைச்சர் அவர்கள் தவறான தகவலைக் கொடுத்திருக்கிறார்கள். அது அவைக்குறிப்பில் ஏறக்கூடாது, அதைத்தான் சொல்கிறேன். நாங்கள் சொல்வதை நீங்கள் ஏற்றுக்கொள்வது என்றால் ஏற்றுக் கொள்ளுங்கள். இல்லை என்றால் விட்டுவிடுங்கள்...... (கூச்சல் - குழப்பம்) பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஒரு தவறான தகவலைக் கொடுத்திருக்கிறார்கள்.... (கூச்சல்- குழப்பம்) மாண்புமிகு மன்றத்தின் தலைவர் அவர்களே காமராஜ் அவர்கள் கொண்டுவந்த திட்டம் என்று சொல்கிற போது அதை மறுத்து முதல்வர் அவர்கள் கொண்டு வந்த திட்டம்தான் என்றும், பள்ளிக்கூடம் போகாத பிள்ளைகளுக்கும் கூட நாங்கள் சோறு போடுகிறோம் என்றும், அதுதான் வித்தியாசம் என்றும் நம்முடைய மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் ஒன்றை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஏற்கனவே குழந்தைகள் காப்பகங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்தக் குமங்கைகள் காப்பகங்களில் இதுபோன்ற ஏற்பாடு உண்டு.



காமராஜ் அவர்கள் மட்டும் அல்ல தியாகராஜ செட்டியார் அவர்கள் கொண்டு வந்தார்கள், வெள்ளை காரன் கொண்டு வந்தான், பாரதியார் அவர்கள் கொண்டு வந்தார்கள் என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டு ** ** என்ற தவறான தகவல் இருக்கக்கூடாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

(கூச்சல்—குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள். இந்த விளக்கம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும்.

திரு அ. ரகுமான்கான் : எதை நீக்குகிறீர்கள் என்பதை தெளிவாகச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தெளிவாகச் சொல்கிறேன், அவை குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. துரைமுருகன் : இதில் என்ன தப்பு இருக்கிறது. எதற்கு நீக்குகிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு செய்தியைச் சொல்லும் போது அந்தச் செய்தியைச் சொல்லலாமே தவிர அதற்கு ஒரு இன்ஸினுவேஷன் சேர்த்துச் சொல்லக்கூடாது.

திரு. துரைமுருகன் : இன்ஸினுவேஷன் இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் சொன்னதை இங்கே திருப்பிச் சொன்னார். அதிலே என்ன தப்பு?

திரு. குமரி அனந்தன் : இங்கே தொழில் துறை அமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும் தங்களுடைய கருத்துக் களை எடுத்துச் சொன்னார்கள். பாலவாடிகள் என்று பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் காலத்திலே வைக்கப் பட்டன, அவைகள் மூலமாக சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு உணவு கொடுக்கப்பட்டது என்பது எல்லோருக்கும் நினைவில் வரும்.... (கூச்சல்-குழப்பம்)

திரு. துரை முருகன் : எதற்காக நீக்குகிறீர்கள்? அதைச் சொல்லவேண்டும். சார், யு ஆர் கிரியேட்டிங் பேட் ப்ரீஸிடெண்ட்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : I am not creating a bad p ecec ent நீக்கப்பட வேண்டியதை நீக்குகிறேன்.

** மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

திரு. துரை முருகன் : எதிர்க்கட்சிகள் கருத்துக்களைச் சொல்வோம். அதிலே தப்பு இருந்தால், அன்பார்லிமெண்டரி யாக பேசியிருந்தால் அதை வேண்டுமானால் நீக்கலாம், தாங்கள் எதை வேண்டுமானாலும் நீக்கமுடியாது, விதிகளைக் கொண்டு வாருங்கள், நாங்கள் அன்பார்லிமெண்டரியாக, இழிவுபடுத்துகின்ற மாதிரி பேசியிருந்தால் நீக்குங்கள். ஒரு கருத்தைச் சொல்வதற்கு எங்களுக்கு உரிமை இருக்கிறது. என்ன தப்பு என்று சொல்லுங்கள், நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன தப்பு என்று நான் சொல்கிறேன், அமருங்கள். ஒரு கருத்தை முதல்வர் அவர்கள் சொன்னார்கள். ** ** ** (கூச்சல்-குழப்பம்) விவாதத்திலே சில மரபுகள் உண்டு. அவையில் தினமும் ஒரு குறளை நான் படித்துக் கொண்டிருக்கிறேன். சபையை நடத்திக்கொண்டு போவதில் ஒரு கட்டுத்திட்டம் வேண்டும். ஒரு வரைமுறை வேண்டும். முதல்வர் சொன்னார் என்று சொல்லி நிறுத்தியிருந்தால் நான் ஆட்சேபணை சொல்லியிருக்க மாட்டேன். ஒரு இன்ஸினுவேஷனைச் சேர்த்துச் சொன்னதால் தான் நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தங்கள் கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். ** ** என்ற வார்த்தையை நீக்கிவிட வேண்டும். மற்றக் கருத்துக்களைப் பேசியிருக்கிறார்கள். அந்த ஒரு வார்த்தையை மட்டும் நீக்கிவிட்டால் போதுமானது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேராசிரியருக்கு நான் ஒன்று சொல்கிறேன். ஒரு கருத்தை சுவையாகவும் சொல்லலாம், அதே கருத்தை வேகமாகவும் சொல்லவும் அதே கருத்தை கேவலமாக தொனிக்கிறமாதிரியும் சொல்லலாம். மொழி தெரிந்தவர்களுக்கு இது நன்றாகத் தெரியும்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, கேவலப் படுத்துவது நோக்கமல்ல, தங்கள் பக்கம் வாதத்தை நிலை நிறுத்துவதற்காக அப்படிப் பேசிவிட்டார்கள். ** மிச்சப்பகுதியை வைத்துக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பகுதியை மட்டும் நீக்குமாறு ஆணையிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



திரு. குமரி அனந்தன் : பள்ளியே பார்க்காத பிஞ்சு நெஞ்சங்களுக்கு கூட பாலவாடி என்ற பெயரிலே குழந்தைகள் காப்பகங்களிலே.....

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : பெருந்தலைவர் காமராஜ் கொண்டுவந்த பாலவாடியிலே 3 வயதிலிருந்துதான் குழந்தைகளை எடுத்திருக்கிறார்கள். ஆனால் நம்முடைய புரட்சித் தலைவர் சத்துணவுத் திட்டத்தின் அடிப்படையிலே 2 வயதிலிருந்து குழந்தைகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு குமரி அனந்தன் : 3 வயதிலிருந்து குழந்தைகளை எடுத்ததற்கு பதிலாக இப்போது 2 வயதிலிருந்து இந்த அரசு எடுத்திருக்கிறது என்றால் அது அதன் விரிவாக்கம்தான். அதைத் தான் முதலமைச்சர் அவர்களும் ஏற்கெனவே சொன்னார்கள். அதையே தொடர்ந்து சொல்லாமல் திடீரென்று மாறுபட்ட கருத்தைச் சொலவதால் இப்போது நாங்கள் இதை வலியுறுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-50)

பெருந்தலைவர் காமராஜ் அவர்களுக்கும் இதற்கும் சம்பந்தம் உண்டா என்பதற்கல்ல. இன்று கூட இந்தத் திட்டத்தை இந்தியாவிலே காமராஜ் என்ற ஒரு மனிதன் தான் தமிழ்நாடு முழுவதற்கும் விரிவுபடுத்தினார். வேறு யாரும் இல்லை என்பதை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். மூல விதையை போட்டவர் அவர். அந்த விதையிலிருந்து சில கிளைகளை சேர்த்து நீங்கள் செம்மைப்படுத்தி இருக்கலாம். நான் பாராட்டுகிறேன். அதனை நான் சொல்லவில்லை. மாண்புமிகு நெடுமாறன் அவர்களும், நானும் இங்கே சுட்டிக்காட்ட விரும்பியது எல்லாம் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் இதனை கொண்டு வந்தார் என்று சொல்கிற சொல்லுக்குத்தான் எங்களுடைய நெஞ்சிலேயிருந்து கிளம்புகிற உணர்வுகளை வெளிப்படுத்தினோமே தவிர வேறு உங்களுடைய திட்டத்தையோ, உங்களுடைய உணர்வுகளையோ பாதிக்கவேண்டும் என்ற நோக்கம் அல்ல. எனவே தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், தொழில் துறை அமைச்சர் அவர்களும் சொல்கிற நேரத்திலே நாங்கள் அமைதியாக கேட்டுக் கொண்டிருக்கிறபோது இந்த தகவலைச் சொல்கிற இந்தத் துறை சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் கூட சொல்கிறார், அவர் 3 வயதிலிருந்து எடுத்தார், நாங்கள் 2 வயதிலிருந்து எடுத்தோம்; ஆக அது முன்னே பின்னே விரிவாக்கம் தானே. மேலே போவது மட்டும் தான் விரிவாக்கம் அல்ல. இந்த பக்கம் போவதும் விரிவாக்கம்தான் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உணர்வார்கள். தொழிற்துறை அமைச்சர் அவர்கள் குறுக்கிடுவதற்கு முன்பு பேசிக்கொண்டிருந்த செய்தி மீனவர்களைப் பற்றி.

கடலோரம், ஆழ்கடலில் சென்று மீன் பிடிக்கவேண்டுமென்று இயந்திரங்கள் கொண்ட படகுகளை வைத்து மீன் பிடிக்கின்றவர்கள் கரை ஓரம் வரக்கூடாது என்றும் அப்படி கரை ஓரம் மீன் பிடிப்பவர்கள் எல்லாம் கட்டுமரத்தை சேர்ந்தவர்கள் தான் என்றும் நமது மாண்புமிக்க தமிழக அரசு ஒரு ஆணை பிறப்பித்து இருப்பதை கடலோரம் வாழ்ந்து கொண்டிருக்கிற மக்கள் எல்லாம் களிப்பேறு உவகையோடு வரவேற்கிறார்கள். ஆகவே நானும் பாராட்டுகிறேன் காந்தி—காமராஜ் காங்கிரஸ் கட்சியின் சார்பில். ஆனால் அதிலே ஒரு செய்தியை விடுக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கம். கடலோரம் இப்போது மீன் பிடிப்பதிலே கட்டுமரக்காரர்கள் மட்டும் பயன்படுத்த வேண்டிய அந்த மூன்று மைல் தூரத்தில் சிறு சிறு படகுகளில் இயந்திரத்தை பொருத்திக்கொண்டு அந்த பெரிய படகுகள் நீளத்தில் குறைவாக இருக்கிறது என்ற காரணத்தால் விதிவிலக்கை வைத்துக்கொண்டு மீன் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் கட்டுமரத்தில் மீன்பிடிப்பவர்களின் வலைகள் பாதிக்கப்படுகின்றன. அவர்களுக்கு கிடைக்கிற மீனின் அளவும் குறைந்து கொண்டிருக்கிறது என்ற காரணத்தாலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அந்தத் துறைக்கு பொறுப்பான மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் இதனை நீக்கவேண்டும் என்று அவர்களின் பார்வைக்கு வைக்க விரும்புகிறேன்.

இப்போது அரசாங்கம் போட்டிருக்கிற பல திட்டங்களில் ஏராளமான பணத்தை நன்மைக்கு மக்கள் நலனுக்காக செலவிட வேண்டும் என்பது. குடிசைக்கு போய் சேரவேண்டும் என்று சொல்கிறீர்கள். அந்தப் பணம் எல்லாம் சரியான வகையிலே செலவிடப்படுகிறதா? என்றால் இல்லை. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். 7,500 குழாய்க் கிணறுகள் போடப்பட்டிருக்கின்றன. இதற்கு மொத்த பணம் செலவிடப்பட்டிருப்பது ரூ 17 கோடியே 50 லட்சம்; இந்த 17 கோடியே 50 லட்சத்தில் 7,500 குழாய் கிணறுகள் போடப்பட்டுள்ளது என்றால் ஒரு கிணறுக்கு ரூ. 23,333 வருகிறது. ஒரு கிணறுக்கு இவ்வளவு செலவாகுமா? மற்றவர்களை கேட்டால் சொல்கிறார்கள்; இதிலே பாதி செலவிலே முடித்திருக்கலாம் என்று சொல்கிறார்கள். இவ்வளவு தூரத்திற்கு பணம் செலவாகிறது என்பதை கணக்கிலே எடுத்துக்கொள்ள வேண்டும். அரசாங்கத்தின் நோக்கம் மக்களுக்கு செல்லவேண்டும் பணம் என்பது. ஆனால் செல்வம் எங்கோ போய் குவிகிறது என்ற ஐயம் மக்கள் மத்தியிலே வரக்கூடாது என்பதற்கு, வந்தால் அதை தீர்த்து வைக்க வேண்டிய கடமை அரசாங்கத்திற்குதான் என்பதற்கு இதனை உங்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போலத்தான் தானியப் பொருள்கள் இருக்கிறது. அதனுடைய பல்வேறு கொள்கைகளினால் இன்று விலைவாசி கடுமையாக ஏறி, இன்று வருகிறபோது மதுரையிலே பார்த்தேன் 8 ரூபாய் படி அரிசி விற்றுக் கொண்டிருக்கிற நிலையை





நேற்று மட்டும் கொஞ்சம் குறைந்திருக்கிறது என்ற ஒரு நிலைமை வந்திருக்கிறது. தொடர்ந்து குறையுமா? குறைந்த காரணத்தாலே மக்களுடைய வயிறு நிறையுமா? என்பதை எல்லாம் பார்க்க வேண்டிய பொறுப்பு அரசை சார்ந்தது என்று சொல்லி, தமிழகத்தில் மக்களுடைய அடிப்படைத் தேவைகளை கூட பூர்த்தி செய்ய முடியாமல் சீர்கெட்டிருக்கிறது நிலைமை என்று நாம் எல்லாம் வருத்தத்தோடு இருந்து விடாமல், எந்த வித கோளாறுகள் ஏற்பட்டிருக்கிறதோ அவற்றை திருத்துவதற்கு ஈடுபட வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக் கொண்டு இவ்வளவு நிலைமையையும் கூறி, இந்த விவாதத்தை சுவையாக ஆக்கிய அத்தனை பேருக்கும், குறிப்பாக மாணபுமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவனந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழாய்க் கிணறு போடுவது என்பது இந்தக் குழாய்களுக்கு மட்டுமான செலவு அல்ல. அங்கிருந்து தண்ணீர் கொண்டு போவதற்கு வேண்டிய கல்வேயர் லைன், ஓவர்ஹெட் டாங்க், இப்பேர்ப்பட்டவைகளையும் சேர்த்து அதைக் கொண்டு போய் அங்கங்கே பகிர்மானக் குழாய்களையும் போடுவதற்கு வேண்டிய செலவையும் சேர்த்துதான் இருக்கவேண்டும். நீங்கள் சொல்வது ஒரு குழாய்க் கிணறு போடுவதற்கே, ரூ. 25,000 அளவிலே இல்லையென்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. குமரிஅனந்தன்: இந்தத் துறையிலே எனக்கு சரியான தகவல்களைத் தந்து கொண்டிருக்கிற எங்கள் கட்சி சட்டமன்ற உறுப்பினர் மாணபுமிகு நவநீதகிருஷ்ண பாண்டியன் அவர்கள் ஏற்கனவே பஞ்சாயத்து நிர்வாகத்தைக் கவனித்தவர். ஆதலாலே சொல்கிறார், இல்லை, இது குழாய்க் கிணறுகளைப் போடுவதற்காக மட்டுமே ஆன செலவு என்று சொல்கிறார். தயவுசெய்து அதிகாரிகளைக் கேளுங்கள்.

*திரு. என். சங்கரய்யா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையின்மீது இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சார்பில் சில கருத்துக்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன். முதலாவதாக, ஆளுநர் அவர்களுடைய உரையிலே பாரதி நூற்றாண்டு விழாவைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அதைப் பொறுத்தவரை நான் சில பிரச்னைகளை முன்வைக்க விரும்புகிறேன். இந்த நூற்றாண்டு விழாவிற்காக ஆரம்பத்திலே, மாநில அரசாங்கம் பல்வேறு கட்சிகளையும், இலக்கியத் துறைகளிலே உள்ள பிரதிநிதிகளையும் அழைத்து, அமைத்த குழுவினுடைய கூட்டத்திலே சில முக்கியமான முடிவுகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கே தெரியப்படுத்தினார்கள். அதிலே ஒன்று, பாரதியினுடைய நூல்கள் முழுவதும்—அவருடைய கவிதைகளும் உரைநடை நூல்களும் மக்கள் அனைவருக்கும் கிடைப்பதற்காக மலிவுப் பதிப்பாக வெளியிடப்படும் என்று அந்தக் கூட்டத்திலே முடிவு

செய்யப்பட்டது. ஆயினும் பாரதியார் நூற்றாண்டு விழா முடிந்தும் கூட இன்னும் அவருடைய எழுத்துக்களைக் கொண்ட நூல்கள் மலிவுப் பதிப்பிலே வெளியிடப்படவில்லை. அதைப் பற்றி அரசாங்கம் என்ன செய்து கொண்டிருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

அதே போல, அந்தக் கூட்டத்திலே மதுரை இசைப் பேரறிஞர் டாக்டர் சோமு உட்பட மற்றும் பல கலைஞர்கள் பாரதியினுடைய பாடல்களை, பாரதியார் எந்த முறையிலே பாட வேண்டுமென்று விரும்பினாரோ, அந்த வகையிலே, நாங்கள் புதிய வர்ண மெட்டுகளை அமைத்து பல பாடல்களைக் கொண்ட நீண்ட இசைத் தட்டுக்களை உருவாக்கலாம் என்ற யோசனையையும் முன் வைத்தார்கள். அதையும் அன்றைக்கு அரசு ஏற்றுக்கொண்டது. மக்கள் மத்தியிலே தேச பக்தியையும் ஜாதிமத வித்தியாசங்களையும் புறக்கணித்து ஒரு சமுதாய ஒற்றுமையை வற்புறுத்தக்கூடிய ஜனநாயக முற்போக்கான பாடல்கள் பாரதியாருடைய பாடல்கள். அப்படிப்பட்ட இசைத் தட்டுக்களைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

அதே போல மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே அங்கு கூறினார்கள், பாரதியாருடைய வாழ்க்கையை சித்தரிக்கக்கூடிய வகையிலே ஒரு திரைப்படம் தயாரிக்கப்பட்டு தமிழ்நாட்டு அரசாங்கத்தாலே வெளியிடப்படும் என்று. ஆனால், இந்த நூற்றாண்டுவிழா முடிந்தபிறகும்கூட பாரதியாருடைய வாழ்க்கையைப் பற்றிய திரைப்படம் அரசாங்கத்தாலே கொண்டு வரப்படவில்லை. அதே போலத்தான் அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்த பல்வேறு நாடகத்துறை கலைஞர்கள், பாரதியினுடைய கருத்துக்களை மக்கள் மத்தியிலே வன்மையாகத் தெரிவிக்கும் வகையில், பல நாடகங்களை உருவாக்க வேண்டுமென்ற முடிவும் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், அதற்காக எந்த ஒரு நாடகப் போட்டியும் நடைபெறவில்லை.

இறுதியாக, அந்தத் துவக்க விழா மாபெரும் அளவிலே எட்டையபுரத்திலே நடைபெற்றபொழுது, அதனுடைய முடிவிலே மிகச் சிறிய அளவிலே வள்ளுவர் கோட்டத்திலே, நிறைவு விழா நடைபெற்றது மிக வருந்தத்தக்கது என்று நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். முதலிலே, அதைப்பற்றி ஆலோசனை செய்தபொழுது, அதனுடைய இறுதிவிழாவும் சென்னையிலே பிரம்மாண்டமான முறையிலே, இலட்சக்கணக்கான மக்களைத் திரட்டி, பல்வேறு அபிப்பிராயங்களை உடைய தலைவர்களை அதிலே பங்கெடுக்கச் செய்யக்கூடிய வகையில் அதற்கு ஒரு முத்தாய்ப்பு வைத்ததைப்போல் நடைபெறவேண்டுமென்ற முடிவு அறிவிக்கப்பட்டிருந்தும், அவ்வாறு நடைபெறாதது மிகமிக வேதனைக்குரியது என்று இந்த நேரத்திலே குறிப்பிட்டு காட்ட விரும்புகிறேன்.



அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் மூலமாக, அரசாங்கத்தின் சார்பாக, பாரதி மலர் மட்டும்தான் இதுவரை வெளி வந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, பாரதி இன்றைக்கும் தேவை. இந்த நாட்டுக்கு அவர் அளித்திருக்கக்கூடிய அறிவுரைகள். இன்றைக்கும் தமிழ் மக்களுக்கும், நாட்டு ஒற்றுமைக்கும், நாட்டுமக்களிடையே ஜனநாயக முற்போக்கு எண்ணங்களைப் பலப்படுத்தவும் தேவை என்பதை அரசாங்கம் கவனித்து ஆவன செய்யும் என்று நான் நம்புகிறேன்.

அடுத்தபடியாக, பல்வேறு பிரச்னைகளைப் பொறுத்த வரையிலும், சர்வகட்சிக் கூட்டங்களை நடத்துகின்ற இந்த அரசு தமிழகத்திலே வரலாறு காணாத வறட்சி நிலைமை இப்பொழுது ஏற்பட்டிருக்கிறபொழுது, மின்சார நெருக்கடி ஏற்பட்டிருக்கிறபொழுது, குடிதண்ணீருக்காகத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறபொழுது, அப்படிப்பட்ட ஒரு கூட்டத்தை ஏன் கூட்டவில்லையென்பதை நான் இங்கே கேட்க விரும்புகிறேன். மாநில அரசு எந்தப் பிரச்னையிலே எல்லாம், எப்பொழுதெல்லாம் அப்படிப்பட்ட சர்வகட்சிக் கூட்டத்தைக் கூட்டினார்களோ, அப்பொழுதெல்லாம் சர்வகட்சிகளும் பங்கெடுத்து தங்களுடைய ஆலோசனைகளை வழங்கியிருக்கின்றன.

(நண்பகல் 12-00)

ஆனால் தமிழகத்திலே உள்ள ஏறத்தாழ ஐந்து கோடி மக்களின் வாழ்க்கையை அடிப்படையிலேயே பாதிக்கின்ற இவ்வளவு கடும் வறட்சி ஏற்பட்டபொழுது ஏன் அப்படிப்பட்ட கூட்டத்தைக் கூட்டவில்லை? அவ்வாறு கூட்டி உண்மை நிலவரங்களை அரசியல் கட்சிகள் பிரதிநிதிகளிடத்திலே ஏன் சொல்லவில்லை? அவர்களுடைய ஆலோசனையின் பேரிலே போர்க்கால நடவடிக்கையைப் போல் இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை பெரிய குறையாக முன் வைக்க நான் விரும்புகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்களும் வறட்சி நிலைமையைப் பற்றியும், குடிநீர்ப் பற்றாக்குறையைப் பற்றியும் மின்சார நெருக்கடியைப் பற்றியும் ஏராளமான விவரங்களைப் பேசியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பதில் அளிக்கும்பொழுது இது சம்பந்தமாக உள்ள கடுமையான நிலைமையை உணர்ந்து இதற்கான நடவடிக்கைகளை அறிவிப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

இன்றையதினம் மிகப் பெரிய அம்சமாக நான் பார்க்க விரும்புவது உணவு நிலைமை பற்றியதாகும். திருச்செங்கோடு மார்க்கெட்டில் இரண்டு நாட்களுக்கு முன்னால் விசாரித்த பொழுது ஒரு கிலோ 5 ரூபாய்க்கு விற்றது. மதுரையிலேயும் ஏற்கெனவே ஒரு பெரிய அளவிற்குத் திடீரென்று பகிரங்க மார்க்கெட்டிலே விலை உயர்வால் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். வியாபாரிகள் பதுக்கி வைத்துக் கொண்டு செயற்கை

முறை பஞ்சத்தை உருவாக்கி இருக்கிறார்கள். சென்னையிலேயும் அரிசி விலை உயர்ந்திருக்கிறது. இதனால் மாநிலம் பூராவும் உள்ள ஹோட்டல்களிலே வாங்கிச் சாப்பிடும் மக்கள் பெரிய அவதிக்கு ஆளாகியிருக்கிறார்கள். தொடர்ந்து விலைவாசிகள் உயர்ந்துகொண்டே வருகின்றன. இன்றைய தினம் இதுதான் தமிழகத்தின் மிகப்பெரிய பிரச்னை என்று குறிப்பிடுவதற்கு எங்கள் கட்சி விரும்புகிறது.

ஒரு குவிண்டலுக்கு 150 ரூபாய் கொடுத்து தஞ்சை மாவட்டத்திலே மட்டுமல்லாமல் தமிழகம் முழுவதும் இருக்கின்ற விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்முதல் செய்து, ஏகபோகமாகக் கொள்முதல் செய்து, நியாய விலைக் கடைகளின் மூலமாக அரிசியையும், இதர தானியங்களையும் விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று வற்புறுத்த விரும்புகிறேன். அப்படிச் செய்யாவிட்டால் முன்பு 1965—66-ஆம் ஆண்டிலே தமிழகத்திலே அரிசியின் விலை பயங்கரமாக உயர்ந்து பல்வேறுவிதமான மக்கள் கிளர்ச்சிகள், போராட்டங்கள் ஏற்படும் அளவிற்கு நிலைமை மோசமாகி விடும் என்று மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக உண்மை நிலவரத்தை அரசாங்கத்திற்கும், இந்த மன்றத்திற்கும் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இவ்வாறு இதைக் கூறுகின்ற நேரத்தில் மாநில அரசாங்கத்திற்கு இருக்கின்ற வரம்புகளும் எங்களுக்குத் தெரியும். அவர்களுக்கு இருக்கும் பணமுடையும் தெரியும். ஆகவே, மாநில அரசாங்கத்தினுடைய வருமானத்திற்கும், அவர்களுடைய ஆற்றலுக்கும் உட்பட்டு என்னென்ன செய்ய முடியுமோ அவைகளைச் செய்து, கொள்முதல் செய்யவும், விநியோகம் செய்யவும் மாற்றுக் கொள்கை தேவை. மேலும் செய்ய வேண்டுமென்று சொன்னால் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய்களை வருமானமாகப் பெற்றுவரும் மத்திய அரசாங்கத்தினுடைய பண முதலீட்டின் அடிப்படையில்தான் செய்யமுடியும்.

இந்தியா முழுவதும் உணவுப் பொருள்களின் விலை தாறுமாறாக ஏறிவரும் நேரத்தில் இந்தியாவிலுள்ள உணவு தானியங்களின் மொத்த வியாபாரத்தையும் மத்திய அரசே ஏற்றுக் கொண்டு, அதற்காக ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை முதலீடு செய்து, மாநில அரசுகளின் உதவியோடு இந்தியாவிலுள்ள உணவு தானியங்களைக் கொள்முதல் செய்து, அதை மக்கள் மத்தியிலே நியாயமான விலையில் விநியோகம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டும். மக்களுக்கும் நியாயமான விலையில் அதை விநியோகம் செய்ய வேண்டும். இடையில் ஏற்படும் நஷ்டத்தை தவிர்க்க முடியாது. அதை ஈடு கட்டுவதற்கு இந்தியா முழுவதும் பல்வேறு வரிகளை வசூலிக்கும் மத்திய அரசுதான் சரிக்கட்டியாக வேண்டும்.

நேற்றைய தினம் ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் பேசும்பொழுது சோஷலிச நாடுகளில் குழந்தைகளுக்கு மட்டுமல்லாமல், மக்களுக்கும் குறைந்த விலையில் உணவு கொடுப்ப



தாகச் சொன்னார்கள். கடந்த 20, 25 ஆண்டுகளாக பிரதான சோஷலிச நாடுகளில் உணவுதானியப் பண்டங்களின் விலை சதிரமாக இருக்கிறது என்றால் விவசாயிகளின் தலையிலே அடித்து வாங்குவது என்பது அல்ல. வாஸ்தவத்தில் அறுவடை ஆவதற்கு நீண்ட நாட்களுக்கு முன்பே விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் விலை அறிவிக்கப்பட்டு அந்த விலையில் கொள்முதல் செய்யப்படுகிறது. ஆனால் மக்களுக்குக் குறைத்துக் கொடுக்கும்பொழுது ஏற்படும் நஷ்டம் பொதுத்துறை மூலம் அரசாங்கத்திற்குக் கிடைக்கும் வருமானத்திலிருந்து சரிக்கட்டப்படுகிறது. அந்த வழியைக் கையாள்வதைத் தவிர வேறு வழி இல்லை. ஆகவே, இந்தியாவிலேயும் அரசு அதைப்போலச் செய்யவேண்டும். இந்த மாற்றுப் பாதையைப்பற்றி அமைச்சர்களும், அனைத்துக் கட்சிகளும் மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவித்து, அதைப்போல் செய்ய வேண்டுமென்று மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சி விரும்புகிறது. இதைச் செய்யாவிட்டால் விலைவாசி உயர்வைத் தடுக்க முடியாது. இந்த மார்க்கத்திற்கான மாற்றுப் பாதையைப் பற்றிச் சில திட்டங்களை யோசித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். இந்த அளவிற்கு விலை உயர்ந்திருந்தாலும் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைப்பதில்லை. தமிழகத்திலே உள்ள இடைத்தரகர்கள் மலிவான விலைக்குக் கொள்முதல் செய்தும் மக்களுக்கு உயர்ந்த விலையில்தான் கிடைக்கிறது.

ஆகவே விவசாயிகளுக்கு நியாய விலை கிடைப்பதற்கும் மக்களுக்கு சீரான விநியோகம் கிடைப்பதற்கும் இது தேவை. உடனடியாக நாங்கள் வற்புறுத்த விரும்புகிறோம். உணவு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல அரிசி மட்டுமல்ல, வேறு விதமான உணவு தானியங்களையும் மத்திய சர்க்கார் தமிழகத்திற்கு உடனடியாக வழங்குவது அவர்களுடைய தீராத கடமை. இந்திய யூனியனுடைய ஒரு மாகாணம் என்ற அடிப்படையிலே அதைக் கோருவதற்கு தமிழகத்திறகுப் பரிபூரணமான உரிமை உண்டு. அதை அவர்கள் கட்டாயமாக நிறைவேற்றவேண்டும் என்றும் தமிழக சர்க்கார் மக்களைத் திரட்டி வற்புறுத்த வேண்டும் என்றும் நாங்கள் விரும்புகிறோம்.

அதேபோன்று கைத்தறிப் பிரச்சினை மிகவும் அபாயகரமான நிலையில் இருக்கின்றது. லட்சக்கணக்கான கைத்தறிகள் தமிழ்நாட்டிலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்த நூலின் விலை உயர்வால் அவர்கள் தொழில் நடத்த முடியவில்லை. இன்று உற்பத்தியாளர்களும்சரி, தொழிலாளர்களும் சரி, வேலையிழந்து தவிக்கிறார்கள். எனவே அவர்களுக்கு நூல கட்டுப்படியாகக் கூடிய ஒருவிலையிலே கொடுக்கவேண்டுமென்றால், இங்கே மத்திய சர்க்கார் குறுக்கிட்டு முடிவெடுக்கவேண்டியே இருக்கிறது. மில் விலையைக் கட்டுப்படுத்தியாக வேண்டும். ஆனால் மில்களிலே உள்ள பெருமுதலாளிகள் கூறுகிறார்கள், உற்பத்தியினுடைய அடக்கம் அதிகமாகிவிட்டதனால் விலையை உயர்த்துகிறோம் என்று. இல்லை. உண்மையிலேயே சொல்லப்போனால்

பருத்தியினுடைய விலை இந்தியா முழுவதும் வீழ்ந்துவிட்டது. பருத்திக்கு சென்ற ஆண்டு கிடைத்த விலை கூட இந்த ஆண்டு கிடைக்கவில்லை. அப்படி இருக்கும்போது பருத்தியினுடைய விலை 100 ரூபாய்க்கு மேலே இன்று குறைந்திருக்கக் கூடிய காலத்திலே இந்தியாவினுடைய பெருமுதலாளிகள் எவ்வாறு அந்த நூல் விலையை அதிகரிக்கிறார்கள். ஆகவே அவர்களைக் கட்டுப்படுத்த வேண்டும். அப்படிக் கட்டுப்படுத்தி லட்சக்கணக்கான கைத்தறியாளர்கள் வாழுகின்ற தமிழ் மாகாணத்திலே, அவர்களுக்கு இந்த நூலை கொடுப்பதற்கு மத்திய சர்க்காருடைய கொள்கையிலே ஒரு மாற்றம் தேவை என்பதற்கு மாநில சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டும். மாநில சர்க்காருடைய பொறுப்பிலே இருக்கின்ற கூட்டுறவு நூற்பாலைகள் மூலமாக கிடைக்கின்ற நூல்களை இந்த கைத்தறியாளர்களுக்குப் பிரதானமாக விநியோகிக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே வற்புறுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு ரெவின்யு அமைச்சர் இங்கே ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது குறிப்பிட்டார்கள். 2.49 கோடி மக்கள் தமிழகத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறார்கள், அதிலே 57.48 சதவிகிதம் மக்கள் கிராமப்புறங்களிலே வாழ்கிறார்கள் என்று குறிப்பிட்டார். அந்த அறிவிப்பை நாம் பார்க்கும்போது இன்றைக்கு என்ன தோன்றுகிறது என்றால், இதைத் தீர்ப்பதற்கு மத்திய சர்க்காருடைய சில பல தொழில்கள் இங்கே வருவதால் மட்டுமோ அல்லது மாநில சர்க்கார் சில தொழில்களை ஏற்படுத்துவதால் மட்டுமோ இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது, என்பது தெளிவு. இந்த கிராமப்புறத்தினுடைய வறுமைக்குக் காரணம் நிலக் குவியல்தான். நிலப்பிரபுக்களிடம் நிலம் குவிந்திருப்பது, தமிழகத்திலே அந்தக் காலத்திலே இருந்து இதுவரையிலும் கொண்டுவரப்பட்ட நில உச்சவரம்பு சட்டம் பயனளித்ததா? 20 அம்சத் திட்டம் என்று சொல்லுகிறீர்கள் அந்த 20 அம்சத்திட்டத்திலே ஒன்றான நிலச் சீர்திருத்தச் சட்டம் இந்தத் தமிழகத்திலே என்ன பயனளித்தது. 150 லட்சம் ஏக்கர் சாகுபடியிலே உள்ள தமிழகத்தில், 1½ கோடி ஏக்கர் சாகுபடி உள்ள தமிழகத்தில் ஒரு லட்சம் ஏக்கர் கூட இன்னும் இந்த விவசாயிகளுக்கு, இந்த நில உடைமைக்கு வரம்பு கட்டி விநியோகிக்கப் படவில்லை.

அதிலும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் கோர்ட்டிலே சிக்கி இருக்கின்றன. பினாமி நிலங்கள் ஏராளம். அதற்காகக் கொண்டுவரப்பட்ட ஒரு சாதாரண சட்டத்தைக் கூட மத்திய சர்க்கார் அங்கீகரிக்க மறுத்துவிட்டார்கள். அப்போது கூட மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் சொன்னார்கள் அதை மீண்டும் கொண்டு வருவோம் என்று. ஆனால் இன்னும் கொண்டு வரவில்லை. ஆனால் நான் கூறிக் கொள்கிறேன் அந்தக் குறிப்பிட்ட தேதியிலே இருந்த பினாமிகள் மட்டுமல்ல இன்று தமிழகத்திலே உள்ள நிலப்பிரபுக்கள் வைத்திருப்பதில் முக்கால்வாசி பினாமிதான்,



இன்று இரண்டாவது மண்டல் கமிஷன்—இந்திய சர்க்காரால் கொண்டுவரப்பட்ட மண்டல் கமிஷன் கூட குறிப்பிட்டிருக்கிறார்கள். இறுதியிலே பார்த்தால் பிற்பட்ட மக்களுடைய விடுதலைக்கு, பொருளாதார நடவடிக்கைகள், நிலப்பிரபுக்கள் நிலச் சீர்திருத்தம் என்று கூறி மேற்கு வங்காள அரசினுடைய சாதனையை அந்தத் துறையிலே பாராட்டி இருக்கிறார்கள். காரணம் குத்தகை விவசாயிகளை நிலத்தைவிட்டு வெளியேற்ற மாட்டோம். அவர்களுக்கு வம்சாவளியாக அந்த உரிமையைக் கொடுப்போம் என்று ஏற்படுத்தி, பினாமியாக நிலப்பிரபுக்கள் வைத்திருந்த நிலம் லட்சக்கணக்கான ஏக்கர்களை விநியோகித்து நியாயமான கூலி தொழிலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டு மாகாணம் பூராவும் அமல் நடத்தியதன் காரணமாக, அந்த அரசைப் பாராட்டினார்கள். அதுதான் உண்மையிலேயே வறுமையைப் போக்குவதற்கான ஆரம்ப நடவடிக்கை என்பதை நான் மீண்டும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வலியுறுத்த விரும்புகிறேன். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் அழகர்சாமி அவர்கள் கூட இதனுடைய அவசியத்தைப் பற்றி வன்மையாகக் கூறியிருக்கிறார்கள். ஆனால் இந்த கோவில்களிடத்திலே உழக்கூடிய லட்சக்கணக்கான ஏக்கர் நிலம் அதைப்பற்றி என்ன கூக்குரல் வருகிறது. அங்கே உழைத்து அதிலே சாகுபடி செய்து நாட்டுக்கு நெல்லை விளைவிக்கின்ற அந்த விவசாயிகளுடைய நலன் பெரிது அல்ல. ஆனால் அதற்குப் பதிலாக அதை விற்றுவிடுவதற்கு அதிகாரம் வேண்டும் என்று ஒரு குரல் வருகிறது. நீங்கள் இதைச் சிந்திக்கவேண்டும். இந்தியாவிலே உள்ள முற்போக்கு இயக்கங்கள் எல்லாம் இந்த நிலத்தைச் சாகுபடி செய்கிறவர்களுக்குத்தான் இந்த உரிமையை அளிக்கவேண்டும் என்று அவர்கள் போராடிக்கொண்டு வருகிற காலத்திலே இன்று தமிழகத்தில் அதற்குக்கூட பாதுகாப்பு இல்லை. இதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். கிராமப்புற வேலை இன்மையை வேறு எப்படிப் போக்க முடியும். நகரப்புறத்திலே வேலை கொடுக்க முடியுமா? அரசாங்கத்திலே வேலை கொடுக்க முடியுமா? கொடுக்க முடியாது. ஆகவே தீவிரமான நிலச் சீர்திருத்தம்தான் இதற்கு ஒரே நடவடிக்கையே தவிர, தமிழகத்தினுடைய கிராமப்புறத்திலே உள்ள இந்த 57.48 சதவிகிதம்மக்கள் மத்தியிலே வறுமையைப் போக்குவதற்கு உருப்படியானவேறு நிலையை எடுக்கமுடியாது.

(பிற்பகல் 12-10)

அதேபோல் நான் ஒன்றைச் சொல்கிறேன். இன்றைக்கு சோசியல் பாரஸ்ட், அதாவது சமுதாயக் காடுகள் என்ற பெயராலே யாரோ உழுது சாகுபடி செய்யமுடியாத நிலத்திலே காடுகளை வைத்துக்கொள்ளட்டும். ஆனால் அங்கே இருக்கின்ற ஏழை எளியவர்கள், அல்லது சிறு விவசாயிகள் பயிர் செய்யக்

கூடிய நிலத்தில் உழைத்து பயிர் செய்துகொண்டிருந்தால், அந்த நிலங்களை எடுத்துக் கொண்டு அவர்களை வெளியேற்றுவது என்பது கூடாது என்று சொல்கிறேன். அவர்களை அங்கிருந்து விரட்டிவிட்டு இன்றைக்கு அவர்களுக்கு இருக்கக்கூடிய ஒரு வாய்ப்பை, ஏதோ சில தானியங்களை அவர்கள் பயிர் செய்து பிழைக்கக்கூடிய வாய்ப்பை நாம் பறித்து விட்டால், அது நாட்டுக்கு செய்யும் சேவையா என்பதை நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று இந்தக் குத்தகை விவசாயிகளுக்குத் தமிழகத்திலே இதனால் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. 75 சதவிகிதம் குத்தகை விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டுமென்று சம்பிரதாயமாக ஒரு சட்டம். அமுலில் இல்லை. கூலிச் சட்டம் அமுலில் இல்லை. குத்தகை விவசாயிகளை நிலத்திலேயிருந்து வெளியேற்றக்கூடாது என்று சொல்லும்போது ஏராளமான ரெவின்யூ கோர்ட்டுகளை வைத்துக்கொண்டு அவர்களை இன்று வெளியேற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் கூறுகிறேன், இந்த அடிப்படையான பிரச்னையை தீர்க்க வேண்டும்.

அதேபோலவே வீட்டு மனைக்கட்டுகள். கிராமப்புறங்களிலேயும் நகர்ப்புறங்களிலேயும் அதனுடைய விலைகள் உயர்ந்து கொண்டே வருகின்றன. நான் வற்புறுத்த விரும்புகிறேன். அரசாங்கம் அவசர சட்டத்தின் மூலமாக ஏதாவது செய்ய வேண்டும் என்றால் இப்படிப்பட்ட நல்ல பிரச்னையிலே செய்ய வேண்டும். தமிழகத்தில் இருக்கக்கூடிய, சாகுபடிக்குப் போக மீதி இருக்கக்கூடிய நிலங்களில் மக்களுக்கு மனைகள் கட்டுவதற்காக எங்கே பயன்படுத்தப் பெறாத நிலங்கள் இருந்தாலும், கணிசமாக இருக்கக்கூடிய அளவிற்கு உள்ள நிலங்களை எல்லாம் உடனடியாகக் கையகப்படுத்தி ஏழை எளியவர்களுக்குக் கொடுக்கவேண்டும். சாதாரணமாக ஒரு தொழிற்சாலையிலோ அல்லது ஒரு மத்தியதர குடும்பத்திலோ உள்ளவர்கள் வீடு கட்டுவது என்பது ஒரு பகற்கனவாகத்தான் இருக்கிறது. அப்படிப்பட்ட அளவிற்கு நிலத்தினுடைய விலைகள் உயர்ந்துகொண்டே போகின்றன, எங்கே போவார்கள்? அவர்கள் குடியிருப்பதற்கு இடம் இல்லை என்றால் என்ன செய்வார்கள்? உண்ண உணவு? இருப்பிடம் ஆகிய இந்த அடிப்படைத் தேவைகளை நாம் பூர்த்தி செய்வது மூலமாகத் தானே வறுமையைப் போக்க முடியும். ஆகவேதான் அதனுடைய அவசரத்தை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தது, கல்வியைப் பற்றி எடுத்துக்கொண்டால் கூட தமிழகத்திலே கல்வி அறிவு வளர்ந்திருப்பதாக நாம் பெருமைப்பட்டு சொல்லக்கூடிய அளவிற்கு இல்லை. இன்னும் பெரும்பாலான மக்கள் படிப்பு வாசனை இல்லாமல் இருக்கிறார்கள்.



முதியோர்கள் கல்வி திட்டங்களுக்கு ஏற்பாடு செய்வது மட்டுமல்ல, தொழில்கல்வியின் முக்கியத்துவத்தை இன்றைக்கு நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

இங்கே இந்தியைப் பற்றிய பிரச்னை வருகிறது. ஏற்கனவே இந்தி பேசாத மாநிலங்களிலே உள்ள மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் இந்திய அரசாங்கத்தினுடைய ஆட்சி மொழியாக நீடிக்கும் என்று மத்திய சர்க்கார் கொடுத்த வாக்குறுதி தீவிரமாக நிறைவேற்றப்படவேண்டும் என்பது மட்டுமல்ல, அதிலும் குறிப்பாக இன்றைக்குக் குறுக்கீடுகள் ஏற்படுகின்றன,

தொலைக்காட்சியைப் பொறுத்தவரையில் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். நான் அதைப் பார்க்கிறேன். தமிழகத்திலே இருக்கக்கூடிய தொலைக் காட்சியில், மக்களுக்குப் பொழுதுபோக்காக இருக்கக்கூடிய நேரத்திலே — $8\frac{1}{2}$ மணியிலிருந்து $10\frac{1}{2}$ மணி வரைக்கும்—அகில இந்திய ரீதியிலே நிகழ்ச்சிகளை ஏன் இந்தியில் ஒளிபரப்பவேண்டுமென்றும், என்று நான் கேட்கிறேன்.

உதாரணமாக தீரேந்திர பிரம்மச்சாரி அவர்கள் யோகாப்பியாசத்தைப் பற்றி பல நாட்களாகப் பேசிக்கொண்டு வருகிறார். தீரேந்திர பிரம்மச்சாரியிடமிருந்துதான் யோகாப்பியாசத்தைப் பற்றித் தெரிந்துகொள்ளவேண்டிய நிலையிலே இந்திய மக்கள் இருக்கிறார்களா என்று நான் கேட்கிறேன். அது போகட்டும். ஆனால் நான் சொல்வது மத்திய சர்க்கார் ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றி பிரச்சாரம் செய்ய வேண்டும் என்று விரும்பினால் இந்தியாவினுடைய ஒப்புக்கொள்ளப்பட்ட அனைத்து மொழிகளிலும் அந்தந்த மொழிகளிலே, அந்தந்த மாநிலங்களில் இருக்கின்ற தொலைகாட்சி நிலையங்களின் மூலமாக நிகழ்ச்சிகளை ஒளிபரப்பவேண்டுமே தவிர அவர்கள் இந்தியின் மூலமாக ஒளிபரப்புவதால் பயன் இல்லை; அது வீண் செலவு: மக்கள் மத்தியிலே மனக்கசப்பை ஏற்படுத்துகிறது. அதைப்பொறுத்து மத்திய அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும். ஆகவேதான் சொல்கிறேன், ஒவ்வொரு மாநிலத்தில் இருக்கக்கூடிய தொலைக் காட்சி நிலையங்களிலும், ரேடியோ நிலையங்களிலும் அந்தந்த மொழியிலே நிகழ்ச்சி இருந்தால் தான் நாம் புரிந்துகொள்ள முடியும். ஆனால் மாநிலத்தில் மைனாரிட்டி மக்கள் இருக்கிறார்கள் என்றால். அவர்களுக்காக நிகழ்ச்சிகளை ஒளிபரப்பவேண்டும். இது ஜனநாயக உரிமை. ஆனால் இந்திப் பிரச்னையில் மத்திய அரசாங்கம் செய்வது மிகவும் தவறான காரியம். முதலிலே இந்தியிலே செய்திகளைக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் இப்போது அதை நிறுத்தியிருக்கிறார்கள். தமிழகத்திலேயும் மற்ற, மாநிலங்

களிலேயும் ஏற்பட்டிருக்கிற கிளர்ச்சியின் விளைவாக. மத்திய அரசாங்கத்தினுடைய அந்தக் கொள்கையை நாம் நெருக்கி, இதிலே சீரான மாற்றங்களைச் செய்வதற்கு நாம் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

அடுத்த பிரச்னை என்னவென்றால், இங்கே பேசிய பல நண்பர்கள்கூட எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள், எங்களுக்குத் தொழிற்சாலை இங்கே தமிழ்நாட்டுக்கு வரவில்லை. வந்திருந்தால் பிரச்னை தீர்ந்துவிடுமா? எத்தனை ஆண்டுகளாக இது நடக்கிறது? இப்போது பிரச்னை என்னவென்றால் அந்த உடையவருக்கே ஆபத்து வந்துவிட்டது. இப்போது இந்திய சர்க்காரின் 6வது திட்டம் நிறைவேற்றப்படும் என்று சொல்கிறார்களா? பாதி நிறைவேறினாலே பெரிய விஷயம். அவர்களே ஒப்புக்கொள்கிறார்கள், அவர்கள் போட்டபோது இருந்த விலை என்ன? இப்போது இருக்கக்கூடிய விலை என்ன? அந்தப் பணவீக்கமே சாப்பிட்டுவிடுகிறது: ஆகவே இந்திய சர்க்காருடைய தவறான கொள்கையின் காரணமாக, விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியாத காரணத்தாலே விலைவாசிகள் உயர்ந்துகொண்டே போகின்றன. அவர்களுடைய திட்டமே தோல்வி அடையக்கூடிய நிலையில் இருக்கும்போது, தமிழகத்திற்கு மட்டும் எப்படி ஏராளமான தொழில்கள் வந்துவிடும்? ஆகவே இரத மயக்கம் நமக்கு வேண்டாம். இங்கே உண்மையிலே ஒரு மாற்றம் ஏற்படவேண்டும். மத்திய சர்க்காருடைய கொள்கையிலே மாற்றம் வேண்டும். இந்த சர்வதேச நிதி நிறுவனத்திடமிருந்து வாங்கிய கடன்களுக்கு உண்டான வட்டியைக் கட்டுவதே மிகவும் சிரமம் என்று இன்றைக்குச் சொல்கிறார்கள். காரணம் என்னவென்றால், இந்தியா போன்ற நாடுகளிலே ஏற்றுமதி செய்யக்கூடிய மூலப் பொருள்களுக்கு உலக மார்க்கெட்டிலே எல்லாம் விலை வீழ்ந்துவிட்டது.

அங்கே பெரிய போட்டி ஏற்படுகிறது. ஆகவே, ஏற்றுமதி செய்து பணத்தைச் சம்பாதிக்க முடியவில்லை என்ற நிலை வருகிறபோது இந்திய சர்க்காருக்கு சர்வதேச நிதி நிறுவனம் கட்டளையிடுகிறது, நீங்கள் எந்த மானியமும் கொடுக்கக் கூடாது என்றுஅவர்கள் அப்படிச் சொல்லிய காரணத்தால்தான் விவசாயிகளுக்கு இடுபொருள் மானியம் வழங்குவது நிறுத்தப் பட்டது. அதைப் போலவே, இப்போது ஏன் ரயில்வே கட்டணத்தை உயர்த்தினார்கள். அவர்கள் கட்டளைதான். அதைப்போலவே அவர்கள் கட்டளைப்படிதான் பெட்ரோலியப் பொருள்களின் விலையையும் ஏற்றியிருக்கிறார்கள். ஆகவே, இப்படி சர்வதேச நிறுவனத்தின் கட்டளைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு நிறைவேற்றுவதால் இந்தியாவின் சுதந்திரத்திற்கும், பொருளாதாரத்திற்கும் ஏற்பட்டு இருக்கும் ஆபத்தை மாற்றவேண்டும். அப்படிப்பட்ட ஒரு மாற்றுப் பாதை அமைக்க தமிழகத்தை ஆண்டுகொண்டு இருக்கும் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்— ஆளும் கட்சி—குரல் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.



இங்கே எதற்காகச் சொல்கிறேன் என்று கேட்டால், தமிழ் நாட்டிலே இருக்கிற சர்க்கார், இந்தக் கூட்டத்திலேதான் மத்திய அரசைப் பற்றிச் சொல்லியிருக்கிறது, ஆளும் கட்சி உறுப்பினர்களும் பலமாக மத்திய அரசின் குறைகளைப் பற்றி இங்கே பேசிக்கொண்டு இருக்கிறார்கள். இதை வரவேற்கிறோம். ஆனால் அது இன்று மட்டும்தானா அல்லது தொடர்ந்து இருக்குமா? ஏனென்றால் முன்பு என்ன நடந்தது? விற்பனை வரி விஷயத்தைப் பற்றி 1981—ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற முதலமைச்சர்கள் கூட்டத்தில் மருந்துகள், சிமெண்ட் பேப்பர் பொருள்கள், வனஸ்பதி, மற்றும் பெட்ரோலியம் பொருள்கள் ஆகியவற்றிற்கு மாநில சர்க்கார் விதிக்கும் விற்பனை வரி அதிகாரத்தைப் மத்திய அரசு ஏற்றுக்கொண்டு எக்சைஸ் வரி விதிப்பது என்று ஒரு கருத்து விவாதிக்கப்பட்டது. அப்போதே நான் கூறினேன், காஷ்மீர், மேற்கு வங்காளம், கேரளம் போன்ற மாநிலங்கள்தான் அதை எதிர்த்தன. என்ன காரணத்தாலோ தமிழக அரசு அதை எதிர்க்கவில்லை. இன்றைக்கு இவ்வளவு தூரம் பேசும் மாண்புமிகு உறுப்பினர்கள், அன்றைக்கே அந்த முதலமைச்சர்கள் கூட்டத்திலேயே இந்த 5 பொருள்களும் முக்கியமான பொருள்கள் என்பதால், அந்த அதிகாரத்தை மத்திய அரசாங்கம் எடுத்துக்கொள்ளக்கூடாது என்று ஏன் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

அப்போதுதான் நாங்கள் கூறுகிறோம். இந்திரா காங்கிரஸ் கட்சியோடும், அவர்களுடைய ஆட்சியோடும் நீங்கள் கையாண்டு வரும் நட்புக்கொள்கை காரணமாக அதை அன்றைக்கு நீங்கள் செய்யவில்லை. இப்போது அவர்களுடைய குறைகளை எடுத்துப் பேசி என்ன பிரயோசனம்? இப்போது நிலைமை என்ன ஆயிற்று என்று சொன்னால், ஏற்கனவே அமைக்கப்பட்ட கமிஷனின் தலைவர் இறந்துவிட்டதால், திருபாதி அவர்கள் தலைமையில் மீண்டும் அந்தக் குழு அமைக்கப்பட்டு, அந்த திருபாதி கமிஷனும் தன்னுடைய முடிவை தெரிவித்தாகிவிட்டது. அந்த 5 பொருள்களின் மீது மாநில சர்க்கார் விதிக்கும் விற்பனை வரிக்கு பதிலாக, மத்திய அரசு எக்ஸைஸ் வரி விதிக்கலாம் என்று மத்திய அரசுக்கு அந்த அதிகாரம் எடுத்துச் சொல்லப்படவிருக்கிறது. அந்தக் குழு அந்த வகையில் மத்திய அரசுக்கு ரிப்போர்ட் அனுப்பியாகி விட்டது. நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இதனால் ஏற்படும் இழப்பு யாரை பாதிக்கப்போகிறது? மாநில சர்க்காரைத்தான் பாதிக்கப்போகிறது. ஆகவே, இந்த மாநில சர்க்கார் இதிலே முழுமையான கவனம் செலுத்தி, அனைத்து மாநில சர்க்கார்களோடு கலந்துபேசி இப்படிப்பட்ட பிரச்னை ஏற்படாமல் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதுதான் மத்திய அரசை எதிர்த்துப் போராடுவதற்கு அறிகுறியாகும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு சர்க்கார் திட்ட முடிவுகளைப்பற்றியும், நிதிநிலை பற்றியும் ஒன்றைச் சொல்லவிரும்புகிறேன். 1982—83ஐ விட 1983—84ல் 18.87 சதவிகிதம் ஆண்டுத்திட்டம் கூடுதல் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதைக்கண்டு திருத்தியடையலாம். 716 கோடியில் இருந்து 84 கோடி என்று சொன்னாலும், நீங்கள் நிறைவேற்றப்போகிற திட்டங்கள் சென்ற ஆண்டு நிறைவேற்றிய அளவிற்குச் சமமாக இருக்குமா என்று நான் கேட்க விரும்புகிறேன். பண வீக்கம் ஏற்பட்டு, சிமெண்ட் விலை, கட்டுமான விலை, மற்ற பொருள்களின் விலை ஆகியவையெல்லாம் அதிகரித்துவிட்டன. உங்களுடைய 'பிசிகல் பர்ஃபாமென்சை' எடுத்துக்கொண்டால், நடைமுறையில் செய்யப்படும் அளவை எடுத்துக்கொண்டால், சென்ற ஆண்டைவிடக் குறைவாகத்தான் இருக்கும். ஆண்டுக்காண்டு கூடுதலாகத் திட்ட ஒதுக்கீடு செய்கிறோம் என்று வேண்டுமானால் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். ஆனால் கூடுதலான பணிகள் எதுவும் நடைபெறவில்லை என்பதை மட்டும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இதைப் பொறுத்தவரையில் எங்களுடைய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி போன்ற கட்சிகள் சில கொள்கைகளை மத்திய அரசு மாற்றிக்கொள்ளவேண்டும் என்று கோருகிறோம். அயல்நாட்டுப் பெருமுதலாளிகளின் ஆதிக்கத்தை வேரறுக்காமல் எந்த ஒரு மாநிலத்திற்கும் நிதி உதவி கிடைக்காது. எந்த ஒரு மாநிலத்திலும் தொழில் வளர முடியாது. இன்றைக்கு இந்தப் பன்னாட்டு மூலதனம் இந்திய மக்களின் ரத்தத்தை உறிஞ்சிக் கொண்டு இருக்கிறது. அவர்களுடைய கேந்திரமான தொழில்களை நாட்டுடைமையாக்கவேண்டும் என்ற மாற்றுப்பாதைக்கு தமிழக சர்க்கார் மத்திய சர்க்காரை வற்புறுத்த முன்வர வேண்டும். அதற்காக ஆளும்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்றத்தில் ஜனநாயக கட்சிகளுடன் ஒருங்கிணைந்து இந்தக் கொள்கையை வற்புறுத்த வேண்டும் என்று வற்புறுத்திக் கூறிக் கொள்கிறேன்.

இன்றைக்கு நான் ஒன்றைச் சொல்லவிரும்புகிறேன். ஏகபோக முதலாளிகள் ஆபத்து இன்றைக்கு இருக்கிறது. காலையில் மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் பேசினார்கள். நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தியன் டுபேக்கோ சார்ப்பரேஷன் என்ற ஏகபோக நிறுவனம் சங்ககிரி சிமெண்ட் நிறுவனத்தை வாங்குவதற்குப் பெருமுயற்சி எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். சங்ககிரி சிமெண்ட் ஆலையின் முந்தைய உரிமையாளர்கள் அதனுடைய நிர்வாகத்தை சீர்குலைத்த காரணத்தால், எல்.ஐ.சி. நிறுவனம் அதில் தலையிட்டு இன்றுள்ள நிலையில் அவர்கள்தான் பொறுப்பாளர்கள் என்ற அளவிற்கு அவர்கள் பணம் போட்டு இருக்கிறார்கள். ஆனால் என்ன ஆயிற்று என்று சொன்னால் எல்.ஐ.சி. நிறுவனம் அந்த கழகத்திற்கு ஏராளமான பங்கை விற்றுவிட்டார்கள். அதை எதிர்த்து முந்தைய உரிமையாளர்கள் சுப்ரீம் கோர்ட்டில் மனு கொடுத்து, அதைத் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள்.





இங்கே என்ன நிலைமை இருக்கிறது என்று சொன்னால், நம்முடைய ஆலை முதலாளிகள் நிறுவனத்தைப் பாழ்படுத்துவார்கள். எல் ஐ.சி. நிறுவனம் பணம் போடும்; பணம் போட்டு அதனைச் சீர்படுத்துவார்கள். பின்னர் அதனை வேறு ஒரு முதலாளிக்கு விற்றுவிடுவார்கள். அந்த வகையில்தான் இன்றைக்கு இந்த இந்தியா டிபாக்கோ நிறுவனம் அந்த சங்ககிரி தொழிற்சாலையை வாங்கிவிடும் ஆபத்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

அது மட்டுமல்ல. சேஷசாயி பேப்பர் மில்லில் சாதாரண பங்குகளைக்கூட இந்தியன் டுபாக்கோ கார்ப்பரேஷன் வாங்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. தமிழக சர்க்காருக்கு இதில் கணிசமான பங்கு இருக்கிறது. தமிழக சர்க்கார் டைரக்டர்கள் இருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது நம்முடைய சர்க்கார் ஏன் இந்தப் பங்குகளை அவர்களுக்கு விட வேண்டும்? சங்ககிரி சமெண்ட் தொழிற்சாலையையும், சேஷசாயிபேப்பர் மில்லையும் தமிழக சர்க்கார் ஏன் ஏற்று நடத்தக் கூடாது. இப்போது பல கோடி ரூபாயில் நாம் ஒரு காகித ஆலையை நிறுவவில்லையா? அதைப்போன்று நாம் நடத்துகின்ற சிமெண்ட் கார்ப்பரேஷன் சங்ககிரி சிமெண்ட் தொழிற்சாலையை ஏற்று நடத்த நாம் யோசிக்க வேண்டும்.

அது மட்டுமல்ல. அவர்கள் எல்லாம் பெரும் முதலாளிகள், அந்த முதலாளிகள் சிறு தொழில்கள் அழிய வேண்டும் என்பதிலே அக்கறை கொண்டவர்கள். இப்போது வந்திருக்கிற மின்சாரத் தட்டுப்பாடு யாரை பாதித்திருக்கிறது? பெரிய முதலாளிகளைப் பாதிக்கவில்லை. சின்னஞ்சிறு தொழில்களைத் தான், அந்த சின்னஞ்சிறு தொழில்களைநம்பி இருப்பவர்களைத் தான், அந்தத் தொழிலாளர்களைத்தான் பாதித்திருக்கிறது. இந்தத் தாக்குதலை அவர்களால் சமாளிக்க முடியாது. இந்த நிலையில் ஏகபோக முதலாளிகள்தான் வாழ முடியும். சிறு முதலாளிகள் வாழக்கூடாது என்பதுதான் அவர்கள் விருப்பம். ஆனால் தொழிலாளர்கள் நிலைமை என்ன? அதை நாம் சிந்திக்க வேண்டும்.

அடுத்து சேலம் உருக்காலை—மத்திய அரசின் திட்டம். பெரிய போராட்டங்கள் எல்லாம் நடத்தி அதன்பிறகு வந்தத் தொழிற்சாலை அது. ஏராளமானவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு வேலை கிடைத்ததோ கிட்டத்தட்ட ஆயிரம் பேர்களுக்குத்தான். தொழிற்சாலை எதிர்பார்த்த அளவுக்கு வரவில்லை. 'ஹாட் ரவுண்டு காயில்'—வெப்பம் மிகுந்த வளைவுக் கம்பிகள் ஜப்பான், மேற்கு ஜெர்மனி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது. பொக்காரோ இரும்பாலையிலிருந்து மூலப்

பொருள் கிடைக்கவில்லை. மத்திய சர்க்கார் இறக்குமதி செய்யப்பட்ட கம்பிகளுக்கு 335 சதவீதம் கஸ்டம்ஸ் டூட்டி போட்டார்கள். அப்படி கஸ்டம்ஸ் டூட்டி போட்டவுடனே அதைத் தாங்க முடியாது என்று சொல்லி சேலம் ஆலையினர் முறையிட்டார்கள். அவர்களுக்கு ஒரு டன் உற்பத்திச் செலவு 91,000 ரூபாய் ஏற்பட்டுவிட்டது. கஷ்டத்தைத் தாங்க முடியவில்லை என்று சொன்னதால் அதைப் பரிசீலனை செய்து 335 சதவீதம் என்றிருந்ததை 125 சதவீதம் கஸ்டம்ஸ் டூட்டி என்று குறைத்தார்கள். அதன்பிறகு உற்பத்திச் செலவு 56,000 ஆயிற்று அப்படி இருந்தாலும் அவர்களுக்கு 6,000 ரூபாய் நஷ்டம் ஏற்பட்டதாகச் சொல்கிறார்கள்.

அவர்களுக்கு வரியைக் குறைத்தவுடனே அதைப்போல எங்களுக்கும் குறைக்க வேண்டும்; அவர்களுக்கு மட்டும்குறைந்தது சரியல்ல என்று குஜராத்திலே உள்ள தொழிலதிபர்கள் கேட்டார்கள். அதன் காரணமாக 15—1—1983-லிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கு 335 சதவீதம் வரியை மீண்டும் போட்டுவிட்டார்கள். இப்போது நிலைமை என்னவென்றால் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருள் தீர்ந்தவுடன் அந்தத் தொழிற்சாலையை மூடும் சூழ்நிலையை ஏற்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அது சம்பந்தமாக தொழிலாளர்களுக்கு நோட்டீஸ் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதை எதிர்த்து தொழிலாளர்கள் கிளர்ச்சி செய்திருக்கிறார்கள். இந்த நிலைமைகளை எல்லாம் நீக்க நாம் எதிர்பார்த்த மாதிரி முழு அளவில் அந்தத் தொழிற்சாலை நடைபெற ஏற்பாடு செய்ய வேண்டும்; அதற்காகப்போராட்டம் நடத்தவும் தயாராக இருக்கவேண்டும்.

சேலம் உருக்காலை திட்டம் கடைசியாக எப்படி முடிந்திருக்கிறது என்று பார்த்தால் பெரிய தொழிலாகவும் இல்லாமல், இருக்கின்றத் தொழிலுக்கு போகாரோ இரும்பாலையிலிருந்து மூலப்பொருளும் கிடைக்காமல், பல ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை கிடைக்கும் என்று எதிர்பார்த்ததற்கு மாறாக சில நூற்றுக்கணக்கானவர்களுக்கே வேலை கிடைக்கின்ற நிலை ஏற்பட்டு. தற்போது அதுவும் நடைபெறுமா என்ற நிலைக்கு வந்திருக்கிறது.

அடுத்தது காவேரி நீர்ப்பிரச்சனை ஒரு முக்கியப் பிரச்சனையாக இருக்கிறது. அது சம்பந்தமாக முதலமைச்சர் கூட்டிய மாநாடுகளில் எல்லாம் நாங்கள் தவறாமல் கலந்து கொண்டு எங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறோம். இன்றைக்கு தமிழ்நாட்டில் நீர்ப்பாசன வசதி பெற்றிருக்கிற நிலங்களைப் பாதுகாப்பது நம்முடைய தமிழக சர்க்காரின் கடமையாக இருக்கிறது. தமிழக சர்க்காரும் அனைத்துக் கட்சிகளும் அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். இதைத்தான் நாங்கள் அவ்வப்போது கூறிவருகிறோம்.



நாம் தண்ணீர் வேண்டுமென்று கேட்கின்ற அதேநேரத்தில் அண்டை மாநில மக்களின் நலனையும் நாம் மறந்துவிடக் கூடாது. அவர்களுடைய நியாயமான பிரச்சனையை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அந்த அடிப்படையில் பார்க்கும் போதுதான் அமைச்சரவர்கள் இதிலே அரசியலைப் பயன்படுத்த வேண்டாம் என்று குறிப்பிட்டார்கள். இந்தப் பிரச்சனையை சீக்கிரமாக ஒரு முடிவுக்கு கொண்டுவர வேண்டும். அதற்கு மத்திய சர்க்கார் தயாராக இல்லை. ஏனென்றால் இங்கே ஒரு காங்கிரஸ் அல்லாத அரசாங்கம் இருக்கிறது. அதனால் அவர்கள் இதிலே கவலையற்று இருக்கிறார்கள். இதை ஒரு அரசியல் பிரச்சனையாகக் கருதி, நீண்ட காலமாக இந்தப் பிரச்சனைக்குத் தீர்வுகாணாமல் இருக்கிறார்கள். அதனாலேதான் நமக்குத் தேவையானபோதுகூட தண்ணீர் விடச் சொல்ல மறுக்கிறார்கள். இன்றைக்கு நமக்குக் கடுமையான தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில் 30 டி.எம்.சி. தண்ணீரை திறந்து விடவேண்டும்; அதற்கு வலியுறுத்த வேண்டும் கர்நாடக சர்க்கார் உதவ வேண்டும் என்று ஜனநாயக கட்சிகள் எல்லாம் கேட்டார்கள். கர்நாடக சர்க்கார் மறுத்து விட்டது. மத்திய சர்க்காரும் அதுசம்பந்தமாக ஒன்றும் செய்யாமல் இருக்கிறது.

தேர்தல் முடிந்த பிறகாவது நட்பு முறையிலே நம்முடைய சர்க்கார் கர்நாடகத்தை அணுகியிருக்க வேண்டும். ஹெக்டே அவர்களைச் சந்தித்து இதுபற்றிப் பேசியிருக்க வேண்டும். அதைச் செய்ய தவறிவிட்டார்கள். இன்றைக்கு எங்களுக்கு இருக்கிற வருத்தமெல்லாம், இங்கே காங்கிரஸ் அல்லாத ஒரு சர்க்கார் ஆட்சியில் இருக்கிறது. ஆனால் இந்த அரசு இந்திரா காந்திக்கு ஆதரவு கொடுக்கிறது; காங்கிரஸ் கட்சியுடன் நட்புறவு கொண்டிருக்கிறது. அப்படி இருந்தும் இதிலே ஒரு நல்ல முடிவு ஏற்படுகின்ற வகையிலே மத்திய அரசு செயல்படவில்லை என்று நீங்கள் சொல்லும்போது நாங்கள் வேதனைப்படுகிறோம். ஜனாதிபதி தேர்தலுக்காக இந்திரா காங்கிரஸ் கட்சியினர் வேட்பாளரை நியமித்தனர். அப்போது தெரியாதா? அப்போது இந்தியாவிலுள்ள எதிர்க் கட்சிகள் எல்லாம் அதை எதிர்த்து நிராகரித்து விட்டது. அப்போது மாற்றாந்தாய் மனப்பான்மையோடு அந்த அரசு எவ்வளவு தூரத்திற்குத் தமிழகத்தை புறக்கணித்து வருகிறது என்பது தெரியாதா? அதை எப்படி அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் ஆதரித்தது? ஆகவே நீங்கள் காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இல்லாத ஒரு அரசு என்கிற முறையிலே உங்களை எதிர்த்து உங்களுக்கு எதிராக அவர்கள் நடக்கிறார்கள் என்று நீங்கள் சொன்னால், அந்த வாதம் பலகீனமாக இருக்கிறது.

கடைசியாக நடைபெற்ற கர்நாடகத் தேர்தலிலே அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் காங்கிரஸ் கட்சியை ஆதரித்தது. அன்றைக்குப் பிரதமர் அவர்கள் நேரிலே இங்கே வந்தபோது பார்த்தோமே உங்கள் நட்பை. மாண்புமிகு

முதலமைச்சர் அவர்கள் கர்நாடகத்திற்குச் சென்று காங்கிரஸுக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்தார். அதைப் பார்த்தால் எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது, எவ்வளவு நட்பு என்று. அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கர்நாடகத்திலே காங்கிரஸ் கட்சியை வெற்றி அடையச் செய்து காட்டப்போகிறது என்றுதானே பார்த்தோம் அப்போது. அப்படி இருக்கும்போது அவர்கள் ஏன் உங்களை டிஸ்கிரிமினேட் செய்கிறார்கள். நீங்கள் அவர்களுக்கு எவ்வளவோ நன்மைகள் செய்திருக்கிறீர்கள். எவ்வளவோ நட்பு முறையில் காரியங்களைச் செய்திருக்கிறபோது கூட உங்களை எதிர்த்து, மாற்றாந்தாய் மனப்பான்மையைக் காட்டுகிறார்கள் என்றால், இப்போதாவது அந்த அடிப்படையைத் தெரிந்துகொண்டீர்களா, அந்த முடிவுக்கு வந்திருக்கிறீர்களா என்று கேட்க விரும்புகிறேன்?

அடுத்து ஒரு பெரிய பிரச்சனையில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாநிலங்களுடைய அதிகாரங்கள் என்பது நிரந்தரமாக இருக்க வேண்டிய ஒன்று. ஏனென்று சொன்னால் இப்போது நதிநீர் பிரச்சனை வந்த போது நதிகளை தேசீய மயமாக்க வேண்டும் என்ற கோஷத்தை ஒரு அமைச்சர் அவர்கள் எழுப்பியதாக அறிகிறேன். இன்றைக்கு நமக்கும் அண்டையில் உள்ள சில மாநிலங்களுக்கும் இடையில் நதிநீர் பிரச்சனையில் தாவா இருக்கிறது என்கிற காரணத்தால் மாநிலங்களுக்கு உள்ள நதிநீர் உரிமையை மாற்றி தேசியமயமாக்க வேண்டும் என்று கேட்பதால், அவர்கள் அடுத்த படிக்கு போகக் கூடிய அபாயம் இருக்கிறது.

அப்படி என்றால் மின்சாரத்தை இந்தியா பூராவும் 5 பிரிவாகப் பிரித்துக் கொண்டு விநியோகம் செய்வதற்கு ஆட்சேபணை என்ன என்று கேட்பார்கள். அப்படிக் கேட்டால் நமது மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரன் அவர்கள், அது நடக்காது, அது கூடாது என்கிறார்கள். ஏன் கூடாது என்றால், உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தை எப்படி விநியோகம் செய்வது என்பதற்கு மாநில சர்க்காரின் அதிகாரத்தை எடுத்துவிட வேண்டியதாயிருக்கும். அதே காரணம்தான் இதற்கும் வரும். ஆகவே இன்றைக்கு நீங்களே அதை தேசிய மயமாக்குங்கள் என்று கேட்டால், அடுத்தபடியாக மின்சாரத்தை தேசிய மயமாக்கலாம், அடுத்தபடியாக விற்பனை வரிகளை எல்லாம் மாற்றி எக்ஸைஸ் வரிகளாக ஆக்கலாம் என்று படிப்படியாக மாறிக்கொண்டே போகும். ஆகவே நதிநீர்ப் பிரச்னையில் அந்த அந்த மாநிலங்களுக்கு உள்ள உரிமை அப்படியே இருப்பதுதான் நல்லது. அதுதான் இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலும் இருக்கிறது. அதை கட்டுப்படுத்த முயற்சித்தால் அதற்கு அவர்கள் சந்தோஷப்படுவார்கள்.



காரணம் அதற்குப் பிறகு இதை முன்மாதிரியாக வைத்துக் கொண்டு, இஷ்டப்படியெல்லாம் அதிகாரத்தை அவர்கள் பயன்படுத்தலாம். இன்றைக்கு பஞ்சாபிற்கும், அரியானாவிற்கும் ராஜஸ்தானுக்கும் இடையிலே, ராஜஸ்தான் கேனல் சம்பந்தமாக ஏற்பட்ட உடன்பாடு சரியாக இல்லை என்றால் அதனைத் திரும்பவும் ரெவ்யூ செய்து எழுதி செம்மைப் படுத்திக் கொள்ளலாம். அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர, தேசியமயமாக்குகிற கோஷம் நதிநீர் பிரச்சனையில் வந்தால் அது ஒவ்வொன்றிற்கும் வரும் என்பதை இந்த நேரத்திலே நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிற நேரத்திலே, அந்த அரசாங்கத்தின் தொழிலாளர்களின் கொள்கை பற்றிய முக்கியமான கருத்தை, இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இப்படிப்பட்ட நிலைமை இருக்கிற போது தமிழக சர்க்காரின் முதல்வர் அவர்கள் கூறியிருக்கிறார்கள், என்.ஜி.ஓ.க்கள் போராடினால், என்னுடைய பதவியை ராஜினாமா செய்துவிட்டு அவர்களை எதிர்த்து நான் போராடுவேன் என்று.

அதைவிட கவனிக்க வேண்டிய ரொம்ப பெரிய காரியங்கள் எல்லாம் தமிழ்நாட்டிலே இருக்கின்றன என்று நாங்கள் நினைக்கிறோம். அவர்கள் சாதாரணமானவர்கள்—இந்த அரசாங்கத்தினுடைய ஊழியர்கள். அதனுடைய ஆசிரியர்கள். ஆகவே அவர்களை எதிர்த்துப் போராடுவதற்காக முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய பதவியை ராஜினாமா செய்வது என்பதற்குப் பதிலாக, மத்திய சர்க்கார் தமிழகம் முற்போக்கான கொள்கைகளை நிறைவேற்ற முடியாமல் செய்கிற போது, அதை எதிர்த்து ராஜினாமா செய்து மறியல் நடத்துவேன் என்று சொன்னால், தமிழகத்திலுள்ள மக்கள் மத்தியிலே நல்ல ஒரு மனப்பான்மையை அது வளர்க்கும் என்று கூறி, இந்தத் தொழிலாளர்களின் பிரச்சனையில் எப்படி நடந்து கொள்கிறீர்கள் என்பதையும் கோடிட்டு காட்ட விரும்புகிறேன்.

சிம்கோ மீட்டர்ஸ் தொழிற்சாலையில் 1500 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அதில் 500 பேர்கள் பெண்கள். தாய்க்குலத்தை காப்பதற்காகவே இருக்கக்கூடிய சர்க்கார்—அந்த 1500 பேர்களும் 8 மாதங்களாக கதவடைப்பினால் கஷ்டப்படுவதைத் தடுக்க முன்வரவில்லை. பிரச்னை என்ன? ஆட்குறைப்பு செய்யக்கூடாது என்பது சுப்ரீம் கோர்ட் உத்தரவு. ஆகவே பேக்டரியை திறந்தால், சுப்ரீம் கோர்ட்டின் அந்த உத்தரவை அமுல் நடத்த வேண்டுமே ஆகவே அதன் முதலாளிகள் கதவடைப்பு செய்திருக்கிறார்கள். அந்தக் கதவடைப்பை ரத்து செய்து தொழிற்சாலையைத் திறக்க தமிழக அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா? இதனால் தொழில் உற்பத்தி பாதிக்கப்படவில்லையா. ஒரு தொழிலாளி தற்கொலையே செய்து கொண்டார். ஆகையினால் நான் சொல்ல விரும்புகிறேன்.

அந்தத் தொழிற்சாலையை மீண்டும் திறந்து சுப்ரீம் கோர்ட்டின் முடிவை அமுல் நடத்தி, ஆட்குறைப்பு செய்யாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டும். பிறகு வேண்டுமானால் அவர் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய் வழக்காடட்டும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ரப்பர் தோட்ட தொழிலாளர்களின் பிரச்சனை. ஏற்கெனவே இங்கே விரிவாகப் பேசப்பட்டு விட்டது. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இதிலே எடுத்துக்கொண்ட நிலை சரியானது அல்ல. அவர் என்ன சொல்கிறார்? 6 கோடி ரூபாய்க்கு மேல் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது—ஸ்டிரைக் நடந்ததினால், இப்போது கிராச்சுவிட்டி கேட்கிறீர்களே, எக்ஸ்கிரேஷியா கேட்கிறீர்களே இது சரியா என்று சொல்லுகிறார். நான் கேட்கிறேன். நோட்டீஸ் கொடுத்த பின்னாலேதானே ஸ்டிரைக் பண்ணினார்கள். நோட்டீஸ் கொடுத்த உடனேயே ஸ்டிரைக் நடக்காமலிருப்பதற்கு உடனடியாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசாங்கத்திற்கு பொறுப்பு இல்லையா? அன்றைக்கே தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தலையிட்டு அதில் தீர்வு கண்டிருந்தால் ஸ்டிரைக்கே இல்லை. முதலிலேயே தடுக்க நடவடிக்கை எடுக்க மாட்டீர்கள்? தடுக்க முடியாத அளவில் ஸ்டிரைக் வந்து விட்டால் நீங்கள்தான் நட்டத்தை ஏற்படுத்தினீர்கள் என்று சொன்னால், அவர்கள் என்ன பதில் சொல்ல முடியும்?

(பிற்பகல் 12-30)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ரப்பர் தோட்டம் அரசாங்கத்தால் நடத்தப்படுகின்றது. 1965 ஆம் ஆண்டு போனஸ் சட்டம் 32 (4) பிரிவின் கீழ் மத்திய அரசாங்கத்தால் நடத்தப்படுவதாக இருந்தாலும் மாநில அரசால் நடத்தப்படுவதாக இருந்தாலும் அரசாங்கத்தால் நடத்தப்படக்கூடிய தொழிலாளர்களுக்குப் போனஸ் இல்லை என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் நீங்கள் போனஸ் கேட்கிறீர்கள். எனவே இதைப்பற்றி கன்சிலியேஷன் நடத்துகிறவர்கள் சட்டச் சிக்கல் இருக்கின்றது என்று சொல்கின்ற காரணத்தால் அதைப் பொறுத்தவரையிலே ஒரு பொதுவான முடிவாக எடுத்தாக வேண்டும். எனவே இதிலே ரப்பர் தோட்டத்திற்கு மட்டுமாக எடுக்கக்கூடிய பாலிசி அல்ல. இதிலே பெரிய பிரச்சினை இருக்கின்றது. 1-11 1982-லே இருந்து வேலை நிறுத்தம் நடக்கின்றது. வேலை நிறுத்தம் செய்யாமல் பேச்சுவார்த்தையின் மூலமாக சுமுகமாக இந்தப் பிரச்சினையைத் தீர்த்திருக்கலாம். இப்போது கூட வேலை நிறுத்தத்தை நிறுத்திவிடுங்கள் என்று நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.



135975

திரு. என். சங்கரய்யா: தலைவரவர்களே, முக்கியமாக இருக்கிற ஒரு பிரச்சினை இது. டெலிபிரிண்டர்ஸ் என்பது ஒரு கவர்மென்ட் பேக்டரி. அதிலே போனஸ் வேறு வகையிலே தற்குரிய தொகை கொடுக்கப்படுகின்றது எனவே மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. அரசாங்கத்தினுடைய கொள்கை தொழிலாளர்களுக்கு உதவ வேண்டும் என்ற வகையிலே திட்டவட்டமாக இருந்தால் எத்தனைச் சட்டச் சிக்கல் இருந்தாலும் அவற்றைத் தீர்க்க முடியும். மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் கூட தற்போது தொழிலாளர்களை அழைத்துப் பேசி இருக்கிறார்கள் எனவே அதிலே உள்ள சட்டச் சிக்கலைத் தீர்த்து உடனடியாகக் காப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தமிழ்நாட்டிலே படகு கட்டக்கூடிய யார்டுகள் மூடப்பட்டுவிட்டன. அந்தத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு மாற்று வேலை கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டும் மாற்று வேலை கொடுக்கப்படாமல் இருக்கின்றது. அவர்கள் சமுதாயத்திலே மிகவும் நலிந்த பிரிவினர்கள் அவர்களுக்கு உதவுகின்ற வகையிலே இந்தப் பிரச்சினைக்கு என்ன தீர்வு காணப்பட்டிருக்கின்றது? இதிலே இன்னும் முடிவு எடுக்கப்படாமல் இருப்பது அரசாங்கத்தின் தொழிலாளர்கள் கொள்கையிலே இருக்கக்கூடிய பெரும் குறை.

அடுத்து அரசாங்கத்தின் மூலம் நடைபெறக்கூடிய போக்குவரத்திலே பணிபுரியக் கூடிய தொழிலாளர்களுக்கு போனஸ் ஒரு தலைபட்சமாக குறைக்கப்பட்டு இருக்கின்றது. இதிலேயும் அரசாங்கத்திற்குச் சரியான கொள்கை இல்லை என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்து நான் சொல்ல விரும்புவது தன்னிறைவுத் திட்டம் பற்றி. இது மக்களுக்கு பயனளிக்கக்கூடிய திட்டம் என்று சொல்லப்படுகிறபோது அங்கே செய்யப்படவேண்டிய வேலைகளை அரைகுறையாக விட்டுவிட்டு இலேசா மண்ணையும், கல்லையும் தூவிவிட்டு வேலை முடிந்துவிட்டது என்று கூறி காண்ட்ராக்டர்கள் பணத்தைப் பெற்றுக்கொண்டு போய்விடுகிறார்கள். ஆகவே அது அவர்களுடைய தன்னிறைவைத்தான் பூர்த்தி செய்கிறதே தவிர மக்களின் தன்னிறைவை இன்றைக்குச் செய்யாமல் போகின்றது என்பதுதான் பெரும்பான்மையாக இருக்கக்கூடிய குற்றச்சாட்டு. ஆனால் சகல கட்சியினைச் சார்ந்த பிரதிநிதிகளைக் கொண்ட குழுவினை அமைத்து அந்தக் குழுவின் மூலம் எந்த அளவுக்கு வேலை நடந்தது, எந்த அளவுக்குக் கல் போடப்பட்டது, எந்த அளவுக்கு மண் போடப்பட்டது என்பதைக் கண்காணித்துக் கொண்டால் ஓரளவுக்கு அதனால் மக்களுக்கு நன்மை கிடைக்கும் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

அடுத்து இந்த அரசாங்கத்திலே சமீப காலத்திலே ஏராளமான ஊழல் குற்றச்சாட்டுகள் வந்துகொண்டிருக்கின்றன. அரசாங்கத்திலே வேலை செய்யக்கூடிய ஊழியர்களுக்கு இடமாற்றம் வேண்டும் என்றால் அதற்காக அவர்கள் நிறைய பணம் கொடுத்துதான் அதைச் சாதிக்க முடியும் என்ற நிலைமை ஏற்பட்டிருப்பதாகப் பரவலாகப் பேசிக்கொள்கிறார்கள் பல விஷயங்களைக் கொடுக்கிறார்கள். ஆனால் மேற் காண்டு விவரங்களைத் தருவதற்கு அவர்கள் அஞ்சுகிறார்கள். இது ஒரு கடுமையான பிரச்சினை என்பதை அரசாங்கம் சிந்திக்கவேண்டும். அதே போன்று ஆரம்பக் கல்வி ஆசிரியர்களை நியமிக்க அதிகாரம் உள்ள அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆனால் அவ்வாறு நியமிக்கும் போதும் அதற்கும் 5000. 10000 ரூபாய் கொடுத்துத்தான் ஆக வேண்டும் என்ற பயங்கரமான நிலைமை இருப்பதாகச் செய்தி வருகின்றது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்கின்ற நேரத்திலே ஊழல்களைக் களைவோம் என்று உத்திரவாதம் கொடுத்தார்கள். எனவே ஊழல் செய்பவர்கள் யாராக இருந்தாலும் அதைச் செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து லஞ்ச லாவண்யத்தைக் களைவது இந்த அரசாங்கத்தினுடைய கடமை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து இன்றைக்கு வறட்சி ஏற்பட்டிருக்கின்றது. குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது, மின்சார நெருக்கடி வந்திருக்கின்றது. ஆனால் அரசாங்கம் மின்துறையில் பராமரிப்பு வேலைகளைச் சரியாகச் செய்யவில்லை. என்பதுதான் இதன் காரணம். மாண்புமிகு மின்சாரத்துறைஅமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டில் எவ்வளவு எளிதாகத் தெரிவித்தார்கள் மின்வெட்டு இருக்காது என்று. எந்த அடிப்படையிலே சொல்ல முடிந்தது? இன்றைக்கு பல இயந்திரங்கள் பழுதடைந்திருக்கின்றன என்று சொல்லப்படுகின்றது. இதிலே மத்திய சர்க்காருக்குப்பெரும் பொறுப்புஇருக்கின்றது. அவர்களுடைய கொள்கையின்அடிப்படை கோளாறு காரணமாகத்தான் இப்படிப்பட்ட நிலைமை. கல்பாக்கம் அணு மின் நிலையம் பற்றிய பிரச்சினை எவ்வளவு நாட்களாக இருக்கின்றது. இன்னும் அது துவக்கப்படவில்லை. ஆனால் மாநில அரசாவது தன்னுடைய பராமரிப்பிலே உள்ள நிலையங்களைச் சரியாக வைத்து இருக்கலாம். அவ்வாறு செய்யவில்லை என்பதுதான் எங்களுடைய விமரிசனம்.

தமிழ்நாடு அரசு அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளையும் கூப்பிட்டு அவர்கள் ஆலோசனைக் கேட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். பஞ்சாயத்துத் தேர்தலைப்பற்றி நாங்கள் கேள்விப்பட்டவுடன் அரிசன மக்களுக்காவும், பெண்களுக்காகவும் ஒதுக்கீடு செய்ததை. நாங்கள் ஆதரித்தோம். அதற்காக எந்தவிதமான ஆட்சேபனையையும் எங்கள் கட்சியில் போடவில்லை. இவ்வளவு நாட்கள் ஆகியும் அந்தப் பஞ்சாயத்துத்



தேர்தலோ, முனிசிபல் தேர்தலோ நடைபெறவில்லை. அவைகளில் தனி அதிகாரிகள் காட்டு ஆட்சி நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். நாட்டில் யார் வேண்டுமானாலும் பஞ்சாயத்தில் இருந்து கொண்டு போகட்டும். தேர்தல் நடத்தினால் எங்களுக்கு என்று ஒரு ஆள் இருப்பார்கள் என்று மக்கள் கூறுகிறார்கள். பல ஆண்டுக் காலமாகத் தேர்தலை நடத்தாமல் இருக்கிறீர்கள். கோர்ட்டில் உள்ள தடைகளை எல்லாம் வெகு சீக்கிரமாக நீக்க நடவடிக்கை எடுத்து மக்களுடைய ஜனநாயக உரிமைகளைக் காக்க வேண்டும் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரையின் மீது என்னுடைய கருத்தைச் சொல்ல ஆரம்பிக்கிறேன். ஆளுநர் அவர்கள் உரையிலே இலவச உணவுத் திட்டம் பற்றி மிகவும் பிரமாதமாக விளக்கமாக சொல்லியிருக்கிறீர்கள். அதை ஏற்கனவே நாங்கள் வரவேற்று இருந்கிறோம். இப்போதும் அதை வரவேற்கிறோம். ஆனால் அதில் இருக்கக்கூடிய, அடிக்கடி ஏற்படக்கூடிய சங்கடங்களை பேப்பரிலே பார்க்கிறபோது மிகவும் வருத்தமாக இருக்கிறது. ஏறத்தாழ 60 லட்சம் குழந்தைகளுக்கு இலவச உணவு பல மையங்கள் மூலம் வழங்குகிறீர்கள். அதில் ஏதாவது குறைகள் இருந்துதான் தீரும். அதை எவ்வளவுக்கு எவ்வளவு குறை இல்லாமல் செய்ய வேண்டுமோ அவ்வளவுக்கு அவ்வளவு குறை இல்லாமல் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. நிரந்தரமாக அரிசி உணவு கொடுப்பதற்குப் பதிலாக ஒரு நாள் அரிசி, ஒரு நாள் கோதுமை, ஒரு நாள் கேழ்வரகைக் களியாக செய்து சாம்பார், கீரை இவைகளை சேர்த்து போட்டால் அது மிகவும் நல்லதாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றுகூட நீங்கள் சான்னீர்கள் 33, 34 ஆயிரம் ஆசிரியர்களை இப்பணியிலிருந்து எடுத்துவிட்டு விதவைகளையும் பெண்களையும் போட்டிருப்பதாக. அவர்கள் சுத்தமாக பிள்ளைகளுக்கு உணவை சமைத்துப் போடுகிறார்களா என்று பராமரிக்க வேண்டும். பல மையங்களில் நான் போய்ப் பார்த்தேன். சமைக்கும் இடம் சுத்தமாக இருக்கிறது. ஆனால் பிள்ளைகள் உணவு உண்ணும் இடம் அவ்வளவு சுத்தமாக இல்லை; அசுத்தமாக இருக்கிறது. அதைப் போக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(திரு எஸ்.ஜி. ஹாஜா செரீப்) [1983 பிப்ரவரி 1

உணவு பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. போன வருடம் கூட மழை பொய்த்ததால் உணவு பற்றாக்குறை வந்தது. இந்த வருடம் அதை விட சிரமம் அதிகமாக இருக்கிறது. ஆனால் சென்ற வருடம் எல்லாம் நம் மாநிலத்திலிருந்து கேரளாவுக்கு நிறைய அரிசி போய்க் கொண்டிருந்தது. அதை நீங்கள் ஏன் தடுக்கவில்லை. அந்த அரிசியைத் தடுத்து நீங்கள் அவைகளை ஸ்டாக் செய்திருக்கலாம். அதுவும் இல்லாமல் பக்கத்து மாநிலமான ஆந்திராவிலிருந்து நிறைய சரக்கு நம் ஊருக்கு வந்து கொண்டிருக்கிறது. நீங்கள் இதில் எல்லாம் முன்னெச்சரிக்கையாக அந்த அரிசிகளை வாங்கி ஸ்டாக் செய்திருந்தால் இப்போது இந்தப் பற்றாக்குறை நேரத்தில் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அதில் நீங்கள் கவனம் செலுத்தவில்லை என்று உங்கள் மேல் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது கூட ஆந்திராவில் நிறைய வாங்கலாம், புதிய சட்டசபை வந்திருக்கிறது இங்குள்ள முதலமைச்சர் அவர்களோ அல்லது நிதி அமைச்சர் அவர்களோ உடனே அங்கு சென்று பேச்சு வார்த்தை நடத்தி லட்சக் கணக்கான டன்கள் அரிசி வாங்குவதற்கு நல்ல வாய்ப்பு உண்டு அப்படி வாங்கும்போது நீங்கள் ரயில்வேகள் கொண்டு வருவதற்குப் பதிலாகக் கப்பல் மூலம் கொண்டு வருவது நல்லது. ஒரு கப்பலில் 10 ஆயிரம் டன்னை ஏக காலத்தில் ஏற்றிக் கொண்டு வரமுடியும். இதே மாதிரி 1949—50 ஆம் ஆண்டுகளில் செய்திருக்கிறோம். அப்போது மிகவும் பற்றாக்குறை இருக்கும்போது ஆந்திராவிலிருந்து காக்கிநாடா துறைமுகத்தின் மூலம் இங்கே உள்ள சென்னை, விசாகப்பட்டினம், நாகப்பட்டினம் துறைமுகங்களுக்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். நீங்கள் இந்த விஷயத்தில் எச்சரிக்கையாக இல்லாமல், முன் யோசனை இல்லாமல் நடந்து கொண்டிருக்கிறீர்கள்.

திரு. கோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திராவிலிருந்து அரிசி கொண்டு வருவது ரொம்ப அவசியம். ஆந்திராவிலிருந்து இங்கே கொண்டு வருவதற்கு ஒரு மூட்டைக்கு 35 ரூபாய் செலவு ஆகிறது. காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் கப்பல் வைத்திருக்கிறார்கள். அதன் மூலம் இங்கே கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்: பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் ஆயிரக்கணக்கான வேகன்கள் வேண்டும் என்று இன்டெண்டு செய்தால் உங்களுக்கு கிடைக்காது. அப்புறம் பழி பாவத்தை சென்ட்ரல் கவர்ன்மெண்டு மீது போடுகிறீர்கள். ஒரு கப்பல் மூலம் 10 ஆயிரம் டன் கொண்டு வரமுடியும். அங்கிருந்து மெட்ராஸுக்கு ஒன்றும் தூத்துக்குடிக்கு ஒன்றும் கொண்டு வரலாம்.



1983 பிப்ரவரி 1] (திரு.கே.எஸ்.ஜி. ஹாஜாசெரீப்)

(பிற்பகல் 12—40)

என்ன காரணத்தினாலே நீங்கள் வேகமாக இல்லாமல் பெர்ஸுவேஸிவ் எஃபர்ட்ஸ் இல்லாமல் இருக்கிறீர்கள் என்று தெரியவில்லை. அப்படி இருந்துவிட்டு பின்னால் இப்படிப்பட்ட நிலைமையை ஏற்படுத்திவிடுகிறீர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே நீங்கள் வீரியத்தைப் பார்க்காமல் சக்ஸஸ்ப்புல்லாக இந்த முறையை அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எலக்ட்ரிசிடி பற்றாக்குறைபற்றி அதிகமாக இங்கே பேசப்பட்டது. இந்தப் பற்றாக்குறைக்குப் பூராவும் என்று சொல்ல மாட்டேன்—மிகுதியாக இந்த மாநில அரசுதான். காரணம் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன் அதிலே எனக்கு ஒரே ஆச்சரியம். Electricity Minister is an Engineer; B.E., படித்த Engineer; one of the outstanding Engineers என்று நான் கேள்விப்படுகிறேன். அவர் காலத்திலே elcetricity thermal station சரியாக இயங்கவில்லை என்றால் அவர்கள் அஜாக்கிரதை காட்டுகிறார்களா அல்லதுஅவர்களுக்குச் சரியான தகவல்கொடுக்கவில்லையா என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். எனக்குத் தெரிந்த மட்டில் 3, 4 பெரிய இஞ்சினியர்கள் அஜாக்கிரதை ஏற்பட்டதன் காரணமாக அவர்களை கம்பல் பண்ணி ரெஸிக்னேஷன் செய்து போய்விட்டார்கள் என்று நினைக்கிறேன். பெல் நிறுவனத்திலிருந்து வந்து செய்த பிறகு தான் ஸ்தாபனம் ஓடுகிறது என்ற நிலைமை இருக்கிறது. இல்லையென்றால் அடிக்கடி தொந்திரவு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு திரு.ச. இராமச்சந்திரன்: குஜராத்தில் 100-க்கு 100 மின்வெட்டு அமல்படுத்தியிருக்கிறார்களே, அங்கேயும் இதுதான் காரணமா?

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்: நம் மாநிலத்தில் 1975 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன்—ஒரு பெரிய மின்வெட்டு வந்தது. அப்போது மே மாதம் என்று நினைக்கிறேன். ஜீரோ மின்வெட்டு கொண்டு வந்தார்கள். பருவ மழை சீக்கிரமாக வந்தவுடன் உடனே எடுத்துவிட்டார்கள். ஆனால் இப்போது அக்டோபரில் மின்வெட்டு ஆரம்பித்து பீப்ரவரி வரை வந்திருக்கிறது. இன்னும் எவ்வளவு நாட்களுக்கு இருக்கப் போகிறது என்று தெரியவில்லை. நாம் குஜராத், பஞ்சாப், மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களை எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. நம் மாநிலத்திலே நாம் சுறுசுறுப்பாக, அக்கறை எடுத்து எடுத்து எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமோ அப்படி இருக்க வேண்டும்....

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்— தலைமை)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பஞ்சாப், குஜராத் மாநிலங்களை எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று சொல்கிறார்கள். அப்படியானால் ஒருமைப்பாட்டிலே அவர்களுக்கு நம்பிக்கையில்லையா?

திரு. கே. எஸ். ஜி ஹாஜா செரீப்: எனக்கு ஒருமைப்பாட்டில் தீவிர நம்பிக்கை. நீங்கள் அதைக்கொண்டு திசைமாற்ற வேண்டாம். நம் காரியத்திலே நாம் கண்ணாக இருக்க வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடிக்கடி மின்சாரப் பற்றாக்குறை வந்தால் எந்த ஒரு பெரிய தொழிற்சாலையும், சிறிய தொழிற்சாலையும்,நிரந்தர தொழிற்சாலையும் எப்படி வரும் இங்கே? இன்றைக்கு மனிதனுக்கு எப்படி உணவு, காற்று அவசியப் பண்டமாக இருக்கிறதோ அதைப்போன்று மின்சாரமும் அவசியப் பண்டமாக இருக்கிறது. எவ்வளவு சீராக கவனிக்க முடியுமோ கவனித்து ஷார்ட்டேஜை தவிர்த்து நடவடிக்கை எடுத்தால் செழிப்பாக இருக்கும். இன்றைக்குப் பற்றாக்குறையின் காரணமாக எத்தனைதொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. அதனால் நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்கள் நட்டம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது.

இரண்டு மாதங்களுக்கு முன்னால் ஓசூரிலிருந்து இங்கே ஒரு குழு வந்தது. அவர்கள் மின்சாரத்துறை அமைச்சரையும், தொழில் அமைச்சரையும் சென்று பார்த்தார்கள். அவர்கள் வெகு கருணையுடன் பேச வேண்டியதை செய்வோம் என்றார்கள்.

அவர்கள் சீப் மினிஸ்ட்டரை பாக்கவேண்டுமென்று என்னை வற்புறுத்தினார்கள். நான் அழைத்துக் கொண்டு போனேன். அவர்களது குறைகள் எல்லாம் பற்றாக்குறை இருக்கிறபோது ஓசூர் தொழிற்பேட்டைகளுக்கு 9 மெகாவாட் கிடைக்க வேண்டும். ஆனால் நவம்பர் 1–ம் தேதியிலிருந்து சராசரியாக ஒரு மெகாவாட் தான் கிடைத்துக் கொண்டிருக்கிறது. நாங்கள் என்ன செய்ய முடியும்? 200 கோடி ரூபாய் முதலீடு செய்திருக்கிறோம். 7000 பேர்கள் இருக்கிறார்கள். இதற்கு நீங்கள்தான் வழி செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகவும் பொறுமையுடன் கேட்டு விட்டு அவசியம் இதில் என்ன செய்ய வேண்டுமோ, அதைச் செய்கிறேன் என்றார்கள். இன்றைக்குப் பற்றாக்குறை அதிகமாக இருக்கிறது. அதன் காரணமாக உற்பத்தி இல்லை. அதனால் பணப்புழக்கம் இல்லைதொழிலாளர்களுக்கு கூலி கொடுக்கமுடியாது. இவைகளால் தான் அரசாங்கத்திற்கு சேல்ஸ் டாக்ஸும் மிகவும் கம்மியாக வருகிறது. இதன் காரணமாக மிகவும் சிக்கலான பிரச்சினைகளை உண்டாக்கி விட்டீர்கள் என்று சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இதை எப்படி தடுப்பது? ஒன்று 'பெல்' இன்ஜினியர்களை நிரந்தரமாக எடுத்துக் கொள்ள வேண்டும். எங்கெங்கு இயந்திரங்கள் சரியாக இயங்கவில்லையோ அங்கு



அவர்களை அனுப்பி சரி செய்யலாம். அல்லது அந்த ஸ்தாபனத்திடம் நம் தெர்மல் நிலையங்களை ஒப்படைக்க வேண்டும். இதை விட்டு விட்டு வேறு எதையோ காரணமாக சொல்கிறீர்கள். நிலக்கரி கொண்டு வருவது கஷ்டம் என்று சொல்கிறீர்கள். நிலக்கரி கொண்டு வருவதற்கு ஒரு காண்ட்ராக்ட் , கொடுத்திருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். கரம்சந்த் தாபார் என்ற பெரிய நிறுவனத்திற்குக் கொடுத்திருக்கிறீர்கள் என்று கருதுகிறேன். அவர்கள் பெரிய நிலக்கரி சுரங்கம் வைத்திருக்கிறார்கள். சுரங்கத்திலிருந்து அவர்கள் எடுத்து துறைமுகத்திற்குக் கொண்டு போய்' அங்கிருந்து தூத்துக்குடிக்கு கப்பல் மூலமாக கொண்டு வந்து கொடுக்க வேண்டுமென்று சொல்கிறீர்கள்.

I am not able to understand why you cannot compel those people to execute the agreement. There is no facility in Tuticorin Port as far as I am aware. Mr. Deputy Speaker, Sir, you can discharge 1.75 lakh tonnes every month there. Only now we have got a Conveyor Belt system. I am told that system has not come into effect. By this conveyor belt system we can certainly handle as far as possible 1.5 lakh tonnes or 1.75 lakh tonnes இன்றைக்கு கப்பல் கிடைக்கவில்லை என்று சொல்கிறீர்கள். பலமுறைகள் நானே இங்கு சொல்லியிருக்கிறேன். கப்பல் உங்களுக்கு கிடைப்பதில் சங்கடம் இருந்தால்

I will certainly assist you. Even now I say most categorically that I will act as your honorary broker in getting as many steamers as possible to see that you transport as much coal as possible, provided you can ......

THE HON. THIRU S. RAMACHANDRAN: Mr. Deputy Speaker Sir, this is the first time that he has given me an opportunity to thank him for his voluntary assistance, and whenever the need arises, I am sure, I will make use of it.

THIRU K.S.G. HAJA SHAREEF: Mr. Deputy Speaker Sir, I am afraid the Hon. Minister has not taken my offer even previously also. I have said on the Floor of this Assembly many times that I am only in a small trade and I will certainly use my good offices to get as many steamers as possible and as cheap as possible, provided the Government can give me an assurance that there will be a quick turn out of ships. Shipping is a very costly industry. If a ship remains idle for a day it will cost about Rs. 60, 000-to Rs. 70, 000/- a day. So if you take a steamer ......

THE HON. THIRU S. RAMACHANDRAN: Mr. Deputy Speaker, Sir, only a word of caution. It should not be taken that the Hon. Member is canvassing for his Company. It only means......

திரு. என். சங்கரய்யா: தமிழில் சொன்னால்தான் மற்றவர்களுக்கெல்லாம் புரியும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அவர் அவ்வளவு வெளிப்படையாகச் சொல்கிறாரே தவிர வேறு ஒன்றும் இல்லை.

(பிற்பகல் 12-50)

THIRU K.S.G. HAJA SHAREEF: Sir, I am not canvassing for my Company for whom I am an agent but I am giving this offer to the Government to enable them to get as much stock as possible so that their allegation against the Central Government can be mitigated to a considerable extent. I am as much interested in the welfare of our State as any other member in this House. I am certainly one of those who have been canvassing for many industries to come. But I have failed in that effort, because of your ill-attention to this and also because of your lethargic attitude. Because of that an impression has been created that you are a Government which is more concerned with "vizha" and conducting big functions no adequate attention has been paid to the industrialisation of this State. The industries are not coming because to begin an industry it will cost millions and millions of rupees, and it will take even crores of rupees. You have not provided many infrastructural facilities in so many industrial estates that you have created. I am not able to understand that when this is the situation how you can create many more new Industrial and Estates give a guarantee for five years year to those who can start industries there, உங்களுக்கு எந்தவிதமானக் கஷ்டமும் வராமல் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்று சொல்ல?

ஹோசூரை எடுத்துக் கொண்டால், ரூ.200 கோடியை அங்கு போட்டதற்கு இன்டஸ்ட்ரியலிஸ்டுகளுக்கு அங்கே என்ன செய்திருக்கிறீர்கள்? தண்ணீர் இல்லை, பவர் இல்லை, ரோடு இல்லை, இன்னும் என்னென்னமோ வசதிகள் இல்லை. ஹோசூரிலே ஒரு ஆறு இருக்கிறது. அந்த ஆற்றை சிப்காட்டுக்குக் கொண்டு வரவேண்டுமென்று 3 வருஷத்திற்கு முன்னாலேயே நாங்கள் ஒரு திட்டம் போட்டோம். இதுவரையில் அந்த ஆற்றைக் கொண்டு வரவில்லை. சிலர் 'வாட்டர் பேஸ்ட் இண்டஸ்ட்ரீஸ்' இருக்கின்றன. ஏன் அந்த ஆறை நீங்கள் எடுத்துக் கொள்ள முடியவில்லை. யாரோ இரண்டு மூன்று பேர்கள் வழக்கு தாவா போட்டிருக்கிறார்கள். அதன் காரணமாக கொண்டு வர முடியவில்லையென்று சொல்கிறார்கள்.



You think you cannot do it. You have not done it. You have failed to do it.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தாமதம் அரசிடத்திலே அல்ல. அது வழக்கு மன்றத்திலே இருக்கிறது.

THIRU K.S.G. HAJA SHAREEF: Sir, I can tell my Hon esteemed Minister for industries that in 1965-66 and 1966—67. we organised an international industrial fair in Madras. We took Anna Nagar for clearance. When we began to clear about 650 acres of land, innumerable people rushed to the Court to stop it. All that belonged to them. நிறைய குட்டை, குளம், மேடு, பள்ளமாக இருந்தது. Within six months, the whole thing was amicably settled by the Congress Govermment and the credit goes to that Government.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக நாங்கள், வழக்கு மன்றத்திலே இருக்கின்ற வழக்குகளிலே இந்த அரசாங்கம் தலையிடுவதில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: இந்த அணையைக் கட்டுவதற்கான வேலை எப்பொழுது துவங்கப்பட்டது? வழக்கு எப்பொழுது வழக்கு மன்றத்திற்குப் போனது? இத்தனை ஆண்டு காலமாக, ஏன் அதைச் சீக்கிரம் முடிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. ஹாஜா ஷெரீப் அவர்கள் பேசுகிற பொழுது சொன்னார்கள். 3 ஆண்டுக் காலமாக வழக்கு மன்றத்திலே இருக்கிறது என்று, 3 ஆண்டுகளாக மட்டுமல்ல, 9 ஆண்டுகளாகக்கூட சில வழக்குகள் வழக்கு மன்றத்திலே இருக்கின்றன. எனவே, வழக்குமன்றத்திலே 6 மாதத்திலேகூட காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே தீர்ப்பைப் பெற்றிருக்கிறார்கள்.

* * * * *

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நீதி மன்றத்திலே, நீதிபதிகளிடம் தலையிட்டு தீர்ப்பு பெறுவதில்லை. ஆனால் வழக்குகளைத் துரிதப்படுத்த வேண்டுமென்று வழக்கறிஞர்கள் வாதாடி துரிதப்படுத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர் பேசும் பொழுது * * * என்று சொன்னார்.

நீதிபதிகளைப் பற்றிய குறிப்பு வேண்டாம். ஆகவே, அதை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

THIRU K. S. G. HAJA SHAREEF: Mr. Deputy Speaker Sir, I am thoroughly disappointed with the answer given by the Hon. Minister. This is for a public purpose. This is of protecting nearly 200 to 250 industries that have been located there. You want more employment, you want more production, you more money to flow. But at the same time you have not given necessary facilities. You have not created the infra-structural fecilities I therefore charge that the Government have been callous in not giving all the faciiities to the industries. If that is the case, how you can expect more industries to come. It is a fact that more industries have not come, because I am afraid that you will not stand by them in their difficult time.

நம்முடைய தொழில் துறை அமைச்சர் அவர்கள் பலமுறை பம்பாய்க்கும் கல்கத்தாவுக்கும் சென்றார்கள். அங்கே தொழில் அதிபர்களைக் கூப்பிட்டு, எங்கள் ஊருக்கு வாருங்கள். நாங்கள் பெரிய இன்டஸ்ரீட்ஸ்கள் ஏற்படுத்துவதற்கு உபயோகமாக இருக்கிறோம் என்றுசொல்லிகான்வாஸ் செய்ததாகத் தெரிகிறது. எத்தனை இண்டஸ்ட்யடரிஸ்ட்ஸ் இங்கே வந்து விட்டார்கள்? கேன்வேஸ் செய்தால் மட்டும் போதுமா? வந்து விடுவார்களா? நீங்கள் எவ்வளவு கண்ணுங் கருத்துமாக இருக்கிறீர்கள் என்று அவர்கள் பார்க்க மாட்டார்களா?

I have said many times on the floor of the House that this Government is not giving as much important attention to big industries and productive industries as they are giving to unproductve industries. This is a fact. The Government, the State Government is putting the blame on the Centre or the industrialists for not coming forward to start industries in this State. I want to insist that a Commission or Committee be appointed, consisting of your own Government officials who are experts in this field and other people, who are making research on industries and business people to find out why Industries have not come in this State and what are the difficulties that are existing here for the Industrialists in starting an industry here, in Tamil Nadu. All these things will bring out the truth. If the truth comes out the Government can take adequate steps and pay adequate attention to see that at least the existing industries work well.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





எவ்வளவோ பெரிய கஷ்டங்களெல்லாம் இருக்கின்றன. 100 இலட்சம், 50 இலட்சம், 7 கோடி 3 கோடி என்று போடும் பொழுது அவர்களுக்குச் சரியான உதவி கிடைக்கவில்லை என்றால் சௌகரியங்கள் செய்து செய்து கொடுக்கப்படவில்லை என்றால் வீண் விரயமாக அந்தல பணம் போகுமே தவிர அதிலே புரடக்ஷன் வராது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் அறிக்கையிலே பஞ்சாயத்து போர்டு தேர்தல் பற்றியோ, முனிசிபல் தேர்தல் பற்றியோ, சிட்டி எலக்ஷனைப் பற்றியோ ஒன்றுமே கூறாதது மிகவும் வருத்தம் தருகின்ற முறையில் இருக்கிறது. எத்தனை வருட காலமாக நீங்கள் தேர்தலை நடத்தாமல் இப்படி மாதிரி தள்ளிக் கொண்டே போவீர்கள்? எத்தனை தடவை முதலமைச்சரவர்கள் Independence day Celebration போது கோட்டை மீது ஏறிக் கொண்டு இந்த வருஷம் அவசியம் நாங்கள் எலெக்ஷனை நடத்தப் போகிறோம் என்று தெரிவித்திருக்கிறார்கள்? நீங்கள் எலெக்ஷனை நடத்த மாட்டீர்கள் என்று தான் எனக்குத் தெரிகிறது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, பஞ்சாத்யதுத் தேர்தலை வெகு சீக்கிரமாக நடத்த வேண்டுமென்பதற்காகத் தான் பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது என்பது இந்த மாமன்றத்திற்கும் தெரியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். மேலும் அனைத்துக் கட்சி தலைவர்களுடைய கூட்டத்தைக் கூட்டி, இருக்கின்ற நிலைமைகளையெல்லாம் நாம் அவர்களுக்கு விரிவாக சொல்லியிருக்கிறோம். விளக்கமாகச் சொல்லியிருக்கிறோம், எல்லோருமே ஏற்றுக்கொள்ளும் வகையிலேதான் இன்று உச்ச நீதி மன்றத்தில் இருக்கும் முறையீடுகளை உடனடியாக நடத்திமுடிக்க வேண்டுமென்ற ஒரே எண்ணத்தை எல்லோரும் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். அந்த எண்ணத்தின் அடிப்படையிலே தான் உச்ச நீதிமன்றத்தில் உள்ள மேல் முறையீடுகளை உடனடியாக நடைமுறைப்படுத்தவும், நடத்தவும் இன்று விரைவிலே நடவடிக்கைகளை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். அது முடிந்த பிறகு தான் நாம் தேர்தலை நடத்த முடியும்.

திரு. கே.எஸ். ஜி. ஹாஜாசெரீப்: உச்சநீதிமன்றத்திற்குப் போகும் விஷயம் எதனால் ஏற்பட்டது என்று விளக்கமாகப் பத்திரிகைகளிலே எழுதியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத்தலைவரவர்களே, உச்ச நீதிமன்றத்திற்கு யார் போயிருக்கிறார்கள் என்பதை வேண்டுமானால் நான் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன், நீங்கள் ஏற்பதாக இருந்தால். கட்சியின் அடிப்படையிலே ஒரு சிலர் சென்றிருக்கிறார்கள். நான் அதையெல்லாம் மூடி மறைத்துப் பேச வேண்டுமென்ற எண்ணத்தில் தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் இதையெல்லாம் மனந்திறந்து பேச வேண்டும். சொல்ல வேண்டுமென்று பணித்தால் உண்மையிலே நான் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்: உச்சநீதிமன்றத்திற்குப் போகும் நிலைமையை ஏன் ஏற்படுத்தினார்கள்? சரி அதை விட்டு விடுகிறேன். ஏன் சிட்டி கார்ப்பரேஷனுக்குத் தேர்தல் நடத்தவில்லை, பயமா?

மாண்புமிகு திரு. ப.குழந்தைவேலு: துணைத் தலைவரவர்களே, பயம் என்ற வார்த்தைக்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் சம்பந்தமே கிடையாது, அது மட்டுமல்ல, பயந்து கொண்டிருக்கின்றவர்கள், நீங்கள் இப்போது எதிர்க்கட்சி வரிசையிலே உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள் என்பதையும் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே எஸ். ஜி. ஹாஜா செரீப்: சார், வாஸ்தவத்திலேயே நீங்கள் பயப்படுகிறீர்கள், அதனாலே தான் சிட்டி கார்ப்பரேஷன் எலக்ஷனைக் கொண்டு வருவதற்குத் தாமதப் படுத்துகிறீர்கள் என்று நான் நிரந்தரமாகச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அப்படி நடத்த வேண்டுமென்றால் நீங்கள் ஏன் எலெக்ஷனைக் கொண்டு வர முடியாது? ஏன் கொண்டு வரவில்லை? சிட்டி என்ன மாதிரி இருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். நான் சென்ற வருஷமே சொன்னேன்....

(பிற்பகல் 1—00)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத்தலைவர் அவர்களே, இதுவும் கூட ஏற்கனவே முடிவு செய்யப்பட்டு, அனைத்துக் கட்சித்தலைவர்களின் கூட்டத்திலே இதுவும் பேசி முடிவு செய் ப்பட்டது. முதலிலே பஞ்சாயத்துத்தேர்தல் நடத்தப்படும். பஞ்சாயத்துத் தேர்தல் நடத்தி முடிந்த பிறகு நகராட்சித் தேர்தல் நகராட்சிகளின் தேர்தல் முடிந்த பின்னர் இரண்டு மாநகராட்சிகளுக்கும் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பது ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட ஒன்று. இவைகளையெல்லாம் ஒத்துக். கொண்டு வந்து விட்டு, இந்த மாமன்றத்திலே திருத்திக் கூறுவது அல்லது திசை திருப்ப முயற்சி செய்வது சரியாக இருக்காது.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்; எடுத்த முடிவை முற்றிலும் நிறைவேற்றியாக வேண்டும். சிட்டி நகரமாக இல்லை, நரகமாக இருக்கிறது. ஒரு இடத்திலாவது தெருவிளக்கு எரிகிறதா?...,

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு; துணைத் தலைவர் அவர்களே, நான் பணிவோடு இந்திரா காங்கிரஸ் கட்சித்தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்வேன். இன்று இந்திரா காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற மாநிலங்களிலே தேர்தல்கள் நடைபெறவில்லை. குறிப்பாக நான் சொல்லிச் சொல்வேன். பக்கத்திலே இருக்கின்ற ஆந்திர மாநிலத்திலே இருக்கின்ற ஹைதராப்பாத் மாநகராட்சிக்குக் கடந்த 18 ஆண்டுகளா தேர்தல் நடைபெறவில்லை. 1964லே தேர்தல் நடந்தது, அதற்குப் பின்னாலே இன்னும் தேர்தல் நடைபெறவில்லை. அதற்கு நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள்?



திரு.கே.எஸ்.ஜி.ஹாஜா செரீப்: துணைத்தலைவர் அவர்களே, போன வருஷம் ஹைதராபாத்திலே பஞ்சாயத்து எலெக்ஷன் மிகவும் வெற்றிகரமாக நடைபெற்றது. ஏன் நீங்கள் பிற மாநிலங்களை நீங்கள் பார்க்கிறீர்கள். நீங்கள்செய்தது தவறு என்று சொன்னால் பக்கத்து மாநிலம், அண்டை மாநிலம் என்று ஏன் பேசுகிறீர்கள். அங்கே உள்ள மக்கள் கஷ்டப்படுகிறார்கள் என்றால், இங்கே உள்ளவர்களும் கஷ்டப்பட வேண்டுமா? சென்ற ஆண்டே சொன்னேன், இங்கே கொசுக் கடிக்கின்றது. என்று அமைச்சர் சொன்னார் என்னைக் கூட கடிக்கிறது. இரண்டு ஃபேன்கள் வைத்தும் கூட கடிக்கிறது என்றார் இதற்குக் காரணம் என்ன? நிறைய கழிவு நீர் போகிறது. கூவம் ரிவர், பிராஜக்டை தி.மு.க. காலத்தில் சிறந்த சாதனமாகச் செய்தார்கள். நீங்கள் வந்ததற்குப் பின்னாலே அதை பிளஷ் அவுட் பண்ணவில்லை. மாற்றந்தாய் மனப்பான்மையா? அதை ஃபிளஷ் அவுட் செய்தால் தண்ணீர் போய்க் கொண்டே இருக்கும். இப்போது அதை செய்யாததன் காரணமாக தண்ணீர் தேங்கிக் கொண்டே இருக்கிறது.

This has become an asylum of mosquitoes.
இதைப் பற்றி போன வாரம் இந்துப் பத்திரிகையிலே ஒரு ஆர்ட்டிகிள் வந்திருக்கின்றது. அதை நீங்கள் எடுத்துப் பார்க்க வேண்டும். எங்கெல்லாம் தண்ணீர்த் தேங்கி இருக்கிறதோ அங்கெல்லாம் கொசு வளர்கின்ற வாய்ப்பிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே நீங்கள் பக்கிங்காம் கால்வாயையும் கூவம் கால்வாயையும் சீர்படுத்தி தண்ணீரை 'ப்ளோ', செய்ததால் சரியாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பஞ்சயாத்து, முனிசிபல், கார்ப்பேஷனுக்கு எப்போது தேர்தல் வைக்கப் போகிறீர்கள். அதில் எந்தவிதமான மாறுபாடுள்ள கருத்தும் இருக்காது. கவர்னர் உரையின் மீது விவாதத்தை முடித்து வைத்து முதலமைச்சர் அவர்கள் பேசும் போது, இதற்கு 'பக்கா' உறுதி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

காவிரி நீர்ப் பிரச்சினை பற்றி மிகுதியாகப் பேசப்பட்டது. இது ஒரு பிரஸ்டீஜ் பிரச்னையாக ஆகிவிட்டது. நானும் பல முறை குண்டுராவ் அவர்களிடம் போய் கேட்டிருக்கிறேன். வீராப்பமொய்லியிடம் சென்று பார்த்தேன். நம்முடைய அரசாங்கமும் அவர்களை அணுகி இருக்கிறது. அப்போதெல்லாம் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். நீங்கள் உடனே டெலக்ஸ் டெலிபோன், பத்திரிகை மூலம் எழுத ஆரம்பித்தீர்கள்.

This has become apresti geous issue. I am one of those who warn, that the Cauvery water should be got in adequate velacity to cover large acreage that are being covered by Cauvery Water. The Mysore Government have developed and they are still developing. They wan

enormous amount of water for reclamation. The water is eminating from them. They say that they will keep adequate water and then give to us. But all the more you have failed to negotiate with persuation. You have failed to go frequently and failed to tackle in a tactful manner. If you have adopted that attitude, I am very positive that you could have got the water for the crops that are now getting dried.

அதே மாதிரி பெரிய பெரிய சிக்கலான விஷயங்களையெல்லாம் மத்திய அரசாங்கத்திலே உள்ளவர்கள் புரிந்து கொண்டு அதைத் தீர்த்துக் கொண்டு வருகிறார்கள். நம்முடைய இந்த எக்ஸ்போர்ட் பிகர் 8,000 கோடிக்கு மேலே ஏறிக்கொண்டு போகிறது. இது எவ்வளவு பெரிய சிக்கலான காரியம்? இன்டர்நேஷனல் விஷயம். பிசினஸ் விஷயம் எல்லாம் வருகிறது இவைகளைப் பற்றியெல்லாம் அடிக்கடி அவர்கள் பேசுகிறார்கள். பெரிய பெரியஆபீசர்கள் பேசுகிறார்கள். செக்ரட்டிரிகள் எல்லாம் பேசுகிறார்கள். மினிஸ்டர்ஸ் எல்லாம் பேசுகிறார்கள்; அங்கேயிருந்து, வெளி நாடுகளிலிருந்து எல்லாம்அவர்கள் இங்கே வருகிறார்கள். அடிக்கடி வந்து நம்மோடு உட்கார்ந்து கொண்டு பேசுகிறார்கள். பிரச்னைக்கு தீர்வு காண்கிறார்கள். அதை விட்டு விட்டு நீங்கள் எடுத்ததற்கெல்லாம் பத்திரிகைக்குப் போக வேண்டியது அல்லது டெலிபோன், அல்லது டெலக்ஸ் கொடுக்க வேண்டியது, லெட்டர் மூலமாக எழுத வேண்டியது.

It has become a question of prestige. This has become a prestigeous question between two states' people. I remember very well, last year when the Chief Minister called me and asked about this issue, I said that there are only two alternatives for us. One is that we can try to negotiate with the Central Government and see how much we can get, or we can leave the matter for arbitration or we can straigh away file a case in the Supreme Court with a prayer that the status should be continued till the matter is decided.

எதற்குமே ஒன்றும் செய்யவில்லை செய்யாமல் இப்போது காவிரி நீர் வரவில்லை வரவில்லை என்று சொன்னால் அதற்கு யார் பொறுப்பு, அதை விட்டுவிடுங்கள். இந்த சிட்டியினுடைய ஜனத்தொகை நாளுக்கு நாள் ஏறிக்கொண்டே போகிறது. என்பது உங்களுக்குத் தெரியும். நீங்கள் ஆட்சிக்கு வந்து 5, 6 வருஷம் ஆகிவிட்டது. இதற்காக என்ன தீவிரத் திட்டம் எடுத்துக் கொண்டீர்கள். இப்போது வீராணம் திட்டம் சரியாக இல்லை என்று சொல்கிறீர்கள். ஏன் கிருஷ்ணா நதித் திட்டத்தை நீங்கள் உருவாக்க முடியாது?

You have failed. My concern is that you are not very active in these things and see that [illegible]
A business man will be always active.



ஆரியக்கூத்தாடினாலும் நம்முடைய காரியத்திலே நீங்கள் கண்ணாக இருக்க வேண்டுமென்றுதான் நான் சொல்கிறேன் என்னுடைய தயக்கம், வருத்தம் அதுதான். எவ்வளவு பெரிய விழா வேண்டுமானாலும் எடுங்கள். முன்பு இருந்த மகாராஜக்கள் மாதிரி. ஜமீன்தார்கள் மாதிரி விழா எடுங்கள். இந்த ஜனங்களுக்கு ஒன்றும் செய்யவில்லை. அவர்களுடைய நிலை என்ன? ஆனால் வருஷா வருஷம் விழாக் கொண்டாடுகிறீர்கள். அதற்கு எனக்கு மறுப்பு இல்லை. அது உங்களுடைய விருப்பம். அதை நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. அதற்கு நான் மறுப்பு சொல்லவில்லை. இப்போது பண்ணவேண்டாம். நீங்கள் உங்களுடைய கோரிக்கைகளில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டுமே தவிர, எந்தெந்தத் துறையில் என்னென்ன செய்ய வேண்டுமென்பதை விட்டுவிட்டு, உங்களுடைய கொள்கையை விட்டுவிட்டீர்கள் என்றுதான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். உங்களுடைய கோரிக்கையை கைவிட்டு விட்டீர்கள் அதைச் சொல்லவில்லை என்று நான் சொல்கிறேன்.

Recently I have gone to the General Hospital and also the Stanley Hospital. I am shocked at the insanitary condition prevailing there. My friend the Hon'ble Minister for Health is also here. He is a Doctor. He is a very eminent Doctor. I have always a very high regard for him. I do not know how things can develop like this even under his leadership. Class III, and IV staff are most inadequate in the hospitals to deal with the crowd that is coming there.

நான் அங்கே பல வார்டுகளைப் பார்த்தேன். அந்த வார்டுகளின் முன்னாலே ஒரே துர்நாற்றம் அடிக்கிறது. நாம் அந்தப் பக்கம் போக முடியவில்லை. நாம் ஆஸ்பிடலுக்கு ரோய்க்கு ட்ரீட்மெண்டுக்காக என்று வந்து விட்டு, அதற்குப் பதிலாக பல நோய்களை அங்கிருந்து எடுத்துக் கொண்டு போகிறோம் என்று பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. இரண்டு நாளைக்கு முன்னாலே மதுரை ஆஸ்பத்திரியைப் பற்றி இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் ஒரு கட்டுரை வந்தது. நான் உடனடியாக அதை நம்முடைய சீப் மினிஸ்டரின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன் ஒரு ஆர்டிகல் வந்திருக்கிறது. நீங்கள் அதைப் பார்த்தீர்களா? மிகப் பெரிய பயங்கரமான ஒரு ஆர்டிகல் வந்திருக்கிறது என்று சொன்னேன். அதற்கு அவர்கள், ஹாஜா நான் அதைப் பார்த்தேன். இன்றைக்கு ஒரு பெரிய டாக்டர் வந்தார். மிகவும் நல்ல முறையிலே நடக்கிறது என்று சொன்னார் என்று சொல்கிறார்கள்.

(பிற்பகல் 1–10)

I said, if that is the fact I am the happiest man. But I heard that things are not very happy. The third and fourth class servants are not adequate enough even for the 25 of the people that are coming to the General Hospital and the Stanley Hospital.

இப்படி இருந்தால் எப்படி நாங்கள்.........

HONBLE Dr. H.V. HANDE: Mr. Speaker sir, I am greateful to the Hon'ble Leader of the Congress Party for bringing this to my attention. But already we have taken steps to limit the visitors. It is about nearly a month that we have passed orders that all visitors should be strictly prohibited unless they have something to do with the patients. I would request the Hon'ble Leader of the Congress Party to listen to me carefully so that he can answer my point if he thinks that something else is yet to be mentioned. We have given instructions to the Hospitals that these instructions should be strictly followed. This strictnesmay create some sort of discontentmen among staff. But we are also prepared to face the discontentment.

Secondly, we have also given strict instructions to the servant about whom my Hon'ble friend, the leader of the Congress Party has mentioned i.e. Class III and IV staff. If there is some resistance from their part we have decided to transfer them from one place to another. When we undertake such steps we request that no person should come and support such person. Nobody should come in support of them when we take desciplinary action against errand persons.

THIRU K. S. G. HAJA SHAREEF: I am thankful to my hon'ble friend, the Health Minister for his action.

We are sending Doctors to foreign countries to learn the techniques of latest treatment. The Chief Minister is very kind enongh to import modern machineries which can tackle any disease. It is his lofty idea. But what is the earthly use when you are not keeping the surrounding areas in a clean and good condition. They are most insanitary. Let me ask the Minister to take a group of members here both from your side and from the opposition and we can see the condition ourselves personally. The sanitary staff is inadequate, most inadequate.

Some Doctors even complain that they have no place where they can go for toilet. They have to go only outside or they have run their homes and there are not enough place for toilet in the whole hospital. Why don't you create more place in the hospitals for toilet. Why don't you think that these thinks are looked into.

You have not increased the staff, particularly the 3rd and 4th class staff. You have not extended them to the extent people that are admitted for treatment in the hospital. Pleasedo it.



புரட்சித் தலைவர் புரட்சிகரமான திட்டங்களைப் போடுகிறார். இதையும் ஒரு புரட்சிகரமான திட்டமாக எடுத்துக் கொண்டு நிறைவேற்றினால் பல லட்சக்கணக்கான பேர்களுடைய வாழ்த்துக்கள் அவருக்குக் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Let not my friend think that I am complaining about him. I am only complaining that adquate nember of staff and toilets are not being provided. This is alno one of the field wherein concentration has not been made in time, Please concentrate on this.

வீட்டிற்கு ஒருவருக்கு வேலை கொடுப்போம் என்று சொன்னார்கள்.

I want that this should be implemented. This has been said many times, but not at all implemented. It is a very ideal scheme.

நம்முடைய தொழில் அமைச்சர் கூட 'இன்டஸ்ட்ரீஸ் டெவலப்மென்ட் கவுன்சில், அமைக்கப் போகிறோம். அமைக்கப் போகிறோம் என்று இதுவரையில் 12 முறைக்குமேல் சொல்லி விட்டார்கள். சேம்பர் ஆப் காமர்ஸில் சொன்னார், வெளியே சொன்னார், பிரஸ்ஸிடத்தில் சொன்னார். ஆனால் எப்போது அமைக்கப் போகிறார் என்று தெரியவில்லை. அதிலே ஒன்று சொல்லியிருக்கிறார். அந்தக் கமிட்டியில் ஹாஜா ஷெரீப் இடம் பெறுவதற்கு வழியில்லை. அதிலே 'லெஜிஸ் லேட்டார்ஸ் யாரும் இருக்க மாட்டார்கள் என்று சொன்னார்கள்.

Why? Is it because Haja Shareef is making complaint against you? It is all right. Plerse don,t include me. But I wnnt that Industrial Development Cuuncil or Commissjon should be appointed very soon.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: சட்டமன்ற உறுப்பினருக்கு சட்ட மன்றத்திலே கோரிக்கைகளைச் சொல்வதற்கு வாய்ப்பு இருப்பதால், ஆலோசனைகளை எடுத்துச் சொல்கிற வாய்ப்பு இருப்பதால், இங்கே வாய்ப்பு இல்லாத தொழில் அதிபர்களுக்கு அந்தக் குழுவில் இடமளிக்கலாம் என்ற அந்த அடிப்படையில் சொன்னேன். நீங்கள் இடம் பெறக் கூடாது என்ற கருத்தில் நான் சொல்லவில்லை. உங்கள் ஆலோசனைகளை நாங்கள் என்றும் மதிக்கிறோம்.

THIRU K.S.G. HAJA SHAREEF: I would like to know how many Hon'ble Members here will know by and large the details of Industrial development and the difficulties that are there only a few/people who are in the field can know. From that angle I have been telling from the very beginning that if you can have a Development Council consisting of eminent Industrialist they will give some good suggestions They will tell the points that there to be considered for development. For the past three years you have been saying for about 12 times that you will constitute such Development Council, but you did not.

இது உங்களுடைய மந்தமான நிலையைக் காட்டுகிறது என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன் இந்த நிலையில் நீங்கள் சென்ட்ரல்கவர்ன்மென்ட்மேலே பழி போடுவது சரியல்ல தண்ணீர் இல்லையா சென்ட்ரல் கவர்ன்மெண்ட். coal இல்லையா சென்ட்ரல் கவர்ன்மென்ட் கப்பல் வாங்க முடியவில்லையா சென்ட்ரல் கவர்ன்மென்ட் என்று இப்படியே பழி போடுவதில் பயனிலலை.

ஏன் நீங்கள் கப்பல் வாங்க வேண்டும்? கப்பல் வாங்கிய எந்த கம்பெனியும் ஒரு 'ஹாப்பி பொசிஷனில், இல்லை. இந்தியாவை எடுத்துக் கொள்ளுங்கள்; பிரிட்டனை எடுத்துக் கொள்ளுங்கள் அமெரிக்காவை எடுத்துக் கொள்ளுங்கள். கிரீஸை எடுத்துக் கொள்ளுங்கள். எல்லா நாடுகளிலும் அப்படித் தான் இருக்கிறது. கிரீஸை எடுத்துக் கொண்டால் அவர்கள் பெரிய காபிட்டலிஸ்ட்; பெரிய கப்பல் கம்பெனிக்காரர்கள். நூற்றுக் கணக்கான கப்பல்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். பெரும் பாலும் சொந்தக்காரர்கள்தான் நிர்வாகம் நடத்துகிறார்கள். அப்படி இருந்தாலும் பல கப்பல்கள் அங்கே வேலையில்லாமல் துறைமுகத்தில் நிற்கின்றன. இந்த நேரத்தில் போய் நீங்கள் ஏன் கப்பல் வாங்க வேண்டும்? இங்கேயே எப்போது உங்களுக்கு கப்பல் வேண்டுமோ, அப்போது கேட்டவுடனே சரக்குகளைக் கொண்டு வர கப்பல் தயாராக இருக்கிறது. தேவையான போது எடுத்துக் கொள்ளலாம். இறக்குமதி செய்ய வேண்டுமென்று நீங்கள்கேட்கும் போது இதையெல்லாம் பரிசீலித்துதான் சொல்வார்கள்.

Mr. Depu y Speaker, Sir, The Central Government cannot oblig all the State to import whotever they want and whatever they want We have to think that the Central Government is helping certain sections.

In concl sion, I only request the Hon. Minister to appoint a Commission or a Committee consisting of lea ing officers, business people and res ch experts in the industrial development, to find out why the industries are not growing here, and what are the diffi ulties experienced by the existing industrices in this State.

நம்முடைய மாகாணத்தில் பெரிய தொழிற்சாலைகள் இல்லையா? பல தொழிற்சாலைகள் இருக்கின்றன. வாகன் ஃபாக்டரி இருக்கிறது. டாங்க் ஃபாக்டரி இருக்கிறது. ஸ்டீல் தொழிற்சாலை இருக்கிறது ஆனால்

Sir, All these indstries are suffering now on account of you policy of not taking adequate steps. Please do the needful before com plaining about anybody. Thank you.



மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹாஜா செரீப் அவர்கள் பேசுகின்றபோது சிலவற்றைச் சொன்னார்கள். மேதகு ஆளுநர் உரையிலே இந்துஸ்தான் போட்டோ பிலிம்— கலர் பிலிம் பிரிவு வேறு மாநிலத்திற்குப் போகக் கூடாது தமிழ்நாட்டிற்கு வரவேண்டும் என்று அவர்கள் வாயாலே சொல்லப் பட்டிருக்கிறது. எனவே காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் அப்படி போகிற முயற்சி இருக்குமானால், அதற்குக்கண்டனம் தெரிவித்து தமிழ்நாட்டுக்கே அந்த விரிவாக்க திட்டம் வரவேண்டுமென்று சொல்லி வலியுறுத்துவார்களா?

THIRU K·S.G.HAJA SHAREEF: Sir, By accident, a person could have born in Tamli Nadu or Kerala or Karnataka or Punjabh. But the fact is that we are all sons Mother India. Can you dispute it? That can never be disputed Centre is a centre which has to oblige all States. If there is proper development he e, if this State is already developed to a very considerable extent, there is nothing wrong to oblige other States which are not developed in industries. If you think that this 6s a wrong procedure, I do not know whether you are right in asking this question here. This is different. You should ask this question only in Parliament and not here. Thank you.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: துணைத் தலைவரவர்களே வீட்டிலே சாப்பாடு இல்லை என்றால், சமைத்துச் சாப்பிடுவதை விட்டு விட்டு, அடுத்த வீட்டிலே சமைத்து வைத்ததை எடுத்துச் சாப்பிடக்கூடாது. மற்ற மாநிலங்களிலே தொழிற்சாலை இல்லை என்றால் அங்கே இருக்கிற பொது துறையின் மூலம் தொழில் களைத் தொடங்கலாம். ஆனால் தமிழ்நாட்டில் இருக்கிற விரிவாக்கத்தை வேறு மாநிலத்திற்குக் கொண்டுச் செல்வதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதரிப்பது ஏமாற்றமாக இருக்கிறது.

(பிற்பகல் 1–20)

THIRU K.S.G, HAJA SHAREEF:- Sir, I am not acceyting his argument, nor am saying that the Central Government is right. But the Cenral Government have got dressuret from various other people. They cannot say no. Alredy we are having one factory establisqed here and this is only an escalation of that factory. I wish the Hon'ble Minister had told me much earlier. Then, I would have personally taken it up to Delhi at my own expense and not at the Government's expense to compel and coerce the Central Government to bring it here. You have not called us. That is the reason why I want an industrital Development Council to be appointed which you have failed to do in spite of givien one hundred and one promises.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனக்குத் தெரியாது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. ஏறத்தாழ இரண்டு வருடமாகவே இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் தொழிற்சாலையை விரிவுபடுத்துவது சம்பந்தமாக, அது ஏன் இன்னும் வரவில்லை என்று பல சட்டமன்ற உறுப்பினர்களால் பலமுறை இந்த அவையிலே பேசப்பட்டது..... (குறுக்கீடு)

THE HON. THIRU S. RAMACHANDRAN: Sir Does it mean that the Centre yields only to political pressures

THIRU K.S.G. HAJA SHAREEF: Sir, Yes it s. The centre yields not only for political pressure but they have to conduct themselves in a central manner.

THE HON THIRU S. RAMACHANDRAN: Sir' Is the Hon ble Leader of the Congress Party was mentioning that if he had known it much earlier, he could have got it done much earlier because the Centre is subjected to many pressures. Then it clearly indicates that the Centre goes only by political consideration and none else, according to his statement.

THIRU K.S.G. HAJA SHAREEF: Sir, There are many districts in our State which are completely devoid of any industries of appreciable nature. If those District people come and pressuris you, that the proposed Cement factory or the proposed textile factory should be locatted here', will you not oblige them?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரைக்கும், ஒரு வேளை அமைச்சர் மத்தியிலே. அல்லது உறுப்பினர்கள் மத்தியிலே வேண்டுமானால் மாவட்ட உணர்வுகள் இருக்கலாமே தவிர மாண்புமிகு முதலமைச்சரைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு எல்லா மாவட்டங்களும் ஒன்று தான். எல்லா மாவட்டங்களையும் அவர் தன்னுடைய மாவட்டங்களாகத் தான் நினைத்திருக்கிறார்கள். ஆனால், உத்திரபிரதேசம் என்கிறபோது, அதிலே இரண்டு பிரச்னைகள் இருக்கின்றன. ஒன்று மாண்புமிகு திவாரி அவர்களுடைய சொந்த மாவட்டம் என்பது, இன்னொன்று மாண்புமிகு பிரதமர் அவர்களுடைய தொகுதி என்பது. இப்படி பார்ஷியாலிட்டி காரணமாகத்தான் முன்னுரிமை காட்டியிருக்கிறார்கள், என்கிற பெயர் வந்துவிடக் கூடாதே என்றாவது தமிழகத்திற்கு இந்த போட்டோ பிலிம் விரிவாக்கத்தை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்க மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உதவி செய்வாரா? (மேசையை தட்டும் ஒலி)

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா. செரீப்: தலைவர் அவர்களே, எப்படி முதலமைச்சர் அவர்களுக்கு எல்லா டிஸ்டிரிக்டுகளும், எல்லா மக்களும் ஒன்றுதான் என்று நீங்கள் சொல்கிறீர்களோ, அப்படியே தான் சென்டிரல் கவர்ன்மெண்ட்டுக்கும் எல்லா ஸ்டேட்டுகளும் ஒன்றுதான். (மேசையை தட்டும் ஒலி) நீங்கள் எத்தனை தடவை இது விஷயமாக லெட்டர்கள், போன்கள், டெலக்ஸ் மெசேஜ்கள் என்று இல்லாமல் நேரிடையாக போய் உட்கார்ந்து காரியத்தை சாதிக்க முயற்சி எடுத்திருக்கிறீர்கள்? அதுதான் உங்களுடைய குற்றம்.



மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நானே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கடிதத்துடன் சென்று நேரிலேயே கொடுத்திருக்கிறேன். முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு திவாரியை சந்திக்கும் போதும் மாண்புமிகு பிரதமரைச் சந்திக்கும் போதும் எல்லா நேரங்களிலும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பார்க்கிற போதெல்லாம் சொல்லாமல் விட்டதே இல்லை. மாதத்திற்கு இரண்டு முறைகள் போய் நேரிடையாக முயற்சி செய்து விட்டு தான் வருகிறோம்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்: அழுத பிள்ளை தான் பால் குடிக்கும். அழாத பிள்ளை பால் குடிக்காது. தயவு செய்து நீங்கள் துரிதமாக அங்கே போய் கிட்டேயிருந்து காரியத்தை முடியுங்கள்.

மாண்புமிகு திரு. திருநாவுக்கரசு: துணைத் தலைவர் அவர்களே நாங்கள் தொடர்ந்து அழுது கொண்டு தான் இருக்கிறோம். ஆனால் பால்தான் கிடைக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவலகள் இத்துடன் முடிவுற்று, 2-2-1983 காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.23 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது

## 8. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

127. 1976-77 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் கணக்குகளின் தணிக்கை அறிக்கை (ஆங்கிலம்) (தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு மாநில வீட்டு வசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961) 125 (2) (அ) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

128. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் 1977-78 மற்றும் 1978-79 ஆண்டுக்கான தணிக்கை அறிக்கை (ஆங்கிலம்) தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப்பகுதிகள் (மேம்பாடு—அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 41ஆவது பிரிவு மற்றும் தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு மாநில வீட்டு வசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு 17/1961) 125 (2) (அ) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள் ஏதுமில்லை.

இணைப்பு.

(23 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 95-க்கான விடையைக் காண்க)

S.No. 140/S-1(8)

உள்ளடக்கம்

1. வினாக்கள்-விடைகள்: 2—2—1983

உடுக்குறியிட்ட வினாக்கள் 125—164

2. தகவல் கோரல்:—

(அ) அதிகாரிகள் மாடம் காலியாக இருத்தல் 127

(ஆ) துணைவினாவிற்கு விடையாக அவை முன் வைக்கப்பெற்ற அறிக்கை மீது வினா எழுப்புதல் 166

(இ) முன் அனுமதியின்றி எழுப்பப் பெறும் பிரச்சினை 166

(ஈ) உறுப்பினர்கள் விடுதியிலுள்ள தொலை பேசி சரிவர இயங்காமை 167

3 அறிவிப்பு:

(அ) ஒலி பெருக்கிகள் சரியான முறையில் பயன்படுத்துதல் 166

(ஆ) தலைமைச் செயலாளரிடமிருந்து செய்தி 230

4. கவன ஈர்ப்பு:—

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டக் கடன் 169

5. அரசினர் சட்ட முன்வடிவு:—

ஷெரிப் நியமனத்திற்கு வகை செய்யும் முத்திரைப் பத்திர (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1983 172

6. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்-விவாதம் (தொடர்ச்சி)

திரு. க. அன்பழகன் 173—20020, 1—213

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் 200—201,203—204

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் 209

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் 213—230

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 230

இணைப்பு

| பணிப் பேருந்துகளின் தரங்கள் | ஒரு கிலோ மீட்டர் தூரமுள்ள தொலைவிற்கு வசூலிக்கப்படும் கட்டணம் (பைசாக்களில்.) | | | | |
|---|---|---|---|---|---|
| | தமிழ்நாடு | ஆந்திரம் | கர்நாடகம் | கேரளம் | பாண்டிச்சேரி |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| விரைவுப் பேருந்துகள் Experess Services— | | | | | |
| (அ) சாதாரண வண்டிகள் | | | | | |
| (i) சமவெளிகளில் .. | 7½ | 10 | — | 9 | 6½ |
| (ii) மலைச்சாலைகளில் .. | 9½ | — | — | 11¼ | — |
| (ஆ) சொகுசு வண்டிகள் (Deluxe Coaches)— | | | | | |
| (i) சமவெளிகளில் .. | 9½ | 12 | 12 | 13½ | — |
| (ii) மலை சாலைகளில் .. | 11½ | — | — | 16¾ | — |
| (இ) சீர்வெளிச்சாதனம் பொருத்தப்பட்ட வண்டிகள் (Air Conditioned Coaches)— | | | | | |
| (i) சமவெளிகளில் .. | 14½ | ... | .. | — | — |
| (ii) மலைச்சாலைகளில் .. | 16½ | — | — | — | — |
| I. வெளியூர் பயணப் பேருந்துகள் (Monfussil Services)— | | | | | |
| (i) சமவெளிகளில் .. | 7½ | 8 | 8 | 7 | 6 |
| (ii) மலைச்சாலைகளில் .. | 9½ | — | 8½ | 8¾ | — |
| I பெருநகர் மற்றும் நகரப் பேருந்துகள் (Metropolition and Town Services)— | | | | | |
| (i) சமவெளிகளில்— | | | | | |
| (அ) முதல் நிலை 2 கிலோ மீட்டர்) .. | 30 | 30 | 30 | 40 | 20 |
| (ஆ) அடுத்துள்ள ஒவ்வொரு நிலைக்கும் .. | 10 (மூன்றாவது நிலைவரை, அடுத்துள்ள நிலைகளுக்கு 5 காசுகள்) | 10 (ஐந்தாவது நிலைவரை, அடுத்துள்ள நிலைகளுக்கு 5 காசுகள்) | 15 | — | 10 |
| (ii) மலைச்சாலைகளில் | | | | | |
| முதல் நிலைக்கு | 40 | — | — | 50 | — |

## தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை

புதன்கிழமை, 1983 பிப்ரவரி 2

தை 20, துந்துபி-திருவள்ளுவர் ஆண்டு 2014

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில், மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.''

கல்வி, ஒழுக்கம், அனுபவம் முதலியவற்றால் சிறந்த பெரியாரை, அவர் மகிழும் வண்ணம் போற்றித் தம் சுற்றத்தவருள் ஒருவராகக் கொள்ளுதல், ஒருவன் பெறுவதற்கு அரிய செல்வங்கள் பலவற்றுள்ளும் அருமையானது ஆகும்.

### 1. வினாக்கள் விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

கோவை மாவட்டம் கொழுமம் கிராம மீனவர் சங்கத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற மனு.

*வினா எண் 101 திரு. என். பழனிவேல்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் கொழுமம் கிராமத்திலிருந்து மீனவர் சங்கத்தின் சார்பில் 5-3-1982 ஆம் நாளன்று கோரிக்கை மனுக்கள் ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், என்னென்ன கோரிக்கைகள்?

(இ) எவை எவை நிறைவேற்றப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அ, ஆ மற்றும் இ கோவை மாவட்டம் கொழுமம் கிராமத்தில் உள்ள மீனவர் சங்கத்திடமிருந்து 5-3-82 ஆம் தேதியிட்ட கோரிக்கை மனு எதுவும் கிடைக்கப் பெறவில்லை. எனினும் இச்சங்கம் தனது 9-3-82 தேதியிடப்பட்டு கோவை மண்டல மீன்வள இயக்குநருக்கு அனுப்பிய மனுவில் மீன்வளர்ச்சிக் கழக ஆளுகைக்கு உட்பட்ட அமராவதி அணையிலிருந்து பிடிக்கப்படும் மீனை தனது விற்பனை நிலையங்கள் மூலம் விற்க அனுமதி கோரியது.

ஆனால், இச்சங்கம் தேதியிடாது பின்னர் அனுப்பிய மனு ஒன்றில் மீன் விற்பனை செய்து வந்த உடுமலைப்பேட்டை மீன் அங்காடி இடிக்கப்பட்டு புதிதாக நிர்மாணிக்கப்படுகின்ற நிலையில் உள்ளதால் இச்சங்கம் தற்போது மீன் விற்பனையில் ஈடுபட இயலாது என்று தெரிவித்துள்ளது. எனவே, தற்போது, மீன் விற்பனைக்கு தேவையில்லை என்று தெரிவித்தது. எனவே சங்கத்தின் 9-3-82 தேதியிடப்பட்ட மனுவில் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், கொழுமத்தைச் சேர்ந்த மீனவர்கள் 5-3-82 அன்று ஒரு லாரியில் நூற்றுக்கணக்கானவர்கள் வந்து இங்கே இருக்கக்கூடிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் எம். எல். ஏ.யான திரு. ஜேப்பியார் அவர்களின் மூலமாக அவர்கள் அனைவரும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே சேர்ந்து தங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுக்கவேண்டும் என்று அன்று சென்னையிலே ஒரு பேரணியினை நடத்தி மனுக்களைக் கொடுத்துச் சென்றார்கள். என்னிடத்திலே கூட ஒரு காப்பியினைக் கொடுத்தார்கள். நான் அதனை அன்றே சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும், அமைச்சரிடமும் கொடுத்தேன். ஆனால் அமைச்சர் அவர்கள் இப்போது அம்மாதிரி மனுக்கள் எதுவும் வரவில்லை என்று சொல்கிறார்கள். எனவே அதுபற்றி அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5-3-82 தேதியிடப் பற்ற மனு எதுவும் வரப்பெற்றதாகத் தகவல் இல்லை. இங்கே இருக்கக் கூடிய கோப்புக்களிலும் அவ்வாறு இல்லை. 9-3-82 தேதியிடப் பெற்ற மனு மட்டும்தான் வரப்பெற்றிருக்கின்றது. அந்த மனுவின் மீதுதான், அதாவது கோவை மண்டல மீன்வள இயக்குநருக்கு அனுப்பப்பட்ட அந்த மனுவின்மீதுதான் நடவடிக்கை எடுக்கப்படுகின்ற நிலையிலே பின்னர் ஒரு மனு வந்தது. எனவே அதன்படி நடவடிக்கை எடுக்கப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மீனவர்கள் இங்கே கடற்கரையிலே இருக்கின்றார்கள் மாதிரி அப்படிப்பட்டவர்கள் அல்ல என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். எனவே, அவர்களுக்கு ஒரு சரியான பாதுகாப்பு தருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அதாவது அவர்களுக்கு வீட்டுவசதி மற்றும் இதர கோரிக்கைகளைப் பெற்றுத் தருவதில் சரியான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த வகையான பாதுகாப்பு அவர்களுக்குத் தரப்படவேண்டும் என்று விவரக் குறிப்பு இல்லை. அவற்றைத் தந்தால் அதுபற்றிப் பரிசீலிக்கலாம். இப்போது சாதாரணமாக ஆங்காங்கே உள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக உரிமம் மற்றவைகளை வழங்குவதை அரசு மேற்கொண்டிருக்கின்றது. ஆனால் சில இடங்களிலே மீனவர்கள் அல்லாதவர்கள் அப்படிப்பட்ட சங்கங்களில் இடம் பெற்றிருக்கிறார்கள். எனவே இப்போது மீனவர்கள் மட்டும்தான் கூட்டுறவுச் சங்கங்களில் ஈடுபடல் வேண்டும் என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறோம். எனவே மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உரிமம் மற்றவைகளை வழங்க வேண்டும், அவர்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 2. தகவல் கோரல்

### (அ) அதிகாரிகள் மாடம் காலியாக இருத்தல்

திரு. எல். இளையபெருமாள்: தலைவரவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். கடந்த இரண்டு தினங்களாகவே இங்கே முக்கியமாக ஆளுநர் உரையின்மீது பல்வேறு பிரச்சினைகளைப் பற்றிப்பேசி பல்வேறு கேள்விகள் கேட்கின்றபோது அதிகாரிகள் இருக்கக் கூடிய இடத்திலே ஒரு அதிகாரி கூட வருவதில்லை என்ற நிலைமை இருக்கின்றது. நேற்று கூட மாலைப் பொழுதில்தான் அதிகாரிகள் வந்தார்கள். இன்றும் ஒரு அதிகாரிகூட வரவில்லை. அதற்கு என்ன காரணம்? அதிகாரிகள் ஸ்ட்ரைக் செய்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதிகாரிகள் வருவதும், வராததும் அரசினுடைய பொறுப்பு. இப்போது அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். எனவே இனிமேல் வருவார்கள் என்று நினைக்கிறேன்.

## 1. வினாக்கள்— விடைகள்—தொடர்ச்சி

### உடுக்குறியிட்ட வினாக்கள்—தொடர்ச்சி.

காரங்காட்டில் இறால் வளர்ப்புப் பண்ணை அமைக்கும் திட்டம்

வினா எண் 102—திரு. ச. அங்குசாமி மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவாடானை தொகுதி காரங்காட்டில் இறால் வளர்ப்புப் பண்ணை தொடங்குவது குறித்து செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: திருவாடானை தொகுதி காரங்காட்டில் மாதிரி இரால் வளர்ப்புப் பண்ணை ஒன்று அமைக்கும் திட்டம் ஏற்கெனவே அரசால் அங்கீகரிக்கப் பட்டு 19-4-82 அன்று பண்ணை கட்டுமானப்பணி துவக்கப் பட்டுள்ளது.

திரு. ச. அங்குசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த திட்டம் எப்போது ஆரம்பிக்கப்படும்? அது செயல்படக்கூடிய நிலைமை எந்த அளவில் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த திட்டம் ரூபாய் 75 ஆயிரம் மதிப்பு செலவில் ஆரம்பிக்கப்பட்டு அந்த திட்டம் துவங்கப்பட்டு ஒரு பகுதி வேலை நடைபெற்று முடிந்திருக்கிறது. மற்றப்பகுதி வேலைகள் நடைபெறவேண்டும். அதில் கிட்டத் தட்ட 50, 60 சதவீதம் வேலைகள் முடிவுற்று இருக்கின்றன. இன்னும் 40 சதவீத வேலைகள் முடிவுறும் தருவாயில் இருக் கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, காரங்காட்டில் இரால் வளர்ப்புப் பண்ணை தொடங்கப்பட்டு 60 சதவீத வேலைகள் முடிவுற்றிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். நன்றி. இப்படிப்பட்ட பண்ணைகளை பல இடங்களில் தொடங்கவேண்டிய சூழ்நிலையில் அரசாங்கம் இருக்கிறது என்பது தெரிகிறது. ஏன் என்றால் பழவேற்காடு என்ற இடத்தில் டாட்டா ஒரு பெரிய பண்ணையை அமைத்து அதில் இரால் முட்டைகளை அப்படி அப்படியே எடுத்து வளர்க்கக்கூடிய காரணத்தால் மீனவர்களுக்கு இதன் மூலம் வருவாய் குறைகிறது. அந்த திட்டத்தை மீனவர்களே சங்கமாக தொடங்கி இது போன்ற பண்ணைகளை நடத்துவதற்கு அரசு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதிரி இரால் வளர்ச்சிப் பண்ணை அமைத்து விஞ்ஞான அடிப்படையில் நூதனமான முறையில் இரால் வளர்ச்சிப் பண்ணைகளை மேற்கொள்ளும் முறைகளை மீனவர்களுக்கு அறிமுகப்படுத்தும் திட்டம் ஒன்றுக்கு 1980-81ம் ஆண்டில் ஒப்புதல் அளித்து அந்தத் திட்டத்தின்படி 10 இடங்களில் அந்த திட்டம் அமைக்கப்பட்டன. அவை (1) பழவேற்காடு, (2) வாணியம்சாவடி, (3) பரங்கிப்பேட்டை, (4) தொண்டியக்காடு, (5) ஏரிக்குளக்கரை, (6) கட்டுமாவடி, (7) கண்ணைமுனை, (8) கிழவைப்பார், (9) புன்னக்காயில், (10) காரங்காடு என்கிற அந்த 10 இடங்கள் அதில் பழவேற் காடும் இணைந்து உள்ளது.

வினாக்கள்—விடைகள்



திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இரால் வளர்க்கக்கூடிய பண்ணைகள் இன்னும எந்த எந்த இடத்தில் அமைப்பதற்கு அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. சென்ற ஆண்டு அரசுக்கு இரால் வளர்ப்பு மூலம் கிடைத்த வருமானம் எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரால் வளர்ப்புக்காக உகந்தது உவர் நீர் பகுதிகள் ஆகும். நான் முதலில் குறிப்பிட்ட 10 இடங்களில் இந்த 'மாதிரி பண்ணைகள்' அமைக்கப்பட்டு அதனுடைய வெற்றியைப் பொறுத்து மேலும் உவர் நீர் பகுதி களில் இப்படிப்பட்ட பண்ணைகளை அமைப்பதன் மூலம் ஊக்கு விக்க முடியுமா என்பதையும் அரசு பரிசீலித்துக்கொண்டு வருகிறது. எவ்வளவு இரால் விற்பனை ஆகியது என்ற விவர குறிப்புகள் இல்லை. தனி கேள்வி போட்டால் விவர குறிப்புகள் தரலாம்.

திரு. செ. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரங்காடு பகுதியில் நூற்றுக்கணக்கான ஏக்கர் இரால் பண்ணை அமைக்க பொருத்தமாக இருக்கிறது. அந்த இடத் தில் தனியார் பண்ணை ஆரம்பிக்க அரசு உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதிரிப் பண்ணையை தொடர்ந்து கூடுமானவரையில் கூட்டுறவு பண்ணைக்கு ஊக்கம் தரவேண்டும் என்ற எண்ணத்தில் இதை மேற்கொண்டிருக் கிறோம். எனவே அப்படிப்பட்ட கூட்டுறவு முறையில் யாரும் முன்வராத நிலை இருக்குமானால் அதற்கு பங்கு வேண்டு மானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற யோசனை களை நாம் ஆராய்ந்து தக்க முடிவு எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அம்பாசமுத்திரம் தாலுகாவை இரண்டாகப் பிரிக்கும் திட்டம்

*வினா எண் 03 திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தாலுகாவை இரண்டாகப் பிரிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன?

(இ) எந்தெந்த கிராமங்கள் எந்தத் தாலுகாவில் இருக்கும்?

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: (அ), (ஆ) மற்றும் இ): அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதற்கு இடையிலே மாவட்டக் கலெக்டர் அவர்கள் ஒரு டிஸ்ரிக்ட் கெசட் நோட்டிபிகேஷன் போட்டிருக்கிறார்கள். அதிலே பிரிக்கப்பட்டதாகவே போட்டிருக்கிறார்கள். அதிலே பல கிராமங்கள், அம்பாசமுத்திரத்தை ஒட்டி இருக்கிற சில கிராமங்களை அம்பாசமுத்திரத்துடைய தாலுகாவில் சேர்ப்பதற்கு பதிலாக-குறிப்பாக சொல்லவேண்டும் என்றால் ஆற்றின் அக்கரையிலே கல்லிடைக் குறிச்சி, இக்கரையிலே அம்பாசமுத்திரம். அந்தக் கல்லிடைக் குறிச்சியை அம்பாசமுத்திரம் தாலுகாவில் சேர்ப்பதற்குப் பதிலாக 15 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கக்கூடிய சேரன்மாதேவி பகுதியில் சேர்த்து இருப்பதாக அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா? அதேபோல் சாட்டுப்பத்து என்ற ஒரு கிராமம், அது அம்பாசமுத்திரத்திற்கு வந்ததற்கு பிறகுதான் சேரன்மாதேவிக்கு 15 கிலோ மீட்டர் தூரம் செல்லவேண்டும். இதைப் போன்று பள்ளக்கால் பனஞ்சாடி, இடைக்கால், வளுதூர், கபால்பாறை, செங்களம் ரெங்க சமுத்திரம் போன்ற பல்வேறு கிராமங்கள் அம்பாசமுத்திரம் வந்து தலைநகரை தொட்டுவிட்டு அதற்குப்பிறகு சேரன்மாதேவிக்கு 15 கிலோ மீட்டர் போகக்கூடிய முறையில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அது அரசினுடைய கவனத்திற்குக்கொண்டுவரப்பட்டதா? அதன் மீது அரசு என்னநிலை எடுத்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரம் வருவாய் வட்டத்திதை இரண்டாகப் பிரிக்கிற யோசனை அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. அப்படிப் பிரிக்கிறபோது எந்த எந்தப் பகுதிகளை எங்கெங்கே சேர்க்கவேண்டுமென்பதிலே மாறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன. அரசு, எந்த எந்தப் பகுதிகளை அதிலே சேர்க்கலாம் என்பதுபற்றி அங்கே உள்ளவர்களின் எண்ணங்களை அறிந்துகொண்டு தக்க நடவடிக்கை எடுக்கும். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன குறைபாடுகள் எல்லாம் அரசுக்கு வந்திருக்கிறது அவைகளையெல்லாம் அரசு பரிசீலிக்கும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே, பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டதற்காக நான் அரசுக்கு நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கிராமங்களைப் பிரிக்கிறபோது அரசாங்கம் நல்ல நோக்கத்தோடுதான் பிரிக்கிறது என்று கருதுகிறேன். பக்கத்திலே உள்ள கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தலைநகருக்கு வந்துபோவதற்கு வசதியாக பக்கத்தில் இருக்கும் என்ற முறையிலேதான் அதைப் பரிசீலிக்கிறார்கள் என்று நினைக்கிறேன். எந்த எந்த கிராமங்கள் எந்த எந்த தாலுகாவிற்குப் பக்கத்திலே இருக்கின்றன என்பதை முறையாக வைத்துக் கொண்டு செய்யப்படவில்லை என்று தெரிகிறது. யூனியன் அடிப்படையில், பிர்க்கா அடிப்படையில் வைத்துக்கொண்டு கெஜட் நோடிபிகேஷன் விடப்பட்டிருக்கிறது. அதை மாற்றி, கிராமங்கள் அந்த அந்தத் தாலுகாவுக்குப் பக்கத்திலே இருக்கவேண்டுமென்று சொல்கையை அடிப்படையாக வைத்துக்கொண்டு அவைகளைப் பிரிக்க அரசு முன்வருமா?



மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அந்தந்தக் கிராமங்களின் மக்களுடைய தேவைக்கு அவர்களுடைய நலன்களுக்கு உகந்தவகையில் அந்தக் காரியங்கள் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு ஆர். மணிமாறன்: தலைவர் அவர்களே, விரிந்துகிடக்கும் ஒரு சில வருவாய்க் கோட்டங்களை அரசினுடைய நிலையையொட்டி இரண்டாகப் பிரிந்து நிர்வாக வசதிக்காக ஏற்பாடு செய்கின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் இருப்பதாக அறிகிறேன். அப்படி ஏதாவது இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, சில டிவிஷன்கள், வருவாய்க்கோட்டங்கள் மிகப் பெரிதாக இருக்கின்றன நிர்வாக வசதியை மனதிலே வைத்து அரசு சிலவற்றை ஒன்றன்பின் ஒன்றாகப் பிரிப்பதற்கு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் கோயம்புத்தூர் மற்றும் பொள்ளாச்சி வருவாய்கோட்டங்களைப் பிரித்து அவினாசி பல்லடம், ஆகிய இரண்டு வட்டங்களை உள்ளடக்கி திருப்பூரை தலைமையிடமாகக் கொண்டு, ஒரு புதிய வருவாய் கோட்டம் உருவாக்க இந்த வருடம் அரசு முடிவு செய்திருக்கிறது. கோயம்புத்தூர், பொள்ளாச்சி திருப்பூர் ஆகியவை தனித்தனி வருவாய் கோட்டங்களாக இருக்கும். அதேபோல் சிதம்பரம் காட்டுமன்னார் கோயில் இரண்டையும் சேர்த்து வருவாய் கோட்டமாகவும், பண்ருட்டி. கடலூர் இரண்டையும் சேர்த்து வருவாய் கோட்டமாகவும் பிரித்து அரசு உத்திரவு வழங்க இருக்கிறது.

திரு. என். ஏ. பூங்காவனம்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் வருவாய அடிப்படையாக வைத்து சில கோட்டங்களைப் பிரிப்பதாகச் சொன்னார்கள். குடியாத்தம் தாலுகா பெரியதாக இருக்கிறது. அதைப் பிரிக்கவேண்டுமென்று பல முறைகள் நான் மட்டும் அல்ல, பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இங்கே வற்புறுத்தியிருக்கிறோம். நான் அதற்காக இரண்டு முறைகள் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன். அது சம்பந்தமாக தகவல் இல்லை, அது சம்பந்தமாக அரசு பரிசிலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: வருவாய் அடிப்படையில் மட்டும் பிரிப்பதில்லை. அங்கே இருக்கின்ற ஜனத்தொகை, பரப்பளவு, இடத்தின் பின்தங்கிய தன்மை ஆகியவைகளை எல்லாம் கருத்தில் கொண்டு பிரிப்பதாக இருக்கிறது. உங்களுடைய கோரிக்கையையும் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ் சிவராமன்: தலைவர் அவர்களே, வருவாய்க் கோட்டங்களை இரண்டாகப் பிரிப்பதுபோன்ற பல நிர்வாக வசதிகளுக்காக செய்யப்படுகின்ற திட்டங்களின் அடிப்படையில் பெரிதாக இருக்கக்கூடிய பல தாலூக்காக்களை பிரிப்பதற்கு அரசு முன்வருமா? அந்த அடிப்படையில் கள்ளக்குறிச்சித்தாலூக்கா மிகப் பெரிய தாலூக்காவாக இருந்துகொண்டிருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அது எப்போது இரண்டாகப் பிரிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வியிலேயே பதில் அடங்கியிருக்கிறது.

திரு. கே. ஆர். சுந்தரம்: வட ஆற்காடு மாவட்டத்திலே குடியாத்தம் கோட்டம் மிகப் பெரியதாக இருக்கிறது. அதை இரண்டாகப் பிரித்து காட்பாடியை தலைநகராகக் கொண்டு அமைப்பதற்கு அரசு ஆலோசனை செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, மாநிலத்திலே பல கோட்டங்கள் பெரியதாக இருக்கின்றன. அவைகளை ஒன்றன்பின் ஒன்றாக அரசு பிரிக்கும். இந்த ஆண்டிலே இரண்டு கோட்டங்களைப் பிரிக்க அரசு உத்திரவிடும் என்பதை ஏற்கெனவே நான் தெரிவித்திருக்கிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன்: இந்த வருவாய்க் கோட்டங்களை அல்லது வட்டங்களைப் பிரிக்கிறபோது அதிகாரிகள் சொல்கிற பிரிவினைகளை அரசு ஏற்றுக் கொள்கிற காரணத்தினால்தான் பக்கத்திலே உள்ள கிராமங்கள் தூரத்திலே உள்ள இடத்தோடும், தூரத்திலே உள்ள இடங்கள் வேறு மாதிரியாகவும் சேர்க்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே அந்த அந்தப் பகுதிகளிலே உள்ள அரசியல் கட்சிகளைக் கலந்துகொண்டு இதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரிகள் சொன்னதை வைத்துப் பிரித்ததினாலே, பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுகிறது என்று சொல்வது ஒரு குற்றச்சாட்டாக இருக்கிறது. அதிகாரிகளே பொது மக்களுடைய நலனுக்காகத்தான் இருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். எங்கேயாவது குறிப்பிட்ட இடங்களில் இப்படி பிரிக்கப்பட்டது பொது மக்களுக்கு இடையூறு என்று அவர் சொன்னால், அதை மீண்டும் பரிசீலனை செய்து, பொது மக்களுடைய நன்மைக்காக, மாற்றியமைக்க அரசு எல்லாவித நடவடிக்கைகளும் எடுக்கும்.



திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தாலூகாக்கள் மக்கள்தொகை அடிப்படையிலும், பரப்பளவின் அடிப்படையிலும் பிரிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்னுடைய பழனி தாலூகா ஒரு முனையிலிருந்து இன்னொரு முனை 45 மைல், 50 மைல்கள் போகிறது. மக்கள் தொகை 7 இலட்சத்திற்கு மேல் இருக்கிறது. ஆகவே, பழனி, ஒட்டன்சத்திரம் என்று இரு தாலூகாக்களாகப் பிரிப்பதற்கு அரசிடம் ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா?

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 104, 105, 106, 107 ஆகியவை மாண்புமிகு கல்வித் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

### 1981 ஆம் ஆண்டில் மதுரை மத்திய சிறைச்சாலையில் மரணமடைந்த கைதிகளின் எண்ணிக்கை.

*வினா எண் 108—திரு. என். வரதராஜன் மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1981 ஆம் ஆண்டில் மதுரை மத்திய சிறைச்சாலையில் மரணமடைந்த கைதிகள் எத்தனை பேர்?

(ஆ) இந்த மரணங்கள் என்ன காரணங்களால் ஏற்பட்டன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) 14 (பதினான்கு)

(ஆ) 13 (பதிமூன்று) பேர் நோயால் பாதிக்சப்பட்டும் ஒருவர் தூக்கிட்டுக்கொண்டும் மரணமடைந்தனர்.

திரு. என். வரதராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, சிறைக்கூடம் என்பதே மிகப் பாதுகாப்பான ஒரு இடம். அந்த இடத்திலே சோதனையிடப்பட்டு நாம் உள்ளே பூட்டி வைத்திருக்கிறோம். அந்த இடத்திலே தூக்கிட்டு இறந்து விடுகிறார்கள் என்று இன்று சொல்லப்படுகிறது. இது சம்பந்த

மாக பலத்த சந்தேகம் வெளியிலே பரவுகிறது. ஆகவே அரசை நான் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், இந்தத் தூக்கிட்டு இறந்தது சம்பந்தமான புலன் விசாரணையில் கிடைத்த விவரங்கள் என்ன? உதாரணமாக, இன்று நாட்டில் நடந்துவரும் படியான சில விதமான ஆடிட்டுகளிலேகூட வெறும் வரவு-செலவுக் கணக்குகளாக இருக்கக்கூடாது, அந்த வரவுசெலவுகளைச் சுற்றி என்ன சூழ்நிலை இருக்கிறது என்று பார்த்துதான் அந்தப் பரிசீலனை அடிப்படையிலே ஆடிட்டுகள் இருக்க வேண்டுமென்று சொல்கிறார்களே, அப்படியானால், மனித உயிர்களைப் பற்றி ஆடிட் செய்யும்போது இதர சூழ்நிலைகளைப் பரிசீலனை செய்ய ஏற்பாடுகள் ஏதாவது உண்டா? அது சம்பந்தமாக அரசு ஏதாவது முயற்சி எடுக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று சிறையிலே கைதிகள் இறப்பது என்ற நிலை ஏற்படும்போது அதற்கான காரணங்களை ஆராய்ந்து தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்பதை அரசு ஏற்கிறது. அந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்தக் குறிப்பிட்ட பிரச்னையைப் பொறுத்தவரைக்கும் இராயப்பன் என்று சொல்லப்படக்கூடிய அவர் ஒரு மன நோயாளியாக இருந்திருக்கிறார். 30—8—1981 ஆம் தேதி மன நோயின் காரணமாக மதுரையில் உள்ள இராஜாஜி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்றிருக்கிறார். பிறகு அவர் மீண்டும் மத்திய சிறைக்கு வந்தபிறகு, மத்திய சிறையிலேயிருக்கிற அலுமினிய தட்டைக் கொண்டு தன்னுடைய கழுத்தை அறுத்துக் கொண்டார். உடனே அவர் ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார். பிறகு, 26-9—1981 மாலை 5.30 மணிக்கு அவர் மீண்டும் அந்த மருத்துவமனையிலிருந்து காணாமல் போய்விட்டார். எப்படி என்று தேடிய பொழுது, அங்கு அருகிலேயிருந்த ஓர் அறையிலே அவர் தூக்கிட்டு இறந்திருந்ததைக் கண்டுபிடித்தார்கள். ஆர். டி. ஓ. என்கொயரி நடக்கப்பட்டது. ஆர். டி. ஓ. என்கொயரியில் விவரங்கள் தெரிய வந்தன. சிறையிலே இருந்தபொழுது அலுமினியத் தட்டைக்கொண்டு கழுத்தை அறுத்துக் கொண்டு, அதற்காக மருத்துவ மனைக்குச் சென்று சிகிச்சைப் பெற்றுக் கொண்டிருந்தபொழுது, அருகாமையிலேயிருந்த அறையிலே அவர் தூக்கில் தொங்கியதைக் கண்டு பிடித்திருக்கிறாாகள்.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, இவ்வாறு மரணங்கள் ஏற்படுவதைப் பற்றி பலவித சந்தேகங்களை அமைச்சருடைய பதிலிலேயிருந்து நாம் அறிய வேண்டியிருக்கிறது. நான் கேட்க விரும்புவதெல்லாம், 13 பேர்கள் நோயாளிகளாக இருந்து இறந்தார்கள் என்று சொல்கிறபொழுது அவர்கள் உள்ளே நோயாளிகளாக இருக்கிறபொழுது, நம்முடைய கவனிப்பில் தான் இருந்தார்கள். நாம் சரியாக கவனிக்காமலிருந்தால்தான்



அவர்கள் இறந்தார்கள் என்றுதான் சிறைக் கைதிகள் நினைக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட மரணத்தை, நோயால் ஏற்படுகிற மரணத்தைத் தடுப்பதற்கும், அதிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்கும் வேண்டிய உரிய ஏற்பாடுகளைச் சிறைச் சாலையிலே கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9—20)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, சிறையிலே இருக்கின்ற கைதிகள் நோய்வாய்ப்படுகின்றபோது அவர்களுக்கு நல்லமுறையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. அரசு மருத்துவமனைகளில் அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. நோய் சற்று கடுமையாக இருக்குமானால் அரசு பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது. இங்கே குறிப்பிட்ட 13 பேர்களில் பல பேர்கள் மாரடைப்பால் இறந்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே சிறைகளிலே கைதிகள் இருக்கின்றபோது அவர்களுக்கு மனநோய் ஏற்படுகின்றது. பிகாஸ் ஆஃப் டென்சன், பெர்ஹேப்ஸ், தே மே கெட் தி ஹார்ட் அட்டாக், தட் இஸ் தி ஃபீலிங். இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடக்காமல் இப்போது தக்க முறையில் நல்ல மருத்துவ சிகிச்சை வசதிகள் செய்யப்படுகின்றன.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, கைதிகள் மருத்துவமனைகளில் இருக்கின்றபோது, ஒன்று காவலர்கள் பாதுகாப்பாக இருக்கிறார்கள். இல்லையென்றால் அந்தக் கைதிகளைக் கையிலே விலங்கிட்டு கட்டிலிலே கட்டியிருக்கின்ற நிலைமையைக் கூட நானே நேரில் பார்த்திருக்கிறேன். அப்படி இருக்கின்றபோது அவர்கள் முன் அறையிலேபோய் தூக்கு போட்டுக்கொள்கிற வரையில் காவலர்கள் அங்கே இல்லையா? அதற்கான காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: சில நேரங்களில் கைதிகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் அவர்களுக்காகவே தனி அறை ஒதுக்கப்படுகிறது. படுக்கை அறைகளிலேயெல்லாம் போலீஸ்காரர்கள் இருப்பதில்லை. அதே நேரத்தில் குளியல் அறைகளுக்குச் செல்லுகின்ற நேரத்திலும் போலீஸ்காரர்கள் அவர்களுடன் செல்வதில்லை. கேட்டிலேதான் இருப்பார்கள். குளியல் அறைகளில் போலீஸ்காரர்கள் காவல் இருப்பது இல்லை. அந்த முறையில்தான் இந்த நிகழ்ச்சிகள் நடந்திருக்கலாம்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மத்திய சிறைச்சாலையில் பெரும்பாலான சாதாரணக் கைதிகளை ஆயுள் கைதிகள் அடிக்கிறார்கள். இதனால் கூட சில கைதிகளுக்கு காயங்கள் ஏற்படுகிறது. உயிர்போகக்கூடிய நிலை வருகிறது. ஆகவே இதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, கைதிகளை சிறையில் அடிப்பதில்லை சாதாரண கைதிகளை ஆயுள் கைதிகள் அடிக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அது தவறான கருத்து. அப்படி ஏதாகிலும் தவறாக நடந்திருக்குமானால் ஆதாரத்தைத் தருவார்களானால், கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற மரணங்களைத் தடுக்க சிறைச்சாலைகளில் கைதிகளின் பாதுகாப்புக்கு பார்வையாளர் குழு அமைத்து அவர்களுடைய குறைபாடுகளை நீக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, அதைப் பற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்றபோது, 1981 ஆம் ஆண்டு மதுரை மத்தியச் சிறைச்சாலையில் 14 பேர்கள் மரணம் அடைந்ததாகச் சொல்கிறார்கள். சிறையிலே இருக்கிற கைதிகளைப் பாதுகாக்கிற பொறுப்பு— வெளியிலே இருக்கிறவர்களைப் பாதுகாக்கிறோமோ இல்லையோ அரசாங்கத்திற்கு உண்டு. இந்த ஆண்டு அந்த எண்ணிக்கை குறைந்திருக்கிறதா? அதேநேரத்தில் தமிழகத்தில் மற்ற சிறைச்சாலைகளிலே இறந்த கைதிகளின் எண்ணிக்கை எவ்வளவு? விகிதாச்சாரம் எப்படியிருக்கிறது? மதுரையில் இறந்தவர்களில் ஆண் கைதிகளின் எண்ணிக்கை எவ்வளவு? பெண்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறந்தவர்கள் அத்தனை பேரும், 14 பேரும் ஆண்கள் தான். பெண்கள் யாரும் இல்லை. மற்ற சிறைச்சாலைகளின் குறிப்பும், நடப்பாண்டின் குறிப்பும் தற்போது என்னிடம் இல்லை.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, சிறைக் கைதிகள் நீண்டநெடுங்காலமாக இருக்கக்கூடிய கைதிகளுக்குத்தான் அதிகமாக மனநோய் ஏற்படுகிறது. ஹார்ட் அட்டாக் ஏற்படுகிறது. ஆக, பொதுவாகவே ஒரு 10 வருஷம், அல்லது 14 வருஷம் என்று சிறையிலே இருந்த பிறகு ஒரு கமிட்டி வைத்து



விடுதலை செய்கிறார்கள். ஆனால் சில கைதிகள் 14, 18 வருஷங்கள் இருக்கக்கூடிய சூழ்நிலை இருப்பதால் இப்படிப்பட்ட மரணங்கள் ஏற்படுவதற்கு காரணமாக இருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட அந்த கைதிகளைப் பொறுத்தவரையில் கொஞ்சம் பரிவோடு கவனிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காக தனியாக ஒரு சட்டம் கூட சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டு, மத்திய அரசு அனுமதி மறுத்துவிட்டது. ஆனாலும்கூட 1978-க்கு முன்னாலே சிறைக்குச் சென்றவர்கள், அவர்கள் 14 ஆண்டுகளுக்கு மேலே இருப்பார்களேயானால், அட்வைசரி போர்ட் மூலமாக அவர்களின் நன்னடத்தையைக் கண்டறிந்து, அவர்களைப் பற்றியெல்லாம் விவரங்களை ஆராய்ந்து பிறகு அவர்களை விடுதலை செய்யலாம் என்று உயர்நீதி மன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது. அதையொட்டி 14 ஆண்டுகள் ஆனவர்களில் கிட்டத்தட்ட அனைவருமே விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள் சில சிறைகளில், சில வழக்குகளில், 4, 5 பேர்களைக் கொன்றவர்கள் என்ற காரணத்தால், அவர்களைப் பற்றி அட்வைசரி போர்ட் பரிந்துரை செய்யவில்லை. அவற்றைக்கூட 14 ஆண்டுகளுக்கு மேலாக ஆகியிருந்தால் அவற்றைப் பற்றியும் ஆராய்ந்து அரசுக்கு அனுப்பவேண்டுமென்று அட்வைசரி போர்ட்டுக்கு உத்தரவிட்டு இருக்கிறோம்.

### கூட்டுறவுச் சங்கங்களின் கடனை முறையாக திருப்பிச் செலுத்திய உறுப்பினர்களுக்கு மீண்டும் கடன் வழங்கும் திட்டம்.

*வினா எண் 109 திரு. ரா. கிருஷ்ணன். மாண்புமிகு கூட்டுறவுசட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கடன் வழங்கும் தகுதியை இழந்துள்ள ஆரம்ப கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்களில் முறையாக தவணைப்படி கடனைத் திரும்ப செலுத்தியுள்ள உறுப்பினர்களுக்கு கடன் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:—

(அ) ஆம். அரசு ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளது:

(ஆ) தற்போது உள்ள சலுகையின்படி, கூட்டுறவு சங்கங்களின் தவணை கடந்த கடன் நிலுவை சதவீதங்களை பொருட்படுத்தாமல் (100 சதவீதம் இருந்தால் கூட மத்திய வங்கியிடம் கடன் பெற்று ஏற்கனவே பெற்ற கடனை பைசல் செய்தவர்களுக்கு புதியகடன் வழங்கி வருகின்றன.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, இந்தக் கடன்கள் வழங்குவதில் பெனிபிஷியரீஸ் எண்ணிக்கை குறைவாக இருப்பதாகவும் அந்தத் தொகை கொடுப்பதில் சிரமம் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. அந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: கடன் திருப்பித் தந்தவர்களுக்கு கடன் தருவதற்கு ஏற்கனவே தடை இருந்தது. காரணம், வாங்கிய கடனை முறையாக சிலர் திருப்பித்தந்தாலும்கூட அந்தக் குறிப்பிட்ட கூட்டுறவு வங்கி குறைந்தபட்சம் 50 சதவிகிதக் கடனை அவர்கள் வசூல் செய்திருந்தால்தான், மத்திய வங்கிக்கு 40 சதவீகிதம் கடனை அவர்கள் குறைந்தபட்சம் திருப்பித் தந்திருந்தால்தான் மைய வங்கி அடுத்த கடனைப் பெற தகுதி உள்ளது என ரிசர்வ் வங்கி விதி காரணமாக விதிக்கப்பட்டிருந்தது. ஒருவர் கடனைத் திருப்பிக் கட்டினாலும் கடன் கிடைக்காத நிலை இருந்தது, தற்போது நாம் அதைத் தளர்த்தி பிரத்தியேகமாக வாங்கிய கடனை ஒருவர் திருப்பித் தந்து விடுவார்களானால் அந்த வங்கிக்கு கடன் கொடுக்கும் தகுதி இல்லை என்றாலும் அவருக்கு கடன் வழங்க வேண்டும் என்று உத்தரவு இட்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் கடனை தந்தவர்களுக்கெல்லாம் கடன்கள் வழங்கப்படுகின்றன.

திரு. ரா. கிருஷ்ணன்: இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் கடன்கள் வழங்குவதில் மத்திய அரசின் உதவி குறைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதன் காரணமாக தற்சமயம் நகைக் கடன்கள் கொடுப்பதில் குறைபாடுகள் இருப்பதாக எனக்கு தகவல் இருக்கிறது. நகைக் கடன்களை முழுமையாகக் கொடுக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: ரிசர்வ் வங்கியிடமிருந்து குறுகிய காலக் கடனை நாம் பெறுகிறோம். தமிழ்நாடு ஸ்டேட் கூட்டுறவு வங்கி மூலம் பெற்று மைய வங்கிகள் மூலம் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுத்து சங்கங்கள் மூலம் உறுப்பினர்களுக்குத் தருகிறோம். ஆனால் வாங்கிய கடனைத் திருப்பித் தராத காரணத்தால் எந்த அளவிற்கு நாம் கடனை, ரிசர்வ் வங்கியிலிருந்து வாங்கிய கடனை திருப்பித் தருகிறோமோ அந்த அளவிற்குத்தான் அடுத்த ஆண்டு கடன் பெறமுடிகிறது, இப்படி ரிசர்வ் வங்கி விதி இருப்பதால் போதிய பணத்தைப் பெற முடியவில்லை. வாங்கிய கடனை முறைப்படி காலத்தில் திருப்பித் தருவார்களானால் கடன் கணிசமான அளவிற்கு திரும்ப வழங்க முடியும். இதுதான் தற்போது நடைமுறையில் இருக்கிற பிரச்னை.



திரு. இல. பலராமன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது நூற்றுக்கு நூறு கடன் திருப்பிச் செலுத்தவில்லையென்றாலும் கடன் வழங்கும் திட்டத்தை அரசு மேற்கொண்டிருக்கிறது என்று அறிவித்தார்கள். ஆனால் இன்று வறட்சி காரணமாக கடன் வாங்கும் தகுதியில்லாத நிலையில் விவசாயிகள் இருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அடிப்படையாக பயிர் செய்தால்தான் கடன் என்ற நிலை வரும்போது பயிர் செய்ய தகுதி இல்லை என்ற நிலை ஏற்படும்போது கடன் வாங்கக்கூடிய கேள்வியே எழவில்லை. எனவே வறட்சி காரணமாக கிணறு வெட்ட அல்லது பயிர் செய்ய கடன் வழங்குவதற்கு அல்லது நகைக் கடன் வழங்குவதற்கு, அரசு ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: உழவர்களுக்கு நகை மீது பயிர் கடன் தரலாம், மற்றச் செலவுகளுக்கு கடன் தரலாம் என்ற உத்தரவை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே இட்டு சென்ற ஆண்டு 179 கோடி ரூபாய் அளவிற்கு கடன்கள் பலவிதங்களில் வழங்கப்பட்டிருக்கிறது. நடப்பாண்டு கிட்டத்தட்ட 150 கோடி ரூபாய் இலக்கு எட்டக்கூடிய அளவிற்கு கடன் வழங்கலாம் என்று உத்தரவிட்டியிருக்கிறோம். நகைக் கடன்கள் பொறுத்து திரு. கிருஷ்ணன் அவர்கள். . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வறட்சி காரணமாக ஏதாவது ஸ்பெஷலாகக் கொடுப்பீர்களா என்று கேட்கிறார்கள். அதற்கு மட்டும் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: விவசாயிகள் பயிர் செய்வதற்கு வறட்சி காரணமாக கையில் காசு இல்லை என்று கடன் வாங்கமுடியாத நிலையில் நகைகள் மூலம் பயிர்க் கடன்கள் பெற அவர்கள் விரும்பினால் கண்டிப்பாக அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. கொடுக்கப்படுகிறது.

திரு. வேடச்சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, கிராமக் கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கிற நிர்வாகஸ்தர்கள், தலைவர்களைப் போன்றவர்கள் அவர்கள் வாங்கிய கடன்களைக் கட்டாத காரணத்தால் அவர்கள் டிஸ்க்வாலிஃபையாகி விடுகிறார்கள். எனவே கிராமங்களில் இருக்கிற சங்கங்கள் தகுதியிழந்த அமைப்பாக இருக்கிறபோது அதை அதிகாரிகள் எடுப்பதற்கு ஷோகாஸ் நோட்டீஸ் கொடுத்து அதற்கு பதில் கொடுத்து பின் அப்பீல் என்று ஒரு ஆண்டு இழுத்துக் கொண்டிருப்பதால் மத்திய வங்கிக்கு கடன் சிபாரிசு செய்ய வேண்டிய நிர்வாகக் குழு தகுதி இழந்திருப்பதால் கடன் கொடுக்க இயலாது என்று சொல்கிறார்கள். இதை நிவர்த்திக்க அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா?

(முற்பகல் 9—30)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட கூட்டுறவு சங்க நிர்வாகஸ்தர்கள் டிஸ்குவாலிபை ஆகிவிட்ட காரணத்தினால், அந்த நிர்வாகத்தில் கடன் கொடுக்க முடியாத நிலை இல்லை. ஒரு குறிப்பிட்ட சங்கத்தைப் பொறுத்தவரையில், குறிப்பாக அதிலே 8 அல்லது 9 பேர்கள் இருந்தாலும், அதிலே சிலர் தகுதி இழக்க நேரிட்டாலும், அதிலே உள்ள 1, 2 பேர்களை வைத்துக் கொண்டு சங்கத்தை நிர்வகிக்கலாம் அல்லது மைய வங்கியின் பொறுப்பிலே அதைக் கொண்டு வரலாம். அப்படி நடைபெற்ற தணிப்பட்ட நிகழ்ச்சி இருக்குமானால், அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டினால், உடனடியாக அதற்கான உத்தரவு இடப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே' கிராமீய கூட்டுறவுச் சங்கங்களில் ஏற்கனவே கடன் பெற்றவர்களுக்கு சப்சிடி வழங்கும் முறை இருந்து வருகிறது. அதைப் பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சப்சிடியைப் பொறுத்தவரைக்கும் ஐ. ஆர். டி. பி. ஸ்கீம் மூலக வழங்கப்படுகிறது. சப்சிடி வழங்கப்படாத பிரச்னை குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பாக அறிவித்தால், அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. உ. சுப்பிரமணியன். பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு ஸ்தாபனங்களில் கடன் வாங்குபவர்கள், தவணையை தவறி கட்டினால். பீனல் இன்ரஸ்ட் அதாவது தண்ட வட்டி என்று போடப்படுகிறது. அதேபோல், தவணைய முன்னதாகவோ அல்லது சரியான காலத்திலோ கட்டுகின்ற விவசாயிகளுக்கு ஊக்க போனஸ் அளிக்க, அல்லது வட்டியைத் தள்ளுபடி செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாக வாங்கிய கடனை அதாவது குறுகிய கால கடனாக இருந்தால் 2 சதவீதம் வட்டி தள்ளுபடி செய்யலாம் என்று உத்தரவிட்டிருக்கிறோம். நீண்டகால கடனாக இருந்தால், குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாக திருப்பிக் கொடுத்தால், அவர்களுக்கும் ஏதேனும் ஊக்குவிக்கின்ற முறையில் சலுகை அளிக்கலாம் என்று அரசு கருதி வருகிறது.



திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கூட்டுறவுச் சங்கங்களில் கடன் வாங்கும் போது. ஒருவருக்கொருவர் ஜாமீன் போடுகிறார்கள். அப்படி ஜாமீன் போட்டவர்கள், கடன் வாங்கியவர் கடனைத் திருப்பிக் கட்டாவிட்டால், அவர் கடனைக் கட்டிவிட்டாலும், மீண்டும் அவர் கடன் பெறுவதற்கு வழியில்லாமல் அதிலே கஷ்டமிருக்கிறது. எனவே, ஜாமீன் போட்டவர்களுக்கும், கடனைத் திருப்பிக் கட்டியிருந்தால், அவர்களுக்கு கடன் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு சங்கங்களில் ஒருவர் கடன் வாங்குகிறபோது, அவருக்கு சூரிட்டியாக, ஜாமீனாக வருகின்றவர்கள், வாங்கி கடனைத் திருப்பிக் கட்டிவிட்டாலும் கூட, கடன் வாங்கியவர், அவருக்கு ஜாமீன் கொடுத்தவர் ஆகியோருக்கு கடன் கொடுக்கக்கூடாத நிலை இதுகாறும் இருந்து வந்தது. இதனால் பல விவசாயிகளுக்கு இன்னல்கள் ஏற்பட்ட காரணத்தினால், சூரிடியாக இருந்தவர் கடனைத் திருப்பிக் கட்டிவிட்டால், அவருக்கு அடுத்த கடனைக் கொடுக்கலாம் என்று அரசு அண்மையில் உத்தரவிட்டிருக்கிறது.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கடன் வாங்கியவர் கட்டாத நிலையிலே, அவருக்கு உதவி செய்யும் முறையிலே, 'வாரக் கடன் நிதி' என்றிருக்கிறது, அந்த நிதியில் எவ்வளவு பணம் இருக்கிறது. எத்தனை பேர்கள் அதனால் பயனடைந்திருக்கிறார்கள் என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி குறிப்பு தற்போது என்னிடத்தில் இல்லை.

## கள்ளக்குறிச்சி சின்னசேலம் பேரூராட்சிக்கு மணிமுத்தாற்றிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம்

*வினா எண் 110—திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கள்ளக்குறிச்சி, சின்னசேலம் பேரூராட்சிக்கு மணிமுத்தாற்றில் இருந்து குடிநீர் எடுத்து செல்லும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) உத்தேச மதிப்பீடு எவ்வளவு?

(இ) எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) 1980-81 விலை நிலவரப்படி ரூ. 121.51 இலட்சம்.

(இ) ஊரக வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரைப்படி பேரூராட்சிகளின் நிதி நிலைமைகளையொட்டி குறைந்த செலவில் திட்டம் உருவாக்க இயலுமா என்பது பற்றி ஆராயப்படுகிறது.

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கின்ற போது, அங்குள்ள நிதிநிலைமையை வைத்து ஆராயப்படுகின்றது என்று சொன்னார்கள். ஆனால், நீண்ட நெடுங்காலமாக இருக்கக் கூடிய பிரச்சனை, பொதுவாக கள்ளக்குறிச்சி தாலுக்காவைப் பொறுத்தவரைக்கும், ஒரு வறட்சியான பகுதியாக அது இருக்கிறது. அங்குள்ள தண்ணீர் பிரச்னையைப் பொறுத்தவரையில், பல காலமாக அங்கு இருந்துவரும் பிரச்னையைப் போக்குவதற்கு பேரூராட்சியின் நிதி நிலைமை போதவில்லையென்றாலும் உலக வங்கியின் மூலமாக நிதியைப் பெற்று செயல்படுத்துவதாகச் சொன்னார்கள். ஆகவே, இதை உணர்ந்த அரசு, தீவிரமாக, உடனடியாக, உலக வங்கியின் மூலம் நிதி பெற்று, அங்கு தண்ணீர் கொடுப்பதற்கு, அந்தத் திட்டத்தை செயல்முறைக்கு கொண்டு வருவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கொடுக்கப்பட்டிருக்கின்ற மதிப்பீடு மிக அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், குறைந்த மதிப்பீட்டில் மலிவான குடிநீர் திட்டம் ஒன்றைத் தயார் செய்து கொடுக்கும்படி பணிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி, குறைந்த மதிப்பீட்டில் குடிநீர் திட்டத்தை உருவாக்குவதற்கு மீண்டும் பரிசீலனை செய்யப்படும். எப்படியும் குடிநீர் கொடுக்க வேண்டுமென்ற ஆர்வத்தோடுதான் அதிக மதிப்பீட்டில் இல்லாமல், குறைந்த அளவில் கொடுப்பதற்காக பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்த அளவு தண்ணீர் கிடைக்கும் என்று கூறினார்கள். கள்ளக்குறிச்சி என்பது மணிமுத்தாறிலிருந்து று கிலோ மீட்டர் தொலைவில் தான் இருக்கிறது. இப்போது கூட குடிநீர் வடிகால் வாரியத்தினர் அங்கு போர் போட்டார்கள். அப்போது ஒரு நிமிடத்திற்கு 600 கேலன் தண்ணீர் கிடைக்கும் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதைவிட அதிகமாக தண்ணீர் கிடைப்பதற்கு வேறு இடம் கிடைக்காது. ஆகவே அங்கேயிருந்து தண்ணீர் கொடுப்பதற்கு அரசு உடனடியாக முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணிமுத்தாற்று அணையிலிருந்து தண்ணீர் எடுப்பது தான் கேள்வி. இப்போது அதிக செலவில் தண்ணீர் எடுப்பதற்கு போதுமான நிதி ஆதாரம் இல்லை. ஆகவே குறைந்த செலவில் எடுத்துக்கொள்வோம். நிதி ஆதாரம் உயரும் என்று எல்லோரும் நம்புவோம். 'ஆக்மென்டேஷன் ஸ்கீம்' பின்னால் எடுத்துக்கொள்வோம் என்பதுதான் இப்போது இருக்கிற நிலைமை.

### விவசாயத் தொழிலாளர்களின் குறைந்தபட்சக் கூலி விகிதத்தைத் திருத்தி அமைக்கும் திட்டம்.

*வினா எண் 111— திரு. கு. ரமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயத் தொழிலாளர்களின் குறைந்தபட்சக் கூலி விகிதத்தை திருத்தி அமைக்க மத்திய அரசு மாநில அரசுகளுக்கு ஆலோசனை கூறியுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அது பற்றிய விவரங்கள் என்ன?

(இ) எப்பொழுது கூலி விகிதங்கள் திருத்தி அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ); (ஆ) மற்றும் (இ) : 1981 ஆம் ஆண்டு நடந்து முடிந்த மாநில தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டில் எல்லா தொழில்களுக்கும் குறிப்பாக விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த தொழிலில், குறைந்த அளவு ஊதிய வீதங்களை திருத்தியமைப்பதற்கான நடவடிக்கையில் மாநில அரசுகள் துரிதமாக ஈடுபட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. நம் மாநில அரசு அமைத்துள்ள விவசாய உயர் மட்டக் குழுவும் விவசாய வேலைகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு குறைந்த அளவு ஊதியம் தற்போதுள்ள விலைவாசிக்கேற்ப திருத்தியமைக்க வேண்டும் என்று பரிந்துரைத்தது. இவைகளைக் கருத்தில் கொண்டு விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு குறைந்த அளவு ஊதிய வீதங்களை திருத்தியமைப்பதுபற்றி அரசுக்கு ஆலோசனை கூற ஒரு குழு 2-3-82 அன்று அமைக்கப்பட்டது. இக்குழுவின் அறிக்கை அரசுக்கு கிடைத்துள்ளது. இதன் பரிந்துரைகள் அரசின் ஆய்வில் உள்ளன. விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்தளவு ஊதியம் விரைவில் மாற்றியமைக்கப்படும்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்த பட்சக் கூலி திருத்தியமைக்கும்படி மத்திய அரசு உத்தரவிட்டதற்சான அடிப்படையில் நமது அரசும் ஒரு கமிட்டி அமைத்து அதனுடைய பரிந்துரை வந்துள்ளது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். குறைந்தபட்சக் கூலியை நிர்ணயிக்கும் போது சில சந்தர்ப்பங்களில் ஆங்காங்கு இருக்கிற சாதாரண கூலியை விட கீழ்மட்டத்திலே தான் அது நிர்ணயிக்கப்படுகிறது. விலைவாசி ஏற்றமும் பணவீக்கமும் உள்ள இந்த சந்தர்ப்பத்தில் குறைந்தபட்சக் கூலி மட்டத்தை உயர்த்துவதற்கு ஏதாவது நிர்ணய அளவு அந்த கமிட்டிக்கு அரசால் கொடுக்கப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் கட்டளைக்கு ஏற்ப மாநில அரசு குழு அமைத்தது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது நான் சொன்னதை அவர்கள் சரியாக புரிந்து கொள்ளாதது ஆகும். மாநில தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டில் அந்த முடிவு எடுக்கப்பட்டது. அந்த முடிவிற்கு இந்த அரசே கூட காரணமாக இருந்து இருக்கலாம். மாநாட்டில் அப்படி ஒரு முடிவு எடுக்கப்பட்டு இந்த அரசை பொறுத்தவரையில் 2-3-82 அன்று குழுவை அமைத்திருக்கிறோம். மினிமம் வேஜஸ் எப்படி நிர்ணயிக்க வேண்டுமென்று மினிமம் வேஜஸ் ஆக்டிலே இருக்கிறது. அந்தப் பரிந்துரையை அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. விரைவில் நிறைவேற்றுவோம்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, விவசாய கூலித் தொழிலாளர்களுக்கு இந்த மாதிரி குறைந்தபட்ச கூலி நிர்ணயிக்கும்போது அதை நிறைவேற்றுவதற்காக ஒரு அமைப்பு, ஒரு மெஷினரி இல்லாத கஷ்டம் இருக்கிறது என்று இதே சட்டமன்றத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லி வருவாய்த்துறை அதிகாரிகளைக் கொண்டு அமலாக்குவதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். அதிகமான வேலை பளு காரணமாக வருவாய்த் துறை அதிகாரிகளால் இது செய்யப்படுவது இல்லை. ஆகவே லேபர் இலாக்காக்களை விஸ்தரித்து தனியாக அதிகாரிகளை நிர்ணயம் செய்து எல்லா இடங்களிலும் கூலி சரிவர கிடைப்பதற்கு உரிய ஏற்பாடுகளை அமைச்சர் அவர்கள் செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்,

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கருத்து ஏற்கனவே இங்கே விவாதிக்கப்பட்டு அரசு லேபர் டிபார்மெண்டே எடுத்து இதைச் செயல்படுத்தும் பொறுப்பை ஏற்கலாமா என்பது பரிசீலனை செய்யப்பெற்றது. ஆனால் வருவாய்த்துறையைப் பொறுத்தவரையில், நாங்கள் திறமையாகச் செயல்படுத்துகிறோம் என்று





அவர்கள் இப்பொழுது கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு திரு. இளையபெருமாள் அவர்களும் என்னிடத்திலே சொல்லியிருக்கிறார்கள் வருவாய்த்துறை இதில் நன்றாகச் செயல்படவில்லை என்று. இனிமேல் சரியாகச் செயல்படுவதற்கு எல்லா முயற்சிகளும் எடுத்துக் கொள்கிறோம் என்று வருவாய்த் துறையைப் பொறுத்தவரையில் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் எனவே, இப்பொழுது கூலி நிர்ணயித்திருக்கிறோமே இதுஎப்படிச் செயல்படுகிறது என்பதை இன்னும் ஐந்தாறு மாத காலத்திற்குப் பார்ப்போம். அது சரியாகச் செயல்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லி, வேறு எப்படிச் செயல்படுத்தலாம் என்பதற்கான யோசனைகளையும் சொல்லுவார்களேயானால் இந்த அரசு உண்மையிலேயே அதைப்பற்றி பரிசிலனை செய்யும்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, விவசாயத் தொழிலாளர்களுக் வகுக்கப்பட்டிருக்கின்ற ஊதியம் எல்லாயிடங்களிலும் சரிவர நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்று அறிவதற்கான முயற்சியைப்பற்றிஅமைச்சரவர்கள் சொன்னதற்கு நன்றி. சிலயிடங்களிலே வயல்கள் கொஞ்சமாகவும், அதை நம்பியிருக்கின்ற விவசாயத் தொழிலாளர்களின் வயிறுகள் நிறையவும் இருப்பதால் ஒரு நாளைக்கு நாற்பது பைசாவுக்குக் கூட ஒப்பந்தக் கூலிகளாகப் போகின்றவர்கள் இருக்கிறார்கள். சில பகுதிகளில் ஒருநாளைக்கு 12 ரூபாய் ஊதியம் கொடுக்கின்ற நிலைமையும் இருக்கின்றது அங்கே ஆட்கள் இல்லாமல் இருப்பதால். வயல்களில் நாற்றுகள் முற்றியும், களைகள் பற்றியும் இருக்கின்ற நிலைமைகள் இருக்கின்றன? இப்படியுள்ள இந்த இரண்டு இடங்களிலேயும் உள்ள சூழ்நிலைகளை ஆராய்ந்து வயல்கள் இல்லாத இடங்களில் இருக்கின்ற மக்களை வயல்கள் இருக்கின்ற இடங்களுக்குக் கூட்டிச்சென்று, அவர்களது ஊதியம் குறைவுபடாமல் இருப்பதற்கு அரசாங்கம் வழிவகைகளைக் காணுமா என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கிழக்குத் தஞ்சை மாவட்டம் தவிர மற்ற எல்லாயிடங்களிலேயும் இந்த குறைந்தபட்ச ஊதியம் பொருந்தும். எனவே, இதைச் செயல்படுத்துகின்ற அளவிற்கு மாண்புமிகு ரமணி போன்றவர்கள். இளையபெருமாள் போன்றவர்கள், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் கூட மிகவும் அக்கறையோடு செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இப்பொழுது நான் இந்தத் துணைக் கேள்வியைக் கேட்ட மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறேன். கா.கா.தே.கா. தலைவர் மதிப்பிற்குரிய, மரியாதைக்குரிய குமரி அனந்தன் அவர்கள் மிகவும் அக்கறையோடு சட்டமன்றத்தில் செயல்படக் கூடியவர்கள். அவர்களுக்குத்தான் நான் இப்பொழுது பதில் சொல்லிக் கொண்டிருக்கிறேன். இதற்குள்ள ஒரே நிவாரணம்,

விவசாயத் தொழிலாளர்களுக்காக நிரம்பத் தொழிற்சங்கங்களை ஆரம்பிக்க வேண்டும். அவர்கள் அன்-ஆர்கனைஸ்ட் செக்டராக இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்காக நிறைய தொழிற் சங்கங்கள் இல்லை. அவர்களுக்கு நிரைய தொழிற் சங்கங்களை ஆரம்பித்து, அவர்கள் வேலை செய்யும் இடங்களில் எங்கெங்கு இந்தக் குறைந்தபட்ச ஊதியத்தைக் கொடுக்காமல் ஏமாற்றுகிறார்களோ அதைக் கண்டறிந்து, அங்கிருந்து இந்தக் குறைந்தபட்ச ஊதியத்தை வாங்கிக் கொடுப்பதில் கவனம் செலுத்த வேண்டும் எனவே இந்த அரசின் வேண்டுகோளாக இதை ஏற்று விவசாயத் தொழிலாளர்களுக்கு நிரம்பத் தொழிற் சங்கங்களை ஆரம்பியுங்கள் அன்-ஆர்கனைஸ்ட் செக்டாராக இருக்கின்ற அவர்களை ஆர்கனைஸ்ட் செக்டாரிலே கொண்டு வந்து, குறைந்தபட்ச ஊதியத்தை அவர்களுக்கு விரைவில் வாங்கித் தருவதற்கு முன்வர வேண்டும். அது ஒன்றுதான் சரியான வழி.

திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே விவசாயத் தொழிலாளர்களுக்குக கூலி நிர்ணயம் செய்திருக்கும் சட்டத்தில் கிழக்குத் தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும் விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தஞ்சை மாவட்டத்தில் மட்டும் தான் உற்பத்திக்கேற்ற விலை கிடைக்க வில்லை, மற்ற மாவட்டங்களில் இருக்கின்றதுபோல் தஞ்சை மாவட்டத்தில் விலை இல்லாததால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கூலி நிர்ணயம் பற்றிய கேள்வி. உறுப்பினரவர்கள் வாத்தியாருக்குப் படித்தவர் என்று நினைக்கிறேன். குறைந்தபட்சக் கூலியைப் பற்றிய கேள்வியில் நெல் விலை பற்றிய கேள்வி வராது.

திரு. செ. இராமலிங்கம்: இது கூலி சம்பந்தப்பட்டதாகவும் இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் அதிகமாகக் கூலியைக் கொடுப்பதற்கு அரசே மானியமாகக் கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கிழக்குத் தஞ்சை மாவட்டத்தில் கொடுப்பது ஃபேர் வேஜஸ்; இதுமினிமம் வேஜஸ். எனவே மானியம் கொடுப்பது என்றால் யார் கொடுப்பது? தற்போதுள்ள நிலையை ஓவர்கம் பண்ணி அவர்களுக்கு வேஜஸ் கிடைக்க வழி செய்ய வேண்டும். இதில் மானியம் கொடுப்பது என்பதற்கு எனக்கு அர்த்தம் புரியவில்லை; இதற்கு எப்படி பதில் சொல்வது என்றும் தெரியவில்லை,



திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்கள் கூறும்பொழுது சொன்னார்கள் மாநிலத் தொழிலாளர் அமைச்சர்களெல்லாம் கூடி மினிமம் வேஜஸ் ஃபிக்ஸ் செய்தோம் என்று. மினிமம் வெஜஸ் ஃபிக்ஸ் செய்யும் பொழுது எல்லா மாநிலங்களின் அடிப்படையிலேயும் சேர்ந்து ஒரே அளவிலே ஃபிக்ஸ் செய்தார்களா எல்லா மாநிலங்களிலேயும் இருக்கக்கூடிய வேஜஸைப் போல இங்கேயும் அதே அளவில் ஃபிக்ஸ் பண்ணியிருக்கிறார்களா? அல்லது இந்த மாநிலத்திற்குத் தனியாக ஏதாவது வேஜஸ் ஃபிக்ஸ் பண்ணியிருக்கிறார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது நேஷனல் மினிமம் வேஜ் பற்றியதாகும். இந்த நேஷனல் மினிமம் வேஜ் பற்றி பரிசீலனை செய்யப்பட்டது. பேசப்பட்டது, ஆனால் அது சாத்தியம் இல்லை என்றும் அந்தந்த மாநிலங்களிலே உள்ள நிலைமைகளுக்கேற்ப விவசாயத் தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயம் செய்ய முடிவெடுக்கப் பட்டது. அதுமட்டுமல்லாமல் அண்மையிலே செயலாளர்கள் கூட்டத்திலே கூட வாழ்கைப் புள்ளி 50 சதவிகிதம் உயர்ந்து விட்டாலோ அல்லது இரண்டு வருடத்திற்கு ஒரு முறையோ இதை மாற்றி அமைப்பது நல்லது என்று முடிவெடுக்கப்பட்டது. இவைகளை எல்லாம் இந்த அரசு ஃபெயித்புல்லாக இம்ளிமென்ட் செய்யும்.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக குறைந்தபட்சக் கூலி நிர்ணயச் சட்டம் கொண்டு வந்தார்கள். தற்சமயம் தஞ்சை மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கின்ற வறட்சியின் காரணமாக விவசாயத் தொழிலாளர்களுக்கு எத்தகைய கூலியும் கிடைக்காத அபாயகரமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதைப் பரிசீலித்து அந்த விவசாயத் தொழிலாளர்களை பாது காக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மூலக் கேள்விக்கு சம்பந்தப்பட்டது அல்ல.

திரு. எல். இளையபெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் விவசாய உயர்மட்டக் குழு குறைந்த பட்சக் கூலி சம்பந்தமாக சிபாரிசு செய்தது என்று எப்போது செய்தது? அப்படிச் செய்தும் அதை ஏன்

இன்னும் அமல்படுத்தவில்லை, மேலும் தேசிய சர்க்கார், இந்த விவசாயத் தொழிலாளர்கள் சம்பந்தமாக மாநில அரசுகள் கவனிக்காத குறையால்தான், எல்லா மாநிலங்களையும் ஒன்றாகக் கூட்டியதாக நான் அறிகிறேன். அப்படிக் கூட்டப்பட்டும் கூட, இந்த குறைந்தபட்சக் கூலி மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்டிருப்பது உண்மைதானா? அல்லது நம்முடைய நிலைமைக்கு ஏற்றவாறு இதை அமைத்தோமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது குழுவினுடைய பரிந்துரை வந்திருக்கிறது பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். குழு நிர்ணயித்தக் கூலியை இன்னும் அறிவிக்கவில்லை. அறிவிக்கப்போகிறோம். ஆனால் பொதுவாக நடைமுறையில் இதுவரையில் மாநிலத்திற்கு மாநிலம் வித்தியாசம் இருந்துதான் வருகிறது. ஏனென்றால் நாமே. 'unity in diversity' தானே, டைவர்சிட்டி இருக்கிறது, அதிலே யூனிட்டியைக் கொண்டுவரப் பார்க்கிறோம்.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, ஏற்கனவே விவசாயத் தொழிலாளிகளுக்குக் குறைந்த பட்சக் கூலி நிர்ணயித்து நீண்ட காலம்ஆகிவிட்டது. இப்போது வந்திருக்கின்ற குழு அறிக்கையை எவ்வளவு காலத்திற்குள்ளாக அரசு வெளியிடும். அந்தக் குழு என்ன சிபாரிசு செய்திருக்கிறது என்று இந்த அவையிலே அறிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துணைக் கேள்வியிலே பல விவரங்களைக் கேட்பதற்கு அனுமதிக்க முடியாது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, திரு. வரதராஜன் அவர்கள் கூறுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிக நாள் ஆகிவிடவில்லை. இந்த அரசு ஆட்சிக்கு 30-6-1977-ல் முதலிலே வந்த உடனேயே 15-9-1979-லே ஒரு முறை கூலியை திருத்தி அமைத்திருக்கிறோம். மறுபடியும் இந்தக் கூலியை திருத்தி அமைக்க 2-3-1982—லே குழு அமைத்து விட்டோம். அந்தக் குழுவினுடைய பரிந்துரை 10-1-1983—லே வந்துவிட்டது. அது பரிசீலனை செய்யப்பட்டு கெஜட்டிலே அறிவிக்கப்படும். எல்லோரும் தெரிந்து கொள்ளலாம் போதிய விளம்பரமும்



### குடிசைப் பகுதிகளை மேம்படுத்தும் திட்டம்

* வினா எண் 112—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தமிழ்நாட்டில், தீவிர குடிசைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் படி குடிநீர், தெருவிளக்கு போன்ற வசதிகளை செயல்படுத்தும் திட்டம் அரசு பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: சென்னையிலுள்ள குடிசைப் பகுதிகளை மேம்படுத்த, விரைவுபடுத்தப்பட்ட மேம்பாட்டுத் திட்டம், ஏற்கனவே, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. மற்ற பகுதிகளில் இத்திட்டம் நகராட்சிகளால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினால் தமிழ்நாட்டில் எத்தனை குடிசைகள் ஏற்படும். எவ்வளவு ரூபாய் மதிப்பீட்டில் இந்தத் திட்டம் செயல்பட இருக்கின்றது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையைப் பொறுத்தமட்டில் சொல்லலாம். தமிழ்நாடு முழுவதும் சொல்லவேண்டுமானால் நிறைய இருக்கின்றது. அதற்கு நேரம் அதிகமாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தத் துணை வினாக்களுக்கான குறிப்பை அறிக்கையாக அவையிலே வைத்துவிடுங்கள்.

### உசிலம்பட்டிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம்

* வினா எண் 113—திரு. எஸ். ஆண்டித் தேவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த உசிலம்பட்டிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் எந்த அளவில் உள்ளது?

(ஆ) அத் திட்டம் எப்பொழுது முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த உசிலம்பட்டி பேரூராட்சியின் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் முன்னேற்றத்தில் உள்ளது.

(ஆ) இத் திட்டம் 1983 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(முற்பகல் 9-50)

திரு என். பழனிவேல்: தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் உள்ள உசிலம்பட்டி குடிநீர் திட்டம் முன்னேற்றத்தில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் தற்போது எந்த அளவில் அது முன்னேற்றம் அடைந்துள்ளது? எந்த அளவிற்குப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன? இந்த 1983 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் முடித்துக்கொடுக்கப்படுமா, அந்தத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தொகை எவ்வளவு? இதுபோன்று மதுரை மாவட்டத்தில் வேறு குடிநீர் திட்டங்கள் இப்போது செயல்பட்டு வருகிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரே துணை வினாவில் மாவட்ட முழுவதிலும் உள்ள திட்டங்கள் பற்றி கேள்விகள் கேட்பது சரியல்ல; ஒரு துணை வினாவில் பல கேள்விகள் கேட்பதும் சரியல்ல.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, உசிலம்பட்டி குடிநீர் திட்ட மதிப்பீடு ரூ. 56.75 லட்சமாகும். உத்தரவிட்ட தேதி 23-1-1980. வேலை ஆரம்பிக்கப்பட்ட தேதி மார்ச் 1981. இப்போது வேலைகள் நடந்துகொண்டு இருக்கின்றன. தலைமைப் பணியிடத்தில் இருந்து 3 வடி கிணறு வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. 4 லட்சம் லிட்டர் வட்டக் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டுமானப் பணிகள், நீர் கொண்டு செல்லும் குழாய் பதிக்கும் பணி ஆகியவை முன்னேற்றத்தில் உள்ளன

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவர் அவர்களே, உசிலம்பட்டி போன்ற திட்டங்களுக்கு தண்ணீர் கொண்டு போகும் போது 2-3 கிலோமீட்டர் தூரம் தண்ணீர் கொண்டு செல்கிறபோது, வழியில் உள்ள கிராமங்களுக்கும் இந்தத் திட்டத்தினால் தண்ணீர் கொடுப்பதற்கு அரசு திட்டம் வைத்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ் இராகவானந்தம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திலே கூட 16 வழியோர கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுக்கப்படும்.

காட்பாடி தொகுதியிலுள்ள இராஜா தோப்பில் அணை கட்டும் திட்டம்.

*வினா எண் 114—திரு. என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்பாடி தொகுதி கே. வி. குப்பம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள இராஜாதோப்பில் அணை கட்டும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில் உத்தேச மதிப்பீடு எவ்வளவு?

(இ) வேலை எப்போது துவங்கும்?



மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ), (ஆ) & (இ) வட ஆற்காடு மாவட்டம் குடியாத்தம் வட்டம் இராஜாதோப்பில் ஓர் அணைக் கட்டும் திட்டத்திற்கான சாத்தியக்கூறுகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

திரு. என். ஏ பூங்காவனம்: பேரவைத் தலைவர் அவர்களே, 1967 ஆம் ஆண்டிலிருந்து இந்த அணை கட்டுவதைப் பற்றி தொடர்ந்து பல உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். நான் மட்டுமே 3 முறை இந்தக் கேள்வியைக் கேட்டு இருக்கிறேன். இந்த அணை கட்டுவதன் மூலம் 40 கிராமங்களுக்கு நீர்பாசனம் கிடைக்கும். அந்தப் பகுதிகளில் நிலத்தடி நீர் பெருகவும் வாய்ப்பாக இருக்கும். ஆகவே, இந்த நடப்பு ஆண்டிலேயே அதை எடுத்துக்கொள்வதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, பாலாறு பகுதியில் ஏற்கனவே நீர்வளத்தை நாம் நன்றாகப் பயன்படுத்தி வருகிறோம். இந்தத் திட்டத்திற்கான நீர் வரத்துக்கள் குறித்து 1980 ஆம் ஆண்டு முதல் எடுக்கப்பட்டு வருகின்றன. மூன்று ஆண்டுகள் தொடர்ந்து அந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும். மூன்றாவது ஆண்டு ஆய்வு இந்த ஆண்டு முடிக்கப்படும். அந்த ஆய்வுகள் முடிக்கப்பட்ட பிறகு இதைப்பற்றி அரசு பரிசீலிக்கும். இந்த 1983 ஆம் ஆண்டுக்குள்ளேயே அதைப் பரிசீலித்து அரசு முடிவு எடுக்கும்.

திரு. என். ஏ. பூங்காவனம்: பேரவைத் தலைவர் அவர்களே அந்த அணைக்கட்டுப் பகுதியிலிருந்து வருகின்ற தண்ணீர் பெரும்பாலும் பாலாற்றுக்குச் செல்வது இல்லை. மலைப்பகுதியில் இருந்து தொடங்கி தனியாக நிலப்பகுதியைக் கடந்து சென்று விடும் சூழ்நிலை இருப்பதால், அந்த மலைத்தொடரிலேயே நீர்த்தேக்கத்தைக் கட்டினால், நிலத்தடி நீரை பாதுகாப்பதற்கு வசதியாக இருக்கும். பாசனத்திற்கு பயன உள்ளதாக இருக்கும். ஆகவே, அந்த அணையைக் கட்டித்தருவதற்கு ஆவன செய்ய அரசு முன்வருமா? இந்த ஆண்டே அதைச் செய்துதர முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, இந்த ஆண்டு இறுதிக்குள் அரசு அதைப் பற்றி ஆய்வு செய்து ஒரு முடிவுக்கு வரும்.

திரு. இல. பலராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வில் இருக்கிறது, 3 ஆண்டுகள் தண்ணீர் வரத்து கணக்கு எடுக்கப்படுகிறது, 3-வது ஆண்டு, கடைசியாக கணக்கு எடுப்பதாகச் சொல்லப்படுகிறது. இதற்காக திட்டம் போடப்பட்டு இருக்கிறதா? அதற்கான மதிப்பீடு அளவு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன். அது ஒரு வறட்சியான பகுதி என்பதால் அதை விரைவுபடுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே. ஏற்கனவே 24·75 லட்சம் மதிப்பீட்டில் பாசனத்துறை தலைமைப் பொறியாளர் அரசுக்கு திட்டம் அனுப்பியுள்ளார். நீர் வரத்து 3 ஆண்டுகாலம் கணக்கெடுக்கப்படவேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டதால், நில வரத்து குறித்து வருவாய் வாரியம் கணக்கெடுத்து வருகிறது. இரண்டாண்டு நீர் வரத்து கணக்குகள் எடுக்கப்பட்டுவிட்டன. இந்த ஆண்டு 3–வது ஆண்டு நீர் வரத்து கணக்கு எடுக்கப்பட்டு வருகிறது. அது எடுக்கப்பட்டு முடிந்தபின், அதனை ஆய்வு செய்து, அதற்குப் பிறகு அரசு முடிவு செய்யும். நீர் வரத்து கணக்கு ஆய்வு செய்யப்பட்டபின் முடிவு செய்யவேண்டுமென்று இருக்கின்ற காரணத்தால், இந்த மூன்றாவது ஆண்டு கணக்கு எடுக்கப்பட்டு முடிந்தவுடன், இந்த ஆண்டு இறுதிக்குள் நிச்சயமாக அரசு ஒரு நல்ல முடிவை மேற்கொள்ளும்.

பெரியாறு மேம்பாட்டுத் திட்டத்தினால் பயன்பெறும் நிலங்கள்.

* வினா எண் 115—திரு ஏ. பாலுச்சாமி: மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

பெரியாறு மேம்பாட்டுத் திட்டத்தினால் எவ்வளவு நிலங்கள் விளைநிலங்களாக மாற்றப்பட்டுள்ளது?

(அ) வரிச்சூர் குண்ணத்தூர் கண்மாய் நிலங்களும் இந்த திட்டத்தில் சேர்க்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) 25,463 ஏக்கர் நிலங்களுக்குப் புதிதாகப் பாசன வசதி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) ஏற்கனவே பெரியாறு வைகை பாசனத்தில் உள்ள வரிச்சூர் மற்றும் குன்னத்தூர் கண்மாய் நிலங்கள் இந்த திட்டத்தினால் பயன்பெறும்.

திரு. ஏ. பாலுச்சாமி: தலைவரவர்களே, இந்த 25,000 ஏக்கருக்குப் பாசன வசதி அளிக்க எவ்வளவு செலவாகும்? மேலும் கூடுதலாக நிலங்களைச் சேர்த்துக்கொள்ளும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது: தலைவரவர்களே, இறுதியாக இந்தத் திட்டத்தை உலக வங்கியின் ஆலோசனையின் பேரில் மதிப்பிட்டு, 44·50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஜூலை 1981 ஆம் ஆண்டு நிர்வாக ஒப்புதலோடு இந்தத் திட்டம் இப்போது எடுத்துக்கொள்ளப்பட்டு வேலைகள் நடந்து வருகின்றன. இதற்குப் பின்னால் விடுபட்டுப்போன பல பகுதி



களையும் சேர்க்க வேண்டுமென்று பல இடங்களிலிருந்து வந்த கோரிக்கைகளை ஏற்று மேலும் கூடுதலாக 24,000 ஏக்கர் நிலங்கள் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற ஒரு திட்டத்தை அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திரு. ஏ. பாலுச்சாமி: தலைவரவர்களே, மேலும் எந்த எந்த இடங்களில் எவ்வளவு ஏக்கர் நிலம் இதனால் பயன்பெறும்? அதில் இந்த குன்னத்தூர் கண்மாய் நிலங்கள் சேர்க்கப்பட்டிருக்கிறதா? அதற்கு எவ்வளவு ரூபாய் செலவு செய்ய உத்தேசம் இருக்கிறது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, முகவை மாவட்டத்தில் சிவகங்கை வட்டம், மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி வட்டம், திருமங்கலம் வட்டம் ஆகிய வட்டங்கள் பயன்பெறும் வகையில் ஏற்கெனவே 1978-லே ஒரு திட்டத்தைத் தயாரித்து, பிறகு உலக வங்கியின் ஒப்புதலோடு வேறு ஒரு திட்டத்தைத் தயாரித்தோம். இப்போது திரும்பவும் அதை ஆய்வு செய்ய வேண்டுமென்று முடிவுசெய்து கூடுதலாக 24,000 ஏக்கர் நிலங்கள் சேர்த்துக் கொள்ளப்பட பரிசீலனை நடந்துகொண்டிருக்கிறது. இந்த சீரமைப்பின் மூலம் பயன்படும் ஒரு திட்டமாக இதை தயாரிக்கும்போது மேலும் 38.68 கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அது பரிசீலனையில் இருக்கிறது. இதையும் சேர்த்தால் கிட்டத்தட்ட 49,000 ஏக்கர் பயன்பெறும்.

திரு. க. பாரமலை: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 25,000 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகச் சொன்னார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது வைகை பாசனத்துனுடைய தண்ணீர் வரத்து மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. வருசநாட்டு மலையிலுள்ள காடுகளை அழித்து விவசாயம் செய்து கொண்டிருப்பதால் தண்ணீர் வரத்து குறைந்திருக்கிறது. அதனால் வைகை ஆயக்கட்டுக்கு பாசன வசதி நிச்சயமற்ற நிலையில் இருப்பதால் இந்த பெரியாறு மேம்பாடு திட்டத்தின் மூலம் மீச்சப்படுகிற தண்ணீரை வைகை ஆயக்கட்டுநிலங்களுக்குக் கொடுத்து பாசன வசதியை உறுதிபடுத்தும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுவதுபோல 15,574 ஏக்கர் மாமூல் கோட்ட நிலங்களுக்கும் 1,457 ஏக்கர் மேட்டுப் பகுதி நிலங்களுக்கும் ஒட்டுமொத்தமாக பாதிக்காத வகையில் ஏற்கெனவே அளிக்கப்பட்டிருக்கிறது. அதை நவீனப் படுத்துவதன் மூலம் கிடைக்கக்கூடிய உபரி தண்ணீர் முகவை மாவட்டத்தில் சிவகங்கை, மதுரையில் உசிலம்பட்டி, திருமங்கலம் ஆகிய வட்டங்கள் பயன்பெறும் வகையில் அவை சேர்க்கப் பட்டுள்ளன. ஆகவே, வைகை ஆயக்கட்டு நிலங்கள் நிச்சயமாகப் பாதிக்கப்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### திருமங்கலம் தொகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள வைகைக் கால்வாய் சீரமைப்புப் பணிகள்.

*வினா எண் 116 திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) வைகை அணையிலிருந்து கால்வாய்களைச் சீரமைக்கும் பணியின் தொடர்பாகத் திருமங்கலம் தொகுதியில் எப்போது பணி நிறைவுபெறும்?

(ஆ) புதிதாகப் பாசன வசதி எத்தனை ஏக்கர்களுக்கு அளிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) 1984 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களுக்குள் சீரமைப்புப் பணிகள் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) திருமங்கலம் பிரதான கால்வாய்மூலம் 2,326 ஏக்கர் புதிய நிலங்கள் பாசன வசதி பெறும்.

திரு என் எஸ் வி. சித்தன்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லுகின்றபோது இந்த சீரமைப்புத் திட்டத்தின்கீழ் ஏறத்தாழ 50,000 ஏக்கர் புதிதாக பாசனம் பெறும் என்று சொன்னார்கள். திருமங்கலத்தில் ஏறத்தாழ 23.26 ஏக்கர் பயன்பெறும் என்று சொல்லியிருக்கிறார்கள். உசிலம்பட்டி தாலுகா இராமநாதபுரம் மாவட்டத்தை ஒட்டி இருக்கின்ற காரணத்தால் இராமநாதபுரத்தின் வறட்சி இந்தப் பகுதியிலும் அதிகமாக இருக்கிறது. ஆகவே இப்போது அமைச்சரவர்கள் குறிப்பிட்டுள்ள பகுதி மிகவும் குறைவாக இருப்பதால் இன்னும் அதிகமான ஏக்கர் நிலங்கள் பயன்பெறும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10–00)

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2,326 ஏக்கர் என்பது ஏற்கெனவே தயாரிக்கப்பட்டு முதலாவது கட்டமாக எடுத்துக் கொள்ளப் பெற்ற திட்டங்களிலே சேர்க்கப்பட்டது. இரண்டாவதாக 24,000 ஏக்கர்களுக்கு எடுக்கப்படவிருக்கிறது. அதிலேயும் திருமங்கலம், உசிலம்பட்டி வட்டங்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் செய்தி மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும் என்று நான் நினைக்கிறேன்.



திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிற நேரத்திலே, 1984 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இந்தப் பணிகள் நிறைவேற்றப்படும் என்று சொன்னார்கள். ஆனால் அந்தப் பகுதிகளில் வேலை நடைபெறுகிற சூழ்நிலையை கவனித்தால், மிக மெத்தனமாக இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, எப்படியாவது காரணம் காட்டி, மிக வறுமையான பஞ்சத்தில் அடிப்பட்ட பிரதேசம் என்பதால் முன்னுரிமை கொடுத்து அந்தப் பணிகளை 1984 டிசம்பருக்கு முன்னதாகவே முடிக்க தேவையான ஆணைகளை இட அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில பகுதிகளிலே இந்த வேலைகள் மிகவும் காலதாமதமாக இருப்பதற்கு காரணமே முதலாவதாக தயாரிக்கப்பட்ட திட்டங்களை முழுவதுமாக உலக வங்கி ஏற்றுக்கொள்ளவில்லை. சில பகுதிகளுக்குத்தான் ஒப்புதல் அளித்தார்கள். ஆனாலும்கூட மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் அந்தப் பகுதியினுடைய பின்தங்கிய நிலைமை எடுத்துக்காட்டி அவசியம் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று சொன்னதன் காரணமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, இந்தப் பகுதிகளைச் சேர்க்க வேண்டுமென்று—குறிப்பாக சிவகங்கைப் பகுதியையும் சேர்க்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே உத்திரவிட்டார்கள். அந்த அடிப்படையிலே திருப்பவும் ஆய்வு செய்து பணிகளை துவங்குகிறபோது, ஒவ்வொரு பணியையும் நிறைவேற்றுவதில் கால வேறுபாடு இருக்கலாம். ஆனால், எல்லாவற்றையும் 1984-க்குள் முடித்துவிட வேண்டுமென்று ஒரு முனைப்போடு அரசு இயங்கிக் கொண்டு வருகிறது.

### சேடப்பட்டி, சின்னக்கட்டளைப் பகுதியில் கிடைக்கும் சுண்ணாம்புக் கற்கள்.

*வினா எண் 117—திரு. இரா. முத்தையா: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் சேடப்பட்டி, சின்னக்கட்டளைப் பகுதியில் கிடைக்கும் சுண்ணாம்புக் கல்லின் தரம் ஆராயப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், தரமான அச் சுண்ணாம்புக்கல்லை பயன்படுத்தி ஒரு சிமிண்ட் ஆலை நிறுவப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) ஆம்.

(ஆ) மதுரை மாவட்டம் சேடப்பட்டி, சின்னக்கட்டளைப் பகுதியில் காணப்படும் தரம் குறைந்த சுண்ணாம்புக்கற்கள் சுக்காங்கல் (Kankar) என்ற வகையைச் சார்ந்ததாகும். இச்சுண்ணாம்புக்கற்களில் சுண்ணாம்புச்சத்து குறைவாக உள்ளதால் இதனை சிமெண்ட் உற்பத்தியில் பயன்படுத்தல் இயலாது.

திரு. இரா. முத்தையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சேடப்பட்டி, சின்னக் கட்டளைப் பகுதிகளில் காணப்பெறும் சுண்ணாம்புக்கல் தரம் உயர்வு இல்லாத காரணத்தால் சிமென்ட் உற்பத்தியில் பயன்படுத்துவதற்கு இயலாது என்று தெரிவித்து இருக்கிறார்கள். ஆனால், அந்தப் பகுதியில் கிடைக்கக்கூடிய இந்த சுண்ணாம்புக் கற்களை இப்பொழுதும் பல தனியார்கள், எந்தவிதமான அனுமதியும் இல்லாமல் சில இடங்களில் இருந்து எடுத்துக் கொண்டு வேறு இடங்களில் சென்று, சிமென்ட் தயாரிப்பது போன்ற காரியங்களில் ஈடுபடுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள் ஆகையினால், ஒரு சிமென்ட் ஆலையை நிறுவும் அளவுக்கு முழுமையாக பயன்படுத்த முடியாவிட்டாலும்—வேறுவகையில்—சிறு அளவிலாவது இதைப் பயன்படுத்தி சிமென்ட் தயாரிக்க அரசு ஆராயுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப்போல, சிமென்ட் தொழிற்சாலையில் பயன்படுத்துவதற்குரிய போதிய தரம் அங்கே கிடைக்கக்கூடிய சுண்ணாம்புக் கற்களுக்கு இல்லாத காரணத்தால் அதைப் பயன்படுத்த முடியாத நிலை இருக்கிறது. பெரிய ஆலையாக இருந்தாலும், சிறிய ஆலையாக இருந்தாலும். ரா-மெட்டீரியல் மூலப்பொருள்கள் ஒன்றுதான். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல அதனை பயன்படுத்தி வேறு ஏதாவது செய்ய முடியுமா என்பதைப் பற்றி வேண்டுமானால் மேலும் ஜியாலஜி டிபார்ட்மெண்டிலே சொல்லி ஆய்வு செய்யச் சொல்லலாம்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரமான சுண்ணாம்புக் கல்லாக இல்லாத காரணத்தால், அங்கே சிமென்ட் ஆலையை நிறுவமுடியாது என்று அமைச்சர் அவர்கள் பதிலளித்திருக்கிறார்கள். மதுரை மாவட்டத்தில் பாளையத்தில் தரமான சுண்ணாம்புக்கல்கிடைப்பதாகச் சொல்லப்படுகிறதே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே ஒரு சிமென்ட் ஆலையை நிறுவுவதற்கு ஆவன செய்ய முன் வருவாரா என்று அறியவிரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாளையத்தில் ஒரு சிமெண்ட் ஆலை நிறுவவேண்டும் என ஏற்கெனவே மாநில அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. நிதி ஒதுக்கப்பட்டு, நில ஆர்ஜிதமும் செய்யப்பட்டு விட்டது. தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பொரேஷன் அந்தப்பகுதியில் சுமார் 40 கோடி ரூபாய் திட்டத்தில் ஒரு சிமெண்ட் ஆலையை நிறுவ உத்தேசித்துள்ளது. அதன் ஆய்வு மைய அரசின் பரிசீலனையில் இருக்கிறது. முதலில் கரூர், திண்டுக்கல் பகுதிகளில் ரெயில்வே லைன் இல்லை என்று காரணம்காட்டி நிராகரிக்கப்பட்டது. அது சேர்க்கப்பட்டதற்கு பின்னாலே, நிலக்கரி இருப்பு இல்லை என்று சொல்லி—199 ஆம் ஆண்டு வரையில் நிலக்கரி கொடுப்பதற்கு புதிதாக கேரண்ட்டி கிடையாது என்று சொல்லி—மீண்டும் நிராகரித்தார்கள். ஆனால் அதற்குப் பிறகு ஒன்றிரண்டு வேறு மாநிலங்களுக்கு நிலக்கரிக்கான லைசன்ஸ் கொடுக்கப்பெற்றதாகத் தெரிகிறது. பாளையத்தில் சிமெண்ட் ஆலை வேண்டும் என்று ஏற்கெனவே கொடுக்கப்பெற்ற மனுவை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று மைய அரசை மாநில அரசு தொடர்ந்து வற்புறுத்தும்.

### தமிழகத்தில் தொழிற்துறையில் பின்தங்கியவையென அறிவிக்கப்பட்டுள்ள மாவட்டங்கள்.

*வினா எண் 118—திரு எம். சின்னசாமி: திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சோரனம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிற்துறையில் பின்தங்கிய மாவட்டங்களாக 87 மாவட்டங்களை (Indus rially Backward Districts) மைய அரசு அறிவித்திருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் தமிழகத்தில் எத்தனை மாவட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) அண்டு (ஆ) பல்வேறு பகுதிகளுக்கிடையேயுள்ள ஏற்றத்தாழ்வுகளை சரி செய்து பின்தங்கிய பகுதிகளில் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்துவதே மைய அரசின் முக்கிய குறிக்கோளாகும். மைய அரசின் கொள்கையின் அடிப்படையில் தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பெரிய மற்றும் நடுத்தர தொழில்கள் இல்லாத 82 மாவட்டங்களில் தொழில் துவங்க வரும் விண்ணப்பங்களுக்கு பிற பகுதிகளிலிருந்து வரும் விண்ணப்பங்களைக் காட்டிலும் முன்னுரிமை வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை,

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மத்திய அரசினுடைய திட்டத்தினால் தமிழ்நாடு
முழுவதும் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே மாநிலத்
திற்கு இவ்வளவு மாவட்டங்கள் என்ற கொள்கையினை மறு
பரிசீலனை செய்ய மாநில அரசு மத்திய அரசினை வற்புறுத்துமா
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகக் கொண்டுவரப்பட்ட
திட்டத்தின்படி பீகாரில் 5, திரிபுராவில் 5, ஜம்மு காஷ்மீரில் 7,
மத்திய பிரதேசத்திலே 17, மணிப்பூரிலே 5, மேகலாயாவில் 3,
நாகாலாந்திலே 1, ஒரிசாவிலே 3, ராஜஸ்தானிலே 5, சிக்கிமிலே 4
திரிபுராவிலே 3, உத்தரபிரதேசத்திலே 10, மேற்கு வங்காளத்
திலே 5, அருணாசலபிரதேசத்திலே 4, தாதரில் 1, மிசோரத்
திலே 2, அஸ்ஸாமில் 2, கர்நாடகாவிலே 1 என்ற வகையிலே
82 மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றது. அதிலே
தமிழகத்திலே உள்ள ஒரு மாவட்டம் கூட இடம் பெறவில்லை.
எனவே மத்திய அரசினர் கொண்டிருக்கின்ற அந்த கான்சப்ட்
தவறானது என்பதை மாநில அரசினர் சார்பாக வற்புறுத்து
கிறோம். ஆனால் ஏற்கெனவே சென்ட்ரல் சப்சிடி என்று
சொல்லி தாலுக்கா வாரியாக மாநிலங்கள் பின்தங்கிய அடிப்
படையிலே தேர்ந்தெடுக்கப்பட்ட வகையிலே தமிழ்நாட்டிலே
33 தாலுக்காக்கள் இருக்கின்றன. எனவே அதே முறையை
இதிலேயும் பின்பற்றவேண்டும் என்று மாநில அரசு வற்புறுத்து
கின்றது. சென்ட்ரல் சப்சிடி கொடுக்கின்ற வகையிலே தேர்ந்
தெடுக்கப்பட்டது 33 தாலுக்காக்கள் என்றால் வட மாநிலங்
களிலே உதாரணமாக உத்தரபிரதேசத்திலே 103 தாலுக்காக்கள்
என்று வேண்டுமானால் அறிவித்துக்கொள்ளட்டும். எனவே
இந்த முறை பின்பற்றப்பட்டால்தான் பரவலாக எல்லா இடங்
களிலும் தொழில்கள் வளருவதற்குரிய வாய்ப்புகள் ஏற்படும்
என்பதை மாநில அரசு தொடர்ந்து மத்திய அரசிடத்தில்
வற்புறுத்தும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களே
அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது மத்திய அரசின்
கான்சப்ட் பற்றிச் சொன்னார்கள். பிற்பட்ட மாவட்டங்கள்
என்று அறிவிப்பதற்கு மத்திய அரசு எப்படிப்பட்ட கான்சப்ட்
வைத்திருக்கின்றது. மாநில அரசு எப்படிப்பட்ட கான்சப்ட்
வைத்திருக்கின்றது என்பதை அறிவிப்பார்களா? ஏற்கெனவே
மாநில அரசால் பிற்பட்ட மாவட்டங்கள் என்று அறிவிக்கப்
பட்ட மாவட்டங்களைச் சேர்க்கவேண்டும் என்று மீண்டும்
மத்திய அரசிடம் வற்புறுத்துவதற்கு மாநில அரசு ஏதாவது
நடவடிக்கை எடுக்க முன்வருமா?



மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவரவர்களே.
அவர்கள் மிகத் தெளிவாக சீரோ இன்டஸ்ட்ரீஸ் டிஸ்ட்ரிக்ட்
என்று சொல்லி அதாவது ஒரு தொழிலும் இல்லாத, மாவட்டம்
என்ற கான்சப்டைப் பயன்படுத்துகிறார்கள். பெரிய மற்றும்
நடுத்தரத் தொழில்கள் எதுவுமே இல்லாத மாவட்டம் என்ற
வகையிலே 82 மாவட்டங்களைத் தேர்வு செய்திருக்கிறார்கள்.
ஆனால் பரப்பளவிலேயும், மக்கள் தொகையின் அடிப்படையி
லேயும் மாவட்டத்திற்கு மாவட்டம் மிகுந்த வேறுபாடு • இருக்
கின்றது. தமிழ்நாட்டிலே உள்ள ஒரு மாவட்டம் வட மாநிலங்
களிலே பல மாவட்டங்களாக இருக்கின்றது. நான் சொல்வது
பரப்பளவிலும், மக்கள் தொகையின் அடிப்படையிலும். எனவே
மாவட்டத்திற்கு ஒரு தொழில் என்ற வகையிலே கணக்கிட்டால்
இந்தியாவிலே இராமநாதபுரம் மாவட்டம் நிச்சயமாக இருக்கும்.
ஆனால் அந்த அடிப்படையிலே பார்க்கின்றபோது இராமநாதபுரம்
மாவட்டத்திற்கு உட்படாத வேறு மாவட்டங்கள் அதாவது
தர்மபுரி போன்ற எந்த மாவட்டத்திற்கும் இப்படிப்பட்ட வேறு
எந்தப் பகுதிகளுக்கும் பயன் கிடைக்கின்ற வாய்ப்பே இல்லாமல்
போகும். எனவே ான் மாவட்ட அடிப்படையினை எடுத்துக்
கொள்ளாமல் ஏற்கெனவே சப்சிடி கொடுக்கப்பட்டபோது பின்
தங்கிய பகுதிகளாக தாலுக்காவினை அடிப்படையாக வைத்து
அறிவித்திருக்கிறார்கள். அந்த முறையினையே தொடர்ந்து
பின்பற்ற வேண்டும். ஆனால நான் ஏற்கெனவே சொன்னதைப்
போல் இன்னும் அதிகமாக பின்தங்கிய பகுதிகள் வேறு இடங்
களில் இருக்கின்றது என்று வைத்துக்கொண்டால் அங்கெல்லாம்
இன்னும் கொஞ்சம் அதிகமாக தாலுக்காக்களை அவர்கள்
அறிவித்துக்கொள்ளலாம். அதிலே ஆட்சேபணை இல்லை.
எனவே தாலுக்கா என்ற முறைதான் பொருத்தமானது, எல்லா
இடங்களும் தொழில் வாய்ப்பினைப் பெறுகின்ற நிலைமை
ஏற்படும்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தொழில் துறையிலே பின்தங்கிய மாவட்டங்கள்
என்று அறிவிக்கின்ற அதிகாரம் மத்திய தொழில் அமைச்சருக்கு
இருக்கின்றதா? அல்லது இன்டிபென்டன்ட் அதாரிட்டி அதை
அறிவித்திருக்கின்றதா? மேலும் தமிழ்நாட்டிலே 5 தாலுக்காக்
களுக்கு மேலே கொண்டதாக எந்த மாவட்டமும் இருக்கக்
கூடாது என்று நம்முடைய அரசாங்கம் முடிவெடுத்து அதன்படி
அவ்வாறு தாலுக்காக்களை உள்ளடக்கிய மேலும் பல மாவட்டங்
களை ஏற்படுத்துகின்ற வகையிலே அரசு முன்வருமா?

(முற்பகல் 10.10)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, பிளானிங் கமிஷன், அதற்கு
பின்னால் மைய அரசு பிளானிங் கமிஷனுடைய முடிவுகளில்
மேல் மைய அரசு இறுதியாக இந்த முடிவை அறிவிக்கிறது.
புதிதாக அவர்கள் உண்டாக்கி இருப்பதற்கு ஏற்ப சின்ன
மாவட்டங்களை உண்டாக்க இயலுமா என்ற கேள்விக்கு நான்

பதில் சொல்ல இயலாது. எனவே நாம் இப்போது இருக்கிற மாவட்டங்களுக்கு வசதி தருகிற விதத்திலே நம்முடைய கேள்விகளை மத்திய அரசுக்கு அனுப்பி அதற்கான வசதிகளை எடுக்க முயற்சிக்கிறோம்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப்: மிஸ்டர் ஸ்பீக்கர் சார், நம்முடைய மாநிலத்திலே எத்தனை மாவட்டங்கள் ஜீரோ இன்டஸ்டிரிஸ் மாவட்டங்களாக இருக்கின்றன. இப்போது சென்டிரல் கவர்ன்மெண்டு பர்மிஷனுக்கு போவது, 5 கோடி ரூபாய் முதலீடு இருக்கிற இன்டஸ்டரிஸ்க்கு அவர்கள் பர்மிஷன் வேண்டும். அதற்குள்ளே இருப்பதற்கு நாமே தீர்மானித்துக் கொள்ளலாம். இந்த ஜீரோ இன்டஸ்டிரீஸ் மாவட்டங்களுடன் நம்முடைய மாநிலத்தில் இருப்பதையும் சேர்த்துக் கொள்ளும்படி இந்த அரசாங்கம் வற்புறுத்தி இருக்கிறதா? வற்புறுத்துமா என்பதை தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகுபேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஹாஜாசெரீப் அவர்கள் சொல்லியது அதிலேயே இருக்கிற நடுத்தர தொழில்கள், பெரிய தொழில்கள் இவற்றிற்கும் பொருந்தும். சிறுதொழில்களை அந்த அந்த மாநிலங்களில் உள்ள அவர்களே வைத்துக்கொள்ளலாம் என்பதில் பிரச்சினை இல்லை. அவர் சொல்வது போல் டெல்லிக்கு போகிற மனுக்களில் பெரும்பாலும் நடுத்தர தொழில்களும், பெரிய தொழில்களும் அங்கே போகிறது. எனவே தமிழ்நாட்டில் நடுத்தர, பெரிய தொழில்கள் வராமல் போனால் அது நாளாவட்டத்தில் சிறிய தொழில்களை கடுமையாக பாதிக்கும், நிச்சயமாக பாதிக்கும். எனவே நடுத்தர, பெரிய தொழில்களின் வளர்ச்சி இல்லையென்றால் சிறு தொழில்களின் வளர்ச்சி தடைப்படும். எனவே தான் நடுத்தர, பெரிய தொழில்கள் இங்கே வரவேண்டும் என்ற அடிப்படையில் நாங்கள் வற்புறுத்துகிறோம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜீரோ இன்டஸ்டரிஸ் மாவட்டங்கள் ஏதாவது இங்கே இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் சொன்னேன் இந்தியாவில் பின்தங்கிய மாவட்டங்கள் என்று பார்க்கிறபோது அதில் ராமநாதபுரம் மாவட்டம் நிச்சயமாக வரும். ஆனால் துரதிருஷ்டவசமாக ஏற்கனவே ஏதாவது ஒரு தொழிற்சாலை ஏதாவது ஒரு மூலையில் அந்த மாவட்டத்தில் இருக்கிறது என்று சொல்லி அங்கே நடுத்தர தொழில்கள் இருக்கிறது அதனால் இனிமேல் அந்த மாவட்டத்திற்கு நடுத்தர, பெரிய தொழில்கள்



அமைத்து தர முடியாது என்று சொல்கிற கடைப்பிடிக்கிற நடைமுறை அந்த கான்செப்ட் தவறு. எனவே தாலுக்காவை மையமாக வைத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லி அதை பேச்சிக்காக வைத்துக் கொள்ளுங்கள் என்று மாநில அரசு சிபாரிசு செய்திருக்கிறது.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, எந்த ஒரு மாவட்டத்திலும் ஏதாவது ஒரு தொழில் குறிப்பிடத்தக்க தொழில் இருந்தாலும்கூட அந்த மாவட்டத்தை அதனால் முன்னேறிய மாவட்டம் ஆகாது என்ற கொள்கையையும் அதற்கு மாறாக எந்த ஒரு மாவட்டமாக இருந்தாலும் வறுமைக்கோட்டுக்கு கீழே உள்ள மக்கள் என்ற புள்ளிவிவரக் கணக்குப்படி எங்கே அந்த தொகை அதிகம் இருக்கிறதோ அந்த அடிப்படையில் அகில இந்திய அரசு பின்தங்கிய மாவட்டங்களை தீர்மானிக்கவேண்டும் என்று வலியுறுத்துவதற்கு தமிழக அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக மாநில அரசு மைய அரசை வலியுறுத்தும். ஏன் என்றால் நான் முன்னால் சொன்னதுபோல, முதலிலே அமைச்சர் அவர்கள் மட்டத்திலே இங்கே தொழில்கள் வருகிறபோது பேச்சுவார்த்தை அளவிலே வேறு இடங்களுக்கு பின்தங்கிய மாவட்டங்களுக்கு போகும் என்று சொல்வது இப்போது லெட்டர் ஆப் இன்டெண்டு கொடுக்கிறபோது அந்த லெட்டர் ஆப் இன்டெண்டில் ஒரு கண்டிஷன் தருகிறார்கள். லைசன்ஸ் வேண்டும் என்றால் லெட்டர் ஆப் இன்டெண்டு செய்கிறபோது இங்கேயிருந்து யாராவது தொழில்கேட்டு இன்டஸ்டிரியலிஸ்டு அப்ளிகேஷன் போடுகிறபோது முதலிலே லெட்டர் ஆப் இன்டெண்டு கொடுக்கிறார்கள். லைசன்ஸ்க்கு முன்னாலே அந்த லெட்டர் ஆப் இன்டெண்டிலே ஒரு கண்டிஷன் போடுகிறார்கள் லைசன்ஸ் பெற வேண்டும் என்றால் இந்த தொழிலை இந்த 82 மாவட்டத்திலே ஏதாவது ஒரு மாவட்டத்தில் துவங்கினால்தான் லைசன்ஸ் என்று லெட்டர் ஆப் இன்டெண்டு-ல் கண்டிஷன் போடுகிறார்கள். இந்த மோசமான நிலைமையினால் தமிழ்நாடு பாதிக்கப்படும். எனவே அந்த கான்செப்டை நிச்சயமாக மாற்றி தாலுகா என்று அறிவிக்க வேண்டும் என்று தொடர்ந்து மாநில அரசு மைய அரசை வற்புறுத்தும்.

### மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம்.

*வினா எண் 119—திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் எந்த எந்த திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன?

(ஆ) அவைகளில் கொல்லிமலையில் எந்த எந்த திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கீழ்கண்ட திட்டங்கள் செயல் படுத்தப்படுகின்றன.

1, தோட்டக்கலை; 2. மண்வளப்பாதுகாப்பு; 3. கூட்டுறவு; 4. சிறுபாசனம்; 5. கல்வி; 6. சமூக நலம்; 7. மின்வசதி; 8. கிராமப் புற கைத்தொழில்; 9. பட்டுப்புழு வளர்ப்பு; 10. சாலை அமைத்தல்; 11. வனவளம்; 12. கால்நடை பராமரிப்பு; 13. சமுதாய வளர்ச்சி; 14. வீட்டுவசதி; 15. குடிநீர் வசதி யளித்தல்; 16. மருத்துவம் மற்றும் சுகாதாரம்,

(ஆ) மேலே கூறப்பட்ட எல்லாத் திட்டங்களும் கொல்லி மலையில் செயல்படுத்தப்படுகின்றன.

திரு. சி. சிவப்பிரகாசம்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மூலம் சென்ற ஆண்டு எவ்வளவு தொகை ஒதுக்கப் பட்டது? 1983-84 ஆம் ஆண்டிற்கு எவ்வளவு நிதி ஒதுக்கம் செய்ய அரசு உத்தேசித்துள்ளது?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : பழங்குடியினர் மேம் பாட்டுத் துணைத் திட்டத்திற்கு தமிழகத்திலே 9 இடங்களில் 1976-77 ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டு 451.36 லட்சம் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1983–84 ஆம் ஆண்டிற்கு 600 லட்சம் ஒதுக்கவேண்டுமென்று திட்டமிடப்பட்டிருக்கிறது.

திரு. சி சிவப்பிரகாசம்: மலைவாழ்மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படும் குடிநீர் திட்டத்தின் மூலமாக குழாய்க் கிணறுகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அவை சீராக இல்லாததால் சிறிய ஆறுகள், ஓடைகள் இவைகள் மூலமாக குடிநீர் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா? அங்கே உள்ள மக்கள் பயன் அடைகிற முறையில் சில்வர் ஓக், யூகலிப்டஸ் போன்ற மரங்களின் நாற்றுக்களை மானிய விலையில் தருவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம. விஜயசாரதி : தலைவர் அவர்களே, குடிநீர் பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மலைப் பகுதியிலே அது மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது என்பதை அரசு உணர்ந்து இருக்கிறது. அவர்கள் சொல்வதிலே உள்ள சாத்தியக்கூறுகளுக்கேற்ப அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் கேட்ட இரண்டு கேள்விகளுக்கும் ஒட்டுமொத்தமாக நான் இந்தப் பதிலை தெரிவிக்க விரும்புகிறேன்,

திரு. ஜி. மூர்த்தி: மலைவாழ் மக்களுக்கு குறிப்பிட்ட இடங் களில் தனி ஒன்றியம் அமைத்து சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : அத்தகைய எண்ணம் இல்லை.



மூங்கில்பாடி கிராம ஆதிதிராவிடர்களுக்கு அரசு கட்டிக்கொடுத்த வீடுகள்

வினா எண். 120. திரு. என். பெருமாள்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வரகூர் தொகுதியைச் சேர்ந்த மூங்கில்பாடி கிராமத்தில் வசிக்கும் ஆதிதிராவிடர்களுக்கு அரசு கட்டிக்கொடுத்த வீடுகள் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: ஆம்.

திரு. என். பெருமாள்: தலைவர் அவர்களே, என்னுடைய வரகூர் தொகுதியில் மூங்கில்பாடி என்ற இடத்திலே ஆதிதிராவிட மக்களுக்கு 25 வீடுகள் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே கட்டப்பட்டது. அது மோசமடைந்து இன்றைக்கு பாழடைந்து இருப்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: வீடுகள் எந்தக் காலத்திலே கட்டித்தரப்பட்டது என்பது முக்கியமல்ல. அவர்களுக்கு அந்த வீடுகள் இலவசமாகக் கட்டிக்கொடுக்கப்பட்டன. எனவே அந்த வீடுகளில் பழுது ஏற்படுமானால் அவர்களே அதற்கான செலவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று ஆணை இருக்கிறது. அந்த வகையில் வீடுகளைப் பயன்படுத்துகின்றவர்கள் பழுதுபார்ப் பதற்கான செலவை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பெருமாள்: தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தாட்கோ மூலம் வீடுகளைக் கட்டித்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி; வீடுகள் பழுதாகிவிடுகிற போது அதைச் சரிசெய்வதற்கு தாட்கோ மூலமாக ஏற்பாடு செய்யப்படுமா என்று கேட்கிறார் என்று நினைக்கிறேன். ஏற்கெனவே நான் எடுத்துச் சொன்னதைப்போல் அரசு எந்தக் காலத்திலே வீடுகளைக் கட்டித் தந்திருந்தாலும் தாழ்த்தப்பட்ட மக்களின் நலனுக்காகத்தான் அவை கட்டித்தரப்பட்டன. எனவே அவற்றில் பழுது ஏற்பட்டால் அவர்களே அதற்கான செலவை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: வீடுகட்டும் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பணத்தை வீடுகட்டுவதற்கு செலவு செய்யாத காரணத்தினால் வங்கிகளிலே போடப்பட்டதாக நான அறிகிறேன், அது உண்மையா? வீடுகளைக் கட்டும் திட்டத்தைப் பொறுத்தவரையில் அதை அமல்நடத்தாமல் இருப்பது உண்மையா? உடனடியாக அந்தத் திட்டத்தை அமல்படுத்த அரசு முன்வருமா?

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு எம். விஜயசாரதி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தாழ்த்தப்பட்ட மக்களுடைய நலனுக்காக இப்படி வீடுகளை கட்டித் தருவதோடு, அவர்களுடைய பொருளாதாரத்தையும் உயர்த்தவேண்டும் என்பது தான் அரசினுடைய கொள்கை. அந்த வகையில் தாட்கோ மூலமாக கட்டப்பட்ட வீடுகள் மாற்றியமைக்கப்பட வேண்டிய நிலையில் வீடுகளை கட்டுவதற்கு ஒதுக்கப்பட்டிருந்த தொகையை அரசு உத்தரவிட்டு தனியாக தாட்கோ மூலமாக ரூரல் ஹவுசிங் ஸ்கீமை நாம் செயல்படுத்துவதைப் போல அதே அளவிற்கு வீடுகளை அமைத்து அதற்கு உண்டாகக்கூடிய மொத்தத் தொகையான ரூ. 4,000—ல் ரூ. 3,250/-ஐ மான்யமாகவும் மீதியிருக்கிற ரூ.750ஐ பயன் பெறுபவர்கள் உழைப்புக்குரிய ஊதியமாகவும் கருதி ரூ 4000-ல் ஒரு வீடு என்ற அளவில் 201 சதுர அடியில் கட்டவேண்டுமென்று அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. அந்தவகையில் ஏற்கெனவே இருக்கக்கூடிய இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை முழுவதும் இதற்கு முன்பு நான் குறிப்பிட்டுச் சொன்ன திட்டத்திற்கு செலவிடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு.எஸ். இளைய பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் அமல்படுத்தப்படுமா என்பது தான் கேள்வி வீடே கட்டவில்லை என்றால் பழுது எப்படி வரும்*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூங்கில்பாடி கிராமத்தில் கட்டிக் கொடுத்த வீடுகள் பழுதடைந்துள்ளது என்பதுதான் கேள்வி. நீங்கள் தனிக்கேள்வி போடுங்கள், உட்காருங்கள்.

திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கட்டப்பட்டு வீடுகள் பழுதடைந்து இருக்கிறபோது, அந்த மக்கள் அவற்றை புதுப்பித்துக்கொள்ள அரசு குறைந்தபட்ச கடனாக நிதியுதவி அளிக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய வழக்கம் இதுவரையில் இல்லை. ஆனால் உறுப்பினர் அவர்கள் கடனாக தருவதற்கு என்ற வகையிலே ஒரு கருத்தை தெரிவித்து இருக்கிறார்கள். அதை வேண்டுமானால் வருங்காலத்தில் அரசு பரிசீலனை செய்யலாம்.

* குறுகிய கால வினா எண் 1 திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூர் ஒன்றியத்திற்கு நொய்யல் ஆற்றுத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?





மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது; (அ) ஆம்.

(ஆ) ஓரத்துப்பாளையம் அணைத் திட்டம் மற்றும் கரூர் தாலூக்கா ஆத்துப்பாளையம் பிரதான கால்வாயை 32.75 கிலோ மீட்டர் முதல் 60,00 கிலோ மீட்டர் முடிய நீட்டிக்கும் திட்டத்திற்கு ரூபாய் 877 இலட்சம் செலவிலான மதிப்பீடு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இச்செயற் குறிப்பின் மீது பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர், நில நிர்வாக ஆணையாளர் ஆகியோரது கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நொய்யல் திட்டம் என்பது கால் நூற்றாண்டு காலமாக அந்த பகுதி மக்களால் கோரப்பட்டு வந்த திட்டம். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்த பிறகு இந்த திட்டத்தை நிறைவேற்றி இருக்கிறது; ஒன்பது ஆயிரம் ஏக்கர் மட்டும் பாசன வசதி அடையக்கூடிய வாய்ப்பு இருக்கிற இந்தத் திட்டத்தை கரூர் ஒன்றியத்திற்கு நீட்டிப்பதற்கு அரசு பரிசீலனை செய்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக மிக்க நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதில் எத்தனை ஆயிரம் ஏக்கர்கள் இந்த விரிவாக்கம் திட்டத்தில் சேர்க்கப்பட இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால் நூற்றாண்டுக் காலமாக ஒரு பெரிய கோரிக்கையாக இருந்த இந்தத் திட்டத்தை 713 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏற்கனவே ஒரு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு 25-5-81-ம் தேதியிலிருந்து ஒரு பணி துவங்கி இந்த அணைக்கட்டு வேலை நடந்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் திரும்பவும் கரூர் வட்டத்தில் கூடுதலாக சில நிலங்களுக்கு பாசன வசதி வேண்டுமென்றும் இந்தக் கால்வாயை நீட்டிக்க வேண்டுமென்றும் அரசை கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்தத் திட்டத்தின் ஆய்வு வேலை நடந்து இறுதி நிலைக்கு வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டபடி இந்தப் புதிய திட்டத்தின் காரணமாக 10 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதி அளிக்கிற வகையில் இந்தப் புதிய திட்டத்தை ஆய்வு செய்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் — விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(ஆ) துணை வினாவிற்கு விடையாக அவை முன் வைக்கப்பெற்ற அறிக்கை மீது வினா எழுப்புதல்.

திரு. இல. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் ஆணைக்கிணங்க, தொழிலாளர் நலத்துறை அமைச்சர், நான் 17-3-1982-ஆம் தேதி கேட்ட கேள்விக்கு இன்று அறிக்கை தந்திருக்கிறார். அதன்மேலும் கேள்வி கேட்க வாய்ப்பிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இனிமேல் அந்த மாதிரி அறிக்கையை சீக்கிரம் வைக்கச் சொல்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: தொழிலாளர் நல அமைச்சர் அவருடைய கேள்வியை ஒட்டி அறிக்கை வைத்திருக்கிறார். அதனமேல் கேள்வி கேட்க முடியுமா என்பது கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதன்மேல் கேட்க முடியாது. அதைப் படித்து, ஆராய்ச்சி செய்து, கேள்வி எழுதி அனுப்பி, ஒத்துக்கொள்ளப்பட்டு, அதற்குப் பிறகுதான் கேள்விகள் வரும்.

(இ) முன் அறுமதியின்றி எழுப்பப் பெறும் பிரச்சினை.

திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் ஓய்விலே இருக்கிறார், கடந்த 15ஆம் தேதியிலே யிருந்து. டி.எல்.ஓ. இல்லை, டி.எம்.ஓ. இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டெக்னிக்காலிட்டீஸ் எல்லாம் இங்கே கேட்டு ஒன்றும் நடக்காது. (குறுக்கீடு) ஒரு ஆபீசர் போனால் அதையெல்லாம் இங்கே சொல்லிக் கொண்டிருப்பதா? அதற்கெல்லாம் பதில் எதிர்பார்க்காதீர்கள், நல்லதல்ல.

3. அறிவிப்பு.

(அ) ஒலிபெருக்கிகளைச் சரியான முறையில் பயன்படுத்துதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க அவர்களது வசதிக்கென, இந்த அவையில் இயங்கி வந்த 111 பழைய ஒலிபெருக்கிகளுக்குப் பதிலாக, 155 கொக்குதலை ஒலிபெருக்கிகள் ரூபாய் ஒரு இலட்சத்து ஒன்பதாயிரம் செலவில் பொருத்தப் பெற்றுள்ளன. ஆயினும் உறுப்பினர்கள் ஒலிபெருக்கியினை ஆதாரமாக வைத்து எழுந்திருபபதாலும் அவைகளை திருகி வளைத்துக் கொண்டிருப்பதாலும் அவைகள் அடிக்கடி பழுதுபடுகின்றன. இதனால் இதுவரை நான்கு ஒலிபெருக்கிகள் பழுதாகி விட்டன. மேலும் அவற்றில் ஒரு ஒலிபெருக்கி பழுதுபட்டால்கூட



மொத்த அமைப்புமே இயங்காத நிலை ஏற்படக் கூடும். அவைகள் மிகவும் மெல்லிய கருவிகளாகத் தயாரிக்கப்பட்டுள்ளதால் சரியான முறையில் அவைகளை நாம் வைத்திருத்தல் இன்றியமையாதது. மேலும் ஒரே மாதிரியான மைக்குகள் கிடைப்பதும் கிடையாது.

எனவே உறுப்பினர்கள் தயவுசெய்து ஒலிபெருக்கியினை ஆதாரமாகக் கொண்டு எழுந்திருப்பதையும், அவைகளை உபயோகிக்காத நேரங்களில் திருகிக் கொண்டிருப்பதையும் தவிர்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) 4 ஒலி பெருக்கிகள் உடைந்தாயிற்று. நான் யாரையுமே தனிப்பட்ட முறையில் குற்றம் சொல்லவில்லை. இந்த அவைக்கு அறிவிக்க வேண்டும். இன்றைக்குத்தான் முதல்வர் பேசுகிறார், ஆகவே எல்லோரும் இருப்பார்கள். ஆகவே, சொல்லிவிட வேண்டுமென்று சொன்னேன். தனிப்பட்ட முறையிலே யாரையும் சொல்லவில்லை. இது பொது அறிவிப்புதான். நீங்கள் ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும்.

2 தகவல் கோரல் (தொடர்ச்சி).

(ஈ) உறுப்பினர்கள் விடுதியிலுள்ள தொலைபேசி சரிவர இயங்காமை.

திரு. ரா. உமாநாத்: டெலிபோன் விஷயமாக ரெய்ஸ் பண்ணியபொழுது இந்த பொது அறிவிப்பு வந்திருக்கிறது. நாம் எப்படி நடக்க வேண்டுமென்பதுமட்டும்தான் நான் என்ன சொல்கிறேன் என்றால், We are spending lakhs of rupees on telephones, but we have no control over the Telephone Departmen .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது டெலிபோன் இல்லை, ஒலிபெருக்கி. நான் சொல்வது லவுட்ஸ்பீக்கர். நீங்கள் சொல்வதோ வேறு சப்ஜக்ட். டெலிபோன விஷயமாக நேற்றே சொல்லிவிட்டார்கள். ஸ்டீபனிடமே சொல்லலாம் என்று சொன்னார்கள்.

THIRU R. UMANATH: We are paying so many lakhs of rupees to the Telphone Department. They are not doing free service. பே பண்ணுகிறபொழுது, அதற்குத் தகுந்தாற்போல குறைந்தபட்ச வசதிகள் செயது கொடுக்க வேண்டாமா அவர்கள். அங்கே நாம் டெலிபோன் யூஸ் பண்ணாமல், வெளி டெலிபோனை யூஸ் பண்ணுகிறோம் என்று சொன்னால், அது வேறு. அங்கே, ஹாஸ்டலிலே, 'டெட்' ஆகவே இருக்கிறது. ஒன்றும் செய்ய முடியவில்லை. நான் என்ன சொல்கிறேன் என்றால், டிபார்ட்மென்ட்டை 'ஹால்' செய்யுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்றே டெலிபோன் டிபார்ட்மெண்டுக்கு நான் கடிதம் எழுதியிருக்கிறேன். மாதக் கணக்கில் கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறேன். ஒவ்வொரு தடவையும் 6 டெலிபோன்கள் ஒட்டு மொத்தமாகக் கெட்டுப் போகிறது என்கிறார்கள்.

திரு. ரா. உமாநாத்: நேற்று ஈவினிங் எல்லா டெலிபோன்களும் 'டெட்'. ஒன்று கூட வேலை செய்யவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று ஈவினிங் கெட்டிருந்தால் கெட்டிருக்கும். ஏனென்றால், நேற்று காலையிலே உங்களுக்கு டிரங்க் கால் வந்தது என்று சபையிலே சொல்லியிருக்கிறீர்கள். ஆகவே, ஈவினிங்தான் கெட்டுப் போயிருக்க வேண்டும். காலையிலே சரியாகத்தான் வேலை செய்திருக்கிறது.

திரு. ரா. உமாநாத்: அங்கத்தினர்களுக்கு இன்கம்மிங் கால் வருகிறது. அது வேறு, ஆனால், உங்களைக் கான்டாக்ட் செய்ய வேண்டும், அல்லது மினிஸ்டர்லை கான்டாக்ட் செய்ய வேண்டும் அவசரமாக என்றால், எங்களால் முடியவில்லை.

'We are unable to call even the exchange., We are paying them. Should they not give us service? அந்தத் துறைக்கு நாம் பணம் கொடுக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் செய்த அறிவிப்பைப் பொறுத்தவரை, தனித்தனியாகச் சொன்னதை அறிவிப்பாகக் கொடுக்க வேண்டியதாகப் போயிற்று. டெலிபோனைப் பொறுத்தவரையில் திரு. ஸ்டீபனாலேயே முடியவில்லை.

THIRU R. UMANATH: When we pay money, we must get service.

திரு. என். எஸ். வி. சித்தன்: சார், ஆன் எ பாய்ன்ட் ஆப் ஆர்டர். நேற்றையதினம் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலே தொலைபேசி பேசவில்லையென்று நான் சொன்ன விஷயத்திலே, அது எப்படியோ, தொலைபேசி இலாகா பணியாற்ற முடியவில்லை, பணியாற்றவில்லை என்பதைப் போல இங்கே, மாறிமாறி சொல்லப்படுகிறது. நான் சொல்வதெல்லாம், நம்முடைய விடுதிக்குள்ளே இருக்கின்ற தொலைபேசி இயந்திரம் அதன் தகுதிக்கு மேலே இணைப்பு கொடுக்கப்பட்டிருப்பதால் சரியாகச் செயல்படவில்லை. ஆனால் இங்கே வழக்கம்போல திசை திருப்பிச் சொல்லப்படுகிறது. ஒன்று அந்த இயந்திரத்தைப் பெரிதாக வைக்க வேண்டும் அல்லது இணைப்புகளைப் பிரித்துக் கொடுக்க வேண்டும்.



(முற்பகல் 10-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினரவர்கள் டெக்னிக்கலாகச் சொல்கிறார்கள். டெக்னிகல் டிஃபெக்ட் இருக்கிறதா என்று நான் விசாரிக்கிறேன். நான் இந்தியா பூராவும் டெலிபோனைப் பயன்படுத்தியிருக்கிறேன். எனக்கு டெலிபோனைப் பற்றித் தெரியும் என்பதால்தான் நான் சொல்கிறேன். பர்சனலாக அதுபற்றித் தெரியும். நானும், திரு. உமாநாத் அவர்களும் பார்லிமெண்டிலே இருந்திருக்கிறோம். அங்கேயும் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

திரு. ரா. உமாநாத்: இதில் கட்சிப் பிரச்னை எதுவும் கிடையாது; எல்லோரும் அவதிக்கு ஆளாகிறோம். அதனால் தான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் இதுகுறித்து நானே பொறுப்பேற்று டிஸ்டிரிக்ட் மேனேஜரோடு பேசுகிறேன்.

## 4. கவன ஈர்ப்புகள்

### கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசு ஊழியர்களுக்கு வீடு கட்ட கடன்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ஜே. ஹேமச்சந்திரன், டி. மணி, எம். செல்லமுத்து ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டுவதற்கான கடன் வழங்கப்படாததால் அவர்களிடையே நிலவும் கவலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரவையின் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை

அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டுவதற்கு அளிக்கப்படும் கடன் உதவி அரசால் நிதி ஆண்டு 1981-82-ல் ரூ.6 கோடியும் 1982-83ல் ரூ. 7 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும் மிகவும் கூடுதலாக விண்ணப்பங்கள் பெறப்பட்டிருந்தால் 5-8-81 வரை பெறப்பட்டுள்ள விண்ணப்பங்களை முற்றிலும் ஒப்புதல் அளிக்கும் வகையில் மேலும் புதிய விண்ணப்பங்கள் பெற வேண்டாம் என்று அரசு ஆணை இட்டிருந்தது. இந்த விண்ணப்பங்களின்மீது மாவட்டங்களில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை ஆய்வுசெய்து, விண்ணப்பங்களின் தேக்கநிலை

கணிசமான அளவில் குறைக்கப்பட்டுள்ளதால், புதிய விண்ணப்பங்கள் பெறுவதற்கான தடை 20–12–1982 அன்று நீக்கப்பட்டது. இதற்கு முன்பாகவே வீட்டுவசதி வாரிய வீடுகள் வாங்குவதற்கான மனுக்கள், கூடுதல் முன்பணம் கோரப்படும் விண்ணப்பங்கள் 50 வயது ஆகியவர்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் இவற்றிற்கு மட்டும் இந்த தடையிலிருந்து 4-9-1982 அன்று விதிவிலக்கு அளிக்கப்பட்டது.

2. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 5-8-1981 வரை பெறப்பட்டுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை 62. அவற்றில் இதுவரை ஒப்புதல் அளிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 59. மீதம் உள்ள 3 விண்ணப்பங்களுக்கும் ஒரு வாரத்திற்குள் ஒப்புதல் அளிக்கப்படும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். 4–9–1982 ஆணையின் அடிப்படையில் பெறப்பட்ட 2 மனுக்களும் ஆய்வில் உள்ளன. 20–12–82–க்குப் பிறகு 25 மனுக்கள் பெறப்பட்டுள்ளன. மாநிலம் முழுவதும் உள்ள விண்ணப்பங்களின் தேக்க நிலையை மீண்டும் ஆய்ந்து புதிய விண்ணப்பங்களுக்கு தனிப்பட்ட முறையில் எவ்வளவு நிதி ஒதுக்கலாம் என்பதைப்பற்றி பொது முடிவு எடுத்த பிறகு இவைகளுக்கும் ஒப்புதல் அளிக்கப்படும்

3. ஆகவே, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வீடு கட்டுவதற்கு கடன் உதவி கோரும் விண்ணப்பங்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு பழைய மனுக்கள் மீது ஒப்புதலும் அளிக்கப்பட்டுள்ளது. என்று தெரிய வருகிறது ஆகவே மேற்கூறிய நிலையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் பதட்ட நிலை உருவாவதற்கான காரணங்கள் ஏதும் இல்லை.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையின் இரண்டாவது பாராவிலே, பெறப்பட்டுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை 62 என்றும், அவற்றில் இதுவரை ஒப்புதல் அளிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 59 என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் எனக்குக் கிடைத்த தகவல் என்னவென்றால், இதற்கு ஒப்புதல்தான் வழங்கப்பட்டிருக்கிறதே தவிர அவர்களுக்குப் பணம் கொடுக்கப்படவில்லை என்று தெரிகிறது. ஆகவே, பணம் உண்மையிலேயே வழங்கப்பட்டிருக்கிறதா? இல்லையென்றால் அதற்கான காரணம் என்ன? மற்றொரு விஷயம். இந்த அறிக்கையிலே முதல் பாராவிலே, 1981-82-ல் ரூ. 6 கோடியும், 1982–83 ல் ரூ. 7 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது. இப்படிப் பணம் ஒதுக்கீடு செய்வதில் அரசு கடைப்பிடிக்கும் கொள்கை என்ன? ஒருவர் மனுக் கொடுத்தால் அவருக்குக் கொடுக்கப்படும் பணம் முழுவதும் கொடுக்கப்படுமா அல்லது பணம் வழங்குவதற்கு ஏதேனும் கொள்கைகளோ, கோட்பாடுகளோ அரசால் கடைப்பிடிக்கப்படுகிறதா? மற்ற மாவட்டங்களில் வேலை செய்யும் குமரி மாவட்டத்தைச் சேர்ந்த அரசு ஊழியர்களுக்குக் கடன் கொடுப்பதற்கு ஏதேனும் தடை உண்டா என்பதையும் அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒப்புதல் அளிக்கப்பட்டு பணம் கொடுக்கப்படுகிறது. அதுதான் முறை. சேங்க்ஷன், பேமெண்ட் என்ற முறை தான் கடைப்பிடிக்கப்படுகிறது. ஆகவே, ஒப்புதல் அளிக்கப்பட்டதற்குப் பிறகு எல்லோருக்கும் பேமெண்ட் கொடுக்கப்படுகிறது. குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அவர்களே இரண்டாவது பாராவில் உள்ளதை இங்கே படித்து விட்டார்கள். மீதம் உள்ள 3 விண்ணப்பங்களுக்கும் ஒரு வாரத்திற்குள் ஒப்புதல் அளிக்கப்படும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். ஆகவே, அது இப்போது கொடுக்கப்பட்டிருக்கக் கூடும் என்று நினைக்கிறேன். 4-9-1982 ஆணையின் அடிப்படையில் பெறப்பட்ட 2 மனுக்களும் ஆய்வில் உள்ளன என்று சொல்லப்பட்டிருக்கிறது. 6 கோடி, 7 கோடி என்று ஒதுக்குவதெல்லாம் நிதி ஆதாரத்தைப் பொறுத்து ஒதுக்கப்படும் ஒன்றாகும். தேவை அதிகமாக இருந்தால் அதிகமாக நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்கிறோம். நிதி ஆதாரத்தை மனத்திற்கொண்டு அந்த நிதி ஒதுக்கப்படுகிறது.

*திரு. டி. மணி: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு தகவலைத் தந்திருக்கிறார்கள். 1981 ஆம் ஆண்டிலே அவர்கள் தங்களுடைய மனுவைத் தந்திருக்கிறார்கள், என்றால் அவர்கள் கையிலே பணம் போய்ச் சேர்வதற்கு 1983 ஆம் ஆண்டாக ஆகிவிடுகிறது. 1981 ஆம் ஆண்டிலே சிமெண்டின் விலை ஒரு மூட்டைக்கு 25 ரூபாய், 26 ரூபாய் என்று இருந்தால், 1983 ஆம் ஆண்டில் அது 45 ரூபாய், 48 ரூபாய் என்று ஆகிவிட்டது. ஆகவே, குறுகிய காலத்திற்குள்ளே, மூன்று மாத காலத்திற்குள்ளேயாவது மனுக்களைக் கொடுத்தவர்களுக்கு கடனை வழங்குவதற்கான விதிமுறைகளை அரசாங்கம் மேற்கொள்ளுமா? இந்தப் பிரச்னை சம்பந்தமாக ஏற்கனவே மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் தகவலைக் கொடுத்திருக்கிறோம். அந்தக் கூட்டத்தினுடைய விவரத்தின் அடிப்படையில், இன்னும் பாக்கியிருக்கின்ற அரசு ஊழியர்களின் மனுக்களுக்குப் பணத்தைக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் வேறு மாவட்டத்திற்குச் சென்று பணியாற்றினால் அவர்களுக்குக் கடன் கிடைப்பதில் இருக்கின்ற சிக்கல்களைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாங்க்ஷன் செய்தபிறகு விரைவிலே கொடுக்க வேண்டும் என்று அறிவிக்கை அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டது அரசால். இதிலே குறிப்பிட்ட 'ஹார்டுஷிப்' யாருக்காவது ஏற்பட்டிருந்து 'ஹார்டு கேசஸ்' இருக்குமானால் அதை மாண்புமிகு உறுப்பினர் அரசுக்குத் தெரிவித்தால், உடனடியாகக் கொடுக்கவேண்டும் என்று அறிவிக்கைக் கொடுப்பதற்கு எல்லா ஏற்பாடுகளையும் அரசு செய்யும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த அரசு ஊழியர்கள் மற்ற மாநிலங்களில் பணி புரிகிறபோது, அவர்கள் மனுப்போட்டால் அவர்களுக்குக் கடன் கொடுக்க அரசு முன்னுரிமை கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, எந்த மாவட்டத்தில் யார் வேலை செய்தாலும் அவர்கள் மனுப் போட்டால் அந்த மனுவை அந்தந்த மாவட்டங்களிலே உள்ள நிதி ஆதாரத்திற்கு ஏற்ப பரிசீலனை செய்து, எத்தனை பேருக்குக் கொடுப்பது என்று முடிவெடுக்கப்படும்.

*திரு. எம். செல்லமுத்து: தலைவர் அவர்களே, கொடுக்கக் கூடிய மனுக்கள் பரிசீலனை செய்யப்படுகிறது என்று நீண்ட நாட்கள் எடுத்துக் கொள்கிறார்கள். அதற்கு மாறாக கொடுத்து மூன்று மாதங்களுக்குள் இதைப் பரிசீலனை செய்து கடன் கொடுக்க ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு டைம் பவுண்டு ஆர்டர் போடுவது Administratively it may not be advisable. அதற்காகத் தான் விரைவிலே இதைப் பரிசீலனை செய்து கொடுங்கள் என்று சொல்லுகிறோம். என்றாலும் எங்காவது 'அன்டியு'டிலே இருக்குமானால் மாண்புமிகு உறுப்பினர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்களானால் அதிகமாக காலதாமதம் செய்யக் கூடாது என்று அறிவிக்கை அனுப்பப்படும்.

5. அரசினர் சட்ட முன்வடிவு.

ஷெரிப் நியமனத்திற்கு வகை செய்யும் முத்திரைப் பத்திர (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் —

"1983 ஆம் ஆண்டு ஷெரிப் நியமனத்திற்கு வகை செய்யும் முத்திரைப் பத்திர (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.



6. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—
விவாதம் (தொடர்ச்சி.)

*திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் அண்மையிலே நிகழ்த்திய உரையின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள ஒரு வாய்ப்பு கிடைத்திருப்பதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் உரைக்கு நானும் கூட ஒரு வகையில் நன்றி தெரிவிக்க வேண்டும். ஏனென்றால், ஆளுநர் உரை என்ற இந்தச் சடங்கு இல்லாமல் இருக்குமானால் இந்த சட்ட மன்றம் இப்போது கூட கூடாமல், இன்னும் காலதாமதம் செய்து கூடக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கக் கூடும். அந்த வகையில் ஆளுநர் உரை நிகழ்த்தும் முறை இருப்பதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆளுநர் உரை நிகழ்த்துகின்ற இந்தக் காலகட்டம் தமிழ்நாட்டிற்கு மிகப்பெரிய வேதனையான கட்டமாக இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அரசுக்குச் சோதனையோ இல்லையோ தமிழ்நாட்டு மக்களுக்கு, ஏறத்தாழ 5 கோடி மக்களுக்கு மகத்தான சோதனை பல்வேறு வகையான சோதனை இன்றையதினம் உருவாகியிருக்கிறது என்பதை ஆழ்ந்த வருத்தத்தோடு வெளியிட விரும்புகிறேன்.

இந்த உரையிலே கலந்து கொண்டு உரை நிகழ்த்தியவர் யாராக இருந்தாலும் ஆளுங்கட்சியைச் சேர்ந்த நண்பர்களாக இருந்தாலும், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், பல்வேறு கட்சித் தலைவர்களாக இருந்தாலும் தமிழநாட்டு மக்கள் படுகின்ற வேதனையை அதிலும் ஒவ்வொரு பகுதியினருக்கும் விளையும் ஒவ்வொரு விதமான தொல்லையையும் இந்த அவையிலே எடுத்து வைத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இந்த அவையிலே பேசப்பட்டிருக்கிற பல்வேறு கருத்துக்களையும் கூட நான் வழிமொழிகிற விதத்தில் பேச விரும்புகிறேன். அவற்றை எல்லாம் அரசாங்கம் ஒரு முறைக்கு இருமுறையாக ஆராய்ந்து பார்த்து முதலமைச்சர் அவர்களும் இதைக் கூர்ந்து நோக்கி, எதிர்காலத்திலே இந்த அரசு இந்த மக்களுக்கான காரியங்களை ஆற்ற முன்வரும் என்று நான் எதிர்பார்க்கிறேன். உண்மையாகவே தமிழ்நாடு வறட்சியால் பாதிக்கப்பட்டு, கடந்த இரண்டு ஆண்டு காலமாகத் தொடர்ந்து வறட்சி நீங்காத அளவுக்கு இருக்கின்றது. இன்னும் சொல்லப்போனால் வறட்சியால் ஏற்பட்ட பாதிப்புகளிலிருந்து இன்னும் 2, 3 ஆண்டுகளுக்குத் தமிழ்நாடு தப்பாது என்று கருதக்கூடிய அளவுக்கு இந்த வறட்சி கடுமையாக இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ராமநாதபுரம் மாவட்டம், தஞ்சை மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம், திருச்சி மாவட்டம், வட ஆற்காடு மாவட்டம், தர்மபுரி, செங்கற்பட்டு மாவட்டம், சேலம் மாவட்டம் ஆகிய பல்வேறு மாவட்டங்களில் உள்ள நிலைமைகளின் அடிப்படையில் நான் இதனை எடுத்துக்கூற எண்ணிப் பார்க்க விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40)

மழை, பருவ மழை தவறியதன் காரணமாக ஏற்பட்டு இருக்கக்கூடிய விளைவுகளை உணரத் தொடங்கிய காலகட்டத்திலே பருவ நிலை அறிவிப்பாளர்கள் கூட, பருவ மழை இனி கிடைக்காது என்று தெரிவித்த அந்த காலகட்டத்திலேகூட, மத்திய அரசாங்கத்திற்கு விவரமான அறிக்கையை அனுப்பி இருக்கவேண்டிய இந்த அரசு ஜனவரி 24 ஆம் தேதிதான் தாங்கள் முழு விவரம் தயாரித்து அனுப்ப முடிந்தது என்று தெரிவித்து இருப்பது இந்த அரசாங்கத்தினுடைய இயலாமையைத் தான் காட்டும். முதல் அமைச்சர் அவர்கள், நாங்கள் முழு விவரத்தை அனுப்புவதற்காக மழை வரும் என்று கடைசி வரையில் பொறுத்திருந்து பார்த்துவிட்டு, மழை வராத காரணத்தால் நாங்கள் கடைசியாக அனுப்பினோம் என்று பதில் சொல்லக் கூடும். முதலிலே 2 மாத காலத்திலே பெய்யவேண்டிய மழை பெய்யாவிட்டால் கடைசி 1 வாரத்திலே பெய்தாலும் எவ்வளவு மழை பெய்துவிடும் என்று ஏன் எண்ணிப் பார்க்கக்கூடாது. இது நம்மாலே முடியாதா? வறட்சியினுடைய விளைவு, பாதிப்பு எந்த அளவு பாதித்து இருக்கிறது என்று கிராமப் புறத்திலே நாம் பார்த்தால், தஞ்சை மாவட்டத்தினுடைய கிராமப்புற மக்கள் இன்றையதினம் அடுத்த வேளைக்கு உணவுக்கு என்ன செய்வது என்று வேதனைக்கு ஆளாகியிருக்கிறார்கள். உழவர்கள் அந்த நிலைமைக்கு ஆளாகியிருக்கிறார்கள். சிறுநில விவசாயிகள் அந்த நிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், விவசாயத்தையே அடிப்படையாக நம்பி வாழ்கிற ஒரு சூழ்நிலைக்கு தமிழகம் பல நூறு ஆண்டுக்காலமாக வந்துவிட்டது. தொழில் வளர்ச்சி தமிழகத்திலே ஓரளவுக்கு முன்னேறியிருக்கிறது என்று சொன்னாலும்கூட ஏற்கனவே ஏற்பட்ட தொழில் வளர்ச்சி மக்களுக்குத் தேவையான வளர்ச்சிக்கு ஈடு செய்ய முடியாததாக, வேலைவாய்ப்பை உருவாக்க முடியாததாக, வருமானத்தை பெருக்க முடியாததாக ஆகிவிட்ட நிலையில் தமிழகத்தினுடைய முதுகெலும்பாக எது இருக்கிறது என்று பார்த்தால் விவசாயம்தான் இருக்கிறது. அந்த விவசாயம் வளர்வதற்கான இரண்டு கண்ணாக இருக்கிற 2 அடிப்படைத் தேவையானவை, ஒன்று மழையோ அல்லது ஆற்றுத் தண்ணீரோ, இல்லையானால் மின்சாரம். இந்த இரண்டும் அடிப்படையானது. இந்த ஆண்டு அவை அடியோடு தமிழகத்தை ஏமாற்றியிருக்கிறது. அப்படி ஏமாற்றி இருப்பதை இந்த அரசாங்கம் தெரிந்து கொள்ள முடியாதா என்று கேட்டால், 3 மாத காலத்திற்கு முன்னால், 4 மாத காலத்திற்கு முன்னால், கடந்த ஆண்டு அக்டோபர் திங்கள், தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டிய





கூட்டத்தில், மாவட்ட வளர்ச்சிக் குழுவிலே கலந்துகொண்ட சட்டமன்ற உறுப்பினர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள், ஆளும் கட்சி உறுப்பினர்கள் அத்தனை பேரும், ஓலமிட்டார்கள் மக்களின் அவல நிலையை தெரிவித்திருக்கிறார்கள். வட ஆர்க்காடு மாவட்டத்திலே மட்டும் அக்டோபர் மாதத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர் தன்னுடைய சக்திக்கு மீறிய நிலைமையாக இருக்கிறது என்று சொல்லி மாநில அரசாங்கம் இதற்கான எந்த உத்தரவையும் அனுப்பவில்லை, அதனாலே பாதிக்கின்ற நிலைமை ஏற்படுகிறது என்று தெரிவிக்கக்கூடிய நிலைமை அக்டோபரில் ஏற்பட்டிருக்கிறபோது, மத்திய அரசாங்கம் வேறு சில மாநிலங்களுக்கு வறட்சி நிவாரணமாக நிதி ஒதுக்குவதாகப் பத்திரிக்கையிலே பார்த்துக் கொண்டிருக்கிறபோது, மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையிலே நடந்து கொள்கிறது என்று சொல்லக்கூடிய அளவுக்கு சந்தேகமான ஒரு மனப்பான்மை தமிழக அரசுக்கு இருக்கிறபோது தமிழக அரசு ஏன் முன்கூட்டியே அறிக்கை தயாரித்துக்கொடுக்கத் தவறிவிட்டது என்பதை நான் உள்ளபடியே வேதனையோடு, வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்க்கட்சி என்ற காரணத்தாலே அல்ல. நான் ஆளும் கட்சியிலே இருந்தால் இதைவிட கடுமையாகத்தான் பேசுகின்ற நிலைமை இருக்கும். ஏன் என்றால், 3 மாத காலத்திற்கு முன்னால், மத்திய அரசாங்க அமைச்சர் தமிழகத்திற்கு வந்திருந்த போது, மத்திய அரசாங்கத்திற்கு உரிய அறிக்கை அனுப்பப்படவில்லை என்று மத்திய அரசாங்க அமைச்சர் தமிழகத்திலே வந்து சொல்கிற நிலைமை ஏற்பட்டு, தமிழக அமைச்சர் அவர்கள் அனுப்புவதற்கு நாங்கள் ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறோம் என்று சொன்னார். மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம், என்று சொன்னார். மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய கையிலே தமிழகத்தை ஒப்படைத்துவிடவில்லை. அப்படியானால் அமைச்சரவை எதற்காக? சட்டமன்றம் எதற்காக? தமிழகத்து மக்கள் முதலமைச்சர் அவர்களிடம் கண்ணீர் விடுவார்களேயானால் மாவட்ட ஆட்சித் தலைவர்களா பதில் சொல்வார்கள். தமிழகத்தினுடைய உணவு உற்பத்தி இந்த அளவுக்கு பாதிப்புக்கு ஆளாகக் கூடாது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு பக்கம் மழை குறைந்த அதே நேரத்தில் காவிரி ஆற்றுத் தண்ணீர் நமக்கு கிடைக்கவேண்டிய, நியாயமான தண்ணீர், நம்முடைய நண்பர் நெடுமாறன் அவர்கள் நேற்று இங்கே பேசுகிறபோது புள்ளிவிவரத்தோடு குறிப்பிட்டார்களே, 60 டி.எம்.சி. தண்ணீர் கர்நாடகத்திலே தேக்கி வைக்கப்பட்டிருக்கிறபோது நமக்கு கிடைக்கவேண்டிய தண்ணீர் ஏறத்தாழ 44 டி.எம்.சி. தண்ணீர், நமக்கு நியாயமாக, சட்டப்படி, உரிமைப்படி, கிடைக்கவேண்டிய தண்ணீர், குண்டுராவ் அவர்களோடு தொடர்பு இருந்த அந்த சூழ்நிலையிலே அவரிடம் நல்லெண்ணம் நம்முடைய தமிழக முதல் அமைச்சர் அவர்கள் வைத்திருந்தபோதும், 30 டி.எம்.சி. தண்ணீர் கேட்டபோதுகூட அந்த மாநில அரசாங்கம் அவரது ஆட்சிக் காலத்தில் தராமல் இருந்ததன் விளைவாக

தமிழகத்தினுடைய பயிர் வளம் அடியோடு பட்டுப் போய்விட்டது என்பதை தமிழகத்தினுடைய மக்களுடைய வயிற்றுக் குமுறலை இந்த அமைச்சரவை உணரவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 10 லட்சம் ஏக்கர் பாழ் பட்டுக் கிடக்கிறது. திருச்சி மாவட்டத்திலே குளித்தலைக்குப் போகிற பாதையில் காவிரி ஆற்றுக் கரையில், காவிரி ஆற்று நீர் வரத்துக் கால்வாய் தண்ணீர் ஏறிப் பாயாத காரணத்தால், உயரத்திலே சென்று பாயாத காரணத்தால், அந்த ஆற்றின் இடது கரைப் பகுதியில் ஏறத்தாழ 15,000 ஏக்கர் நிலங்கள் இரண்டு மாதத்திற்கு முன்பே பட்டுப்போய் இருந்ததை நான் பார்த்து, என்னுடன் வந்த நண்பரிடத்தில் அதைப் பற்றிக் கேட்டபோது, அவர் மாடு மேய்ப்பதற்குத்தான் இது தகுதி யாகிவிட்டது என்று சொன்னார். திருச்சி மாவட்டத்திலே இந்த நிலைமை என்று சொன்னால், வடார்க்காடு மாவட்டத்திலே செங்கம் பகுதி, திருவண்ணாமலை சுற்றியிருக்கின்ற பகுதிகளில் வறட்சி நிலைமை எவ்வாறு பாதித்து இருக்கும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இதற்காக நீங்கள் மழையை வரவழைக்கத் தவறிவிட்டீர்கள் மழைபெய்யாமல் செய்து விட்டீர்கள் என்று நான் சொல்லவில்லை. குன்னக்குடி வைத்தியநாதன் வாசித்த புல்லாங்குழல், அல்லது பிடில் இன்னும் கொஞ்சம் நல்ல முறையில் வாசிக்கவில்லை என்று நான் குற்றம் சாட்டவில்லை, அமைச்சர் இராகவானந்தம் தலைமை வகித்தபோது ஆண்டவனை நல்ல எண்ணத்தோடு வேண்டவில்லை என்று நான் சொல்லவில்லை.

"நீங்கள் எதையோ நம்புகிறீர்கள். செய்ய வேண்டியதைச் செய்யத் தவறுகிறீர்கள். நீங்கள் எதை வேண்டுமானாலும் நம்புங்கள், மூகாம்பிகையை நம்புவதிலே கூட எனக்கு எந்த விதமான மாறுபட்ட கருத்தும் கிடையாது. ஏனென்றால் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று அறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன அந்த அடிப்படையைச் சொல்லிக் கொண்டு நீங்கள் யாரை வேண்டுமானாலும் நம்புங்கள். யாரையோ நம்புகிறீர்களே அந்த அடிப்படையில் தமிழ்நாட்டிற்கு மழை வந்ததா? யாரையோ ஆதரிக்கிறீர்களே தமிழ நாட்டிற்கு காவிரி நீர் வந்ததா? அரசாங்கத்திலே உள்ள அலுவலர்களை மிக அழுத்தமாக நம்புகிறீர்களே மின்சாரப் பற்றாக்குறை வராத அளவிற்கு 6 மாத காலத்திற்கு முன்பே, 3 மாத காலத்திற்கு முன்பே செய்து இருக்கவேண்டிய பணிகளை அவர்கள் ஓரளவிற்குத் திறமையாகச் செய்தார்களா? ஓரளவிற்குத் திறமையாகச் செய்து இருந்தால் இந்த அளவிற்கு மின்வெட்டு குறைந்து இருக்காதா? அதைச் செய்து இருக்கக் கூடாதா?



இன்னும் தெளிவாகச் சொன்னால், தமிழ்நாட்டு மக்களின் அடிப்படையான வருமானம் இந்த ஆண்டு ஏறத்தாழ 100 க்கு 25 விழுக்காடு தானே தவிர, 75 விழுக்காடு அடிப்படை வருமானம் வரமுடியாத நிலைமை ஏற்பட்டு இருக்கிறது என்பதை அருள் கூர்ந்து எண்ணிப் பாருங்கள். 5,000 ரூ, அல்லது 10,000 ரூ. மாதவருமானம் உள்ளவர்களை அது பாதிக்காது. 50 ஏக்கர், 100 ஏக்கர் பினாமி நிலம் உள்ளவர்களை பாதிக்காது. ஆனால் தமிழ்நாட்டில் பெரும்பாலான விவசாயிகள் 5 ஏக்கர் 3 ஏக்கர் வைத்திருப்பவர்கள். இதிலே வேடிக்கை என்னவென்றால், பயிர்ச் செலவு செய்கிறபோது, நாற்று நடுகிறபோது, தண்ணீர் வந்து விடும் என்ற நம்பிக்கையில் செய்கிறார்கள். நாற்று நட்ட பின்னால் தண்ணீர் வராமல் போய் பயிர்கள் காய்கின்றன. ஒரு அளவிற்குப் பயிர் செய்தவனைப் பார்த்து பயிர் செய்யாதவன் கேலி செய்கிற நிலை. அந்த நிலைமை தமிழகத்திலே ஏற்பட்டு இருக்கிறது. எனவே, தமிழக மக்களின் வேதனையை வருத் தத்தை இந்த அரசாங்கத்திற்கு இந்த ஆளுநர் உரை விவாதத்தின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவிரியாற்று நீர்ப்பிரச்னையில் இந்த அரசு அக்கறை காட்ட வில்லை என்று நான் கருதவில்லை. காவிரி ஆற்றுத் தண்ணீரில் நாம் பெறவேண்டிய பங்கை எந்த முறையில் பெறவேண்டு மென்ற ஒரு அழுத்தமான திடமான, நோக்கம் இல்லாத காரணத் தால் ஒரு குறை ஏற்பட்டு விட்டது என்று நான் திட்டவட்ட மாகக் கருதுகிறேன். இதற்கு முன்னாலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் இதை நிறைவேற்றி இருக்கக்கூடாதா என்று கூட கேட்டார்கள். திராவிடமுன்னேற்ற கழக ஆட்சி காலத்தில் அதற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட அந்த முயற்சிகளின் முழு விவரம் முதலமைச்சருக்குத் தெரியும். மற்ற அமைச்சர்களுக்கும் தெரியும். அந்த விவரங்கள் அரசாங்கத்திடம் இருக்கின்றன. இந்த ஆட்சி வந்த முதல் ஓராண்டுக்காலம் அதைப்பற்றி ஒன்றும் சொல்லாமல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அணுகுமுறை இந்தப்பிரச்னையில் எப்படி என்பதை ஆராய்ந்து பார்த்தார்கள். பிறகு, முதலமைச்சர் அவர்கள் திட்டவட்டமாகச் சொன்னார்கள், இன்றைக்கு இந்த அரசாங்கத்தின் 'ஸ்டாண்ட்'—நாங்கள் எடுத்து இருக்கும் நிலைமை என்னவென்றால் — ஏற்கனவே திராவிட முன்னேற்றக் கழக அரசு எடுத்த அதே நிலைமையை நாங்களும் எடுத்து. அந்த நிலையிலே நின்றுதான் இந்தப் பிரச்னையை அணுகுகிறோம் என்று தெரிவித்தார்கள். ஆனால் அடிப்படையில் இந்தப் பிரச்னையில் ஒரு நல்லெண்ணத்தை நீங்கள் வளர்த்துக் கொள்ளாமல் இருக்கிறீர்கள். கலைஞர் கருணாநிதி முதலமைச் சராக இருந்தபோது, சுப்ரீம் கோர்ட்டில் இது சம்பந்தமாகப் போடப்பட்ட வழக்கு கைவிடப்பட்டு விட்டது. எதற்காக அதைக் கைவிட்டார்கள் என்று கேட்டார்கள். அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் செயலாளராக இருந்த மூப்பனார் அவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தஞ்சை

மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் மன்னை நாராயணசாமி அவர்களும் தஞ்சை மாவட்டத்தில் இருந்த பல்வேறு கட்சியைச் சேர்ந்தவர்களும் சேர்ந்து போட்ட வழக்கு கைவிடக் கூடிய நிலைமை ஏன் ஏற்பட்டது, எப்போது கைவிடப்பட்டது என்று கேட்டால், பிரதமர் இந்திரா காந்தி அவர்கள், இந்தப் பிரச்னையை உச் நீதி மன்றத்தில் தீர்த்துக்கொள்வது என்பது அவ்வளவு நல்ல முறையில் சுமுகமாக இருக்காது என்று தெரிவித்து, நான் தலையிட்டு தீர்த்து வைக்கிறேன் என்று சொன்ன காரணத்தால், வழக்கு நடத்தினால் நியாயம் நமக்குக் கிடைக்கும் என்றாலும், விரைவில் முழு நியாயம் கிடைக்க ஒரு வாய்ப்பு ஏற்படுத்தவேண்டும் என்ற ஒரே காரணத்தால், வழக்கு கைவிடப்பட்டது. அந்த அடிப்படையில், அந்த வாதத்தை அப்படியே பிரதமர் இந்திரா காந்தி அவர்களிடத்தில் எடுத்து வைத்து, நீங்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்று நீங்கள் கேட்டு இருந்தால், அதற்கு ஆதரவாக நாங்கள் கூப்பாடு போடாமல் இருப்போமா?

தஞ்சை, திருச்சி மாவட்டங்களுக்கேயன்றி தமிழ் நாட்டிற்கே உயிர்நாடியாக இருக்கும் காவிரி நீர் பிரச்னைக்காக தமிழக அரசு போராடும் நிலை எடுத்து இருந்தால்—போராட்டம் என்று நான் சொல்வது வன்முறைப் போராட்டம் என்று எண்ணிக்கொண்டு சொல்லவில்லை — அரசியலில் எந்த வகையில் போராடவேண்டுமோ அந்த வகைகளில் போராடுவதற்கு இந்த அரசு முன்வந்திருக்குமானால், திராவிட முன்னேற்றக் கழகம் உறுதுணையாக இருந்து இருக்குமே தவிர எந்த விதத்திலும் மாறுபட்டு விலகி, ஒதுங்கி இருக்காது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

அனைத்துக் கட்சிகள் கூட்டம் கூட்டப்பட்டபோதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாண்புமிகு அமைச்சராக இருந்த சாதிக்பாட்சா அவர்களோ அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேறு பொறுப்புகளிலே இருக்கிற மற்ற நண்பர்களோ வந்து கலந்துகொண்ட போதெல்லாம் முதலமைச்சருக்கு எப்போதும் ஆதரவான கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள் என்றாலும் மத்திய அரசிடத்திலே எது எதை எப்படி எப்படிப் போராடி வற்புறுத்திக் கேட்க வேண்டுமோ அது அதை அப்படி அப்படிப் போராடி வலியுறுத்திக் கேட்டு வாதாடிப் பெற இந்த அரசு தவறியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய அரசு தவறி இருக்கிறது; நான் இல்லை என்று சொல்லமாட்டேன். மத்திய அரசு எவ்வளவோ பிரச்சினைகளுக்கு இடையில் இந்தப் பிரச்சனையில் அக்கறை காட்டாமல் கூட இருக்கக்கூடும். அதனால் நாம் தானே பாதிக்கப்படுகிறோம்; தமிழ்நாடு தானே பாதிக்கப்படுகிறது. அதனால்



நமக்கு எத்தனை துன்பங்கள், தொல்லைகள் ஏற்படுகின்றன? காவேரி தண்ணீர் முறைப்படி தமிழ்நாட்டுக்குக் கிடைக்கவில்லை என்பதால், ஒன்றிலிருந்து ஒன்றாகத் தொடரும் தொடர்வதன் விளைவுகளைக் கணக்கிட்டால் ஏறத்தாழ 500 கோடி ரூபாயிலிருந்து 600 கோடி ரூபாய் வரையிலே தமிழ்நாட்டுக்கு இழப்பு ஏற்படுகிறது.

பருவ மழை பொய்த்ததனால் ஏறத்தாழ 1,500 கோடி ரூபாய் இழப்பு. மின்சார வெட்டு காரணமாக ஏற்பட்டிருக்கிற இழப்பு ஒன்றை மட்டுமே கணக்கிட்டுப் பாருங்கள். நான் சொல்வது பத்திரிகையில் வந்த செய்தி; புள்ளிவிவரத்தில் வேண்டுமானால் தவறு இருக்கலாம். மின்சார வெட்டின் காரணமாக இந்த மின்சார வாரியத்திற்கு ஒரு நாளைக்கு ஏறத்தாழ 25 இலட்சம் ரூபாய் இழப்பு ஒரு நாளைக்கு இழப்பு 25 லட்சம் ரூபாய் என்று சொல்லுகிறபோது அந்த மின்சாரத்தைக் கொண்டு உற்பத்திச் செய்யக் கூடிய தகுதி படைத்த பொருள்களின் உற்பத்தி இல்லாததன் மூலம் ஒரு நாளைக்கு ஏறத்தாழ 2.5 கோடி ரூபாய் இழப்பு. ஒரு நாளைக்கு 2.5 கோடி ரூபாய் என்று பார்க்கிறபோது, ஒரு ஆண்டில் 365 நாட்களுக்கும் மின்சாரத் தட்டுப்பாடு என்றால் ஏறத்தாழ 750 கோடி ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு இழப்பு. ஆக மின்சாரத் தட்டுப்பாட்டினால் ஆண்டு ஒன்றுக்கு 750 கோடி ரூபாய் இழப்பு என்றால் 1,500 கோடி ரூபாய் வரவு-செலவுத் திட்டத்தைக் கொண்டுவரக் கூடிய ஒரு காலகட்டத்தில் ஏற்படக்கூடிய இழப்பைக் கணக்கிட்டுப் பார்த்தால், இந்த வரவு-செலவுத் திட்டத்தைக் கொண்டோ, இந்த ஆட்சியைக் கொண்டோ திருப்திகரமாக எதையும் செய்ய முடியாது. தமிழக மக்களுக்கு ஏதோ புண்ணுக்கு புனுகு பூசுகிற காரியமாக சில காரியங்களைச் செய்ய முடியுமே தவிர மக்களுக்கு மன நிறைவு அளிக்கக் கூடிய காரியம் எதையும் செய்ய முடியாது.

உள்ளபடியே சொல்ல வேண்டுமானால் அரசாங்கத்திற்கு வேறுபல பிரச்சனைகள் இருந்தாலும் கூட, மக்களுடைய பிரச்சினைகளை எண்ணிப் பார்த்தால், மனசாட்சிக்கு விரோதம் இல்லாமல் இங்கே ஒரு நல்ல ஆட்சி நடத்துகிறோம் என்று எண்ணுகின்ற மன தைரியத்தைக்கூட தராது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக ஒரு திட்டத்தைச் சொல்லியிருக்கிறீர்கள். தமிழ் நாட்டுக் குழந்தைகளுக்கு சத்துணவுத் திட்டம் என்று ஒரு திட்டத்தை வழங்குகிறீர்கள். அதிலே எனக்கு மாறுபாடு இல்லை; உடன்பாடுதான். நான் அமைச்சராக இருந்தபோது, நாவலர் அவர்கள் கல்வி அமைச்சராக இருந்த அந்தக் காலத்தில் பள்ளிக்கூட மாணவர்களுக்கு முழுமையான சத்துணவுத் திட்டமாக இல்லாவிட்டாலும் கல்வி இலாகாவின் மூலமாக வழங்கப்படுவதைப்போல 2 வயது முதல் 5 வயதுவரையிலான குழந்தைகளுக்கு சமூகநல இலாகாவில் இருந்த காப்பகங்கள் மூலம் வழங்க, அந்தத் திட்டத்தை ஒரு விரிவான திட்டமாகச் செய்ய வேண்டு

மென்ற கருத்தை அப்போதே எடுத்துச் சொன்னேன். இப்போது நீங்கள் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிறீர்கள்; ஒருவேளை இது புதிய திட்டம் அல்ல என்று சொன்னாலும் இதிலே நீங்கள் ஆர்வம் கொண்டு செய்கிறீர்கள். இதை நாங்கள் வரவேற்கத் தயார்.

அதே நேரத்தில் இந்தத் திட்டத்திலே இருக்கிற குறைபாடுகளைப் பற்றி எண்ணிப்பார்க்கக் கூடாது, எடுத்துச் சொல்லக் கூடாது என்று நீங்கள் கருதுவது தவறு. ஆளும் கட்சி நண்பர்கள் பேசுகிறபோது பல்லி விழுந்தால் அது ஒன்றும் பெரிது அல்ல, அதை பெரிதுபடுத்துகிறார்கள் என்று சொன்னார்கள். பல்லி சிறியதுதான். ஆனால் அந்த பல்லி விழுவதினால் ஏற்படுகிற விளைவு பெரிது என்பதை மறந்துவிடக்கூடாது. ஓரிடத்தில், இரண்டு இடங்களில் பல்லி விழுந்ததாகச் சொல்லப்படுகிறது. வேறு சில குறைபாடுகளும் சொல்லப்பட்டன. அவை பத்திரிகைகளிலும் வந்தன. பத்திரிகையிலே வருகிறது என்றால் தவறுகளை நிவர்த்தி செய்வார்கள் என்பதற்காகத்தான் வெளியிருகிறார்கள். கட்டிடம் பழுது என்றால் அதை சீர் செய்ய, மற்ற தவறுகளை சரி செய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறார்கள். இது அரசாங்கத்திற்கு உகந்ததுதான். இவற்றை எல்லாம் வெளியிடுகிறார்களே என்று நீங்கள் கண்டிப்பது சரியல்ல. தவறுகளை நிவர்த்தி செய்ய அக்கறை காட்ட வேண்டும்.

ஆனால் சத்துணவுத் திட்டம் என்ற பெயரில் வழங்கும் உணவு உள்ளபடியே இது சத்துணவுதான் என்று என்னிடத்திலே வாதிட நீங்கள் தயாரா? உணவு அளிக்கிறீர்கள். ஓரளவு சத்து கலக்கிறது; ஒரு வேளை உணவு அளிக்கிறீர்கள். ஓரளவுக்கு ஒரு வேளை உணவு அளிக்கிறீர்கள் என்பதை நான் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன். ஆனால் அந்தப் பிள்ளைகளின் வளர்ச்சிக்குப் போதுமான சத்து அதிலே இருக்கிறதா? போதுமானது என்று முதலமைச்சர் எண்ணுகிறாரா? உண்மையான சத்துணவு சாப்பிடுகிறவர்கள் என்னென்ன சாப்பிடுகிறார்கள் என்பது எனக்குத் தெரியாதா? இன்னும் சொல்லப்போனால், நடுத்தர மக்களுக்கு கூட சத்துணவு சாப்பிடக்கூடிய வசதி இல்லை இந்த நாட்டில் என்று எனக்குத் தெரியாதா? அமெரிக்காவில் உள்ள சாமானிய ஒரு ஏழை சாப்பிடுவதைக் கூட ரஷ்யாவில் உள்ள ஒரு ஏழை சாப்பிடுவதைக்கூட, இந்தியாவில் உள்ள நடுத்தர குடும்பத்திற்கு மேற்பட்ட நிலையினர் கூடச் சாப்பிட முடியாத சூழ்நிலையில் இந்த நாடு இருக்கிறது என்பது எனக்குத் தெரியாதா?

எனவே இந்தச் சத்துணவு என்பது, நாம் அளிக்கிற உணவு சத்துள்ளதாக இருக்கவேண்டும் என்கிற ஒரு ஆசையினால் சொல்லப்பட்ட ஒரு வார்த்தையே தவிர வேறு அல்ல. பெரியகுளம் தேர்தல் நடைபெற்ற நேரத்தில், அங்கே எல்லாப் பள்ளிக் கூடங்களிலும் பகல் உணவு சத்துணவு தவறாமல், கட்டாயமாக



வழங்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டது. தேர்தல் அன்று ஒரு உத்தரவு போட்டு, தேர்தல் வாக்குச் சாவடி உள்ள பள்ளிக் கூடங்களிலேயே ஆனால் அந்த மக்கள் நன்கு பார்க்கக் கூடிய முறையில், வாக்காளர்கள் பார்க்கக்கூடிய முறையில் அவர்களின் குழந்தைகளுக்கு உணவு பரிமாறப்பட்டது. ஒரு வேளை வாக்காளர்கள் பக்கத்திலே தங்களுடைய பிள்ளைகளுக்கு உணவு அளிப்பதை பார்த்துவிட்டு வாக்குகளை அளிக்கவேண்டும் என்ற அடிப்படையில் அரசு எண்ணியிருக்குமேயானால், உங்களுடைய திறமையான முயற்சியை—முறைக்கு எதிராக நடைபெற்றாலும் கூட வரவேற்கிறேன்.

ஆனால் நான் பேசிய ஒரு சில கூட்டங்களில் சில பள்ளிப் பிள்ளைகள் வந்திருந்தார்கள். அந்த பிள்ளைகள் எல்லாம் பகல் 1 மணி அல்லது 12 1/2 மணியிருக்கும் அந்த வேளையில் கையில் கிண்ணங்களை வைத்துக்கொண்டு நின்றிருந்தார்கள். ஏன் இந்தப் பிள்ளைகள் கையில் கிண்ணங்களோடு இங்கே வந்து நின்று கொண்டிருக்கிறார்கள் என்று எண்ணிக்கொண்டு ஏன் இங்கே நிற்கிறீர்கள் என்று அவர்களைக் கேட்டேன் அதில் ஒருவனுக்கு வயது 6, இன்னொருவனுக்கு 7 மற்றொருவனுக்கு 8 அல்லது 9 இருக்கலாம். அவர்கள் சொன்னார்கள், பள்ளிக்கூடத்திலிருந்து வருகிறோம் என்று பள்ளிக்கூடம் இருக்கிறபோது ஏன் இங்கே வந்திருக்கிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர்கள் இல்லை இல்லை சாப்பாடு கொடுத்தார்கள் எடுத்துக் கொண்டு வீட்டுக்குப் போகிறோம் என்று சொன்னார்கள். கிண்ணத்தை திறங்கள் என்று கேட்டேன்-திறந்து காண்பித்தார்கள்—அதில் ஒரு கிண்ணம் சோறுதான் இருந்தது. அது பள்ளிக்கூடத்திலே தந்தது எனக்கு உள்ளபடியே ஆச்சரியமானாலும் அவர்களைக் கேட்டேன், ஏன் சாப்பிடாமல் எடுத்துக் கொண்டு வருகிறீர்கள் என்று. அந்த பிள்ளைகள் சொன்ன வார்த்தையை முதலமைச்சருக்குச் சொல்லக் கடமைப்பட்டுருக்கிறேன். உடனே சாட்சியம் இருக்கிறதா; குறுக்கு விசாரணை செய்தால் வந்து பதிலளிக்க முடியுமா என்றெல்லாம் கேட்க வேண்டாம். என்னை நம்பினால் நம்புங்கள் இல்லையென்றால் விடுங்கள். அது பற்றி எனக்குக் கவலையில்லை

நான் பேசுவதை எல்லாம் நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதில்லை. நான் பேசுவதையெல்லாம் நம்பச் சொல்லி நான் என்றைக்கும் கேட்கவும் மாட்டேன். ஆனால் அந்தப் பிள்ளைகள் சொல்லிய வார்த்தை—பள்ளிக்கூடத்தில் பகலுணவு இந்த அளவுதான் தருகிறார்கள். அது எல்லாம் எங்களுக்குக் காணாது. அதை எடுத்துக்கொண்டு போய் வீட்டிலே போடும் சோற்றோடு சேர்த்துச் சாப்பிடுவோம்

என்றார்கள் அந்தப் பிள்ளைகள் சொல்லியதில் அரசியல் எதுவும் கிடையாது. அவர்களுக்கு அது தெரியாது. 6, 7 வயது பிள்ளைகள். ஆகவே நீங்கள் போடுகிற உணவு தமிழகத்தில் இருக்கிற பிள்ளைகளுடைய வயிற்றுப் பசியை ஆற்றப்போதுமானது அல்ல நீங்கள் செய்கிற காரியம் வரவேற்கத் தக்கது என்பது வேறு. ஆனால் செய்கிற காரியத்தில் உள்ள குறைபாடு என்ன என்பதை எண்ணிப்பார்த்தால் அதில் முழு சத்துணவாக இல்லை என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

சத்துள்ள சத்துணவாக தரக்கூடிய வசதி எந்த அரசாங்கத்திற்கும் கிடையாது. இந்தியாவிலேயே வேறு எந்த அரசாங்கத்திற்கும் கூடக் கிடையாது. இன்னும் சொல்லப்போனால் இப்படி தரப்படுகிற காரணத்தால் ஏற்படக்கூடிய வேறு விளைவுகளை சமூகநல விளைவுகளையும் எண்ணிப் பார்க்கவேண்டும். குழந்தைகள் ஓரளவு உடல் ஆரோக்கியம் பெறுகிறார்கள் என்று நீங்கள் சொல்ல முடியுமே தவிர, இதனால் சிறந்த முறையிலே கல்வி பயிற்றுவிக்கப்படுகிறது. என்று கூறமுடியுமா மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னையே ஏமாற்றிக் கொள்ளச் சொல்லுகிறார்களா?

இந்தச் சத்துணவு திட்டம் இன்றியமையாத திட்டம் என்று சொல்லுங்கள். அதிலே எனக்கு மறுப்பு இல்லை. இன்னும் சொல்லப்போனால் அந்த திட்டம் இன்று நடத்தப்படும் முறையால் பள்ளிக்கூடங்களில் கல்வியின் தரம் இன்று குறைந்து போய்விட்டது என்பதை நான் நிரூபிக்கத் தயார். ஆசிரியர்களே வாக்குமூலம் கொடுக்கத் தயார். அதனாலே இந்தச் சத்துணவு திட்டமே கூடாது என்று நான் வாதாடுவதாக எண்ணிக்கொள்ளாதீர்கள். ஆசிரியர்களே சொல்லுகிறார்கள், அதிலே வேறுபட்ட கருத்து இல்லை. எத்தனை ஆசிரியர்கள் சொல்ல வேண்டும் உங்களுக்கு? பெரம்பலூர் தொகுதியினைச் சேர்ந்த இரண்டு ஆசிரியர்கள் திருச்சியிலே என்னைப் பார்த்தார்கள் அவர்கள் என்னிடத்திலே சொன்னார்கள். நாங்கள் இப்போது பாடங்கள் காலையில் நடத்துவது இல்லை. மாலையில் பிள்ளைகள் தூங்குகிறார்கள்—சாப்பிட்டுவிட்டு, ஏதோ ஒரு மணி நேரம் நடத்துகிறோம். பிள்ளைகளே இன்றைக்கு என்ன சமைக்கிறீர்கள் என்று கேட்கிறார்கள், என்று அவர்களுக்கு சமையலில் அக்கறை வந்திருக்கிறது. இவையெல்லாம் அரசாங்கம் செய்கிற குற்றம் என்று கூட நான் சொல்லவில்லை. ஆனால், இந்த சூழ்நிலையை மாற்றுவதற்குத்தான் அரசாங்கம் வழி செய்ய வேண்டும் என்று கேட்கிறேன். நாங்கள் சத்துணவு போட்டுவிட்டோம் அதனாலேயே கல்வி சிறந்த முறையில் கல்வி கற்பிக்கப்பட்ட எதிர்கால மக்களை உருவாக்கப்போகிறோம். என்றால் அது உண்மையல்ல என்பதை விளக்க நான் என்றைக்கும் வாதாட தயார்.



நம்முடைய பிள்ளைகள் பட்டினி கிடக்கிற நிலைமை இருக்கக் கூடாது என்று சொல்கிற அதே நேரத்தில் அதைவிட முக்கியமான கல்வியை அவர்கள் இழந்துவிடுகிற சூழ்நிலை எந்தநாளும் வந்துவிடக்கூடாது. கல்வித்தரம் என்பது நான் தெளிவாக சொல்கிறேன்—குழந்தைகளுக்கு தரப்படுகிற பயிற்சியினுடைய தரத்தைப் பொறுத்துத்தான் அவர்களுடைய கல்வியின் தரமே இருக்கிறதேயல்லாமல், படிக்கிற பலன் அவர்களுக்கு கிடைக்கிறதேயல்லாமல், நூற்றுக்கு ஒருவர்தான், தங்களுடைய அறிவினாலேயே அல்லது தங்களுடைய தனி ஆர்வத்தினாலேயே, அல்லது தங்களுடைய குடும்ப சூழ்நிலையினாலே தரமான அறிவு பெறுகிறார்கள், என்பதைத் தவிர பயிற்சி இல்லாமல் நன்கு படிக்க கூடியவர்கள் இல்லை என்பது 40 ஆண்டுகாலம் கல்வியிலே முழுமையாக தொடர்புடையவன் என்கிற முறையில் எண்ணிப் பார்த்துச் சொல்லுகிறேன்.

தகுந்த பயிற்சி இல்லாமல் அதனுடைய முழு பலனையும் பெறமுடியாது இன்னும் சொல்லப்போனால் மேட்டுக்குடி மக்களின் பிள்ளைகள், அவர்களுடைய பெற்றோர்களோ அல்லது அந்தக் குடும்பத்தில் ஒரிருவர் படித்திருக்கிற காரணத்தாலோ அவர்களை நன்கு படிக்க வைக்கிற சூழ்நிலை இருப்பது போன்ற, அவர்களுக்கு ஊக்கம் தருவது போன்ற சூழ்நிலை பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் குடும்ப பிள்ளைகளுக்கு அமைய வாய்ப்பு இல்லை. இந்தச் சமுதாய நிலைமையை மாற்றி காட்டத்தான் வேண்டும் என்பதிலே நமக்கு உண்மையிலேயே அக்கறை இருக்குமேயானால், அந்தப் பிள்ளைகள் உண்மையாகவே படிக்க கல்வியின் தரம் குறையாமல் கவனித்துக் கொள்ளவேண்டும் என்றுதான் நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

கல்வி அலுவலகத்திலே உள்ள டி. ஈ. ஓ. அல்லது அதற்கு மேம்பட்டவர்கள் எல்லாம் இந்தச் சத்துணவுதிட்டத்தைப் பற்றித்தான் அதிகம் கவனிக்கிறார்களே ஒழிய கல்வித்தரத்தைப் பற்றி அதிகம் அக்கறை செலுத்த அவர்களுக்கு நேரம் இல்லை என்கிற ஒரு குறை இருக்கிறது. நீங்கள் அண்மையிலே தெரிவித்திருக்கிறீர்கள். 1 லட்சத்து 40 ஆயிரம் பேர்களை ஏற்கெனவே நியமித்திருக்கிறோம்—குழந்தைகள் காப்பகங்கள் மற்றும் சிலவற்றிற்கு — இன்னும் ஒரு 40,000 அல்லது 35,000 பேர்களுக்கு மேல் இதில் நியமிக்க போகிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். தாராளமாக நியமியுங்கள். இவைகளை கண்காணிக்க வேறு ஒரு துறையையே அதற்காக நியமியுங்கள். அலுவலர் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் வேறு ஒரு தனித்துறை அதனைக் கவனிக்கட்டும்.

(முற்பகல் 11-00)

கல்வித் தரம், கடந்த 10, 12 ஆண்டு காலமாக நல்ல விளைவினைக் கொண்டு வராததற்கான ஒரு முக்கியமான காரணம் மாணவர்களின் எண்ணிக்கை அதிகம், பள்ளிகளின் எண்ணிக்கை அதிகம், ஆனால் மேற்பார்வையிடுபவர்களின்

எண்ணிக்கை சற்று குறைவு. மேற்பார்வை என்பது அதாவது இன்ஸ்பெக்ஷன் என்பது சரியாக முறைப்படி நடைபெறவில்லை. இன்ஸ்பெக்ஷன் இல்லாத காரணத்தால் பள்ளிக்கூடங்களை சில இடங்களில் கட்டியும் படிக்கின்ற மாணவர்களே வராமல் கூட போய்விடுகின்ற நிலைமை ஏற்பட்டுவிடுகின்றது. அப்படி வராததற்கும் சேர்த்து மறுநாள் வந்ததாக கணக்கு காட்டுவது என்ன ஆகும்? எனவே இந்தக் குறை எழாமல் இருப்பதற்கு என்ன செய்ய வேண்டும். தற்போது அரசு உணவுத் திட்டத்திலே எவ்வளவு அக்கறை கொண்டிருக்கின்றதோ அதைவிட ஒரு படி அதிகமாகக் கல்வித் திட்டத்திலே அக்கறையினை காட்ட வேண்டும் என்று பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட, எதிர்காலத்திலே தலைநிமிர வேண்டிய நிலையிலே உள்ள சமுதாயத்தின் சார்பாக அரசாங்கத்தை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்து இன்னொன்றை நான் சொல்ல விரும்புகிறேன். சத்துணவுத் திட்டத்தின் சார்பாக கருத்துக்களை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காங்கிரஸ் இயக்கத்திலே மகாத்மா காந்தி வழியிலே ஈடுபட்டுள்ள காந்திக் கிராமம் என்பது ஒரு பல்கலைக்கழகம் போல் மதிக்கப்படுகின்றது. அந்த காந்திக் கிராமம் என்ற அமைப்பிலே குழந்தைகளுக்கு வழங்குகின்ற பல்வேறுவிதமான சத்துள்ள மாவுகளைத் தயாரித்து பொட்டலங்களாகச் செய்து குழந்தைகளைப் பெற்றெடுத்த தாய்மார்களுக்கு உதவுகின்ற வகையிலே 2 வயது, 3 வயது உள்ள குழந்தைகளின் புள்ளிவிவரங்களைக் கணக்கிட்டு 25 பைசா 30 பைசா பெறுகின்ற உணவினை 10 பைசாவுக்கு 30, 40 கிராமங்களில் கொடுக்கப்பட்டது. நல்ல விளைவினை ஏற்படுத்தியதைப் பார்த்திருக்கிறேன். எனவே இந்தச் சத்துணவினை எந்த முறையிலே நிறைவேற்றுவது என்பதை மட்டும் ஆராய்ச்சி செய்யுங்கள், எண்ணிப்பாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் முதலமைச்சர் எம்.ஜி ஆர். அவர்களின் உணர்வு அதாவது அவர்களின் உள்ளத்திலே ஏழைகளுக்கு உணவினைக் கொடுக்கிறோம் என்ற ஒரு ஆத்ம திருப்தி ஏற்பட்டு நம்முடைய கையாலேயே தினமும் சமைத்துப்போடுவது போல் இருப்பதாக எண்ணுவார்களேயானால் அது அவர்களுடைய விருப்பம். அண்மையிலே ஆந்திராவிலே முதல்வர் பதவி ஏற்ற என்.டி.ஆர். அவர்கள் பள்ளிப் பிள்ளைகளுக்கு நான் பாலும் ரொட்டியும் கொடுக்க ஏற்பாடு செய்ய இருக்கிறேன், பள்ளிக்கூடத்தினை சமையல் கூடமாக ஆக்க நான் விரும்பவில்லை என்று சொல்லி இருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்கது என்றாலும் தமிழ்நாட்டிலேயும் அப்படி பாலும் ரொட்டியும் வழங்க வேண்டும் என்றால் தமிழ்நாட்டிலே எவ்வளவு பெரிய முயற்சியினை மேற்கொண்டால்—அதற்குப் பின்னால் அதை செய்ய முடியும் என்று நான் திட்டமிட சொல்லவில்லை. ஒரு வேளை கோதுமை மாவிலே ரொட்டி தயாரிக்கிற வாய்ப்பு இருக்குமானால் ஒரு ஆல்டர்நேட் ஏற்பாட்டினைச் செய்வதற்குரிய வாய்ப்பு இருக்குமானால் அதனைப் பரிசீலனை செய்யுங்கள். ஆனால் ஒரே யிலே ஒரேவிதமாக கன்னியாகுமரியிலே இருந்து சென்னை வரையிலே குழந்தைகளுக்கு உணவு வழங்கவேண்டும் அதன் மூலமாகத்தான் குழந்தைகளைக் காப்பாற்றவேண்டும் என்பது சரியல்ல. அந்தந்தப் பகுதிகளின் சூழ்நிலைக்கேற்ப, வளங்களுக்கேற்ப வழங்கலாம். அதற்கென நிபுணர்கள் மருத்துவத் துறையினைச் சார்ந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய ஆலோசனையைக் கேட்டு எந்தெந்தப் பகுதிகளில் எந்தெந்த முறையினைக் கையாண்டால் பரவலாக இந்தத் திட்டத்தின் பலன் கிடைக்கும் என்று எண்ணிப்பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



எனவே, இப்படிப்பட்ட அருமையான திட்டத்தை, நல்ல திட்டத்தை நீங்கள் ஆர்வத்தோடு நிறைவேற்றுவதை நாங்கள் வரவேற்கின்ற அதே நேரத்தில் குறைகளைச் சுட்டிக்காட்டுகின்ற போது நாங்கள்தான் செய்தோம் என்று கருத்துப்பட பேசுவது இந்த அரசாங்கத்திற்கு அவ்வளவு பெருமையாகாது. நேற்றையதினம் கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்களும் திரு நெடுமாறன் அவர்களும் சுட்டிக்காட்டினார்கள். பள்ளிக்கூடத்திலே உள்ள பிள்ளைகளுக்கு உணவளிக்கின்ற முறையினைப் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பரவலாக ஆக்கி விரிவாக்கினார்கள் என்பது உண்மை. காங்கிரஸ் கட்சி ஆட்சியிலே இருந்தபோது ஐந்தாண்டுக் காலம் நானும் மேலவையிலே உறுப்பினராக இருந்து பேசியபோது பள்ளிக்கூடத்திலே உள்ள பிள்ளைகளுக்கு உணவளிக்கின்ற திட்டத்திலே உள்ள குறைபாடுகளை எடுத்துச் சொல்லி அதனால் எப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகின்றது, எப்படிப்பட்ட சீர்குலைவு ஏற்படுகின்றது என்பதைச் சொன்ன நேரத்திலே அப்போது முதலமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம் அவர்களும் கல்வி அமைச்சராக இருந்த திரு சி. சுப்பிரமணியம் அவர்களும் பதில் சொல்லுகின்ற நிலைமையிலே இருந்தார்கள். கல்வியின் தரம் குறைந்துகொண்டு போகின்றது என்று மதிப்பிற்குரிய ஓர் இயக்குநர் அங்கே இருந்த போது நான் சுட்டிக்காட்டி 3 முறை பேசி இருக்கிறேன். எனவே அப்போதும் நடைபெற்றது. ஆகவே இந்த உயர்ந்த நோக்கம் இதற்கு முன்னாலே இல்லை என்று கருதக் கூடாது. இன்னும் நான் திட்டவட்டமாகச் சொல்ல விரும்புகிறேன்.

1922 ஆம் ஆண்டு நீதிக்கட்சி ஆட்சிக் காலத்திலே அப்போதே, தாழ்த்தப்பட்ட மக்கள் பள்ளிக்கூடத்திற்கு வரவில்லை என்பதற்காக அவர்களால் உணவுக்கு வழியின்றி படிக்க முடியாது என்பதற்காக, பள்ளிக்கூடத்திலே சேரமாட்டார்கள் என்பதற்காக தாழ்த்தப்பட்ட குழந்தைகளுக்கும், பின்தங்கிய ஏழைக் குழந்தைகளுக்கும் உணவு வழங்குகின்ற திட்டம் நீதிக்கட்சியின் ஆட்சிக்

காலத்திலேயே நாட்டிலே கொண்டுவரப்பட்டது அப்போது அது தமிழ்நாடு முழுவதும் வரவில்லை. ஏனென்றால் அப்போது கிராமங்களில் உணவு பஞ்சம் இல்லை. நம்முடைய ஆட்சி வரைதான் கிராமங்களிலே உணவுக்கும் அரிசிக்கும் தட்டுப்பாடு வருகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. Free education was given to the pupils of lower class and incentives were provided by free distribution of school books, clothes and midday meals. என்று டாக்டர் பணவாளராமானுஜம் அவர்கள் நீதி கட்சியைப் பற்றி எழுதியபோதும், கோபாலமேனன் என்பவர் திரு., ஸ்பீக்கராக இருந்தவர் அவர் எழுதிய கட்டுரையிலேயும் எழுதியிருக்கிறார்கள். ஆகவே நீதி கட்சி காலத்திலே தொடங்கி காங்கிரஸ் ஆட்சி காலத்திலே விரிவுபடுத்தப்பட்டு பெரும் தலைவர் காமராஜ் அவர்கள் ஏழைகள் இடத்திலே பின்தங்கிய மக்கள் இடத்திலே அக்கறை எடுத்துக் கொண்டு செயலாற்றியதன் தொடர் விளைவு தான் இன்றைக்கு செயபடுத்துகிறீர்கள். ஆனால் காலத்தின் தேவைகளையும் சூழ்நிலைகளையும் எண்ணிப்பார்த்து முறைப்படுத்தி, வகைப்படுத்தி உணவு போடுகின்ற இந்த காரணத்தால் ஏழை மக்களுடைய அறிவு வளர்ச்சி பாதிக்கப்படாமல் இருக்க அதில்காட்டவேண்டிய அக்கறை காட்டப்பட முடியாத நிலைமைக்கு சமூகம் தள்ளப்படா இருக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

இதுதான் இந்த அரசினுடைய மிகப் பெரிய சாதனை யாக சொல்லப்பட்டிருக்கிறது என்பதை நாங்கள் எண்ணுகிற போது நாங்கள் எப்படி வருத்தப்படாமல் இருக்க முடியும்? ஒரு நூறு சத்திரங்கள் கட்டுகிற காரணத்தால் ஒரு மன்னனை மிகச் சிறந்த மன்னன் என்று பாராட்ட முடியுமா?

நானும் நாவலரும் உயர்நிலைப் பள்ளியில் படித்த காலத்தில் இலவச உணவு போட்டு படிக்க வைக்கிற பள்ளி களுக்கும் நாங்கள் எண்ணும் செய்யக்கூடிய ஒரு கால கட்டத்தில் இருந்தோம். ஓரத்த நாட்டிலே ராஜா சத்திரத்திலே இருந்த இலவச உணவு வழங்குகிற பள்ளிக்கூடத்திற்கு மனு போட்டிருக்கிறேன் நான். அப்போது அங்கிருந்த, டிஸ்டிரிக் போர்டு பிரசிடெண்டு மாவட்டத் தலைவர் இடத்திலே விண்ணப்பம் கொடுக்க சென்றவன் நான். எனவே இப்படிப்பட்ட ஒரு கருத்து சமுதாயத்தில் என்றும் இருக்கிறது. முறைப்படி செய்கிற ஆற்றல் அரசாங்கத்திற்கு இருக்க வேண்டும் என்பதை நான் இங்கே நினைவூட்ட கடமைப்பட்டிருக் கிறேன்.

அடுத்து தமிழகத்திலே தொழில் வளர்ச்சியில் ஏற்பட்டிருக் கிற பின்தங்கிய நிலைமை சாதாரணமானது அல்ல நீங்கள் ஏதோ புள்ளிவிவரங்கள் காட்டி மத்திய அரசு இசைவு தரவில்லை அதனால் குறை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லலாம். அதை நான் மறுக்கவில்லை. ஆனால் மத்திய அரசு இடத்திலே எந்த



எந்தத் தொழில்களைப் பெறுவதற்கு எத்தனை முறை முயற்சி எடுத்துக் கொள்ளபட்டது? எப்படி வாதாடப்பட்டது? மத்திய அரசாங்கத்திற்கு கொள்கை அடிப்படையில் எடுத்து வைக்கப் பட்ட வாதங்கள் என்ன என்பது தெரிய வேண்டாமா? இந்த அவைக்குத் தெரிய வேண்டாமா? நேற்றைய தினம் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் பல கருத்துக்களை பேசினார்கள். அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்கள் மாநிலத்தில் தொழில் வளர்ச்சியில் ஏற்பட்டிருக்கிற பின்தங்கிய நிலைமை குறித்து எடுத்துச் சொன்ன கருத்தை முதலமைச்சரோ வேறுஎந்த அமைச்சரோ மறுக்க முடியாது. இந்த நிலைமை ஏற்படாமல் இருப்பதற்கு மத்திய அரசினிடத்தில் மாண்புமிகு உறுப்பினர் ஹாஜா ஷெரிப் அவர்கள் போய் அதைப் பெற்றுக் கொண்டு வந்தால் முடியும் என்ற நிலைமையில் அரசாங்கம் இருக்குமானால், ஒரு அரசாங்கம் நமக்கு எதற்கு? அரசாங்கத்திற்காக அதை வாதாடிப் பெறுவதற்கான வல்லமையே இல்லாமல் போனதற்கு என்ன காரணம்? உறவுக்கு கை கொடுங்கள். ஆனால் உரிமைக்கு குரல் கொடுக்கவேண்டிய காலத்தில் நீங்கள் குரல் கொடுத்தீர்களா? சட்ட மன்றத்தில் எடுத்து வைத்தீர்களா? அதற்காக வாதாடினீர்களா? ஒரு கொள்கையை வலியுறுத்துகிற முறையில் அகில இந்தியாவிலே பின்தங்கிய மாவட்டங்கள் என்று சொல்கிற முறையில் பல்வேறு மாநிலங்களில் 98 மாவட்டங்கள் இருக்கின்றன. அதில் இத்தனை மாவட்டங்களுக்கு தந்தோம் என்று சொல்கிறார்கள். தமிழ்நாட்டில் மாவட்டங்களின் எண்ணிக்கை குறைவு. மக்கள் தொகை அதிகம் பரப்பு குறைவு அல்ல. ஆனால் மாவட்டங்களாக நாம் பிரித்து இருக்கிற முறை வட இந்திய மாநிலங்களில் ஒரு மாவட்டம் எவ்வளவு பரப்பு இருக்கிறதோ அதைப்போல 3 மடங்கு பரப்புள்ள மாவட்டங்கள் நம்முடைய மாவட்டங்கள். நீங்கள் மாவட்டங்களின் எண்ணிக்கையை வைத்துக் கொண்டு மத்திய அரசிடம் பேசுகிறபோது நம்முடைய எண்ணிக்கையும் குறைவு, விகிதாசாரமும் குறைகிறது. இதை தான் நான் கேள்வி கேட்ட போது கூட, வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிற மக்களுடைய விகிதாசாரத்தை ஒவ்வொரு மாவட்டத்திலும் கணக்கு எடுக்கப் பட்டு அந்த விகிதாசார அடிப்படையில்தான் மத்திய திட்டக் குழு திட்ட அடிப்படையில் நிதி ஒதுக்குவதாக இருந்தாலும் அல்லது அந்தந்த மாவட்டங்களுக்கு சலுகை அளிக்கிற முறையில் வளர்ச்சிக்கான வாய்ப்புகளை அளிக்க வேண்டுமானாலும், அந்த உரிமைகளை வழங்கவேண்டும் என்று கேட்டுப் பெறவேண்டும் என்ற கருத்தை எடுத்துச் சொன்னோம். மத்திய அரசு புறக்கணிக்கிறது என்றால் புறக்கணிக்காமல் மத்திய அரசு, மாநில அரசுகள் அனைத்தும் சொல்வதை எல்லாம் கேட்டுக் கொண்டிருக்கும் என்று நான் நம்பவில்லை. நாம் என்ன பஞ்சாபிலுள்ள சீக்கியரைப் போல் அவ்வளவு தமிழ் இன உணர்வு படைத்தவர்களா? சீக்கியர்களுக்குள்ள இன உணர்வு தமிழனுக்கு என்றைக்காவது வருமா? உள்ளபடியே ஒருமைப்பாடு

ஒற்றுமை என்று பேசுகிறபோது எனக்கு ஒற்றுமையில் நாட்டம் உண்டே தவிர ஒருமைப்பாடு என்பது நடைமுறைக்கு ஏற்றது அல்ல என்பது திட்டவட்டமாக தரியும் தாயும் மகளும் ஒன்று என்று சொன்னாலும் வாயும், வயிறு வேறு வேறுதான் என்பது உலகம் அறியாத பழமொழியா? அவனவன் வாயும் வயிறும் வேறாக இருக்கிறது, அதில் வல்லமை உள்ள வாய்க்குத்தான் வயிறு நிரம்புகிறது என்ற நிலைமையிலும் உலகம் முழுவதற்குமே உண்மையாக இருக்கிறதே! அது தமிழ்நாட்டில் உண்மையாக இருக்கிறதே. எனவே வல்லமை உள்ளவர்களாக தமிழக மக்கள் தமிழன் என்ற உணர்வோடு தலை எடுக்கக்கூடியப வாய்ப்பை தமிழன் பெற்று இருக்கிறானா.

அசாமில் உள்ள மலைவாழ் மக்கள் அவர்களுடைய உரிமைக்கு போராடுவதிலேஎனக்குக் கூட சில குறைகள் உண்டு என்று சொன்னாலும் உரிமை இந்த அளவு போய்விட்டால் நாளை என்ன ஆவது என்ற கவலை இருந்தாலும் கூட அசாமிலுள்ள மலைவாழ் மக்களுக்கு உள்ள உணர்வு தமிழனுக்கு இருக்கிறதா? தமிழர் என்று சொல்கிற அந்த உணர்வுக்கு நாம் இடம் கொடுக்கிறோமா? இன்னும் சொல்லப் போனால் தமிழர்கள் யார் என்ற வாதத்திலேயே காலம் போய்விடுகிறதே தவிர அவர் தமிழனா இவர் தமிழனா என்ற வாதத்திலே காலம் போய்விடுகிறதே தவிர தமிழன் என்ற பொது உணர்ச்சிக்கு முக்கியத்துவம் தரக்கூடிய மனப் பான்மை நம்மிடத்திலே இருக்கிறதா?

(முற்பகல் 11-10)

தனி மனிதனை எண்ணிக்கொண்டு நான் பேசவில்லை. தமிழ் நாட்டிலே வாழ்கிற 5 கோடி மக்களையும் கூட நான் தமிழர்கள் என்று ஒப்புக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். கொஞ்சம் தரம் குறைந்த தமிழர்கள் என்று சில பேர்கள் இருக்கக் கூடும். ஆனால் 5 கோடி மக்களும் தமிழ்நாட்டின் மக்களுடைய மொத்த நலனுக்காகப் போராடுகிற ஒரு உணர்வு தமிழகத்திலே இருக்க முடிகிறதா? தமிழர்களின் தலைவர்களாக உள்ளவர்களையெல்லாம் மதிக்கிற மனப்பான்மை அவர்கள் எந்தக் கட்சியில் உள்ளவர்களாக இருந்தாலும் நமக்கு இருக்கிறதா? நம்மால் அந்த உணர்வோடு செயல்படமுடிகிறதா? ஏன் அந்த உணர்வு பட்டுபோய்விட்டது.

தேசியக் கவி பாரதியார் அவர்கள் தமிழ்நாட்டில் மூதன் முதலில் புரட்சி உணர்வுகளைத் தமிழ்நாட்டு மக்களுக்கு விளைவித்தார்கள். ஒரு வைதீகக் குடும்பத்திலே பிறந்தாலும் தேசியக் கவி பாரதியாருக்கு ஆதிதிராவிடர் என்றோ அய்யர் என்றோ வேறுபாடு தெரியாத ஒரு மனவளம் வளர்ந்தது என்பதை நான் எண்ணிப் பார்க்கிறபோது அவருடைய காலடியிலே விழுந்து வணங்கி அந்த உணர்வைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் கருதிக் கொள்பவன். ஆனால் அந்த



உணர்வு படைத்த தேசியக் கவி பாரதியாருக்கு விழாக் கொண்டாடுகிற நாம் ஒரு ஆண்டு முழுவதும் நூற்றாண்டு விழா பல்வேறு வகைகளிலே கொண்டாடுவதற்கு நாம் ஆர்வமாக இருகிறோம், பாரதியார் பெயரால் பல்கலைக் கழகம் அமைத்து இருக்கிறோம். அதிலே இம்மியளவும் எனக்கு மாறுபாடு கிடையாது. அதன் நிர்வாக முறையிலே வரக்கூடிய குறைபாடுகள் என்பது வேறு, விழா நடத்தியபோது ஏற்பட்ட குறைபாடுகள் என்பது வேறு ஆனால் பாரதியாரை எந்தக் கண்ணோட்டத்திலே நோக்குகிறீர்கள் ஒரு லக்கியவாதியாக, ஒரு கலைஞனாக ஒரு சிறந்த கவிஞனாக மட்டும் பார்த்துவிட்டு அவருடைய சமுதாய உணர்வுகளை மூடி மறைத்து விடுகிறார்களோ என்ற உணர்வு எனக்கு ஏற்பட்டதுண்டு. பாரதியாருடைய தியாகத்திற்கும் தொண்டுக்கும் ஈடில்லை எனினும் அவர் 39 வயது தான் வாழ்ந்தார். 70 ஆண்டுகள் வரையிலும் வாழ்ந்து 50 ஆண்டுகாலத்திற்கு மேல் இந்த நாட்டுக்கே தன்னை ஒப்படைத்து தேசியத்திற்காக அல்லும் பகலும் போராடி தமிழ் மொழி வளர்ச்சிக்கு தன் வாழ்நாள் 40 ஆண்டுக்காலம் 45 ஆண்டுக் காலம் செலவிட்டு 30 ஆண்டுக்காலம் தொழிலாளர்களுக்கு உரிமைக்குரல் கொடுத்துப் போராடித் தனக்கென வாழாது பிறக்குரியவராக வாழ்ந்த அரசியல்வாதிகளுக்கு எல்லாம் வழிகாட்டியாக இருந்த திரு. வி. க. அவர்கள் நூற்றாண்டு விழாவைப் பற்றி இந்த ஆளுநர் உரையில் ஒரு குறிப்பு வந்திருக்கவேண்டாமா? ஒரு தமிழன் என்ற உணர்வோடு நான் எண்ணிப் பார்க்கிறேன். இந்த உரையில் திரு.வி.க. அவர்களுக்கும் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகிறோம் என்று சொல்லக்கூடிய நிலைமை இல்லை 3 மாத காலத்திற்குமுன்னாலே அரசாங்க விழா நடைபெற்றது, என்பதால் அரசின் நினைவுக்கு எதற்காக அது வந்திருக்கிறது. அவர்கள் பாரதியாரைக் குறிப்பிட்ட உடனே திரு. வி. க. அவர்களையும் குறிப்பிட்டிருக்க வேண்டும். ஆனால் அந்த நினைவு நமக்கு வராமலே போய்விட்டதே. கப்பலோட்டிய தமிழன், வ.உ.சிதம்பரனாரை தமிழகம் மறந்ததைப்போல எத்தனையோ தமிழ் வீரர்களை தமிழுக்காகப் பாடுபட்டவர்களைத் தமிழகம் மறந்திருக்கிறது. அப்படிப்பட்ட உணர்வு ஏற்பட வேண்டுமானால் திரு. வி. க. அவர்களுக்கும் நூற்றாண்டு விழா அறிவிக்கப்பட்டு பாரதியாருக்கு நிறைவேற்றப்பட்ட விழாவிற்கு ஒத்த முறையிலே தமிழகத்திலே கொண்டாடக்கூடிய ஒரு பக்குவத்தை ஆர்வத்தை ஒரு உணர்ச்சியை காட்டியிருக்க வேண்டும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அறித்துதேசிய ஒருமைப்பாடு என்ற பெயரால் வேற்றுமை காட்டுவதா நேற்றையதினம் திரு. ஹாஜா ஷெரிப் அவர்கள் சொன்னார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலேயிருந்தும் இந்த அரசாங்கத்திடத்திலே வந்து தங்கள் மாவட்டத்திற்கு ஒரு தொழில் வேண்டும் என்று கேட்பதைப்போல் மைய அரசை மாநில அரசுகள் அவரவர்

களுக்கடித் தொழில்கள் வேண்டுமென்று கேட்கிற போது நீங்கள் தானே போராடி பெறவேண்டுமென்ற கருத்தை சொன்னார்கள் அது உண்மை. அந்த அடிப்படையில் நான் சொல்கிறேன். மாநிலத்தின் உரிமை எதுவாக இருந்தாலும் மாநில மக்களுடைய உணர்வுகளை எல்லாம் திரட்டி வாதாடுவதற்கான ஒரு சூழ்நிலை உருவாகவேண்டுமானால் அந்த ஆளுநர் உரையில் சேதுகால்வாய் திட்டம் பற்றிக் குறிப்பிடப்படாமலே விடப்பட்டிருக்கிறதே ஏன்? மத்திய அரசாங்கத்தை வேறு யாரோ பாராளுமன்றத்திலே உள்ளவர்கள் கேட்கிறார்கள். குழுக்கள் போடப்படுகின்றன என்றாலும் சேதுகால்வாய்த் திட்டம் வருவதன் மூலமாக நம்முடைய கிழக்கு கடற்கரைக்கு ஏற்படக்கூடிய வளர்ச்சிக்கு ஒரு வாய்ப்பு ஏற்படும் என்பதால் அதைப் பற்றி 10 வரிகளாவது குறிப்பிடவேண்டாமா? சேதுகால்வாய்த் திட்டத்தை மறந்து போய் விடுவதா சேதுகால்வாய் திட்டம் இல்லாமல் தூத்துக்குடியினுடைய முழுபலனையும் பெறமுடியுமா சேது கால்வாய்த் திட்டம் இல்லாமல் கடற்கரை ஓரத்திலே வளர்ச்சியை நாம் காணமுடியும ? சேது கால்வாய்த் திட்டம் எவ்வளவு கோடியானாலும் தமிழ்நாட்டிற்கு தேவையல்லவா? தேசத்தின் பாதுகாப்புக்கு அது தேவையல்லவா?

சேதுகால்வாய்த் திட்டத்தைப் போல் கங்கை-காவிரியை இணைப்போம் என்பது 40, 45 ஆண்டுகளுக்கு முன்னாலிருந்து உருவாகி வந்திருக்ன்கிற கருத்து அது இயல்வதல்ல என்று மத்திய அரசு சொன்னாலும் கூட அந்தத் திட்டத்தை வலியுறுத்துகின்ற கொள்கை ஒரு உணர்வு நமக்கு இருக்க வேண்டாமா? கங்கை நதி தண்ணீரோ பிரமபுத்திரா நதித் தண்ணீரோ பாய்கின்ற பங்களாதேசத்திற்கும் இந்தியாவிற்கும் இடையே தண்ணீர்பங்கீடு பிரச்னை ஏற்பட்டு உடனுக்குடன் மத்திய அரசு தீர்க்கவில்லையா? இந்த கங்கை நதித் தண்ணீர் இந்தியாவைக் காப்பாற்ற வேண்டிய தண்ணீர் என்ற குமரி முனை வரையில் பாயவேண்டிய தண்ணீர் என்ற உணர்வை ஏற்படுத்துவதற்கு கங்கை-காவிரி இணைப்புத் திட்டம் பற்றி இந்த ஆளுநர் உரையில் வலியுறுத்திக் குறிப்பிட்டிருக்க வேண்டாமா?

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

சேலம் இரும்பு உருக்குத் தொழிற்சாலை நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் உருவான நேரத்தில் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் நடத்திய முதலமைச்சர்கள் மாநாட்டில் அந்தத் திட்டத்தை அந்தத் திட்ட அறிக்கையில் சேர்க்காத காரணத்தினால் இந்த சேலம் இரும்பு உருக்குத் தொழிற்சாலை வரும் என்று தமிழ்நாட்டு மக்களுக்காக நாங்கள் எவ்வளவு முறை எடுத்துச் சொல்லியும் நீங்கள் சேர்க்காத போது நான் இந்தத் திட்டத்தையே ஏற்றுக் கொள்ள முடியாது என்று கலைஞர் அவர்கள் வாதாடியதன் விளைவாக சேர்க்கப்பட்டது சேலம் இரும்பு உருக்குத் தொழிற்சாலைத் திட்டம். இன்றைய தினம் நடவடைந்த குழந்தையாக, நாசமாகப் போய் விடுமோ என்று அஞ்சக் கூடிய தொழிலாக இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதுபோல தொழிலாளர்கள் வேலைவாய்ப்பு நாளுக்குநாள் குறைந்து வருகிறதாக கஞ்சமலைத் தாது பயன்படுத்தப்படாத ஒன்றாக, மத்திய அரசு ஏற்படுத்தி இருக்கிற ஒரு இரும்பு உருக்குத் தொழிற்சாலையினுடைய காட்சிக்கூடமாக மாறி இருக்கிறதே அதுபற்றி இந்த அரசாங்கம் வலியுறுத்திப் போராடுகிற முறையில் எடுத்து சொல்ல இருக்கிறதா? அரசாங்கத்திற்கு அல்லவா அது முன்கூட்டியே தெரிய வேண்டும்? இன்னும் சொல்லப்போனால் அப்படி வாதாடாத காரணத்தினால் தொழில்துறையில் ஏற்பட்டிருக்கிற ஒரு மங்குகிற நிலைமை, மின்சார வெட்டு காரணமாக வேலை குறைப்பு தொழிற்சாலைகளில், தொழிலாளர்களுக்கு வேலையில்லாமல் தொழிற்சாலைகள் மூடப்பட்டு அவர்கள் பாதிசம்பளத்தை வாங்கிக் கொண்டு 600 ரூபாய் வாங்குகிற தொழிலாளி 300 ரூபாய் வாங்கிக் கொண்டு வீட்டில் முடங்கி இருப்பார்களானால் அவர்களை யார் காப்பாற்றுவார்கள்? மீதி இருக்கிற ஊதியத்தை இந்த அரசாங்கம் தரமுடியுமா? தாருங்கள் என்று கேட்டால் ஒரு வேளை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்வார்கள், மத்திய அரசாங்கத்தைப் போல நாங்கள் நோட்டு அடிக்க முடியுமா என்று. அதிலே ஒரு உண்மை இருக்கிறது. இந்த அரசாங்கமும் நோட்டு அடிக்கிற வாய்ப்பினை பெற்றிருந்தால் மக்களை எவ்வளவு காலத்திற்கு முன்பே பரிதவிக்கிற நிலைக்கு விட்டிருப்பார்கள் என்ற உண்மை நமக்குத் தெரியும். இன்ப்ளேஷன் என்று சொல்லப்படுகிற, பண வீக்கத்தின் மூலக்கூறே நோட்டு அடிப்பதிலேதான் ஆரம்பமாகிறது. மத்திய அரசாங்கத்தினுடைய நிதிநிலை வசதிக்காக நோட்டு அடிப்பதை அதிகப்படுத்துகிறபோது இருப்பு முதலீடு அதற்குத் தேவையான அளவு இல்லாத காரணத்தினால் பண வீக்கத்தினை உண்டாக்குகிறது. தேவையான மூலப் பொருளை உருவாக்காத காரணத்தினால் அது பணவீக்கத்தை உண்டாக்குகிறது. மாநில அரசுகளே நோட்டுகளை அடிக்கக்கூடிய நிலைமை இருக்குமானால் மக்கள் திண்டாடக்கூடிய நிலைமை மேலும் அதிகமாகும். ஆனால் மத்திய அரசாங்கத்திடத்தில் பொருளாதார முக்கியத்துவத்தையும் வல்லமையையும் வளர்த்துக் கொள்ளும் உரிமை இருப்பதை மறுத்து அந்த உரிமைகளின் பலன் பங்கிடப்பட வேண்டும் என்று வாதாடுகிற முறையில் தமிழகத்திற்காக இதுவரையில் மத்திய சர்க்காரிடத்திலே எத்தனை முறை குரல் கொடுத்து வாதாடியிருக்கிறீர்கள்?

இன்னும் சொல்லப்போனால், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நமக்குரிய தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதற்காக இந்த ஆண்டு கடந்த ஆண்டை விட 18 சதவீதம் அதிகமாக திட்டங்கள் தீட்டியிருக்கிறோம் என்று சொல்கிற போது நமக்கே அதனுடைய உண்மை நிலைதெரிய வேண்டாமா? 18 சதவிகிதம் என்பது இப்போது இருக்கக்கூடிய விலைவாசி

ஏற்றத்திலே ஒன்றுமில்லாமல் போய்விடுகிறது என்பது தெரிய வேண்டாமா? நான் ஒன்றை வற்புறுத்தி கேட்க விரும்புகிறேன். 22½ கோடி ரூபாய்த் திட்டத்தில் தாய்மார்களுக்குக் கழிவறைகள் கட்டிக் கொடுக்கிறோம் என்று சொல்கிறீர்களே, நானும் என்னுடைய தாய் தங்கை முதலியவர்களை நினைந்துக் கொண்டுதான் கேட்கிறேன். 22½ கோடி ரூபாய் இதில் முதலைமாகச் செலவிட அரசு திட்டமிட்டுக்கிறது. கல்வி அமைச்சர் அரங்கநாயகம் அவர்கள் மேலவையில் பேசுகிறபோது பள்ளிகூடங்கள் கட்டுவதற்குத் தேவைப்படும் 98 கோடி ரூபாய் நிதி கிடைக்கவில்லை என்றார்கள். பள்ளிக்கூடங்கள் கட்டுவதற்கு 98 கோடி ரூபாய் நிதி தேவை என்றார். நானே கூட இதற்கு முன் பேசியுள்ளேன். ஆண்டிற்கு முப்பது கோடி ரூபாய் எங்காவது கடன் வாங்கி பள்ளிக் கட்டிடங்களை ஒழுங்குபடுத்துங்கள் என்று கேட்டேன் நேற்றைக்கு முன் தினம் அவர் பேசினார் என்று நினைக்கிறேன், 98 கோடி எல்.ஐ.சி. தர மறுத்துவிட்டது என்றும், தேசிய வங்கிகளிடத்திலே 4 சதவிதம் வட்டியிலே நாங்கள் பணம் கேட்கிறோம், அவர்கள் கடன் வழங்க மறுக்கிறார்கள், நிதி கிடைக்காத காரணத்தால் கட்ட முடியவில்லை என்கிறார்கள், எனக்குத் தெரியாதா என்னுடைய தாய்மார்களை, தங்கைமார்களை, நீங்கள் கட்டுகிற கழிவறைகளுக்காக எவ்வளவு செலவழிக்கிறீர்களோ அதற்குரிய பயன் இருக்கும் என்று கருதுகிறீர்களா? நான் சொல்வதற்கு மன்னியுங்கள். யாராவது இதிலே குடியிருக்கிற நிலைமை கூட ஏற்படலாம், ஏற்படும் நாட்டிலே உள்ள நிலைமை காரணமாக நிரம்பத்தண்ணீர் இல்லாத நிலையில் சக்கூசினை எவ்வளவு நாட்கள் பயன்படுத்த முடியும் எத்தனை கிணறுகளில் இப்போது தண்ணீர் இருக்கிறது? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேலூர் போனபோது தாய்மார்கள் தண்ணீர் குடத்தை தலையிலே வைத்துக்கொண்டு இரண்டு மைல் தொலைவிற்கு போய் வந்ததை பார்த்தவுடன் அவர்களே உத்தரவு போட்டு ஒரு கிணறு தோண்டச் சொன்னார் என்று ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு பத்திரிக்கையிலே பார்த்தேன், முதலமைச்சர் அவர்கள் கண் பட்டால்தான் கிணறு கிடைக்கும் என்ற நிலைமைதான் இருக்கிறது. ஒரு இடைத் தேர்தல் வந்தால் எவ்வளவு கிணறுகள் வேண்டுமானாலும் தோண்டுவார்கள் என்ற நிலைமை உள்ளது. அமைச்சர் இராகவானந்தம் அவர்கள் மேலவையில் சொன்னார்கள், பெரியகுளத்தில் இடைத் தேர்தலுக்காக குடிநீர் திட்டம் போடவில்லை, ஆன் கோயிங் ஸ்கீம் என்று சொன்னார்கள். ஆன்—கோயிங் ஸ்கீம் என்னிடத்தில் இது, இருந்ததில்லையா? ஆன்—கோயிங் எனக்கு தெரியாதா? ஆன் கோயிங் நேட்டே மாறிப் போகிறதே. பெரியகுளம் தேர்தலில் இரண்டு மாதங்கள் முன்னாலிருந்து தேர்தல் முடிந்து இரண்டு நாட்கள் வரையில் அங்கே போடப்பட்ட துளைக் கிணறுகள் எவ்வளவு? அதற்கான செலவு எவ்வளவு? அதற்காக நீங்கள் வாங்கிய ரிக்குகள் எத்தனை வாடகைக்கு வந்த ரிக்குகளுக்குக் கொடுக்க வேண்டிய வாடகைப்பணம் என் கட்சிக்காரருக்கு உள்பட எவ்வளவு பாக்கி, தெரியாதா? வேறு இடத்தில் நீங்கள் செய்தீர்களா? இப்பொழுதே திருச்செந்தூரில் வேண்டுமென்று



குடிநீர் வாரியம் குடியேறி இருக்கிறது என்று சொன்னார்கள். குடியேறட்டும், எனக்கு ஒன்றும் வருத்தம் இல்லை. அரசியலில் ஏற்படுகிற தோல்வியைக் கண்டு மலைப்பவன் அல்ல நான். நானே தோற்றால் கூட இது இயற்கை என்று நினைக்கிறவனே தவிர, அதுபற்றி கவலைப்படுகிறவன் அல்ல.

(முற்பகல் 11-20.)

அரசியலிலே, சட்டமன்றத்திலேதான் இருக்க வேண்டுமென்று எண்ணுகிறவன் கூட அல்ல. இன்னும் ஒரு படி மேலே போய் சொல்கிறேன், அரசியல்தான் உலகம் என்று அப்படியும் கருதுகிறவன் அல்ல. மாண்புமிகு முதலமைச்சரிடத்திலே எனக்கு ஏதாவது நல்லெண்ணம் மிச்சம் இருக்குமானால் அவருக்கு நான் சொல்லக்கூடிய ஒரே கருத்து அரசியல்தான் உலகம் என்று தயவு செய்து கருதாதீர்கள். உங்களுடைய நிலையே வேறு. நானோ, நாவலர் நெடுஞ்செழியனோ இந்தக் குட்டையிலேயே ஊறி இதிலேயே வளர்ந்து இது தவிர வேறு வழியில்லாமல் வந்தவர்கள். நாங்கள் அரசியலைவிட்டுப் போனால் உலகம் எங்களைப் பார்த்து ஆச்சரியப்படும். உங்களுக்கு அரசியல் என்பது ஒரு விருந்துபோல. இந்த அரசியலை அவ்வளவு உயர்வான முறையில் நடத்தக் கூடிய வாய்ப்பு இருக்குமானாலும் நீங்கள் முதலமைச்சராக இருப்பதிலே எனக்கு பொறாமையோ மாறுபாடோ வரக் காரணம் இல்லை. வேறு எவரும் முதல்வராக இருந்தபொழுதும் நான் பொறாமைப்பட்டவனல்லன். இன்னும் சொல்லப்போனால் முதலமைச்சர் பொறுப்பு என்பது நீங்கள் அணிந்திருக்கிற மிருதுவான தொப்பியைப் போன்றது அல்ல. அது முள்முடிபோன்றது என்பது எனக்கு தெரியும். நீங்கள் முள்முடியைத் தாங்கியிருக்கிறீர்கள் என்ற உண்மையும் எனக்குத் தெரியும். அந்த சுமை மகிழ்ச்சியானது அல்ல என்பதையும் நான் அறிவேன். இன்னும் சொல்லப் போனால், அதிகாரத்திலே இருக்கிற காரணத்தால் மக்கள் நமக்குக் காட்டுகிற நன்றியைவிட இல்லாதபொழுது காட்டுகிற நன்றி எவ்வளவு அதிகம் என்பதை அதிகாரம் இல்லாத நேரத்திலே உணர்கிறவன் நான் எனவே, அது பெரிதல்ல. அதற்காக நான் பேசவில்லை.

திருச்செந்தூர் தேர்தல், என்னைப் பொறுத்த வரையில் எந்தக் காள்கை அடிப்படையிலே வாதாடினாலும் கூட அதுவே அல்ல எதிர் காலத்தின் முடிவு. நாட்டினுடைய முடிவு என்ன? எதிர்காலம் என்ன? இன்னும் சொல்லப்போனால், குடிநீர் வாரியத்தினுடைய கடமைகள் எல்லாம் ஒழுங்காக நிறைவேறி இருக்கின்றனவா? 7 ஆண்டுகளுக்கு முன்னாலே, 8 ஆண்டுகளுக்கு முன்னாலே குடிநீர் வாரியத்திலே தவறு நடைபெற்று விட்டதாகக் கருதக்கூடிய அரசு அப்படி தவறு நடைபெற்றறது என ஒரு வழக்குப் போட்டு வழக்கிலே இது குற்றம் எனச் சாட்டுவதற்கு முன்னாலே தாங்கள் குற்றம்சாட்ட விரும்புகிறவருடைய வீட்டிலே வீட்டிலே ஜப்தி செய்தது. வழக்கு போட வேண்டாம் என்று சொல்லவில்லை. நீங்கள் சாட்டுகிற குற்றச்சாட்டெல்லாம் இறுதியானவையா? அப்படியானால் நாங்கள் சாட்டுகிற குற்றச்

சாட்டுக்கள் எல்லாம் முடிவானவையா? நீங்கள் சாட்டுகிற குற்றச்சாட்டு மட்டும் இறுதியானது என்று கருதுவதற்கு உங்களுக்கு எந்த அதிகாரம் இடம் தருகிறதோ அந்த அதிகாரம் இல்லாத காரணத்தால்தான் நாங்கள் சாட்டுகிற குற்றச்சாட்டு இறுதியானதல்ல என்றுதானே பொருள். ஆகவே ஒரு குற்றச் சாட்டை நிரூபிக்கிற வரையிலே பொறுத்திருப்பதிலே குடி முழுகியாப் போய்விடும். மாண்புமிகு முதலமைச்சரையே நான் கேட்கிறேன். நீங்கள் இதுவரையில் யார் யார் மீது, என்ன குற்றம் இருப்பதாகக் கருதினீர்களோ அவைகள் எல்லாம் உண்மை என்று நீங்கள் மனதாரக் கருதுகிறீர்களா? நம்ப முடியு மா? உங்களுக்கு வந்த தகவல் உண்மையா?

இன்னும் சொல்லப்போனால், கமிஷன்களை நியமித்து, உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்த ஒருவரையே நியமித்து ஒரு விசாரணை நடத்துகிறோம். ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவரை நியமித்து ஒரு விசாரணை நடத்துகிறோம். அப்படியெல்லாம் நடத்தப்பட்ட விசாரணைகளுடைய முடிவுக்கு—அவர்கள் ஏறத் தாழ 60 பக்கம் 80 பக்கங்கள் விளக்கங்கள் எழுதி, ஆதாரங்கள் எடுத்துக்காட்டி இன்ன இன்ன குற்றங்கள் இன்ன இன்ன சூழ் நிலையில் நடந்து இருக்கக்கூடும் என்பதற்கு இன்ன இன்ன சான்று இருக்கிறது என்று எழுதுகிறார்கள். அதையே ஏற்றுக்கொள்ளாத அரசு தான் இந்த அரசு எமர்ஜென்சி காலத்தில் நெருக்கடி காலத்தில் சென்னை சிறைச் சாலையிலே நடைபெற்ற அக்கிரமத்தை விட ஒரு அக்கிரமம் உலகத்திலே வேறு எங்காவது நடக்கமுடியும் என்று கருதுகிறீர்களா? . தீகார் ஜெயிலிலே அப்படி நடைபெற்றதற்காக —இன்றைக்கு நடைபெறுகிற தவறுக்காகக் கூட நடவடிக்கை எடுக்கப்படுவதைப் பார்க்கிறீர்கள் அல்லவா? ஆனால், நெருக்கடி காலத்தில் சென்னை சிறைச்சாலையில் நடை பெற்ற சம்பவங்கள் குறித்து—அப்பொழுது உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்த திரு இஸ்மாயில் அவர்கள் கொடுத்த அறிக்கைமீது இந்த அரசாங்கம் மனப்பூர்வமாக நடவடிக்கை எடுத்ததா? அவர் யார் என்பது பற்றி எனக்கொன்றும் கவலை யில்லை. நீதி என்ன ஆவது?

திருச்செந்தூரிலே என்ன நடைபெற்றது? அன்பழகன் சொல்வதை, கலைஞர் கருணாநிதி சொல்வதை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டாம், ஏற்றுக்கொள்ளத்தேவை இல்லை. நாங்கள், ஒருவேளை பாரபட்சமாகச் சொல்லக்கூடும். நீதிபதி பால் கமிஷன் அறிக்கையினுடைய அடிப்படையிலே எந்த நீதிபதியிடத்திலே வேண்டுமானாலும் அந்தக் கமிஷன் அறிக்கையை அனுப்பிப் பாருங்கள். நீங்கள் அதுபற்றி மீண்டும் துப்பறியும் இலாகாவைக் கொண்டு விசாரணை செய்து நடவடிக்கை எடுபபதாகச் சொன்னீர்கள். இதுவரையில் இந்த அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன என்று பொதுமக்களுக்குத் தெரிய வேண்டாமா? நடைபெற்ற அந்தப் படுகொலையைப் பற்றி, எப்படி நடைபெற்றது, எந்தச் சூழ்நிலையில் நடை பெற்றது, யார் காரணமாக இருக்கக்கூடும், இப்படி நடைபெறக் கூடிய அளவுக்கு எந்த எந்தக் காரணங்கள் இருந்தன.



அவர் மீது சோழந்துச் சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகள் எப்படிப் பொய்யானவை—இவ்வளவையும் நான் படித்துப் பார்த்து உணர்ந்திருக்கிறேன். முதலமைச்சர் அதை உணரக் கூடாதா? அன்பழகனுக்கு மட்டும் தனியான இலக்கணமா அந்த அறிக்கையிலே உள்ள சொற்களுக்கு? அப்படி உணரக்கூடிய ஒரு முதலமைச்சர், எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கைகளை எடுக்காமல் மக்களைப் பார்த்துஎங்களுடைய ஆட்சி யார் குற்றம் செய்தாலும் நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று சொல்லக்கூடிய நிலைமை உண்டா?

புட்லூர் தண்டபாணி என்ற ஒருவர் படுகொலை செய்யப் பட்டு, எப்படியோ குளத்தங்கரையிலே, ஏரிக்கரையிலே, அந்தப் பிணம் அதற்குப் பின்னர் கண்டு பிடிக்கப்பட்டு, போலீசுக்குத் தெரிந்து, அவருடைய மனைவி விண்ணப்பம் கொடுத்தும், குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவில்லை. நாங்கள் இன்னார் என்று திட்டவட்டமாகச் சொல்ல எங்களுக்கு உரிமை கிடையாது. ஒருவேளை, நாங்கள் ஊகிக்கலாம். அதைச் சொல்ல நான் தயாராக இல்லை, அவசியம் இல்லை.

மதுராந்தகம் ஞானசௌந்தரி எப்படியோ ஒரு கொலைக்கு ஆளானபொழுது, இந்த அரசாங்கம் நடவடிக்கைஎடுத்ததா? அது தொடர்ந்ததா? நீதி கிடைத்ததா? இப்படி எத்தனையோ செய்திகளைச் சொல்லலாம். ஒரு அரசாங்கம் ஐந்தாண்டுக் காலம், ஏழாண்டுக் காலம், பத்தாண்டுக் காலம் ஒரு கட்சியின் ஆட்சியில் இருக்கிறது என்றால் அதன் பின் விளைவுகள் ஒரு நாட்டிலே எப்படிப்பட்ட சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும் என்று எண்ணிப்பார்க்க வேண்டாமா என்றுதான் கேட்க விரும்புகிறேன்.

ஒருவர் ஆட்சியிலே இருக்கலாம், ஆட்சியிலே இல்லாமலும் இருக்கலாம். ஆனால் நாட்டிலே வாழ்ந்துதான் தீர வேண்டும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967-ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த நேரத்தில், அதற்கு முன்னால் இருந்த காங்கிரஸ் கட்சியினுடைய ஆட்சியில் பல குறைபாடுகள் நடந்தன. பேரறிஞர் அண்ணா அவர்களுக்குத் தெரியாதா? சில குறைகளைப் பற்றிக் கூட பேரறிஞர் அண்ணா அவர்கள் பேசவில்லையா? அந்தக் குறைகளைப் பேசிய அண்ணா அவர்கள்,அவைகுறித்து பேசியதேபோதும் என்றுகருதவில்லையா? அறிஞர் அண்ணா அவர்கள் நம்மையெல்லாம் விட ஆற்றலிலே குறைந்தவரா? நம்மைவிட அறிவாற்றலிலே குறைந்தகாரணத்தால் பயந்து போய் அவைகளைக் கைவிட்டு விட்டார்களா? அதனால் நாட்டுமக்களுக்கு நாம் செய்யவேண்டிய கடமைகளை மறந்து விடக்கூடிய துர்பாக்கியமான நிலைமைக்குத் தள்ளப்பட்டுவிடக் கூடாது என்ற வகையின் காரணமாக இந்தப் பிரச்னையில் ஈடுபடக் கூடாது என்று அண்ணா அவர்கள் கருதவில்லையா?

ஆகவேதான் நான் கேட்கிறேன், சேலம் இரும்பு உருக்காலைத் திட்டம் முழு வரவு பெறாத நிலை இருக்கட்டும், நேவல் அகாடமிக்காக ஒரு இடத்தை ஓராண்டுக்கு முன் ஒதுக்கிக் கொடுக்கப்படாத காரணத்தால், 550 கோடி ரூபாய்த் திட்டம் கொண்ட கடல் படை பயிற்சி நிலையம் மிகப்பெரிய அளவில் சென்னைக்குப் பக்கத்தில் ஒருபுறத்தில் வருகின்ற வாய்ப்பு தவறிப் போயிருக்கிறதே. மத்திய அரசு நம்மிடம் மாற்றான்தாய் மனப்பான்மையோடு நடப்பதாகச் சொல்லிக்கொண்டிருப்பது ஒரு புறத்தில் இருக்கட்டும். அதிலேயும் கூட அவர்கள் ஏமாறும் நிலையில் வருகின்ற ஒன்றிரண்டு திட்டங்களையும் நீங்கள் இழந்து விடுகின்றீர்களே.

மத்திய அரசு நம்மிடம் மாற்றான்தாய் மனப்பான்மை காட்டுகிறது என்று சொல்வதைக்கூட நான் ஒப்புக்கொள்ளத் தயாராக இருக்கிறனே். எனக்கு அதில் மாறுபாடு இல்லை. ஏனென்றால் மத்திய அரசாங்கம் என்பது பஞ்சாப் மாநிலத்தி லுள்ள சீக்கியர்கள் சொல்வதைக் கேட்பது போல இங்கே உள்ள தமிழர்கள் சொல்வதைக்கேட்குமா? டெல்லியில் உள்ளவர்களும், உத்தரப் பிரதேசத்திலே உள்ளவர்களும் தொலைக் காட்சியை எப்படி நடத்த வேண்டும், எவ்வளவு நேரம் இந்திக் காக ஒதுக்க வேண்டும் என்று சொல்வதைக் கேட்பதுபோல தமிழர்கள் சொல்வதைக் கேட்குமா? தமிழர்கள் ஒரு கோடியில் இருக்கிறார்கள். தெனக்கோடியில் இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், தமிழன் கட்டுப்பாடான ஒரு இனமாக இல்லை. தமிழன் அரசியலிலே கூட இப்படிப்பட்ட பொது நோக்கத்துடன் தன்னை வளர்த்துக் கொள்கின்ற ஒரு தகுதியைப் பெறவில்லை. தமிழன் தன் தலைவன் யார் என்பதைக்கூடத் தெரியாதவனாய் இருக்கிறான்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இல்லையென்றால் தங்கள் தலைவர்கள் செய்த காரியங்கள் ஏதோ தவறைப்போல் பொதுமக்களிடத்திலே சென்று பேசுவார்களா? தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் தமிழர்களுக்கு காட்டிய வழி தவறு என்ற கருத்தில் பேசக்கூடியவர்கள் இந்த அமைச்சரவையில் இல்லையா?

நான் மாண்புமிகு முதலமைச்சரவர்களிடத்தில் கேட்கிறேன் தந்தை பெரியார் அறிஞர் அண்ணா ஆகியோருடைய தகுதியைக் குறை சொல்லிப் பேசக்கூடிய அளவில் தகுதி உள்ளவர்கள் இந்த நாட்டிலே இருக்கிறார்களா? வேறு பெரிய மனிதர்கள், அறிவாளிகள், தத்துவ ஞானிகள் பலர் இருக்கலாம்; அவர்கள் தங்களை உலகத்திற்கு ஒப்படைத்த வர்களாக இருக்கலாம். அவர்களைப் போற்றுவதைப்பற்றி எனக்குக் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் தமிழர் களுக்குக் காட்டிய வழி தவறு என்று அமைச்சரவையில் உள்ள



ஒருவர் பேசியிருக்கிறாரே? அதற்காக வருத்தம் தெரிவித்தீர்களா? அவ்வாறு ஒரு அமைச்சர் பேசலாமா? அப்படிச் சொல்லவேண்டிய அவசியம் என்ன? அவர்களுடைய கருத்தில் வேறுபாடு கொண்டவர்கள் இருக்கலாம். அவர் நாத்திகப் பாதையைக் காட்டினார் என்று சொல்லக் கூடியவர்கள் இருக்கலாம் ஆனால் நான் சொல்கிறேன், தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் இல்லை என்று சொன்னால் திராவிட முன்னேற்றக் கழகமே இல்லை என்பது மட்டுமல்ல; முதலமைச்சராக உள்ள எம்.ஜி.ஆர். அவர்களுக்கு அந்தத் தகுதியை ஏற்படுத்துவதற்கான சூழ்நிலை— நான் விரும்பாமல் இருக்கலாம் அந்த சூழ்நிலை உருவாகியிருக்கும் என்று கருதுகிறீர்களா ? பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் முதலமைச்சராக இருந்து ஒன்பதாண்டுக் காலம் ஆட்சி நடத்தினார்கள் என்றால் அந்த ஒன்பதாண்டுக் காலமும் நிம்மதியாக ஆட்சி நடத்தியிருக்க முடியும் என்று நீங்கள் கருதுகிறீர்களா? இங்கே இல்லாத வகுப்பு வாதமா? தமிழகத்திலே இல்லாத இன உணர்வா? தமிழகத்திலே உள்ள பிற்படுத்தப்பட்ட மக்களையும், தாழ்த்தப்பட்ட மக்களை யும் கேவலமாக நினைக்கவில்லையா? அவர்களையெல்லாம் வளர விடக் கூடாது என்னும் மனப்பான்மையை இங்கிருந்தது போல் வேறுஎங்கேயாவது காணமுடியுமா? அவைகளெல்லாம் இருந்ததா இல்லையா? இவைக்கு நான் கேட்கிறேன். சாதி வேற்றுமை ஒழிய வேண்டும். சாதி வேற்றுமை தவறு என்று யார் யார் சொல்கிறார்களோ அவர்களைத் தலைவர்களாக ஏற்றுக் கொள்வதில் தமிழகத்திற்கு என்ன அவமானம் இருக்கிறது? அண்மையிலே மாண்புமிகு அமைச்சர் ஒருவர் பேசும்பொழுது, சாதி வேற்றுமைகளின் காரணமாக தமிழனுக்குக் கேடு வந்து விட்டது என்பதைக்கூட எண்ணிப்பார்க்காமல் கூறிய கருத்துக்கள் சில பத்திரிகையிலே வந்திருக்கின்றன.

எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்களைப் பற்றியும் பெரியகுளம் தேர்தல் நேரத்திலேயும் சரி, பிறகும் சரி பேசியிருக்கிறார்கள். பெரியகுளத்தில் உள்ள தேனி தொகுதியில் முத்துத்தேவன்பட்டியில் கருணாநிதி மகன் அழகிரி பெயரில் நூறு ஏக்கர் நிலம் வாங்கி இருப்பதாகவும், அதை நிரூபிக்கத் தயாராக இருப்பதாகவும், அப்படி நிரூபிக்கத் தவறினால் அந்த அமைச்சர் கூறியதை நான் இங்கே சொல்வது மரியாதைக் குறைவு என்று கருதுகிறேன். இப்படிப்பட்ட கருத்தை தேர்தல் பிரசாரத்தின்போதும் கூறினார்; அதற்குப் பின்னரும் பேசியிருக்கிறார். ஏற்கனவே சொல்லப்பட்ட செய்தி, பத்திரிகையிலே வந்த செய்தி, அதைத்தான் நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். 16-1-83-ஆம் தேதிய "மக்கள் குரல்" பத்திரிகையில், கருணாநிதியின் மகன் அழகிரி பெயரில் 100 ஏக்கர் நிலம் இன்ன ஊரில், தேனித் தொகுதியில் வாங்கி யிருப்பதாகச் சொல்லியிருக்கிறார் . அதை நிரூபிப்பதாகவும் சொல்லி இருக்கிறார். உங்கள் அமைச்சரவையின் நாணயத் திற்காக நான் கேட்கிறேன்.

(முற்பகல் 11—30)

ஒன்று நிரூபிக்கட்டும் அல்லது அப்படிப் பேசவில்லை என்று சொல்லட்டும். நிரூபித்தால் எந்தவிதமான ஒரு தண்டனையை இந்த அமைச்சரவை தருமானாலும்—சட்டமன்றப் பேரவை கூட அல்ல—நான் ஏற்றுக் கொள்ளத் தயார் நிரூபிக்காவிட்டால் முதலமைச்சர் என்ன பரிகாரம் தேடப் போகிறார். என்பது தெரியவேண்டும்.

எனவே இப்படிப்பட்ட முறையிலே பேசுவதிலேயெல்லாம் நமக்கிருக்கிற அக்கறை ஊராட்சி மன்றத் தேர்தல். நகராட்சி மன்றத் தேர்தல், மாநகராட்சிமன்றத் தேர்தல் ஆகியவற்றை நடத்துவதிலே இல்லை. மார்ச் போனால் ஜூலை வரும், ஜூலை போனால் டிசம்பர் வரும், டிசம்பர் போனால் மறுபடியும் ஏப்ரல் வரும். ஏப்ரல் 1-ந் தேதி தொடர்ந்து வரும். எனவே இப்படிப் பட்ட நிலைமைகளிலே தேர்தலைக்கூட நடத்த முன்வராத நிலைமையிலே தமிழ்நாட்டு மக்கள் தங்களுடைய குறைகளை தீர்த்துக் கொள்வது எப்படி இயலும்? எவ்வளவுபெரிய மகா வல்லமை பெற்ற மாநில அரசாங்கத்தாலும் மக்களுடைய குறைகளை முழுவதும் தீர்க்க முடியாது. அரசாங்க அதிகாரிகளை முழு அளவுக்கு நம்பி ஒப்படைக்க முடியாது. ஜனநாயகத்திலே சில குறைகள் என்றைக்கும் இருக்கத்தான் செய்யும். குறையில்லாத மனிதனைக் காணவே முடியாது. அந்தக் குறைகள் இருக்கக்கூடிய நிலையில் அந்தக் குறைகளைப் போக்கிக் கொள்ளக் கூட அந்த மக்கள் பயிற்சி பெறுவதற்கு ஊராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றியங்கள் அதேபோல கூட்டுறவுச் சங்கங்கள் இவைகளுக்கெல்லாம் நடத்தப்பட வேண்டிய தேர்தல்களை நடத்தாமல் இருப்பது முறைகேடாகும். சென்னை மாநகராட்சி மன்றத்திற்குக் கூட கடந்த 8 ஆண்டுகள் 10 ஆண்டுகளுக்கு மேலாக தேர்தல் நடைபெறாமல் கிடக்கிறதே, இவைகளைப்பற்றி இந்த அரசுக்குக் கவலை வேண்டாமா என்று கேட்டால் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டினோம், 81-ஆம் ஆண்டுசென்சஸ் என்ற அடிப்படையிலே வாக்காளர் பட்டியல் எடுத்து அதற்குப் பின்னால்தான் தேர்தல்களை நடத்த வேண்டும், அதற்கு முறை வைத்திருக்கிறோம் என்று சொல்கிறீர்களே தவிர, எப்போது தேர்தல் வரும் என்று சொல்லக்கூடிய நிலைமை உண்டா

எனக்காகவோ, திராவிட முன்னேற்றக் கழகத்திற்காகவோ இன்னும் சொல்லப் போனால் ஆசியனுக்காகவோ இதை நான் கேட்கவில்லை. மக்களுக்கு ஏற்படுகின்ற குறைகளைத் தீர்ப்பதற்கு வழிகாட்டுவதற்கு, நம்முடைய சமுதாயத்திற்கு ஒரு நீதி ஏற்படுவதற்கு' மகாத்மாகாந்தி சொன்ன கிராமராஜ்யம் வராவிட்டாலும் தந்தை பெரியார் அவர்கள் ஜனநாயகத்திலே உள்ள குறைகளைக்கூறி கண்டித்திருந்தாலும் கூட, அந்தப் பயிற்சி எப்படி கிடைக்கும். எப்படி மக்கள் தங்களுடைய குறைகளைப் போக்கிக் கொள்வார்கள், என்பதற்காகவே கேட்கிறேன்.



இன்னும்சொல்ல விரும்புகிறேன். இந்த அரசாங்கம் ரயில்வே கோச் பாக்டரி துவங்குவதற்கு இடம் கேட்ட போது அவர்கள் கேட்டு ஏறத்தாழ ஓராண்டு காலம் பதில் அவர்களுக்கு அனுப்பாததன் காரணமாக, ரயில்வே கோச் பாக்டரி தமிழ் நாட்டுக்கு வருவது நின்று போய்விட்டது என்பதை அரசாங்கம் ஒப்புக் கொள்ளத் தயாரா, அல்லவா? ஏன் அனுப்பக்கூடாது. 2 மாதம் 3 மாத காலத்திற்குள் ஏன் அனுப்பியிருக்கக் கூடாது? சாகித்திய அகாடமிக்கு கட்டிடம் கட்டுவதற்கு கேட்டு இன்னும் இடம் கொடுக்கவில்லை என்று ஒரு கருத்திருக்கிறது. அதற்குச் செலவிடும் தொகை முக்கியம் அல்ல. சாகித்திய அகாடமி என்னும் பெயரை நான் விரும்பாவிட்டாலும் கூட அதன் பேரால் ஒரு காரியம் நடை பெறுவதாக இருந்தால் அதற்கு வழி செய்ய வேண்டாமா?

மின்வாரியத்தைப் பற்றி, மின்வாரிய மானியம் வரும்போது பேசலாம் என்று சொன்னாலுங் கூட, ஒரு அடிப்படையான உண்மையை நான் சொல்ல விரும்புகிறேன். நீர்த்தேக்கத்திலே இருந்து மின் உற்பத்தி செய்வது என்பது இயலாது என்று ஒரு சூழ்நிலை நம் நாட்டிலே தொடர்ந்து மாறி மாறி வந்துகொண் டிருக்கிறது, அது பருவம் தவறி விடும். ஆண்டு தோறும் மாறிவந்து கொண்டேஇருக்கும். ஆகவே அனல் மின் நிலையம் தான் மிக முக்கியமான தேவை. அனல் மின் நிலையத்திற்கு சிங்கரேணியிலிருந்து நிலக்கரிவந்தால்தான் அது வெற்றிகரமாக நடைபெறும். ஆனால் கல்பாக்கம் அணு மின் நிலையம் மத்திய அரசாங்கத்தாலே துவங்கப்பட்டு அதற்காக எவ்வளவோ செலவழிக்கப்பட்டாலும்கூட, அதைத் துரிதப்படுத்துவதற்கு, செயற்படுவதை வலியுறுத்துவதற்கு நாம் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டாமா? ஓராண்டுக்கு முன்னர் நான் கல்பாக்கம் சென்றிருந்தபோது, அங்கே உள்ள நிபுணர்களிலே சிலரிடத்திலே உரையாடி அவர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்கிற நிலையிலே கேட்டேன். அதற்கு அவர்கள் 'ஹெவி வாட்டர்' கிடைப்பதிலே ஏற்படுகிற தாமதத்திலே தான் நாங்கள் இன்னும் செயல்பட முடியவில்லை. வெளிநாட்டிலே இருந்து 'ஹெவி வாட்டர்' வரவேண்டும் இந்தியாவிலேயே உற்பத்தியாவது குறைவாக இருக்கிறது. ராஜஸ்தானிலே இருந்து போதுமான அளவு வரமுடியவில்லை. அது வந்தால்தான் தொடங்க முடியும் என்று அவர்கள் சொன்னார்கள். அதற்காக இந்த அரசாங்கம் ஏதாவது சில முயற்சிகளை எடுத்துக் கொண்டுள்ளதா? கல்பாக்கம் வந்திருக்குமானால் 650 மெ.வா. இல்லாவிட்டாலும் 500 அல்லது 450 மெக வாட் மின்சாரம் நமக்குக்கிடைக்காதா?

அதைப்போல நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டப்படுகிற நிலைமை ஏற்பட்டு, அதிலே கூட இளைய பெருமாள் எடுத்துச் சொன்னதைப் போல அங்கே குடியிருந்த

மக்களுக்குச் செய்ய வேண்டிய நியாயமான உரிமைகளைக் கூட கொடுக்காமல், கடமைகளைச்செய்யத் தவறிய ஒரு நிலைமையிலே குழப்பம் இருந்தாலும் கூட பக்கத்திலே மூன்றாவது மெயின்....

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கல்பாக்கம் அணு மின் நிலையத்தைப் பொறுத்த வரையில் நம்முடைய அமைச்சரவை சார்பாகக் கடிதங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு முதல்வர் அவர்களும் கடிதம் எழுதியிருக்கிறார்கள். என் நினைவு சரியாக இருக்குமானால் இரண்டு முறை பாரதப் பிரதமரை நேரடியாக சந்தித்தபோதும் வற்புறுத்தி விரைவுபடுத்த வேண்டும் என்று கேட்டார்கள். அவைகளை எல்லாம் பத்திரிகைகளிலே நாங்கள் வேண்டுமானால் விளம்பரப்படுத்திக் கொள்ளாமல் விடுத்தது ஒரு குறையாக இருக்கலாமே தவிர, அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்பது சரியல்ல.

திரு க. அன்பழகன்: தலைவர் அவர்களே, மன்னித்துக்கொள்ள வேண்டும். அமைச்சரை நான் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன், பல்லாண்டு வாழ்க. கடிதம் எழுதினீர்கள், எல்லாம் செய்தீர்கள். பத்திரிகைகளிலே விளம்பரம் செய்துகொள்ளாதவர்களா நீங்கள்? நான் கேட்பது வேறு, தேவையற்ற காரியங்களுக்கு எல்லாம் விளம்பரம் செய்கிறீர்கள்....

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அது தெரியவில்லை என்பதற்காகச் சொன்னேனே தவிர, நீங்கள் சொன்னது தவறு என்று சொல்ல வரவில்லை.

திரு. க. அன்பழகன்: நாட்டு மக்களுக்குத் தெரியாது. நான் விரும்புவது எந்தப் பிரச்னையை விளம்பரப்படுத்தினால் லாபம். தமிழ்நாட்டுக்கு என்ன பாதுகாப்பு அதை நீங்கள் விளம்பரப்படுத்தி இருக்க வேண்டும். விளம்பரக் கட்டணம் கொடுத்தாவது கல்பாக்கத்திற்காக டெல்லி சென்று சந்தித்த அந்தச் செய்தி பத்திரிகையிலே வந்திருந்தால் திரும்பத் திரும்ப 2, 3 முறை கேட்டீர்கள் என்றால், இயற்கையிலேயே அந்தச் செய்தி பத்திரிகையிலே வருகிறது, கல்பாக்கத்தை நாம் கவனிக்கவில்லை என்று, மத்திய அரசு உணராதா என்று பிரதமர் கூட அந்த பத்திரிக்கைச் செய்தியைப் பார்க்கிற போது, அது வெளியிலே வருகிறதே, நாம் கவனிக்கவில்லையே என்று வருமே, பொதுமக்கள் வேதனைப்படுவார்களே என்று செயல்பட்டிருப்பார்களே!

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தாங்களே முன்பு தெரிவித்தீர்கள். அதைப்போல கல்பாக்கம் அணு மின் நிலையம் உற்பத்தி செய்வதற்கு காலதாமதம், அது இந்திய அரசின் கையிலே கூட இல்லை. உலக சம்பந்தப்பட்ட ஒரு பிரச்னையாக இருக்கிறது. அதனால்தான், அவர்களும் இதிலே நமக்கு உதவிசெய்யாமல் இருக்கிறார்கள். இதை அவர்களை நேரில் சந்தித்தபோது





எடுத்துச் சொன்னார்கள். ஹெவிவாட்டர் நம்முடைய நாட்டிலே போதுமான அளவு உற்பத்தியில்லை. வெளியிலேயிருந்துதான் கொண்டுவர வேண்டும். கனடா நாட்டிலே அவர்கள் ஏற்கனவே தருவதாக இருந்ததை, தரமாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள். ஏன் என்றால், ஏற்கனவே ஒரு அணுகுண்டு 1976-லே வெடித்ததன் விளைவு. ஆகையினாலே அந்தக் காலதாமதம் என்று சொல்கிற போது அதைப் போய் பத்திரிகையிலே விளம்பரப்படுத்தச் சொல்லி, பிறகு அதற்கு விளக்கம் சொல்லிக்கொண்டிருக்க வேண்டாம் என்றுதான் விடப்பட்டது.

திரு. க. அன்பழகன்: ஆகவே, கல்பாக்கத்தை பொறுத்தவரையில் மாற்றாந்தாய் மனப்பான்மை இல்லைஎன்று அமைச்சர் அவர்கள் ஒப்புக் கொண்டதற்காக என்னுடைய பாராட்டு. மாற்றாந்தாய் மனப்பாண்மை என்பது உலகத்திலே இயற்கையாக உள்ளது. ஆனால் நீங்கள் எடுத்துக்கொள்கிற முயற்சியினுடைய, பிரஸ்ஸர், வலியுறுத்தல் எந்த வகையிலே இருக்கிறது என்பதைப் பொறுததே பலன் கிடைக்கும். இன்றைக்கு இந்தியா முழுவதும் மக்கள் அன்றாட வாழ்க்கைக்கே போராடுகிறார்கள். தொழிலுக்குப் போராடுகிறார்கள். வேலைக்குப் போராடுகிறார்கள், ஒருவேலை காலியானால்....

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தாங்கள் வேறு எதற்காகவோ பயன்படுத்துகிறீர்கள். இதிலிருந்து நாங்கள் மாற்றாந்தாய் மனப்பான்மை என்று சொல்வது உண்மையிலே அப்படி இருப்பதால்தான், அப்படிச் சொல்கிறோமே தவிர, மற்றவற்றை அல்ல என்பதைத்தான் இந்தச் சம்பவம் எடுத்துக்காட்டுகிறது.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, நான் தெளிவாகத்தான் சொன்னேன். இந்தக் கருத்தில் மாற்றாந்தாய்மனப்பான்மை இல்லை என்றுதான் சொன்னேன். மாற்றாந்தாயாக இருப்பது ஒன்றும் உலகத்தில் ஆச்சரியம் இல்லை. பல பேர்களுக்கு மாற்றாந்தாய்தான் கிடைப்பார்கள். சொந்தத்தாய் இல்லாதவர்கள் என்ன செய்யமுடியும். இந்த நாடு ஒரு தனி நாடு அல்ல. அறிஞர் அண்ணா அவர்களே தனி நாடு கோரிக்கையைக் கைவிட்டுவிட்டார்கள். ஆனால் தனிநாடு கோரிக்கையை கைவிட்டார்களே தவிர, மாநில சுயாட்சி என்று வரம்பு கட்டி அறிஞர் அண்ணா அவர்கள் வாதாடினார்கள். தொடர்ந்துஅறிஞர் அண்ணா அவர்கள் இருந்திருப்பார்களேயானால் மாநில சுயாட்சிக்கு வலுவான குரல் கொடுத்திருக்க முடியும். நம்முடைய நியாயமான பிரச்னைகள் ஆயிரம் இருக்கும். அகில இந்திய சூழ்நிலையை உணர்ந்து செயல்படுவதற்கு, மத்திய அரசாங்கத்திற்கு எது இயல்வதோ எது நன்மையோ அது அவர்களுக்கு தெரியவில்லை. மத்திய அரசாங்கம் எல்லாப் பொறுப்புகளையும் தலையிலே சுமந்திருக்கிறகாரணத்தாலேதான்

மத்திய அரசாங்கத்தின் பொறுப்பிலும் குறை ஏற்பட்டு மாநிலத்திற்கும் குறை ஏற்படுகிறது. அதனால் தான் நம்முடைய நண்பர் திரு. உமாநாத் அவர்கள் கூட மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று ஒரு தீர்மானம் கொண்டு வந்து அந்தத் தீர்மானம் பற்றிக்கூட இங்கே விவாதிக்கப்படுகிறது. என்றாலும் அப்படியெல்லாம் ஒருமித்துக் குரல் கொடுக்கிற அதே நேரத்தில் பிரச்னையை வலியுறுத்துகிற அதே நேரத்தில், சரியான அப்ரோச் மெத்தட் மூலம் நம்முடைய அதிகாரிகளோ அல்லது நமக்காக டில்லியிலே இருக்கிற அமைச்சர் நிலையிலே இருக்கிறவர்களோ திரும்பத் திரும்ப வாதாடுவதன் மூலமாகச் சில பிரச்னைகளை தம்முடைய மக்களின் கஷ்டத்தைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்திற்கு வெற்றியா, எதிர்கட்சிக்கு வெற்றியா, என்பது அல்ல அதற்காக அல்ல. மக்களுடைய துன்பத்தை நீக்குவதற்காகத்தான் சொல்கிறேன்.

அடுத்து, நெய்வேலியைப் பொறுத்தவரையில், 3-வது லிக்னைட் சுரங்கம் வருமானால், 1,500 மெகாவாட் மேலும் ஒரு சுரங்கம் வருமானால், 1,500 மெகாவாட் மின் உற்பத்தி செய்யமுடியும் என்றும், அது பரிசோதனைக் கட்டத்தில் இருப்பதாகவும் தெரிவிக்கிறார்கள். அனைத்துக் கட்சிகளின் சார்பாக நீங்கள் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்புவதாக இருந்தால் நாங்கள்அதை வரவேற்கிறோம். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிகிற கட்டத்திலேகூட 570 மெகாவாட் மின்சாரம் பற்றாக் குறை இருக்கும். உச்சகட்ட தேவையை நிறைவு செய்யும் நிலையை எப்போதும் எட்டமுடியாது. அதற்கே 13 சதவிகிதம் குறையும் என்று சொல்கிற போது, நெய்வேலியில் 3-வது மின்சார உற்பத்தி நிலையம் ஏற்படுவதற்கு ஏற்ற வகையில் மூன்றாவது சுரங்கம் வெட்டுவதற்கான அந்த முதலீட்டைப் பெறுவதற்காக மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தத் திராவிட முன்னேற்றக் கழகம் ஒத்துழைக்கத் தயார். இப்போது சொன்னால்தான் இன்னும் மூன்று ஆண்டுகாலத்திலாவது, அடுத்த திட்டத்திலாவது அது இடம் பெறும். இன்னும் சொல்லப் போனால் சிங்கரேணியிலிருந்து நிலக்கரி கொண்டுவர முடியவில்லை. கப்பல் வாங்குவதற்கு கலைஞர் கருணாநிதி தடையாக வந்து விட்டார், அதனால் வாங்கவில்லை என்று எல்லாம் கூறுகிறீர்கள். இன்னொரு பக்கம் நம்முடைய நண்பர் ஹாஜா ஷெரிப் அவர்கள் புதிதாக வாங்குகிற கப்பலிலே வரக்கூடிய வருமானத்தைவிட, மிச்சத்தைவிட, வாடகைக் கப்பலிலேவருவது அதிக லாபம் என்று அவர் சொல்கிறார், எதற்கும் உள்நோக்கம் கற்பிக்க வேண்டாம், அப்படிப்பட்ட சில முயற்சிகள் செய்து தூத்துக்குடியிலே 530 மெகாவாட் உற்பத்தி செய்யவேண்டிய தூத்துக்குடி அனல் மின் நிலையத்திலே ஏறத்தாழ, 250 மெகாவாட்தான் உற்பத்தி ஆகிறது. இது மின் உற்பத்தி தொழில் நுணுக்கத்தினாலே ஏற்பட்ட குறைபாடு, அல்லது இயந்திரத்திலே உள்ள குறைபாடு. என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி உடனடியாக நிபுணர் குழு மூலம் ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொண்டு நமக்குத் தெரிவிக்க வேண்டும்.





நாடாளுமன்றத்திலே உள்ள ஒரு உறுப்பினர் மத்திய அமைச்சரைப் பார்த்து தூத்துக்குடி அனல் மின் நிலையம் பற்றி அக்கறை இருக்கிற காரணத்தாலே அவர்கள் கேட்டபோது, அமைச்சர், நிபுணர் குழு போடப்படும் என்றார். மாநில அரசு இதிலே அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும்.

(முற்பகல் 11-40)

மின் உற்பத்திக்கு வழி செய்ய ஒரு ஆலோசனையை நான் தெரிவிக்க விரும்புகிறேன். நீங்கள் ஆலோசித்துப் பாருங்கள். பயன்பட்டால் ஏற்றுக்கொள்ளுங்கள். சிங்கரேணியில் இருந்து இங்கே எண்ணூருக்கு நிலக்கரி கொண்டு வந்து பயன் படுத்துவதைவிட, தூத்துக்குடிக்கு நிலக்கரி வரவழைப்பதைவிட— வெளிநாட்டிற்குச் சென்று நம்முடைய முதலாளிகள் தொழில் தொடங்குகிறார்கள்—வெளிநாட்டில் இருந்து முதலாளிகள் இங்கே வந்து தொழில் தொடங்குகிறார்கள் என்னும் நிலைமை இருக்கிறபோது—தொலைவான இடத்தில் இருந்து நிலக்கரியை இங்கே கொண்டுவந்து பயன்படுத்துவதைவிட, சிங்கரேணி நிலக்கரி சுரங்கத்திற்குப் பக்கத்திலேயே உள்ள நிலத்தில் விளைச்சல் நிலமாக இருக்காது, ஆற்றுப் படுகையாக இருக்காது தமிழக அரசு ஒரு 500 ஏக்கர் பெற்று, அங்கேயே ஒரு மின்சார நிலையம் ஏற்படுத்தி ஒரு ஆயிரம் மெகாவாட், 1,500 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யலாம். கிருஷ்ணா ஆற்று நீர் வாய்க்கால் வழியாகவோ குழாய் வழியாகவோ சென்னைக்கு வருவதை விட மிகத்துரிதமாக, உடனடியாக மின்சாரத்தை கொண்டு வரமுடியும். ஆகவே அதற்காக ஒரு திட்டம் வகுத்துச் செயல்படுத்த இந்த அரசாங்கம் முன்வரவேண்டும். ஏனென்றால், தமிழ்நாடு இன்னும் 15 ஆண்டு காலத்திற்கு மின்சாரப் பற்றாக் குறையில் இருந்து மீண்டு வெளிவரும் என்று என்னால் நம்ப முடியவில்லை.

நெய்வேலி 3-வது நிலக்கரிச் சுரங்கத் திட்டத்தையொட்டி மின்உற்பத்தித் திட்டத்துடன், மற்றும் நீங்கள் இந்த அறிவிக்கையில் தெரிவித்துள்ள வேறு சில இடங்களில் 1000 மெகாவாட் மின் உற்பத்தி செய்யக்கூடிய நீர்மின்விசைத் திட்டம் ஆகியவை இருந்தாலும் இதையும் ஆலோசித்துப் பாருங்கள். தயவு செய்து நீர்மின்விசைத் திட்டத்தை மட்டுமே நம்பித் தமிழ்நாட்டு மக்களின் எதிர்காலத்தை பல்வேறு வகையிலும் பாதிக்க விட்டுவிடக் கூடாது. நான் ஒரு நிபுணரிடத்திலே பேசும் போது அவர் கூறியதுதான் நீங்கள் நிலக்கரிச் சுரங்கம் இருக்கிற இடத்திலேயே மின்சாரம் உற்பத்தி செய்து, அதைக் கொண்டு வரலாம் என்பதாகும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்தக் கருத்தும் ஏற்கனவே பரிசீலிக்கப்பட்டு இருக்கிற கருத்துதான். சிங்கரேணி அல்லது ராமகுண்டத்தில் ஒரு மின்உற்பத்தி நிலையத்தை ஏற்படுத்தலாம் என்பது ஏற்கனவே பரிசீலிக்கப்பட்ட கருத்து

தான். அதற்கு மாறாக. மத்திய அரசே சூப்பர் தெர்மல் ஸ்டேஷன் என்ற அடிப்படையில் அங்கே ஒரு மின்நிலையத்தைத் போடுகிறார்கள். அந்த நிலக்கரிச் சுரங்கத்திற்கு அருகிலேயே 1500 மெகாவாட் 2000 மெகாவாட் மின்உற்பத்தி செய்யும் நிலையத்தைஅமைக்கஇருக்கிறார்கள். அவர்கள் உற்பத்திசெய்கிற அந்த மின்சாரத்தை, அந்தந்த பிராந்தியத்திலே, அந்தந்த வட்டாரத்திலே உள்ள நான்கு மாநிலங்களுக்கும் தருவது என்ற முறையிலே அவர்களே முதல் போட்டு அதை ஆரம்பிக்கிறார்கள். ஆனால் அவர்கள் பிரித்துக் கொடுப்பதிலேதான் ஒவ்வொரு மாநிலத்தின் பற்றாக்குறையைக் கணக்கெடுப்பதற்கு பதிலாக, திட்டக் கமிஷன் உதவி தருகிற அந்த அடிப்படையில் மின்சாரம் தருவதாகச் சொல்கிறார்கள். அப்படிச் செய்கிறபோது நமக்குக் குறைகிறது. அதையும் குறித்து நாம் திரும்பத் திரும்ப மத்திய அரசுக்கு எழுதி வருகிறோம். அந்த அடிப்படையில்தான் மத்திய அரசாங்கம் அந்தக் காரியத்தைச் செய்கிறார்கள்.

திரு. க. அன்பழகன்: மத்திய சர்க்காரே செய்தால்கூட தமிழ்நாடு தனியாக ஒரு நிலையம் ஏற்படுத்த ஒரு முறை வாதாடிப் பார்க்கலாம். தமிழ்நாட்டில் உள்ள மின்சாரப் பற்றாக்குறை அவ்வளவு எளிதில் தீர்ந்து விடக்கூடிய ஒன்று என்று எனக்குத் தெரியவில்லை. கல்பாக்கம் இன்னும் வராத நிலையில் மேலும் அணுசக்தி மின்நிலையங்களை அமைக்க வேண்டுமென்று சொன்னால், அது விரைவில் பலனைத் தரும் என்று எனக்குத் தோன்றவில்லை.

அடுத்து தமிழ்நாட்டில் உள்ள பெரிய தொழிற்சாலைகள் பற்றி நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் பேசினார்கள். அவர்கள் குறிப்பிட்டது போல் முக்கியமான சில பெரிய தொழிற்சாலைகளை பம்பாயில உள்ள ஐ.டி.பி.ஐ. மூலம் அல்லது எல்.ஐ.சி. மூலம் அவர்கள் கொடுத்த கடன் அடிப்படையில், அவற்றின் பங்குகளை இந்தியன் டுபாக்கோ நிறுவனம் வாங்கப் போகிறது என்று சொன்னார்கள். இப்படி அந்த ஒரு நிறுவனம் மட்டுமல்ல, பெரிய முதலாளிகள் பலர் இப்படிப்பட்ட முயற்சியில் ஈடுபடுவர். அவர்களிடத்திலே ஒப்படைக்கும் நிலைமை—சங்ககிரி சிமென்ட் ஆலைக்கோ, மீனாட்சி மில்லுக்கோ, அல்லது சேஷசாயி காகித ஆலைக்கோ—ஏற்படுமானால், அது எந்த நிலைமைக்கு நம்மைக் கொண்டுபோகும் என்பதை இந்த அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் வலியுறுத்திக் கேட்க விரும்புகிறேன். இப்போது சிமென்ட் பற்றாக்குறை இருக்கிறது, வேறு பல பற்றாக்குறைகள் இருக்கின்றன. இந்த ஆளுநர் உரையில் கூட அது எல்லாம் வந்து இருக்கிறது? அப்படிப்பட்ட ஆலைகளை அரசாங்கமே மேற்கொள்ள ஏன் முன்வரக்கூடாது, ஏன் அவற்றை தேசியமயமாக்கக்கூடாது. தனிப்பட்ட முதலாளி அல்லது வேறு எங்கிருந்தோ வருகிற முதலாளி இதனைக் கைப்பற்றுவதைவிட அரசாங்கம் அந்தத்



தொழில்களை எடுத்துக்கொண்டால், நஷ்டம் வந்தாலும் கூட, அது நம்முடைய தொழிலாக வைத்துக்கொண்டால், அது நல்ல பயனை நமக்குத் தரும். அந்த ஒரு முயற்சியை அரசாங்கம் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தேசியமயமாக்குவது முடியாது என்கிற நிலைமையேற்படுகிற போது, தனியாரை தொழில் செய்ய அனுமதிப்பது என்பது தேவையான ஒரு கொள்கை. தனியாரிடத்தில் இருந்து வேறு யாரோ மிகப் பெரிய முதலாளிகள்—இன்னும் சொல்லப்போனால் கொள்ளை லாபத்தைக் கோடிக்கணக்கிலே சம்பாதிக்கக் கூடியவர்கள்—அரசாங்கத்தையே சில நேரங்களிலே அவசரத்திலே விலைக்கு வாங்கக் கூடியவர்கள்—அப்படிப்பட்டவர்களிடத்தில் அது போய் விடாமல்--அரசாங்கம் என்கிறபோது—நான் நம்முடைய அரசாங்கத்தை மட்டுமே சொல்லவில்லை, பொதுப்படையாகத்தான் சொல்கிறேன்--அத்தகைய செல்வாக்கு உடையவர்களிடத்தில் போய்விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அப்படிப் போய் விடுவது இந்தியாவிற்கு நல்லதல்ல, எதிர்காலப் பொருளாதாரத்திற்கு நல்லதல்ல. எனவே அப்படி வேறு யாரிடத்திலாவது விற்பதாக இருந்தால், அதற்கு ஒரு தடை உத்தரவைப் போட அரசாங்கம் முன்வரவேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, சேஷசாயி சிமென்ட் ஆலையில் உள்ள ஐ.டி.பி.ஐ. ஷேர்ஸ் வெளியே விற்பதாக இருந்தால் தமிழ்நாடு அரசுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும். நாங்கள் வாங்கிக்கொள்கிறோம் என்று ஐ.டி.பி.ஐ.க்கு பல தடவை எழுதினோம்.

திரு. க. அன்பழகன்: எழுதினால் போதாது. கொஞ்சம் வலியுறுத்தி, போராடிப் பெற வேண்டும். தமிழ்நாட்டில் இருக்கிற சிமின்ட் தொழிற்சாலையை யாரோ ஒருவன் வந்து வாங்குகிறான். நாம் கடிதம் எழுதினால் அவன் சடுதாசிக்குக் கூட விலைகொடுத்துவிட்டுப்போய்விடுவான்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: கொடுக்கிற அதிகாரம் நம்மிடம் இல்லை. வேறு நபர்களுக்கு விற்கக்கூடாது என்று நாம் மறுப்பு தெரிவிக்கிறோம். ஷெயரை விற்கும்போது நமக்குத்தான் தரவேண்டுமென்று சொல்கிறோம். தமிழக அரசு வாங்கும் என்று எழுதியிருந்தோம். ஆனால் முடிவு செய்கிறவர்கள் அவர்கள்.

திரு. க. அன்பழகன்: நான் சொல்கிறேன் உரிமையின் அடிப்படையிலே இதிலே தீவிரமாக அணுகுங்கள். நாங்கள் ஆதரிக்கத் தயார். குடிசை கட்டுவதற்கு, சாதாரண வீடு கட்டுவதற்கு 10 மூட்டை சிமின்ட் வாங்க வேண்டுமென்றால் அவன் நடுத்தெருவில் நிற்கிறான். உடைந்த சுவர் கட்ட முடியாமல், அறை கட்ட முடியாமல் கஷ்டப்படுகிறான். 9 மாடி, 10 மாடி கட்டடம் கட்டுவதற்கு தாராளமாக சிமின்ட்

கிடைக்கிறது. மாநகராட்சியின் ஒப்புதல் பெறாமல், அல்லது மெட்ரோபோலிட்டன் அதாரிட்டியின் அங்கீகாரம் பெறாமல் பல மாடி வீடுகளைக் கட்டுகிறார்கள். 10 மாடி கட்டடத்தை 40 (flats) பிளாட்டுகளாக கட்டி விடுகிறார்கள். அவர்களால் சுவரேஜ் புதை சாக்கடை முழுமையாக அடைக்கப்படுகிறது. மாநகராட்சி மன்றத் தண்ணீரை பயன்படுத்துகிறார்கள். வசதியோடு வாழ்கிறார்கள். ஆனால் பரம்பரை பரம்பரையாக இந்த மண்ணிலே வாழ்ந்தவன் ஒரு வீட்டிற்கும் வழியில்லாமல் ஓட்டாண்டியாகிறான் எவன் எவனோ எங்கெங்கோ இருந்து இங்கு வந்து அப்படிப்பட்ட வாழ்வு பெறுகின்றனர். இந்தியாவில் உள்ள மாநிலம்தான் என்றாலும் காஷ்மீரில் அப்படிச் செய்ய முடியுமா? அசாமில் குடியேற தயாரா? ஆகவே, இன்றைக்குத் தமிழ்நாட்டில் சென்னையில் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. இதை சட்டத்தின் விதிகள் மூலம்தான் தடுத்து நிறுத்த வேண்டும். அதைத் தடுப்பதாக இருந்தால், மத்திய அரசு ஒப்ப மறுக்குமானால் எதிர்த்து வாதாடித்தான் பெறவேண்டும்.

இன்னொன்றையும் நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இந்த அரசு பொதுமக்களுக்கு மனநிறைவு ஏற்படுத்தும் நோக்கத்தோடு வீட்டுக்கு ஒருவனுக்கு வேலை என்று இந்த அறிக்கையிலே தெரிவித்திருக்கிறது. இதற்கு முன்னர் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் கைத்தறித் துறை அமைச்சர் சொன்னார். கைத்தறி நெசவாளர் குடும்பத்தில் வீட்டுக்கு ஒரு பிள்ளைக்கு வேறு வேலை தேடித்தரப்படும் என்று சொன்னார்கள். நான் கேட்பது, வீட்டுக்கு ஒரு பிள்ளை அல்ல; யாராவது ஒரு பிள்ளைக்கு வேலைத்தேடி தந்தீர்களா என்பதுதான்.

தமிழ்நாட்டிலே வீட்டுக்கு ஒருவனுக்கு வேலைத்தேடி தருவோம் என்பது எப்படி? ''வறுமையை விரட்டுவோம். வளத்தைப் பெருக்குவோம்'' என்கிற அதே முறையிலேயா? அது கோஷத்துக்கு நன்றாக இருக்கும். நடைமுறை என்ன? 13 இலட்சம் பேர் அலுவல் தேடித்தரும் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளனர். படித்த இளைஞர்கள் 18 வயது முதல் 26, 27 வயதுவரையிலுள்ளவர்கள் ஏதேனும் ஒரு வேலைக்காகப் பதிவு செய்திருப்பவர்கள் 13 இலட்சம் பேர்.

நண்பர் நாஞ்சில் மனோகரன் அவர்கள் நிதி அமைச்சராக இருந்தபோது ஒரு கருத்தைச் சொன்னார்கள். நாங்கள் 40,000 சிறு தொழில்களைத் தொடங்குவோம்; இரண்டு இலட்சம் பேர்களுக்கு வேலை கொடுப்போம் என்று சொன்னார்கள். அது இந்த அரசின் சார்பில் சொல்லப்பட்டது, தனிப்பட்ட முறையில் அல்ல. நான் அப்போதே சொன்னேன். 40,000 தொழில்கள் தொடங்கப்படுமா? இரண்டு இலட்சம் பேர்களுக்கு உண்மையிலேயே வேலை கொடுக்கப்போகிறீர்களா, என்று கேட்டேன். தொடங்கப்பட்ட தொழில்களோ 1800 வேலை



கொடுக்கப்பட்டது 10,000 பேர்களுக்கு; அவ்வளவுதான். இந்த 10,000 பேர்களும் வேலை செய்துகொண்டிருக்கிறார்களா என்றால், தொழில் நடந்து கொண்டிருக்கிறதா என்றால் அதுவும் உறுதியாகக் கூறமுடியாது.

நமது நாட்டின் பின்தங்கிய நிலையில், பொருளாதாரத்தில் பிற்பட்ட நிலையில், இருந்து கொண்டுள்ளபோது வீட்டுக்கு ஒருவனுக்கு வேலை கொடுப்போம் என்றால் அது முடியக் கூடியதா? நானே கூட, எம்.ஜி.ஆராக இருந்தால் என்ன பேசுவேன் தெரியுமா? வீட்டுக்கு ஒருவன் கூட வேலை செய்யாமல் எப்படி இருக்க முடியும்? ஒருவன் கூட வேலை செய்யவில்லை என்றால் வீடு இருக்குமா? வீட்டுக்கு ஒருவன் வேலை செய்யவில்லை என்றால் எப்படி 4 பேர் உள்ள குடும்பம் சாப்பிட முடியும்? எனவே ஒருவருக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது என்றுதான் கூறுவேன். 5 பேர் கொண்டது ஒரு குடும்பம் என்றால் ஒரு கோடி வீடு குடும்பம் இருக்கும். வீட்டுக்கு ஒருவனுக்கு வேலை என்றால் ஒரு கோடி பேர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும். இன்றையநிலையில் கொடுக்க முடியுமா உங்களால்? நீங்களல்ல, யாரால் கொடுக்க முடியும்?

வேலை தரப்படும் என்றால் புதிய வேலை தரப்பட வேண்டும். ஒரு மணி நேரம் வேலை செய்கிறவன், இரண்டு மணி நேரம் வேலை செய்கிறவன், பார்ட் டைம் ஒர்க்கர், ஆடி மாதம் வேலை செய்தால் ஆவணி மாதத்தில் வேலை இல்லாதவன்—இவர்களை எல்லாம் உங்கள்கணக்கிலே வேலையில் உள்ளவராக எடுத்துக்கொள்ளாதீர்கள் வேலை தரப்படும் என்றால் முழுநேர வேலையாக, தொடர்ந்த வேலையாக இருக்கவேண்டும்.

முன்னாலே ஒருமுறை சொன்னீர்கள். 22,48,000 'மான் பவ்வர்' நாட்களை கணக்கிட்டுவிட்டு, 22,48,000 பேர்களுக்கு வேலை கொடுத்தோம் என்று சொன்னீர்களே, அப்படி இருக்கக்கூடாது. ஆக வீட்டுக்கு ஒருவனுக்கு வேலை என்பது ஏமாற்று வேலை. முதலமைச்சருக்கு இது நோக்கமல்ல. அவருக்கு இதைச் சிலர் சொன்னார்கள், நல்ல காரியம், நடக்கட்டும் என்றார். இதெல்லாம் அவருக்குத் தெரியாது. நாவலருக்குத் தெரியும். வீட்டுக்கு ஒருவனுக்கு வேலை நாவலராலோ அல்லது வேறு ஒருவர் நிதியமைச்சராக வந்தாலும் அவராலோ முடியாது. தரமுடியும் என்று நான் சொல்லத் தயாராக இல்லை. முடியும் என்று நீங்கள் சொல்லி, நீங்கள் ஏன் செய்யவில்லை என்று நாங்கள் கேட்க, உங்களால் முடியாது என்று நீங்கள் சொன்னீர்கள், அதனால் முடியவில்லை என்று பதில் சொல்லும் நிலை ஏன்?

வீட்டுக்கு ஒருவனுக்கு வேலை தரக்கூடிய அளவுக்கு நம்மிடம் தொழில் வளம் இருக்கிறதா? தொழிற்சாலைகள் ஏற்படுத்த முடியுமா? தொழில் வளரும் சூழ்நிலைகள் சரியாக இல்லை. மத்திய அரசை நீங்கள் வலியுறுத்திக் கேளுங்கள், நாங்கள் அதற்கு ஆதரவு தருகிறோம்' தகுந்த முறையில் தமிழ்நாட்டில்

(முற்பகல் 11-50)

தொழில் வளத்தைப் பெருக்க, வேலை வாய்ப்பைப் பெருக்க என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்யுங்கள், நாங்கள் ஆதரிக்கிறோம்.

எதிர்காலத்திலே தமிழ்நாட்டில் விவசாயத்தை மட்டும் நம்பி நாம் வாழமுடியாது. காவேரி நீர் குறையத்தான் செய்யும். பருவமழை கால நிலையை ஒட்டி குறையும். இதிலும் ஒரு உண்மையைச் சொல்கிறேன். பருவமழை குறைய பல்வேறு இயற்கைக் காரணங்கள் இருந்தாலும் காட்டுவளம் தமிழ்நாட்டில் அழிக்கப்பட்டு வருவது ஒரு காரணமாகும். காட்டு வளம், எப்படியெல்லாம் அழிக்கப்படுகிறது? காண்டிராக்ட் எடுப்பவர்கள் ஏறத்தாழ 10 லட்சம் ரூபாய், 25 லட்சம் ரூபாய் என்று முறைப்படி காண்டிராக்ட் எடுத்தாலும் கூட, 25 லட்சம் ரூபாய்க்கு காண்டிராக்ட் எடுத்தவர்கள் 50 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள மரங்களை வெட்டுகிறார்கள். ஏன் வெட்டுகிறார்கள், எப்படி வெட்டுகிறார்கள்? யாருடைய தயவிலே வெட்டுகிறார்கள்? அதுகூட எனக்கு முக்கியம் இல்லை. யாரோ பணம் சம்பாதிக்கிறார்கள். அது பற்றி எனக்கு ஒன்றும் கவலை இல்லை. பணம் இருக்கிறவர்கள் எந்நாளும் மட்டும் வாழப்போகிறார்களா? ஆகவே அது அல்ல. ஆனால் அப்படி மரங்களை வெட்டுகிற காரணத்தால், காடுகள் குறைந்து போகிற காரணத்தால், மழை வளம் தானாகவே குறைய நேரிடுகிறது. அப்புறம் நிலத்தடி நீரை முழு அளவுக்கு வற்றி போகச் செய்யக்கூடிய ஒரு சூழ்நிலைக்கு நாம் நேரிடையாக ஆளாகிறோம்—பல இடங்களில் ஈக்குவலிப்ட்ஸ் மரங்கள் வளர்ப்பதன் விளைவாக. அது காடு வளர்ச்சி என்று எண்ணிக் கொண்டோ, அல்லது மரவளர்ச்சி என்று எண்ணிக் கொண்டோ ஈக்குவலிப்ட்ஸ் மரங்கள் பல இடங்களில் வளர்க்கப்படுவதன் விளைவாக சாதாரணமான 4 மரங்கள் உறிஞ்சி இழுக்கக்கூடிய தண்ணீரை, இந்த ஒரு மரம் இழுத்துக் கொள்கிறது என்று புள்ளி விவரத்தோடு சொல்கிறார்கள்; நீர்வளம் குறைகிறது; பயிர் வளர்ச்சியும் கெடுகிறது.

வேறு, சில சாதாரண கருவேல மரங்களைப் போன்ற மரங்களை வளர்க்கலாம். அந்த மரங்கள் எங்கும் பார்த்தாலும் தானாகவே வளர்கிற ஒரு காட்டுச்செடி. அது ஒரு விஷச்செடி என்ற காரணத்தால் அதை வளர்ப்பது வருந்தத்தக்கதாக இருந்தாலும் கூட, அது நிலத்தைப் பண்படுத்துகிறது. ஆனால் ஈக்குவலிப்ட்ஸ் மரங்கள் அடியோடு நிலத்தை வறளச் செய்கிறது. நான் தயவுசெய்து அரசாங்கத்தை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன், இப்படிப்பட்ட ஈக்குவலிப்ட்ஸ் மரங்களை வளர்ப்பதை அடியோடு நிறுத்தவேண்டும் என்று. பாட்டை, காண்டிராக்ட் முறையிலே—சட்டப்படி குத்தகைக்கு எடுத்து அளிப்பதாக இருந்தாலும் கூட, ஒரு ஐந்து வருட காலத்திற்கு, டோட்டல் பேன் என்ற முறையில், தேயிலை தோட்டத்திற்கோ அல்லது காப்பித் தோட்டத்திற்கோ-அந்த தோட்டத்திற்கு தேவையான



அளவிற்கு மேல் வளரும் காடுகளிலே மரங்களை வெட்டுவதைத் தவிர மற்றப்படி வெட்டும் முறையை அடியோடு நிறுத்த வேண்டுமே தவிர வேறு வழி கிடையாது.....

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காடுகள் அழிந்து கொண்டே வருகிறது, அதை காண்டிராக்ட்டாக விடுவதினாலே, வெட்டிக் கொண்டு போய் விடுகிறார்கள் என்று மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்த அரசு பொறுப் பேற்றுக்கொண்ட பிறகு, விறகு கூப்புகள் என்ற பெயரிலே காண்டிராக்ட் விடுவதை அடியோடு தடுத்து நிறுத்தியிருக்கிறோம். விறகுகளுக்கு என்று இப்போது காண்டிராக்ட் விடுவதே கிடையாது.

அதைத்தவிர தனியார்கள் தாங்கள் காப்பித் தோட்டம், தேயிலைத் தோட்டம் போடவேண்டும் என்று சொல்லிக் கொண்டு அனுமதி கேட்கிற நேரத்தில் மறுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் அவர்களில் பலர் நீதிமன்றத்திற்குப் போய் உரிமை பெற்றுக் கொண்டு வருகிறார்கள். அப்படி நூற்றுக் கணக்கான வழக்குகள் இன்றைக்கு உயர்நீதிமன்றத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எப்படி காடுகள் பாதுகாக்கப் படுகின்றன என்பதைப் பற்றிய விவரங்களையெல்லாம் இங்கே மானியக் கோரிக்கைகள் வருகிறபோது, தெளிவாகச் சொல்லப் படும்.

அடுத்து ஒரு கருத்தைச் சொன்னார்கள். யூக்கலிப்ட்டஸ் மரங்களை வளர்ப்பதினாலே, அது தண்ணீரை அதிகமாக உறிஞ்சுகிறது என்கிற விவாதம் நீண்டகாலமாக, யூக்கலிப்டஸ் மரங்களை வளர்க்கிற திட்டம் வந்தபோது, 20 ஆண்டுகள் அல்லது 25 ஆண்டுகளுக்கு முன்னாலேயிருந்தே தொடங்கப்பட்டது. அந்த திட்டம் தொடங்கப்பட்ட காலத்திலேயே இந்தப் பிரச்னை வந்தது. ஆகவே இப்பொழுது நிபுணர்கள் ஆராய்ந்து அது அந்த அளவிற்கு தண்ணீரைக் குடிப்பது உண்மையல்ல என்கிற முடிவை தெரிவித்திருக்கிறார்கள். இந்திய அளவிலே, அகில இந்திய அரசின் ஒப்புதலோடுதான் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

திரு. க. அன்பழகன்: தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள், யூக்கலிப்ட்டஸ் மரங்கள் வளர்ந்திருக்கிற இடங்களுக்குச் சென்று அதைச் சுற்றியுள்ள இடங்களைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். மாடு மேய்கிற புல் கூட அந்த இடத்திலே முளைக்காது. இன்னும் சொல்லப்போனால் இந்தியா முழுவதிலுமே கூட, தாவர வளர்ச்சியிலே, பயிர் வளர்ச்சியிலே மேல் நாட்டைச் சேர்ந்த, வேறு சில நாடுகளைச் சேர்ந்த நிபுணர்களின் ஆலோசனையைப் பார்க்கிறபோது எதிர் காலத்திலே இந்தியாவே வேறு நாடுகளை எதிர் பார்த்து உணவிற்காக காத்திருக்கிற ஒரு நிலைமை ஏற்படக்கூடிய முறையில் சில மாற்றங்கள் இந்தியாவிலே உருவாகப்போகிறது என்று நான் அஞ்சுகிறேன். இன்னும் சொல்லப்போனால், சிறிய விதைகளிலே கூட இந்தியாவிலே வேறு விதமான இழப்பு- அதாவது வீரிய விதைகளை விளைவித்து அதனுடைய

விளைவாக, மேலும் இயற்கையான விதைகள் இந்த நாட்டிலே இல்லாமல் போய், நமதுடைய நாட்டினுடைய பஞ்ச நிலைமைக்கும், வரண்டு போன மண்ணுக்குப் ஏற்ற விதைகள் கிடைக்காத சூழ்நிலைகள் ஏற்படும் என்ற ஒரு அச்சம் கூட இருக்கிறது.

எனவே அதை பரிசீலித்து, யூக்கலிப்ட்டஸ் மரங்களை புதுக் கோட்டை போன்ற மாவட்டங்களிலே வளர்ப்பது நாட்டுக்கு ஒன்றும் இப்போது அவசியம் இல்லை என முடிவு செய்து அதை வெட்டி எறிந்துவிட்டு வேறு எந்த மரம் வேண்டுமானாலும், சவுக்கு மரம் வைத்தாலும் கூட நாட்டுக்கு நல்லது. முடிந்தால் செய்யுங்கள். முடியாவிட்டால் யூக்கலிப்டஸ் மரங்களையே வளர்த்துக்கொள்ளுங்கள்.

அடுத்து, நான் ஒன்றை வலியுறுத்திச் சொல்லவிரும்புவது, தமிழக அரசுதான், 40, 45 ஆண்டுக்காலமாக 1921 ஆம் ஆண்டிலேயிருந்து நீதிக்கட்சி ஆட்சிக் காலத்திலிருந்து முதல் முதல் இந்திய நாட்டிலே பிற்படுத்தப்பட்ட சமுதாயம், பேக்வார்டு கம்யூனிட்டீஸ், தாழ்த்தப்பட்ட சமுதாயம் டிப்பிரஸ்டு கிளாஸ்ஸஸ்-ஆகியவர்களுடைய உரிமை வாழ்க்கைக்கு வழி வகுத்த ஒரு மாநிலம். இந்தியாவிலே வகுப்பு வாரி உரிமையை—கம்யூனல் ஜி.ஓ-வைக் கொண்டு வந்த மாநிலம் மெட்ராஸ் ஸ்டேட் என்று அழைக்கப்பட்ட தென்னாடு. தமிழகம். அப்படி கொண்டு வந்த பிற்பாடு, இந்த மாநிலம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் காரணமாக-பிற் படுத்தப்பட்ட மக்களுக்கு அவர்களுக்கு கொடுக்கவேண்டிய அளவுக்கு முழு உரிமையும கொடுக்காவிட்டாலும் கூட, ஓரளவுக்கு அவர்கள் தலை தூக்கி வளர்ச்சி பெற முடிந்தது.

இன்றைக்கு அகில இந்திய அரசு மண்டல் கமிஷன் மூலமாக ஒரு அறிக்கையைப் பெற்று பரிசீலித்துக் கொண்டிருக்கிற இந்த நேரத்திலே, தமிழகத்திலேயுள்ள பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு-மத்திய அரசாங்கத்தினுடைய வங்கிகளிலோ, ரெயில்வே அலுவலகங்களிலே, அல்லது இன்னும் சொல்லப்போனால் மைய அரசாங்கத்தினுடைய சர்விசிலோ, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நியாயமான இடம் கொடுக்க வேண்டும் என்ற உரிமையை வலியுறுத்தும் வகையில் ஆளுநர் அவர்களுடைய உரையில் மண்டல் கமிஷன் பரிந்துரையை அதனுடைய கொள்கையை மத்திய அரசு நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டிருக்கவேண்டும்.

அப்படிக் கேட்பதற்கு கவர்னர் மூலமாக வந்த இந்த அறிக்கையிலே இந்த அரசு தவறி இருக்கின்றது. எனவே மண்டல் கமிஷன் நோக்கம்—சமூக நீதி என்பது இன்னும் ஒரு 50 ஆண்டு காலத்திற்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக வாதாடி சில உரிமைகளைப்



பெறுவதன் மூலமாகத்தான் காப்பாற்றப்படும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். எனவே ஒரு நீதிக்காக ஒரு கொள்கை வகுக்கிறபோது அதிலே இன்னொரு கொள்கையைக் கொண்டு வந்து சம்பந்தப்படுத்தி அந்தக் கொள்கையினை வீழ்ச்சியுறச் செய்யக்கூடாது என்று முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். பிற்பட்ட மக்களுக்கும், தாழ்த்தப் பட்ட மக்களுக்கும் வருமான வரம்பின் அடிப்படையிலே சலுகைகள் அளிக்கப்படவேண்டும் என்பது எந்த அடிப்படையிலே? பேக்வர்ட் கம்யூனிட்டிஸ்-க்காக சில சலுகைகள் வேண்டும் என்று வாதாடப்பட்டது. ஆனால் அந்த அடிப்படையினையே தகர்க்கின்ற வகையிலே இப்போது பேசுவது என்பது மேட்டுக் குடியினரின் உள் நோக்கங்களுக்கு அது இரையாகிவிடும். வருமான வரம்புக்குக் கீழே இருப்பவர்களுக்கு பொருளாதார முறையிலே உதவி செய்வது என்ற பொதுவான நோக்கத்தை நாங்கள் மறுக்கவில்லை. ஆனால் பேக்வர்ட் கம்யூனிட்டி என்பது should not come under the definition of "economically backward". என்பது தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் ஏற்றிருந்த கொள்கையாகும். எனவே பொருளாதாரப் பின்தங்கிய நிலைமையினை பிற்பட்ட வகுப்பாருக்கோ, தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கோ வழங்குகின்ற உரிமைகட்குத் தகுதியாக அடையாளமாக ஆக்கக்கூடாது. பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களும், டாக்டர் அம்பேத்கார் அவர்களும் பாராளு மன்றத்திலே 1951 ஆம் ஆண்டு பேக்வர்ட்கம்யூனிட்டீஸுக்காக சில சலுகைகளையும், உரிமைகளையும் தனியாக ஒதுக்கலாம் என்பதை ஏற்றுக்கொண்டு அரசியல் சட்டத்திலே கொண்டு வந்தார்களே அப்போதும் இந்த பொருளாதார வரம்பை பேக்வர்ட் கம்யூனிட்டிஸ் என்பதற்கு இலக்கணமாக ஆக்க வேண்டும் என்று சொல்லிசிலர் இதனை எதிர்த்திருக்கிறார்கள். எனவே அப்போது அவ்வாறு வாதாடியவர்கள்தான் இப்போதும் வாதாடுகிறார்கள் என்பதையும், அப்போது அதை ஏற்காதவர்கள்தான் இப்போதும் பொருளாதார வரம்பினை இதிலே கொண்டு வந்துசேர்ப்பதை ஆதரிக்கிறார்கள் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன். பொருளாதார இலக்கணத்தாலோ அல்லது பிற்பட்ட சமுதாயம் என்பதாலோ நான் லாபம் பெறுகிறவன் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது ஒரு சமூக நீதி என்பதால் சமூகத்திலே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்காக ஏற்பட்ட முறையில் இடையிலே குழப்பத்தை ஏற்படுத்தக்கூடாது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இந்த நேரத்திலே நான் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இன்னும் ஒன்றைச் சொல்லி என்னுடைய உரையை முடிக்க விரும்புகிறேன். தமிழ்நாட்டிலே உள்ள மக்களின் வருமானம், சராசரி வருமானம் உழைக்கிறவனின் வருமானம் ஒரு நாளைக்கு 5 அல்லது 6 ரூபாய். உழைக்காதவனுடைய வருமானம் எப்படியோ பெருகுகின்றது. உழைக்காதவர்கள் என்றால் அவர்கள் ஊரை ஏமாற்றி எப்படியோ பிழைக்கலாம். இன்னும் சொல்லப்போனால் நாட்டிலே பெரிய செல்வாக்கு படைத் தவனாகக்கூட அவன் ஆகலாம். ஆனால் உழைக்கின்றவனின்

வருமானம் ஒரு நாளைக்கு 5 அல்லது 6 ரூபாய். அந்த வருமானத்திலே அவனுடைய குழந்தையினைக் காப்பாற்ற முடியாது என்பதற்காகச் சத்துணவு கொடுக்கிறோம். சராசரியாக அவனுக்கு வருகின்ற வருமானத்தில் குடிப்பதற்கு செலவிடுகின்ற பணம் குறைந்த அளவு 3 ரூபாய். எனக்கு டீக்குடிப்பதற்குச் செலவாகிற காசு ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் அல்லது 1½ ரூபாய். அது என்ன விலையாக இருந்தாலும் 2 ரூபாய்க்கு மேல் ஆகாது. ஆனால் சாதாரணமாக குடிப்பவர்களுக்கு ஆகின்ற செலவு 3 ரூபாய். ஆனால் பாட்டிலின் விலை 7½ ரூபாய் என்று வைத்திருக்கிறீர்கள். அதன் மூலம் ஒரு நாளைக்கு 30 இலட்சம் ரூபாய் வருமானம் தொழிற்சாலைகளுக்குக் கிடைக்கிறது. அதிலே ஆண்டுக்கு 100 கோடி, 120 கோடி ரூபாய் வருமானம் தமிழ்நாட்டிலே தங்காமல் வெளிமாநிலம் செல்கிறது என்பதை முதலமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். அவர்கள் அதை ஒப்புக்கொள்ள மாட்டார்கள் என்று நான் கருதவில்லை. அந்த 100 கோடி ரூபாய் தமிழ்நாட்டைவிட்டு எங்கே போகின்றது. சட்டப்படி தான் கொடுக்கிறோம் என்று நீங்கள் சொல்லலாம் சட்டப்படி கொடுத்தீர்களா இல்லையா என்பது வேறு விஷயம். எனவே 100 கோடி ரூபாயும் ஏழைகளுடைய பணம் உயர்ந்த சரக்குகளைச் சாப்பிடுகிறவர்கள் எல்லாம் பணக்காரர்கள். அவர்கள் இதை வாங்க மாட்டார்கள். எனவே ஏழைகளிடத்திலே இருந்து கிடைக்கின்ற பணம் ஆண்டுக்கு 80 கோடியோ, 100 கோடியோ, அது தமிழ்நாட்டிலே தங்காமல் எங்கோ போகின்றது. ஏழையை 6 ரூபாயிலே 3 ரூபாயைச் செலவழிக்க விட்டுவிட்டு, அவனுடைய மனைவிக்கு இரவிலே சோறு போடாமல் கொடுமைப்படுத்தவிட்டுவிட்டு, அவனுடைய குழந்தைக்கு பகலிலே நாம் சோறு போட்டு, ஒரு குழந்தை என்றால் 50 காசுக்கு, இரண்டு குழந்தை என்றால் ஒரு ரூபாய்க்கு என்று சோறு போடுகிறோம். அதை நிர்வகிப்பவர்கள் கை வைக்காமல் இருந்தால் 50 காசுக்கு, அல்லது கை வைத்தால் 40 காசுக்கு சோறு போடுகிறோம். ஆனால் குடிப்பவன் எந்த அளவுக்குக் குடிக்கிறான் என்பதும் அது அவனது வருமானத்தில் தாங்க முடியாத அளவுக்கு இருக்கின்றது என்பதும் வேறு. அந்தத் தனிப்பட்ட நடவடிக்கையினைப் பற்றி நான் சொல்லவில்லை. குடிப்பழக்கத்தினால் அவர்கள் எல்லாம் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பதைப் பற்றி நான் இப்போது பேசத் தயாராக இல்லை. தமிழ்நாட்டிலே உள்ள வருமானத்திலே ஏறத்தாழ 100 கோடி ரூபாய் தமிழ்நாட்டை விட்டு வெளியேற நாம் காரணமாக இருக்கிறோம். அதனால் நான் கேட்கிறேன், ஒன்று, கள்ளச்சாராயத்தை அடியோடு ஒழிக்க முடிந்தால் அரசாங்க சாராயக் கடையை நடத்துங்கள். இல்லை என்றால், கள்ளச் சாராயத்தை ஒழிக்க முடியவில்லை என்றால் சர்க்கார் மது விலக்குச் சட்டத்தைக் கொண்டுவாருங்கள். போதும். மக்களுக்காகத்தானே அரசாங்கம், உங்களுக்கும் எனக்கும் என்ன? நாம் என்ன நிரந்தரமாக வாழப்போகிறோமா? ஆகவே கள்ளச் சாராயத்தை ஒழிக்க முடிந்தால் சர்க்கார் சாராயக் கடை நடத்த அனுமதிக்கலாம். சர்க்கார் சாராயத்தை ஒழிக்க



(நண்பகல் 12-00)

முடியவில்லை என்றால்—மது விலக்கு இருந்தால் கூட தென்னை மரத்திலே ஏறுவான் கள் இறக்குவான் என்றால் நாம் கடை வைக்க வேண்டாம். அப்படியே கடை வைத்தாலும் அது தேசியமயமாக ஆகட்டும். மது உற்பத்தியைப் பொறுத்த வரையிலே அது ஒன்றும் பெரிய காரியமல்ல. எரிசாராயத்தை வாங்கி சாராயம் ஆக்குவதை நான் கூடச் செய்துவிடலாம் என்று சொன்னால் ஒரு அரசாங்கத்தாலே செய்ய முடியாதா? குடி சாராய உற்பத்முறையை அரசே நடத்த முடியாதா? ஏன் என்றால் தண்ணீர் கலப்பது தான் அந்த வேலை. இதை நாம் செய்யக் கூடாதா? ஒரு ஐ.ஏ.எஸ். ஆபீசரை பொறுப்பில் அமர்த்தி செய்யச் சொன்னால் செய்யமாட்டாரா? இன்னும் சொல்லப் போனால் அவருக்கு புரப்போர்ஷன் நன்றாகவே தெரிந்து இருக்கும். ஆகவே அப்படித் தண்ணீர் கலந்து கொடுப்பதற்கு வெளிமாநிலக்காரனும் வேறு மாநிலக்காரனும் காண்டிராக்ட் எடுக்கவேண்டுமா? தயவு செய்து இன்று மதுவிலக்கு சட்டத்தை கொண்டு வாருங்கள், இயலாது என்று கருதினால் இந்த தொழிலை தேசியமயமாக்குங்கள். தமிழன் கெட்டாலும் அவன் பணம் தமிழ்நாட்டில் இருக்கட்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மரியாதைக்குரிய சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களைத் தவிர ஏறத்தாழ 58 உறுப்பினர்கள் பேசியிருக்கின்றார்கள். 1,101 நிமிடங்கள் அந்த பேச்சு இங்கே நேரத்தை எடுத்துக்கொள்ள பயன்படுத்தப்பட்டு இருக்கிறது. இதை நான் இங்கே குறிப்பிடுவதற்கு காரணம் 1,101 நிமிடங்கள் பேசிய பேச்சுக்கு நான் இங்கே ½ மணியிலோ, 1 மணியிலோ அல்லது 1½ மணியிலோ பதில் சொல்லிவிட வேண்டும் என்று நான் ஆசைப் பட்டாலும் முடியுமா என்பது சந்தேகம் தான். நேற்றையதினம் நான் எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அவர்களிடம் சொன்னேன், ஒரு ½ மணி நேரத்திற்கு மேல் நான் பேசுவதாக இல்லை என்று சொன்னேன். அவர் உங்களால் முடியாது என்றார்கள். என்ன காரணம் என்று அப்போது எனக்குப் புரியவில்லை. இங்கே எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசிய பேச்சுக்குப் பிறகு நிச்சயமாக முடியாதுதான் என்று தோன்றுகிறது. ஏன் எனில் அவ்வளவு விவரங்களை சொல்ல வேண்டிய கட்டாயத்திற்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் என்னை ஆளாக வைத்திருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன்.

முதலிலே ஆளுநர் உரைப் பற்றி சொல்லும்போது சென்ற ஆண்டும் குறிப்பிட்டேன். அதற்கு முன்பும் குறிப்பிட்டேன். அது ஒட்டுமொத்தமான அரசின் உடைய முழுமையான செயல்களை

விளக்கும் உரையாக இருக்கமுடியாது என்பதையும் குறிப்பாக மேல் எழுந்த வாரியாக சிலவற்றை எடுத்து சொல்வது என்ற நிலையில்தான் அந்த அறிக்கை இருக்கும் என்பதையும் நான் சொல்லியிருக்கிறேன். அது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். என்னைவிட சட்டமன்றத்தில் அதிக அனுபவம் பெற்ற எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அவர்களும் மற்றும் ஏனைய பல உறுப்பினர்களும் இவைகளை நன்கு அறிந்தவர்கள் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. ஒரு கட்சி ஆட்சியில் இருக்கும் போது அந்தக் கட்சியைச் சேர்ந்த கொள்கையை திட்டங்கள் ஆக்க முற்படும்போது பல்வேறு கோணத்திலிருந்து மக்களுடைய நிலைமையை கணித்துப் பார்த்து அதற்கு பிறகு திட்டம் தீட்ட வேண்டிய அவசியத்தில் ஜனநாயக மரபுக்கு மதிப்பு கொடுப்பவர்கள் இருப்பார்கள் என்பதை நாம் எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்று தான் என்பதில் எனக்குச் சந்தேகம்இல்லை.

அதேபோல் எல்லா அரசியல் கட்சிகளும் ஆட்சி செய்கின்ற ஒரு கட்சிக்கு ஒரு கொள்கைக்கு சொந்தக்காரர்களாக இருக்கின்றவர்கள் ஆட்சியில் இருக்கின்றபோது அந்த நிலைக்கு அவர்கள் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட நேர்ந்த நிலையில் செயல்படும்போது எதிர்க்கட்சிகளுடைய எல்லோருடைய திருப்தியையும் தங்களுடைய திட்டத்தில் பெறமுடியும் என்பதை நான் சொல்லி என்னை ஏமாற்றிக்கொள்ள விரும்பவில்லை. இது அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றுதான். ஆனால் சில விவாதங்களிலே ஈடுபடும்போது சில கருத்துக்களை எடுத்து வைக்கும்போது அந்த அந்த நேரத்திலே ஏற்படுகிற உணர்ச்சிகளுக்கு மட்டும் மதிப்புக் கொடுத்தோ அல்லது ஏதாவது ஒரு குறையைச் சொல்வதன் மூலம் தனிப்பட்டவர்களையோ அல்லது ஆட்சியில் இருப்பவர்களையோ மனவருத்தத்திற்கு உள்ளாக்கி அதிலே மகிழ்ச்சிகொள்ள வேண்டும் என்று யாராவது விரும்பினார்கள் என்றால் அதையும் இயற்கைதான் என்று நான் எடுத்துக்கொள்வேன். காரணம் ஆட்சியில் இருப்பவர்களுக்கு ஆத்திரத்தை உண்டாக்கினால் அவர்களால் சரிவர செயல்பட முடியாது என்பது எல்லோரும் அறிந்ததுதான். அதிகாரம் தன் கையில் இருக்கிற காரணத்தினால் ஒருவேளை தலைகனம் ஏற்பட்டு அடக்கம் குன்றி மற்றவர்களுடைய அருவறுப்புக்கு ஆளாகிற வகையில் என்னையா குறை சொல்கிறாய். என்னையா குறை சொல்ல முடிகிறது என்ற எண்ணத்திற்கு ஆட்பட்டு விட்டால் நடுநிலை தவறிவிடும் என்பதும், நன்மையைச் செய்ய விரும்புகிறவன்கூட நல்லதைச் செய்ய முன்வருவான் என்ற சூழ்நிலை ஏற்படும் என்பதும் நாம் அனைவரும் எளிதாகத் தெரிந்துவைத்திருக்கின்ற ஒன்றுதான். ஆனால் எனக்குள்ள மனநிறைவு எல்லாம் இங்கே இந்த ஆட்சியைக் குறைகூற விரும்பி



கேள்விகளுக்கு—என்ன என்ன கேள்விகள் எல்லாம் சில ஆண்டுகளுக்கு முன்னால் வைக்கப்பட்டதோ, பதில் சொல்ல வேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்பட்டதோ—அதே கேள்விகளை இங்கே திரும்பக் கொண்டுவந்து பதில் சொல்லத் தேவையில்லாத பிரச்சினையாக்க முன்வருவதை நான் எண்ணிப் பார்க்கிறபோது இவ்வளவு பலவீனமாக அவர்களுடைய எண்ணங்களை, கொள்கைகளை, திட்டங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்களா என்று எண்ணிப் பார்த்து பரவாயில்லை ஓரளவிற்கு இந்த அரசு தன்னால் முடிந்தவரையில் மக்களுக்குத் தொண்டு செய்கிறது, எனவே புதிதாக எதுவும் சொல்லமுடியாமல் தன்னைப்பற்றி யாராவது ஏதாவது சொல்லியிருந்தால் அதையே திரும்பச் சொல்லவேண்டும் என்று எண்ணுகிறார்கள் என்று நான் கருதவேண்டியவனாக இருக்கிறேன்.

இங்கே பல்வேறு பிரச்சினைகள் பேசப்பட்டிருக்கின்றன. ஆளுநர் உரையின்மீது பேசியவர்கள் கல்வியைப் பற்றி பேசியிருக்கிறார்கள், தொழிலைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள், தொழிலாளர்களைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள், மக்களுடைய வறுமையைப் பற்றி பேசியிருக்கிறார்கள், வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ளவர்களைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள். அதற்கெல்லாம் ஆதாரங்களை அவர்கள் எடுத்துச் சொல்ல முன்வந்தபோது என்ன என்ன வகையில் இந்த அரசு அந்தப் பிரச்சினைகளில் கவனம் செலுத்துகிறதென்பதை சம்பந்தப்பட்ட இலாகாவிலே பங்கு கொண்டுள்ள அமைச்சர்களே ஒரு சில பதில்களைச் சொல்லி என் வேலையைக் குறைத்து விட்டார்கள் என்றுகூட நான் சொல்லமுடியும். ஆனால் ஒட்டுமொத்தமாக இந்த அரசுக்குத் தலைமை வகித்துப் பொறுப்பு ஏற்று இருக்கிறவன் என்ற வகையில் என்னைவிட ஆற்றலும் அறிவும் உள்ள அனுபவமும் உள்ள எதிர்க்கட்சித் துணைத் தலைவரோடு அமைச்சராக இருந்து பணியாற்றிய நாவலர் அவர்கள் மற்றும் பல நண்பர்கள் இங்கே அமைச்சரவையில் இருக்கும்போது எனக்குள்ள மகிழ்ச்சி அவர்களுடைய நம்பிக்கைக்கு இங்கேயாவது இடம் இருக்கிறதே என்பதை எண்ணிப் பார்க்கிறபோது நான் பெருமைப்படுகிறேன். யாருக்காவது யார்மீதாவது நம்பிக்கை ஏற்பட்டால் அது இந்த அரசுக்கு நல்லது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதை நான் துணிந்து சொல்லியாக வேண்டும். இந்த அரசு எடுக்கிற கொள்கைகளில் சிலவற்றில் குறிப்பாக வேலையில்லாத குடும்பத்தில் உள்ளவர்களுக்கு ஒரு நபருக்கு வேலை கொடுக்க வேண்டும் என்றும் இந்த சத்துணவுத் திட்டம் போன்றவைகளில் தவறு இருந்தால் நான் பொறுப்பு. அதிலே தீமைகள் விளைந்தால் என் பொறுப்பு; நடைபெற முடியாமல் போய் விட்டால் அது என்னுடைய பொறுப்பு. ஏனென்னில் அதை அறிமுகம் செய்ய வேண்டும் என்று சொல்லியவன் நான் என்பதால் முழு பொறுப்பை ஏற்றுக்கொள்வதோடு, அது எங்காவது திறமையாக நடைமுறைப் படுத்தப்படுகிறது என்றால் அது அதிகாரிகள் பொறுப்பு என்பதையும், மக்களுடைய ஒத்துழைப்பு பொறுப்பு என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 பிப்ரவரி 2

[பிற்பகல் 12.10]

ஆகவே இதில் எம்.ஜி.ஆர். பங்கு, இன்னொருவர் பங்கு என்று பிரித்துப் பார்க்க வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். தவறுகள் ஏதாவது நேர்ந்தால் அதற்கு இந்த எம்.ஜி.ஆர். முழுபொறுப்பு என்பதை நான் இங்கே சொல்வதில் மகிழ்ச்சியும், மனநிம்மதியும் பெறுகிறேன். இந்தத் திட்டங்கள் நிறைவேறுமா? ஒரு கோடி பேருக்கு வேலை கொடுக்க முடியுமா என்ற கேள்வி விவரம் தெரிந்தவர்கள் கேட்கக்கூடிய கேள்வி தான்; அவசியமான கேள்வி தான். வேலை கொடுத்தாக வேண்டாமா என்பதையும் அந்த ஆற்றலும், அனுபவமும் உள்ளவர்கள் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். எந்தெந்த காலத்திற்கும், தமிழ்நாட்டில் மட்டும் என்று வைத்துக்கொ வோம், இதுதான் தமிழகத்தின் மக்களுடைய கதியாக இருக்க வேண்டுமா, இதுதான் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற நியதியின் தன்மையா, என்பதையும் நாம் எண்ணிப்பார்த்தால் பூனைக்கு யார் மணி கட்டுவது என்று வருகிறபோது யாராவது ஒருவர் கட்டித்தான் ஆகவேண்டும். யாராவது தன்னை பலி கொடுத்தாவது பல உயிர்களை காப்பாற்றுவதற்காக அந்த பொறுப்பை ஏற்றுக்கொள்வதைப் போல தன்னுடைய வாழ்க்கையைப் பலி கொடுத்தாவது, தன்னுடைய புகழை, நம்பிக்கையை தன்னுடைய வசதி, வாய்ப்புகளை பலி கொடுத்தாவது, அவ்வளவையும் பலிகொடுத்தாவது இதுபோன்ற திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்பது இந்த கழகத்தினுடைய கடமை என்று நாங்கள் உணர்கிறோம் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். பசியால் வாடுகின்றவர்கள் இருக்கத்தான் வேண்டும்; இப்படி ஒரு சமுதாயம் இருக்கத்தான் முடியும்: எல்லோருக்கும் வேலை வாய்ப்பு, எல்லோரும் உணவு அருந்துகின்றார்கள் என்ற நிலைமை என்று எப்போதும் மாற்றமுடியாத நிலைமை என்று சொன்னால் அதை நிச்சயமாக எதிர்த்துப் போராடி, யாருடைய கருத்தாக இருந்தாலும் சரி, யாருடைய பரிந்துரைகளின் மீது தரப்படுகிற எண்ணங்கள் ஆனாலும் சரி, திட்டங்கள் ஆனாலும் சரி, முயற்சி செய்து பார்க்க வேண்டியது, அபேத வாதத்தைப்பற்றி சமத்துவத்தைப்பற்றி, சமநீதியைப் பற்றி, வறுமையை ஒழிப்போம் என்று சொல்லுகிறோமே அதைப்பற்றி. அதேபோல இந்த நாட்டிலே வேலையில்லாத நிலைமை இருக்கக்கூடாது, அதற்காக ஏதாவது வழி கண்டுபிடித்தாக வேண்டும். மக்களிடத்திலே பேசுகிறோமே அதுபற்றி சிந்தித்து ஒரு முடிவு எடுக்க வேண்டியவர்கள் நாம் என்பதை அடக்கமாக சொல்கிறேன். அந்த பொறுப்பு நம் எல்லாருக்கும் இருக்கிறது என்பதை வற்புறுத்திச் சொல்கிறேன்.

பலபேர்கள் இங்கே பேசியபோது, வரவேற்றார்கள் என்றும் இன்னும் சொல்லப்போனால் ஒட்டுமொத்தமாக வரவேற்றார்கள் என்றும் அது நடைபெறுவதிலே சிக்கல்கள், குறைகள் இருக்குமானால் அதை தீர்ப்பது எப்படி, தடுப்பது எப்படி என்பதிலே கவனம் செலுத்த வேண்டும் என்று எச்சரிக்கை அரசாங்கத்திற்கு



1983 பிப்ரவரி 2] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

தந்தார்கள் என்பதை நான் எண்ணிப்பார்த்தால் உண்மையிலே இங்கே இருக்கின்றவர்கள் தமிழகத்திற்கு செய்கிற நன்மை, மிகப்பெரிய நன்மைகளில் இது ஒன்று என்பதை உணர்ந்து அவர்களை நன்றியோடு பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சத்துணவுத் திட்டம் யார் கொண்டு வந்தார்கள் என்பதைப் பற்றி நான் சொல்லியபோது இதை ஒரு பிரச்னையாக்கி, ஜஸ்டிஸ் பார்ட்டியை இழிவாகப் பேசுகிற நிலையை கூட எம்.ஜி.ஆர். உருவாக்குகிறார் என்ற குற்றச்சாட்டிற்கு நான் ஆளானேன். இது ஏன் சொல்லப்பட்டது, அந்த அடிப்படையை கொஞ்சம் கவனிக்க வேண்டும். எம்.ஜி.ஆர். கொண்டுவந்தாரா என்பதை பற்றி பிரச்சினை இல்லை என்பதை, எனக்கு அந்த புகழ் தேவையில்லை என்பதை, என் பெயரை அதற்கு பயன்படுத்த தேவையில்லை என்பதை பலமுறை மேடைகளில் பேசியிருக்கிறேன். அமைச்சரவையில் நான் கூறியிருக்கிறேன். அதிகார முறையிலே இப்படி எழுதக்கூடாது, எம்.ஜி.ஆர். உணவுத் திட்டம் என்பது வரக்கூடாது என்று நான் கண்டிப்பாக மற்றவர்களுக்குச் சொல்லி அதை வராமல் தடை செய்திருக்கிறேன் என்று சொல்வதில் நான் மனநிறைவு அடைகிறேன். ஆகவே, எனக்குப் புகழ் வரவேண்டும் என்பதற்காக இந்தத் திட்டத்தை நான் அறுமுகப்படுத்தவில்லையென்பதை நான் மீண்டும் சொல்ல விரும்புகிறேன்.

ஜஸ்டிஸ் கட்சி காலத்திலேயே இப்படி இருந்திருக்கிறது என்று ஒரு பெரியவர் எழுதியதை இங்கு படித்துக் காண்பித்தார்கள். அந்தக் கருத்தை எடுத்துச் சொன்னார்கள் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அதேபோல தியாகராஜ செட்டியார் காலத்தில், கார்ப்பரேஷனில், ஆயிரம் விளக்குப் பகுதியில், ஒரே ஒரு பள்ளிக்கூடத்தில் அதை அமுல்படுத்தினார்கள் என்பதையும் நான் சொன்னேன். அதற்குப் பிறகு அது நிறுத்தப்பட்டு, பின்னால் கதர் துணியும் வாங்கிக் கொடுத்து, குழந்தைகள் படிக்க வரவில்லை என்கிற காரணத்தால், பள்ளிக்கூடங்களிலே குழந்தைகள் அதிகமாக வரவேண்டுமென்கிற நல்லெண்ணத்தோடு அதையும் அவர்கள் செய்தார்கள் என்பதையும் நான் சொல்லியிருக்கிறேன். இப்பொழுதும் அவைகளை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அன்று கொடுக்கப்பட்ட அந்த உணவு எல்லாம் சத்துணவு அல்ல, மதிய உணவுதான். அந்த மதிய உணவுகூட சென்னையிலே 5 பள்ளிக்கூடங்களைத் தாண்டிப் போகவில்லை. ஆனால் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் தமிழ்நாடு முழுவதற்கும் சத்துணவுத் திட்டம் அல்ல மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார் என்பதை நான் மறக்கவும் இல்லை, மறைத்ததும் இல்லை, அது தவறு என்று நான் சொன்னதும் இல்லையென்பதை இங்கே திட்டவட்டமாக வெளிபடுத்துவதிலே நான் உண்மையிலேயே பெருமைப்படுகிறேன். அவரைப் போன்றவர்கள் செய்த நல்ல காரியத்தை குறை

கூறுவதனால் நான் பெரிய மனிதனாக முடியாது என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். சிலர் நல்லதைச் செய்யும்போது, அதை வாய்ப்பு வரும்போதெல்லாம் எடுத்துச் சொல்வது ஒரு மனிதனுடைய நல்லெண்ணத்தை மட்டுமல்ல, அவரவர்களுடைய தகுதியையும் திறமையையும்கூட எடுத்துக் காட்டுவதற்கு அடையாளம் என்பதை எண்ணி, உதாரணத்திற்காக ஒன்று சொல்லுகிறேன். வள்ளுவர் கோட்டத்தில் நான் ஒரு விழாவில் பேசும்பொழுதுகூட, டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் இந்த நிலைமைக்கு இதை உருவாக்குவதற்குக் காரணமாக இருந்தார் என்பதை நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதுபோல், வழக்கு மன்றத்தில் தமிழ் மொழி வரவேண்டுமென்பதற்காக, அவர் சில காரியங்களைச் செய்ததை, நான் ஆட்சிக்கு வராத பொழுது, அது நிறுத்தப்பட்டது என்று கேட்டவுடன், நான் கலைவாணர் அரங்கத்திலே என்று கருதுகிறேன். அங்கே அதைப் பற்றிப் பேசினேன்—இது மாபெரும் தவறு, அந்தச் செய்யக் கூடாது, அதை கண்டிப்பாக அமுல்படுத்த வேண்டுமென்று பேசினேன். எனக்குப் புகழ் சேர்ப்பதற்காக அல்ல. என் உள்ளம் அது சரி என்று கருதியது. நியாயம் என்று கருதியது. ஆகவே, அதைச் சொன்னேன். அதற்கு மேலும் சொல்வேன், இந்தக் கோட்டையிலே, ஆகஸ்ட் மாதம் 15 ஆம் தேதி கொடியேற்றும் போது, முதன் முதல் நாங்கள் பதவியேற்று கொடியேற்றிய நேரத்தில், இந்த உரிமையைப் பெற்றுத் தந்தவர் கலைஞர் கருணாநிதி என்று பேசினேன். விளம்பரத்திற்காக அல்ல. அவரை சொல்லி, நான் விளம்பரம் பெறவேண்டுமென்பதற்காகவும் அல்ல. என் உள்ளத்தில் அது நியாயம் என்று தோன்றியதைச் சொன்னேன். அதுபோல்தான் இந்த உணவுப் பிரச்னையையும் எடுத்துக்கொண்டு பேசினேனே தவிர, இதில் ஏதோ களங்கம் இருப்பதாக யாராவது கருதுவார்களானால் அவர்கள் உள்ளத்தில் ஏதோ களங்கம் இருக்கிறது என்று தான் சொல்வேனே தவிர, என் உள்ளத்தில் கலக்கமும் இல்லை, களங்கமும் இல்லை, எந்தவிதமான மாச்சரிய குணமும் இல்லை என்பதை இங்கே அறுதியிட்டுக் கூற நான் விரும்புகிறேன்.

இன்னொன்றை நான் தெளிவாகச் சொல்லியாக வேண்டும். பத்தாவது வகுப்பு வரையில், இலவசமாகக் கல்வி சொல்லிக் கொடுக்க வேண்டுமென்று சொல்லியவர் பெருந்தலைவர் காமராஜர் என்பதை நான் பல இடங்களிலே கூறி இருக்கிறேன். காமராஜர் அவர்களுடைய பெயர் எவ்வளவு நல்ல முறையில் உலகம் முழுவதற்கும் தெரிய வேண்டுமென்பதற்காக எத்தனையோ பேர் என்னைப் பார்த்து, நான் அந்த முடிவிற்கு வந்துவிட்டேன் என்று தெரிந்ததை எண்ணி, அது கூடாது என்று சொன்னபொழுதுகூட, பிரச்னைகள் எழும் என்று சொன்ன பொழுதுகூட, அது முடியாது என்று 'காமராஜர் பல்கலைக் கழகம்' என்று நான் மதுரையிலே அந்தப் பல்கலைக் கழகத்திற்குப் பெயர் சூட்டியபொழுது, என் மனசாட்சி எதைச் சொல்லியதோ, அதைத்தான் நான் சொன்னேன், செய்தேன். அதுபோலத்தான்



இந்தத் திட்டங்களை எல்லாம் வெளியிடும்போது, இதிலே முழு பொறுப்பையும் இந்த எம்.ஜி.ஆர். ஏற்றுக்கொள்கிறான் என்பதை இந்த மாமன்றத்திலே கொஞ்சங்கூட வெட்கப்படாமல், தலைகுனியாமல், நெஞ்சுயர்த்தி, தலை நிமிர்ந்து நான் சொல்கிறேன். அவைகளில் ஏதாவது கெட்டவைகள் இருந்தால், தவறாக இருந்தால், நான் பொறுப்பு. அது வெற்றிபெற்றால் திட்டத்தை நிறைவேற்றுகின்ற அதிகாரிகள், ஒத்துழைக்கின்ற மக்கள் இவர்கள்தான் காரணம். எதிர்க்கட்சியிலே இருக்கின்றவர்கள் காட்டுகின்ற அரவணைப்பு, துணை ஆகிய இவைகளையும் இப்பொழுது நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

## பிற்பகல் (12.20)

திரு குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பெருந்தலைவர் காமராஜ் அவர்களுக்குச் சேர்த்த பெருமைகளைப் பற்றிச் சொல்லும் பொழுது நாங்கள் விம்மிப் பூரிப்படைகிறோம். அதைப்போல, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அந்த உணவுத் திட்டத்தைப் பற்றிச் சொல்லும்பொழுது நான் களங்கம் இல்லாமல் சொன்னேன் என்று சொன்னார்கள். அதைப்பற்றி அவர் கருத்துக்களைச் சொல்லும்பொழுது சிலர் மனதில் களங்கத்தோடு இருக்கிறார்கள் என்று சொன்ன சொல்லை நான் சற்று வருத்தத்தோடு கேட்டுக் கொண்டிருந்தேன். காரணம் என்னவென்றால் நாங்களெல்லாம் தைப்பற்றிச் சொல்வதற்கு வேறு ஒரு காரணமும் இல்லை. திக் கட்சியின் தலைவர் கொண்டு வந்த திட்டம் நமது முதலமைச்சரவர்கள் சொன்னதைப்போல, ஐந்தே பள்ளிக்கூடங்களுக்கு மட்டும்தான் என்பதையும் அதுவும்கூட சென்னை நகரத்திற்குமட்டும்தான் என்கின்ற சரித்திர உண்மையை அவர்கள் சொன்னதைப்போல, அந்த ஐந்து பள்ளிகளையும் ஒரு அரசாங்கம் நிறுத்தியது, அந்த வெள்ளையர் அரசாங்கம் வெளியேற வேண்டுமென்று போராடி சுமார் பத்தாயிரம் நாட்கள் சிறையிருந்த தலைவரவர்கள், அந்த அரசாங்கம் போனதற்குப் பிறகு, சொந்த அரசாங்கம் அமைந்த பிறகு தமிழகம் முழுவதும் அந்த உணவைப் போட்டார்கள் என்று நினைத்துப் போற்றிக் கொண்டிருக்கிறோம் என்பதையும் மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்கு நான் சமர்ப்பிக்கிறேன்.

மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு குமரிஅனந்தன் அவர்கள் இப்படிப்பட்ட ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார் என்று நான் எதிர்பார்க்க வில்லை. நான் அவரைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. களங்கம் கற்பிப்பவர்கள் என்று சொல்வதற்குக் காரணம் எதை எடுத்தாலும் வேறு கண்ணோட்டத்தோடு பார்த்து, அதில் ஏதாவது குற்றம் கண்டுபிடிக்க முடியுமா, நமது சித்து விளையாட்டுகளைக் காண்பிக்க முடியுமா என்று நினைத்துக் கொண்டிருப்பவர்களைப் பற்றிதான் சொன்னேனே தவிர, என்னுடைய நல்ல நண்பர் குமரி அனந்தன் அவர்களைப்பற்றி எண்ணிப் பார்த்துச் சொல்லவில்லை.

அந்தக் களங்கம் எங்கே இருக்கிறது என்றால், ஒரு உண்மையை நான் சொன்னால் தவறு, இன்னொருவர் சொன்னால் தவறில்லை என்று சொல்லும்பொழுதுதான் களங்கம் இருக்கிறது. நாளைய தினம் பேராசிரியர் சொன்னதைத் தவறு என்று சொல்லப் போகிறார்கள் என்னைப்பற்றிச் சொன்னவர்கள். என்று கருதுகிறீர்களா நிச்சயமாக சொல்லமுடியாது. ஆனால் நான் சொன்னபொழுது இந்த வகையை இவர்கள் வலிய இழுத்து, இவர் ஜஸ்டிஸ் பார்ட்டிக்குக் கெட்ட பெயரை உண்டாக்கப் பார்க்கிறார், இழிவு உண்டாக்கப் பார்க்கிறார் என்று சொன்னவர்கள் இருக்கிறார்கள். மேடையிலே பேசியும், எழுதியும் இருக்கிறார்கள். இப்பொழுது அவர்கள் என்ன செய்வார்கள்?

இதுபோலத்தான் பாரதியார் சொன்னார் என்று நான் சொன்னேன். பாரதியாருடைய கட்டுரையிலே எழுதியிருக்கிறார்கள். அதில் குழந்தைகளுக்கு உணவு கொடுத்து, உடைகளும் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். இங்கே ஒரு குறிப்பை, பேச்சைப் பார்த்தேன். குழந்தைகளுக்கு கல்வி கற்பிக்கப்படும்பொழுது அந்தக் கல்வியை பாழடிக்கக்கூடாது என்று எதிர்க்கட்சி துணைத் தலைவரவர்கள் சொன்னார்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்கள் இங்கே உணவுத் திட்டத்தால் குழந்தைகளின் கல்வி பாதிக்கப்படக் கூடாது என்று சொன்னதை நான் நல்ல உணர்வோடு எடுத்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆனால் இந்த நிலைமை இல்லை. அந்த நிலைமை இப்பொழுது நிச்சயமாக இல்லை. ஆனால், முன்பிருந்த அந்த நிலைமையையும், இப்பொழுது இருக்கின்ற நிலைமையையும் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்திருந்தாலும் மீண்டும் நினைவுபடுத்துவதற்காகச் சொல்லுகின்றேன். அந்த ஆசிரியர்கள் பணம் சேர்க்க வேண்டியிருந்தது. அப்பொழுது பணம் போதாது. ஆகவே, யூனியன் எவ்வளவு கொடுக்க வேண்டுமென்று இருந்ததோ அதை அந்த பஞ்சாயத்து யூனியன் கொடுக்க முடியாமற்போகும்பொழுது அதையும் சேர்த்து வசூல் செய்ய வேண்டிய பொறுப்புகள், அந்த முழுச் சுமையையும் தாங்கிய ஆசிரியர்கள்தான் ஆங்காங்கே சென்று உணவுப் பொருட்கள், பணம் இவைகளைப் பெற்று அந்தப் பள்ளிகளை நடத்தி வந்தார்கள்; கல்வியைச் சொல்லிக் கொடுத்தார்கள். அந்தக் காலத்திலிருந்து வளர்ந்தவர்கள் இன்றைக்கு ஏறத்தாழ 20 வயது, 25 வயது பெற்றவர்களாக வளர்ந்திருப்பார்கள் என்று கருதுகின்றேன்.

இன்று அப்படி அல்ல. குழந்தைகளுடைய எண்ணிக்கை அதிகம் ஆகிறது. அந்தக் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகமானால் ஆசிரியர்களின் எண்ணிக்கையும் அதிகமாக வேண்டாமா என்ற கேள்வி பிறக்கிறது.



கேள்வி நியாயமானதுதான். ஆனால் கேள்வியிலேயே பதிலும் இருக்கிறது. எப்படி அது சரியாக நடந்தது அல்லது நடக்கிறது என்று நாம் எண்ணிப் பார்க்க வேண்டாமா? ஒரு பள்ளிக்கூடத்திலே ஒரு வகுப்பிலே எத்தனை குழந்தைகளோ அத்தனை குழந்தைகள் வராமல் இருந்தனர். படிக்க வராமல் இருந்த குழந்தைகள், வரவேண்டிய நிலைமைக்கு ஆளாக்கப்பட்டு வந்தபோது அந்த ஆசிரியர்களுக்கு இல்லாமல் இருந்த வேலை அதைச் செய்யக் கூடிய நிலைமைக்கு வாய்ப்பு கிடைத்தது என்பதுதான் பதிலே தவிர, அங்கே ஆசிரியர்களிடையே பற்றாக்குறை என்ற நிலையில்லை, பெரும்பான்மையான அளவிலே இல்லை. முன்பு ஏதாவது குறை இருந்தால் அது தொடர்ந்து கொண்டு இருந்திருக்குமே தவிர, இந்தக் காரணத்தினால் இல்லை என்பதை இங்கு நான் குறிப்பிட்டு வற்புறுத்தி எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, குழந்தைகள் சத்துணவைப் பற்றிச் சொல்லும்போது என்னோடு வாதிடத் தயாரா என்று எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கேட்டார்கள். அவர் சொன்னதை நான் அலட்சியப்படுத்தவில்லை. ஆனால் இந்தச் சத்துணவுத் திட்டம் என்று எடுக்கும்போது இன்று மட்டுமல்ல, சில ஆண்டுகளுக்கு முன்பாகவே, எந்த தந்தப் பொருள்களை உணவாக்கிக் கொடுத்தால் அதிலே சத்து இருக்கிறது என்று கண்டுபிடித்து, ஒரு குறிப்பை எழுதி வைத்திருந்தார்கள். பிறகு இதற்கெனக் கேட்டு அதிலே அனுபவப்பட்டவர்கள் பலர்கூடி, எந்தெந்த வகையிலே உணவைக்கொடுத்தால், அது குழந்தைகளுக்கு சத்துணவாக நிச்சயமாக அமையும் என்று சொன்ன பிறகு இந்தத் திட்டத்தை அமலுக்குக் கொண்டு வந்தோம் என்பதை இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒன்றுமே இல்லாதவர்கள், உணவுக்கே வழியில்லாத குழந்தைகள் அந்த உணவை உண்டு கல்வி பயில முயலும்போது, அதிலே கல்வி பாழாகலாம் என்ற நிலைமை இருக்கும் என்று சொல்வார்களானால், ஆசிரியர்களுக்கு நேரமில்லை என்ற ஒரே காரணத்தைத் தவிர வேறு எதுவும் நியாயமான காரணமாக இருக்க முடியாது. அதற்கு பதில் இப்போது நான் சொல்கிறேன். புதிதாக சிலர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள், இன்றைக்கு ஆசிரியர்களுக்கு இதில் எந்த வேலையும் இல்லை. முன்புபோல அவர்கள் கல்வி கற்றுக் கொடுக்கலாம். அவர்கள் சுதந்திரமாக அவர்களுடைய பணியைச் செய்யலாம். ஆகவே ஒழுங்காக அவர்கள் பள்ளிக்குச் சென்று ஆசிரியர்கள் கடமையை செய்கின்ற எத்தனையோ பெரும்பான்மையான ஆசிரியர்களைப் போல சிலபேர்கள் இருக்கிறார்கள் வேலை செய்யாதவர்கள் அல்லது அலட்சியமாக இருப்பவர்கள் அவர்கள் முனைந்து அந்த பணியிலே அக்கரை காட்டுவார்களானால், நூற்றுக்கு நூறு குழந்தைகள் கல்விகற்ற குழந்தைகளாக வருவார்கள் என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஒவ்வொரு புதிய உணவு விடுதியை கட்டும்போது கட்டிடங்கள் கட்டப்படும்போது குழாய்கள், தண்ணீர் வசதி உள்ள நிலைமையோடு இது கட்டப்பட வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது, சொல்லப்பட்டிருக்கிறது, வற்புறுத்தப்பட்டிருக்கிறது; எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது. அதையும் அவர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிடுவது என்னுடைய கடமையாகும். இந்த சத்துணவில் என்னுடைய நோக்கம் என்ன என்பதை பலமுறை மேடைகளில் சொல்லியிருக்கிறேன். சில நேரங்களில சில கட்டுரைகளிலே கோடிட்டு காண்பித்திருக்கிறேன்.

இங்கே பேசும்போது ஒன்றை குறிப்பிட்டார்கள். ஏற்றத் தாழ்வு பற்றி பிற்பட்ட சமூகத்தைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். பிற்பட்ட சமூகம் என்பது படிக்க வசதியில்லாதவர்கள் என்ற நிலையில் தொடங்கி, பொருளாதார வசதியிருந்தாலும் கூட, படித்த பிள்ளைகளைக் கொண்ட குடும்பமாக இருந்தாலுங்கூட முன்பு சொன்ன அதே பெயர் அந்த பட்டியலிலே இவர்கள் இடம் பெற தகுதியுள்ளவர்கள் என்று வந்தால் அது அவ்வளவு நியாயமா என்பதை நாம் சிந்திக்க வேண்டாமா? பிற்படுத்தப்பட்டவர்கள் நாம் என்பதை எந்த கோணத்திலிருந்து பார்க்கிறோம்? உயர்ந்த ஜாதி, கீழ் ஜாதி—என் ஜாதியை விட நீ தாழ்ந்த ஜாதி என்று சொன்னால் அதிலே பிற்படுத்தப்பட்ட சமூகம் என்று ஒதுக்கப்பட்டிருந்தால் அதற்காக போராட வேண்டிய கடமையில் நாம் எல்லாரும் சேர்ந்து போராடுவோம். அதிலே சந்தேகம் கிடையாது. இந்த அரசிற்கு மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். பிற்பட்ட சமூகம் என்று சொல்லி படித்து பணவசதி பெற்று லட்சக் கணக்கான சொத்துக்களுக்கு சொந்தக்காரர்களாக இருப்பவர்கள் நாங்களும் பிற்படுத்தப்பட்டவர்கள் தான் எங்களுக்கும் சலுகை வேண்டுமென்றால், உண்மையிலேயே சலுகை பெறவேண்டிய வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ளவர்களின் நிலைமை என்ன என்பதை நாம் சிந்திக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கையாகும் அதைத்தான் நான் எப்போதும் வற்புறுத்துகிறேன். ஏழை, பணக்காரன், தொழிலாளி, முதலாளி என்று வரும்போது, தொழிலாளியினுடைய குடும்பத்திலே இருப்பவர்கள், அதுவும் அவன் மில்லுக்குப் போய் வேலை செய்துவிட்டு வருகின்றவன், ஆங்கிலத் தப் பற்றியோ அல்லது தமிழைப் பற்றியோ அல்லது இந்நாட்டின் நடப்புகளைப் பற்றியோ, கல்வியில் சொல்லுகின்றோமே, அதில் இருக்கின்ற அத்தனைப் பெருமைகளைப் பற்றியோ எப்படித் தெரிந்திருக்கமுடியும். தன் குழந்தைகளுக்கு தெரியும்படி எப்படி அவனால் செய்ய முடியும். வீட்டிலே பேசுகின்ற கருத்துக்கள், அவைகளை ஒட்டி இருக்குமானால் அந்தக் குழந்தைப் பருவததிலே கேட்டுக்கேட்டு அந்தக் குழந்தை 6 வயதாகும்போதே பல விஷயங்களை, கல்வித்துறை யப் பொறுத்த வரையில், கல்வியைப் பொறுத்த வரையில், அது தெரிந்து கொண்டு விடுகிறது என்பதை நாம்



(பிற்பகல் 12.30)

நினைத்துப் பார்க்கவேண்டும். ஆனால் தொழிலாளி வீட்டில் அந்த வசதி இருக்கமுடியாது. ஆகவே அந்த வசதி இல்லாத தொழிலாளி ஒரே ஜாதியைச் சேர்ந்த முதலியார் என்று வைத்துக் கொள்ளுங்கள், நாயுடு என்று வைத்துக்கொள்ளுங்கள், அல்லது வேறு எந்த ஜாதியாகவேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள், இதில் யாரையும் நான் குறிப்பிட விரும்பவில்லை. ஒரே ஜாதியிலே இருக்கின்ற ஒரு தொழிலாளி பிற்பட்டவர். அவர் வீட்டிலே எழுதபடிக்கத் தெரியாதவர்கள்தான் அத்தனை பேரும். ஆனால் அதே ஊரிலே இருக்கின்ற முதலாளி பணக்காரர். அவர் குடும்பத்திலே எல்லோரும் படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள். அவர்களும் பிற்பட்டவர்கள். அவருக்கும் சலுகை, இவருக்கும் சலுகை என்றால், அந்தக் குழந்தை எப்படி அங்கே போட்டியிட்டு அதற்கு ஈடாக அந்த இடத்தைப் பெறமுடியும்? அதற்கு இடத்தை ஒதுக்குகிறார்கள் என்றால், பெரும்பான்மையாக உள்ள அந்த ஏழை வர்க்கம், உழைக்கின்ற வர்க்கம் எப்படி உண்மையிலே முற்பட்ட சமூகமாக ஆகமுடியும்? அறிவு வளர்ச்சி பெறவேண்டும். தொழில் செய்ய வாய்ப்பு வசதி பெற்றாக வேண்டும். அதே போல் இந்த நாட்டில் எப்படி வாழத் தகுதியுண்டோ அந்தத் தகுதியைப் பெற்ற குடும்பமாக இருந்தாக வேண்டும். அப்போது சமத்துவம் இருக்கும். சமத்துவம் இருந்தால் பிரச்சனை வேறாகிவிடும். இங்கே நம்முடைய இளையபெருமாள், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஆதி திராவிடர்களுக்கு 18 சதவீதம் கொடுக்க வேண்டிய அந்தப் பணியை, இந்தசத்துணவுத் திட்டத்தில் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். யார் அவருக்கு இந்த கருத்தைச் சொன்னார்கள் என்று எனக்குத் தெரியாது. நான் அவர்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். ஒரு வேளை 18 சதவீதத்திற்கு குறைவாக இருந்தால் நாங்கள் அந்த 18 சதவீதத்தை பூர்த்தி செய்ய புதிதாக ஆட்களை நிரப்பி எப்படி சரி செய்ய வேண்டுமோ அப்படிச் செய்ய முன்வருகிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள், அதிகம் இருந்தால் என்ன செய்வது? மாண்புமிகு உறுப்பினர் இளைய பெருமாள் அவர்கள் என்ன சொல்லப் போகிறார்கள் என்று தெரியவில்லை.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அவர்களுடைய சதவிகிதாசாரப்படி இது வரையில் கொடுக்கப்பட்டிருந்தது என்பது உண்மை. ஆனால் சத்துணவு திட்டத்தில் அந்த நல்ல எண்ணத்தில் கொடுத்திருப்பதால் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இதற்காகத்தான் பேரவைத் தலைவர் அவர்களே, நான் நல்ல நண்பராக இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்களுக்கு எல்லாம் சொல்வது ஒரு கருத்தை வெளியிடும்போது அவசரப் படாமல் இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவசரப் படாமல் சொல்லுங்கள். அவசரப்பட்டு விடாதீர்கள். ஏனெனில் அன்றைய தினம் பேசும்போது சத்துணவுத் திட்டத்தைப் பற்றிச்

சொன்னார்கள். அதில் 18 சதவீதம் ஆதி திராவிடர்களுக்கு இடம் ஒதுக்கப்படவில்லை, கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். 20.29 சதவீதம் கொடுக்கப்பட்டிருக்கிறது. (மேஜையைத் தட்டும் ஒலி). இனியும் இல்லை என்று சொல்லமாட்டார் என்று நான் நினைக்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் சொல்கிறபோது, என்ன சொல்கிறார்கள் என்று கேட்டார்கள். உண்மையிலேயே அவருக்கு வசதி வாய்ப்பு இருந்து கணக்கை கொடுக்கிறார்கள், கணக்கிலே நம்பிக்கை இருக்கிறது. ஆனால் யூனியன் வாரியாகப் பார்த்து அந்த நிலைமைகளை எப்படி இருக்கிறது என்று பார்த்தால் உண்மை தெரியும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வதற்கு நான் எதிர்ப்பதாகவோ அல்லது குறை சொல்வதாகவோ கருதக்கூடாது. ஆனால் கணக்கு வைத்த விதம் இதை ஜில்லா வாரியாக யூனியன் வாரியாக பார்ப்போமானால் அப்படி உண்மையாக இருக்கும். அதற்காக நான் பாராட்டுச் சொல்கிறேன். நான் சொல்வது அவசரப்பட்டு அல்ல. ஆனால் உத்தரவு 31-ம் தேதிக்குள் தான் அவர்களில் சிலருக்கு சென்றது. அவர்களுக்கு உத்யோகம் கொடுக்கின்ற அளவுக்கு முழு விவரம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு கிடைத்து இருக்கிறதா என்பது எனக்குத் தெரியாது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வற்புறுத்திச் சொல்கிறேன். ஒரு திட்டத்தை நிறைவேற்றுகிறபோது யூனியன் என்று பார்க்க முடியாது. தாலுக்காவைப் பார்க்க முடியாது, ஜில்லாவைப் பார்க்க முடியாது. தமிழ்நாட்டைத்தான் பார்க்க முடியும். ஒட்டுமொத்தமாக எங்கெங்கே ஆட்கள் கிடைக்கிறார்களோ, தகுதி உடையவர்கள் கிடைக்ககிறார்களோ அவர்களைப் பயன்படுத்திக் கொள்கிறோம். அதுதான் இதிலே உண்மை நிலைமை. அதுவும், எங்களுடைய உத்தரவில் அந்தந்தப் பகுதியில் இருப்பவர்களைத்தான் எடுக்க வேண்டும் என்று நாங்கள் வற்புறுத்தியிருக்கிறோம். கூடுமானவரையில் அந்தந்த பகுதியில் இருப்பவர்களைத்தான் அந்தப் பணிக்கு ஏற்பாடு செய்து இருக்கிறோம். போதுமானவர்கள் அங்கேயில்லையென்றால் வெளியிலே இருந்து கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

திரு. எல். இளையபெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலமைச்சர் அவர்களிடத்தில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அந்தப் பகுதி என்றும் சொல்கிறார்கள். யூனியன் என்றும் சொல்கிறார்கள். அருகில் உள்ளவர்களைத் தான் எடுக்கவேண்டும் என்று உத்தரவிட்டதாகவும் சொல்கிறார்கள். எனக்குக் கிடைத்த தகவல்படி அந்தப் பகுதியில் உள்ள, யூனியனிலுள்ள ஆட்களுக்குக் கொடுக்கவில்லை. மேலும்,



காட்டுமன்னார்குடி பகுதியில் ஒரு அரிசனப் பெண்ணுக்கு வேலை கொடுக்கப்பட்டு, உத்தரவு போடப்பட்டு, மீண்டும் மறு நாள் அந்த உத்தரவு ரத்து செய்யப்பட்டு, வேறு ஒரு சமுதாயத்தைச் சேர்ந்த பெண்ணுக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அந்த யூனியனைச் சார்ந்தவருக்குக் கொடுக்கப் படவில்லை என்ற தகவல் வந்து இருக்கிறது. ஒட்டு மொத்தமாக இருக்கின்ற தகவல்கள் முதலமைச்சருக்கு வந்து இருக்கலாம். முதலமைச்சர் சொல்வதை நான் குறை கூறவில்லை. இன்றைய தினம் உள்ள பாபுலேஷன் அடிப்படையில் 1 5 அரிசன் பாபுலேஷன் இருப்பதால், 20% அவர்களுக்கு வேலை கொடுக்கவேண்டும். தற்போது கொடுக்கப்படுகின்ற 18% என்பதை 20% என்று உயர்த்தவேண்டும் என்று கூட முதலமைச்சர் அவர்களிடத்தில் தனிப்பட்ட முறையில் நான் சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளையபெருமாள் பெயரிலே இளையபெருமாளே தவிர அவர் முதியபெருமாள் தான் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அவர்கள் முதிர்ந்த அரசியல்வாதியாக இருக்கிறார் என்பது அவருடைய பேச்சு எடுத்துக்காட்டுகிறது. அதிலே எனக்கு எதிர்ப்பும் இல்லை, வருத்தமும் இல்லை. ஆனால் அவர் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். நான் மீண்டும் வற்புறுத்திக் கூறுகிறேன். எல்லா இடங்களிலும், தேவையான ஆதிதிராவிடர்கள் இருக்கிறார்கள் என்று நீங்கள் கருதுகிறீர்களா ? அந்த விகிதாசாரப்படி எங்கெங்கே எவ்வளவு பேர் தேவையோ அந்த அளவிற்குப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அப்படிப் பயன்படுத்தவில்லை என்று உங்களால் சொல்ல முடியுமா ?

அவர் ஒரு பிரச்னை சொன்னார். ஒருவரை பணியில் அமர்த்திவிட்டு, பிறகு அதை ரத்து செய்து, வேறு ஒருவரைப் போடுவது என்றால் ஒரு ஜாதியின் பெயரால் அந்த மாற்றம் செய்யப்படவில்லை என்பதையும் அதற்கு வேறு காரணம் இருந்தது என்பதையும் இந்த நேரத்தில் தெளிவான வகையில் அதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அது என்ன காரணம் என்பதை பின்னாலே தனியாகக் கேளுங்கள். அந்த விவரம் சொல்கிறேன். அதற்குப் பின்னால் இதைப்பற்றி நீங்கள் பேச மாட்டீர்கள்.

ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் போன்றவர்கள் எல்லாம் ஒடுகிறார்கள். அவர்கள் பத்திரிகைகளில் அறிக்கை வெளியிடுகிறார்கள், பேசியிருக்கிறார்கள். நான் ஒவ்வொரு பிரச்னையாகப் போகலாம் என்று கருதுகிறேன். சில முக்கியமான பிரச்னைகளை கடைசியில் வைத்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன். காரணம் அதிலே யாராவது சந்தேகம் கேட்டால், உடனடியாக அவர்களுக்கு பதில் சொல்ல வாய்ப்பாக இருக்கும். அந்த வகையில் அவற்றைப் பின்னாலே வைத்துக்கொண்டு இந்தப் பிரச்னையைப் பேசுகிறேன். அதிகாரிகள் எந்த வகையில்

போகிறார்கள் என்றால், தாங்களாகவே பல்வேறு நிலைமைகளின் காரணமாகப் போனார்கள். ஒருவர் அந்த வேலையை விட்டுப் போவதற்கு முன்னதாக, இன்னொரு வேலையை ஏற்படுத்திக் கொண்டு அவருடைய சம்பளத்தையும் பேசி, அக்ரிமென்ட் போடாத அளவில் அக்ரிமென்டையும் வைத்துக்கொண்டு இங்கே ராசினாமா கடிதம் கொடுத்தார். நான் கேட்டேன். மிகப் பெரிய பொறுப்பில் உங்களை வைத்து இருக்கிறேன். நீங்கள் ராசினாமா செய்கிறீர்களே, என்ன காரணம் என்று கேட்டேன். எனக்குப் பத்திரிகை உலகில் வேலை செய்ய வேண்டுமென்று ஆசையாக இருக்கிறது. என்னுடைய ஆம்பிஷன் பூர்த்தியடைய உத்தரவு கொடுங்கள் என்று கேட்டார். அனுப்பி வைத்தோம்.

(பிற்பகல் 12—40)

இப்படி பலர். இன்னும் சிலர் தவறு செய்துவிட்டு 'டிஸ்மிஸ்' வந்துவிடுமோ, அந்தத் துறை நடவடிக்கை வேறு வந்துவிடுமோ என்று அஞ்சி, அவர்கள் முன் எச்சரிக்கையாக ராஜினாமாச் செய்துவிட்டுப் போய்விடுகிறார்கள் என்பதை இங்கே நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதிலும் ஒரு மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தவர் முன்பு வளர்ச்சிப் பணிகளை ஒழுங்காகச் செய்ய வேண்டுமென்று சொல்லி, இங்கே வடாற்காடு மாவட்டத்தைப் பற்றியெல்லாம் சொன்னார்களே, அந்தப் பகுதிக்கு நான் சென்றபோது பார்க்கப் போனேன். ஒரு ஏரியின் கரைகளை உயர்த்திக்கொண்டிருந்தார்கள். 7, 8 அடி உயர்த்திவிட்டார்கள். நான் சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்தபோது இத்தனை பேர் வேலை செய்கிறார்கள், அவர்களுக்கு பணம் கிடைக்கிறது, வாழ்க்கை ஓரளவுக்கு நிம்மதியாக கழியும்; தண்ணீர் இல்லாவிட்டாலும் கூட எப்படியாவது வாழமுடியும் என்று சொல்லி, திருப்தி பட்டுக்கொண்டு வந்தேன். அங்கே ஒரு பாதை, அதாவது சாலை. அந்த சாலையில் 7, 8 அடி உயர்த்தியிருந்தார்கள். அதிலே மதகு சுவர் போல் கட்டியிருந்தார்கள். அதற்கு இடையில் பாலம். அந்தப் பாலம் சாலை எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறதோ அந்த அளவுக்குத்தான் இருக்கிறது. அதை விட்டுவிட்டு அதற்கு அடுத்தப் பக்கத்தில் 7, 8 அடி மறுபடியும் உயர்த்திக் கொண்டிருந்தார்கள்; வேலை செய்து கொண்டிருந்தார்கள். நான் கேட்டேன். இங்கே இப்படி சுவரை எழுப்பி விட்டுவிட்டீர்களே, தண்ணீர் தேங்க வேண்டாமா? தேங்க வேண்டிய தண்ணீர் இந்த வழியே வெளியே போய்விடுமே, இது என்ன திட்டம் என்று கேட்டேன். அவர் வேலையை விட்டுப் போகும் வரையில் அதைச் சரிசெய்யவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்; வேதனைப்படுகிறேன்.

அதைப்போன்று பல தவறுகள். இங்கே இருந்துகொண்டு இன்னொரு மாநிலத்தில் ஒரு நிதிக் கமிட்டியில் உறுப்பினராக இருப்பது; அந்தக் கமிட்டிக்கு கும்பகோணத்தில் நிதி சேர்ப்பது கேட்டால் நான் ராஜினாமா செய்கிறேன் என்று சொல்வது பிறகு நான் ஏன் ராஜினாமா செய்ய வேண்டுமென்று கேட்பது



நீங்கள் செய்வது தவறு, ஆட்சியினுடைய, மேலதிகாரிகளுடைய உத்தரவு இல்லாமல், அனுமதி பெறாமல் செய்திருக்கக்கூடாது' செய்தது தவறு, ஏன் செய்தீர்கள் என்று கேட்டால் பதில் இல்லை. சரி, நீங்கள் இந்த வேலைக்குப் போங்கள் என்று சொன்னால் ஓய்வு எடுத்துக்கொள்கிறார்கள். இப்படிப் பட்டவர்கள்மீது நடவடிக்கை எடுக்காமல் வேறு என்ன செய்வது? அதுவும் நாங்கள் கடுமையான நடவடிக்கை எடுக்கவில்லை.

நான் மீண்டும் சொல்கிறேன். அவர்கள் துறையின் மூலமாக் கேள்வி கேட்டு, ஏன் உங்கள்மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று சஸ்பென்ட் செய்யத் தயாரானால் உடனே பத்திரிகையிலே செய்தி வருகிறது. உடனே எந்தெந்த வகையிலே விளம்பரம் கொடுக்க வேண்டுமோ அந்த வகையிலே விளம்பரம் கொடுக்கப் படுகிறது.

நான் இங்கே இருக்கின்ற மாமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் கேட்கிறேன் சபாநாயகர் மூலமாக. ராயப்பா நிலைமை என்ன? ராயப்பா என்ன நிலைமைக்கு ஆளானார்? அவரைப்பற்றி யாருக்காவது இப்போது நினைவு இருக்குமா? இருக்காது. ஆனால் அவர்மீது வழக்கு இருக்கும்போது ஒருமுறை என்னை வந்து பார்த்தார். வந்தவர் என் அருகிலே வந்து மேசைக்குப் பக்கத்தில் உட்கார்ந்தார். இரண்டு பாக்கட்டிலே இருந்தும் இரண்டு துப்பாக்கிகளை எடுத்து வைத்தார். இது என்ன என்று கேட்டேன். என் உயிருக்கு ஆபத்து, வெளியே நடமாட முடியாத நிலை இருக்கிறது என்று சொன்னார்.

இன்றைக்கு எந்த அதிகாரியாவது அரசுக்கு எதிராக ஒன்றைச் சொல்லி, இப்படி அஞ்சவேண்டிய நிலைமை இருக்கிறதா என்பதை தயவுசெய்து இந்த மன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏதோ அதிகாரிகள் விஷயத்தில் தலையிடக் கூடாது என்கிறார்கள். ஒரு பக்கத்தில் நீங்கள் அலட்சியம் காட்டு கிறீர்கள் என்கிறார்கள். இப்போது துணைத் தலைவர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள்; நான் அதை நினைவில் வைத்துக்கொண்டு பேசுகிறேன்.

நீங்கள் எல்லாவற்றையும் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஒப்படைத்து விட்டீர்கள். பிறகு நீங்கள் எதற்காக என்ற கேள்வியைக் கேட்டார்கள். நாங்கள் கவனிக்கத்தான் வேண்டும். ஆனால் மாவட்டத்திலே என்ன நடக்கிறது, மாவட்டத்திற்கு என்ன தேவை என்பதை அவர்கள் விசாரித்து அரசுக்குத் தகவல் கொடுக்க வேண்டாமா? அதை பரிசீலித்துப் பார்க்க வேண்டாமா?

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோது, தலைமை செயலாளராக இருந்த பின்னர் அந்த நிலையிலேயிருந்து வேறு நிலைக்கு மாற்றப்பட்ட ஒரு அதிகாரியினுடைய பெயரைச் சொல்லி ஒரு செய்தியை குறிப்பிட்டார்கள். அந்த அதிகாரி நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முன்னாலே வந்து — அப்போது முதலமைச்சராக எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்தாரா அல்லது இல்லையா என்பதன் காலகட்டம் எனக்குத் தெரியாது — இரண்டு துப்பாக்கிகளை எடுத்து வைத்து, அந்த துப்பாக்கிகளை காட்டி என்னுடைய உயிருக்கு ஆபத்தான நிலைமை இருக்கிறது, அதனாலே துப்பாக்கி வைத்திருக்கிறேன் என்று அவர் சொன்னாராம். சொன்னதாக முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதிலிருந்து என்ன தொனி தொனிகிறது என்பதை முதலமைச்சர் அவர்கள் உணர முடியும் என்று நான் நம்புகிறேன். ஒரு அரசாங்கம் அது தி.மு.க. அரசாங்கமோ, எந்த அரசாங்கமோ, ஒரு தலைமைக் செயலாளரை அந்தப் பதவியிலேயிருந்து விலக்க முயல்கிறது, விலக்க முடியும். விலக்குவது அன்றைய சட்டப்படி மட்டும் அல்ல, இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்களே சொல்லுகிறார்களே அதன்படி, அவர்களுடைய நம்பிக்கைக்கு உகந்தவராக இல்லாமல் இருந்திருக்கலாம். அதனாலேயே அவருடைய உயிருக்கு ஆபத்து, அந்த அரசாங்கம் ஏற்படுத்தக் கூடிய நிலைமை இருந்தது என்று ஒரு தலைமைச் செயலாளராக முன்னாலே இருந்தவர் சொன்னதாக ஒரு கருத்தை முதலமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்களே, அதிலே உள்நோக்கமோ தகராறுகளோ ஏற்படாமல் இருக்க, அப்படி ஏற்படுமானால் முதலமைச்சர் அவர்கள் அதற்கு பொறுப்பா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிப்படையாக சொல்லும் போது உள்நோக்கத்திற்கு இடமேயில்லை. அதைத்தான் சொல்லுகிறேன். (குறுக்கீடு) அவசரப்படாதீர்கள். அதை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், அன்று இங்கிருந்த ஆட்சியில் அவரைப் பொறுத்தவரையில், தான் எங்கும் வெளியில் செல்ல முடியாத நிலைமையில் இருக்கிறது. எந்த நேரத்தில் ஆபத்து வரும் என்று எனக்குத் தெரியாமல் இருக்கிறது என்று சொன்னார்கள் என்பது மட்டுமல்ல, வழக்கில் கூட சில கோப்புகளை வழக்கு முடியும் வரை காண்பிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுக் கூட சொல்லப்பட்டது. இன்றையதினம் அதிகாரிகள் எப்பொழுது வேண்டுமானாலும் நீதிமன்றத்திற்கு போகிறார்கள்.



இங்கே ஒரு செய்தியை நான் சொல்லியாக வேண்டும். இன்றையதினம் நீதிமன்றம் எப்படி இருக்கிறது என்றால், இங்கே மாற்றாந்தாய் மனப்பான்மை, மாற்றாந்தாய் மனப்பான்மை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்களே — உண்மையிலேயே நீதிமன்றத்திலே இருக்கக்கூடிய சில நீதிபதிகள் — நான் முதலமைச்சர் என்கிற முறையிலே பொறுப்பிலே இருந்து தான் பேசுகிறேன் — மாற்றாந்தாய் போல, உண்மையை விசாரிக்காமலேயே, அரசுக்குத் தகவல் கொடுக்காமலேயே தீர்ப்பு அளிக்கின்ற நிலைமை இந்த நாட்டிலே இருக்கிறது என்பதை இங்கே நான் குறிப்பிடுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். (குறுக்கீடு)

ஆதாரம் இன்றி நான் பேசமாட்டேன் என்பதை தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்துக் கொள்ளவேண்டும். அரசிடம் கேட்டு என்ன நிலைமை என்பதை தெரிந்துக் கொள்வதற்குக் கூட வாய்ப்பளிக்காமல் தீர்ப்பளிக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. எதற்கெடுத்தாலும் தடை. சட்டத்திற்கு நியாயம் இருக்கிறதோ இல்லையோ — இது எல்லாம் நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் அவர்களுக்குப் பாதுகாப்பை யார் அதிகம் கொடுக்கிறார்கள் என்றால், இந்த அரசுதான் என்பதைச் சொல்கிற அதே நேரத்தில், நாங்கள் நடுநிலைமையோடு நேர்மையாக நடந்துக் கொள்கிறோம் என்பதை எடுத்துக் காட்டத்தான் இங்கே குறிப்பிட்டேன்.

நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான் ஒவ்வொரு நீதிபதியின் வீட்டிற்கும் காவல் துறையினரை நாங்கள் காவலாக நியமித்தோம். காவல் கிடையாது அதற்கு முன்பு. நானே கேட்டேன். யார் யாருக்கோ தண்டனை விதிக்கிறீர்களே, யாராவது துணிந்து ஏதாவது செய்து விட்டால் உங்களுக்கு என்ன பாதுகாப்பு என்று கேட்டேன். அதற்குப் பிறகுதான் நான் ஏற்பாடு செய்தேன். அதை ஏன் செய்கிறோம் என்றால், எங்களுக்கு நீதி வழங்கவில்லை என்றாலும், என்றைக்காவது ஒருநாள் நீதி வெல்லும் என்று நான் 10 ஆண்டுகளுக்கு முன்னாலே சொன்னதைப் போல, இன்றும் சொல்கிறேன், இங்கும் நீதி வெல்லும் நாங்கள் சொன்னது, செய்தது சரியானது என்பதை அந்த நீதி நிரூபிக்கும் என்பதை நம்பி, நாங்கள் காரியம் செய்து கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

எனவே, நான் இங்கே இதைப்போன்ற பல விவரங்களை சொல்லவேண்டும் என்ற முடிவுக்கு வந்திருக்கிறேன். சிலர் கேட்டார்கள். சங்கரய்யா அவர்கள் கேட்டார்கள் — (குறுக்கீடு) நாங்கள் ஒரு கட்சிக்கு துணை நிற்கிறோம் என்றால் ஏன் எதிர்க்கிறோம் என்றால் ஏன், என்பதற்கு நாங்கள் விளக்கம் சொல்லத்தான் போகிறோம் அந்த விவரங்களை விரிவாகவும், விளக்கமாகவும் சொல்லத்தான் போகிறோம் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 12–50)

3. அறிவிப்பு—தொடர்ச்சி.

(ஆ) தலைமைச் செயலாளரிடமிருந்து செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. முதல்வர் அவர்களுக்கு ஒரு செய்தி தலைமைச் செயலாளரிடமிருந்து வந்திருக்கின்றது. எனவே அவர்கள் அவசரமாகப் போகவேண்டி இருப்பதால் அவர்களது உரையினை தற்போது இத்துடன் நிறுத்திக்கொண்டு பின்னர் நாளை மறுநாள் தொடருவார்கள்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 4–2–1983 காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 12.51 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

129. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து 6–10–1982 ஆம் தேதியிடப்பெற்ற உள்துறையின் 2513 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

130. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து 21-10-1982 ஆம் தேதியிடப்பெற்ற உள்துறையின் 2658 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

131. பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் 1980–81 ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது ஆண்டறிக்கை (ஆங்கிலம்), [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

—எதுவுமில்லை—

4—2—1983


. வினாக்கள்—விடைகள்: 231—263

உடுக்குறியிட்ட வினாக்கள்

. தகவல் கோரல்:

(அ) முன் அனுமதியின்றி எழுப்பப்படும் பிரச்னைகள் 264

(ஆ) அதிகாரிகள் மாடம் காலியாகயிருத்தல் 310—311

3. ஒத்திவைப்புத் தீர்மானம்:

கர்நாடக மாநில சட்டமன்றப் பேரவையில் உறுப்பினர் தமிழில் உறுதிமொழி எடுத்துக் கொண்டதற்காக வெளியே தாக்கப்பெற்றது 265—271

கவன ஈர்ப்புகள்:

(அ) மற்ற மாநிலங்களிலிருந்து நுகர்பொருள் வாணிபக் கழகம் அரிசி கொள்முதல் செய்வது 271—274

(ஆ) குடியாத்தம் திருமகள் பஞ்சாலை மூடல் 274—278

5. அறிக்கை அளித்தல்:

(அ) பொது நிறுவனங்கள் குழு 279

(ஆ) பொது கணக்குக் குழு 279

6. அரசினர் சட்ட முன் வடிவு:

சென்னை மாநகர் காவல்—தமிழ்நாடு மாவட்டக் காவல் (திருத்த) சட்டமுன் வடிவு, 1983. 279—293

7. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்—(தொடர்ச்சி): 293—308

- மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் 293—307

8. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதி நிலை 308—310, 312—347

அறிக்கை—விவாதம்:

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் 308

திரு. பெ. சு. திருவேங்கடம் 308—310, 812—317

| | |
|---|---|
| திரு. தி. அன்பழகன் | 317—326 |
| திரு. சி. பழனிமுத்து | 326—330 |
| திரு. ந. குலசேகரபாண்டியன் | 331—334 |
| திரு. கு. ரமணி | 334—347 |
| 9. அறிவிப்பு: | |
| பேரவை அலுவல் | 347—348 |
| 10. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள் | 348—349 |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.
வெள்ளிக்கிழமை, 1983 பிப்ரவரி 4
தை 22, துந்துபி—திருவள்ளுவர் ஆண்டு 2014.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும்".

தூய்மையான மனம், மக்களுக்குப் பலவகையான நன்மைகளைத் தரும். நல்ல தோழர்களின் சேர்க்கை, இவ்வுலகில் எல்லா வகையான புகழையும் தரும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### இராமேஸ்வரம் அருகேயுள்ள தீவுகள் அனைத்தையும் அரசுடைமை ஆக்கும் திட்டம்.

* வினா எண். 121—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம் அருகே உள்ள முயல்தீவு, கீழக்கரை அருகே உள்ள தனியார் தீவுகள் அனைத்தையும் (தனியார் தீவுகளை) அரசுடைமை ஆக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மன்னார் வளைகுடாவில், திருநெல்வேலி மற்றும் இராமநாதபுரம் கடலோரப் பகுதிகளையொட்டி உள்ள 21 சிறிய தீவுகளை உள்ளடக்கி தேசிய கடல்பூங்கா (Marine National park) ஒன்று அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது. இத்தீவுகளில் முயல்தீவு, மற்றும் தனியாருக்குச் சொந்தமான நல்ல தண்ணீர் தீவு போன்றவைகளும் அடங்கும்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் அருகிலுள்ள முயல்தீவு அடுத்து கீழக்கரை அருகிலுள்ள தீவுகள் எல்லாம் ஏற்கனவே ராமநாதபுரம் ஜாமீனுக்கு சொந்தமானதாக இருந்தது, ஜமீன் ஒழிப்பு சட்டத்தின் கீழ் ஜமீன் சொத்துக்களை எல்லாம் எடுக்கும்போது இந்தத் தீவுகளை அந்த நேரத்தில் எடுக்காத

அதற்கு நடவடிக்கைகள் எடுத்து கையகப்படுத்தலாம். அதில் அதிகமாக இடைஞ்சல்கள் இருக்காது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கையகப்படுத்துவதற்கான அறிக்கை ஒன்றினை நமக்கு தந்திருக்கிறார்கள். இந்த தீவுகளை மரைன் நேஷனல் பார்க்குக்காக உருவாக்குவதற்கான காரணம் அங்கு அபூர்வமான கடல் பறவைகள், கடல் மீன் வகைகள், கடல் தாவரங்கள் முதலியன இருக்கின்றன. அது மட்டுமில்லாமல் பவழப் பாறைகள் அங்கே இருக்கின்றன. இதையெல்லாம் மனதிலே வைத்து தான் அதை பூங்காவாக்க வேண்டுமென்ற செயல்குறிப்பு வல்லுநர்களால் கூறப்பட்டு மத்திய அரசு, மாநில அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,, இந்த குருசடி தீவிலே ரிசர்ச் ஸ்டேஷன் இருக்கிறது. அந்த நிலையம் சரியான முறையில் பாதுகாக்கப்படாமல் இருக்கிறதால் மற்ற தீவுகளை கையகப்படுத்துகிற வரையில் காத்திராமல் இந்தத் தீவினை உடனடியாக அரசு எடுத்து நேஷனல் மரைன் பூங்காவாக மாற்றுவதற்கும், ரிசர்ச் ஸ்டேஷன் சரியான முறையில் பழுது பார்ப்பதற்கு அதைத் தொடர்ந்து நடத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற தகவலை வைத்து என்ன நடவடிக்கை எடுக்கலாமோ அதை அரசு எடுக்கும்.

Payment of Hill allowance to employees in Hosur.

*Question No. 122. TAIRU T. VENKATA REDDY: Will the Hon. the Minister for Finance be pleased to state

a) Whether the pay Commission has declared Hosur as Hill area, and recommended payment of Hill allowance to the employees ; and

b) if so, the action taken by the Government?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம். அத்துடன் கடல்மட்டத்திலிருந்து 1000 மீட்டர் உயரத்திற்குக் குறைவாக உள்ள இடங்களுக்கு மலைவாழ் இடப்படி வழங்கப் படக்கூடாது என்ற கருத்தினையும் தெரிவித்துள்ளது.



(ஆ) ஒசூர் தேன்கனிக்கோட்டை வட்டங்களிலும் அவற்றை அடுத்தமைந்துள்ள பகுதிகளிலும் பணிபுரியும் அரசுப் பணியாளர்களுக்கு மலைவாழ் இடப்படி வழங்கும் திட்டம் பொருத்தமான வகையில் நீட்டிக்கப்பட வேண்டுமென்று தமிழ்நாடு மூன்றாம் சம்பளக் குழு பரிந்துரைத்தபோதிலும் மலைவாழ் இடங்களென குறிப்பிடப்படுகிற பகுதிகள் கடல் மட்டத்திலிருந்து 1000 மீட்டர் உயரத்திற்குக் குறைவாக அமைந்திருத்தல் கூடாது என்றும் இக்குழு வரையறுத்துள்ளது. பரிசீலனை செய்ததின் பேரில் ஒசூரில் மக்கள் வசிக்கும் பெரும்பான்மையான பகுதிகள் கடல் மட்டத்திலிருந்து 1000 மீட்டர் உயரத்திற்குக் குறைவாக உள்ளன என்று அறியப்பட்டது. எனவே ஒசூரில் பணிபுரியும் அரசுப் பணியாளர்களுக்கு மலைவாழ் இடப்படி வழங்கப்படவில்லை.

THIRU T. VENKATA REDDY: Hon. Speaker Sir, tin he report of the Third Pay Commission, Thiru Sadasivam's Pay Commission, it has already been stated that in Hosur Taluk, there are many places which are more than 1500 meters high above the sea level. The Commission has also recommended that a fresh measuring of the height in that area should be done. What steps the Government have taken so rectify the defect which has crept in during the British regime. What steps have been taken to measure the altitude of that area

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1,000 மீட்டருக்கு மேலே உள்ள பகுதிகளுக்கு மலைவாழ் இடப்படி வழங்க வேண்டுமென்று எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது. குறைவாக உள்ள பகுதிகளுக்கு இல்லையென்று ஊதியக்குழு பரிந்துரை செய்துள்ளது. ஒசூர் பகுதியைச் சேர்த்துப் பார்த்தால் அந்த நிலைமை ஏற்படவில்லை. கடல்மட்டத்திற்கு ஆயிரம் மீட்டர் அதிகமாக அங்கொன்றும், இங்கொன்றுமாக இருக்கிற சில பகுதிகளில் இருப்பவர்கள் தனியாக முறையீடு செய்ததன் காரணமாக அவர்களுக்கு மட்டும் மலைவாழ் இடப்படி வழங்கலாமென்று அரசு முடிவுசெய்திருக்கிறது. ஒசூரைப் பொறுத்தவரையில் அரசு பரிசீலித்து தக்க முடிவினை எடுக்கும்.

THIRU T. VENKATA REDDY: Whether the Government have taken any steps recently to measure these areas afresh

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உயரத்தை அளப்பதற்கு அரசு ஏதாவது முடிவு செய்திருக்கிறதா என்பதை உறுப்பினர் அறிய விரும்புகிறார்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு வகைகளில் குறிப்பிட்டிருக்கிற சர்வே முறையின் மூலமாகவும், ஏற்கெனவே இருக்கிற ரெக்கார்டுகள் மூலமாகவும் தான் அந்த உயரத்தை கணக்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை அப்போது ஏன் எடுக்கவில்லை என்பதற்கான காரண விளக்க குறிப்புகள் என்னிடம் இல்லை. ஆனால் இப்போது அந்தத் தீவுகளில் சில பகுதிகள் தனியாருக்குச் சொந்தமாக இருக்கிறது. அந்த தனியாருக்குச் சொந்தமாக இருக்கும் பகுதிகளை நாம் சட்டப்படி கையகப் படுத்த வேண்டும். கையகப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கான அறிக்கை ஒன்றை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அனுப்பிவைத்துள்ளார்கள். அதைப்பற்றி தனியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து மகா சமுத்திரத்தில் தங்கள் கப்பல் படைதளங்களை அமைக்க உலக வல்லரசுகள் முழு மூச்சுடன் பாடுபட்டு, டிகோகார்சியா தீவில் ஸ்தலம் ஸ்தாபித்துள்ள இந்த சூழ்நிலையில் இந்த தனியார்கள் தங்கள் தீவுகளை வல்லரசுகளுக்கு கொள்ளை விலைக்கு விற்கும் ஆபத்து உள்ளது அல்லவா? இந்நிலையை தடுக்க அரசு தேவையான நடவடிக்கை எடுக்குமா? இந்த தீவுகளில் வல்லரசுகளின் உளவாளிகள் இல்லாதபடி கண்காணிப்புகள் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் திருநெல்வேலி மாவட்டம் அருகிலுள்ள தீவுகளில் எந்த வல்லரசும் கரை ஏறி வந்த மாதிரி இல்லை. இந்த அரசு மத்திய அரசு மீதி அங்கு இருக்கிற தனியார்கள் யாரும் எந்த வல்லரசுக்கும் இந்த நிலங்களை விற்று விடவும் முடியாது. 21 தீவுகளில் பெரும்பாலான தீவுகள் அரசுக்குச் சொந்தமான தீவுகள். சில தீவுகளில் தனியாருக்கு சொந்தமான சில நிலங்கள் இருக்கின்றன. அதை எப்படியும் கையகப்படுத்த வேண்டும் அதை அவர்கள் தடுக்க இயலாது. இதை கையகப்படுத்திய பிறகு இந்த 21 தீவுகளையும் சேர்த்து இந்த மேரைன் நேஷனல் பார்க் அமைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறன. இதற்கு மத்திய அரசு தன்னுடைய ஒப்புதலை தந்து இருக்கிறது. ஒரு குழு அமைக்கவும் அவர்கள் ஒப்புதல் தந்திருக்கிறார்கள். குழு அமைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி: மாண்புமிகுபேரவைத் தலைவர் அவர்களே, குழு அமைப்பதாகச் சொன்னார்கள், அந்தக் குழுவில் யார்யாரைப் போடுவதாக இருக்கிறது. எம்.எல்.ஏ.க்கள் அதில் இடம் பெறுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு குழு ஒன்றை அமைக்க தமது ஒப்புதலை மத்திய அரசு தெரிவித்திருக்கிறது. மாநில திட்டக் குழு உறுப்பினர் திரு. வி. சிவராமன் அவர்களை தலைவராக கொண்டு 7 உறுப்பினர்கள், வல்லுநர்களைக்



கொண்ட குழு ஒன்று அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. அந்த உறுப்பினர்கள் பெயர்ப் பட்டியல் தற்போது என் கையில் இல்லை. அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற யோசனையும் மனதில் வைத்து எந்த அளவிலே இந்த குழுவை அமைக்கலாமோ அந்த அளவில் அதை அமைக்கலாம். அதற்கான ஆணை இன்னும் பிறப்பிக்கப்படவில்லை. ஆணை பிறப்பிக்கப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் இடத்திலே இருக்கும் இந்தத் தீவுகளில், தற்சமயம் அங்கே ஏதாவது தொழில் நடைபெற வசதி இருக்கிறதா? அல்லது விவசாயம் செய்வதற்கு ஏற்றதாக இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றி முழு விவரக் குறிப்புகள் இல்லை. பெரும்பாலும் இந்தத் தீவுகள் மீன் பிடிப்பதற்கு பயன்படுத்துகின்ற வகையில் அவர்கள் கரையேறி வருவதற்கும், வலைகள் மற்றவைகள் சேர்த்து வைப்பதற்கும் அங்கிருந்து ஆழ்கடலுக்கு செல்வதற்கும் அந்த முறைகளில் தான் பயன்படுத்தப்பட்டு வருகிறதே தவிர விவசாயத்திற்கோ வேறு வகையில் தொழில் ஆரம்பிப்பதற்கோ இந்த தீவுகள் பயன்படும் அளவில் இல்லை.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது தனிப்பட்டவர்களுக்கு சொந்தமாக சில தீவுகள் இருக்கிறது என்று சொன்னார்கள். ஜமீன் ஒழிப்பு முறைப்படி அந்த தனிப்பட்ட தீவுகள் அவர்களுக்கு என்ன வகையில் ஒதுக்கப்பட்டிருக்கிறது? அப்படி தனிப்பட்டவர்களுக்கு இருந்தாலும் அதை எடுத்துக் கொள்வதற்கு அரசாங்கம் என்ன வகை செய்திருக்கிறது? அப்படி எடுப்பதிலே நமக்கு ஏதாவது சங்கடம் இருக்கிறதா? இதைப்பற்றி மத்திய அரசுக்கு ஏதாவது தெரிவித்து இருக்கிறீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஜமீன் ஒழிப்புத்திட்டத்தின் அடிப்படையில் என்ன நடைபெற்றது என்ன நடைபெற்றிருக்க வேண்டும் என்ற விவர குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. தனியாருக்கு சில நிலங்கள் சொந்தமாக இருக்கின்றன. அதை நாம் கையகப்படுத்துவதற்கு உரிமை இருக்கிறது.

கிட்டு வருகிறோம், சில பல இடங்களில் 1,000 மீட்டருக்கு மேலாக இருக்கிறதென்று தெரிவிக்கப்பட்டதன் பேரில் அந்தப் பகுதியில் வாழ்கிற அரசு ஊழியர்களுக்கு இந்தத் திட்டத்தன்படி மலைவாழ்ப்படி வழங்கலாம் என்று முடிவு, செய்து, அதுபற்றி அரசு பரிசீலித்து விரைவிலே ஆணை பிறப்பிக்கவிருக்கிறது. சில இடங்களில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போல சந்தேகம் இருக்குமானால் அதை மீண்டும் அளக்க வேண்டுமென்று விரும்புவார்களானால் அதுபற்றி அரசு தக்க நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது.

*திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடல் மட்டத்திலிருந்து ஆயிரம மீட்டருக்கு அதிகமாக இருக்கிற இடங்களில் பணி புரிபவர்களுக்கு மலைவாழ் இடப்படி வழங்க அரசு அறிவித் திருக்கிறது என்றும், ஊதிய கமிஷன் சிபார்சு ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது என்றும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அம்பாசமுத்திரத்தில் இருக்கக்கூடிய மாஞ்சோலை 1,000 மீட்டர் உயரத்திற்கு மேல் இருக்கிறது. அதேபோல நாலுமுக்கு காக்காச்சி 4,200 அடிக்கு அதிகமான உயரத்தில் இருக்கிறது. மின்சார இலாக்கா தன் ஊழியர்களுக்கு மலைவாழ்ப்படி கொடுத்து விட்டது. ஆனால் நம்முடைய அரசு ஊழியர்கள் கல்வி இலாக்காவில் பணிபுரிபவர்களுக்கு இது வழங்கப்பட வில்லை. தங்களுக்கும் மலைவாழ் இடப்படி வழங்க வேண்டு மென்று ஆசிரியர்கள் முறையீடு செய்திருக்கிறார்கள். அதுபற்றி அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மூலக்கேள்வியோடு தொடர்பில்லாத காரணத்தினால் அது பற்றிய விளக்கக் குறிப்புகள் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட்டாலோ அல்லது தனியாக அந்தத் துறையினருக்கு அதுபற்றி எழுதுவார்களேயானால் அதுபற்றி கவனித்து ஆவன செய்யப்படும். நான் குறிப்பிட்டபடி ஆயிரம் மீட்டருக்கு மேலே இருந்து அவர்கள் வாழ்கிற பகுதி இருக்கு மானால், அங்கேயிருக்கிற அரசு ஊழியர்களுக்கு மலைவாழ்படி தரலாம் என்று பொதுவாகவே நாம் உத்தரவிட்டிருக்கிறோம். எங்கேயாவது தவறிவிட்டிருக்குமானால் அதை மீண்டும் பரிசீலிக்க அரசு ஆயத்தமாக இருக்கும்.





திரு. என். வரதராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே. இந்த மலைவாழ்படியைக் கொடுப்பதற்கு ஆயிரம் மீட்டர் அளவு என்று சொன்னார்கள். அந்தப் பகுதியிலே வாழும் படியான மக்களுக்குக் கூடுதல் செலவு நிச்சயமாக இருக்கிறது என்று நாம் அறிகிறோம். ஆகவே, இந்த ஆயிரம் மீட்டரைக் குறைத்து, அவர்களுக்குக் கூடுதல்படி கொடுப்பதற்கான ஆலோசனையை அரசு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆயிரம் மீட்டருக்கே இன்னும் கொடுக்கவில்லையென்று சொல்கிறார்கள். ஆயிரம் மீட்டரை அதற்குள்ளே ஏன் [illegible]?

மீனளத்துறையில் பெண்களுக்கென்று தனி கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 123—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீனளத் துறையில் பெண்களுக்கென்று தனி கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கும் செயற்குறிப்புள்ளதா?

(ஆ) ஆம் எனில் இதுவரை எத்தனை சங்கங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

(இ) எத்தனை பேர் அங்கத்தினராகச் சேர்க்கப் பட்டுள்ளனர்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மற்றும் (ஆ) இதுவரை மூன்று சங்கங்கள் கீழ்க்கண்ட இடங்களில் அமைக்கப் பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| (1) செங்கல்பட்டு மாவட்டம் | .. | திருச்சினாங் குப்பம் |
| (2) தஞ்சாவூர் மாவட்டம் | .. | காரையூர் தெரு |
| (3) திருநெல்வேலி மாவட்டம் | .. | தருவைக்குளம். |

(இ) சேர்க்கப்பட்டுள்ள அங்கத்தினர்கள் எண்ணிக்கை பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| (1) திருச்சினான்குப்பம் | .. | 263 |
| (2) காரையூர் தெரு | .. | 186 |
| (3) தருவைக் குளம் | .. | 142 |
| மொத்தம் | .. | 591 |

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** கூட்டுறவு நிறுவனங்களை பொறுத்தமட்டில் திருவண்ணாமலை கூட்டுறவு நகர வங்கி நகைக்கடன் தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறது. வேலூர் மத்திய கூட்டுறவு வங்கியின் கிளைகள், கூட்டுறவு விவசாய வங்கிகள் மற்றும் விவசாய சேவை கூட்டுறவுச் சங்கங்கள் முதலியன திருவண்ணாமலை மற்றும் செங்கம் பகுதிகளில் குறைந்த அளவில் நகைக் கடன்கள் வழங்குகின்றன.

நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் தனியார் வங்கிகள் கூட்டுறவுத் துறையில் பொறுப்பில் இல்லை.

**திரு. த. வேணுகோபால் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறுகின்றபோது திருவண்ணாமலை நகர்ப்புற வங்கி, வேலூர் கூட்டுறவு வங்கி ஆகியவற்றில்— அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளைத் தவிர நகைக்கடன்கள் வழங்கப்படுகின்றன என்று தெரிவித்தார்கள். ஆனால் கடந்த ஒரு ஆண்டுக்காலமாக எந்த வங்கியிலும் நகைக்கடன்கள் வழங்கப்படவில்லை. அதனால் விவசாயிகள் பெரும் கஷ்டப்படுகிறார்கள். தங்களுடைய நகைகளை வைத்துக்கொண்டு பணம் பெற்று விவசாய உற்பத்தி செய்வதற்கு இயலாத நிலையில் இருக்கிறார்கள். இந்த நிலையைப் போக்குவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலவினாவே விவசாயிகளுக்கு நகைக் கடன்கள் வழங்கப்படுகிறதா என்பதல்ல, பொதுவாக நகைக் கடன் வழங்கப்படுகிறதா என்பதுதான். செங்கம் வட்டத்திலும், திருவண்ணாமலை வட்டத்திலும் மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோல் நகைக்கடன்கள் வழங்காமல் இல்லை, வழங்கப்படுகிறது. கூட்டுறவு சங்கத்திற்கு நகைக்கடன் வழங்குவதற்கான அதற்கு வேண்டிய நிதியை மைய வங்கியிடமிருந்தும் மைய வங்கி மாநில வங்கியிடமிருந்தும் பெறவேண்டுமென்ற நிலைமை இருக்கிறது. ரீபைனான்சிங் பெசிலிட்டிஸ் என்ற முறையிலே மாநில வங்கியிடமிருந்து மைய வங்கியும், மைய வங்கியிலிருந்து மற்ற கூட்டுறவு வங்கிகளும் பெற்று இதை வழங்கவேண்டும். 20-2-1982 வரை இது தொடர்ந்து வழங்கப்பட்டது 20-2-1982 வரை திருவண்ணாமலை, செங்கம் ஆகிய பகுதிகளில் குறைந்த அளவுக்கு வழங்கப்பட்டதற்குக் காரணம் பணத்தைத் திருப்பிக் கொடுக்காமல் வராக் கடன்கள் இருந்ததுதான். திருவண்ணாமலை வட்டத்திலே 1980-81 ஆம் ஆண்டு 430 லட்ச ரூபாயும், 1981-82 ஆம் ஆண்டு, 15-2-1982 வரையில் 434 லட்ச ரூபாயும் வழங்கப்பட்டிருக்கிறது.

**திரு. த. வேணுகோபால் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது வழங்கப்படுகிற தொகையை காட்டிலும் இன்னும் அதிகமாக வழங்குவதற்கான ஆணையை அரசு கூட்டுறவு நிர்வாகத்திற்கு அளிக்குமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு தமிழகம் முழுவதும் ஒட்டு மொத்தமாக 179 கோடி வரை நகைக் கடன்கள் வழங்கப்பட்டன. வரும் ஆண்டில் 180 கோடி ரூபாய் அளவுக்கு வழங்கலாம் என்ற முறையிலே செயல்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இருக்கின்ற பிரச்சினை எல்லாம் ரீபைனான்சிங் பெசிலிட்டிஸ் பை திரிசர்வ் பாங்க் இல்லாத காரணத்தினால் அதிகப்படியான அளவுக்கு இது வழங்கப்பட முடியாமல் இருக்கலாம். நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இது 50 கோடி ரூபாய் அளவுக்குத்தான் இருந்தது. சென்ற ஆண்டு 179 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. வரும் ஆண்டு 180 கோடி ரூபாய் வழங்க திட்டமிடப்பட்டிருக்கிறது என்பது நகைக்கடன்கள் விவசாயிகளுக்கும் ஏழைகளுக்கும் வழங்கப்படவேண்டும் என்பதில் இந்த அரசு மிக அக்கறையோடு இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களில் ஒரே சமயத்தில் பயிர்க்கடன்கள் ஏராளமாக வழங்கப்படவேண்டிய நிலை இருக்கிறது. கூட்டுறவு வங்கிகளிடம் நிதி ஆதாரங்கள் இல்லாத காரணத்தினாலே நகைக்கடன்கள் கொடுப்பதிலே காலதாமதம் ஏற்படுகிறது. இந்த நிலையைப் போக்குகின்ற வகையில் மாநில அரசின் பல்வேறு துறைகளிடம் ஒதுக்கப்பட்டிருக்கின்ற பணத்தை அந்தத் துறைகள் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிடம் டெபாசிட்டிலே போடுகின்றன, அதை மாற்றி அவைகளை கூட்டுறவு வங்கிகளிலேயே டெபாசிட் செய்ய வேண்டுமென்ற முறையை அரசு கொண்டுவருமா?

(முற்பகல் 9-20)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுகின்ற ஆலோசனை நல்ல யோசனை. ஆனாலும் கூட, Lead Banks for the State of Tamil Nadu. என்று இருக்கின்ற கனரா பாங்க், இந்தியன் பேங்க்; இந்தியன் ஓவர்சீஸ் பேங்க் ஆகிய மூன்று வங்கிகளும் Rural Development activities கிராமப்புற பொருளாதார முன்னேற்றத்திற்குக் கணிசமான பங்கை வகிப்பதால் அந்த மூன்று வங்கிகளுக்கும் அரசின் டெபாசிட்டைப் போட முடியாது என்று சொல்வது உகந்ததாக இருக்குமா என்பது சிந்தனைக்குரியது. அந்த மூன்று வங்கிகள் நீங்கலாக மற்ற பல வங்கிகளில் இப்படிப்பட்ட டெபாசிட் போடப்பட்டு வருகிறதே, அதைப்பொறுத்தவரையில் அதைக் கூட்டுறவு வங்கிகளில் போட வேண்டுமென்று முடிவெடுத்தால் நகைக்கடன்களை அதிகமாக அளிப்பதற்கும், கிராமப் புற பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவுவதற்கும் வசதியாக இருக்கும் என்ற காரணத்தால் இதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

*திரு. மெ. ஆண்டி அம்பலம்: பேரவைத் தலைவர் அவர்களே, நம் நாட்டில் பழையகாலம் முதல் மீன் பிடிக்கும் தொழில் பிரபலமாக உள்ளது. பல இலட்சக்கணக்கான மக்கள் அதில் ஈடுபட்டிருக்கிறார்கள். குறிப்பாக தமிழ்நாட்டிலேயே அவர்கள் தங்கள் வாழ்க்கைப் பிரச்னையைத் தீர்க்க அதில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆடவர்கள் கொண்டு வரும் மச்ச மகசூலைப் பக்குவப்படுத்தி மக்களுக்கு உணவு நேரத்திலே கொண்டு செல்வதற்காக வசதி செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்தச் சங்கங்கள் அமைக்கவும், அவற்றைச் சிறப்புற நடத்துவதற்கான முயற்சிகளில் சங்கங்களுக்குப் பங்குதொகை ரூ. 8,000-மும் மற்றும் ரூ. 15,000—மும் இதர சிலவற்றிற்கு ரூ. 3,000-மும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆரம்பச் செலவுகளுக்கு மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று இந்தச் சங்கங்களினுடைய நடவடிக்கைகளைச் சிறப்பாகவும் செம்மையாகவும் செய்வதற்கு சிலபல வசதி வாய்ப்புகள் செய்ய வேண்டுமென்று அவர்கள் விண்ணப்பிப்பார்களானால் அரசு ஆராய்ந்து அதன் மீது தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன அந்த 3 கூட்டுறவுச் சங்கங்களும் கடல்வாழ் மீனவப் பெண்களுக்காக ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிகிறது. அதேபோல் உள்நாட்டு மீனவப் பெண்களுடைய நலன் கருதி அப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களை அவர்களுக்கும் ஆரம்பிக்க அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய சயற்குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போடவும் அல்லது தனி விண்ணப்பம் அளித்தால் அதுபற்றி ஆராயப்படும்.

திரு மெ. ஆண்டி அம்பலம் : பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாலையில் சென்று மச்ச மகசூலைக் கொண்டு வந்தாலும் நல்லபடியாக பக்குவப்படுத்தியும் உடனே அங்காடிக்கு எடுத்துச் சென்று மக்களுக்குப் பயன்படும்படி சேர்ப்பது மீனவப் பெண்கள்தாம். அதனால் அவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கம் மூலமாகப் போக்குவரத்து வசதி செய்து தரப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்பு இல்லையென்று நான் குறிப்பிட்டேன். கூட்டுறவுச் சங்கத்தினுடைய மீன்களை கொண்டு செல்வதற்கு வேறுபல கூட்டுறவுச் சங்கங்களுக்கு அப்படிப்பட்ட வசதிகள் அளிக்கப்படுமானால் அதை இந்தச் சங்கங்களுக்கும் அளிப்பதற்காக முயற்சிகளை நாம் மேற்கொள்ளலாம். ஆனால், எல்லாச்



சங்கங்களுக்கும் போக்குவரத்து வசதிகளைச் செய்து தருவதற்கான தன்மைகள் ஒட்டு மொத்தமாக இருக்கிறது என்று பொதுவாகச் சொல்வதற்கில்லை. ஆகவேதான் சங்கங்கள் விண்ணப்பிப்பார்களேயானால், அதை ஆராய்ந்து, அதைச் செய்து தருவதற்கான வசதியும் வாய்ப்பும் இருக்குமேயானால் அதைச் செய்து தருவதற்கு அரசு முயற்சிக்கும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் 3 இடங்களில்தான் இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இதுபோன்ற கடலோரப் பகுதியான நெல்லை மாவட்டத்தில், உவரி, கூடுதாளை, கூச்சப்பாறை, புன்னக்காயில், தூத்துக்குடி போன்ற பகுதிகளில் அதிகமான மீனவர்கள் இந்தத் தொழிலைச் செய்து வருகிறார்கள். அப்படிப்பட்ட இடங்களில் இந்தச் சங்கங்களை ஆரம்பித்து, கருவாடு போன்ற பதனப்பட்ட மீன்களை அவர்கள் பாதுகாத்து தொடர்ந்து விற்பனை செய்வதற்கு அப்படிப்பட்டக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பெண்களுக்கு அமைக்கப்படுகின்ற மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்களுடைய எண்ணிக்கையைப் பெருக்க வேண்டுமென்ற எண்ணத்தை தான் இந்த அரசு கொண்டிருக்கிறது. ஆகவே தான் மூன்று இடங்களிலே நாம் பரீட்சார்த்தமாக 1981 ஆம் ஆண்டில் ஆணை பிறப்பித்து நடத்த வேண்டுமென்ற முறையிலே ஏற்பாடுகளைச் செய்து வந்தோம். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல் பல்வேறு மாவட்டங்களிலே பெண்கள் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்துவதினால் பலன் ஏற்படும் என்ற சூழ்நிலை ஏற்படுமானால் அதற்கான முயற்சியை எடுப்பதற்கு முன்வருவார்களானால் அதற்காக சங்கங்களை அமைப்பதற்கும் அதற்கான ஒத்துழைப்பைச் செய்யவும் அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## திருவண்ணாமலை, செங்கம் வட்டங்களில் கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்படும் நகைக் கடன்கள்.

*வினா எண். 124—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை, செங்கம் ஆகிய இரு வட்டங்களைச் சேர்ந்த நாட்டுடைமை ஆக்கப்பட்ட வங்கிகளும், தனியார் வங்கிகளும், கூட்டுறவு வங்கிகளும் மூன்று. நான்கு மாத காலமாக நகைக்கடன்கள் வழங்குவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

## திருநெல்வேலி மாவட்டத்தில் சிவில் நீதிமன்றங்கள் அமைப்பதற்கான நீதிபதி வரதராசன் கமிட்டியின் பரிந்துரைகள்.

* வினா எண் 128—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் எந்தெந்த இடங்களில் சிவில் நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்று நீதிபதி வரதராசன் கமிட்டி சிபாரிசு செய்துள்ளது?

(ஆ) எந்தெந்த இடங்களில் அமைக்கப்பட்டது?

(இ) மீதமுள்ள இடங்களில் எப்பொழுது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) திருநெல்வேலி மாவட்டம் தென்காசியில் சார்நிலை (Sub-Court) நீதிமன்றம், சங்கரன்கோயிலில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் மற்றும் வள்ளியூரில் மாவட்ட முன்சீப் மற்றும் குற்றவியல் நடுவர் நீதி மன்றம் ஆகியவைகளை அமைக்க வேண்டுமென நீதிபதி திரு. வரதராசன் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட நீதி மன்றங்களின் அதிகார வரம்புக்குழு பரிந்துரை செய்துள்ளது.

(ஆ) தென்காசியில் அமைக்கப்பட்ட சார்நிலை நீதிமன்றம் 7—9—79 ஆம் நாளிலிருந்தும், சங்கரன் கோயிலிலுள்ள மாவட்ட முன்சீப் நீதிமன்றம் 8—11—80 ஆம் நாளிலிருந்தும் செயல்பட்டு வருகின்றன.

(இ) வள்ளியூரில் உட்கோட்ட குற்றவியல் நடுவர் நீதி மன்றம் (S.D.J.M.) ஏழாம் நிதிக் குழுவின் பரிந்துரையின் பேரில் மைய அரசு அளித்த நிதி உதவியைக் கொண்டு அமைக்கப் பட்டது. அந்நீதி மன்றம் 8—11—80 ஆம் நாளிலிருந்து செயல் பட்டு வருகிறது. வள்ளியூரில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் அமைப்பது பற்றிய செயற்குறிப்பு உயர்நீதி மன்றத்துடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது.

(முற்பகல் 9-30)

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிபார்சுகள் சொல்லப்பட்டு ரொம்ப காலமாகி விட்டது. வள்ளியூரில் அமைக்கப்பட இருக்கின்ற நீதிமன்றத்திற்கு ஆபத்து உருவாகியிருக்கிறது. அதன் அடிப் படையில் அந்த ஊரில் இருக்கக் கூடிய பார் அசோசியேஷனும் அம்பாசமுத்திரத்தில் இருக்கக்கூடிய பார் அசோசியேஷனும் வள்ளியூரில் அமைக்க வேண்டுமென்று அரசாங்கத்திற்கு ஏதாவது கோரிக்கை அனுப்பப்பட்டிருக்கிறதா? அதன்மீது அரசு தக்க நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வள்ளியூரில் உட்கோட்ட குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 8-11-80 லிருந்து அமுலில் இருந்து வருகிறது. ஆனால் மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தைப் பொறுத்த வரைக்கும், அந்த அங்கே அமைக்க வேண்டுமென்ற வேண்டுகோள் உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, அதன் பரிந்துரை எதிர் பார்க்கப்படுகிறது. அது வந்ததும், அது குறித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வள்ளியூரில் அமைக்கப்பட இருக்கின்ற சிவில் நீதிமன்றம் கைவிடப்பட வேண்டுமென்றும், சேரன்மாதேவியில் சிவில் நீதிமன்றத்தை அமைக்க வேண்டுமென்றும், இந்தப் பிரச்னை குழப்பத்தில் இருந்து வருகிறது. அதைப்பற்றி அரசு பரிசீலித்து, வரதராஜன் குழுவின் பரிந்துரையின் அடிப்படை யிலே, அந்த சிபார்சை முழுமையாக ஏற்றுக் கொண்டு, வள்ளியூரில் அமைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மாதேவியில் ஒரு நீதிமன்றத்தை அமைக்க வேண்டுமென்ற வேண்டுகோள் வந்தது உண்மைதான். வள்ளியூரில் அதனால் பாதிப்பு ஏற்படும் என்பதும் உண்மை. எனவே, இது குறித்து உயர்நீதிமன்றத்திற்கு கருத்து தெரிவிக்கு மாறு அனுப்பியிருக்கிறோம். வரதராஜன் குழுவின் பரிந்துரை யின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது அரசின் கொள்கையாக இருக்கிறது.

திரு. ர. கிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, இராதாபுரம் தாலுகா, நான்குநேரி தாலுகா ஆகியவை திருநெல்வேலியிலிருந்து வெகுதூரத்திற்கு, 50, 60 மைல்களுக்கு மேல் இருக்கிறது. அங்கிருந்து லிடிகென்ட்ஸ் வருகிறார்கள். அந்த காரணத்தினால், வள்ளியூரில் மாவட்ட முன்சீப் கோர்ட் அமைப்பதற்கு விரிவாக பரிசீலனை செய்து, அங்கே அமைக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. இன்றைக்கு வேறு இடத்திற்கு அந்த முன்சீப் கோர்ட்டை மாற்றுவது என்பது நியாயமல்ல. ஆகவே. ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ள பரிந் துரையை அரசு ஏற்றுக் கொண்டபோது, அந்த முன்சீப் கோர்ட்டை அங்கு எப்போது ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உட்கோட்ட குற்றவியல் நடுவர் நீதி மன்றம் அங்கே ஏற்கனவே இருக்கிறது. மாவட்ட முன்சீப் நீதிமன்றம் அங்கே அமைக்கப்பட வேண்டுமென்ற பரிந்துரை கொள்கையளவில் சரி. உயர்நீதி மன்றத்தின் கருத்தை முறைப்

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் அதிகப்படியான அளவிற்கு விவசாயிகளுக்கு நகைக்கடன் கிடைப்பதற்குச் சம்பந்தப்பட்ட நிர்வாகத்தோடு பேசி நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் குறிப்பாக நான் ஏற்கனவே குறிப்பிட்ட லீட் பேங்க்ஸ் என்று சொல்லப்படும் மூன்று வங்கிகளுடன் ஏற்கனவே தொடர்பு கொண்டு அவ்வப்பொழுது பேசப்பட்டு வருகிறது. ஆனால் அவர்கள் தனியார் முதலாளிகளுக்கு அதிகக் கடன் உதவி செய்வதில் காட்டுகின்ற அக்கறை கிராமப்புற பொருளாதார முன்னேற்றத்தில் காட்டவில்லை என்பது வேதனையாக இருக்கிறது. அதைக்கூடச் சுட்டிக் காட்டியிருக்கிறோம். எனவே, கிராமப்புற பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவும் வகையில ஏழைகளுக்கும், விவசாயிகளுக்கும் கடனுதவி தருவதற்கு அவர்கள் முன் வருவார்கள் என்று நம்புகிறேன்.

திரு. வெ. அரங்கராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக நகைக் கடன் வழங்கும்பொழுது 2,000 ரூபாய்தான் உயர்ந்தபட்சமாகக் கொடுக்கிறார்கள். அதை உயர்த்திக் கொடுக்கும் நோக்கம் அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 5,000 ரூபாய் வரையில் கூடக் கொடுக்கப்படுகிறது.

திரு. சா. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவு நிறுவனங்களின் மூலமாக நகைக்கடன்களைக் கொடுப்பதை அதிகமாக கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வதோடு, இப்பொழுது கொடுக்கப்படும் வட்டி 13%, 14% வரையில்கூட இருக்கிறது. ஆகவே, வட்டி விகிதத்தை 10 சதவீதம் என்ற முறையில் குறைப்பதற்கு ஏற்பாடு செய்ய முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மைய அரசைச் சேர்ந்த ரிசர்வ் வங்கி 19 சதவிகிதம் வரையில் நகைக் கடன்களுக்கு வட்டி வசூலிக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறது. ஆனால் மாநில அரசு அதிகப்பட்சமாக 14 சதவீதம் வரை என்று உத்தரவிட்டிருக்கிறது. ஏழைகளின் நலன் கருதி அப்படி உத்தரவிடப்பட்டிருக்கிறது. இதற்கும் கீழே குறைத்தால் நிர்வாகச் செலவுக்குப் பிரச்னையை ஏற்படுத்தும். ஆகவேதான் ரிசர்வ் வங்கி 19 சதவீதம் வசூலிக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருந்தும் 14 சதவிகிதம் என்று செய்து ஏழைகளும் பாதிக்கப்படக்கூடாது, நிர்வாகச் செலவுகளையும் ஈடுகட்ட வேண்டுமென்ற முறையில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.



### மாநில சட்டக் கமிஷன் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 125—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாநில சட்டக் கமிஷன் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இல்லை. இப்பொருள் குறித்து தற்போது செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்றாலும்கூட மாநிலச் சட்ட ஆணையம் ஒன்றை நியமிப்பது பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மத்திய அரசு நியமிக்கும் சட்டக் கமிஷன் மைய அரசு சம்பந்தப்பட்ட லிஸ்ட் 1, லிஸ்ட் 3 சட்டங்களைப் பற்றி மட்டும்தான் ஆய்வு செய்கிறது. மாநில நிர்வாகச் சீர்திருத்தக் கமிஷனின் நீதித் துறை பற்றிய பரிந்துரைகள் இது வரையில் வராமல் இருக்கிறது. அரசியலமைப்புச் சட்டத்திற்கு முற்பட்ட Pre-Constitutional Law ஐ ஏராளமாக அமல்படுத்தி வந்திருக்கும் சூழ்நிலையில் இவைகளின் அவசியமான மாற்றங்கள் செய்வதற்காக நிபுணர்களைக் கொண்ட சட்டக் கமிஷனை அமைப்பது பற்றி விரைவாக பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கனவே விடையில் சொல்வதைப் போல இதன் தேவையை அரசு உணர்கிறது. தற்போது செயற்குறிப்பு இல்லை என்றுதான் சொன்னேன். இப்பொழுது இருக்கின்ற மாநில சட்டங்கள் பழைய சட்டங்கள், பல சட்டங்கள் சந்து பொந்துகளை உடைய சட்டங்கள். இதற்குப் பரிகாரம் ஏற்படும் வகையில், ஏழைகளின் நலன் கருதி செய்யப்படும் முன்னேற்றமான காரியங்களுக்குத் தடைக் கற்களாக இருக்கும் சட்டங்களையெல்லாம் ஆய்ந்து மாற்றுவதற்கு இப்படிப்பட்ட ஆணையத்தைக் கொண்டு வருவது குறித்து அரசு விரைவில் பரிசீலனை செய்து முடிவெடுக்கும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதற்கு முன்னால் இந்த மாநிலத்தில் அப்படி ஏதாவது சட்டக் கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இல்லை.

[1983 பிப்ரவரி 4

### கள்ளக்குறிச்சியில் கூடுதல் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 126—திரு. சோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சியில் மாவட்ட கூடுதல் நீதிமன்றம் அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) மற்றும் (ஆ) தென்னாற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சியில் கூடுதல் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் அமைப்பதற்கான ஆணையை, ஆணை எண். 1187, உள்துறை நாள் 15-5-82-ல் அரசு பிறப்பித்தது. அந்நீதிமன்றம் 30-7-82-லிருந்து செயல்பட்டு வருகிறது.

### குளித்தலையில் சார்நிலை நீதிமன்றம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 127—திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலையில் சப்–கோர்ட் அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது துவக்கப்படும்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் ; (அ) மற்றும் (ஆ) குளித்தலையில் சார்நிலை நீதிமன்றம் அமைக்கும் திட்டம் உயர்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருக்கிறது தேவையான செயற்குறிப்புகள் உயர்நீதி மன்றத்திடமிருந்து பெறப்பட்டதும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. இரா. கருப்பையா : Justice near the people என்ற சொல்வார்கள். நீதிகோரும் மக்கள் அவர்கள் இருக்கும் இடத்திற்கு அருகாமையில் நீதிமன்றங்கள் இருக்கவேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில்தான் ஒவ்வொரு வட்டத்திலும் நீதிமன்றங்கள் அமைக்கவேண்டும் என்ற கொள்கையை தமிழக அரசு ஏற்று அதை நிறைவேற்றி இருக்கிறது. இன்றைய தினம் சப்கோர்ட்டில் நீதி பெறவேண்டும் என்று விரும்புகிற மக்கள் முசிரி, குளித்தலை, மணப்பாரை இவ்விடங்களிலிருந்து கரூர் செல்ல வேண்டியிருக்கிறது. காவிரிப்பாலம் அமைக்கப்பட்ட பிறகு குளித்தலை முசிரி இவற்றை இணைத்து அமைக்கப்பட்ட பிறகு குளித்தலை, முசிரி, மணப்பாரை, துறையூர் இவற்றிற்கு மையமாக இருக்கிற காரணத்தால் இங்கே ஒரு சப் கோர்ட் அமைத்து இங்குள்ள மக்களுக்கு நீதி அருகாமையிலேயே கிடைக்கக்கூடிய வாய்ப்பை அரசு ஏற்படுத்திக் கொடுக்குமா?



1983 பிப்ரவரி 4]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இம்மாநிலத்திலுள்ள மாவட்டங்களில் உள்ள வட்டங்களில் ஒரு டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்-கம்ஜூடிஷியல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் என்ற முறையில் நீதிமன்றங்கள் அமைப்பதும் மாவட்டங்களின் மையப் பகுதிகளில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் சப்–கோர்ட் அமைப்பதுதான் அரசின் கொள்கை. அதை விரைவில் நடைமுறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கிறது. அந்த அடிப்படையில் உயர்நீதிமன்ற பரிந்துரை அரசுக்கு வரவேண்டும். அது நடைமுறையிலிருக்கிற அணுகுமுறை என்ற அடிப்படையில் விரைவில் அது வரும் என்று எதிர்பார்க்கிறோம். We will give another reminder and immediately on receipt of their reply definitely the Government will process it.

திரு. சோ. அழகர்சாமி : மாவட்டங்களின் மையப் பகுதிகளில் சப்-கோர்ட் அமைப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எங்கள் மாவட்டத்தில் கோவில்பட்டி............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி குளித்தலையில் சார்நிலை நீதிமன்றம் அமைக்கும் திட்டம் பற்றியதாகும்.

திரு. சோ. அழகர்சாமி : கோவில்பட்டியில் ஒரு சப்–கோர்ட் அமைக்கவேண்டும் என்று வேண்டுகோள் விட்டு உயர்நீதிமன்றம் கூட சிபார்சு செய்திருப்பதாகத் தெரிகிறது. ஆகவே அங்கே ஒரு சப்-கோர்ட் அமைக்க வேண்டிய நடவடிக்கைகளை துரிதமாக எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: அதுகுறித்து உயர்நீதிமன்றத்தின் பரிந்துரை அரசுக்கு இன்னும் வரவில்லை. வந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : குளித்தலை தாலுகாவில் ஒரு கோர்ட் அமைத்ததால் குளித்தலையில் இருந்தவை மணப்பாறை, முசிரிக்கு சென்று விட்டது. குளித்தலை முன்சிப் கோர்ட் எல்லையில் 20 கிராமங்கள் தான் உள்ளன. மற்றும் இரண்டு தாலுக்காக்கள் கரூரில் வருகிறது. அவற்றை குளித்தலை முன்சிப் கோர்ட்டோடு இணைக்க ஒரு வருடமாக முயற்சி செய்தும் இதுவரை நடக்கவில்லை. அந்த இரண்டு தாலுகாக்களையும் குளித்தலை முன்சிப் கோர்ட்டோடு இணைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப் போல் இரண்டு நீதி மன்றங்கள் அமைக்கப்பட்ட காரணத்தால் இந்தப் பிரச்னையைத் தீர்க்க Re-organisation of the jursidiction is inevitable என்ற அடிப்படையில் அது குறித்த உயர்நீதிமன்றத்தின் கருத்தை அரசு கேட்டிருக்கிறது. வந்தவுடன் அது குறித்து ஆய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

படி அறிய அங்கே அனுப்பப்பட்டிருக்கிறது. அங்கிருந்து அறிக்கை வந்தவுடன், அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய போல், வரதராஜன் குழுவின் பரிந்துரையை கொள்கையளவில் அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, வரதராஜன் குழுவின் டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ் என்ன? பல நீதிமன்றங்களிலே பல மாதங்களாக நீதிபதிகள் இல்லாமல் இருப்பது சம்பந்தமாக அதில் ஏதாவது சிபார்சு செய்யப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றங்களிலே நீதிபதிகள் இல்லாமல் இருப்பது, புதிய பதவிகள் அந்தந்த வட்டங்களிலே அமைக்கப்படுகின்றபோது, இந்தப் பிரச்னை எழுகிறது வரதராஜன் குழுவின் பரிந்துரை பல ஆண்டுகளுக்கு முன்னால் வந்தது. நீதிமன்றங்களில் நீதிபதிகள் இல்லாத பிரச்னை ஏற்கனவே இருந்தது. அப்படி 40 நீதிமன்றங்களில் தேவையிருந்தது. தற்போது 86 நீதிபதிகளை புதிதாக நியமிப்பது என்று உயர்நீதிமன்றம் முடிவெடுத்து, அதை அமுல்படுத்தி வருகிறது.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, வரதராஜன் குழு என்பது 10 ஆண்டுகளுக்கு முன்னால் நியமிக்கப்பட்ட குழு. இன்றைய தினம் நாட்டினுடைய, நகரத்தினுடைய பல்வேறு வளர்ச்சிகளை கருத்தில்கொண்டு, வேறு குழு அமைத்து இத்தகைய பிரச்னைகள் ஆராயப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டத்திற்கு ஒரு டிஸ்ட்ரிக்ட் முன்சீப்-கம்-ஜுடிசியல் மாஜிஸ்திரேட் கோர்ட் அமைக்க வேண்டுமென்று அரசு தற்போது ஆலோசித்து முடிவெடுத்துள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது நல்ல யோசனை. அதைக் கருத்தில் கொண்டு, அரசு இதுகுறித்து பரிசீலித்து, விரைவில் ஒரு முடிவெடுக்கும்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக நீதிமன்றங்கள் துவக்கப்படுகின்றபோது, அதற்குத் தேவையான சப்ஸ்டாப், ஜுடிசியல் ஸ்டாப் நியமிக்கப்படுவதில் தாமதம் ஏற்படுகின்றது என்பது அரசுக்குத் தெரியுமா? அதை நீக்குவதற்கு அரசு விரைவில் முயற்சியை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணியாளர்களைப் பொறுத்தவரையிலும் ஒரு குறிப்பிட்ட அளவிற்கான பணியாளர்கள் ஆரம்பக் கட்டத்தில் நியமிக்கப்படுகிறார்கள். உயர்நீதிமன்றம் கோருகிற அவ்வளவு பேரையும் நியமிப்பதற்குத் தடையாக இருப்பது நிதிதான். நிதிநிலைக்கேற்ப நடவடிக்கை அவ்வப்போது எடுக்கப்பட்டு வருகிறது.

THIRU T. VENKATA REDDY: Mr. Speaker, Sir, the new Courts are without furniture and other facilities. Most of the lawyers and all the time because of non availability of furniture. Will the Government think of providing furniture and other facilities in the Courts urgently

THE HON. THIRU C. PONNAIYAN; Hon Speaker, Sir this plight has been there for the past 35 years. This Government is taking all efforts to mitigate these difficulties.

திரு. இ. ரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம் பெரிய மாவட்டமாக இருக்கின்றது. ஒரே ஒரு மாவட்ட நீதிமன்றம் திருநெல்வேலியில் இருப்பதால் வழக்குகளை விரைவிலே பைசல் செய்ய முடியவில்லை. எனவே தூத்துக்குடியிலாவது அல்லது திருச்செந்தூரிலாவது மேலும் ஒரு நீதிமன்றத்தை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்திலே இருக்கின்ற இந்த தேவையை அரசு கருத்தில் கொண்டு, தூத்துக்குடியில் ஒரு மாவட்ட நீதிமன்றத்தை அமைப்பதை கருத்தில் கொண்டு பரிசீலித்து வருகிறது.

பெருந்துறை ஒன்றியத்திலுள்ள திங்களூருக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

* வினா எண் 129—திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை ஒன்றியம் திங்களூரில் குடிதண்ணீர் வழங்கப்படாதது குறித்து 6–6–1980 ல் போராட்டம் நடத்தியதை தொடர்ந்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

(ஆ) அம் மக்களுக்கு குடிதண்ணீர் எப்போது கிடைக்கும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ) கோளப்பளூர், சிறுவளூர், குன்னத்தூர் மற்றும் ஊத்துக்குளி பகுதிய பேரூராட்சிகளின் (திங்களூர் கிராமம் உட்பட) கூட்டு

குடிநீர் திட்டத்திற்கான ஆய்வு திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டம், வாரியத்தின் ஒப்புதல் பெற்று அரசின் நிர்வாக ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டதும் பரிசீலனை செய்து ஒப்புதலுக்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியினுடைய எண் 5043. இதே பக்கத்தில் 11569 ஆம் எண்ணுள்ள கேள்வியும் வந்திருக்கின்றது. கொடுக்கப்படுகின்ற கேள்வி, அந்தந்த பகுதியிலே உள்ள சில அவசரமான தேவைகளைக் கருதிதான் கொடுக்கப்படுகின்றது. இப்போது அதிகமான காலம் வீணாகிப் போய்விட்டது. அடுத்ததாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்த சம்பவத்தைப் பொருத்தவரையிலும் போன ஆண்டே பெருந்துறை ஊராட்சி, ஊத்துக்குளி ஊராட்சிகளில், எந்தெந்த ஊர்களிலே தண்ணீர் வேண்டும் என்று கேட்டு அந்த லிஸ்டும் அனுப்பப்பட்டிருக்கிறது. அது மீண்டும் எந்தக் காலம் வரையில் பரிசீலனையில் இருக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திங்களூரில் ஒரு மேல்நிலைத் தொட்டியோடு கூடிய கிணறு, மற்றும் ஆழ்துளைக் கிணறு மூலம் தண்ணீர் கிடைக்கிறது. தற்போதுள்ள வறட்சியின் காரணமாக மேலும் ஒரு ஆழ்துளை கிணறு அமைத்து 25-7-1981 முதல் தண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. மேலும் ரூ. 334.32 லட்சம் செலவில் கொளப்பலூர், சிறுவலூர், குன்னத்தூர் மற்றும் ஊத்துக்குளி ஆகிய பேரூராட்சிகளுக்கு கூட்டுக் குடிநீர் திட்டம், திங்களூரையும் சேர்த்து போடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின் ஆய்வு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தலைமைப் பொறியாளருக்கு அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளதாகவும் பெரியார் மாவட்ட ஆட்சியாளர் தெரிவித்துள்ளார்.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. திங்களூரைப் பொறுத்த வரையிலும் 3 ஆழ்துளைக் கிணறுகள் போடப்பட்டிருக்கிறது. அதிலே ஒன்றிலே தண்ணீர் இல்லை. 2 ஆழ்துளை கிணறுகளில் தான் தற்சமயம் வேலை நடந்து கொண்டிருக்கிறது. இருப்பினும் ஏற்கனவே இருக்கக் கூடிய அந்த மேல்நிலைத் தொட்டியும் வீடுகளுக்கு விநியோகம் செய்து கொண்டிருந்த அந்த முழு பைப்பும் பழுதடைந்த காரணத்தினால் அந்த மேல்நிலைத் தொட்டியில் தண்ணீர் ஏற்றி விநியோகம் செய்ய முடியாத நிலை இருக்கிறது. அதை உடனடியாக குடிநீர் வடிகால் வாரியம் பரிசிலனை செய்து பழுது பார்க்க ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, அதைப்பற்றி குறிப்பிட்டு எழுதிக் கொடுத்தால் நான் 'ட்வாட் போர்டு' எம்.டி.க்கோ அல்லது இன்ஜினியருக்கோ அனுப்பி ஆவன செய்கிறேன்.

திரு. கு. அ. செங்கோட்டையன்: தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுக் குடிநீர் திட்டத்தை இரண்டு ஆண்டுகளாக ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். அதனுடைய மதிப்பீட்டுத் தொகை என்ன? எந்த ஆண்டு அது துவங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 334.32 லட்சம் என்று ஏற்கனவே சொன்னேன். கொஞ்சம் அதிகமான காலம் ஆகிறது என்றால், ஆழமாக பரிசீலனை செய்கிறோம் என்று பொருள்.

இளையான்குடி குடிநீர் திட்டம்.

*வினா எண் 130—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இளையான்குடி குடிநீர் திட்ட மதிப்பீடு மாற்றி அமைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ) இளையான்குடி பேரூராட்சி மற்றும் ஜாகிர் உசேன் கல்லூரி வரையிலுள்ள கிராமங்களுக்கும் குடிநீர் வழங்குவதற்காக 54.80 லட்சம் செலவில் ஒரு திட்டத்திற்கு ஆகஸ்டு 82ல் அரசு நிர்வாக அனுமதி அளித்தது. 1979-80 ம் ஆண்டின் நிலையப் பட்டியல் விதத்தில் திட்டம் போடப்பட்டதால் தற்போதைய நிலைகளின் படி மதிப்பீட்டை திருத்தி அமைக்க வேண்டி இருக்கிறது. திருத்திய மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இளையான்குடி குடிநீர் திட்டத்தோடு 16 கிராமங்களுக்கு குடிநீர் கொடுப்பதாகவும், அதற்காக திட்டம் தயாரிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது. எந்த எந்த கிராமங்கள் என்று பெயர்களைச் சொல்ல முடியுமா? அதோடு ஏன் இவ்வளவு நாள் தாமதித்து இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ் இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏன் தாமதம் என்பதிலே பல கசப்பான உண்மைகள் உள்ளன. அந்த பேரூராட்சிக்கு நிதி ஆதாரமே கிடையாது. எனவே கொடுக்க முடியாது என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அங்குள்ள அரசியல்வாதிகள் மற்றவர்கள் எல்லோரும் மிகவும் முயற்சி எடுத்து, நாங்கள் நிதி ஆதாரத்தைப் பெருக்குகிறோம் என்று அங்கிருந்து தகவல் வந்தது. அதற்கு மேல் இந்த திட்டம் உருவாக்கப்பட்டது. 1979-80 ஆண்டு அடிப்படையில் இப்போது 1983. எனவே மறு பரிசீலனை செய்து அதிகமான அளவு செலவாக இருந்தாலும், அந்த அடிப்படையில் குடிநீர் கொடுக்கலாம் என்ற அந்த நல்ல எண்ணத்தின் அடிப்படையில்தான் மறு பரிசீலனை செய்யப்படுகிறது.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இளையான்குடிக்கு குடிநீர் கொடுப்பதிலே நீண்ட தாமதத்திற்கு காரணம் சொன்னார்கள். அந்தக் காரணம் நிச்சயமாக வரவேற்க வேண்டிய காரணம்தான். இருந்தபோதிலும் கூட இன்றைக்கு அது சாங்ஷன் ஆகி வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அந்தக் குறிப்பு இல்லையென்று நினைக்கிறேன். அந்த வேலைகள் நடந்து கொண்டு இருப்பதால் அந்த இளையான்குடிக்குப் பக்கத்திலே பரமக்குடியில இ.இ. ஆபீஸ் இருக்கிறது பக்கத்திலுள்ள சிவகங்கையில் இ.இ. ஆபீஸ் இருக்கிறது. அந்த பேப்பர் சம்பந்தமாக விருதுநகருக்கு அனுப்பப்படுகிறது. அதை மாற்றி அமைத்து. பரமக்குடிக்கோ அல்லது சிவகங்கைக்கோ அனுப்பப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த பேப்பரை எந்தெந்த ஆபீசுக்கு அனுப்ப வேண்டுமோ அந்தந்த அலுவலகத்திற்குத் தான் அனுப்ப வேண்டும் காரணம் காட்டி இந்த அலுவலகத்திற்குத்தான் அனுப்ப வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னால் பரிசீலனை செய்யலாம்.

சிவகாசி, திருத்தங்கல் நகரங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம்.

* வினா எண் 31— திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி, திருத்தங்கல் நகரங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் ஆய்வு நடத்தப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், வேலை தொடங்கப்படாததற்கு காரணங்கள் யாவை?

(இ) அத் திட்டத்தை விரைவில் செயல்படுத்த அரசு முன் வருமா?



(ஈ) மேற்படி குடிநீர் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட எண்ணியுள்ள தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) சிவகாசி மற்றும் திருத்தங்கல் குடிநீர்த் திட்டங்கள்-ஆய்வுப் பணிகள் முடிவடைந்து விட்டன.

(ஆ) சிவகாசி சம்பந்தப்பட்ட வரை, களப்பணி அலுவலர்கள் சமர்ப்பித்துள்ள குடிநீர்த் திட்ட அறிக்கையை (project Report) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது. அது முடிந்தபின் அரசின் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு ஆவன செய்யப்படும்.

திருத்தங்களைப் பொறுத்தவரை களப்பணி அலுவலர்களால் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

(இ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து சிவகாசி மற்றும் திருத்தங்கல் குடிநீர் திட்டங்களுக்கான உத்தேச மதிப்பீடுகள் (out line proposals) கிடைக்கப் பெற்றதும் அரசு நிர்வாக ஒப்புதல் அளிப்பது குறித்து பரிசீலிக்கும்.

(ஈ) அரசின் நிர்வாக ஒப்புதல் பெற்றதும் இக்குடிநீர்த் திட்டங்களுக்கான தக்க நிதி ஒதுக்கப்படும்.

*திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரத்தைச் சேர்ந்த சிவகாசி, திருத்தங்கல் போன்ற இந்த ஊர்கள் தொழில் துறையிலே இன்றைக்கு வெகு வேகமாக முன்னணியிலே வந்து கொண்டிருக்கின்ற நகரங்கள். இந்த 2 ஊர்களுக்கும் குடிநீர் வழங்க வேண்டியது மிக அவசியமான, அவசரமானதும் கூட. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்ற நேரத்திலே அந்த குடிநீர் வழங்குவதற்காக என்னென்ன படிப்படியான நிலைகள் இருக்கிறதோ அதை விரிவாக எடுத்துச் சொன்னார்கள். உங்கள் மூலமாக அவரிடம் நான் பெற விரும்புவது என்னவென்றால், எப்போது இந்த பரிசீலனைகள், ஆய்வுகள், நிர்வாக ஒப்புதல்கள் எல்லாம் முடிந்து அந்த வேலைகள் ஆரம்பிக்கப்படும்? இது மிக முக்கியமான பிரச்னையாக இருக்கின்ற காரணத்தாலே, திட்டவட்டமாக அறிவிப்பு கொடுப்பார்களானால் உதவிகரமாக இருக்கும் என்ற காரணத்தாலே இதை நான் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். ''Omission is better than commission'' என்று. எனவே இப்போதே மூன்று மாதத்தில் முடியும் என்று சொல்லி, முடியாமல் போனால் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வருத்தம் வரும். எனவே விரைவில் முடிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9—50)

திரு தி. கா. நல்லப்பன், தலைவரவர்களே, 1 2 3, 4 5, 6 என்று இப்போது தரம் பிரிக்கப்பட்டிருக்கிறது. அது ஏற்கெனவே குடிநீர் இருக்கிற அந்த கால கட்டத்திலே பிரிக்கப்பட்டது. ஆனால் இன்றையதினம் பல்வேறு இடங்களிலே குடிநீர் இல்லாமல் இருக்கின்ற காரணத்தினால் இந்த தரத்தைக் கணக்கிடாமல் தண்ணீர் இல்லை என்று சொல்லுகின்ற பகுதிகளுக்கு உடனடியாக தண்ணீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; தலைவரவர்களே. தரம் பிரிக்கப்பட்டது 1976—ல், அதற்குப் பின்னால் 'மெனி சேஞ்சல் ஹாவ் பீன் மேய்ட்' மாண்புமிகு உறுப்பினர்கள் அவ்வப்போது கொடுத்த கருத்துக்களை வைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குத் தெரிவித்து, அவர்கள் பி.டி.ஓ—க்களுக்கு அனுப்பி, ஆய்வு செய்து தேவையான மாற்றங்கள் நிறைய செய்யப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் ஆய்வு செய்ததில், 6—வது பிரிவில் இருந்த இடங்கள் 3—வது பிரிவுக்கு கொண்டு வரப்பட்டிருக்கின்றன. எல்லா இடங்களிலும் அப்படி மாற்ற வேண்டுமென்ற உணர்வு இல்லாமல், உரிய ஆதாரங்களோடு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தால், அதிகாரிகளைக் கொண்டு பரிசீலனை செய்து, அக்கறையோடு உரிய நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது.

போளூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியிலுள்ள கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

*வினா எண் 133—திரு இல. பலராமன்; மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

போளூர் வட்டாரத்தில் எத்தனை கிராமங்களுக்கு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் குடிநீர் வழங்க 1980—1981ம் ஆண்டும், 1981-1982ம் ஆண்டும் திட்டமிடப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ. இராகவானந்தம்; வட ஆற்காடு மாவட்டம், போளூர் ஊராட்சி ஒன்றியத்தில் 1980—81ம் ஆண்டில் முதலாம் கட்ட தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 9 சிற்றூர்களுக்கு குடிநீர் வசதியளிக்கப்பட்டுள்ளது. 1981-82ம் ஆண்டில் வறட்சி நிவாரணப் பணித் திட்டங்களின் கீழ் இந்த ஒன்றியத்தைச் சேர்ந்த 23 சிற்றூர்களின் குடிநீர்த் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு உள்ளது. இப்போது நிலைமை சரியாக இருக்கிறது.



மாண்புமிகு பேரவைத் தலைவர்; வினா எண்கள் 134, 135, 136, 137 மற்றும் 138 ஆகியவை மாண்புமிகு அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

ஆதிதிராவிடர்களுக்கு தொழில் தொடங்க கடனுதவி செய்யும் திட்டம்.

*வினா எண். 80—திரு. செ. செம்மலை மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட* வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரிசனங்களுக்கு தொழில் தொடங்க கடன் உதவி செய்வது குறித்து அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதிக பட்ச கடன் தொகை எவ்வளவு அதில் மானியம் எவ்வளவு?

(இ) எந்த வகையான தொழில்களுக்கு கடன் வழங்கப்படும்?

மாண்புமிகு திரு.எம். விஜயசாரதி (அ.ஆ,இ.) ஆதிதிராவிடர்களுக்கு தொழில் தொடங்க வட்டியில்லாக் கடன் அளிக்கும் திட்டம் 1968 ஆம் ஆண்டு முதல் நடைமுறையிலுள்ளது. இத்திட்டத்தின் கீழ் அதிக அளவு கடன் தொகை ரூ. 15,000/- குறைந்த அளவு கடன் தொகை ரூ. 125/— அரசால் ஏற்கப்பட்டுள்ள 31 வகையான தொழில்களுக்கு கடன் அளிக்கப்படுகிறது. மானியம் இல்லை. இத்திட்டத்தை மாற்றியமைக்கும் செயற்குறிப்பு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் ஆய்விலுள்ளது.

திரு. செ. செம்மலை தலைவரவர்களே, ஆதி திராவிட மக்களுக்கு தொழில்கள் தொடங்க ஆதி திராவிட நலத்துறையின் மூலம் இதுவரை எவ்வளவு கடன் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி; தலைவரவர்களே, இந்த வட்டியில்லாத கடன் திட்டத்தின் கீழ் இதுவரை இந்து ஆதி திராவிடர்களுக்கு 1,13,79,596 ரூபாயும், கிறிஸ்துவ ஆதி திராவிடர்களுககு 3,35,505 ரூபாயும், பழங்குடி மக்களுக்கு 1,04,225 ரூபாயும் வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. செ. செம்மலை; தலைவரவர்களே, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் ஆதிதிராவிட மக்களுக்கு கடன் வழங்கும்போது 5000 ரூபாய் வரையில் ஜாமீன் பெறக்கூடாது என்று ரிசர்வ் வங்கி சுற்றறிக்கை அனுப்பி இருந்தும் எந்த வங்கியும் அந்த சுற்றறிக்கையை அமுல்படுத்தவில்லை. ஆகவே, மாநில அரசு ரிசர்வ் வங்கியின் சுற்றறிக்கையை சுட்டிக்காட்டி ஆதிதிராவிட மக்களுக்கு இத்தகைய கடன் வழங்கும்போது 5000 ரூபாய் வரையில் ஜாமீன் பெறக்கூடாது என்ற நிலமையை ஏற்படுத்தி, தாராளமாக அந்த மக்கள் கடன் பெற நடவடிக்கை எடுக்கப்படுமா?

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி, திருத்தங்கல் சம்பந்தப்பட்ட நகரங்களுக்கு குடிநீர் தட்டுப்பாடு மிகக் கடுமையாக இருக்கிறது. என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஆகவே, அந்த இரண்டு நகரங்களுக்கும் எந்த இடத்தில் இருந்து தண்ணீர் கொண்டு வரத்திட்டமிடப்பட்டு இருக்கிறது? எவ்வளவு காலத்தில் அந்தத் திட்டம் நிறைவேறும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, அர்ஜுனா ஆற்றை ஆதாரமாகக் கொண்டு ஒரு குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திற்கான ஆய்வு தயாரிக்கப்பட்டு வருகிறது.

விளாத்திக்குளம் தொகுதியிலுள்ள புதூர் நாகலாபுரம் பேரூராட்சிப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

* வினா எண் 132— திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் விளாத்திகுளம் தொகுதியிலுள்ள புதூர், நாகலாபுரம் பேரூராட்சிகளுக்கு குடிநீர் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) எப்பொழுது வேலை ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) நெல்லை மாவட்டம் விளாத்திகுளம் தொகுதியில் உள்ள புதூர் பேரூராட்சிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது. விளாத்திகுளம் தொகுதியில் உள்ள நாகலாபுரம் ஊராட்சிக்கு குடிநீர் வழங்க திட்டம் ஏதும் தற்போது இல்லை.

(ஆ) புதூர் பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டத்திற்கான மதிப்பீடு விரிவான ஆய்வு நடத்திய பின்னர் கணக்கிடப்படும்.

(இ) புதூர் குடிநீர்த் திட்ட ஆய்வுக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டவுடன் ஆய்வு வேலைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புதூர், நாகலாபுரம் ஆகிய இடங்கள் ஏற்கனவே நெல்லை மாவட்டத்தின் கடைகோடிப் பகுதியாக இருக்கின்றன. அந்த இடத்தில் எங்கு கிணறு தோண்டினாலும் உப்புத் தண்ணீர் தான் கிடைக்கும். ஆகவே, அந்தப் பகுதிகளில் கண்மாய்களைத் தோண்டி, மழைக் காலங்களில் கிடைக்கும் நீரைத் தேக்கி வைத்துத் தான் அந்தப் பகுதி மக்கள் தற்போது பயன்படுத்தி வருகிறார்கள். பெரிய முனிசிபல் நகரங்களுக்கு—குறிப்பாக



கோவில்பட்டி நகரத்திற்குக் குடிநீர் கொண்டு வந்ததுபோல்—தாம்பரபரணியில் இருந்து தண்ணீர் கொண்டு வருவதற்காக தனியாகக் குழாய் போட்டு, குடிநீர் வசதி செய்து தருவதுபோல், இந்தப் பகுதிக்கும் தனியாக லைன் போட்டு, தண்ணீர் கொண்டு வந்து, அந்தப் பகுதியில் உள்ள குடிநீர் கஷ்டத்தைப் போக்குவதற்கு துரிதமான நடவடிக்கை எடுக்க பரிசீலனையில் இருப்பதாக உண்மையாகவே நடவடிக்கைகளில் இறங்குவதற்கு துரிதமான நடவடிக்கைகளை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகலாபுரம் கேட்டகரி-6 ல் வருகிறது. அப்படி என்று சொன்னால் போதுமான அளவிற்கு நல்ல குடிநீர் இருக்கக்கூடிய ஊர் என்று பொருள். எனவே, அதை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று யாராவது சட்டமன்ற உறுப்பினர்கள் எழுதி கலெக்டரிடத்தில் அனுப்புவார்களானால், அதை மறு பரிசீலனை செய்வார்கள். புதூருக்கு தண்ணீர் கொடுப்பதற்கான திட்டங்கள் இப்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன.

திரு. ரா. கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததுபோல் அந்த நாகலாபுரம்-புதூர் போன்ற பகுதிகள் கரிசல் மண் பூமியாக இருப்பதால் அங்கே தண்ணீர் சரியாகக் கிடைப்பது இல்லை. கிடைக்கும் தண்ணீரும் உவர் நீராகத்தான் இருக்கிறது என்பது உண்மை. அந்த இடத்திற்குப் பக்கத்திலே வைப்பாறு ஓடிக் கொண்டு இருக்கிறது. அங்கேயிருந்து கூட குடிநீர் திட்டம் உருவாக்க முடியும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நாகலாபுரம் 6—வது கேட்டகரியில் வருகிறது என்று சொன்னார்கள். இந்த கேட்டகரி பிரிப்பது என்பது ஒரு மோசடி தான். அப்படிச் சொல்லக்கூடாது என்றாலும் கூட, அது சரியான முறையில் செய்யப்படவில்லை. ஆகவே, அதை மறு பரிசீலனை செய்து அந்த கேட்டகரியை மாற்றி அமைத்து, இந்த சட்டமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்ட கேள்வியை அடிப்படையாக வைத்தே அதை மாற்றியமைத்து, நாகலாபுரம்-புதூருக்கு தண்ணீர் கொடுக்க அரசு உடனடியாக முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, கேட்டகரி பிரிப்பது மோசடி என்று சொல்வது சரியல்ல. அதைப் பிரித்தவர்கள் அவர்களுக்குத் தெரிந்த அறிவு ஆற்றலை வைத்து அதைச் செய்து இருக்கிறார்கள். அப்படிச் செய்ததை மாற்றி அமைக்க வேண்டும் என்று சொன்னால், தக்க ஆதாரங்கள் இருந்தால், அதை மாற்றியமைக்கத் தயாராக இருக்கிறோம். நாம் ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்களுக்கு பதில் அளிக்கின்ற போது கூறியமாதிரி வேண்டுகோள் வருமானால் நிச்சயமாகப் பரிசீலனை செய்யப்படும்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி; தலைவரவர்களே, தமிழ் நாட்டில் இருக்கிற ஆதிதிராவிட மக்கள் பொருளாதாரத்தில் உயர்வு பெற வேண்டுமென்ற உணர்வோடும் அவர்கள் சுயமாக தொழில் செய்ய வேண்டுமென்ற உணர்வோடும் இந்த அரசு 'தமிழ்நாடு ஆதி திராவிடர் நல வளர்ச்சிக் கழகத்தின்' மூலம் உரிய நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. இந்த கழகம் எடுத்துக்கொள்கிற முயற்சியின் காரணமாக தமிழ்நாட்டில் இருக்கிற தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் அதிக அளவில் ஒத்துழைப்பு தந்துகொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போன்ற குறைபாடுகள் இல்லாத நிலைமையை உருவாக்குகின்ற நடவடிக்கையை இந்த அரசு எடுக்கத் தயங்காது. தற்போது இருக்கிற நிலைமையைப் பார்க்கின்றபோது தமிழகத்தில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் இந்தத் திட்டத்திற்கு, குறிப்பாக பொருளாதாரத்தில் அந்த மக்கள் மேம்பாடடைய அதிக அளவில் ஆதரவு அளித்து வருகின்றன. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போன்று குறைபாடு இருக்குமானால் அதன்மீது அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கெ. சொக்கலிங்கம்; பேரவைத் தலைவர் அவர்களே ஆதி திராவிடர்களுக்கு தொழில் நடத்துவதற்கு சிட்கோ மூலமாக அரசு கடன் வழங்குவதாகத் தெரிகிறது. அப்படி சிட்கோ மூலமாக வழங்கப்படும் கடன்களை குறிப்பிட்ட சதவீதமாக உயர்த்தி கடன் வழங்க அரசு முயற்சிகள் மேற்கொள்ள ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன பதிலில் தமிழக அரசு ஆதிதிராவிட மக்கள் தொழில் செய்வதற்கு வட்டியில்லாத, கடன் வழங்குகிற திட்டத்தின் கீழ் கடன் அளித்து வருகிறது. அதுமட்டுமின்றி தமிழகத்திலுள்ள ஆதிதிராவிட வீட்டு வசதி மேம்பாட்டு வாரியத்தின் மூலமாக தமிழகத்தில் இருக்கக்கூடிய ஆதிதிராவிட மக்களுக்கு அவர்கள் தொழில் செய்ய முன் வருவார்களேயானால், அவர்களுக்குத் தேவையான கடன் உதவிகளையும் மானியமாக வழங்கக்கூடிய திட்டத்தையும் செய்துக் கொண்டு வருகிறது. ஆனால் உறுப்பினர் அவர்கள் சிட்கோ மூலமாக.....

திரு கெ. சொக்கலிங்கம்: இப்போது எவ்வளவு சதவீதம் தருகிறார்கள், அதை உயர்த்த முடியுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றிய விவரங்கள் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் விவரம் சேகரித்து தரப்படும்.



திரு. எல். இளையப்பெருமாள்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்களுக்கு தொழில் துறையில் உதவி செய்வதற்காக தாட்கோ மூலமாக அவர்களுக்கு கடன் கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசும், மாநில அரசும் கொடுக்கிற மானியங்களை வங்கியில் போடப்பட்டு, அவர்களுக்கு கொடுக்க ஏற்பாடு செய்யப்பெறும் போது, அவர்கள் வந்து கடன் கேட்கிற நேரத்தில் அந்த வங்கிகள் பஞ்சாயத்து ஒனியன் மூலமாக அந்த கடன்கள் கொடுக்கப்பெறும் என்று யூசால்லிவிடுவதால் அவர்களுக்கு கிடைக்கவேண்டிய உதவிகள் கிடைக்கப் பெறாமல் இருக்கும் சூழ்நிலை இருப்பது அரசுக்கு தெரியுமா? ஆகவே, வங்கிகளில் போட்டு வட்டியை மட்டுமே ஈட்டப்பார்க்காமல் அந்த மக்களுக்கு மைய அரசு கொடுக்கும் மானியம் நேரிடையாக முழுமையாகப் போய்ச்சேரவேண்டிய ஆணைகளைப் பிறப்பிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யார் கொடுத்த விவரங்களின் பேரிலே இந்தக் கருத்தினை இங்கு தெரிவிக்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை.

தமிழகத்திலே இருக்கக்கூடிய ஆதிதிராவிட மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்கிற நல்ல எண்ணத்தோடு தான், மைய அரசும் மாநில அரசும் இணைந்து, தமிழகத்திலே இருக்கிற தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் உதவியோடும் ஆதிதிராவிட வீட்டுவசதி வாரியக் கழகத்தின் மூலமாகவும் அவர்களுக்கு தேவையான கடன் வசதிகளைச் செய்து வருகிறது. ஆதிதிராவிட வீட்டுவசதி வாரியத்தின் முலமாக 33 1/3 சதவீதம் மானியமாகவும், 25 சதவிதம் குறியீட்டுக் கடனாகவும் எஞ்சியிருக்கக்கூடிய தொகை, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாகவும் இந்த கடன் வசதிளை அளித்து வருகிறது ஆனால் உறுப்பினர் அவர்கள் ஒன்றியத்தின் மூலமாக அதை செயல்படுத்துவதாகச் சொல்லிவிட்டு அவர்களுக்கு அந்த உதவி கிடைக்கப்பெறுவதில்லை என்பது போல் சொன்னார்கள். என்னிடத்திலேயிருக்கிற குறிப்புகளின் படி, புள்ளிவிவரங்களின் படி, சென்ற ஆண்டு மட்டும் ஜூலை 1982 வரையில் தமிழகத்தில் 74,331 பேர்கள், இந்த தமிழ் நாடு ஆதிதிராவிட வீட்டு வசதி கழகத்தின் மூலமாக கொடுக்கப்பெற்ற, குறியீட்டுத் தொகை மட்டும் இந்த அளவுக்கு வழங்கப்பெற்றிருக்கிறார்கள் என்பதை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

இதிலிருந்து மானியதொகை எவ்வளவு கொடுத்திருக்கிறோம் என்பதை கணக்கிட்டு உறுப்பினர் அவர்கள் உணர்ந்துக் கொள்வார்கள் என நம்புகிறேன். கொடுக்கப்பெற்றிருக்கிற

குறியீட்டுக் கடன் மட்டும் 3·84 கோடியாக இருக்கிறது. ஆகவே உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போன்ற நிலைமை இல்லை என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு, அரிசனங்களுக்கு தொழில் நடத்துவதற்காக கொடுக்கப்பட்ட எண்ணிக்கையினை அறிவித்தார்கள் எத்தனை லட்சம் பேர் மனு கொடுத்தார்கள்? மனு கொடுத்தவர்களில் எவ்வளவு பேருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றியும், இரண்டாவதாக அரிசனங்களுக்கு தொழில் துவங்குவதற்காக சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்ட பணம் எவ்வளவு? அதில் எவ்வளவு இதுவரைக்கும் செலவு செய்திருக்கிறோம் என்ற விவரங்களையும் அறிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். ஏனெனில் மனு கொடுக்கப்பெற்றும், அவர்கள் ஆண்டு கணக்கில் காத்திருந்ததாகவும் உடனடியாக பணம் கொடுக்கப்படவில்லை என்றும் தெரிகிறது. அவர்கள் அலைகழிக்கப்படுகிறார்கள். அதிலேயே அவர்கள் வாங்கக் கூடிய கடனுக்கான பணம் பாதி செலவழிந்து போகிறது. ஆகவே, மனு கொடுத்தவுடன் உடனடியாக அவர்களுக்கு அந்தக் கடனை வழங்க அரசாங்கம் கொள்கையளவில் முடிவெடுத்து செயல்படுத்துமா என்று அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு திரு எம். விஜயசாரதி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் செய்வதற்கு கடன் உதவி அளிக்கவேண்டும் என்று கேட்டு எத்தனை பேர் மனு கொடுத்தார்கள்? எவ்வளவு பேர்களுக்கு அளிக்கப்பட்டது, எவ்வளவு பேர்களுக்கு அளிக்கபெறவில்லை என்ற விவரங்களை உறுப்பினர்கள் கேட்டார்கள் தற்போது அந்த விவரங்கள் என்னிடத்திலேயில்லை. தனியாகக் கேள்வி போடுமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10–00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்; வினாக்கள்—விடைகள் நேரம் பேரவையின் அனுமதியுடன் நீட்டிக்கப்பெறுகின்றது

மாண்புமிகு திரு எம். விஜயசாரதி; மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னொரு கருத்தினையும் சொல்லி இருக்கிறார்கள் காலதாமதம் ஏற்படுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். தமிழகத்தினுடைய ஆதி திராவிட வீட்டுவசதி வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக அளிக்கக்கூடிய இந்தக் கடனை பெறுகின்ற ஆதி திராவிட மக்களுக்கு அந்தநிலைமை இருக்கக்கூடாது என்பதில் அரசு அதிக கவனம் எடுத்துக் கொண்டிருக்கின்றது. எனவே அத்தகைய நிலைமை இல்லை. இதற்கு முன்பு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்கு தனியாகக் கேள்வி போட்டால் விவரமான பதில் கிடைக்கும்.



திரு க. பாரமலை. தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உயர்ந்த பட்சம் 15,000 ரூபாய் வரை கடன் வழங்கப்படுவதாகச் சொல்கிறார்கள். பிரிண்டிங் ப்ரஸ்க்கு 15 ஆயிரம் ரூபாய். மெடிக்கல் ஸ்டோர்ஸ்-க்கு 10ஆயிரம் ரூபாய் இவற்றைத் தவிர பல்வேறு இனங்களுக்குக் கடன்கள் வழங்கப்படுவது இன்றைக்குரிய நடைமுறை தேவைக்கு ஒவ்வாததாக இருக்கிறது என்பதை அரசு அறியுமா குறிப்பாக மளிகைக் கடை வைப்பதற்கு 500 ரூபாயும் செங்கல் சூளை அமைப்பதற்கு 3000 ரூபாயும் வழங்கப்படுவது அந்ததொழில் செய்யதேவைப்படும் முதலீட்டிற்கு கொஞ்சமும் பொருத்தமில்லாதது. ஆகவே வழங்கப்படுகின்ற கடன்கள் எந்த நோக்கத்திற்காக . வழங்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்காக செலவழிக்கப்படவில்லை. எனவே அந்தத் தொகைகள் இவ்வளவு குறைவாக இருப்பதை அறிந்து அவற்றை நடைமுறைக்கு ஏற்ற வகையிலே உயர்த்தி அளிக்கின்ற வகையிலே பரிசீலனை செய்து கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு எம் விஜயசாரதி; தலைவர் அவர்களே, கொடுக்கப்படுகின்ற வட்டியில்லாக் கடனைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். புள்ளிவிவரங்களின் அடிப்படையில் அவர்கள் கேள்வி கேட்டிருக்கிறார்கள். கேட்கப்படுகின்ற தொழில்களுக்கு ஏற்ப கொடுக்கப்படாமல் குறைவான அளவிலே பணம் கொடுக்கப்படுவதாக மேலும் ஒரு கருத்தினைச் சொல்லி இருக்கிறார்கள். அதை நாம் ஏற்றுக் கொண்டாலும் கூட இருக்கின்ற விவரத்தை மட்டும் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்திலே வட்டியில்லாக் கடனைப் பெற்றிருக்கக்கூடிய இந்து ஆதி திராவிட மக்களின் எண்ணிக்கையை மட்டும், அந்தப் புள்ளி விவரங்களை மட்டும் இங்கே சொல்ல விரும்புகிறேன். இதுவரையில் அரசு கொடுத்திருக்கக்கூடிய வட்டியில்லாக் கடன் ரூ. 1,13,79,596 வட்டியில்லாக் கடனை நீண்ட காலத் தவணைகளில் அதாவது 100 மாதங்களில் கூட அந்தக் கடனைப் பெற்றிருப்பவர்களால் திருப்பிச் செலுத்த முடியாத நிலைமை இருக்கின்றது. கடன் தொகை குறைவாக இருக்கின்றது என்று சொன்னாலும் இந்தத் தொகையினைக் கூட திருப்பிச் செலுத்த முடியாத நிலைமை இருக்கின்றது. அதாவது இந்த அளவுக்கு அதிகமான தொகையைக் கடனாகக் கொடுத்திருக்கக்கூடிய அரசுக்கு அவர்கள் திருப்பி செலுத்தி இருக்கக்கூடிய தொகை 10,75,253 ரூபாய் ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுக்கப்படுகின்ற கடன் தொகையினை அதிகப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் தெரிவித்திருக்கிறார்கள். இப்போது வட்டியில்லாக் கடனாக இருக்கின்ற இந்தத் திட்டத்தினை மாற்றியமைக்கக்கூடிய ஒரு செயற்குறிப்பு அரசினுடைய பரிசீலனையில் இருக்கின்றது. அதன்மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவுடன் தகுதிக்கேற்ப, இன்றைய நிலைமையின்

தேவைக்கேற்ப அளிக்கப்பட வேண்டிய வகையில் நிதி உதவி இந்த மக்களுக்கு அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### ஆதிதிராவிடர்களுக்கு கிணறு வெட்ட வழங்கப்படும் மானியத்தொகை

*வினா எண் 139—திரு சி கணேசன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிடர் மக்களுக்கு கிணறு எடுக்க கொடுக்கப்பட்டு வந்த மானியத்தொகை நிறுத்தப்பட்டு இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் மீண்டும் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு எம். விஜயசாரதி:—(அ) நிறுத்தப்படவில்லை. நிலவள வங்கிகள் மூலம் நிறைவேற்றப்பட்ட இத்திட்டம் சரிவர செயல்படவில்லை.

(ஆ) இத்திட்டத்திலுள்ள குறைபாடுகளைக் களைந்து இதனை சீரிய முறையில் செயல்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்து மானியத் தொகையையும் உயர்த்தி அரசாணை நிலை எண். 251, சமூகநலம், 9-2-82 ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு சி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுக்காக அளிக்கப்படும் இந்தக் கடன் தொகை நிலவள வங்கியின் மூலமாக அளிக்கப்படுகின்றது என்று அறிவித்தார்கள். நிலவள வங்கி அளிக்கின்ற அந்த மூலதனம் மத்திய வங்கிகளில் இருந்து வருகின்ற காரணத்தால் 'ஒப்பன் காம்பெட்டிஷன்' என்ற நிலமையில் பெருவாரியான அரிசன மக்கள் இதனைப் பயன்படுத்த முடியாமல் இருக்கின்றது. ஆகவே அதற்கென உள்ள ஸ்தாபனமான ஆதி திராவிடர் நலத்துறையே அந்தப் பொறுப்பினையும் ஏற்றுக்கொள்ள முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் நிலவள வங்கியின் மூலமாக வழங்குவதில் உள்ள இடர்ப்பாடுகளை ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் அரசுக்குத் தெரிவித்து இன்று இடர்ப்பாடுகளைக் களைந்து இந்தத் திட்டத்தை நல்லமுறையில் செயல்படுத்துகின்ற மாற்று ஏற்பாடுகள் கொண்ட செயற்குறிப்பு ஒன்றை அரசுக்கு அனுப்பினார்கள். அரசு இதை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடனும் மற்றும் செயலக துறைகளுடனும் கலந்தாலோசித்து பின்னர் ஆணை பிறப்பித்துள்ளது. இதன்படி ஒரு கிணறு



தோண்டுவதற்கு ஆகும் பொத்த செலவில் 31 1/3 சதவீதத்தை ரூபாய் 5,000 என்ற உச்சவரம்புக்கு உட்பட்டு அரசாங்கம் மானியமாக அளிக்கும் மீதம் உள்ள 66 2/3 சதவீதத்தை நிலவள வங்கிகளிடமிருந்தும் மற்றும் வணிகவியல் வங்கிகளிடமிருந்தும் இந்த மக்கள் பெற்றுக்கொள்ளலாம். ஒரு கிணறு வெட்டுவதற்கு மொத்தச் செலவு ரூபாய் 9,000 என்று புதிய திட்டத்தின் படி கணக்கிட்டு அதன் மீது அரசு நடவடிக்கையை பிறப்பித்து இருக்கிறது.

திரு. க பரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்த மானியத் தொகை வரம்பை உயர்த்திருப்பதாக சொன்னார்கள். அதை உண்மையிலேயே நான் வரவேற்கிறேன். ஏற்கனவே 2500 ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. இப்போது 5,000—க்கு மேற்படாமல் பொத்த செலவில் 3-ல் ஒரு பங்கை மானியமாக கொடுக்கப்படுவதாக அறிவித்தார்கள். அதில் இருக்கிற சிக்கல் என்ன என்றால் இது நிலவள வங்கிகள் மூலம் வழங்கப்பட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டதன் மூலம் இது மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரியும் பல்வேறு நிலவள வங்கிகள் கடன் கொடுக்கும் தகுதியை இழந்துவிட்ட காரணத்தாலே அதன் மூலமாக கடன் பெற இயலாததாகிவிட்டது. ஆகவே இந்த நிலையை உணர்ந்து மீண்டும் அரிசன நலத்துறை மூலமாக இதை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல நிலவள வங்கிகள் மூலம் இந்தத் திட்டத்தினை செயல்படுத்துவதில் இருந்த சில இடர்பாடுகளை களைந்து கொண்டிருக்கிறது. இதுவரையில நிலவள வங்கிகள் மட்டும் அளித்து வந்த அந்த கடன் உதவியை தற்போது தேசியமயமாக்கப்பட்ட மற்ற வங்கிகள் மூலமாகக்கூட செய்யலாம் என்கிற வகையில் அரசு உத்திரவுகளை பிறப்பித்து இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல அளிக்கப்படுகின்ற மானியத் தொகையை உயர்த்தியிருக்கிறது இந்தத்துறையே இந்த பணியை மேற்கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தினை உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதை தேவைக்கு ஏற்ப இந்த மக்களுடைய கோரிக்கைகள் தற்போது எந்த அளவிலே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்கிற விவரங்களை அறிந்துகொண்டு இந்த அரசு பரிசீலித்து ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

குறிப்பு; [ ஓர் உரையின் தொடக்கத்தில் *உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெறாது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) முன் அனுமதியின்றி எழுப்பப்பெறும் பிரச்சினைகள்

**திரு. என் எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட்டு ஆப் ஆர்டர் சார். மிக முக்கியமான சட்டம் ஒழுங்கு பிரச்சினையிலே தங்களுடைய கவனத்தை ஈர்க்கவும் இந்த அரசினுடைய விளக்கத்தை பெறவும் நான் இங்கே எழுந்துள்ளேன் தமிழகத்திலே மாணவர்களுக்கும் பஸ் தொழிலாளர்களுக்கும் அவ்வப்போது மோதல் ஏற்பட்டு வருகிறது. இதனை ஒட்டி 1981-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 6-ஆம் நாள் அன்று மாணவர்களுக்கும் பேருந்து பணியாளர்களுக்கும்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்;** எனக்கு நோட்டீஸ் கொடுங்கள். ஒத்திவைப்புத் தீர்மானமாக கொடுங்கள்' கவன ஈர்ப்பு கொடுங்கள் பாயிண்ட் அப் ஆர்டரில் இது எப்படி வரும்? திடீர் என்று பாயிண்ட் ஆப் ஆர்டர் என்றால் எப்படி?

**திரு. என். எஸ் வி. சித்தன்;** பேரவைத் தலைவர் அவர்களே இந்தத் தீர்ப்பு வந்ததற்கு பின்னாலே அரசு ஆணை பிறப்பித்ததற்கு பின்னாலே இப்போது 3 மாணவர்கள் இறந்து இருக்கிறார்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்;** அது சரி. 3 பேர் இறந்து இருக்கிறார்கள் இல்லையா. கொண்டுவரும் முறைப்படி கொண்டு வாருங்கள். நீங்கள் உணரும் பொது முக்கியத்துவத்தை நானும் உணருகிறேன். முறைப்படி கொண்டுவந்தால் எடுத்துக் கொள்வதற்கு முயற்சிப்பேன்.

**திரு ஆர். மணிமாறன்;** பாயிண்ட் ஆப் ஆர்டர். பேரவைத் தலைவர் அவர்களே இந்த அவையிலே பணியாற்றிக்கொண்டிருக்கச் கூடிய சட்டமன்ற உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர். அவருடைய இல்லத்திலிருந்து ஒரு 20J அடி தூரத்தில் ஒரு வெடி குண்டு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் ;** அது இன்றைய தினத்தந்தி பேப்பரிலே வந்திருக்கிறது. அது இங்கே பேசிய பிறகு பத்திரிக்கையிலே வந்திருந்தால் நன்றாக இருக்கும். பத்திரிக்கையிலே வந்தபிறகு திரும்பி பேசினால் அது பழைய செய்தியாகிவிடுகிறது.



## 3. ஒத்தி வைப்புத் தீர்மானம்

### கர்நாடக மாநில சட்டமன்றப் பேரவையில் உறுப்பினர் தமிழில் உறுதிமொழி எடுத்துக் கொண்டதற்காக வெளியே தாக்கப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்;** ஒத்திவைப்புத் தீர்மானம் திருவாளர்கள் அ. ரகுமான்கான், குமரி அனந்தன், எஸ். என் இராமசாமி ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் ஆகியோர் "கர்நாடக மாநிலத்தில் சட்டமன்றப் பேரவையில் தமிழில் உறுதிமொழி எடுத்துக்கொண்டதற்காக, மாநில சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. பக்தவச்சலம் அவர்கள், வெளியே தாக்கப்பட்டதால் தமிழ் மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்." என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன். வெளியே நடந்தது பற்றி மட்டும் பேசுங்கள் சட்டசபைநடவடிக்கைகளுக்குள் போகாதீர்கள். திரு. அ. ரகுமான்கான்

(முற்பகல் 10-10)

**திரு. அ. ரகுமான்கான்;** மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் கர்நாடக மாநிலத்தில் சட்டமன்றத்திலே தமிழிலே பதவியேற்பு நிகழ்த்தியது தவறு அப்படி நிகழ்த்தக்கூடாது என்று குற்றச்சாட்டு சுமததப்பட்டு சில கன்னட வெறியாளர்களால் அவர் தாக்கப்பட்டிருக்கிறார். அவர் உயிருக்குக் கூட ஆபத்தான நிலை ஏற்பட்டிருக்கிறது. அவர் ஒரு தமிழன் என்ற முறையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக தமிழ் மக்களின் கண்டிப்பை இந்த அவையில் நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இலங்கையிலே தனபால் என்பவர் இலங்கை வெறியர்களால் கொலை செய்யப்பட்ட நேரத்திலே கூட நாங்கள் அதற்காக அறிக்கைவிட்டு அவர் குடும்பத்திற்கு நிதியுதவியும் செய்திருக்கிறோம். அந்த அடிப்படையிலே ஒரு தமிழன் கர்நாடக மாநிலத்திலே பாதிக்கப்பட்டிருக்கிறார். பதவியேற்பு எடுப்பது அந்தந்த மாநில மொழிகளில் எடுக்கவேண்டுமென்ற கருத்து தவறானது அல்ல ஆனால் லிங்குவிஸ்டிக் மைனாரிட்டி என்ற முறையிலே மொழிவழி சிறுபான்மையோர் கூட பொறுப்புக்கு வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. உதாரணமாக அமைச்சர் ஹண்டே அவர்கள் கர்நாடகத்தைச் சேர்ந்தவர் இங்கே அமைச்சராக இருக்கிறார். மொழவழிச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களகூட

தமிழகத்திலே அதுபோன்று பொறுப்புக்கு வருவதைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் இதுபோன்ற சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்ற அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற திராவிட கழகத்தைச் சேர்ந்தவருக்கு தாய்மொழி தான் தெரியும்.

ஆங்கிலமோ மற்ற மொழிகளோ தெரியாது. தன்னுடைய தாய்மொழியிலேயே அவர் பதவிப் பிரமாணம் எடுப்பது என்பது சட்டவிரோதமானதல்ல. ஆனாலும் கூட கன்னட வெறியர்கள் இதுபோன்ற காரியங்களிலே ஈடுபடுகிறார்கள். மொழிவழி சிறுபான்மையோரின் உணர்வுகள் மற்ற மாநிலங்களிலே மதிக்கப்படவேண்டும். நான் இன்னொன்றையும் தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கே இருக்கின்ற அஜித் சேட் என்கிற உறுப்பினர், அவரும் தன் தாய்மொழியாகிய உருது மொழியிலே பதவி ஏற்பு நிகழ்த்தியிருக்கிறார், அப்போதும் கூட எதிர்ப்பு அங்கே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே மொழிவழிச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் லிங்குவிஸ்டிக் மைனாரிட்டிஸ் இந்த சபையிலே தெலுங்கிலே தெலுங்கை தாய்மொழியாகக் கொண்ட உறுப்பினர் பேசுவதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. வேண்டுமானால் நிர்வாகச் சிக்கல்கள் இருக்கலாம். அவைக் குறிப்பிலே ஏறுவதற்கு ஆங்கில வசதி இருக்கலாம் அல்லது தமிழிலே வசதி இருக்கலாம். சிறுபான்மையோர் மொழிகளில் அப்படிப்பட்ட வாய்ப்பு வசதிகள் இல்லாமல் இருக்கலாம். இந்தச் சட்டமன்றத்திலே தெலுங்கிலே பேசுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதேமாதிரி கர்நாடகத்திலே அனுமதி அப்படி வழங்கப்படுகிறதா என்றால் கிடையாது.

நான் இன்னொன்றையும் சட்ட பேரவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். கோல்கா கமிட்டி அளித்த அறிக்கையின்படி தமிழ் பேசுகின்ற தமிழ் மக்களைச் சேர்ந்த பிள்ளைகள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழர்கள் கோலாரிலே சுட்டுப் பொசுக்கப்பட்டிருக்கிறார்கள் அங்கே துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது. அதுமட்டுமல்ல தமிழர்களுக்கு விரோதமாக கன்னட வெறியர்கள் செயல்படும் நிலை இருக்கிறது. ஆனால் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் அப்படி இல்லை. ரஜனிகாந்த் போன்ற சினிமா நடிகர்களையெல்லாம் தமிழ்நாட்டிலே நாம் அனுமதித்துக் கொண்டிருக்கிறோம். நான் அது சட்ட விரோதம் என்று சொல்லவில்லை. ஆனால் இன்றைக்கு சிறுபான்மை மக்களாக இருக்கின்ற தமிழர்களுடைய உயிருக்கும் உடைமைக்கும் அங்கே பாதுகாப்பில்லாத ஆபத்தான நிலை இருக்கிறது. இது கண்டிக்கத்தக்கது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் ஒரு கட்சிக்காரர் பாதிக்கப்பட்டிருந்தாலும் இந்த அரசு அதைக் கண்டிக்க வேண்டிய அளவுக்கு கண்டிக்கவில்லை என்று



குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டு தமிழர்கள் சுடப்பட்ட போதுகூட நம் முதலமைச்சர் அறிக்கையை அனுப்புவதும் தபாலை அனுப்புவதும் தந்தியை அனுப்புவதும் போதுமானதல்ல. ஏகோபித்து யார் தாக்கப்பட்டாலும் எந்தக் கட்சியைச் சேர்ந்த தமிழர் தாக்கப்பட்டாலும் அவர்களுடைய உயிரையும் உடைமைகளையும் பாதுகாக்க வேண்டும் என்று சுட்டிக்காட்ட நமக்கு உரிமை உண்டு இன்றைக்கு தமிழர்களுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கின்ற நேரத்திலே கட்சி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட முறையிலே ஆயிரக்கணக்கான லட்சக்கணக்கான தமிழ் மக்களின் ஏகோபித்த குரலாக கர்நாடகத்திலே தமிழிலே பதவி ஏற்பு நிகழ்த்தினார் என்ற ஒரே ஒரு காரணத்திற்காக அவருடைய உயிருக்கே ஆபத்து ஏற்படக்கூடிய அந்த வெறியைக் கண்டித்து அந்த நடவடிக்கையைக் கண்டித்து இந்த மன்றமே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிட வேண்டும். இது முக்கியமான பிரச்சினை பெங்களூரில் 10 லட்சம் தமிழ் மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுடைய உயிர்ப் பிரச்சினை என்ற காரணத்தினால் அதற்காக ஒரு தீர்மானம் கொண்டு வரவேண்டுமென்று வலியுறுத்தி இந்த முக்கியமான பிரச்சினையை விவாதிக்க அவையை ஒத்தி வைத்து விவாதிக்க தாங்கள் அனுமதி தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களும் மற்றும் பல உறுப்பினர்களும் கொண்டு வந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது கர்நாடக மாநில தினுடைய சட்டமன்றத்திலே பதவிப்பிரமாணத்தை தமிழிலே அங்கே உள்ள உறுப்பினர் பக்தவச்சலம் எடுத்துக் கொண்டார் என்பதற்காக கர்நாடக மொழிப்பற்று மிகுதியாக உடையவர்கள் எந்த அளவுக்கு நடந்துகொண்டார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் எடுத்துத் தெரிவித்தார்கள் தமிழகச் சட்ட மன்றத்தின் மூலம் நம்முடைய உணர்வுகளை கர்நாடக மாநில அரசுக்கும் கர்நாடக மாநில சட்டப்பேரவைக்கும் தெரிவிப்பதன் மூலமாக தமிழக மக்களின் சார்பாக அதைத் தெரிவிக்க வேண்டுமென்ற முறையிலே இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் இங்கே பயன்படும் என்று நண்பர்கள் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். உள்ளபடியே இந்த மொழிப் பிரச்சினையை பொறுத்தவரையிலும்ஒரு திட்டவட்டமான, தெளிவான போக்கினைத்தான் மைய அரசும் கொண்டிருக்கிறது. மாநில அரசுகளும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இந்தியாவை பொறுத்தவரையில் சென்சஸ் கணக்கு என்று பார்க்கிறபோது இந்தியாவிலே எழுத்தில்லாத, இலக்கணமில்லாத, இலக்கியமில்லாத எல்லா மொழிகளும்

சேர்த்து 500க்கு மேற்பட்ட மொழிகள்தான் இருக்கின்றன. 129 மொழிகள் குறிப்பிட்ட மொழிகள் என்று சொல்லி, 15 மொழிகள் அரசியல் அமைப்புச் சட்டத்திலே சேர்க்கப்பட்டு உள்ளன. இந்த மொழி பற்றிய பிரச்சினை வருகிறபோது பாராளுமன்றத்திலே எந்த முறையை கையாள வேண்டுமென்பதை அரசியல் அமைப்புச் சட்ட 210 விதியில் தெளிவாக குறிப்பிடப் பட்டிருக்கிறது.

"(1) Notwithstanding anything in Part XVII, but subject to the provisions of Article 348, business in the Legislature of a State shall be transacted in the official language or languages of the State or in Hindi or in English:

Provided that Speaker of the Legislative Assembly or Chairman of the Legislative Council, or person acting as such, as the case may be, may permit any member who cannot adequately express himself in any of the languages aforesaid to address the House in his mother-tongue.

மாநில பேரவை ஏற்றுக்கொண்ட மொழிகளிலே பேசமுடியாத நிலையிலிருந்து, தன்னுடைய தாய்மொழியிலே மட்டும்தான் பேச முடியும் என்று ஒரு உறுப்பினர் கருதுவார்களானால் அவருடைய தாய்மொழியிலே பேசுவதற்கு பேரவைத் தலைவருடைய அனுமதி பெற்று பேசலாம் என்று அரசியல் அமைப்புச் சட்டம் தெளிவாக எடுத்துக் கூறுகிறது, அந்த முறையில்தான் தென்னக மாநில சட்டமன்றப் பேரவைகளில் தொடர்ந்து கையாண்டுவந்திருக்கிறார்கள், என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்

ஆந்திர சட்ட மன்றப் பேரவை விதிகளில்கூட 331-வது விதியில்

The business of the Assembly shall be transacted in English

என்று போட்டு விட்டு

Provided that any member may with the permission of the Speaker address the Assembly in any other language

என்று போட்டு பேரவையினுடைய தலைவருடைய அனுமதி பெற்று பேசலாம் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். அதைப் போலவே கேரள மாநில சட்டமன்றப் பேரவையிலும் அவர்கள் மிக தெளிவுபட எடுத்துச்சொல்லி இருக்கிறார்கள். லேங்குவேஜஸ் ஆப் தி அசெப்பிளி என்று 305 விதியில்

The business of the Assembly shall be transacted in Malayalam Tamil, Kannada or English. The official records of the proceedings of the Assembly shall be kept in English or in the language in which such proceedings are conducted in the Assembly.





என்று அதிலே மலையாளம் மட்டும் அல்லாமல் தமிழ், கன்னடம். ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் உரையாற்றலாம் என்று சொல்லப்பட்டு, அவர்கள் புரொசிடிங்சிலே கூட திரு. வரதன் என்ற உறுப்பினர் பேசியதை தமிழிலே அவர்களுடைய நிகழ்ச்சி நிரலிலே பதிவு செய்து தந்திருக்கிறார்கள். அந்த முறையை தொடர்ந்து கேரளாவும் கடைப்பிடித்து வருகிறது. ஆனால் கர்நாடக சட்டமன்ற பேரவையினுடைய விதிகள் என்னவென்று அறிந்துகொள்ள முடியவில்லை. அதனுடைய விதிகள் கிடைக்க வில்லை.

தமிழகத்தினுடைய சட்டமன்றப் பேரவையை பொறுத்த வரையில் மாண்புமிகு திரு. ரகுமான்கான் அவர்கள் எடுத்துத் தெரிவித்ததைப் போல, இந்த மாநிலத்தில் சட்டமன்றத்தில் பயன்படுத்துகிற மொழியாக தமிழையும், ஆங்கிலத்தையும் பயன் படுத்தலாம் என்றாலும், சிறுபான்மையோர் பேரவைத் தலைவருடைய அனுமதி பெற்று அவர்கள் தங்களுடைய மொழி களிலும் பேசலாம் என்றுதான் தொடர்ந்து நடமுறையில் கையாளப்பட்டு வருகிறது. நம்முடைய பேரவை விதிகள் 85-ல் பேரவையினுடைய அலுவல்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும், இருமொழிகளிலும் நடைபெறலாம்; மேலும் ஒரு உறுப்பினர் மாநில அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எந்த மொழியிலாவது, இந்தியிலாவது உரையாற்றலாம். மேலும் மேற்கூறிய மொழிகள் எதிலும் தன்னுடைய கருத்தினை தெளிவுற எடுத்துரைக்க முடியாத உறுப்பினர் தமது தாய் மொழியில் பேரவையில் உரையாற்றுவதற்கு பேரவைத் தலைவர் அனுமதிக்கலாம். விளக்கம் என்று போட்டு, இவற்றில் ஏற்பளிக்கப்பட்ட மொழி எனப்பெறுவது, கீழ்காணும் மொழிகளில் ஒன்றைக் குறிக்கும். அவையாவன தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்று தமிழகப் பேரவை சட்ட விதிகளில் தெலுங்கு மொழி சிறுபான்மையினரோ கன்னட மொழி சிறுபான்மையினரோ அல்லது மலையாள மொழி சிறுபான்மையினரோ அவர்கள் மொழிகளில் பேசவேண்டு மென்று விரும்பினால் பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதி பெற்று பேசலாம் என்று வைத்திருக்கிறோம் ஆகவே இந்த நோக்கத்தினுடைய அடிப்படையில்தான் கர்நாடக மாநில சட்டமன்றப் பேரவை நிகழ்ச்சிகள் இதுவரையில் நடந்து கொண்டு வந்திருக்கின்றன என்கிற தன்மையை எல்லாம் நாம் உணர்ந்திருக்கிறோம். இப்போது கூட கர்நாடகப் பேரவையில் பதவிப்பிரமாணம் எடுத்துக் கொள்கிறபோது தற்காலிக பேரவைத் தலைவர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவருடைய தலைமையின் கீழ் எல்லோரும் பதவி பிரமாணம் எடுத்துக் கொண்டு வந்தார்கள்.

(முற்பகல் 10—20)

ஆனால் கர்நாடகப் பேரவையினுடைய நடவடிக்கைகளைப் பொறுத்தவரையிலும் நாம் எந்தக் குற்றமும் சொல்வதற் கில்லை. ஏனென்றால், பேரவையில் தேர்ந்தெடுக்கப்பட்ட

தற்காலிகப் பேரவைத் தலைவர் அவர்கள் கூட அவரைத் தமிழிலே பிரமாணம் எடுத்துக் கொள்வதற்கு அனுமதித்து விட்டார். தமிழிலேதான் எடுத்துக்கொண்டு விட்டார். அவர் தமிழிலேயேதான் பிரமாணத்தை எடுத்துக்கொண்டுபோய் உட்கார்ந்தார். ஆனால், மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கு சொன்னதைப்போல, கன்னட மொழியிலே மிகுதிப் பற்றுடையவர்கள், தமிழ் மொழியிலே பேச விடக்கூடாது என்ற கருத்துடைய சிலபேர், அவர் சிண்டைப் பிடித்து இழுத்தும், வேறுபல சங்கடங்களையும் ஏற்படுத்தினார்கள் என்றும், தமிழிலே அவர்கள் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டதன் காரணமாக, வெளியிலே தாக்கப்பட்ட செய்தியும், நம் அனைவருக்கும் வருத்தத்தையும் வேதனையையும் தருவதாக இருக்கிறது.

தொடர்ந்து சிறுபான்மையோருக்கு மதிப்பளித்து வந்த இந்தச் சட்டமன்றங்கள் எல்லாம் இப்பொழுது ஒரு மாச்சரியம் கொள்கிற அளவுக்கும் நாம் வேதனையும் வருத்தமும் கொள்கிற அளவுக்கும் நிகழ்ச்சிகள் அங்கே நடந்திருப்பது தமிழக மக்கள் அத்தனைபேருக்கும் பெரும் வருத்தத்தை அளிக்கக்கூடிய ஒன்று. சட்டமன்றத்தின் மூலமாக அந்த உணர்வைத் தெரிவிக்கவேண்டிய கடமைப்பாடும் நமக்கு இருக்கிறது. அந்த வகையிலே இந்தக் கர்நாடகச் சட்டமன்றத்தைப் பொறுத்தவரையிலும் எந்தக் குறைபாடும் சொல்லவில்லை. சட்டமன்றத்திலே, சட்டமன்றப் பேரவைத் தற்காலிகத் தலைவர் அனுமதி அளித்திருக்கிறார். அனுமதி மறுத்திருந்தால் நான் அவர்களுக்கு எடுத்துத் தெரிவிக்க வேண்டும். ஆனால், தமிழிலே உறுதிமொழி எடுத்துக் கொண்டார் என்பதற்காக, அவர் தாக்கப்பட்டார் என்பதும், அவர் சங்கடத்திற்கு ஆளாகியிருக்கிறார் என்பதும், தெரிந்த நிலையில் அதற்கான நடவடிக்கைகளை அந்த மாநில அரசும் அந்த மாநிலத்திலே இருக்கிற சட்டமன்றப் பேரவையும் எடுத்துக் கொள்ள வேண்டும். நாமாக எடுத்துக்கொள்ள முடியாது. ஆனால், அவர்களுக்குத் தெரிவிக்கவேண்டிய கடப்பாடு நமக்கு இருக்கிறது என்ற காரணத்தினாலேதான் இந்தச் செய்தி வந்தவுடனேயே, நம்முடைய தமிழக மாநிலத்தினுடைய தலைமைச் செயலாளரின் மூலமாக, பொதுப்(பணித்)துறையின் மூலமாக, கர்நாடக மாநிலத்தினுடைய தலைமைச் செயலாளருக்கும் கர்நாடக மாநிலத்தினுடைய சட்டமன்றப் பேரவையினுடைய செயலாளருக்கும் மொழி சிறுபான்மையோருடைய உரிமை பாதுகாக்கப்பட வேண்டுமென்ற கருத்தை நாம் தெரிவித்து, அங்கே நடந்தவைகளுக்கான விளக்கங்களை இந்த அரசு தெரிந்துகொள்ள விரும்புகிறது என்று நாம் எழுதி அனுப்பியிருந்தோம். அதற்கு இன்னமும் அவர்களிடத்திலேயிருந்து பதில் வரவில்லை என்றாலும்கூட, இந்த மன்றத்திலேயிருக்கிற அத்தனை உறுப்பினர்களுடைய உணர்வை இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியதிலிருந்தும், நாம் பதில் தெரிவித்ததிலிருந்தும் எடுத்துச் சொல்கின்ற வகையில், அந்த



உணர்வுகளுக்கு மதிப்பளித்து கர்நாடக மாநிலத்தினுடைய சட்டமன்றப் பேரவையும் கர்நாடக மாநில அரசும் மொழிச் சிறுபான்மையோருக்கு, இதற்கு முன்னாலே அங்கே தக்க பாதுகாப்பு தந்ததற்கிணங்க, தொடர்ந்து பாதுகாப்பு தர வேண்டுமென்பது மட்டுமல்லாமல், அந்த ஜனநாயக மரபு இந்தியாவில் இருக்கிற எல்லா சட்டமன்றப் பேரவைகளிலும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது என்பது மட்டுமல்லாமல், குறிப்பாகத் தென்னகத்தைச் சேர்ந்த மாநிலச் சட்டமன்றப் பேரவைகள் தொடர்ந்து கடைபிடித்து வருகின்ற உணர்வை இப்பொழுது இந்த அவையிலே நாம் தெரிவிப்பதன் மூலமாக அவர்களுக்குத் தெரிவிக்க முடியும். ஆகவேதான் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதிலிருந்தும், நான் சொன்ன பதிலிலிருந்தும் விளக்கங்கள் பெற்றிருப்பதன் காரணமாக, அந்த உணர்வை அவர்களுக்கு மீண்டும் எடுத்துத் தெரிவிக்கின்ற பொறுப்பை அரசு ஏற்றுக் கொள்ளும் என்பதன் காரணமாக, இதற்காக ஒத்தி வைப்பது அல்லது ஒரு கண்டனத் தீர்மானம் கொண்டு வருவது அவ்வளவு சரியாக இருக்காது. அதைக் கண்டிப்பதோ, நாமாக நடவடிக்கை எடுப்பதோ, வேறுபல வகைகளில் வைப்பதோ. ஜனநாயக மரபுகளைக் காப்பாற்றுவதற்கு ஒத்துவராது. ஆனால், தமிழிலே பிரமாணம் எடுத்துக் கொண்டார் என்பதற்காக வெளியிலே தாக்கப்பட்டார் என்றால் அது கர்நாடக அவையினுடைய உரிமையை மீறுகின்ற செயல்தான். அங்கே அதற்கான உரிமை மீறல் போன்ற நடவடிக்கைகளை அந்தச் சட்டமன்றப் பேரவையினர் முறைப்படி எடுத்துக் கொள்வார்கள் என்ற முறையிலே அவர்களுக்கு நாம் விட்டுவிடவேண்டும். ஆனாலும், தமிழக மக்களுடைய உணர்வை இந்த மாநிலச் சட்டமன்றப் பேரவையின் மூலமாகத் தெரிவிக்கிறோம் என்ற முறையில் இந்த அரசு தெரிவிக்கும் என்பதை மட்டும் எடுத்துச் சொல்லி, இதற்காக அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

## 4. கவன ஈர்ப்புகள்

(அ) மற்ற மாநிலங்களிலிருந்து நுகர்பொருள் வாணிபக் கழகம் அரிசி கொள்முதல் செய்வது.

திரு. இரா. தாமரைக்கனி; தலைவர் அவர்களே, "தமிழ் நாட்டிற்குத் தேவையான அரிசியை நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் நேரிடையாக மற்ற மாநிலங்களிலிருந்து கொள் முதல் செய்வதை மைய அரசு தடை செய்துள்ளதால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்" குறித்து அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே இந்தியா முழுவதும் அரிசியைத் தடங்கலின்றி (Single zone) கொண்டு போகலாம் என்பது மைய அரசின் கொள்கை. ஆனால், ஒரு மாநிலத்தில் உள்ள நுகர்பொருள் வாணிபக் கழகம் வேறு மாநில அரசிடமிருந்தோ அல்லது சிவில் சப்ளை கார்ப் பரேஷனிடமிருந்தோ அரிசி வாங்குவதை மத்திய அரசு இப்போது தடை செய்துள்ளது. இந்தத் தடையினால் நாம் உபரி மாநில அரசு நிறுவனங்களிடமிருந்து அரிசி வாங்க முடியவில்லை. தனியார் அரிசி வாங்க இதுபோன்ற தடையில்லை. அப்படி அவர்கள் கொண்டுவரும் அரிசியின் விலை அதிகமாக இருக்கும். நுகர்பொருள் வாணிபக் கழகம் வாங்கி வந்தால் பொது மக்களுக்குக் குறைந்த விலையில் அரிசி விற்கலாம்.

இதனால் வெளி மாநிலங்களில் அரிசி வாங்க அனுமதி தருமாறு மத்திய அரசை தொடர்ந்து வற்புறுத்தி வருகிறோம். இனியும் வற்புறுத்தி வருவோம். அவர்களும் உதவுவார்கள் என்றே நாம் நம்பலாம்.

திரு இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டில் ஐம்பதாண்டு காலமாகக் காணாத கடும் வறட்சி நிலவுகிறது. காவிரி நீரும் மறுக்கப்படு கிறது. நமக்கு 80,000 டன் அரிசியும், ஏழைக் குழந்தைகளின் பசியைப் போக்குவதற்கான திட்டத்திற்கு 20,000 டன் அரிசியும் தேவைப்படும் என்று நாம் தெளிவாகத் தெரிவித்தும் மத்திய அரசு அதைக் கொடுப்பதற்கு மறுக்கிறது. இந்த நெருக்கடியை உத்தேசித்து, உபரியாக அரிசி இருக்கின்ற மாநிலங்களிலுள்ள நுகர்பொருள் வாணிபக் கழகங்களிடமிருந்து நமது மாநில அரசு அரிசி வாங்குவதற்குத் தடை இருப்பதால் அந்தத் தடையை நீக்க வேண்டுமென்று சர்வ கட்சித் தலைவர்கள் பிரதமர் அவர் களைச் சந்திப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா? நமது அதிருப்தியைத் தெரிக்கும் வகையில் பிரதமர் அவர்களின் வீட்டுக்கு முன்னால் உண்ணாவிரதம் இருப்பதற்கும் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன். சென்ற ஆண்டு 1981–82 ஆம் ஆண்டில் வறட்சியின் காரணமாக நாம் நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் ஆந்திராவுடன் பேசி அரிசியைக் கொள்முதல் செய்துகொண்டு வந்து கொண்டி



ருந்தோம், ஆனால், இந்த ஆண்டுதான் ஒரு மாநிலத்தில் உள்ள நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றொரு மாநிலத்தில் உள்ள சிவில் சப்ளை கார்ப்பரேஷனிடம் இருந்தோ அல்லது வேறு மாநில அரசிடமிருந்தோ அரிசி வாங்கிக்கொண்டு வரக் கூடாது என்று வைத்திருக்கிறார்கள். சிங்கிள் ஸோன் என்று இருப்பதால் வியாபாரிகள் சென்று கொள்முதல் செய்து 50 சத விதம் லெவியைத் தந்துவிட்டு மீதத்தைக் கொண்டு வரலாம் என்றிருக்கிறது. ஆகவேதான் எவ்வளவுக்கெவ்வளவு தனிப்பட்ட அரிசி, நெல் வியாபாரிகள் அங்கே போய் வாங்கி 50 சதவீதம் லெவியைக் கொடுத்துவிட்டு மீதியைத் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வருவதற்குத் தாராளமாகச் செய்யலாம், அதற்கான வழி வசதி களைச்செய்யும் என்றும்கூட ஊக்குவித்திருக்கிறோம். இருந்தாலும், நுகர் பொருள் வாணிபக் கழகங்கள் கொள்முதல் செய்தால் குறைந்த விலையில் பெற முடியும். அதன்விளைவாக, நுகர் பொருள் வாணிபக் கழகத்தோடு மற்றொரு நுகர்பொருள் வாணிபக் கழகம் வாணிபத் தொடர்பு வைத்துக்கொள்ளும் பொழுது அதில் குற்றங்குறைகள் ஏற்படாமல் இருக்கும். எனவே அதற்கு தொடர்ந்து அனுமதிக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி வருகிறோம். மத்திய உணவு அமைச்சரவர்களுக்கும் தெரிவித்திருக்கிறோம். இந்தியப் பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் எழுதிய கடிதத் திலும் குறிப்பிட்டிருக்கிறார்கள். உணவு அமைச்சருக்கும் குறிப் பிட்டிருக்கிறார்கள். அவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்புகிறோம். உண்ணாவிரதம் இருப்பதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். உண்ண வேண்டுமென்பதுதான் நம்முடைய பிரச்னை. உண்ண வேண்டுமென்பதற்காகதான் இவ்வளவு பிரச்னைகளும் வருகின்றன. நாங்கள் உண்ணாமல் இருக்கிறோம் என்று சொன்னால் அவர்களும் சரி என்று சொன்னாலும் சொல்லி விடுவார்கள். எனவே, அந்தக் கட்டத்திற்குப் போகாமல், அந்த அரிசியைப் பெற்று உண்ணுகின்ற முயற்சியில்நாம் ஈடுபடுவோமாக.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மத்திய அரசின் தடை உத்தரவை எதிர்த்து நமது தமிழக அரசு சுப்ரீம் கோர்ட்டில் ஸ்டே வாங்குவதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது டிபார்ட்மெண்டல் இன்ஸ்ட் ரக்ஷன் என்ற அளவிற்குத்தான் வருகிறது. ஸ்டேட்சுடரியாக, சட்டபாக ஆக்கியிருந்தால் ஹைகோர்ட்டுக்கோ சுப்ரீம் கோர்ட்டுக்கோ போகலாம். ஆகவே, இது நடைமுறை விதியாக இருப்பதால் இந்த நடைமுறை விதிகளை மாற்றி நமக்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்று சொல்கிறோம். இதை எதிர்த்து வழக்குமன்றத்திற்கோ, மற்றவைகளுக்கோ போவதால் நமக்குச் சாதகமான பலன் ஏற்படாது. ஏனென்றால் அதற்கு நீண்ட காலத்தாழ்வு ஏற்பட்டு வழங்காத சூழ்நிலைகூட ஏற்பட்டு விடக்

கூடும். ஆகவே, சுமூகமான முறையில் நியாயத்தை எடுத்து வைத்து, இருக்கின்ற நிலைமைகளையும் எடுத்து வைத்து இந்த அரிசியை உபரி மாநிலங்களிலிருந்து பெறுவதற்கான முயற்சிகளில் தமிழக அரசு தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

(ஆ) குடியாத்தம் திருமகள் பஞ்சாலை மூடல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கே. ஆர். சுந்தரம், கு. ரமணி, என். வரதராஜன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ரா. கிருஷ்ணன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, "குடியாத்தம் நகரில் உள்ள திருமகள் பஞ்சாலை 4-10-1982 முதல் மூடப்பட்டுள்ளதால் அதில் வேலை செய்யும் 600 தொழிலாளர்கள் வேலை இழந்தது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

குடியாத்தம் திருமகள் மில்ஸ் லிமிடெட், சுமார் 25,000 கதிர்களுடன் (spindles ) இயங்கும் ஒரு பஞ்சாலை ஆகும். இதல் சுமார் 600 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். வட ஆற்காடு மாவட்ட நூற்பாலை தொழிலாளர் சங்கம் (சி.ஐ.டி.யு.) குடியாத்தம் என்னும் தொழிற்சங்கம் ஆலையில் இயங்கி வருகிறது.

2. நிர்வாக இயக்குநர்களிடையே ஏற்பட்ட உட்பூசலைத் தொடர்ந்து இப்பிரச்சினை சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்பு நிலுவையில் உள்ளது. தொழிலாளர்கள் 14.10.82 முதல் லே-ஆப் செய்யப்பட்டுள்ளனர். இப்பிரச்சினையில் தொழிலாளர் துறை இணை ஆணையர் முன்பு 4.1.83 அன்று பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. தொழிலாளர்களுக்கு 14.10.82 முதல் 31.10 82 முடிய லே ஆப் நட்ட ஈடு கொடுக்கப்பட்டு விட்டதாகவும், 1981 மற்றும் 1982-ல் சுமார் 42 இலட்சம் ரூபாய்கள் நிறுவனத்திற்கு நட்டம் ஏற்பட்டுவிட்டதாகவும், நிர்வாக இயக்குநரின் தேர்தல் சம்பந்தமாக சென்னை உயர்நீதி மன்றத்திலிருந்து உத்தரவு எதிர் பார்க்கப்படுவதாகவும் நிர்வாகத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.



3. இந்த ஆலை, தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையே உள்ள உறவு பாதிக்கப்பட்டதினாலோ அல்லது மற்ற தொழிற்தகராறு சம்பந்தப்பட்ட பிரச்னையின் காரணத்தாலோ மூடப்படவில்லை. தொழிலாளர்களுக்கு அக்டோபர் 1 முதல் 13ந் தேதி முடிய அந்த மாதச் சம்பளமும், நவம்பர் 1982 முதல் இன்று வரை உண்டான காலத்திற்கு லே-ஆப் நட்ட ஈடும் கொடுக்கப்படவில்லை. நிறுவனத்திற்கு நிர்வாக இயக்குநர் தேர்தல் சம்பந்தமான உத்தரவு சென்னை உயர்நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப் பெற்றபின் ஆலையை மீண்டும் திறந்து நடத்துவதற்கு நிர்வாகம் தயாராக உள்ளது என அறியப்படுகிறது. இந்த நிலைமையில் முன்னேற்றம் அறியும் பொருட்டு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

4. தொழிலாளர் இணை ஆணையர் இரு தரப்பினரையும் அழைத்து மீண்டும் 29-1-83 அன்று பேச்சு வார்த்தை நடத்தினார். அதில் தொழிலாளர்களுக்கு வேலை செய்த நாட்களுக்குரிய சம்பளத்தையும் லே-அப் நட்ட ஈட்டின் ஒரு பகுதியாக 15 நாட்களுக்குரிய சம்பளத்தையும் 10-2-83க்குள் வழங்குமாறு தொழிலாளர் இணை ஆணையர் திருமகள் மில்ஸ் நிர்வாக இயக்குநருக்கும் மற்ற இயக்குநர்களுக்கும் ஆலோசனை கூறினார். நிர்வாகத்தின் பிரதிநிதிகளும் தொழிற் சங்கப் பிரதிநிதிகளும் 10.2.83க்குப் பிறகு தொழிலாளர் இணை ஆணையரை சந்திக்க ஒப்புக்கொண்டுள்ளனர்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இங்கே முன் வைத்துள்ள அறிக்கையில் பார்த்தால் 114 நாட்களுக்கு மேல் பட்டினி கிடந்து வரும் இந்தத் தொழிலாளர்கள் அவர்களாக எந்தத் தொழில் தகராறிலும் ஈடுபட்டோ அல்லது வேறு விதமான குற்றங்கள் ஏற்பட்டோ இந்த நிகழ்ச்சி ஏற்படவில்லை என்று தெளிவாகத் தெரிகிறது. ஆனால் அந்தக் கம்பெனியிலே இருக்கும்படியான மேனேஜிங் டைரக்டர்கள், டைரக்டர் போர்டு உறுப்பினர்களிடையே ஏற்பட்டுள்ள சண்டைகள், தகராறுகளின் காரணமாக அவர்கள் நீதிமன்றத்திற்குப் போனதால் அந்தக் கம்பெனியை மூடிவிட்டு அந்தத் தொழிலாளர்களுக்கு வேலையில்லாமல் செய்யும்படியான ஒரு நிலைமை அங்கே வந்துள்ளது.

அதை அரசு கவனத்தில் எடுத்திருந்தால் இந்த தொழிலாளர்கள் பட்டினி கிடக்கமாட்டார்கள். எனவே அவர்களைப் பாதுகாப்பதற்கு என்ன நடவடிக்கை அரசுப் பக்கத்தில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-30)

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பாக அவர்களுக்கு அரிய யோசனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. தொழிலாளர் இணை ஆணையர் இரு தரப்பினரையும் அழைத்து மீண்டும் 29-1-1983 அன்று பேச்சு வார்த்தை நடத்தினார். அதில் தொழிலாளர்களுக்கு வேலை செய்த நாட்களுக்குரிய சம்பளத்தையும் லே-ஆப் நட்ட ஈட்டின் ஒரு பகுதியாக 15 நாட்களுக்குரிய சம்பளத்தையும் 10-2-83 க்குள் வழங்குமாறு தொழிலாளர் இணை ஆணையர் திருமகள் மில்ஸ் நிர்வாக இயக்குநருக்கும் மற்ற இயக்குநர்களுக்கும் ஆலோசனை கூறினார். நிர்வாகத்தின் பிரதிநிதிகளும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் 10-2-83 க்குப் பிறகு தொழிலாளர் இணை ஆணையரை சந்திக்க ஒப்புக் கொண்டுள்ளனர்.

எனவே அவர்கள் சந்திக்கும்போது எப்படி நடந்து கொள்ளுகிறார்கள், பிரச்சனை எந்த திசையை நோக்கி செல்கிறது என்பதை பார்த்து அதற்கு ஏற்ப, தொழிலாளர்களுக்குச் சாதகமான நல்ல நடவடிக்கையை எடுப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, நல்ல யோசனை வழங்கப்பட்டுள்ளது என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த நல்ல யோசனை என்ன என்று கேட்டால், 114 நாட்கள் இந்தத் தொழிலாளர்கள் பட்டினி கிடந்ததுதான். அவர்களுக்கு ஒரு பைசாகூட சாப்பாட்டுக்குக் கொடுக்கப்படாமல், கொடுக்கப் படவேண்டிய சம்பளம்கூட கொடுக்கப்படாமல் உள்ளது. அந்தத் தொழிலாளர்கள் எந்தத் தவறையும் செய்யவில்லை. மேனேஜ்மென்டார் அவர்கள் தங்களுக்குள் சண்டைப் போட்டுக் கொண்டு அவர்களைப் பட்டினி போட்டிருக்கிறார்கள். இப்படிப் பட்ட நிலை பல இடங்களிலே உள்ளன. கோவையிலே கொஞ்ச நாட்களுக்கு முன் இரண்டு பஞ்சாலை முதலாளிகளுக்கும் மேனேஜ்மெண்டுக்கும் எற்பட்ட சண்டையினால் மூடப்பட்டு, கடைசியில் ஹைகோர்ட்டிலே ஒரு பஞ்சாலையை லிக்விடேஷன் கூட போடப்பட்டுள்ளது. ஆகவே இப்படிப்பட்ட சங்கடங்கள் இருப்பதால், அவர்களைப் பாதுகாப்பதற்கு, அரசு முன்வந்து, அவர்களுக்குக் கடுமையான எச்சரிக்கை செய்து, தற்போது இந்தத் தொழிலாளர்களுக்குச் சட்டப்படியாக கிடைக்கும் சம்பளத்தை அரசே கொடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிர்வாகத்தினர் அவர்களுக்குள் சண்டை போட்டுக்கொண்டு உயர்நீதி மன்றத்திற்குச் சென்றுவிட்டார்கள். அதுதான் இங்கே உள்ள சிக்கல். உயர்நீதி மன்றத்திற்குச் சென்று விட்டதால் பிரச்சினையைத் தீர்த்து



விடலாம். மேலும் 10-2-83 ஆம் நாளன்று அவர்கள் துணை ஆணையரைச் சந்திக்க ஒப்புக்கொண்டுள்ளார்கள், அவர்கள் வந்த பிறகு, what turn it takes அந்தத் திருப்பம் எப்படி ஏற்படும் என்பதைப் பார்த்து அரசு நல்ல முடிவெடுக்கும்.

திரு. என். வரதராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே. அமைச்சர் அவர்கள் உயர்நீதி மன்றத்திலே இந்த ஆலை சம்பந்தமாக வழக்கு சென்றிருக்கிறது என்று சொன்னார்கள். நான் கேட்க விரும்புவது, இன்றைக்கு 600 தொழிலாளர்கள் 110 நாட்களாக பட்டினி கிடக்கிறார்கள், ஓடக்கூடிய ஆலை மூடிக் கிடக்கிறது நீதி மன்றத்தில் பட்டினி போட அனுமதி அளிக்கிறார்களா? அதற்கு மாறாக அரசே ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து, இந்த தொழிலாளர்கள் பாதிக்கப்படாமலும், உற்பத்தி பாதிக்கப்படாமலும் தக்க நடவடிக்கையை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காகத்தான் நிலைமையைப் புரிந்துகொள்வதற்கு நல்ல ஆலோசனையைச் சொல்லியிருக்கிறோம். எடுத்த உடனேயே எதையும் செய்ய முடியாது. அந்த ஆலோசனையை எப்படிச் செயல்படுத்துகிறார்கள் என்பதைப் பார்க்கவேண்டும். 10ந்தேதி சந்திக்கிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். இன்றைக்கு தேதி 4. இன்னும் 6 நாட்களிலே தொழிலாளர்கள் வருவார்கள். அவர்கள் சொல்லுகிற நிலைமையைப் பார்த்து எந்த நடவடிக்கையை எடுத்தால் தொழிலாளர்களுக்கு நன்மை பயக்குமோ, அதை அரசு பரிசீலனை செய்து நடவடிக்கையை நிச்சயமாக எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்; தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சுமுகமான ஏற்பாடு செய்து நல்ல முடிவைக்கொண்டு வருவதற்கு முயற்சி செய்கிறோம் என்று சொன்னார்கள். ஏற்கனவே இந்தத் தகராறு ஆரம்பித்து 16-10-82 முதல் ஒரு 1½ மாதம், இப்போது 2 மாதம் ஆ 3 மாதங்கள் அந்த தொழிலாளர்கள் பட்டினி கிடக்கிறார்கள். மறுபடி பேச்சு நடக்கிற இந்த நேரத்திலே, அரசு வேறு விதத்தில் இதற்கு முயற்சி எடுத்து முதல்வர் நிதியிலேயிருந்து நிவாரணம் கொடுக்க அரசு ஏற்பாடு செய்து, அவர்களுடைய பட்டினியை போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? இப்போது பணத்தைக் கொடுத்து, பின்னர் மேனேஜ்மெண்ட் கொடுக்கும்போது அவர்களிடமிருந்து பிடித்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா?

அடுத்ததாக, சொல்லப்பட்ட ஆலோசனை 15 நாளைக்கு லே ஆப் என்று சொல்லப்படுகிறது. கொடுக்கப்பட வேண்டிய லே ஆப் அதிகம். கொடுக்கப்பட வேண்டிய லே ஆப்பிலே கூட பகுதி பகுதியாக கொடுங்கள் என்று சொல்வது சரியானதுதானா என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

[திரு. ரா. உமாநாத்] [1983 பிப்ரவரி 4

அதைப்போலவே, அரசியல் சட்டம் என்ன கூறுகிறது என்று சொன்னால். ஒரே குற்றத்திற்காக இரண்டு தண்டனை கூடாது. இந்தச் சட்டத்தின் அடிப்படையில் என்ன ஆகிறது என்றால் கஸ்டம்ஸ் ஆக்டின்படி ஒருவர் தண்டிக்கப்பட்டால் அவர் அதே குற்றத்தை மீண்டும் செய்யலாமென கமிஷனர் நம்பக் காரணமாயிருந்தால் கமிஷனர் ஆணை ஒன்றைப் பிறப்பித்து, அந்த நபரை மாநகரத்திலிருந்து வெளியேறுமாறு கட்டளையிடலாம். இது ஒரே குற்றத்திற்கு இரண்டு தண்டனை என்று ஆகிறது. அதாவது ஒன்று நீதிமன்றம் தரும் ஆணை, மற்றொன்று கமிஷனர் தரும் ஆணை. தண்டனை பெற்றவர் விடுதலையாகி வெளியே வந்த பின்னர் போலீஸ் கமிஷனர் மீண்டும் அந்தக் குற்றத்தை அந்த நபர் செய்வார் என்று கருதி சென்னை நகரை விட்டு வெளியே அனுப்பலாம். ஆகவே, ஒரே குற்றத்திற்கு இரண்டு தண்டனை என்று வரும்.

இப்படிப்பட்ட ஒரு அதிகாரத்தை நாம் போலீசிடத்தில் கொடுக்கிறோம். இதனால் மேலும் ஊழல் ஏற்பட இடம் கொடுக்கும். ஒரு ஆபீசருக்கு இந்த மாதிரி அதிகாரம் கொடுக்கப்பட்டால் அந்த ஆபீசர் வேண்டுமென்றே ஒருவர்மீது வீண்பழி சுமத்தி, அவரை பிளாக்மெயில் செய்து பல்வேறு ஊழல்கள் நடைபெற வழி வகுத்துவிடும்.

ஏற்கெனவே மத்திய சர்க்கார் தடுப்புக்காவல் சட்டத்தைப் போட்டார்கள். அதனால் என்னென்ன நிலைமைகள் என்பதை பார்த்தோம். தடைச்சட்டம் என்றாலே அது ஒரு அட்டாக். பத்திரிகை தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டு ஜனநாயகத்தை நசுக்கினீர்கள். இப்போது இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருப்பது, இது ஒரு லேட்டஸ்ட் அட்டாக். அது மட்டுமல்ல. இது அரசியல் சட்டத்திற்கு விரோதமான ஒரு சட்டம். ஜனநாயக உரிமையை நசுக்குவதற்காக கொண்டுவரப்பட்டிருக்கிற ஒரு சட்டம் இது. எனவே இதை நீங்கள் இன்ட்ரொடியூஸ் செய்யக்கூடாது.

பிரஸ் பில்லை கொண்டு வந்து நிறைவேற்றினீர்கள் அதன் மூலம் மற்ற மாநிலங்களுக்கு நீங்கள் ஒரு வழிகாட்டியாக இருந்தீர்கள்: நீங்கள் பிரஸ் பில்லை பாஸ் பண்ணிய பின்னால் ஏற்பட்ட விளைவுகள் என்ன என்பதைப் பார்த்தோம். பீகாரிலே கடுமையான எதிர்ப்புகள் எல்லாம் வந்தது நமக்குத் தெரியும்; அதன்பிறகு தமிழ்நாட்டிலும் எதிர்ப்பு கிளம்பியிருக்கிறது. அதைப்போல இந்தச்சட்டத்தையும் கொண்டு வந்து மற்ற மாநிலங்களுக்கு ஒரு வழிகாட்டியாக இருக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கெனவே இருக்கிற சட்டை ரிமூவ் செய்வதற்குப் பதிலாக, அதை ஸ்ட்ரெங்கத் பண்ணுவது போல் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறீர்கள். இது ஜனநாயகத்திற்கு விரோதமானது அரசியல் சட்டத்திற்கு விரோதமானது ஜனநாயக உரிமையை



1983 பிப்ரவரி 4] [திரு. ரா. உமாநாத்]

நசுக்குவது இது ஒரு கறுப்புச் சட்டம் ஆகவே, இந்தச் சட்டத்தை இன்ட்ரொடியூஸ் செய்ய இடமில்லை; அனுமதிக்கக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு.சோ. அழகர்சாமி. தலைவரவர்களே, இந்தச் சட்டத்தை அறிமுகம் செய்வதை கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் கடுமையாக எதிர்க்கிறேன். இந்தச் சட்டத்தை அறிமுகப் படுத்தக்கூடிய காரணம என்ன என்று சொல்லும்போது, ஏற்கெனவே தோழர் உமாநாத் அவர்கள் பல விவரங்களைச் சொன்னார்கள்.

ஏற்கெனவே 1888-ம் ஆண்டு வெள்ளைக்காரன் போட்ட சட்டத்தின் அடிப்படையில் இந்தச் சட்டம் வருகிறது. கடந்த காலத்தில் இந்தச் சட்டத்தின் அடிப்படையில் தோழர் ஜீவா அவர்கள் திருவாங்கூர் பகுதிக்கு போகக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது என்பது என்னுடைய ஞாபகம். இந்தச் சட்டத் திருத்தம் நிறைவேற்றப்படுவதின் மூலம் சென்னை மாநகரில், மட்டுமல்ல, வேறு பல மாவட்டங்களுக்குக் கூட இந்தச் சட்டத்தை விரிவுபடுத்தி அந்த மாவட்டங்களிலிருந்தும் வெளியேற்றும் அதிகாரம் போலிஸ் அதிகாரிகளுக்கு கிடைக்கும், ஆகவே, இது தேவையில்லை.

ஏற்கனவே கஸ்டம்ஸ் ஆக்ட் அடிப்படையில் தண்டனை பெற்றவர்களையும வெளியேற்றும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பழையச் சட்டத்தையே ரத்து செய்யக்கூடிய ஒரு நடவடிக்கையை எடுத்திருக்க வேண்டும். அதைவிட்டு விட்டு, ஜனநாயகத்திற்கு விரோதமாக இந்தச் சட்டத்தின் மூலம் போலீஸ் கமிஷனர், மற்றும் அதிகாரிகளுக்கு வெளியேற்றும் அதிகாரத்தை கொடுத்து மாவட்டத்தை விட்டு மாவட்டத்திற்கு மாற்ற வேண்டும் என்பது நியாயமற்ற செயல். ஆகவே இந்தச் சட்டத்தை அறிமுகம் செய்வதை எதிர்க்கிறோம். அமைச்சர் அவர்கள் இதை வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த சட்ட முன்வடிவை எங்கள் கட்சியின் சார்பில் எதிர்க்கிறேன்.

எனக்கு முன்னாலே மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய கருத்தையொட்டி நானும் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நாடு விடுதலை பெறுவதற்கு பல்லாண்டுகளுக்கு முன்னால் கொண்டு வரப்பட்ட ஒரு சட்டத்தின் அடிப்படையிலே, அரசியல் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னால் அந்தச் சட்டத்தின் அடிப்படையில் மக்களுக்கு அக்கிரமங்கள் அநீதிகள் இழைக்கப்பட்டன; அந்த அநீதிகளை மீண்டும் இழைக்க இந்த சட்டமுன்வடிவு வழிவகை செய்கிறது.

(முற்பகல் 10 40)

திரு ரா உமாநாத் மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை அறிமுகம் செய்வதை அனுமதி அளிக்கக்கூடாது என்பதை முதலில் நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இதை நான் வன்மையாக எதிர்க்கிறேன். இந்தச் சட்டமுன்வடிவின் நோக்கம் தேச விரோதமானது ஜனநாயக உரிமைக்கு விரோதமானது. அன் கான்ஸ்டிடியுஷனல் ஆக இருக்கிறது. இந்த அவையின் லீகல்—காம்பிடென்சுக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது. இந்த அவையின் சட்டம் இயற்றும் அதிகாரத்திற்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது. ஏற்கனவே இருக்கிற 1888 ஆம் ஆண்டு போலீஸ் சட்டம் வெள்ளைக்காரன் காலத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டம்.

மாண்புமிகு பேரவைத்தலைவர்: அறிமுகம் செய்கின்ற நேரத்தில் தெரிவிக்கப்பட வேண்டிய கருத்துக்களை நான்கைந்து பாயின்ட்டுகளை தெரிவித்துவிட்டதால் , இந்தச் சட்டமுன்வடிவின்மீது ஆய்வு நடக்கின்றபோது விரிவாகப் பேசிக் கொள்ளலாம்.

Thiru R. UMANATH There are legal points against the introduction of this Bill. must convince you first.

மாண்புமிகு பேரவை தலைவர்: சட்டமுன்வடிவின் மீதான ஆய்வு நடக்கின்றபோது இது குறித்து thread bare ஆகப்பேசலாம்

திரு. ரா உமாநாத்: இந்த சட்டமுன்வடிவை அறிமுகம் செய்வதற்கு சட்டப்படி இந்த அவைக்கு அதிகாரம் இல்லை என்பதால், அது குறித்து நான் விரிவாகப் பேச விரும்புகிறேன்

ஏற்கனவே இருக்கின்ற 1888 ஆம் ஆண்டுச் சட்டம் வெள்ளைக்காரன் காலத்தில் கொண்டு வரப்பட்ட சட்டமாகும். அந்தச் சட்டத்தின்படி ஒரு போலிஸ் அதிகாரி அதாவது போலிஸ் கமிஷனர் சென்னை நகரத்தில் ஒருவர் வன்முறையில் ஈடுபடுகிறார் என்று நினைத்தால், உடனடியாக அவர் ஒரு உத்தரவு போட்டு குறிப்பிட்ட அந்த பிரஜையை நாடு கடத்தலாம் என்று இருக்கிறது. சென்னைக்கு வெளியே அனுப்பலாம் என்று ஏற்கனவே இருக்கின்ற சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்திற்குத்தான் தற்போது திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதாவது அந்தச் சட்டத்தை ரீடெயின் செய்து அதற்கு பல் வைத்துக்கொடுக்கின்ற வகையில் இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.



அன்றைக்குக் கொண்டு வரப்பட்ட சட்டம் தேசிய விடுதலைப் போராட்ட வீரர்களை அவர்களுடைய உணர்வுகளை நசுக்குவதற்காக, அவர்களுடைய உறுதியை குலைப்பதற்காக, எந்தவித ஒரு லீகல் பிராசசுக்கும் அவர்களை உள்ளாக்காமல், போலீஸ் அதிகாரத்தை வைத்துக்கொண்டு அவர்களை நசுக்குவதற்கு வழிவகுத்துக் கொடுத்த சட்டமாகும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தமிழகத்தில் இயற்றியசட்டமாகும் அதற்குத் திருத்தம் கொண்டுவந்து அந்தச் சட்டத்தை நாங்கள் பயன்படுத்த மாட்டோம் என்று சொல்லி அதை ரிமூவ் செய்வதற்கு பதிலாக, அதற்கு இன்னொரு பல் வைத்து போலிஸ் கமிஷனருக்கு அதிகாரம் கொடுக்கின்ற திருத்தச் சட்டமாக இது இன்றைக்கு வந்திருக்கிறது. அந்தச் சட்டத்தை நீங்கள் ரீடெயின் செய்து, அதைப் பயன்படுத்துவதற்கு உறுதி கொடுப்பது போல், அதற்கு இன்னொரு எக்ஸ்ட்ரா செக்ஷன் கொண்டு வருவதற்கான ஏற்பாடே இந்தத் திருத்தச் சட்டமாகும்.

இந்தச் சட்டம் ஒரு அன். கான்ஸ்டிடியுஷனல் சட்டம் என்று நான் தெரிவித்தேன். ஏற்கனவே இருக்கின்ற சட்டத்தில் உள்ள செக்ஷன் 51 (ஏ) வுக்கு நீங்கள் திருத்தம் கொண்டு வருகிறீர்கள். இந்தச் சட்டம் அதாவது 1888 ஆம் ஆண்டுச் சட்டம் அரசியல் சட்டம் வருவதற்கு முன்னால் கொண்டு வரப்பட்டதாகும். அரசியல் சட்டத்தில் உள்ள பன்டமென்டல் ரைட்ஸ் என்ன சொல்கிறது என்று சொன்னால்

A citizen is free to move from any part of the country to any part and free to reside in any part of the country.

இந்த நாட்டின் எந்தப் பகுதியிலும் குடியிருக்கலாம், ஒரு பகுதியில் இருந்து இன்னொரு பகுதிக்குப் போவதற்கும், வருவதற்கும் ஒருவனுக்கு உரிமை உண்டு. நம்முடைய அரசியல் சட்டம் ஒவ்வொரு பிரஜைக்கும் இந்த உரிமையை வழங்கியிருக்கிறது இதற்கு ரீசனபிள் ரெஸ்டிரிக்ஷன் வேண்டுமானால் கொண்டு வரலாம். அதாவது நியாயமான அடிப்படையில் கட்டுப்பாடுகள் கொண்டு வரலாம். ஆனால் தற்போது கொண்டு வரப்பட்டுள்ள சட்ட திருத்தம் நியாயத்திற்கு உட்பட்டதல்ல. ஒரு ஊரில் குடியிருப்பவனை அந்த ஊரை விட்டு கிளப்புவதற்கு போலிஸ் கமிஷனருக்கு அதிகாரம் கொடுப்பது என்று சொன்னால், அந்த ஊரில் அவர் வசிப்பதற்கு, குடியிருப்பதற்கு, அவருக்கு அரசியல் சட்டத்தால் அளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை பறிமுதல் செயவது மாதிரி இந்தத் திருத்தம் இருக்கிறது. அரசியல் சட்டத்தின் ஷரத்துக்களுக்கு உட்பட்டுத்தான் ஒரு மாநில அரசு சட்டம் இயற்ற முடியும். அரசியல் சட்டத்தின் நோக்கங்களுக்கு அப்பாற்பட்டதாக இந்தத் திருத்தம் இருப்பதால், இந்தச் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்யக்கூடாது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ் இராகவானந்தம்: மாண்புமிகுபேரவைத் தலைவர் அவர்களே, நான் விளக்க உரையிலே சொல்லியிருக்கிறேன். லே ஆஃப் நஷ்ட ஈட்டின் ஒரு பகுதியாக 15 நாளைக்கு உரிய சம்பளத்தை, இதையாவது இப்போது கொடுங்கள், சமரச பேச்சு வார்த்தை என்று சொல்லும்போது இதையாவது இப்போது கொடுங்கள் பார்த்தக்கொள்ளலாம் என்று பரிந்துரை வழங்குவார்கள் என உணருகிறோம். முதலாளிகள் சண்டை போட்டுக் கொண்டு, அதனால் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இது மிக வேதனைக்குரிய விஷயம். இதற்காக ஒரு இன்டரிம் அரேன்ஜ்மென்ட் என்ற முறையில் சொல்லியிருக்கிறோம். இந்த எ படி அவர்கள் களைகிறார்கள் என்று பார்ப்போம். 10.2.83க்கு பின்னர் தொழிலாளர்கள் வந்து என்ன சொல்கிறார்கள் என்பதைப் பார்த்து அவர்களுக்கு நன்மை செய்யக்கூடிய அளவில் எந்தெந்த வகையிலே அரசு நடவடிக்கை எடுக்கலாம் என்பதை நிச்சயமாக இந்த அரசு பரிசீலனை செய்யும். இடைக்கால நிவாரணத்தை பற்றி அந்தத் தொழிலாளர்களிடம் இருந்து மனு வரும் முதல்வர் அவர்கள் நிவாரண நிதியிலிருந்து பணம் கொடுக்க வேண்டுமென்று மனுப் போடுவார்கள். அப்படி ஒரு மனு வருமானால் அதைப் பற்றியும் இந்த அரசு பரிசீலனை செய்யும்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, நிர்வாக உறுப்பினர்களிடையே இருக்கின்ற தகராறின் காரணமாக அந்தத் தொழிலாளர்கள் பட்டினி கிடக்க வேண்டிய அவல நிலை ஏற்படுகிறது. அரசினுடைய நல்ல யோசனைகள் ஏற்கப்படாமல் இருக்கலாம். இதுதான் இங்கிருக்கிற நிலைமை. சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை சிம்சோ மீட்டர்ஸ் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதுதான் நாடறிந்த உண்மை. எனவே அந்தச் சூழ்நிலையைப் போக்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சருடைய நிவாரண நிதியிலிருந்து உடனடியாக கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: அதைத்தான் நான் மீண்டும் மீண்டும் சொன்னேன். முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து கொடுப்பதற்கு தயங்கக்கூடிய அரசு இது அல்ல. பி.அண்ட்.சி. மில்லிலே 26 லட்சத்தை வாரி வழங்கிய அரசு புரட்சி தலைவர் அரசு. நான் சொல்வதெல்லாம் 10-ந்தேதி அன்று தொழிலாளர்கள் மீண்டும் வருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். வரட்டும் பார்ப்போம். அங்கிருந்து என்ன முறையீடு வருகிறது என்பதை எல்லாம் பார்த்து இந்த அரசு தொழிலாளர்கள் பாதிக்காமல் இருப்பதற்கு என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யும்.



## 5. அறிக்கை அளித்தல்

### (அ. பொது நிறுவனங்கள் குழு)

திரு. கே. குப்புசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றத்தின் பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கிறேன்.

(1) இந்தியத் தணிக்கைத் துறைத்தலைவரின் 1976-77 மற்றும் 1977-78 ஆம் ஆண்டுக்கான (வணிகத்துறைகள் பற்றிய) மேற்படி குழுவின் இருபதாவது அறிக்கை.

(2) 1976–77 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கையில் சதர்ன் பிரிக் ஒர்க்ஸ் லிமிடெட் குறித்த 3.01 முதல் 3.05 ஆம் பத்திகள் மீதான இருபத்தி ஒன்றாம் அறிக்கை.

(3) 1972-73 ஆம்ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (வணிகம்) அறிக்கையில் கண்ட தமிழ்நாடு மின்சார வாரியம் தொடர்பான குறிப்புரைகளின் மீது பொது நிறுவனங்கள் குழு 1977–79) அளித்த ஒன்பதாவது அறிக்கையில் அடங்கியுள்ள(பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் இருபத்தி இரண்டாம் அறிக்கை.

### (ஆ.) பொதுக் கணக்குக் குழு

திரு. வி கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1973–74 ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப்பெற்ற மானியங்களுக்கும், சாட்டப்பெற்ற நிதி ஒதுக்கீடுகளுக்கும் மிகையாகச் செலவழித்த தொகைகள் பற்றி (1977-79) ஆறாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றியபொதுக் கணக்குக் குழுவின் பதினேழாவது அறிக்கையை (ஏழாவது சட்டமன்றப் பேரவை) பேரவைக்கு அளிக்கிறேன்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவு

சென்னை மாநகர் காவல் தமிழ்நாடு மாவட்டக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1983

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே. நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் 1983 ஆம் ஆண்டு சென்னை மாநகர் காவல் தமிழ்நாடு மாவட்டக் காவல் (திருத்த) சட்டமுன்வடிவு பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

ஏற்கெனவே இருக்கிற சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க கூடிய அதிகாரம் இருக்கும் போது, ஒருவரை குற்றம் செய்யாமலே, குற்றம் செய்வதற்கு காரணமாயிருந்தார் என்று தனிப்பட்ட ஒரு அதிகாரி அவர்மீது குற்றஞ்சாட்டி நடவடிக்கை எடுக்க அதிகாரம் கொடுப்பது பல்வேறு முறைகேடு களுக்கு வழிவகுக்கும் என்பதால் இந்தச் சட்டத்தை நான் எதிர்க்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவரவர்களே, சென்னையிலே இருக்கக்கூடிய போலீஸ் கமிஷனர் ஒருவர் வன்முறையில் ஈடுபட்டார் அல்லது உயிருக்கும் உடைமைக்கும் ஆபத்தாக இருந்தார் என்று கருதி, அவரே திருப்தியடைந்தால் போதும். அந்த நபரை சென்னையை விட்டு வெளியேற்றிவிடலாம்; அதற்கு இந்தச் சட்டத்தில் அதிகாரம் இருக்கிறது.

மேலும் இந்தச் சட்டம் சென்னைக்கு மட்டும் இருந்தால் போதாது. தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பல இடங்களிலும் இருக்க வேண்டுமென்று சொலலக்கூடிய அதிகாரத்தை போலீஸ் அதிகாரிகளின் கையில் கொடுப்பதன் மூலம் பல்வேறு முறைகேடு களை உருவாக்குகின்ற வாய்ப்பை ஏற்படுத்தும், ஜனநாயகத் திற்கு விரோதமாக, சட்டத்திற்கு விரோதமாக அதிகாரத் தைப் பயன்படுத்தி ஒருவரை தண்டிக்க வழி ஏற்படும். வேண்டுமென்றே வீண் பழி சுமத்தி, அல்லது அரசியல் பழி சுமத்தி ஒருவருக்கு தண்டனை அளிக்கும் கடுமையான ஒரு சட்டம்இது என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10-50)

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே உள்ள சட்டத்திலே இதற்கு வழி முறைகள் இல்லையா? ஏற்கெனவே உள்ள சட்டத்திலே வழி முறைகள் இருக்கின்றன. ஒருவர் தவறு செய்தால்' ஒரு குற்றம் செய்கிறார் அல்லது பலாத்காரம் செய்யப்போகிறார் likely to commit offence என்ற சூழ்நிலை இருக்குமேயானால். அவரைத் தடுப்பதற்கு பிரிவென்டிவ் மெஷர்ஸ் என்ற முறையில் ஏற்கெனவே உள்ள சட்டத்திலேயே இடம் இருக்கிறது. இந்தியன் பீனல் கோடு 151வது செக்ஷன் தடுப்புக் காவல் சட்டம் இருக்கிறது. அதன் அடிப்படையிலே ஒருவரை கைது செய்து, குற்றம் நிகழாமல் பாதுகாக்கலாம். ஆனால் இங்கே அப்படி இல்லாமல், ஏற்கெனவே இருக்கக்கூடிய சட்டத்தை விஸ்தரிக்கின்ற விதத்திலே கொண்டு வருகிறோம் என்று சொல்வது சரியல்ல. தேசிய பாதுகாப்புச் சட்டம் கூட இருக்கிறது. ஒரு நல்ல குடும்பப் பெண்ணை கூட விபச்சாரி என்று சொல்லி, ஒரு குற்றத்தை சுமத்தி, ஒரு போலீஸ் அதிகாரி தவறாக அந்தப் பெண்ணை காவலில் வைத்துவிடலாம். அரசியல்வாதிகளைக்கூட கள்ளச்சாராயம் காய்ச்சுகிறார்கள் என்று சொல்லி ....





மாண்புமிகு பேரவைத்தலைவர் சட்டத்தின் டெக்னிகல் டீடெய்ல்ஸுக்குள் போக வேண்டாம். சுருக்கமாகச் சொல்லுங் கள்.

திரு அ. ரகுமான்கான்: சுருக்கமாகத்தான் சொல்ல வருகிறேன். தலைவர் அவர்களே நாட்டிலே தற்போது லா அண்டு ஆர்டரே கெட்டுப் போய்க்கொண்டிருக்கிறது. ஏற்கெனவே போலீஸ் லாக்கப்பிலே 50க்கும் மேற்பட்டவர்கள் செத்துப்போயிருக்கிறார்கள். நக்ஸலைட்டுகள் என்று சொல்லி பலபேரை கொன்றிருக்கிறார்கள்......

மாண்புமிகு பேரவைத்தலைவர் கான்ஸ்டிடியூஷன் அடிப்படை யிலே திரு. உமாநாத் அவர்கள் பேசியிருக்கிறார்கள் நக்ஸலைட்டுகள் என்றெல்லாம் குறிப்பிட்டு அதிகமாக இதிலே பேசி கொண்டிருக்க வேண்டாம். சுருக்கமாகப் பேசுங்கள். திரு. என். எஸ். வி சித்தன் அவர்கள் சொன்னது போல் எதிர்ப்பைத் தெரிவித்து முடித்துவிடப்பாருங்கள்.

திரு. அ. ரகுமான்கான். மாண்புமிகு பேரவையின் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் கொண்டு வருவதற்கான அவசியம் இல்லை. அடிப்படை பண்டமெண்டல் உரிமைகளுக்கு எதிராக, ஒரு இடத்திலிருந்து ஒரு இடத்திற்கு போவதற்கு, அல்லது ஒரு இடத்திலே வியாபாரம் நடத்துவதற்கு வேண்டிய சகல உரிமைகளும் ஒரு குடிமகனுக்கு பண்டமெண்ட்டல் ரைட்ஸ்—ன் படி உரிமையிருக்கிறது. அதை இந்தச் சட்டம் கர்டைல் செய்கிறது என்று திரு உமாநாத் அவர்கள் எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள். ஆகவே அது அரசியல் சட்டத்திற்கு விரோதமானது என்பது இதனுடைய ஒரு பகுதி.

அதனுடைய இன்னொரு பகுதி என்னவென்று கேட்டால், இந்தச் சட்டம் கொண்டு வருவதற்கே அரசியல் இல்லை. ஏற்கெனவே இருக்கிற சட்டம் தேசிய பாதுகாப்புச் சட்டம். அதன்கீழ் யாரை வேண்டுமானாலும் கைது செய்யலாம் பத்திரிகை சுதந்திரம் என்று இருந்தாலும் ஆபாசமாக எழுதி னார்கள் என்று சொல்லி அதன்கீழ் 5 வருஷம் உள்ளே போடலாம். இன்னும் சொல்லப்போனால் ஏற்கெனவே போலீஸ் அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கிற அதிகாரங்கள் அதிகமாக இருக்கிற காரணத்தினால்தான், இன்றைக்கு பல கொடுமைகள் நடந்து கொண்டிருக்கின்றன. போலீஸ் லாக்கப்பிலே கொலை நக்ஸலைட்டுகளை கொடுமைப்படுத்துவது இன்னும் பல இப்படி இருக்கையில் இன்னும் போய் அவர்களுக்கு அதிகாரம் கொடுப்பது என்பது, அரசியலிலே, பழி வாங்குவதற்கும், வேண்டாதவர்களை துன்புறுத்துவதற்கும் லஞ்ச லாவண்யத்திற்கும், போலீஸ் சாம்ராஜ்யத்தை உருவாக்கு வதற்கும்தான் பயன்படும் என்ற காரணத்தால், இந்த ஜனநாயக விரோதச்சட்டத்தை வேறு வார்த்தை இல்லாத காரணத்தால் நான் சொல்வதைஅன்-பார்லியமெண்டரி என்றுகருத

வேண்டாம் என்று கேட்டு இந்தக் காட்டுமிராண்டித்தனமான சட்டத்தை திரும்ப பெற வேண்டுமென்று எங்கள் கழகத்தின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. முகமது இஸ்மாயில்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இந்தச் சட்டத்திற்கு எதிராக குறிப்பிட்ட அத்தனைக் கருத்துக்களையும் என்னுடைய கட்சியின் சார்பிலே நான் ஏற்றுக்கொண்டு, இதை செயல்படுத்துவதற்கு வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கெனவே இருக்கிற சட்டத்தின் அடிப்படையில் தண்டனை வழங்குவதற்கான எல்லா ஷரத்துக்களும் இருக்கின்றன. இந்த தண்டனை வழங்கப்பட்டால் நாட்டை விட்டே சென்றுவிட வேண்டும் என்ற அளவுக்கு போலீஸ் அதிகாரிகளுக்கு அதிகாரத்தை வழங்குவது, தோழர்கள் சுட்டிக்காட்டியதைப் போல முன்னாலேயிருந்த பிரிட்டிஷ் அரசாரங்கத்தைச் சேர்ந்தவர்கள் போலீஸ் நிர்வாகத்தின் கையில் கொடுத்த அதிகாரங்களைப் போலத்தான் இருக்கிறது. ஜனநாயகம் வேண்டும் என்று எண்ணுகின்ற இந்த நாட்டில் நாட்டின் குடிமகனாக பிறந்து வளர்ந்த இடத்தில் குடியிருக்க முடியாமல் துரத்தி அடிப்பது, ஜனநாயகத்திற்கு சேவை செய்கிற ஒழுங்கு முறையில் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டி, ஒருவேளை இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டாலும்கூட, சிட்டியிலே இருப்பவர்களை வேண்டுமானால் இந்தச் சட்டத்தின்படி கைது செய்யப்பட்டால், வேறு மாவட்டங்களுக்கு அனுப்ப முடியுமே தவிர, நிச்சயமாக இந்த நாட்டைவிட்டு நீங்கள் துரத்தமுடியாது என்பதை கருத்திற் கொண்டு. தேவையில்லாத இந்தச் சட்டத்தை அவையிலே அறிமுகப்படுத்துவதை தவிர்க்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஏ. சாகுல் ஹமீது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த சட்டமுன்வடிவின் அறிமுகத்தை என்னுடைய இந்திய முஸ்லீம் லீக் கட்சியின் சார்பில் எதிர்க்கிறேன், தேவையற்ற இந்தச் சட்டம் அரசியல் கட்சிகளை பழி வாங்கும் ஒரு சட்டம். ஜனநாயக விரோதமான சட்டம், யாரையும் பழி வாங்க அரசுக்கு வழி வகுக்கும் இந்தச் சட்டத்தை இந்திய முஸ்லீம் லீக் கட்சியின் சார்பாக எதிர்க்கிறேன், இதை அமுல்படுத்த வேண்டாம் என்றும் இந்தச் சட்டத்தை நிறைவேற்ற முயற்சிக்க வேண்டாம் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தின்படி சென்னை நகரத்திலே மட்டும் அல்லாமல் இதை ஒட்டியிருக்கிற மாவட்டங்களிலும்—அதாவது எல்லா மாவட்டங்களிலிருந்தும்—இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பெற்றால் வெளியேற்றப்படுகிறார்கள் என்று சொல்கிற போது, அது தேசப்பிரஷ்டம் என்று கூறுவார்களே—தேசத்திலிருந்து வெளியேற்றப்படும் தண்டனை—அந்த அளவுக்கு போய் விடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது.



குறிப்பாக அப்படி தண்டிக்கப்படுகிற ஒரு நபரை கண்காணிக்கிற சகல வழிகளும், வசதிகளும் இந்த அரசுக்கு இருக்கிறது. அதிகாரமும் இருக்கிறது என்ற வகையிலும், அப்படி தண்டிக்கப்படுபவர்கள் தவறான வழிகளில் இறங்காமல் அவர்களின் நடமாட்டத்தை கண்காணிப்பது இந்த அரசாங்கத்தினுடைய பொறுப்பு என்கிற வகையிலும், அடிப்படை உரிமைகளை பாதிக்கின்ற இந்தச் சட்டத்தை, அச்சத்தைக் கொடுக்கின்ற இந்தச் சட்டத்தை கொண்டு வரவேண்டாம் என்று வற்புறுத்தி எங்கள் கட்சியின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. இ. முத்துராமலிங்கம்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட அறிமுகமானது ஜனநாயகத்தை இந்த நாட்டிலேயிருந்து விரட்டிவிட்டு சர்வாதிகாரத்தை நிலை நிறுத்துவதாக இருக்கின்றது, எனவே இப்படிப்பட்ட சட்டத்தை அறிமுகம் செய்வதை காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக எதிர்க்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன்: தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்கின்ற நிலைமையிலேயே நான் எதிர்க்கிறேன். காரணம் இந்திய அரசியல் சட்டத்தின்படி இந்த நாட்டிலே உள்ள குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் கொடுக்கக்கூடிய ஜீவாதார அடிப்படை உரிமைகளைத் தடுக்கின்றது. இந்த நாட்டிலே உள்ள குடிமகன் இந்த நாட்டின் எந்தப் பகுதிக்கும் சென்று தொழில் செய்து சொத்துக்கள் வாங்கலாம்' என்பது அடிப்படை ஜீவாதார உரிமை. அந்த அடிப்படை உரிமையையே பறிக்கக்கூடியதாக இந்தச் சட்டமுன்வடிவு இருக்கின்றது. இந்தச் சட்டமுன்வடிவினைப் படித்துப் பார்க்கின்றபோது Whether I am in the medieval time or in democracy? நாங்கள் ஒரு ஜனநாயகத்திலே இருக்கிறோமா அல்லது மன்னர் காலத்திலே இருக்கிறோமா என்ற ஒரு சந்தேகமான நிலைமை ஏற்பட்டது.

அடுத்தபடியாக இந்தச் சட்டம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் விரிவு படுத்தப்படும் என்றும். அந்தந்த மாவட்டத்தினுடைய போலீஸ் அதிகாரிகளின் கையிலே அதற்கான அதிகாரங்கள் கொடுக்கப்படுகின்றது என்று சொல்கிறபோது தமிழ்நாட்டிலே உள்ள எல்லோருமாகச் சேர்ந்து ஒருவரை வேண்டாமென்றால் தமிழ்நாட்டைவிட்டே அவர் செல்லக்கூடிய அளவில் போய்விடக் கூடும். மேலும் தேர்தல் நேரத்திலே குறிப்பாக ஆளும் கட்சியிலே உள்ள உறுப்பினர்கள் இந்தச் சட்டத்தினை அவர்களுக்குச் சாதகமாக பயன்படுத்திக்கொண்டு வேண்டாதவர்களை, எதிர்க் கட்சிகளைச் சார்ந்தவர்களை எல்லாம் அந்த மாவட்டத்திலிருந்து வெளியேற்றிவிடுகின்ற ஒரு நிலைமைக்குக் கொண்டுபோகும். எனவே குடிமக்களின் அடிப்படை ஜீவாதார உரிமைகளைப் பறிப்பதாக இந்தச் சட்டமுன்வடிவு இருப்பதால் தயவுசெய்து இதை வாபஸ் பெறவேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, இந்தச் சட்டமுன் வடிவினை........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே திரு உமாநாத் அவர்கள் பேசிவிட்டார்கள். எனவே தாங்களும் எவ்வாறு பேசுவது? ஒரு கட்சிக்கு இரண்டுபேர் என்ற வகையிலே எப்படி முடியும்?

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, இந்த சட்டமுன் வடிவினை அனைவரும் எதிர்க்கின்ற நிலைமையிலே அரசாங்கம் இதை பின்வாங்கவேண்டும் என்று வற்புறுத்துகிறேன்.......... (குறுக்கீடு)......அனைவரும் கேட்டுக்கொண்டும் அரசாங்கம் அதை ஏற்றுக்கொள்ளாத காரணத்தால் அதைக் கண்டிக்கக்கூடிய வகையிலே நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியினர் அத்தனைபேரும் சொன்னதற்குப் பிறகும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் வற்புறுத்தி அதைக் கொண்டுவர வேண்டும் என்று விரும்புவதால் அதை எதிர்த்து நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

(கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்)

டாக்டர் கே. சௌரிராஜன் : தலைவரவர்களே, நானும் இந்தச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்வதை எதிர்த்து வெளிநடப்பு செய்கிறேன்.

(டாக்டர் கே சௌரிராஜன் வெளிநடப்பு செய்தார்)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தச் சட்ட முன்வடிவினுடைய நோக்கத்தை வேறுவிதமாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். எனவே இதனை விளக்குவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன், 1888-ம் ஆண்டு மெட்ராஸ் சிட்டி போலீஸ் ஆக்ட் என்று சொல்லப்படுகின்ற ஒருசட்டத்தில் இருக்கின்ற ஷரத்து தேசத்தைவிட்டு கடத்துகின்ற பிரிவோ அல்லது நாட்டைவிட்டு கடத்துகின்ற பிரிவோ இல்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மிகத் தெளிவாக இருக்கின்றது.

The movement or acts of any person in the city of Madras who has not been born in the city of Madras or in the districts of Chingleput and North Arcot, as existed immediately before 1st April 1960, are causing or calculated to cause alarm danger or harm to person or



property or that there are reasonable grounds for believing that such person is engaged or about to be engaged in the commission of an offence involving force or violence are punishable under Chapter 12, 16 and 17 என்று தெளிவாக இருக்கின்றது......(குறுக்கீடு).... இதில் வந்து அஃபென்சஸ் அகெய்ன்ஸ்ட் ப்ராப்பர்ட்டி அதாவது சேப்டர் 17-ஐப் பொறுத்தவரைக்கும் சொத்து சம்பந்தமாக ஏதேனும் வன்முறைகளில் ஈடுபடுகின்ற அஃபென்ஸஸ் ஆக இருக்க வேண்டும். சேதம் விளைவித்து, பெரும் சேதம் விளைவித்திருக்கக் கூடிய ஒரு கிரிமினல் ஆக்டாக அது இருக்கின்ற நேரத்தில் அத்தகைய நிலை ஏற்படுகின்றபோது அல்லது offences affecting human body, 16-வது சேப்டரில் உயிருக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய அளவுக்கு செயல்களில் ஈடுபடுகின்றபோது. அதைவிட மிக முக்கியமாக 12-வது சேப்டரில் Offences relating to coins and Government stamps கள்ள நோட்டு ஒருவர் அடிக்கிறார் என்றால் அதுகூட இதிலேதான் வருகின்றது. Offence relating to coins and Government stamps, என்ற முறையில்தான் இந்தப் பிரிவு இருக்கின்றது. சென்னைநகரைப் பொறுத்தவரையில் மெட்ராஸ் சிட்டி போலீஸ் ஆக்ட் 1888-ம் தமிழகத்தில் உள்ள மற்றைய மாவட்டங்களைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு டிஸ்ட்ரிக்ட் போலீஸ் ஆக்ட் 1859-ம் பன்னெடும் ஆண்டு காலமாக நடைமுறையில் இருந்து வருகிறது.

(முற்பகல் 11.00)

Tamil Nadu District Police Act, 1859:

"....Though they were post constitutional enactments, they are constitutionally valid. They have been held valid on several occasions. The validity of these enactments have been already held and approved by the Concerned Courts on a several occasions. என்ற முறையில் நடைமுறையில் இருந்துவருகிற நல்ல சட்டமாக இருந்து வருகிறது. தற்போது கொண்டுவரப்படுகின்ற திருத்தத்தைப் பொறுத்தவரைக்கும் ஒரே ஒரு திருத்தம் மட்டும் தான் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. அந்தத் திருத்தத்தில் கஸ்டம்ஸ் அஃபன்ஸ், மத்திய அரசாங்கத்தினுடைய சட்டமானது, சென்டிரல் ஆக்ட் 52 ஆப் 1962 என்று சொல்லப்படுகிற கஸ்டம்ஸ் சம்பந்தமான வழக்குகள் ஏதேனும் இருந்து அந்த வழக்கில் ஒருவர் ஒரு முறை தண்டனை அடைந்து இருப்பார். ஆனால் தண்டனை அடைந்த பிறகு மீண்டும் அவர் தவறு செய்ய இருக்கிறார், குற்றம் இழைக்க இருக்கிறார் என்பதற்கு ஆதாரம் இருக்குமானால் மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள் ஒரு அபன்ஸுக்கு இரண்டு தண்டனையா என்று கேட்டார்கள். அப்படி அல்ல. ஒரு குற்றம் இழைத்தவுடன் அவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டு விடுகிறது நீதிமன்றத்தின் மூலமாக. அடுத்த குற்றம் இழைக்க அவர் முற்படுகிற அந்த இடத்திலிருந்து தண்டனை பெற தக்க ஆதாரங்கள் இருக்கின்றன. ஆதாரங்கள் எல்லாம் எப்படி இருக்க

வேண்டும் என்பது எல்லாம் மற்ற ஷரத்துக்களில் 2,3.4, 5,6,7 என்ற பிரிவுகளில் மிகத் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி தக்க ஆதாரங்கள் இருக்கின்றபோது அவர்கள் சென்னை நகரத்திலே இருந்து கொண்டு இத்தகைய வன்முறையில் ஈடுபட்டு குற்றங்களில் ஈடுபட்டு கொண்டிருக்கும்போதும் சென்னை நகருக்கு அப்பால் இருக்கக்கூடிய உத்திரவுகளை இடுவதற்கு போலீஸ் கமிஷனருக்கு அந்த நீதி துறைக்கு உள்ள அதிகாரத்தை வழங்கப்பட்டிருக்கிறது. இந்தியாவின எல்லா மாநிலங்களிலும் இருக்கின்ற சட்டம் இது. ஏதோ தமிழகத்தில் புதிதாக கொண்டுவந்து இந்தியாவின் மற்ற மாநிலங்களில் எல்லாம் இல்லாமல் தமிழகத்தில் மட்டும் ஜனநாயகத்திற்கு மாறாக ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்ற ஒரு சூழ்நிலையை, எண்ணத்தை உருவாக்குகின்ற அளவில் மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் பேசியது தவறு என்பதற்காக சுட்டிக்காட்டுகிறேன். எல்லா மாநிலங்களிலும் இருந்து வருகிற சட்டம். நாம் கொண்டுவருகிற பிரத்தியேக பிரிவு கூட மத்திய அரசினுடைய கஸ்டம்ஸ் வழக்குகளை பொறுத்தவரைக்கும் பல வழக்குகள் பல தவறுகள் இருந்தும் மத்திய அரசினுடைய நிதிக்கு பாரின் எக்சேன்சுக்கு பலவித தவறுகள் இழைத்து இழப்பு ஏற்படுகிற காரணத்தாலே எல்லா மாநிலங்களும் இந்த சட்டத்தை கொண்டு வரவேண்டும் என்று கருதியும் இது மத்திய அரசின் கருத்தும் கூட—இதை நான் மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்களுக்கு சுட்டிக்காட்டுகிறேன்—அந்த அடிப்படையில் இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதில் கூட குறை இருக்குமானால், தவறு இருக்குமானால் 'அப்பலேட் பவர்' இருக்கிறது. 30 தினங்களுக்குள் அரசுக்கு அவர்கள் மனு செய்யலாம். இல்லை என்றால் Writ jurisdiction is always there. Let it be approched by all the aggrieved people.

When the procedure laid down in sub-section 2 is not followed writ jurisdiction is there. If there is no material upon which the order could have been passed..... அந்த முறையிலே ரிட் ஜூரிஸ்டிக்ஷனில் ஹைகோர்ட்டுக்கு எந்த எந்த பிரிவு வில் ரிட் ஜூரிஸ்டிக்ஷனை அணுகலாம் என்று தெளிவாக சொல்லியிருக்கிறது.

If there is no material upon which the order could have been passed. அதற்கும் ரிட் ஜூரிஸ்டிக்ஷன் இருக்கிறது. காரணம் இல்லாமல் ஆதாரம் இல்லாமல் அரசியல் நோக்கோடு சிலர் பழி வாங்கப்படலாம் என்றுகூட மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் போன்றவர்கள் எல்லாம் சொன்னார்கள். தக்க ஆதாரம் இல்லை என்றால் உடனடியாக உயர்நீதிமன்றத்திற்கு செல்லலாம். ஆதாரங்கள் இல்லை என்றால் உடனடியாக தடையையும் பெற்றுவிடலாம், என்ற முறையில் இப்படிப்பட்ட பல்வேறு பிரிவுகள் இருக்கின்றன என்ற காரணத்தால் பல மாநிலங்களிலே பாரதத்திலே நடைமுறையில் இருந்து வருகிறது இந்தச் சட்டம். பொதுவாக இது அரசியல் காழ்ப்புணர்வோடு அரசுக்கு எதிரானவர்கள் மீது பயன்படுத்தி இருக்குமானால் முன் உதாரணம் ஒன்றுகூட சுட்டிக்காட்டலாம். அப்படிப்பட்ட எந்த விதமான உதாரணமும் இதுவரை இல்லை என்பதற்காக இதைச்



சொல்கிறேன். எனவே இந்த நோக்கம் எல்லாம் 'பெர்பெச்சுவல்' அபன்டர்ஸ் என்று சொல்லப்படுகின்ற குற்றவாளிகள் மக்களுடைய அமைதிக்கு பங்கம் விளைவிக்க அவர்கள் முனைகிற போது அதைத் தடுப்பதற்காக ஏற்கெனவே குற்றவாளியாக இருக்கின்ற போது கஸ்டம்ஸ் ஆக்ட்-ஐ பொறுத்தவரைக்கும் குற்றம் செய்து அவர்கள் தண்டனை பெற்ற பிறகு மீண்டும் அவர்கள் ஈடுபடுகிறபோது தான் இதை பயன்படுத்துவதற்காக கொண்டு வரப்பட்டிருக்கிறதே ஒழிய இதில் நாடு கடத்தவேண்டும் என்ற பிரச்சனை இல்லை. தேசத்தை விட்டு கடத்தவேண்டும் என்ற பிரச்சனை இல்லை. சென்னையில் ஒருவர் தவறு செய்வாரேயானால் அவர் அடுத்த பகுதியில் இருக்கவேண்டும் என்று உத்தரவு இடலாம் மக்களுடைய நலனைக் கருதி. எனவே இந்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவைக்கு இந்தச் சட்ட முன்வடிவை கொண்டு வருவதற்கு காம்பிடென்ஸ் இருக்கிறதா என்பதை எடுத்துச்சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை கொண்டுவர அனுமதி கோருகிறேன்.

Constitutionally it is valid.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் திரும்ப திரும்ப அதைத்தான் விளக்கிக்கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக கஸ்டம்ஸ் ஆக்டிலே ஒருவர் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டால் அது செக்ஷன் 1 5 என்று நினைக்கிறேன். 2 ஆண்டுகள் அவருக்கு சிறைத் தண்டனை கொடுக்கலாம் என்று இருக்கிறது. அந்த தண்டனைப் பெற்று விடுகிறார்கள். அந்தத் தண்டனைப் பெற்ற பிறகு போலீஸ் கமிஷனரோ, அல்லது போலீஸ் அதிகாரியோ இவர் மீண்டும் தப்பு செய்யலாம் என்று அவராக நினைத்து அதற்கு ரீசனபல் கிரவுண்டு அவருக்கு பட்டது என்று சொன்னால் அவர் அரஸ்டு செய்யலாம், அவரை வேறு இடத்திற்கு மூவ் செய்யலாம் வேறு இடத்திற்கு போ என்று உத்தரவு போடலாம். அப்போது எங்கே போகவேண்டும் என்றால் கோர்ட்டுக்குத் தான் போகவேண்டும். கோர்ட்டுக்கு போகவேண்டிய அவசியங்கள் எல்லா பிரச்சனைகளுக்கும் உண்டு. இந்தச் சட்டம் தேவையில்லை. 151-வது பிரிவு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டீடெய்ல்ஸுக்குள் போக வேண்டாம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, 151-வது விதியின் பிரகாரம் 24 மணி நேர பிரிவன்டிவ் அரஸ்ட் மூலமாக இதுபோன்ற பெருங்குற்றங்களையெல்லாம் தடுத்துவிட முடியும் என்று மன்ற உறுப்பினர் திரு ரகுமான்கான் கருத்துக்கூற மாட்டார் என்று நினைக்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : சாதாரண நடைமுறையில் இருக்கின்ற சட்டங்களையே இதற்காகப் பயன்படுத்தலாம். அரஸ்ட் பண்ணலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது தெரிந்த உண்மைதான்.

திரு. அ. ரகுமான்கான் : ஆகவே அது தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தச் சட்டமுன்வடிவின் மீது மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்களும் மற்ற உறுப்பினர்களும் ஒரு கருத்தைத்தான் சொன்னார்கள். அரசியல் சட்டப்படி இதை அறிமுகப்படுத்தலாமா. அறிமுகப்படுத்தினால் அது சரியா இல்லையா என்பதுதான் என் முடிவுக்காக வைக்கப்பட்டிருக்கின்ற வாதம். மற்றபடி சட்டத்திற்குள்ளே அதன் பிரச்சினைகளுக்குள்ளே இங்கே அது விவாதத்திற்கு வரும்போது சொல்லவேண்டிய கருத்துக்களைச் சொல்லலாம். அரசியல் சட்டப்படி இங்கே எடுத்துக்கொள்ளலாம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லி விட்டார்கள்.

HON. THIRU C. PONNAIYAN : This falls under the State list. The State legislature has got the competence to bring in a legislation in this regard.

திரு. அ. ரகுமான்கான் : நான் அதை மறுக்கிறேன். உங்களிடம் நான் கேட்கிறேன். நான், அல்ட்ரா வயர்ஸ் ஆப் தி கான்ஸ்டிட்யூஷன் இது என்று சொல்கிறேன். அவர்கள் காம்பிட்டன்ஸி இருக்கிறது என்று சொல்கிறார்கள், காம்பிட்டன்ஸி இல்லையென்று நான் சொல்கிறேன். தாங்கள் ரூலிங் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ரூலிங் என்ன கொடுக்கிறேன் என்று கேளுங்கள். இங்கே பேசியவர்கள் அரசியல் சட்டப்படி அறிமுகம் செய்யக்கூடாது என்பதை வாதமாகச் சொன்னார்கள், ஸ்டேட் லிஸ்டிலே இது இருக்கிறது ஆகவே அறிமுகப்படுத்தலாம் என்பது அமைச்சருடைய வாதம். மற்றப் பிரச்சினைகள் எல்லாம் நீதிமன்றத்திலே தீர்க்கப்பட வேண்டியவை, இங்கே தீர்க்கப்படவேண்டியவை அல்ல. நாடாளுமன்றத்திலே வந்தாலும் சரி அல்லது இங்கே வந்தாலும் சரி அவரவர்கள் விளக்கங்களை கொள்கைகளை சொல்வதற்கு உரிமை உண்டு. சட்டம் இங்கே கொண்டு வந்து நிறைவேற்றப்படுகிறபோது 3 நிலைகளிலே அந்தக் கருத்துக்களை அவர்கள் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் ஏற்கெனவே வழக்கறிஞராக இருக்கிறவர், ஆகவே அவருக்குத் தெரியும், அதையெல்லாம் நீதிமன்றத்திலே வாதிடலாமே தவிர இங்கே அதற்கு இடம் இல்லை. என்னைப் பொறுத்தவரையில் அமைச்சர் ஒரு சட்டமுன்வடிவை முன்மொழிந்திருக்கிறார், அதை சபை ஏற்றுக்கொண்டால் நான் ஏற்றுக்கொள்கிறேன் என்பதுதான். ஆகவே வாக்கெடுப்புக்கு விடுகிறேன்.



திரு. அ. ரகுமான்கான் : அரசியல் சட்டப் பிரச்சினைகள் கோர்ட்டில் தான் தீர்க்கப்படவேண்டும், என்று சொல்கிறார்கள். அரசியல் சட்டத்திற்கு விரோதமாக இருக்கிறது என்ற வாதம் சபையிலே வைக்கப்பட்டதற்குப் பிறகு........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு சட்டத்தை இரண்டு வகையிலே விவாதிக்கலாம். அரசியல் சட்டத்திற்கு ஏற்றது என்று விவாதிக்கலாம், அரசியல் சட்டத்திற்குப் புறம்பானது என்று விவாதிக்கலாம், வழக்கறிஞர் திறமையைப் பொறுத்தது அது. பின்னர் ஜட்ஜினுடைய அறிவு, சட்டம் இவையெல்லாம் சேர்ந்து வருகிறது.

திரு. அ. ரகுமான்கான் : தாங்கள் என்ன தீர்ப்பு சொல்கிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமுன்வடிவு அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது. அதை இந்த மாமன்றம் ஏற்றுக் கொள்கிறதா என்று கேட்கப்போகிறேன், ஏற்றுக்கொள்கிறது என்றால் நீதிமன்றத்திற்குபோய் வாதாடலாம். இதுதான் என் தீர்ப்பு.

பேரவை முன்னுள்ள கேள்வி "1983 ஆம் ஆண்டு சென்னை மாநகர் காவல் தமிழ்நாடு மாவட்டக் காவல் (திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(முற்பகல் 11-10)

7. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்–விவாதம்—(தொடர்ச்சி)

*மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய முன்தினம் பேச்சினுடைய தொடர்ச்சியான இன்று நான் பேசத் துவங்குவதற்கு முன் அன்று ஏற்பட்ட அவசர நிலைக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைத்ததற்காக முதற்கண் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு சங்கரய்யா அவர்கள் நில சீர்திருத்தத்தைப் பற்றி இங்கே பேசினார்கள். அவர்கள் பேசுகின்றபோது ஒரு கருத்தை வெளியிட்டார்கள். ஏறத்தாழ 150 லட்சம் ஏக்கராக்கள் இருந்தும், ஒரு லட்சம் ஏக்கராக்கள் கூட எடுக்க முடியவில்லை இன்னும் என்றெல்லாம அவர்கள் குறிப்பிட்டபோது, பினாமி நில சட்டத்தைப் பற்றியும் இங்கே குறிப்பிடப்பட்டது. உண்மையிலே வருத்தத்தோடு நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மாமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட அந்த சட்டத்திற்கு அனுமதி கிடைக்கவில்லை என்பது வேதனைக்குரியது என்பது மட்டுமல்ல, இந்த நாட்டிற்கு நன்மை செய்ய வேண்டுமென்று விரும்புகிற ஒவ்வொருவரும் ஓரளவிற்கு அல்ல, கடுமையாக சிந்திக்கத்தக்க நிலைமையில் இந்தச் சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு மாநிலத்தினுடைய மக்கள் எதை விரும்புகிறார்களோ, எது தேவைப்படுகிறதோ அதைச் செய்து அவர்களுக்கு தொண்டு செய்யவேண்டிய ஒரு அரசு, அதிலும் எதிர்க்கட்சியில் இருக்கிற இந்த மாமன்றத்தினுடைய அத்தனை தலைவர்களுடைய, உறுப்பினர்களுடைய பெரும்பான்மை என்று கூட சொல்லக்கூடிய, அனைவரும் ஏற்றுக்கொண்ட என்று சொல்கிற அளவிற்கு ஒத்துழைப்புத் தந்த அந்தத் தீர்மானத்தை இவ்வளவு அலட்சியப்படுத்துவது என்பது உண்மையிலே மக்களுடைய எண்ணத்தை, மக்களுடைய கருத்தை மதிக்காத நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறது என்று சொல்வதற்கு அது காரணமாகிறது என்பதை நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். இந்த நில சீர்திருத்தத்தைப்பற்றி மட்டுமல்லாமல் மத்திய அரசு வாங்கிய கடன், உலக நிதி வங்கி இடுகிற கட்டளை, அதனால் ஏற்படுகிற விலைவாசி உயர்வு, கடன் கொடுத்தவர்கள் வற்புறுத்துவதன் மூலமாக விலையை உயர்த்த வேண்டிய கட்டாயம் என்பது எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்கள் எடுத்துச்சொன்ன வாதத்திலே வைத்த கருத்துக்களாகும்.

அந்த நிலைமையை நாம் எண்ணிப்பார்க்கிற போது கடன் வாங்கியவர்கள் கடன் கொடுத்தவர்களுக்கு கட்டுப்பட வேண்டியிருக்கிறது என்பது மட்டுமல்லாமல் சிலசமயங்களில் திருப்பிக் கொடுக்க முடியாத நிலைமை இருந்தாலும் எவ்வளவு அவல நிலைமைக்கு நாடு ஆளாகும் என்பதை எண்ணி சங்கரய்யா அவர்கள் தெளிவாக சொல்லியதற்கு நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன். விலைவாசி உயர்வு எந்த மட்டத்திலே, எங்கே இருந்து ஆரம்பமாகிறது என்றெல்லாம் சுட்டிக்காட்டிய சங்கரய்யா அவர்கள் அதே நேரத்தில் இன்னொன்றையும் அவர்கள் மனதிலே பதியவைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அவர் மட்டுமல்லாமல் இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனைபேரும், அனைத்துக்கட்சித் தலைவர்களும் அதை கவனித்து அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். விலைவாசி உயர்வை தடுப்பதற்கு சில காரணங்களைச் சொல்கிற நேரத்தில் மாண்புமிகு சங்கரய்யா ஒரு விவரத்தைச் சொன்னார்கள். அரிசியை, நெல்லை அரசே வாங்கி விநியோகம் செய்வதன் மூலமாக அதனை கட்டுப்படுத்தக் கூடாதா என்று கேட்டார்கள். அந்த அளவிற்கு ஒரு மாநில ஆட்சிக்கு வசதி இருக்கிறதா என்பது ஒரு கேள்வியாக இருக்கிறது என்றாலும் கூட எந்த அளவிற்கு உணவுப் பொருள்களின் தேவை அதிகமாக்கப்படுகிறதோ அதற்கேற்ப உணவுப்பொருள்கள் கிடைக்கக் கூடிய நிலைமை, உணவுப் பொருள்கள் கிடைக்கவேண்டிய அளவிற்கு எவ்வளவு கீழாக கிடைக்கப்பெறுகிறது என்பதையும் நினைவில் வைத்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம். ஒவ்வொரு ஆண்டிலும் ஆண்டுத் தொடக்கத்தில் எத்தனை ஆயிரம் டன்கள் தேவைப்பட்டனவோ, அதைவிட இரண்டு மடங்கு அதிகமாக ஆண்டின் முடிவில் தேவைப்படுகின்ற நிலைமையை நாம் நாட்டிலே காண்கிறோம். அதுவும் நியாயவிலைக் கடைகளை அதிகமாகத் துவக்க வேண்டுமென்று விரும்பியதன் விளைவாலும் அது நம்முடைய கடமை என்று கருதியதன் காரணத்தாலும் பதினாறாயிரக்கணக்கான புதிய கடைகளைத் திறந்ததன் விளைவாக நியாய விலைக் கடைகள் மூலமாக, நியாய விலையில், மக்களுக்கு அரிசி வழங்கவேண்டிய, பொருள்களை வழங்கவேண்டிய பொறுப்பு அரசு ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாய நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் நான் இந்த அவைக்கு, நினைவிற்காகக் கூற விரும்புகிறேன்.

அந்த வகையில், இந்த அரசு எந்த அளவிற்கு நெல். அரிசி வேண்டுமென்று கேட்டதோ, அதற்கு மைய அரசு ஒத்துழைக்கவில்லை என்பதை உணவு அமைச்சர் அவ்வப்போது இந்த அவைக்குத் தெரிவித்திருக்கின்றார்கள். பத்திரிகைகளின் மூலமாகவும் செய்திகள் அவ்வப்போது வெளியிடப்பட்டிருக்கின்றன. ஆனால் இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசும்பொழுது, நியாயமான கோரிக்கைக்காக, நியாயமான தேவைக்காக, இந்த அரசு எடுத்துக் கொள்ளும் ஒவ்வொரு முயற்சிக்கும் ஆதரவு தருவோம் என்று சொன்னதை எண்ணிப் பார்க்கும்போது, இந்த மாநிலத்திற்குக் கொடுக்கப்பட வேண்டிய அளவு சரியாகக் கிடைப்பதற்கு இந்த மாமன்றத்திலே இருக்கிற நாம் அனைவரும் ஒருமித்த குரலோடு நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியத்திற்கு நம்மை ஆளாக்காது உடனடியாக நியாயமாகத் தரவேண்டிய, நியாயமான முறையில் தரவேண்டிய, நியாயமான அளவிற்குத் தர வேண்டிய அந்த உணவுப் பொருள்களை, மைய அரசு உடனடியாக வழங்க முன்வரும் என்று நான் எதிர்பார்க்கின்றேன்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்: மைய அரசுக்கு இந்த அரசாங்கம் கொடுக்க வேண்டிய லெவி அரிசியை கொடுக்கவில்லை. இப்பொழுது மத்திய அரசு உதவி செய்ய வேண்டுமென்று அவர்கள் சொல்கிறார்கள். அவசியம் அவர்கள் உதவி செய்வார்கள். அதற்கு நாங்கள் ஒத்துழைப்போம். ஆனால், அரிசியை மட்டும் கேட்டுப் பயன் இல்லை. அரிசி, கோதுமை, கேழ்வரகு எது இருந்தாலும் கூட நீங்கள் வாங்கிக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று முன் தினத்திலே இருந்து மாண்புமிகு ஹாஜா செரீப் அவர்கள் கொஞ்சம் வேகமாக இருக்கிறார்கள்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்: நீங்கள்தான் காரணம்,

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: இயற்கைக்கு மாறாக அவ்வாறு இருப்பதைத் நான் வரவேற்பதற்குத் தயாராக இருந்தாலும். நாங்கள் தான் காரணம் என்று சொல்லியதற்காக அவருக்கு நன்றி கூறி, அந்தக் காரணத்தை மைய அரசு ஏன் ஏற்படுத்த வேண்டுமென்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு, ஹாஜா செரீப் அவர்களுடைய ...தில், ஏதோ மைய அரசிலே யிருந்து பேசுகின்ற அமைச்சர் பதில்போல இருக்கிறதே தவிர, இங்கேயிருக்கிற மாண்புமிகு உறுப்பினராக, அவர் சொல்வதாக இல்லை. கோதுமை கொடுத்தால் வாங்கிக் கொள்ளுங்கள் என்று எந்த ஆதாரத்தை வைத்துச் சொல்கிறார்கள் என்று எனக்கு புரியவில்லை, தெரியவில்லை. அரிசி பற்றாக்குறையாக இருக்கிறதா மைய அரசிடம்? அவர்களிடம் ஸ்டாக் இல்லையா? அல்லது தேவையானதைக் கொடுக்க முடியாத நிலையிலே இருக்கிறார்களா? ஏதாவது புள்ளி விவரங்கள் கிடைத்திருக்கின்றனவா? எனக்குத் தெரியாது. தெரிந்தால், மாண்புமிகு ஹாஜா செரீப் அவர்கள் சொன்னால், அதைப்பற்றி நான் மக்களிடம் சொல்லலாம். இந்திய அரசு இப்படித்தான் இருக்கிறது ஆகவே, இந்திய அரசு இந்தப் பரிதாப நிலையில் இருக்கிற காரணத்தால், அரிசி பற்றாக்குறை அங்கேயும் இருப்பதால், கோதுமையை நாங்கள் வாங்கிக்கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்று வேண்டுமானால் மக்களிடம் சொல்வோம். ஏனென்றால் மக்களுக்குப் பதில் சொல்லத் தானே நாம் இங்கே இருக்கிறோம். அந்த வகையில் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அவர்களுடைய மத்திய அமைப்புக்கு அரிசி கொடுக்கவில்லையென்று சொல்கிறார்களே, 1974 லேயிருந்து அரிசி கிடைக்கவில்லையென்றால், அதற்கு என்ன காரணம்? வறட்சி தான் காரணம் அதைத் தயவுசெய்து மறந்துவிடக் கூடாது.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்: வறட்சி என்றால், அதே சமயத்தில் இலட்சக்கணக்கான டன்கள் கேரளாவுக்குப் போய் விட்டதே, அதை ஏன் இந்த அரசு ஸ்டாப் பண்ணவில்லை?

(முற்பகல் 11-20)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: நான் சில சமயங்களிலே சட்டமன்றத்திற்கு வருவதில்லை. மாண்புமிகு ஹாஜா செரீப் அவர்கள் அடிக்கடி வந்துகொண்டிருக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிறேன். அவர்களுடைய பேச்சை எங்கோ இருந்து கேட்டுக்கொண்டுதான் இருக்கிறேன். அவர்கள் எப்படி



இதையெல்லாம் மறந்து விடுகிறார்கள் என்று தெரியவில்லை. அவர்கள் வேண்டுமென்றே கேட்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. மைய அரசு இந்த அரசுக்குத் தகவல் கொடுத்த பிறகு, அவர்கள் அனுமதியின் பேரில்தான் அனுப்பியுள்ளோம் அவர்களின் அனுமதி இல்லையென்றால் அனுப்ப முடியாது என்பதும் தெரிந்த ஹாஜா செரீப் அவர்கள் ஏன்தான் இப்படிக் கேட்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை.

THIRU K.S.G. HAJA SHAREEF; Mr. Speaker, Sir, My point is; if his Government feel that they are not in a position to subscribe to the central levy, can you say that they will be in a position to have excess and sell the stock to the neighbouring States

மாண்புமிகு திரு. எம். ஜி இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வருத்தத்தோடு சொல்கிறேன். என் பதிலை எங்கோ கொண்டு போகிறார்கள். அந்தப் பதில் இந்த நாட்டுக்கு நல்லதல்ல. நாங்கள் கொடுக்கவில்லை என்பதை வாதத்திற்காக ஒத்துக்கொள்ளலாம். கொடுக்காமல் இல்லை. இல்லை, அதனால் கொடுக்கவில்லை. கொடுக்கவில்லை என்று வாதத்திற்கா வைத்துக் கொண்டாலும் கூட நாங்கள் கொடுக்காததற்கெல்லாம் மைய அரசுக்குச் சம்பந்தமில்லை என்று ஒத்துக் கொள்ளத் தயாரா?

THIRU K.S.G. HAJA SHAREEF; Sir, Please don't try to change the attitude. My whole point is, if his Government has got the stock to sell to the neigebouring States, why this Government has not given the levy rice to the Central Government

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வெளிநாட்டுக்கு நாங்கள் அனுப்பினோம் என்பதை ஒத்துக் கொள்கிறேன். அதை வைத்துத்தான் பேசுகிறேன். எப்படி அனுப்ப முடிந்தது? யார் அனுப்பச் சொன்னது? அரிசி இருக்கிறது, உங்களுடைய அமைப்புக்கு அனுப்பலாமா என்று கேட்டபொழுது வெளி நாட்டுக்கு வேண்டுமானாலும் அனுப்புங்கள் என்று சொல்லி, அவர்களின் அனுமதி பெற்று, அவர்களுக்குத் தெரிந்து, அப்படித்தான் அனுப்பப்பட்டுள்ளது. அதைத் திரும்பத் திரும்பக் கேட்கிறார்கள், நீங்கள் அங்கே கொடுக்கவில்லை, கேட்பதற்கு என்ன உரிமை இருக்கிறது என்று.

THIRU K.S.G. HAJA SHAREEF: Mr. Speaker, Sir, I never said. My only submission is that, you have failed to contribute to the central levy. I am not questioning why you are not subscribing to the central levy. At the same time you say that you have been permitted to send to the neighbouring States, has the Central Government told you that - it is quide all right - you need not send it to the central levy and at the same time you can be at liberty to send it to the neighbouring States

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திரும்பவும் வற்புறுத்திச் சொல்கிறேன். இல்லை, அதனால் கொடுக்கவில்லை. இருக்கும் பொழுது கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை ஏன் மறந்து விடுகிறீர்கள்? 1974–ஆம் ஆண்டுக்கு முன்னால் கொடுக்கவில்லையா? 1974–ஆம் ஆண்டுக்கு முன்னால் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப் : தலைவரவர்களே, அதே சமயத்தில் கேரளாவுக்குக் கொடுத்திருக்கிறீர்களே.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கேரளாவுக்குக் கொடுக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். எந்த ஆதாரத்தில் சொல்கிறார்கள் என்று சொன்னால் பதில் சொல்வதற்கு உதவியாக இருக்கும். 1979–ஆம் ஆண்டிலே கொடுத்திருக்கிறோம். அதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அப்பொழுது அதிகமாக இருந்தது. அப்பொழுதுதான் வெளியே விற்கலாம் என்ற நிலைமை ஏற்படுத்தப்பட்டது. அதைப்பற்றிப் பெருமையாகவும் மேடையிலே பேசினோம். இப்பொழுது அங்கே கொடுக்கவில்லை. நீங்கள் கொடுக்கவில்லை, பிறகு எப்படிக் கேட்கலாம். நீங்களே பார்த்துக் கொள்ளலாம் என்று அங்கிருந்து பதில் வருமேயானால், அதைப்போல பலவற்றிற்கு நீங்கள் ஒத்துழைக்கவில்லை, ஆகவே தர மாட்டார்கள் என்பதுபோல சொல்லுகின்ற நிலைமை ஏற்படுமேயானால், அவர்கள் தரவில்லை நாங்கள் இந்தக் காரியத்தைச் செய்யத் தயாராக இல்லை என்று நானும் சொல்லும்படியான நிலைமை ஏற்பட்டால் அது இந்த நாடு ஒரே நாடா, பல நாடுகள் சேர்ந்தது என்று இல்லாமற் போய்விடும் நான் பணிவன்போடு கேட்கின்றேன், தயவுசெய்து எண்ணத்தையெல்லாம் மறந்து. பிரிவினையெல்லாம் தூக்கியெறிந்துவிட்டு, இந்த நாடு ஒன்றாக இருக்க வேண்டும், ஒரே நாடாக இருக்க வேண்டுமென்று விரும்புகின்ற எங்களை வேண்டாத இடத்திற்குத் தயவுசெய்து தள்ளி விடாதீர்கள் என்பதை மட்டும் நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்

THIRU K. S. G. HAJA SHAREEF; Mr. Speake., sir, I do not know why thei Hon'ble Chief Minister should have misund rstood my pont? I have said very frankly..............

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு சட்டமன்றத்திலே தமிழிலேயே பேசும்படியாக அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.



THIRU K. S. G. HAJA SHAREEF; Mr. Speaker, sir I know how to speak in Tamil and also in English. But I would like to address the House in English. I do not know why the Chief Minister should have misunderstood my point. I have said repeatedly that the Central Government will not allow to starve the people of Tamil Nadu. They will come to the aid we will certainly press them to see whatever possible is done to this State. But my only supmission is that, this Government has not tontributed to the central levy. At the same time, they have sent the rice to the neighbouring states. That dose not matter. If that is the case, that is going to affect the Central Government The Central Government for that reason, is not going to say that they are not going to come to your rescue. The concerned Minister has also said that at the appropriate time, they will come to your rescue. We will certainly put forth our best of efforts to see that this Government is being helped.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெருக்கடியான கட்டம் வரும் போது தேவையான நேரத்தில் உதவி செய்வார்கள் என்று இங்கே இருக்கின்ற மாண்புமிகு ஹாஜாஷெரீப் சொல்லுகிறார்கள். ஒன்றிரண்டு வாரங்களுக்கு முன்புதான் முன்னாள் மாண்புமிகு அமைச்சர் ஆர். வி. சாமிநாதன் அவர்கள் சொன்னார்கள். நாங்கள் காத்துக் கொண்டிருக்கிறோம். (ஆரவாரம்) இப்போது நீங்கள் சொல்லுகிறீர்கள், கேட்டுக் கொண்டிருக்கிறோம். இதுபோன்ற நிலைமையில் நாட்டின் பிரச்சினையை வேடிக்கையான ஒரு பிரச்சினையாக ஆக்கிக் கொள்ளக் கூடாது என்பதில் நான் அக்கறை காட்ட விரும்புகிறேன்.

திரும்பவும் சொல்கிறேன் 1977–ல உத்தரவு போட்டார்கள். ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு அரிசி போவதை தடை செய்யக்கூடாது என்று, மத்திய அரசிலே இருந்து நாங்கள் எப்படி விற்க முடியும். விற்கவேண்டிய அவசியம் என்ன? அவர்கள்தான் வாங்கிக் கொண்டு போகிறார்களே, மைய அரசின் உத்தரவுபபடி. திரும்பத் திருமப இதையே திரு. ஹாஜாஷெரீப் போன்ற ஒரு படித்தவர், நல்ல வசதி படைத்தவர், அதோடு தொழில் வல்லுநர், பல தொழில் நிறுவனங்களின் தலைவர், இப்படி அவசரப்பட்டு ஏன் பேசுகிறார் இரண்டு நாட்களாக என்று எனக்குப் புரியவில்லை. அதாவது இப்படி பேசினால்தான் சரி என்று சொல்லிவிட்டார்களா, இல்லை என்றால் நீங்கள் பேசவே இல்லை என்று குற்றம் சாட்டுகிறார்களா, தெரியவில்லை. நீங்கள் ஏன் பேசாமல் இருக்கிறீர்கள் என்று கேட்கிறார்களோ என்ற சந்தேகம். இல்லாவிட்டால் விஷயம் தெரிந்தவர்கள், மறந்து விட்டுப் பேசுகிறார்களா என்பதுதான் எனக்குப் புரியவில்லை.

...என்னுடைய நிலைமை எல்லாம், இந்த அரசினுடையது மட்டுமல்ல தமிழகத்தின் மக்களுடைய கேள்வியெல்லாம், இந்த அரசுக்கல்ல அரிசி தருவது. மக்களுக்கு. மைய அரசு சொல்லுகிறது ஏழை எளிய மக்கள் பட்டினி கிடக்காமல் இருக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கவேண்டும் என்று. நேற்றையதினமும், நேற்றைய முன்தினமும் பிரதம அமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். "இந்த நாட்டினுடைய ஏழ்மையைப் போக்குவதுதான் என்னுடைய முதல் வேலை" என்று சொல்லி இருக்கிறார்கள். 'ஏழை எளியவர்களாக இருக்கின்ற மக்களைப் பற்றிதான் என் சிந்தனை எல்லாம்' என்று சொல்லி இருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல வேலை வாய்ப்பு கிடைப்பதற்கு எந்தெந்த வழியைப் பின்பற்றலாம் என்பதுதான் என்னுடைய யோசனை. அதைத் தவிர வேறு யோசனையே இல்லை" சொல்லி இருக்கிறார்களா, இல்லையா? இப்படிப்பட்ட பிரதம அமைச்சரின் கீழுள்ள ஒரு அரசு, சந்தர்ப்பம் வரட்டும், அதற்குப் பிறகு அனுப்புகிறேன், அதைக் கொடுப்போம் என்று சொன்னால், சந்தர்ப்பம் எப்படி வரும்? இங்கே எல்லோரும் தட்டைத் தூக்கிக் கொண்டு வறட்சி காரணமாக வெளி மாநிலங்களுக்குப் போவது, வெளி மாவட்டங்களுக்கு போவது, அங்கே போய் கவனிக்க முடியாதவர்கள் அங்கே இருக்கின்ற காரணத்தால், இயலாத காரணத்தால், அல்லது கிடைக்காத காரணத்தால், துன்பப்படுவது—இன்னும் எப்படியோ. அந்த வேதனைகளை எல்லாம் பார்த்த பிறகுதான், ஓகோ! உண்மையிலேயே தமிழ்நாடு கஷ்டப்படுகிறது ஆகவே அரிசி அனுப்ப வேண்டும் என்றால் ஒரே நாளில் எத்தனை ஆயிரம் டன்கள் அனுப்ப முடியும்? இங்கே வந்த பிறகு அதை விநியோகிக்கும்போது எவ்வளவு நாட்கள் ஆகும். நாங்களே வாங்கி வைத்துக் கொண்டு மத்திய அரசை ஏமாற்ற வேண்டுமென்று விரும்புகிறோமா?

இங்கே சத்துணவு போட்டால் உடனே அங்கே சொல்கிறார்களாம், சொல்லுகிறார்கள் அவர்கள் சத்துணவு திட்டத்தைக் கேட்காமலேயே அறிமுகப்படுத்தி விட்டார்கள். ஆகவேதான் அரிசி பற்றாக்குறை. அதற்கு 17 ஆயிரம் டன்கள் என்று. அப்படியே இருக்கட்டுமே, ஒரு 65 லட்சம் குழந்தைகள் சாப்பிடுகிறார்கள் என்பதற்காக அந்த 17 ஆயிரம் டன்கள் சேர்த்து அனுப்பக் கூடாதா. அதுவுமில்லை. அவர்கள் மாநிலங்களிலே அதை அறிமுகப்படுத்தப் போகிறோம் என்று சொன்னால் அதற்கும் பதில் இல்லை. இப்படி ஒவ்வொன்றையும் நான் சொல்லிக்கொண்டே போனால், அடுக்கிக் கொண்டே போனால் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கும்.

(முற்பகல் 11-30)

இதிலே நான் நேற்று முன்தினம் – நான் எங்கேயிருந்து ஆரம்பித்தேன் இப்போது இங்கே நிற்கிறேன், அது இன்னும் முடியவில்லை. திரு. சங்கரய்யா அவர்களுக்குப் பதில் சொல்ல வேண்டுமென்று தொடங்கி எங்கோ போய் நிற்கிறது.



தேர்தலைப் பற்றிச் சொன்னார்கள். தேர்தலை சந்திக்க நீங்கள் பயப்படுகிறீர்கள் என்று எங்களைப் பார்த்து சொல்கிறார்கள். ஒத்துக்கொள்கிறேன். ஏன் ஐயப்படுகிறேன். என்றால், டெபாசிட் போய்விடக்கூடாதே என்பதற்காகத்தான் (மேஜையைத் தட்டும் ஒலி). ஆகவே, திரும்பவும் அவர்கள் சொல்கிறார்கள். விவாதத்திற்குப் பிறகுகூட நாங்கள் பயப்படுகிறோம் என்று சொன்னார்கள். எங்களைப் பொறுத்தவரையில் இல்லாத பதவிகள் எங்களுக்குக் கிடைத்ததே தவிர, இருந்த பதவிகள் ஒன்றும் போய்விடவில்லை. இதைத் தயவு செய்து புரிந்து கொள்ள வேண்டும். எங்களுக்கு என்ன நஷ்டம். தோற்றுவிட்டால் என்ன நஷ்டம். வெற்றி பெற்றால் என்ன லாபம். இதைத் தயவுசெய்து ஹாஜா ஷெரீப் போன்ற மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும் ஏன் நகராட்சி மாநகராட்சிகளுக்கு எல்லாம் தேர்தல் நடத்தவில்லை என்று கேட்டார்கள் இங்கே. நாங்கள் தயார். எனக்கும் உண்மை தெரியும் என்பதை இங்கே இருக்கின்ற உறுப்பினர்கள் பலருக்கு நன்றாகத் தெரியும். என்ன திட்டம் போட்டீர்கள்? யார் வழக்கு மன்றத்திற்குப் போனது. எதற்காகப் போனார்கள்? இந்த உண்மைகளையெல்லாம் அவர்களுடைய மனச்சாட்சி மறைத்துவிட முடியுமா? பேச்சிலே சொல்லிவிடலாம். நாங்கள் பொறுப்பல்ல. அவர்கள் போனார்கள், நாங்கள் என்ன செய்வது என்று. இதில் என்ன நடந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் வெளியிலே சொல்ல முடியாது. அதைச் சொல்லிவிட்டால் எந்தப் பயனும் இல்லை. இந்த நிலை, ஏன் ஏற்பட்டது என்று கேட்கிறார்கள். சில சமயத்திலே பிற்பட்ட சமூகத்தினர்களுக்கு பாதுகாப்பு வேண்டும், கேட்கிறோம். அவர்களுக்கு என்று இடத்தை ஒதுக்கியது தவறா? ஆதி திராவிடர்களுக்கு என்று, அவர்களுக்குள்ள சதவிகிதத்திற்கு இடத்தை ஒதுக்கி பஞ்சாயத்து தேர்தல் நடத்தவேண்டுமென்று சொன்னது தவறா? தாய்மார்களுக்கு ஓரளவாவது இடம் கிடைக்கவேண்டுமென்று நாங்கள் சொன்னது தவறா? அதையெல்லாம் நீங்கள் வேண்டாம் என்று சொல்லிவிடுங்கள். நீங்கள் எல்லாம் எந்தத் தேதியில் வைக்க வேண்டுமென்று, கூட்டப்படுகின்ற கூட்டத்தில் சொல்லுகின்றீர்களோ, அரசு எந்தவித மாற்றமும் இல்லாமல் அப்படியே ஏற்றுக்கொள்ளத் தயார். (மேஜையைத் தட்டும் ஒலி).

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரீப் : கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய இந்த நகரம், முனிசிபாலிட்டி, பஞ்சாயத்து என்ன நிலையில் இருக்கிறது, மக்கள் எவ்வளவு துயரத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள், சானிடரி இல்லை, ரோடு இல்லை, லைட் இல்லை. 3 வருஷமாக அந்தத் தேர்தலை நடத்துகிறேன், நடத்துகிறேன் என்று நடத்தவில்லை. அந்த ஒரு கான்டெக்சிலேதான் நான் கேட்டேன். இப்போதுகூட மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களை நான் திட்டவட்டமாக கேட்டுக்கொள்கிறேன். தயவுசெய்து இந்தக் கூட்டத்தில் நீங்கள்

போல்டாக இதனை அடெனஸ் பண்ணுங்கள். சிட்டிக்கு இந்த மாதத்தில், இந்தத் தேதியில் நடைபெறும், முனிசிபாலிட்டிக்கு இந்தத் தேதியில் நடைபெறும், பஞ்சாயத்துக்கு இந்தத் தேதியில் நடைபெறும் என்று சொல்லுங்கள். பல காரணங்கள் இருக்கலாம். பல தொல்லைகள் இருக்கலாம். பல அசௌகரியங்கள் இருக்கலாம். அந்த அசௌகரியங்களுக்காக நீங்கள் மக்களுடைய அசௌகரியங்களை பார்க்காமல், நீங்கள் தேர்தலைத் தள்ளிக்கொண்டே போவீர்களானால் அது மிகவும் வருந்தத்தக்கது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அவர்களைக் கேட்கிறேன் தேதி சொல்லுங்கள் ஆட்சியிலே இருக்கின்ற நாங்கள் முடிவு எடுக்க வேண்டாம் நீங்களே சொல்லுங்கள், நாங்கள் நடத்துகிறோம், தொண்டனுக்குத் தொண்டனாக இருந்து சொல்கின்றேன். இங்கே சொல்லவேண்டும் சொல்ல வேண்டும் என்கிறார்கள். இதில் என்ன போல்ட் இருக்கு. எனக்கு போல்ட்னெஸ் எப்போதுமே இருக்கிறது. அதைத் தான் நான் சொல்ல விரும்புகிறேன். ஒரே ஒரு விஷயத்தை நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும். மாநகராட்சியிலே இந்த விகிதாச்சாரத்தை ஒதுக்கி இருக்கின்றோமே, அதுபோல கொண்டுவரவேண்டுமா என்ற யோசனை உண்டு. அது சரியாக நடத்தப்பட்டால், அல்லது சீராக நடத்தப்பட்டால், அது இங்கேயும் கொண்டு வரலாமா, இல்லை இப்படியே நடத்தலாமா என்ற யோசனை எல்லாம் உண்டு. ஆனால் நகராட்சிக்கும், மாநகராட்சிகளுக்கும் எல்லாம் தேர்தல் வர வேண்டுமென்று விரும்பினால், விரைவிலே அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைக்கச் சொல்கிறேன். நாங்கள் பேசவே யில்லை. நீங்களே தேதியைக் குறிப்பிடுங்கள். நடத்த நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதை மீண்டும் சொல்கிறேன். இதில் எங்களுக்கு அச்சமோ இல்லை (மேஜையைத் தட்டும் ஒலி), நாங்கள் ஆட்சிக்கு வரும்போது எந்த மாநகராட்சியில் பதவியில் இருந்தோம்? இப்போது மக்கள் எங்களுக்குத் தரவில்லையென்றால நாங்கள் நஷ்டப்படுவதற்கோ, வருத்தப் படுவதற்கோ எதுவுமே கிடையாது. ஆகவே, தயவு செய்து திரு. ஹாஜா ஷெரீப் அவர்கள்— துவரையில் சிந்தித்துப் பேசுகிறார்கள் என்பதைப் பற்றி சந்தேகம் இல்லை, ஆனால் எந்தப் பாதையில் சிந்தித்துப் பேசினார்களோ அந்தப் பாதையில் இருந்து மாறி இன்று ஏதோ ஒரு கோணத்தில் இருந்து பேசுவதைப் பார்க்கிறபோது எனக்குப் புரியவில்லை.

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகிறபோது மறுபடியும் சர்வ கட்சிக் கூட்டம் என்று சொன்னார்கள். சர்வ கட்சிக் கூட்டம் கூடித்தான் அரிசனங்களுக்கும், பெண்களுக்கும் இட ஒதுக்கீடு கொடுக்கவேண்டுமென்று முயற்சி செய்து, முடிவு எடுக்கப்பட்டது. ஆகவே, அதில் இருந்து நழுவிக்கொண்டு





போய், உடனடியாகத் தேர்தல் நடத்துவது என்பது சரியாக இல்லை. எந்தெந்தக் கட்சியின் சார்பாக வழக்குகள் தொடுத்து இருக்கிறார்களோ, அவரவர்கள் அதை வாபஸ் வாங்கிக்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டு, அதற்குப் பிறகு எந்தவித இடையூறும் இல்லாமல் தேர்தல் நடத்துவது தான் சௌகர்யமாக இருக்கும்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப் : சிட்டி கார்ப்பரேஷனுக்கும், சில முனிசிபாலிட்டிகளுக்கும் தேர்தல் நடத்துவதில் எந்தவித மான ஆட்சேபணையும் இல்லை. தகராறு இல்லை. ஏதோ சிலர் கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள், அதனால் நடத்த முடியவில்லை என்று சொல்கிறார்கள். சிட்டியைப் பொறுத்த வரைக்கும் எந்தக கோர்ட்டுக்கும் யாரும் போகவில்லை. ஆகவே, சிட்டி தேர்தலை அவசியம் உடனடியாக நடத்த வேண்டும். தற்போது சென்னை நகரம், நகரமாக இல்லை. நரகமாகத்தான் இருக்கிறது. பல தொல்லைகள் இருக்கின்றன. கொசுக்கடி தாங்க முடியவில்லை. எங்கே பார்த்தாலும் சாக்கடைகள் இல்லை, ரோடுகள் இல்லை, லைட்டுகள் இல்லை, வாட்டர் இல்லை என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, தயவு செய்து மறுபடியும் கேட்டுக்கொள்கிறேன், சிட்டி தேர்தலை இன்னும் 3—4 அல்லது 6 மாதத்திற்குள் நடத்துங்கள்.

திரு. என். சங்கரய்யா : சிட்டிக்கு தேர்தல் நடத்துங்கள் என்று அவர் சொல்கிறார். அப்படியானால், சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் அரிசனங்களுக்கும், பெண்களுக்கும் இட ஒதுக்கீடு வேண்டாம் என்று அவர்கள் சொல்கிறார்களா? இட ஒதுக்கீடு வேண்டாம் என்று காங்கிரஸ் கட்சி சார்பாக அவர்கள் சொல்கிறார்களா அல்லது அரசாங்கம் அந்த வழக்குகளைச் சீக்கிரமாக முடித்து, எந்தவிதமான சட்டத் தடங்கலும் இல்லாமல் நடத்தவேண்டும் என்று விரும்புகிறார்களா?

THIRU K. S. G. HAJA SHAREEF: Mr. speaker, Sir, Mr Party is not in favour of not giving any facilities to the Harijans or the back wardclasses. They should also be integrated in the administration. But for Heavens sake don't try to postpone the matter for this simple reason that there are certain anomalies in it.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, சில சமயம் நழுவிக்கொண்டு போக வேண்டிய நிலைமையேற்படும். அது போன்று திரு. ஹாஜா ஷெரீப் அவர்கள் பிரச்னைக்கு நேரடியாக பதில் சொல்ல முடியாமல் அல்லது சிக்கலில் மாட்டிக்கொள்ளாமல் எங்கேயோ பிரச்னையைக் கொண்டு போகப் பார்க்கிறார்கள். நான் ஒன்றைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஏதோ கொசுக்கடி தொல்லை, தண்ணீர் இல்லை என்று சொல்கிறார்கள்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 பிப்ரவரி 4

தி. மு. க., அ. இ. அ. தி. மு. க. ஆட்சிக்கு வந்து 10 அல்லது 15 ஆண்டுகள் தான் ஆகின்றன. அதற்கு முன்னால் என்ன நிலைமை?

THIRU K. S. G. HAJA SHAREEF; Mr. speaker, Sir, at that time this City was by and large, in a very excellent condition. I say it without any fear of contradiction. Let the Honble Chief Minister appoint a Committee' and let that Committee take into account, how it was before and how it is now.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ அவற்றையெல்லாம் நான் அனுபவிக்காதவன் போலவும், அவர்கள் அனுபவிப்பதுபோலவும் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். அவரைப்போல் வசதியாக இருந்துகொண்டு, மற்றவர்கள் சொல்லி நான் அறிந்து கொள்ள வேண்டியது இல்லை. எனக்கும் அனுபவம் உண்டு. நானே தோட்டத்தில் அனுபவித்துக்கொண்டு இருக்கிறேன். 10 நிமிடம் கீழே இறங்கி வந்து உட்கார்ந்தாலே அந்தக் கொசுக்கடி நன்றாகத் தெரிகிறது.

திரும்பத் திரும்ப நான் வற்புறுத்திக் கேட்பது இது தான். இத்தனை ஆண்டுகளாக மாநகராட்சிக்குத் தேர்தல் நடக்க வில்லை என்ன காரணம் என்பதைப் பற்றி இப்போது விவாதிக்கத் தயாராக இல்லை. அது தேவையற்ற விஷயம். பல ஆண்டுகள், பல சிக்கல்கள், பல ஆண்டுகள் பல ஆட்சிகள் மாற்றம், இதுபோன்ற பல்வேறு பிரச்னைகளின் காரணத்தால், பஞ்சாயத்திலிருந்து தொடங்கி மாநகராட்சி வரை தேர்தல்கள் வரவில்லை. ஆனால் நான் ஒன்றைத் திரும்பத்திரும்ப உங்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். மாநகராட்சிக்கு வருகின்ற வருமானம் எவ்வளவு என்பதை மாண்புமிகு ஹாஜா ஷெரீப் அவர்கள் கவனித்து பார்க்கவேண்டும். ஏறத்தாழ 35 லட்சம் பேர்கள் இங்கே இருக்கிறார்கள், என்று சொல்லப்படுகிறது. அன்றாடம் எத்தனை பேர் சென்னைக்கு வந்து போகிறார்கள் என்பதையெல்லாம் நாம் கணக்குப் பார்த்தால், 25 கோடி ரூபாய், 30 கோடி ரூபாய்க்குள் மாநகராட்சிக்கு வருமானம் இருக்குமானால், சம்பளமே 20 கோடிக்கு மேல், 22 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகிறது என்ற நிலைமை இருக்கின்ற போது, எவ்வளவு பணத்தை வைத்துக்கொண்டு, மாநகராட்சி பொதுப்பணிகள் செய்துவிடமுடியும், மக்களுக்குத் தேவையான அவ்வளவையும் செய்யமுடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

(முற்பகல் 11-40)

ஆனால் மக்கள் பிரதிநிதிகள் வருவார்களானால், மக்களை நேரிலே சந்தித்து, அவர்கள் விரும்புவதுபோல் செய்ய, அது பற்றி என்ன செய்ய முடியுமோ அதைச் செய்ய முயற்சிக்கலாம் என்பதை ஜனநாயகத்தில் மதிப்பு வைத்து நான் முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன் அதிலே யாருக்கும் சந்தேகப் வேண்டாம்.



THIRU K. S. G. HAJA SHAREEF: Mr. Speaker, Sir, it is only the Government which should form the budget. If there is deficiency, they should certainly give categorical allocations. I think they should take steps to wipe out the deficiencies and also take steps to improve the revenue of the Corporation That is exactly the reason why I request that the Corporation Council should be formed so that it can certainly go into the matter and propose various things to see that finances are being created. Please for Heavenssake do conduct the elections during this year.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏதோ ஒரு பிரச்சனையில் வெற்றி பெற்றதுபோல கற்பனை செய்து, திரும்பத் திரும்ப தேர்தல் என்று சொல்கிறார்கள். தேர்தல் நிச்சயம் வைக்கப் படத்தான் போகிறது. தயவு செய்து, நீங்களே அதுபற்றி முடிவு செய்யப் போகிறீர்கள். அப்போது நீங்கள் தேர்தலுக்கு நின்று, மக்களை சந்தியுங்கள் என்பதை மட்டும் இப்போது சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அது பட்ஜெட்டுக்கு முன்னாலோ பின்னாலோ என்று அல்ல. பட்ஜெட்டுக்கு முன்னால் எல்லாக் கட்சியினருக்கும் வாய்ப்பு அளிக்கும்போது, ஒருநாள் கூட்டத்தைக்கூட்டி, அங்கே நீங்கள் சென்னை மாநகராட்சியின் தேர்தல் தேதியை முடிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தயவு செய்து ஹாஜாசெரீப் அவர்கள் அந்தக் கூட்டத்திற்கு கட்டாயம் வரவேண்டும். வந்து தன்னுடைய கருத்தைச் சொல்ல வேண்டும். எல்லாக் கட்சியினரும் தேர்தல் தேதியைச் சொல்ல வேண்டும்.

அடுத்து, மாண்புமிகு ஹாஜாசெரீப் அவர்களுக்கு சொல்லக் கூடிய பிரச்சனைகள் எல்லாம், பம்பாயிலே எவ்வளவு வருமானம் என்பதை நீங்கள் அறிவீர்கள். எப்படி, எந்த வகையிலே வருமானத்தை இங்கே பெருக்குவது என்று யோசித்தால் முதலிலே ஒழுங்காக வீட்டு வரி கட்டப்படுகிறதா என்பதையும் எந்த எந்த வீட்டிலே குடியிருப்பவர்கள் என்ன என்ன வாடகை கொடுக்கிறார்களோ அந்த வாடகையை முதலிலே சொல்லு கிறார்களா என்பதையும், எண்ணிப்பார்க்க வேண்டும், இதை யெல்லாம் அவையிலே பேசிக்கொண்டிருந்தால் இதற்குத்தான் நேரம் சரியாக இருக்கும். இந்த நிலைமைகள் மாற்றப்பட வேண்டும். வருமானத்தைப் பெருக்க வேண்டும். சில சினிமா கொட்டகைகளை — இது என்னுடைய சொந்தக் கருத்து என்று வைத்துக்கொள்ளுங்கள் அல்லது இந்த அமைச்சரவையின் கருத்து என்று வைத்துக்கொள்ளுங்கள், எப்படி வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள் — அவைகளை குத்தகை விடும் உரிமையை அல்லது வருமானத்தைப் எடுத்துக் கொள்கிற உரிமையை வருமானத்தைப் பெருக்கும் வகையில் கார்ப்ப

ரேஷனுக்கு கொடுத்துவிடலாமா என்பதைக்கூட இந்த அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆக வருமானம் கார்ப்பரேஷனுக்கு கிடைத்தாக வேண்டும். கிடைத்தால்தான் நிர்வாகம் செய்ய முடியும். இந்தப் பிரச்சினையை இதோடு நிறுத்திவிட்டு, கார்ப்பரேஷன் தேர்தல் தேதியை குறிப்பிடுவதற்காகக் கூட்டப்படும் கூட்டத்தில் தயவு செய்து அனைத்துக் கட்சித் தலைவர்களும் கலந்துகொள்ள வேண்டும் — நிச்சயமாக ஒத்துழைப்பீர்கள் என்று நம்புகிறேன்— என்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. S. G. HAJA SHAREEF : Thank you, Sir.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இன்னொன்று. இங்கே நான் அதிகமாகப் பேசாமல் ஒரே ஒரு பிரச்சனையைச் சொல்லிவிட்டு, முடித்துக்கொள்ளலாம் என்று கருதுகிறேன் நான் இங்கே எழுப்பியிருக்கிற பல்வேறு பிரச்சனைகளுக்கு எல்லாம் பதில் சொல்ல வேண்டுமென்று நினைத்தேன். இரண்டு நாட்களுக்கு முன்னாலே, 10-ந் தேதிக்குள் இந்த கூட்டத் தொடரை முடித்துக்கொள்ளலாமா என்று நீங்கள் யோசித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை நாங்கள் எண்ணிப் பார்க்கிறோம். ஆகையால் ஒன்றை மட்டும் நான் திட்டவட்டமாகச் சொல்ல விழைகிறேன்.

பேராசிரியர் அவர்கள் இங்கே பேசும்போது சாராயப் பிரச்சனைப் பற்றி குறிப்பிட்டார்கள். அவர்கள் சொன்னதில் நல்ல எண்ணம் இருக்கிறது, என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால் சாராயம் குடிப்பது எவ்வளவு தவறு என்பதை நான் எவ்வளவு உணர்கிறேன் என்பதற்கு வேறு யாரையும் நான் சாட்சிக்கு அழைக்கத் தயாராக இல்லை. எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகையால் அந்த உரிமையோடு சொல்கிறேன், எவ்வளவு தீவிரமாக சட்டம் கொண்டுவர முடியுமோ அவ்வளவு தீவிரமாகக் கொண்டு வந்தேன். எவ்வளவு வேகமாக பேச வேண்டுமோ, அவ்வளவு வேகமாக என்னுடைய உணர்ச்சிகளையெல்லாம் வெளிப்படுத்தி இது குறித்து நான் பேசினேன். 1 ஆண்டு தண்டனை என்றும், ஆயிரம் ரூபாய் அபராதம் என்றெல்லாம் போடப்பட்டது. இவ்வளவு செய்தும், சாராயம் தண்ணீராக ஓடுகிறது ஆகவே அவைகளையெல்லாம் தடுக்க முடியவில்லை. அரசாங்கத்தினுடைய சக்தி, நிர்வாக இயந்திரம் எங்கோ பழுது பட்டு போயிருக்கிறது என்று சொல்லும் அளவுக்குக் கூட இங்கே குற்றச்சாட்டுகள் ஏற்பட்டன. அவைகளையெல்லாம் தாங்கிக் கொண்டு, நான் மீண்டும் மீண்டும் கெட்ட பெயர் எடுத்துக் கொண்டு, தொடர்ந்து முயற்சி செய்து பணியாற்றியதின் பயனாக, நான் இப்போது துணிந்து சொல்வேன், கள்ளச் சாராயம் குடிக்கின்றவர்கள் பெரும்பாலும் நகர்ப்புறங்களிலே குறைந்துக் கொண்டு வருகிறார்கள். 52 லட்சம் லிட்டர்கள் விற்கப்பட்ட இடங்களில் இப்போது 72 லட்சம் லிட்டர்கள் விற்பனையாகின்றன — அரசின் சார்பாக திறக்கப்பட்ட கடை



களில் — என்று கணக்கு வந்திருக்கிறது என்று சொல்லும்போது அவையெல்லாம் வெளியிலே கள்ளச்சாராயத்திற்காகப் போன பணம் தடுக்கப்பட்டிருக்கிறது என்பதும், டி. ஐ. ஜி. சர்மா என்பவர், அதிலே வெகு அக்கறையோடு கவனம் செலுத்தி, அதனைக் கட்டுப்படுத்த முயற்சி செய்ததன் பலனாக, பல கார்கள், ஆயிரக்கணக்கான பாட்டில்கள் எல்லாம் கைப்பற்றப் பட்டு, வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. ஆகவே கள்ளச் சாராயத்தை தடுக்க பெரிதும் முயன்றிருக்கிறார்கள் என்பதையும் சொல்லும்போது, நோக்கம் ஓரளவிற்கு நிறைவேறிக்கொண்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு கிராமப்புறங்களில் ஆங்காங்கே நடைபெறுகின்ற அந்த நடைமுறைகளுக்கு மாற்றாக, மீண்டும் அதிகமாக எப்படி அவைகளை தடை செய்ய முடியுமோ அப்படி தடை செய்வதற்கு வழி செய்ய இந்த அரசு முயன்றுக் கொண்டிருக்கிறது என்பதை மட்டும் வெகு சூசகமாகச் சுட்டிக்காட்டி, இந்த அரசு எப்படியாவது அரசுக்கு பணம் வரவேண்டும் என்று மட்டும் நினைக்காமல், கள்ளச்சாராயம் நிச்சயமாக ஒழிக்கப்படவேண்டும், அதனால் ஏற்படுகிற தீமைகள் களையப்படவேண்டும் என்பதிலே அக்கறை காட்டும் என்பதை எடுத்துச் சொல்லி, மற்றவைகளுக்கு எல்லாம் பட்ஜெட் செஷனிலோ அல்லது என்னுடைய (தங்களுக்கு பதில் சொல்லவில்லை என்று ஒருவரும் வருத்தப்பட வேண்டாம்— பின்னால் பதில் சொல்கிறேன்.) மானியக் கோரிக்கை வரும்போதோ அவ்வளவுக்கும் நான் பதில் சொல்கிறேன் என்று சொல்லி, இந்த ஆளுநருடைய உரையின் மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளுமாறு நான் உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்பொழுது வாக்கெடுப்பு.

திருவாளர்கள் இல. பலராமன், செ. சிவசாமி, என். எஸ். வி. சித்தன், ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் ஆகியவர்களுடைய திருத்தங்கள் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ப. நெடுமாறன் இருக்கையில் இல்லை.

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவர் அவர்களே திரு. நெடுமாறன் அவர்களுடன் சேர்ந்துதான் நாங்களும் கொடுத்திருக்கிறோம் நான் அந்த திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.

திரு. ப. நெடுமாறன், திரு என். சங்கரய்யா ஆகியவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''ஆளுநர் அவர்களுக்கு கீழ்க்கண்ட நன்றியுரை அளிக்கப் பெற வேண்டும்— 1983 ஆம் ஆண்டு, சனவரித் திங்கள் 24 ஆம் தேதியன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

(முற்பகல் 11-50)

8. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை—விவாதம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1982-83-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை குறித்தும் * 1981-82-ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கை குறித்தும் * எனது உரையினை நூல் வடிவில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அளித்துள்ளேன். அதனை இந்தப் பேரவையில் நான் ஆற்றியதாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1982-83-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை குறித்தும் 1981-82-ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கை குறித்தும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். தமிழ்நாடு மின்சார வாரியம் நமது தமிழகத்தினுடைய தொழில் வளமானாலும் சரி, விவசாயத்திலே உணவு உற்பத்தியானாலும் சரி மிக அத்தியாவசியமானதாக இருந்து வருகின்றது என்பதை நாம் அறிவோம். இன்றைய தினம் பல கோடி ரூபாய் நட்டத்திலே மின்சார வாரியம் இயங்கினாலும் அரசாங்கம் அதனுடைய நிதியிலே இருந்து அதனை ஈடுகட்டுகின்ற நிலைமையிலே இருந்து வருகின்றது. மின்சார வாரியத்தினுடைய நிர்வாகம் மிகவும் சீர்கேடு அடைந்துள்ளது என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். தமிழகத்தில் மின்சார வாரியத்தினுடைய வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு இந்த ஆண்டு 100 பெர்சன்ட் அளவிற்கு தொழில்களுக்கு மின்சார கட் கொண்டு வந்திருக்கின்ற நிலைமையை மின்சார வாரியம் ஏற்படுத்தி இருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

* 119–138-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது



இந்த ஆண்டு தமிழகத்திலே அனல் மின்சாரம் அல்லது புனல் மின்சாரம் என்ற இரண்டு வகைகளில்தான் மின்சாரத்தை உற்பத்தி செய்து மின்சாரத் தேவையினைப் பூர்த்தி செய்ய வேண்டிய ஒரு நிலைமை இருந்து வருகின்றது. ஏற்கெனவே தென்மேற்குப் பருவ மழையும், வடகிழக்குப் பருவமழையும் தமிழகத்திலே பொய்த்துவிட்டதன் காரணமாக நம்முடைய நீர்த்தேக்கங்களிலே தண்ணீர் வராத நிலைமை ஏற்பட்டு விட்டது. நீர்த்தேக்கங்களிலே தண்ணீர் வரவில்லை என்ற உடனே நமக்குப் புனல் மின் நிலையத்திலிருந்து கிடைக்க வேண்டிய மின்சாரம் கிடைக்காது என்பதை தமிழ்நாடு மின்சார வாரியம் அறிந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால் அனல் மின்சார நிலையத்தினைப் பொறுத்தவரையில் அது எண்ணூரானாலும் சரி, தூத்துக்குடியானாலும் சரி, பேசின் பிரிட்ஜ்-ஆனாலும் சரி அவற்றை எல்லாம் சரியான முறையிலே தமிழ்நாடு மின்சார வாரியம் நிர்வாகம் செய்து அதன்மூலம் நமக்குக் கிடைக்கவேண்டிய மின்சாரத்தை ஓரளவுக்காவது உற்பத்தி செய்திருக்குமேயானால் நிச்சயமாக தமிழகத்திலே இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது என்பதை நான் இந்த நேரத்தில் அரசாங்கத்திற்குக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். நெய்வேலியிலே இருக்கின்ற அதனுடைய நிர்வாக அதிகாரி பத்திரிகையிலே ஒரு அறிக்கையினைத் தருகிறார்கள். அதிலே ஒரு காலத்திலே பார்த்தபோது அதனுடைய உற்பத்தியிலே 90 சதவீதம் அளவுக்கு அதாவது மத்திய அரசினுடைய நிர்வாகத்திலே உள்ள நெய்வேலி மின்சார நிலயத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றது. இந்த நிலைமையை நாங்கள் பத்திரிகையிலே படிக்கிறோம். ஆனால் தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய நிர்வாகத்திலே இருக்கின்ற தூத்துக்குடி, எண்ணூர் போன்ற அனல் மின் நிலையங்களில் உள்ள நிலைமைகளைப் பத்திரிகையிலே படிக்கின்றபோது சில நேரங்களில் 37 சதவீதம், 47 சதவீதம்தான் அவை உற்பத்தி செய்கின்றன என்ற நிலைமையைப் பற்றி நாங்கள் அறிந்து கொள்கின்றபோது எங்களால் வருத்தப்படாமல் இருக்க முடியவில்லை நிச்சயமாக இதைக் கண்டிக்கவும் நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை)

எப்போது தமிழகத்தில் பருவ மழை தவறியது. ஏற்கனவே நாம் அனல் மின்சாரத்தை நம்பித்தான் தமிழக மக்களை காப்பாற்றவேண்டிய ஒரு தலையாய கடமை தமிழக மின்சார வாரியத்திற்கு இருக்கின்றது. அப்படி இருக்கின்றபோது இதை சரியான முறையில் மின்சார வாரியம் அந்த அனல் மின் நிலையங்களை நிர்வாகம் செய்து இருக்குமானால் நிச்சயமாக இப்படிப்பட்ட ஒரு அவல நிலைமை தமிழகத்திற்கு ஏற்பட்டு இருக்காது என்பதை நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன் நிச்சயமாக இந்த நேரத்திலே அரசாங்கமும் தமிழ்நாடு மின்சார வாரியமும் மிக மெத்தனமாக இருந்த காரணத்தால்தான் தொழில்கள்

இன்றையதினம் தமிழகத்திலே பாதிக்கப்பட்டன. தொழிலாளர்கள் வேலை இழந்து பட்டினி கிடக்கிறார்கள். எங்களைப் போன்ற விவசாயிகள் தாங்கள் இட்ட பயிரை மின்சாரத்தை நம்பி வடஆற்காடு, தென் ஆற்காடு, செங்கற்பட்டு மற்றும் தர்மபுரி போன்ற மாவட்டங்களில் முழுக்க முழுக்க மின்சாரத்தை நம்பியே பயிரிட்டவர்கள் இன்றையதினம் வடஆற்காடு மாவட்டத்தில் இந்த ஆண்டு பல்லாயிரக்கணக்கான ஏரிகளில் போதிய தண்ணீர் வரவில்லை. தீபாவளியின்போது ஓரளவுக்கு ஒரு வார கால மழை பொழிந்தது. ஏரி குளங்கள் நிரம்பியதா என்றால் நிச்சயமாக இல்லை. ஏரி குளங்கள் நிரம்பாத காரணத்தால் கிணறுகளில் ஓரளவுக்கு தண்ணீர் வந்தது. கிணறுகளில் ஓரளவுக்கு தண்ணீர் இருக்கிறதே என்று இதை நம்பி பயிரிட வேண்டும் என்ற எண்ணத்தில்தான் விவசாயிகள் பயிரிட்டார்கள். ஆனால் நிலைமை என்ன. இன்றையதினம் வடஆற்காடு மாவட்டத்தில் அல்லது மின்சாரத்தை நம்பியிருக்கிற பல்வேறு மாவட்டங்களின் நிலைமை பல்லாயிரக்கணக்கான ஏக்கர் சாவி. பல்லாயிரக்கணக்கான ஏக்கரில் பொன்னி போன்ற பயிர்கள் கதிர் வாங்காமல் இருக்கிறது. காரணம் கதிர் வாங்குகின்ற அந்த நேரத்தில் மின்சாரம் வரவில்லை. மின்சாரம் வராத ஒரு நிலைமையில் தண்ணீர் இறைக்கமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு பல்லாயிரக்கணக்கான ஏக்கர் ஏதோ பங்களாவிலே குரோட்டன் செடி பயிரிடுவது போன்று பயிர்கள் காயவில்லையே தவிர அதனுடைய பலன் விவசாயிகளுக்கு போகவில்லை. நாட்டிலே உற்பத்தி ஆக வேண்டிய உணவு நிலமை......

தகவல் கோரல்— தொடர்ச்சி.

(ஆ) அதிகாரிகள் மாடம் காலியாகயிருத்தல்.

திரு. துரைமுருகன். ஐ ஆம் ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார் மிக முக்கியமான இந்த மின்சார வாரிய பட்ஜெட் விவாதத்திலே அந்தத் துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஒருவர் கூட அதிகாரிகள் அமரும் இடத்தில் காணப்படவில்லை. அப்படி என்றால் இந்த சட்டசபைக்கு என்ன மதிப்பு; இங்குள்ள உறுப்பினர்களுக்கு என்ன மதிப்பு, அந்த அமைச்சருக்குத்தான் என்ன மதிப்பு. அந்த இலாக்கா சம்பந்தப்பட்டவர்கள் சீப்-இன்ஜினியர், அல்லது போர்டு சேர்மேன் யாரும் அந்த இடத்தில் இல்லை. இது இந்த அவையை மிகவும் துட்சமாக மதிக்கிறார்கள் அவர்கள் என்றுதான் அர்த்தம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதிகாரிகள் அவைக்கு வரவேண்டும் என்று அவசியம் கிடையாது. அவர்களுக்கு இடம் போட்டிருக்கிறது. அவர்கள் வராவிட்டால் அது ஒரு குறையாக சொல்லவேண்டாம். அமைச்சர் சொன்னால் அவர்கள் வந்துவிடப்போகிறார்கள்.



திரு. துரைமுருகன்: அதிகாரிகள் ஹவுஸ்க்கு வரக்கூடாது என்று தாங்கள் தீர்ப்பு வழங்குவது அவ்வளவு நல்லது அல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: அது தீர்ப்பு அல்ல. அமைச்சருக்கு உதவி புரியவேண்டும் என்ற முறையில் அவர்கள் வருகிறார்கள். அவைக்கு உதவி செய்வதற்கு அவர்கள் வரவில்லை.

திரு. துரைமுருகன்: வழக்கமாக சட்டமன்ற நடவடிக்கைகள் நடக்கும்போது உறுப்பினர்கள் பேசும்போது அமைச்சருக்கே எல்லா விவகாரமும் தெரியாது. ஒரு இலாக்காவிலே சம்பந்தப்பட்ட விவகாரங்கள் அத்தனையும் கற்று உணர்ந்த கலைமகளின் மகன் அல்ல அமைச்சர்கள். ஆகவே அவர்கள் வராதது இந்த அவையை அவமானப்படுத்துவது போல் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதில் இந்த அவையை அவமானப்படுத்துவது எதுவும் இல்லை.

மாண்புமிகு திரு. ச. இராமச்ந்சதிரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் இல்லாமல் இருந்தால்தான் அவையை அவமதிப்பது போல் ஆகும். அதிகாரிகள் இல்லாவிட்டால் அவையை அவமதிப்பது போல் ஆகாது. இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் உரை ஆற்றிய பிறகு அது முடிந்து அதற்கு பிறகு மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை விவாதத்திற்கு வர இருந்தது. ஆகவே அவர்கள் தயாராகத்தான் இருந்தார்கள். முதலமைச்சர் அவர்கள் உரை முடிந்த பிறகு அதிகாரிகள் இப்போது வந்துகொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிகாரிகளைப் பார்த்து பேசவேண்டாம்; அமைச்சர்களைப் பார்த்து பேசினால் நிச்சயமாக அக்கறை காட்டப்படும், நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனிப்பட்ட மின்சார அமைச்சர் அவர்களைப்பற்றி அல்ல விவாதம், அவர் இந்த சப்ஜெக்ட்டைப் பற்றி நன்கு தெரிந்தவர். அவரைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. ஒட்டுமொத்தமாக அவை நிகழ்ச்சியைப் பற்றி சொல்கிறேன். பொதுவாக இந்த மின்சாரத் துறை பட்ஜெட் மிகவும் முக்கியமானது. அதுவும் மற்ற விவாதங்கள் நடக்கும்போது அந்த இலாக்கா அதிகாரிகள் —— இப்போது அதிகாரிகள் வந்துவிட்ட காரணத்தால் இந்த பிரச்சனையை இத்துடன் விட்டுவிடலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## 8. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை—

விவாதம்—தொடர்ச்சி.

(நண்பகல் 12—00)

திரு. பெ. சு. திருவேங்கடம். (தொடர்ச்சி) துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மின்வாரியம் அனல் மின் நிலையங்களிலே சரியான நடவடிக்கை எடுத்து அல்லது பழுதடைந்த மெஷின்களை உடனடியாகப் பழுதுபார்க்கத் துரித நடவடிக்கையை மேற்கொண்டிருக்குமானால் தமிழகம் இந்த நிலைக்கு வந்திருக்காது. எங்களுடைய மாவட்டங்களில் சம்பா பயிர் காய்ந்ததற்குப் பிறகு விவசாயிகள் எல்லாம் கூச்சல் எழுப்பியதற்குப் பிறகு அந்தக் கூச்சல் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சருடைய செவிக்கு எட்டியதற்குப் பிறகு 29—12—1982 இல் தொழிலுக்கும் நூறு சதவீத மின்வெட்டு என்றும் விவசாயத்திற்கு தினசரி 6 மணி நேரம் மின்சாரம் தரப்படும் என்றும் ஒரு அறிக்கையை அரசாங்கம் உத்திரவாக வெளியிட்டதற்குப் பிறகு இன்றைய தினம் ஓரளவிற்கு விவசாயம் காப்பாற்றப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிந்துகொண்டிருக்கிறேன்.

ஆனால் இந்த அரசாங்கம் தன்னுடைய கடமையை காலத்திலே செய்திருக்குமானால் அந்த மாவட்டங்களிலே பல்லாயிரக்கணக்கான ஏக்கர் சாவியாவதைத் தவிர்த்திருக்க முடியும், அதேபோன்று பல்லாயிரக்கணக்கான ஏக்கர் கதிர் வாங்காமல் அப்படியே போய்விட்டதே அதைத் தவிர்த்திருக்க முடியும். 29—12—1982 ஆம் தேதியிலிருந்து செய்த காரியத்தை ஒரு 15 தினங்களுக்கு முன்னதாக செய்திருந்தால் 100 சதவீதம் மின்வெட்டு தொழில்களுக்கு என்று கொண்டு வந்திருந்தால் ஓரளவிற்கு விவசாயம் காப்பாற்றப்பட்டிருக்கும். அதே நேரத்திலே உணவு உற்பத்தியும் அதிகமாக ஆகியிருக்கும். ஆனால் அப்படிச் செய்யாததால் இன்றைக்கு தொழிலும் பாதிக்கப்பட்டது, விவசாயமும் பாதிக்கப்பட்டது. ஏற்கனவே அரசாங்கத்திற்குத் தெரியும், இந்த ஆண்டு புனலில் மின்சார உற்பத்தி இல்லை. நமக்கு இருக்கிற ஒரே ஒரு வழி அனல் மின்நிலையங்களில் உற்பத்தியைப் பெருக்குவதுதான். ஆனால் அதற்கு நிலக்கரி தேவை. தேவையான நிலக்கரியை இந்த அரசு சேமித்து வைத்திருக்கவேண்டும். பழுதடைந்த மெஷின்களைப் பழுதுபார்க்க அங்கே இருக்கின்ற அதிகாரிகளே முதலிலே பார்க்கிறார்கள் —— நான் ஒரு குழுவிலே சென்றபோது அங்கே கேட்டேன் —— ஒரு மெஷின் பழுதடைந்துவிடுகிறது என்றால் உடனே அந்தப் பொறியாளர்கள் பார்த்து செய்யமுடியவில்லை என்றால் பிறகு தங்களால் முடியாது என்று இங்கே இருக்கின்ற மின்வாரியத் தலைமைப் பொறியாளர்களுக்கு எழுதி அவர்கள்



ஏன் உங்களால் முடியாதா என்று கேட்டு இவர்கள் எங்களால் முடியாது என்று சொல்லி அதற்குப் பிறகு வாரியத் தலைவரும் பொறியாளர்களும் பேசி அரசாங்கத்திற்கு அது வந்து மின்துறை அமைச்சருக்கு வந்து ஏன் உங்களால் முடியாதா என்று கேட்டு அதற்குப் பிறகு முதல் அமைச்சர் அவர்களுக்கு வந்து அவர்கள் உங்களால் முடியாதா என்று கேட்டு இப்படியே பழுது அடைந்த மெஷின்களைச் சரிசெய்வதற்கு மாதங்கள் அல்லது ஆண்டுக் காலம் ஆகிறது. இதனால் பழுதடைந்த நிலையிலேயே மெஷின்கள் இருந்ததால்தான் தமிழகம் இந்த நிலையில் இன்றைக்கு இருண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பிறகு பெல் நிறுவனத்திலிருந்து அதிகாரிகள் தூத்துக்குடிக்குச் சென்று இருக்கிறார்கள் என்ற நிலைமை தெரிகிறது. ஏன் முன்னதாகவே அரசாங்கமோ, வாரியமோ இதைச் செய்திருக்கக் கூடாதா என்றால் செய்திருக்கலாம்.

காரணம் அதனுடைய நிர்வாகத்தினுடைய கோளாறுகள் தான்; அவைகள் எல்லாம் காலத்தில் பழுது பார்க்கப்படவில்லை. அடுத்து நிலக்கரி இல்லை. எரி எண்ணெய் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்கிறோம் என்று கூட அரசாங்கம் சொல்கிறது. நிலக்கரி இல்லாமல் எத்தனை ஆண்டுகள் அந்த மெஷின்கள் மின்சார உற்பத்தியை நிறுத்தி வைக்கமுடியும்? மின்சார வாரியம் நடவடிக்கை எடுத்திருக்குமேயானால், எண்ணூர், தூத்துக்குடி உள்பட அனைத்து நிலையங்களும் தங்களுடைய உற்பத்தியை அதிகப்படுத்தி இருக்குமானால் தமிழகம் இன்று இருண்ட சூழ்நிலையில் வந்திருக்காது என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. அந்த நடவடிக்கைகளை எடுக்கத் தவறிய அரசாங்கத்தையும், மின் வாரியத்தையும் குற்றம் சாட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராமங்களில் தெருவிளக்குகள் அதிகமாக ஏற்படுத்தி இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் இன்று நிலைமை என்னவென்றால் 90 சதவீதம் தெருவிளக்குகள் எரிவதில்லை. அங்கு குண்டு பல்புகள் போடப்படுவதில்லை. மின்சாரம் வருகிறபோது விளக்குகள் எரிகின்றனவா என்றால் நிச்சயமாக இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவற்றை எல்லாம் நான்கு அடி குழல் விளக்குகளாக மாற்றப் போகிறோம் என்று சொல்வார்கள். தமிழகத்தில் இருக்கிற அத்தனை கிராமங்களிலும் நான்கு அடி குழல் விளக்குகளாக அவற்றை மாற்றவேண்டுமென்றால் எத்தனை ஆண்டுகள் ஆகும்? அவற்றை நிதி அறிக்கையிலே சொல்லவேண்டும்; அதேநேரத்தில் அவ்வாறு மாற்றப்படுமானால் அதை வரவேற்க அனைவரும் கடமைப்பட்டிருக்கிறோம். இன்று குண்டுபல்புகள் ஆங்காங்கு மாற்றப்படாமல் இருப்பதால் கிராமப்புறங்கள் இருண்ட பகுதியாக இருக்கின்றன. இந்த நிலையை மாற்றுவதற்கு பல்புகளை உடனடியாக மாற்றவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல இந்த அவையிலே மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு திட்டத்தை அறிவித்தார்கள். குடிசைக்கு ஒரு விளக்குத் திட்டம் என்று; இந்தத் திட்டத்தை மிக்க விளம்பரத்துடன் கூட இந்த அரசாங்கம் இந்த அவையில் கொண்டு வந்தார்கள். அதனுடைய நிலைமை என்ன? இன்றையதினம் பல்லாயிரக்கணக்கான அரிசன மக்களுடைய தங்கள் குடிசைக்கு விளக்கு வேண்டுமென்ற விண்ணப்பங்கள் கவனிக்கப்படாமலே இருந்து வருகின்றன. இந்த அரசாங்கத்திற்கு ஒரு வாடிக்கை; ஒரு திட்டத்தை கொண்டு வருவார்கள்; அதை பெரியதாக விளம்பரப்படுத்துவார்கள்; ஆனால் ஒரு காலக்கட்டத்தில் தான் செய்வார்கள். பிறகு தேவை என்று பொது மக்கள் விண்ணப்பித்தால் அதை செய்யமாட்டார்கள்; அதை அப்படியே விட்டு விடுவார்கள். அதுதான் பல்வேறு இலாக்காக்களிலும் இருப்பதைப்போல மின்சார வாரியமும் இன்றையதினம் குடிசையில் இருக்கிற ஏழை, எளிய மக்கள் பக்கத்து குடிசையில் எரிகிற விளக்கைப் பார்த்து தங்களுடைய குடிசைக்கும் விளக்கு வேண்டுமென்று விண்ணப்பித்திருந்தால் அதற்கு இணைப்பு கொடுக்கப்படுவதில்லை. இந்த நிலைமையை போக்க அரசாங்கம் அல்லது இந்த வாரியம் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று உங்கள் மூலமாக கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல குடிநீர் பிரச்சினை. ஒரு பக்கத்திலே கடுமையான வறட்சி. கடுமையான வறட்சி இருக்கிறபோது தண்ணீர் இருக்கிறபகுதிகளில், உதாரணத்திற்காக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். திருவண்ணாமலை நகரத்திற்கு பெண்ணையாற்றில் இருந்து தண்ணீர் வருகிறது. பெண்ணையாற்றில் ஓரளவிற்கு தண்ணீர் இருக்கிறது. பெண்ணையாற்றில் தண்ணீர் இருக்கிறதே, திருவண்ணாமலைக்கு தண்ணீர் வருகிறதா என்றால். இல்லை. என்ன காரணம்? பத்து, பதினைந்து நாட்கள் கூட திருவண்ணாமலை மக்கள் தண்ணீர் இல்லாமல் அவதிபட்டார்கள். என்ன காரணம்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மின்சாரத்தைப் பற்றி பேசுங்கள்; குடிதண்ணீரைப் பற்றி பேசுகிறீர்களே?

திரு. பெ. சு. திருவேங்கடம். துணைத்தலைவர் அவர்களே, மின்சாரத்தைப் பற்றிதான் பேசி வருகிறேன். தண்ணீர் ஏன் வரவில்லை என்றால் மின்சாரம் இல்லை. மின்சாரம் இல்லாததால் திருவண்ணாமலை நகரமன்றம் பொது மக்களுக்கு தண்ணீர் கொடுக்க முடியவில்லை. இன்றையதினம் தமிழகத்தில் வறட்சி காரணமாக நகராட்சி மன்றங்களிலும், ஊராட்சி மன்றங்களிலும் தண்ணீர் பிரச்னை இருக்கிறது. இதை தீர்க்கவேண்டுமென்றால் மின்சாரம் தேவை. மின்சாரம் தேவையென்று மின்துறை அமைச்சர் அவர்கள் திருவண்ணாமலைக்கு வந்தபோது கேட்டார்கள். அதற்கு தனியாக லைன் போடுகிறோம் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். திருவண்ணாமலைக்கு மட்டுமல்ல, கிராமங்களில் இருக்கிற ஊராட்சி மன்றங்களுக்கு



கூட இப்படி தனியாக லைன் போட்டு மின்சாரப் பற்றாக்குறை இருக்கிற காலக்கட்டங்களில் கூட குடிதண்ணீர் தவறாமல் கிடைக்க மின்சாரம் வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12–10)

இன்னொன்று. ஒரு காலத்திலே மின்சார வாரியத்தை நாம் பார்த்திருந்தால் தெரிந்திருக்கும், ஒரு தலைமைப் பொறியாளர்தான் இருந்தார். ஆனால், இன்றையதினம் மின்சார வாரியத்தினுடைய அலுவலகத்திற்குச் சென்றால், தலைமைப் பொறியாளர்கள் அதிகமாக இருக்கின்றார்கள். சரி, நிர்வாகம் செம்மையாக நடைபெறுகின்றதா என்றால் அதுவும் இல்லை. அதே போன்று, சூப்பரின்டென்டிங் இன்ஜினீயர்கள், அல்லது மாவட்டத்திற்கு வருவோமானால். டிவிஷனல் இன்ஜினீயர்கள், அல்லது உதவி டிவிஷனல் இன்ஜினீர்கள். இவர்கள்தான் அதிகமாக இருக்கின்றார்களே தவிர, பணியாற்றுகின்ற பணியாளர்கள் மிகமிகக் குறைவாக இருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதிகாரிகள் அதிகமாக இருந்து எப்படி பணியாற்ற முடியும்? பணியாளர்கள் வேண்டாமா? எனக்குத் தெரிந்தவரையிலே, தமிழகத்திலே பல்வேறு மின் திட்டங்களிலே இப்படித்தான் நிலைமைகள் இருக்கின்றன. உதாரணத்திற்கு, திருவண்ணாமலை மின் திட்டத்திலே மட்டும் ஹெல்ப்பர்கள், ஒயர்மென், எனக்குறைய — நான் சொல்கின்ற கணக்கில் கொஞ்சம் குறைவாகவோ, அதிகமாகவோ இருக்கலாம் — — ஆயிரம் பேருக்கு மேலாக பணியாளர்கள் இல்லாமல் இருக்கிறார்கள் என்றால் எப்படி அந்த மின் திட்டங்களிலே பணிகள் செம்மையாக நடைபெற முடியும்? கிராமங்களிலே இருக்கிற டிரான்ஸ்பார்மர்கள் ப்யூஸ் போனால் போடுவது யார்? உதாரணத்திற்காக, நம்முடைய அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக ஒன்று சொல்கிறேன். நார்த்தாம்பூண்டி என்ற கிராமத்திலே 303 சர்வீஸ்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 6 டிரான்ஸ்பார்மர்கள் அந்தக் கிராமத்திலே இருக்கின்றன. இரண்டு ஆண்டுக்காலமாக அந்தக் கிராமத்திலே, ஹெல்ப்பர்கள், ஒயர்மென் இல்லை. என்னிடத்திலே கூட அவர்கள் முறையிட்டு, நான் அதை திருவண்ணாமலை இ. இ. யிடம் பலமுறை சொன்னேன். திருவண்ணாமலையிலே இருக்கிற திட்டத்தில் மட்டுமல்ல தமிழகம் பூராவும் இப்படித்தான் நிலைமை இருக்கிறது. மின்சார வாரியத்தினுடைய பொருள்களுக்கு யார் பாதுகாப்பு? கிராமங்களிலே பல இடங்களிலே டிரான்ஸ்பார்மர்கள் எல்லாம் இருக்கின்றன. லைன்கள் செல்கின்றன. கம்பங்கள் இருக்கின்றன டிரான்ஸ்பார்மர்களில் ப்யூஸ் போனால், ஹெல்ப்பர் அல்லது ஒயர்மென்கள்தான் போடவேண்டும், அல்லது ஒரு பம்ப் செட்டுக்கு மின்சாரம் செல்லவில்லை, இணைப்புகள் சரியில்லையென்று சொன்னால், அவர்கள்தானே பார்க்கவேண்டும். ஆயிரக் கணக்கான ஹெல்ப்பர்கள், ஒயர்மென் இல்லையென்றால்,

மின்சார வாரியம் எப்படி சீரிழந்திருக்கிறது, அல்லது சீர்குலைந்து வருகிறது என்பதற்கு உதாரணமாக இவற்றைச் சொல்கிறேன். அப்படிப்பட்ட நிலைமையைப் போக்க மின்சார வாரியம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பற்றி ஒன்றிரெண்டு கருத்துக்களைக் கூறி முடித்துக்கொள்ள துணைத் தலைவர் அவர்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுபற்றி நான் சென்ற முறை கூட இந்த அவையிலே கூறியிருக்கிறேன். தமிழகத்திலே மின்சாரப் பற்றாக்குறை வரப்போகிறது என்றால், அதனுடைய அபாய விளக்கு, சிவப்பு விளக்கு எங்கே எரிகிறது என்றால், திருவண்ணாமலையிலேதான் முதலிலே எரிகிறது. திருவண்ணாமலையிலே இருக்கிற 5, 6 துணை மின் நிலையங்களுக்கு ஈரோட்டிலிருந்து சிங்காரப்பேட்டைக்கு மின்சாரம் அனுப்பப்பட்டு, சிங்காரப்பேட்டையிலிருந்து திருவண்ணாமலைக்கு மின்சாரம் அனுப்பப்பட வேண்டும். அடிக்கடி அங்கு ஆப் செய்துவிடுகிறார்கள். அதனால், அந்தப் பகுதியிலே இருக்கிற 3, 4 தாலுக்காக்கள் பாதிக்கப்படுகின்றன. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஈரோட்டிலிருந்து சிங்காரப்பேட்டைக்கு அனுப்பி, அங்கிருந்து திருவண்ணாமலைக்கு அனுப்பாமல், ஈரோட்டிலிருந்து திருவண்ணாமலைக்குத் தனியாக லைன் போட்டு, அதன்மூலம் திருவண்ணாமலைக்கு மின்சாரம் வந்து சேருமானால், சிங்காரப்பேட்டைக் குறுக்கீடு இல்லாமல், அந்தப் பகுதி காப்பாற்றப்படும். ஆகவே, தனி லைன் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாயுடுமங்கலத்திலே ஒரு துணை மின் நிலையம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றி பலமுறை எடுத்துச் சொல்லி, கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொண்டு வந்து, பேசி, இறுதியாக நாயுடுமங்கலத்திலே ஒரு துணை மின்நிலையத்தை அமைத்தார்கள். அதிலே, 5 எம். வி. ஏ. என்ற டிரான்ஸ்பார்மர் அமைத்திருக்கிறார்கள். அங்கு, எல்லா தேவைகளையும் பூர்த்தி செய்ய இன்னொரு 5 எம். வி. ஏ. அமைக்கப்பட்டிருக்க வேண்டும். நான் பல தடவை அமைச்சரிடம் கேட்டிருக்கிறேன். உடனடியாக அந்தத் துணை மின் நிலையத்திற்கு இன்னொரு 5 எம். வி. ஏ. என்ற ஒரு டிரான்ஸ்பார்மர் அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அடுத்து, நம்முடைய போரூர் துணை மின் நிலையத்தைப் பற்றி நான் இந்த நேரத்திலே நம்முடைய அமைச்சர் அவர்களுக்கும், மின்வாரியத்தினுடைய தலைவருக்கும் உங்கள் மூலமாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். போரூர் ஒரு காலத்திலே 33 கே.வி யாக இருந்தது. பிறகு 66 கே. வி. யாக மாற்றினார்கள். பிறகு, 110 கே. வி. யாக மாற்றினார்கள். விரிவாக்கப்பணிக்கான நடவடிக்கை மின்சார வாரியம் எடுத்தது, ஆனால், அங்கு இடம் போதவில்லை.



அதை உடனடியாகச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் உள்ள ஆதமங்கலத்தில் துணை மின் நிலையம் அமைக்கின்ற பணி நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் இங்கே தரப்பட்டிருக்கின்ற அறிக்கையிலே ஒரு தவறான தகவல் தரப்பட்டிருக்கிறது. அதற்கான சாத்தியக்கூறு இல்லை என்று அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள். அந்த ஆதமங்கலத்திற்கு மின்சாரம் செல்ல வேண்டுமென்றால் போரூர் துணை மின் நிலையம் விரிவாக்கப்பட வேண்டும். இந்த விரிவாக்கப் பணி முடிந்தால்தான் ஆதமங்கலத்திற்கு மின்சாரம் தர முடியும். ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் போரூர் துணை மின் நிலையத்தினை உடனடியாக விரிவுபடுத்துவதற்கான பணியைச் செம்மைப்படுத்தி, அந்தப் பகுதிக்கு நல்லமுறையில் மின்சாரம் கிடைக்கவும், ஆதமங்கலத்திற்கு மின்சாரம் செல்லவும் வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

*திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1982–83 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீதும், 1981–82 ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கையின் மீதும் மாண்புமிகு மின்துறை அமைச்சரவர்கள் கொடுத்திருக்கின்ற அறிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

ஒரு நாட்டினுடைய வளர்ச்சியில் மின் வசதியின் பங்கு எப்படியிருக்கிறது என்பதை நன்றாக உணர்ந்து, தமிழகத்தை மின் பற்றாக்குறையிலேயிருந்து மீட்டு தன்னிறைவு பெற்றதாக வைக்க வேண்டுமென்ற அடிப்படையிலே மின் துறை சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டு வருகிறது.

தமிழக அரசு மின் வளர்ச்சிக்காக எந்த அளவிற்குச் சிறப்புடன் பணியாற்றி வருகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாகத்தான், தனது ஆண்டுச் செலவில் 35 சதவீதத்தை மின் துறைக்கு ஒதுக்கியிருக்கிறது. அதேசமயத்தில் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மின் வளர்ச்சிக்கு முதன்மை அளிக்கும் வகையில் 1,023 கோடி ரூபாயை மின்சாரத்திற்காகச் செலவிடுவதற்கு அரசு முனைந்து செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு எதிர் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் என்னுடைய மரியாதைக்குரிய மாண்புமிகு திருவேங்கடம் அவர்கள் மின் துறை சீர்கெட்டிருக்கிறது என்று எடுத்து சொன்னார்கள், இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்தவரையில் மின்துறை சீர்கேடு அடைந்ததை மாற்றுகின்ற அளவிற்குச் சிறப்பாகச் செயல்படும் அளவிற்கு ஒரு சாதனையை தமிழக அரசு இன்று செய்து முடித்திருக்கிறது.

தமிழகத்திலே மின் பற்றாக்குறை இருந்தது என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அந்த மின் பற்றாக்குறையைப் போக்கும் அளவில், இன்றைக்குக் கிராமப்புறங்களில் வாழும் விவசாயிகள் ஆறு மணி நேரம் மின்சாரத்தை நல்லமுறையில் பயன்படுத்துகின்ற அளவிற்கு அரசு ஒரு வழியை வகுத்து கொடுத்திருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள், தொழில்களே நசிந்துவிடுகின்ற அளவிற்கு இந்த அரசு முடிவெடுத்திருக்கிறது என்று சொன்னார்கள். பெரிய தொழில்களுக்கு மின் வெட்டை அமல்படுத்திய பிறகுதான் இன்றைக்குத் தமிழகம் முழுவதும் ஏறத்தாழ பத்து இலட்சம் பம்பு செட்டுகளுக்குச் சீரான அளவிற்கு மின் வசதியை அளிக்கின்ற திட்டத்தைத் தமிழக அரசு செயல்படுத்திக்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினரவர்களுக்கு நன்றாகத் தெரியும். தமிழகத்தைப் பொறுத்தவரையில் வடகிழக்குப் பருவமழையும், தென்மேற்குப் பருவமழையும் தவறியதால் தமிழகத்திலே என்றுமில்லாத அளவிற்கு வறட்சி தலை விரித்தாடிக் கொண்டிருக்கிறது. அதன் விளைவாக புனல் மின் உற்பத்தி முழுவதும் குறைந்திருக்கிறது. இந்த நேரத்தில் புனல் மின் நிலையங்கள் சக்தியை இழந்து விட்டிருக்கும் நிலையில், தமிழக அரசு துணிந்து அனல் மின் நிலையங்களை நம்பித் தமிழகத்திலே வாழும் மக்களுக்கு ஒளியை வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து இந்த நேரத்திலே மாண்புமிகு மின் துறை அமைச்சரவர்களுக்கும், மின் துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனல் மின் நிலையங்கள் என்ன செய்யுமோ என்று ஏங்கியிருந்த நேரத்தில் துணிந்து செயல்பட்டு, தூத்துக்குடி அனல் மின் நிலையத்தினை 15 நாட்களுக்குள்ளாகச் சீரமைத்து இன்றைக்கு நிலைமைகளைச் சீர் செய்திருக்கிறது. பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையம், எண்ணூர் அனல் மின் நிலையம், தூத்துக்குடி அனல் மின் நிலையம் போன்ற அனல் மின் நிலையங்களின் மூலமாகத் தமிழகத்திற்கு ஒளி தந்து கொண்டிருக்கிறது. அந்த அனல் மின் நிலையங்களுக்குக் கூட நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள், சற்றுமுன் பேசியவர்களாக இருந்தாலும் சரி, அல்ல ஆளுநர் உரையிலே பேசியவர்களாக இருந்தாலும் இந்த அரசு மின் துறையை நிர்வகிப்பதில் சரியான வழிமுறைகளைக் கடைப்பிடிக்கவில்லை என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன், இயற்கையாக நடைபெறுவதைச் செயற்கையைப் போலக் காட்டுவதில் நீங்கள் எந்த அரசியலைக் கண்டுவிட போகிறீர்கள்?



இப்பொழுது தமிழகத்திலே நிலைமை மாறியிருக்கிறது இயற்கை ஒத்து வரவில்லை. இருந்தாலும் அதை எதிர்த்து அரசு துணிந்து செயல் பட்டு வருகிறது என்றால் அதைப் பாராட்டுவதை விட்டுவிட்டுக் குறைகளையும், குற்றங்களையும் சொல்வதாக இருந்தால் அது எந்த வகையில் நியாயமாக, நேர்மையாக இருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

(பிற்பகல் 12–20)

எதிர்கட்சி என்று சொல்லுகின்றபோது ஆக்கபூர்வமான பணிகளுக்கு உங்களுடைய அறிவுரையை எடுத்துச் சொல்ல வேண்டும். ஆனால் அதற்கு மாறாக ஆத்திரப்பட்டு மின் துறையைச் சாடுவதும், இந்த அரசைச் சாடுவதும் என்ன நியாயம் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும்.

அதுமட்டுமல்ல, தமிழகத்தைப் பொருத்தவரையில் இன்றைக்குத் தமிழகத்திலே புதிதாக புனல் மின் நிலையம் அமைப்பதற்கு எந்தவிதமான சாத்தியக்கூறும் இல்லை. அதே நேரத்தில் புதிதாக அனல் மின்நிலையம், அணுமின் நிலையம் அமைப்பதன் வாயிலாக தமிழகத்தை வருங்காலத்திலே நாம் காப்பாற்றுவதோடு மட்டுமல்லாமல், அவற்றை நிறைவேற்றுவதற்காகக் கூடிய காலகட்டத்திலே இருக்கின்றோம். இப்படிப்பட்ட திட்டங்கள் சிறப்பாக நடைபெறவேண்டுமென்றால் அரசு எப்படி சிறப்பாக செயல்படவேண்டும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். இன்றைக்கு மின் பற்றாக்குறை என்பது தமிழகத்திலே மட்டுமல்ல. இது ஒரு நாடு தழுவிய பிரச்சினையாக இருக்கின்றது. இன்றைக்குத் தன்னிறைவுபெற்றுயிருக்கின்ற கேரள மாநிலமும் மின்வெட்டை அறிவித்திருக்கிறது. கர்நாடக மாநிலமும் மின்வெட்டை அறிந்திருக்கிறது. வடநாட்டிலே பல மாநிலங்களிலே மின்வெட்டு அமலில் இருக்கிறது. ஆகவே தமிழ்நாட்டிலே மட்டும் தனிப்பட்ட முறையிலே இந்த பற்றாக்குறை இருப்பதுபோல, அரசின் மீது குற்றம் சாட்டுவதை தயவு செய்து எதிர்கட்சியிலே இருப்பவர்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும். மக்களுடைய ஆதரவைப் பெறவேண்டும் என்று, அவர்களுடைய அனுதாபத்தை பெற வேண்டும் என்ற காரணத்தினால் மக்களுடைய பரிதாபத்திற்கு ஆளாகிற நிலையை நீங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்பதை இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே மின்துறையைப் பொறுத்தவரையில் மைய அரசிலே இருந்து வருகிற வல்லுநர்கள் எந்த அளவுக்குப் பாராட்டி இருக்கிறார்கள் என்பதைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். 'தமிழகத்தில் மின் உற்பத்தியை அளிப்பதற்கான முன்னோடி திட்டங்களை சிறப்பாக எடுத்துச் சொல்லி

இருக்கிறது என்று பாராட்டி இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல அனல் புனல் மின் நிலையங்கள் தன்னிறைவு பெருகின்ற அளவுக்கு செயலாற்றுகின்றது, என்று மத்திய அரசில் இருந்து வந்த வல்லுநர்கள் பாராட்டியிருக்கிறார்கள். ஆகவே. இந்த அரசு எந்தவகையிலே மின் துறையிலே சீர்கேடடைவதற்குக் காரணமாக இருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு மின்வசதி இன்னும் சிறப்பாக செயல்படவேண்டுமானால் பல அரிய திட்டங்களை செயல்படுத்தியாகவேண்டும். அதைச் செயல் படுத்துவதற்கு மத்திய அரசு முன் வரவேண்டும். இன்றைக்கு மத்திய அரசு கிடப்பிலே போட்டுள்ள பல திட்டங்கள் செயல் படாமல் இருக்கின்றது. அதுமட்டுமல்ல. மைய அரசினுடைய ஒரு சில கொள்கை மாநில அரசுகளைப் பாதிக்கின்ற அளவிற்கு இருக்கிறது. மாநில அரசுகள் அனுப்புகின்ற எந்தத் திட்டமும் செயல்படுத்தப்படாத அளவுக்குத் தடை இருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கு மத்திய அரசு ஒரு வரைமுறை, நெறிமுறையை அமைத்திருக்கிறது.

தமிழகத்தில் மின் பற்றாக் குறை இருக்கிறது. நம்மைப் பொருத்தவரையில் இந்த மின்பற்றாக்குறை விகிதாசாரத்திலே பெரும்பேரன மின்நிலையங்களில் இருந்து மின் வசதி அளிக்க வேண்டுமே தவிர, நிதி உதவியின் அடிப்படையிலே மின் வசதி அளித்தால் பற்றாக்குறை மாநிலங்கள் நிச்சயமாகப் பாதிக்கப் படும் என்பதை இந்த நேரத்தில் கோடிட்டுக் காட்டவிரும்பு கிறேன்.

ஆசவே மத்திய அரசு மாநில அரசின் அதிகாரங்களைப் பறித்துவிடாமல் இதுபோன்ற திட்டங்களை எல்லாம் மாநிலங் களின் பற்றாக்குறையை விகிதாசாரத்தின் அடிப்படையிலே மின் வசதியை அளிப்பதற்கு முன் வரவேண்டும். அதுமட்டு மல்ல மின் நிலையங்கள் மின்வாரியங்கள் அனைத்தையும் ஒரே துறையின் கீழ் கொண்டு வருவதற்கு மத்திய அரசு முடிவு செய்திருப்பதாக சென்ற ஆண்டு மத்திய அரசின் எரிசக்தி செயலாளர் அவர்கள் ஒரு அறிக்கையிலே வெளியிட்டிருந்தார்கள். இதுபோன்ற நிலைமை ஏற்பட்டுவிட்டால் நிச்சயமாக மாநிலங் களுடைய உரிமை பறிக்கப்பட்டுவிடும். மாநில நலன்கள் பாதிக்கப்படும். அந்த அளவுக்கு இல்லாமல் மாநில அரசுகள் என்ன பணிகளைச் செய்கின்றதோ அந்தப் பணிகளுக்கு உறு துணையாக அவர்கள் இருந்தாகவேண்டும். ஒரே துறையின் கீழ் கொண்டு வருவதற்கான முயற்சியிலே அவர்கள் ஈடுபடுவதைவிட மாநில சர்க்காருக்குள்ள பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் அவர்கள் நாட்டம் செலுத்த வேண்டும். உதாரண



மாக ஓகேனக்கள் நீர் மின் திட்டம் கடந்த 10 ஆண்டுகளாக செயல்படுத்தப்படாமல் இருக்கின்றது. கர்நாடக அரசும் தமிழக அரசும் இன்றைக்கு ஒன்று பட்டுச் செயல்படுவதற்கு ஏற்கனவே முடிவெத்து பிறகு, இன்றைக்குத் திடீரென்று கர்நாடக அரசு ஓகேனக்கல் மின்திட்டத்திற்குப் பதிலாக மேலதாடு திட்டத்தை செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதன் வாயிலாக மின் பற்றாக்குறை இருக்கிறது. தமிழகம். கர்நாடகம் இரண்டையுமே பாதிக்கின்ற அளவுக்கு இன்றைக்கு நிலைமை போய்க்கொண்டிருக்கிறது. இதுபோன்ற விஷயங் களிலே மத்திய அரசு தலையிட்டு அதிலே பரிந்துரையை காண வேண்டுமே தவிர, மாநில அரசினுடைய அதிகாரத்திலே கைவைப் பதும் அவர்களுடைய உரிமைகளை பாதிக்கக்கூடிய அளவுக்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதும் மத்திய அரசு நிச்சயமாக கைவிடவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்,

இன்றைக்கு நம்முடைய அரசாங்கத்தின் சார்பாக, மின் துறையின் சார்பாக மத்திய அரசின் அனுமதி கோரி பல செயல் திட்டங்கள் அனுப்பப்பட்டு இருக்கின்றன. தமிழகத்தில் எரி வாயு மூலம் மின்சாரம் ஏறத்தாழ 300 மெகாவாட் உற்பத்தி செய்வதற்காக மத்திய அரசின் அனுமதியை நாம் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறோம். ஆனல் அந்நிய செலாவணி அதிகமாகும் என்பதால், எரிவாயுவை இறக்குமதி செய்ய மத்திய அரசு நமக்கு அனுமதி அளிக்கவில்லை. அதேநேரத்தில் மராட்டிய மாநிலத்திற்கு அனுமதி அளித்து இருக்கிறார்கள். ஆகவே, எரிவாயு இறக்குமதி செய்ய மத்திய அரசு உடனடியாக அனுமதி வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அனல் மின்நிலையங்களைப் பொறுத்தவரையில் தமிழகம் வருங்காலத்தில் மின்துறையில் பாதிக்கப்படும் நிலை இருக்கின்ற காரணத்தால்—1,500 மெகாவாட் திறன்கொண்ட வடசென்னை அனல் மின் நிலையம், மற்றும் 210 மெகாவாட் திறன் கொண்ட தூத்துக்குடி அனல் மின்நிலையத் திட்ட விரிவாக்கம் ஆகிய வற்றிற்கு மத்திய அரசு அனுமதி வழங்கவேண்டும்.

புனல் மின் நிலையம் தமிழகத்திலே ஒன்றே ஒன்று எடுத்துச் சொல்லப்பட்டு இருக்கிறது. அது பைகாரா இறுதிகட்ட நிலையம். அதன் மூலம் 100 மெகாவாட் அளவிற்கு மின் உற்பத்தியை நாம் பெறமுடியும். அதை உடனடியாகச் செயல் படுத்தவேண்டும்.

அணு மின் நிலையத்தைப் பொறுத்தவரையில், கல்பாக்கம் 1974—ல் முடிந்து இருக்கவேண்டியதாகும். ஏறக்குறைய 10 ஆண்டுக்காலமாக அது முடியாமல் இருக்கிறது. அதற்கு வெளிநாட்டினரை நாம் காரணம் காட்டினாலும்கூட அதைத் துரிதமாகச் செயல்படுத்த மத்திய அரசாங்கம் முயற்சிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டம் கூடங்குளத்தில் இரண்டாவது அணு மின் நிலையம் ஏற்படுத்த தமிழக அரசு அனுமதி கேட்டுள்ளது. அதைச் செயல்படுத்த மத்திய அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், இன்றைக்கு மாநில மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில், நிதி நெருக்கடிக்கு மிகவும் ஆளாக்கப்பட்டு இருக்கிறது. குறைந்த மின் கட்டணம் வசூலிக்கும் மாநிலம் நம்முடைய தமிழக மாநிலம் தான். குடிசைகளுக்கு இலவசமாக மின்சாரம் தருவது நம்முடைய மாநிலம் தான். தமிழகத்தில் இப்படிப்பட்ட திட்டங்களை அரசு செயல்படுத்தினாலும் இன்று மின் வாரியம நிதி நெருக்கடி காரணமாகத் திண்டாடும் நிலையில் இருக்கிறது. இந்த நிலை போக்கப்படவேண்டுமானால், மத்திய அரசு உதவி எதிர்பார்க்கவேண்டியிருக்கிறது. திட்டக் கமிஷன் அறிவித்து இருப்பதுபோல் மின் கட்டண விகிதங்களை கண்டிப்பாக உயர்த்த வேண்டிய நிலைமையைத் தவிர வேறு வழியில்லை. ஆகவே, அரசு அதிலே நாட்டம் செலுத்த வேண்டும். மேலும், அதற்குக் காரணம், மின் வாரியம் 1970 ஆம் ஆண்டில் இருந்தே நஷ்டத்தில் இயங்கிக்கொண்டு இருக்கிறது. இந்த ஆண்டு கூட கிட்டத்தட்ட 125 கோடி இழப்பு வந்து இருக்கிறது. இதை கவனித்து நடந்தால் மின் வாரியத்திற்கு மீண்டும் புத்துயிர் கொடுக்க வாய்ப்பு, வழி இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

தமிழகத்திலே தான்—இந்தியாவிலேயே—குறைந்த மின் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது இது நன்கு புலனாகும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: மின் கட்டணத்தை உயர்த்தவேண்டும் என்று சொன்னார்கள். விவசாயிகளுக்கும் மின் கட்டணம் உயர்த்தவேண்டும் என்று உறுப்பினர் சொல்கிறாரா?

திரு. தி. அன்பழகன். மின் கட்டணம் உயர்த்தவேண்டும் என்று குறிப்பிட்டு விவசாயிகளுக்குமட்டும் என்று சொல்லவில்லை. இன்றைக்கு தமிழக மின்வாரியம் பாதிக்கப்பட்டு இருப்பதால். அதை ஓரளவிற்கு ஈடுகட்டியாக வேண்டும். மேலும் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது நம் மின் கட்டண விவரம் குறைவாக இருக்கிறது. விவசாயிகளுக்கு மட்டும் உயர்த்தவேண்டும் என்று சொல்லவில்லை.

திரு .வி. கிருஷ்ணமூர்த்தி. தமிழக விவசாயிகளுக்கு மின் கட்டண உயர்வு செய்யவேண்டும் என்பது உங்கள் கொள்கையா;





*திரு. தி. அன்பழகன். தமிழகத்தில் விதிக்கப்படுகின்ற கட்டணம் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது குறைவாக இருப்பதால், மின் கட்டண உயர்வு வேண்டும் என்று சொன்னேன் குறிப்பாக நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்று விரும்பினால், நிலைமைகளுக்குத் தக்கவாறு அரசும், மின் துறையும் செயல்படும், என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அதேநேரத்தில் இன்றைக்குத் தமிழகத்தில் எவ்வளவு குறைவாக நாம் மின்சாரம் வழங்கிக்கொண்டு இருக்கிறோம் என்பதைப் பார்க்கவேண்டும். உதாரணத்திற்கு சிலவற்றைச் சொல்கிறேன். மேற்கு வங்காளத்தில் 28 காசு, உத்திரப் பிரதேசத்தில் 27 காசு, கருநாடகத்தில் 24 காசு, பீகாரில் 22 காசு, அரியானாவில் 22 காசு, மாராட்டிய மாநிலத்தில் 23 காசு, ஆந்திரப் பிரதேசத்தில் 21 காசு, பஞ்சாப்பில் 21 காசும், ராஜஸ்தானில் 21 காசும், என்ற வகையில் மின் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இதை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது மின் வாரியத்தின் இழப்பை ஈடுகட்டுவதற்கு மின் கட்டணத்தை உயர்த்தலாம் என்று சொன்னேன். உயர்த்தித்தான் ஆக வேண்டுமென்று சொல்லவில்லை. வேறு வகைகளிலும் இந்த இழப்பைச் சரிகட்ட அரசு நடவடிக்கைகள் எடுக்கலாம் என்று சொல்லிக்கொள்கிறேன்

(பிற்பகல் 12–30)

இன்றைக்கு மின் உற்பத்திக்குத் தேவையான அனைத்துப் பொருட்களின் விலையும் ஏறிவிட்டது, மின் உற்பத்திக்குத் தேவையான பொருட்களின் மீது மத்திய அரசு வரியை அதிகமாக உயர்த்தியிருக்கிறது. நிலக்கரி விலை அதிகமாகி விட்டது. நிலக்கரி கொண்டுவரும் ரயில்வே வாகன கட்டணம் அதிகமாக இருக்கிறது. எரி எண்ணெயின் விலையும் அதிகமாக இருக்கிறது. இப்படி எல்லாம் பொருட்களின் மீது விலை உயர்ந்திருக்கிறது. அதை எல்லாம் மனதிலே கொண்டு நாம் இந்த மின்வாரியத்தைச் சிறப்பாகச் செயல்படச் செய்ய வேண்டும். ஆகவே, தமிழ்நாடு மின்சார வாரியம் சிறப்பாகச் செயல்பட, புதிய திட்டங்களை நிறைவேற்ற ஒருசில மாற்றங்களைச் செய்ய வேண்டிய காலகட்டத்தில் இருக்கிறது.

அது மட்டுமல்ல, இன்றைக்கு இந்த மின்வாரியத்திற்கு எவ்வளவு இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் 1976-77-ல் மின்வாரியத்தின் வரவு 188.13 கோடி ரூபாய். 1981–82-ல் வரவு 288,77 கோடி ரூபாய். அதே நேரத்தில் மின்சார வாரியத்தின் செலவு எந்த அளவுக்கு அதிகரித்திருக்கிறது என்பதையும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். 1976–77-ல் செலவு 210 கோடி ரூபாய். 1981-82-ல் செலவு 422.50 கோடி ரூபாயாக உயர்ந்துவிட்டது. மின்சார வாரியம் செயல்பட முடியாமல் போய் விடாமல் இருக்க விதித்திருக்கும் கட்டணங்களை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று அரசு சொல்லியிருப்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது.

குறிப்பாக விவசாயத்திற்கு பாதிப்பு ஏற்படாமல் அரசு ஏதோ ஒரு வகையில் இந்த மாற்றங்களைச் செய்யும் என்ற எண்ணம் எங்களுக்கு இருக்கிறது. தமிழ்நாடு மின்சார வாரியம் பல சாதனைகளைப் புரிந்திருக்கிறது. தமிழ்நாட்டிலே தெரு விளக்குகள் சரியாக இல்லை என்று சொன்னார்கள். இந்த அரசு குறைகளை நிவர்த்தி செய்கின்ற வகையில் குண்டு பல்புகளை மாற்றி, குழல் விளக்குகளைப் பொருத்தி, செயல்பட வேண்டுமென்று உத்தரவிட்டு, அதன்படி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்த அரசு இந்த மின்சாரத் துறையிலே எந்த அளவுக்கு சிறப்பாக, புரட்சிகரமாக சாதனைகளை செய்துவருகிறது என்பதை இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன். 31—3-82 வரையில் தமிழ்நாட்டில் 15,611 கிராமங்கள், 47468 சிற்றூர்கள், 25,955 ஆதிதிராவிடர் குடியிருப்புகள், 9,64,492 பம்பு செட்டுகள், 5'02,676 குடிசைகள் இவைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது எவ்வளவு சிறப்பாகச் செயல்படுகிறது என்பதை நம்மால் உணரமுடிகிறது.

அது மட்டுமல்ல. தமிழக அரசு இந்த மின்சார வாரியத்திலே எந்த அளவுக்கு 'லைன் லாஸை' குறைத்திருக்கிறது என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும். மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது தமிழ்நாட்டில் மின் இழப்பு மிகவும் குறைந்திருக்கிறது. அதே நேரத்தில் மற்ற மாநிலங்களில் இந்த அளவுக்கு பம்பு செட்டுகள் இல்லை; மின் இணைப்புத் தொடர் கம்பிகள் அதிகமில்லை. தமிழ்நாட்டில் இவ்வளவு அதிகமாக இருந்தும் லைன் லாஸ் 18.9 சதவீதம்தான். அதுவும் முந்தைய ஆண்டுகளில் இருந்ததைவிட படிப்படியாக குறைந்து வருகிறது. ஆகவே, இந்தத் துறையில் பல்வேறு பிரிவுகளும் சிறப்பாகச் செயல்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்- தலைமை)

அதே நேரத்தில் இன்றைக்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மேற்பார்வை பொறியாளர் இருக்கிறார். ஒரு மேற்பார்வை பொறியாளரின் கீழ் 6 முதல் 12 கோட்டப் பொறியாளர்கள் பணியாற்றுகிறார்கள். ஆனால் பணியாளர்கள் சம்பளம், பயணப்படி, கான்ட்ராக்டர் பில் போன்றவை எல்லாம் மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்தில்தான் பாஸ் செய்யப்படுகிறது. அந்த முறையை மாற்றி, அந்தந்த கோட்டப் பொறியாளர் அலுவலகத்திலேயே பாஸ் செய்யும் வழிமுறைகளை ஏற்படுத்தினால் பல சிரமங்கள் குறையும். நம்முடைய அரசு அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



இந்தத் துறையிலே புதிதாகச் செயற்பட்டு வரும் அட்டை பட்டியல் முறை மிகச் சிறப்பாக நடைபற்று வருகிறது. மின்சாரக் கட்டணம் சுலபமாக வசூல் செய்யப்படுகிறது. மேலும் சிறப்பாகச் செயல்பட இன்னும் சில ஊழியர்களை கூடுதலாக நியமித்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வரவேண்டும்.

இவ்வாறு சிறப்பாகச் செயல்படுகின்ற நேரத்தில், மின்சாரத்தைப் பயன்படுத்துகின்றவர்களுக்கு இருக்கிற சில குறைபாடுகளையும் அரசு கருத்திற்கொண்டு, நிவர்த்தி செய்ய தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இன்றைக்கு வேலூர் சிஸ்டத்தைப் பொறுத்தவரையில், திருப்பத்தூர், நாட்ராம்பள்ளி வட்டாரங்கள் வேலூர் சிஸ்டத்தில் இருக்கின்றன. அங்கே மின்சாரம் பெறுவதில் சில குறைப்பாடுகள் இருக்கின்றன. பயன்படுத்துவோர் அதனால் சிரமப்படுகிறார்கள். அந்த வட்டாரங்கள் வேலூர் சிஸ்டத்தில் இணைந்திருந்தாலும் தர்மபுரி சிஸ்டத்தில் இருக்கிற சிங்காரப்பேட்டையில் தான் கன்ட்ரோல் போர்டு இருக்கிறது. அங்கிருந்துதான் பிரித்து அனுப்புகிறார்கள். அதனால் வடாற்காடு மாவட்டத்தில் பக்கத்தில் இருக்கிற திருப்பத்தூர் பகுதி அடிக்கடி பாதிக்கப்படுகிறது. இந்த மின்சாரத்தைப் பிரித்தாளும்போதும், மாற்றியமைக்கும் போதும் எந்தவிதமான இடையூறும் ஏற்படாத வகையில் வேலூர் சிஸ்டத்திற்கு நேரடியாகக் கிடைக்கின்ற வகையில் தகுந்த முறையில் மின்சார வாரியம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுகொள்கிறேன்.

அதே நேரத்தில் கிராமங்களில் இளநிலைப் பொறியாளர் அலுவலகங்களை இன்றைக்கு இந்த அரசு வந்தபிறகு அமைத்திருக்கிறது. அவர்கள் அங்கே தங்கியிருப்பதற்கு வீட்டுவசதி இல்லை. அவர்களுக்கு கீழே பணியாற்றும் 'ஹெல்பர்'களுக்கும் அவர்களைப் போன்றவர்களுக்கும் வீட்டுவசதி இல்லை. திடீரென்று மின்சாரம் நிற்கும்போது, அல்லது மின் ஓட்டம் பாதிக்கின்ற போது, மின் தடை ஏற்படுவதால், அதைச் சரிசெய்வதற்காக மின் வாரிய தொழிலாளர்களை அழைக்க வேண்டிய நிலைமை கிராமங்களில் ஏற்படுகிற போது, அவர்களை உடனடியாகச் சென்று அழைக்க முடிவதில்லை. காரணம் அவர்கள் எங்கெங்கோ வெகு தூரங்களில் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தந்தப் பகுதிகளிலேயே அவர்களுக்கு வீட்டு வசதிகளைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்தவரையில் மின்துறையில் இப்படிப்பட்ட கடுமையான சூழ்நிலையிலும் மிகச் சிறப்பாக செயலாற்றிக் கொண்டு வருகிறார்கள் என்பதை மறுக்க முடியாது. ஆனாலும் மேலும் சிறப்பாகச் செயல்படும் அளவுக்கு மத்திய அரசை வற்புறுத்தி, பல புதிய திட்டங்களை தமிழகத்திற்குப் பெற்றுத் தந்து, நம் வருங்கால சந்ததியினரின் வாழ்விற்காகவும் தற்போதுள்ள நிலைமைகளை

சரிப்படுத்துவதற்காகவும், பல திட்டங்களை தீட்டி நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டு, மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களால் அவையில் அளிக்கப்பட்டிருக்கிற இந்த மின் நிதி நிலை அறிக்கையினை வரவேற்றுப் பாராட்டி, அமர்கிறேன். வணக்கம்.

*திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1982-83 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை குறித்தும், 1981—82 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை குறித்தும் காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்தை கூறவிரும்புகிறேன்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலமாக தமிழக மக்களுக்கு மின்சாரம் கொடுக்கப்படுகிறது. ஆனால் அவைகள் முறையே அனல் மின் நிலையம் புனல் மின் நிலையம் என்னும் இரண்டு நிலையங்களின் வாயிலாக உற்பத்தி செய்யப்படுகிறது. மேட்டூர் அனல் மின் நிலையம் 420 மெகாவாட் மின் சக்தி கொண்ட விரிவாக்கம் வட சென்னையிலும், தூத்துக்குடி அனல் மின் நிலையத்திலும் அமைப்பதற்கான திட்டத்திற்கு மைய அரசு 1981—ஆம் ஆண்டு ஒப்புதல் அளித்ததாக இதில் கூறப்பட்டுள்ளது. அதுபோலவே 6 எரிவாயு மின் நிலையங்கள் அமைக்கவும் ஒப்புதல் அளித்திருப்பதாகத் தெரிகிறது. இந்த விரிவாக்கத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

தற்போது தமிழக மக்களுக்கு மின்சாரம் என்பதே மிகக் கடினமான ஒன்றாக மாறிவிட்டது. அதுவும் சென்ற 1982 நவம்பர், டிசம்பர் மாதங்களில் மின் பாதிப்பு மிகவும் அதிகமாக இருந்தது. விவசாயிகளுக்கு பம்பு செட்டுகளுக்கு மின்சார இணைப்பு அறவே கிடைக்காத நிலை என்னுடைய தொகுதியில் இருந்தது. நவம்பர் மாதத்தில் கிட்டத்தட்ட மாலையிலும் இரவிலும் மின்சாரமே இல்லாத நிலை இருந்தது டிசம்பர் மாதத்திலும் அந்த நிலை தொடர்ந்தது மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களிடம் கூறிய பிறகு சில நாட்களில் சரி செய்யப்பட்டது அதுவரை விவசாய பெருங்குடி மக்கள் மிகவும் பாதிப்புக்குள்ளானார்கள். விவசாயம் செய்யப்பட்ட நெல், கரும்பு, குச்சி முதலிய பெயிர்கள் காய்ந்துவிட்டன இதன் காரணமாக எங்கள் பகுதியில் உள்ள ஏழை எளிய மக்கள் மிகவும் சிரமப்பட்டார்கள் எப்போது மின்சாரம் வரும் எப்போது போகும் என்பது தெரிய முடியாத நிலையில் இருந்தது. இந்த மாதத்திலிருந்துதான் ஓரளவு நிலைமை சரி செய்யப்பட்டு வருகிறது.

இதற்குக் காரணம் என்ன என்று அங்குள்ள சம்பந்தப்பட்டவர்களிடம் சென்று கேட்டால், தூத்துக்குடி மின்சார நிலையத்திலிருந்து, நெய்வேலி அனல் மின் நிலையத்திலிருந்தும்தான் நமக்கு மின்சாரம் அதிகம் வருகின்ற நிலை இருக்கிறது. அதில்



110 கே. வி. லைன் நெயவேலியிலிருந்து வருவதை நிறுத்தி விடுகிறார்கள். இதற்கு ஈரோட்டில் உள்ள மைய நிலையம்தான் பொறுப்பு என்கிறார்கள். ஆகவே, இதுபோன்று நெய்வேலியிலிருந்து வரும் 110 கே.வி. லைனையே முழுவதுமாக நிறுத்தி விட்டு, சேலத்திலேயிருந்து வருகிற லைனிலேயிருந்து மின்சாரத்தைக் கொடுத்தால் விவசாய பம்பு செட்டுகளுக்கு உதவியாக இருக்கும். ஆகவே அதனைச் செய்ய அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இந்தப் பகுதியிலே குச்சிக் கிழங்கு தொழிற்சாலைகள் ஆயிரக் கணக்கில் உள்ளன. அங்கே நவம்பர் மாதத்திலிருந்து மார்ச் மாதம் வரையில்தான் வேலைகள் நடைபெறும். ஆகவே அந்தத் தொழிற்சாலைக்கு மாதம் ஒன்றுக்கு ஆயிரம் யூனிட், இரண்டாயிரம் யூனிட் என்று கட்டுப்பாடாக போடாமல், ஒரு ஆண்டுக்குரிய கோட்டா முழுவதையும் அந்த நேரத்தில் அவர்களுக்குக் கொடுப்பதோடு, அந்தக் கோட்டாவை சற்று அதிகப்படுத்திக் கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சேலம், தர்மபுரி, வட ஆற்காடு மாவட்டம் போன்ற இடங்களில் எல்லாம் கிணற்றுத் தண்ணீர் மூலமாகத்தான் விவசாயம் செய்கிறார்கள். அங்கே தற்போது 6 மணி நேரத்திற்கு மின்சாரம் கொடுக்கப்படுகிறது. அவர்கள் அதிகமாக கிணறுகளைத் தோண்டுகிற நிலைமையும் தற்போதுள்ள நிலைமையில் அதிகமாயிருக்கிற காரணத்தால், அவர்களுக்கு இன்னும் அதிக நேரத்திற்கு மின் இணைப்பு அதிக நேரம் நீட்டித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிக் கொடுத்தால் அவர்களுடைய பாசனத்திற்கு அது வசதியாக இருக்கும்.

தூத்துக்குடி அனல் மின் நிலயம் அடிக்கடி பழுதடைந்து விடாது என்று கூறுகிறார்கள். அந்த தூத்துக்குடி அனல் மின் நிலையம் அப்படி பழுதடையும்போது திருவெறும்பூரில் உள்ள பெல் நிலையத்தினரை அழைத்து அதனை ரிப்பேர் செய்திருந்தால், உடனடியாக அந்த மின்சார நிலையம் பழுது பார்க்கப்பட்டு, நல்ல முறையில் எல்லோருக்கும் மின்சாரம் கிடைக்கும் வகையில் செயல்பட்டிருக்க முடியும். அப்படி ஒரு ஏற்பாட்டை செய்திருக்க வேண்டும். இனி இதுபோன்ற நிலை ஏற்பட்டால், பெல் நிறுவனத்தினரை அழைத்து உடனடியாக அந்த பழுதுபட்ட மின் நிலையத்தை ரிப்பேர் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் புதிதாக சில கிராமங்களில் எல்லாம் மின் இணைப்புக் கொடுத்து வருவதாகக் கூறப்பட்டுள்ளது. அனைத்துக் கிராமங்களும் இப்படி மின் இணைப்புப் பெறும் வகையில், மீதம் உள்ள மின் இணைப்பு வழங்கப்படாத கிராமங்களுக்கும், மின்சார இணைப்புக் கொடுக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் தெரு விளக்குகளிலிருந்து வீட்டுக்கு மின் இணைப்பாக வரக்கூடிய மின்சார கம்பிகள் எல்லாம் 10, 15 ஆண்டுகளுக்கு முன்பாக போடப்பட்டவையாக இருப்பதால், மின்சார விளக்குகள் சரியாக எரிவது இல்லை. அது மட்டும் அல்லாமல் தெருவில் போடப்பட்டிருக்கும் டியூப் லைட்டுகள், குண்டு பல்புகள் போன்றவைகளுக்கும் அந்த விளக்குகள் எரிவதற்காக போதுமான மின்சார ஒயர்கள் நல்ல பழுதடையாத ஒயர்கள் கொடுக்கப்படாத காரணத்தினால்தான், அந்தப் பகுதிகளிலே விளக்குகள் எரிவதேயில்லை.

(பிற்பகல் 12–40)

அங்கே விளக்கு எரியாததற்கு காரணம் புதிதாக ஒயர்களைக் கொடுக்காததுதான். அவற்றைப் பழுது பார்த்து விளக்குகள் எரிய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் இப்போது கிட்டத்தட்ட ஆயிரம் பேர்களை தற்காலிகமாக வேலைக்கு எடுத்தும் அந்த ஆயிரம் பேர்களும் தற்போது வேலையிலிருந்து போக வேண்டும் என்று நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருப்பதாகக் கூறுகிறார்கள். அதற்கு யாது காரணம் என்று தெரியவில்லை. எனவே அவர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டு அதன்பின் வேலையிலிருந்து அவர்களைப் போகச் சொல்வது நியாயம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து ஆதி திராவிடர்களுக்கு ஊராட்சியில் ஒரு மின் விளக்கு கொடுப்பது போன்று பேரூராட்சியிலும், நகராட்சியிலும் தெரு விளக்கு கொடுக்க வேண்டும் என்று இந்தச் சமயத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இப்போது தொழிற்சாலைகளுக்கு 30%, 45%, 60%, 70%, 100%, என்ற வகையிலே மின்சார வெட்டு கொடுக்கப்படுகின்றது. இந்த நிலைமையினை சரி செய்கின்ற வகையிலே நடவடிக்கை எடுத்து எல்லாப் பகுதிகளுக்கும் போதிய மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். 1967 ஆம் ஆண்டுக்கு முன்பு காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே எல்லாவிதமான தொழிற்சாலைகளுக்கும், நல்ல முறையில் மின்சாரம் வழங்கப்பட்டது. ஆனால் இப்போது எதற்கு எடுத்தாலும் மத்திய அரசு கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். தற்போது கூட மத்திய அரசு ஓரளவுக்கு எல்லாவிதமான சலுகைகளையும் கொடுத்து எந்தெந்த வகையிலே உதவ முடியுமோ அவற்றை எல்லாம் உடனடியாகக் கொடுப்பதற்கு அவர்கள் முயற்சி செய்து கொடுக்க வேண்டும் என்று கூறியுள்ளார்கள். சிங்கேரணியில் இருந்து நிலக்கரியினை நல்லமுறையில் கொண்டுவர வேண்டும் என்று கூறுகிறார்கள். அவ்வாறு நல்ல முறையிலே நிலக்கரியினைக் கொண்டுவந்து நம்முடைய திட்டங்களை மேலும் மேலும் அதிகரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து இவ்வாண்டு வடகிழக்குப் பருவமழையும், தென் மேற்குப் பருவ மழையும் பொய்த்துவிட்ட காரணத்தால் நீர் மின் உற்பத்தி குறைந்துள்ளதாகக் கூறியிருக்கிறார்கள், 1981-82 ஆம் ஆண்டில் புனல் மின் உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டதைவிட இந்த ஆண்டு பாதிப்பு கூடியிருக்கின்றது,

அடுத்து சேலத்தில் ஆத்தூர் பகுதியில் 13 ஆயிரம் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படாமல் உள்ளது. சேலம் நகரத்தில் 24 மணி நேரமும் மின்சாரம் சரியாக இருக்கின்றது. ஆனால் ஆத்தூர் வட்டத்திலே மட்டும் மின்சாரம் சரியாக கொடுக்கப்படவில்லை. அந்தப் பகுதியிலே கிட்டத்தட்ட 10, 15 ஆயிரம் பம்புசெட்டுகள் வைத்து விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். எனவே அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அதிகமாக மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மின்சார இணைப்புக் கேட்டு ஆத்தூர் வட்டத்திருந்து வந்த 13 ஆயிரம் விண்ணப்பங்கள் 1969 முதல் இருந்து நிலுவையில் உள்ளன அந்த விண்ணப்பங்களை உடனடியாகப் பரிசீலனை செய்து அவர்களுக்கு மின்சாரம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஏழை எளிய மக்களுக்கும் ராணுவத்தில் இருந்தவர்களுக்கும், ஊனமுற்றவர்களுக்கும் உதவுகின்ற வகையிலே மின்சார பம்புசெட்டுகளுக்கு மின்சாரம் அளிக்கின்ற வகையிலே கொடுக்கப்படுகின்ற சலுகைகளை தனிச் சலுகையாக உடனடியாகக் கொடுக்கவேண்டும்.

அடுத்து மலைவாழ் மக்களின் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பதில் முன்னுரிமை கொடுக்க வேண்டும். மலைப் பகுதியிலே உள்ளவர்களுக்கு நீண்ட காலமாக மின்சாரம் வழங்கப்படவில்லை, எனவே உடனடியாக அந்தப் பகுதி மக்களுக்கு மின்சாரம் வழங்கவேண்டும்.

அடுத்து ஆத்தூர் வட்டத்திலே தம்மம்பட்டியிலே ஒரு துணை மின் நிலையத்தை ஏற்படுத்துவதற்குரிய ஏற்பாடு செய்யவேண்டும், அப்போதுதான் ஆத்தூர் பகுதியிலே மின்சார அழுத்தம் நல்ல முறையிலே கிடைக்கும், அங்கே மின்சாரம் சரியாக வராததால் நவம்பர், டிசம்பர் மாதங்களில் கிட்டத்தட்ட ஆயிரக்கணக்கான மோட்டார்களின் காயில்கள் தீய்ந்து விடுகின்றன. இதனால் அங்குள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலைமையில் எண்ணூர், தூத்துக்குடி, ஆகிய இடங்களிலுள்ள அனல் மின் நிலையங்களை நல்ல முறையில் செம்மைப்படுத்தி உடனடியாக மின்சார உற்பத்தி நல்ல முறையில் செய்வதற்கு ஏற்பாடு செய்து எல்லாப் பகுதிகளுக்கும் சரிவர மின்சாரம் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சி. பழனிமுத்து] [1983 பிப்ரவரி 4

அடுத்து பல இடங்களில் போதிய பணியாளர்கள் இல்லை. மேட்டூர் பகுதியிலே ஒரு ட்ரான்ஸ்பார்மர் ப்யூஸ் ஆகிவிடுகின்றது என்றால் உடனடியாக அவற்றை பழுது பார்க்க உரிய ஆட்கள் இல்லை. அடுத்து வேலைகள் மின்சார வாரியத்தில் வேலை செய்பவர்களுக்குக் கான்ட்ராக்ட் முறையில் கொடுக்கப்படுகின்றது. அதனால் வேலைகள் சரியாக நடைபெறுவதில்லை. ஆகவே பணியாளர்களை அதிகமாக நியமிக்க வேண்டும். மின்சார வாரியத்தில் இப்போது 13 சீப் இன்ஜினியர்கள் இருக்கிறார்கள். முதலில் ஒருவர் செய்த வேலையைத் தான் இப்போது இந்த 13 சீப் இன்ஜினியர்களும் கவனிக்கிறார்கள், ஆகவே மின்சார வாரியம் மொத்தத்திலே நல்ல முறையில் இருந்தாலும் இப்போது 13 சீப் இன்ஜினியர்கள் இருக்கிறார்கள். மற்ற மாநிலங்களில் இவ்வளவு பேர்கள் இருக்கிறார்களா, இந்த 13 சீப் இன்ஜினியர்கள் தேவைதானா என்று பரிசீலிக்க வேண்டும். 1981-82 ஆம் ஆண்டிலே கிட்டத்தட்ட 139 கோடி ரூபாய் துண்டு விழும் என்றும் 1982-83 ஆம் ஆண்டில் 224 கோடி ரூபாய் அதிகமாக செலவாகிறது என்றும் கூறியிருக்கிறார்கள். ஆகவே இந்த செலவினங்கள் எல்லாம் அதிகமாக இருக்கிறது. தமிழகத்தில் உள்ள தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் அதாவது இப்போது மின்சார தட்டுப்பாடு இருந்தாலும் அவர்களுக்கு அவர்கள் அறையில் ஏர் கண்டிஷன் தேவையா என்பதை பரிசீலனை செய்ய வேண்டும். மின்சாரத்தை குறைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகளுக்கு அதிக அளவு மின்சாரத்தைக் கொடுக்க வேண்டும். அதே போல் தொழிற்சாலைகளுக்கும் அதிக அளவு மின்சாரத்தைக் கொடுக்க வேண்டும். தொழிற்சாலைகள் மூடப்பட்டு இருப்பதால் நிறைய தொழிலாளர்கள் வேலை இல்லாமல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் உணவு இல்லாமல் அவர்கள் வாழ்க்கைத் தரம் மிகவும் மோசமாக இருக்கிறது. தொழிற்சாலைகளுக்கு அதிக அளவு மின்சாரத்தைக் கொடுக்க வேண்டும். எல்லாப் பகுதிகளுக்கும் ஒரே அளவு மின்சாரத்தை வழங்க வேண்டும். குறிப்பாக, சேலம், தர்மபுரி, வட ஆற்காடு மாவட்டங்களுக்கு அதிக அளவு மின்சாரம் கொடுக்க வேண்டும். அந்தப் பகுதிகளில் அதிக அளவு ஆழத்திலிருந்து தண்ணீர் கொண்டுவந்து அந்தத் தண்ணீரை விவசாயத்திற்குப் பயன்படுத்துகிறார்கள். ஆகவே இந்த 3 மாவட்டங்களுக்கும் அதிக அளவு மின்சாரத்தை அதிக மணி நேரம் கொடுக்க வேண்டும் என்று கூறி இத்துடன் என் உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. ந. குலசேகரபாண்டியன்: மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள தமிழ்நாடு மின்வாரியத்தின் 1982-83 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையையும், 1981-82 ஆம் ஆண்டுக்கான முன்னை நிதிநிலை அறிக்கையையும் வரவேற்று என்னுடைய கருத்துகளைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1983 பிப்ரவரி 4] [திரு. ந. குலசேகரபாண்டியன்]

இயற்கையின் கொடுமையான சூழ்நிலையிலே இன்றைக்கு மின்சாரத்தைப் பங்கிடுவதிலே இவ்வளவு சீரோடும் சிறப்போடும் அரசு எடுத்துள்ள நடவடிக்கை மூலமாக— நமக்கு கடுமையான பற்றாக்குறை இருந்த போதிலும்— ஓரளவுக்கு எல்லா வகையிலும் சீராக வினியோகிக்கக்கூடிய அளவுக்கு எடுத்துள்ள முடிவுகளை நான் முதற்கண் பாராட்டி நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

இயற்கையின் சூழ்நிலைகள் காரணமாக புனல் மின் திட்டங்கள் பாதிக்கப்பட்டாலும் அனல் மின் திட்டங்கள் நல்லபடியாக இயக்கப்படுவதற்கு மத்திய அரசு ஒத்துழைப்பு இருந்து இருக்குமேயானால் இன்னும்கூட நிலைமைகள் மிகவும் சீராக இயங்குவதற்கு வசதியாக இருந்து இருக்கும். மத்திய அரசு நமக்கு ஒத்துழைக்காமல் நிலக்கரியை வழியிலே பாதியிலே திருப்பி விடக்கூடிய மனப்பக்குவம் எல்லாம் இன்றைக்கு வளர்ந்து கொண்டு இருக்கிறது. மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர்கள் பேசுகிறபோது அமைச்சருடைய அறிக்கையிலே மையஅரசின் ஒத்துழைப்பு எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்று அவர்கள் சொன்னார்கள். ஆனால் ஒத்துழைத்துக் கொண்டிருக்கக் கூடிய மைய அரசு இன்றைக்கு அந்த ஒத்துழைப்பிலே ஒரு மெத்தன போக்கைக் காட்டுவதை நாட்டிலே இருக்கக் கூடிய சாதாரண மக்கள் கூட புரிந்து கொள்ளக்கூடிய நிலைமையிலே மைய அரசு நடந்து கொண்டிருக்கிறது என்பதனை நான் எடுத்துக்கூற விரும்புகிறேன். சென்ற ஆண்டு உறுப்பினர்கள் இந்த மின் துறை நிதி நிலை அறிக்கையின் மீது எடுத்து வைத்த கருத்துரைகளுக்கு துறையின் பதில் அச்சிட்டு அனுப்பப்பட்டு இருக்கிறது. இந்த நடவடிக்கையைப் பாராட்டி நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-50)

இந்திய துணைக் கண்டத்திலேயே ஏற்றுமதி செய்யக் கூடிய தோல் மற்றும் தோல் பொருட்களின் 50 சதவீதத்திற்கு மேல், அதாவது பாதிக்கு மேல் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலைகள் என்னுடைய தொகுதியான வாணியம்பாடியிலே இருக்கின்றன. அந்தத் தொழில் ஒரு கன்டினியுவஸ் புராசஸ் என்பதைப்போல தொடர்ந்து வேலை நடத்தக்கூடிய தொழிற்சாலைகளைக் கொண்டதாகும். அதற்கு 24 மணி நேரமும் மின்சார சப்ளை கொடுக்க வேண்டிய நிலைமை இருப்பதால்— சென்ற ஆண்டு நான் பேசுகின்றபோதே வாணியம்பாடி பகுதியிலே ஒரு அனல் மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருந்தேன்—அதற்கு துறை அளித்திருக்கின்ற பதில் விளக்கத்திலே நிலக்கரியும் நீரும் எளிதாகக் கொண்டு செல்லக்கூடிய இடமாக எந்த இடம் இருக்கிறதோ அங்கேதான் நிறுவ வேண்டும் என்றார்கள், நிலக்கரியைக் கொண்டுவருவதற்கு ஆம்பூர், வாணியம்பாடி பகுதிகளிலே ரயில் பாதைகள், சாலை வசதிகள்

நிறைய இருக்கின்றன, அது மட்டுமல்ல, அந்தப் பகுதிகள் பாலாற்றின் கரை ஓரமாக இருப்பதால் நீர் வசதியும் இருக்கிறது. ஆகவே அங்கே ஒரு அனல் மின் நிலையத்தை அந்தப் பகுதியிலே அமைத்துத் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற ஒவ்வொரு தொழிற்சாலையிலும் சுமார் 2 ஆயிரம் பேர்கள் வேலை செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே அந்தப் பகுதியிலே அனல் மின் நிலையத்தை ஏற்படுத்தினால் வட ஆற்காடு மாவட்டத்திலே மின் தட்டுப்பாட்டைச் சரி செய்வதற்கு எதிர்காலத்திலே வசதியை ஏற்படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதன் மூலமாகவட ஆற்காடு மாவட்டம் தஞ்சைக்கு அடுத்தபடியாக உணவு உற்பத்தியை அதிகமாகச் செய்யக்கூடிய மாவட்டம் ஆகும். பம்புசெட்டுகள் மூலமாக பயிர் செய்யக்கூடிய நிலைமை இருக்கக்கூடிய மாவட்டமாகும், இந்த நிலைமைகளை எல்லாம் அரசு கருத்திலே கொண்டு அந்தப் பகுதியிலே ஒரு அனல் மின் நிலையத்தை ஏற்படுத்துவதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெய்வேலியிலே இரண்டாவது கட்டத்திலே 600 மெகாவாட் மின்சாரம் உற்பத்தியாவதை தமிழகத்திற்கு வழங்கவேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்தி இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். வற்புறுத்தியும் பெறமுடியவில்லை என்றால் அதைப் போராடிப் பெறுவதற்கு அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும். குறிப்பாக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் வலியுறுத்துவதற்கு, அந்தக் கோரிக்கையை எடுத்துவைப்பதற்கு முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்திலே மின் இணைப்புக் கொடுக்காமல் 410 கிராமங்களும் 3,840 சிற்றூர்களும் இருக்கின்றன. அவற்றில் 80 கிராமங்களுக்கு இந்த ஆண்டு மின்சாரம் வழங்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. என்னுடைய தொகுதியிலே பல மலைப் பகுதிகளிலே உள்ள கிராமங்களிலே இன்னும் மின்சாரம் கிடைக்காத நிலை இருக்கிறது. பாகங்காட்டேரி என்ற கிராமத்திற்கு மின் இணைப்பு வழங்காமல் இருக்கிறது. அங்கே மின் இணைப்பும், நாக்கினேரி என்ற கிராமத்திலே சாலை வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு அனல் மின் நிலையங்களில் உற்பத்தி 37 விழுக்காடு அதிகரிக்கும் என்று அறிக்கையிலே அமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பதைப் பாராட்டவும் அதற்கு நன்றி சொல்லவும் நான் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையில் மின் உற்பத்தியைப் பெருக்கி இப்போது இருக்கின்ற ஒரு சங்கடமான சூழ்நிலையை விரைவாகப் போக்குவதற்கு அரசு போர்க்கால நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



31-12-82 வரை தமிழகத்திலே 15,627 கிராமங்களுக்கும் 47,485 சிற்றூர்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டிருப்பது இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லாத ஒரு சாதனையாகும். அந்த சாதனையை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்திலே மின்சாரத்திலே இவ்வளவு நெருக்கடியான சூழ்நிலைகள் இருந்தபோதிலும் எல்லா கிராமங்களுக்கும் மின்சாரம் சென்றிருக்கிறது. தேவைகேற்ப மின் உற்பத்தியிலே பற்றாக்குறை இருந்தாலும்கூட ஒரு தன்னிறைவு நிலையை தமிழகம் அடைந்து இன்றைக்கு மின்சாரம் செல்லாத கிராமங்கள் இல்லை என்று சொல்லத்தக்க நிலையை இந்த அரசு உருவாக்கியிருப்பதை நான் பாராட்டுகிறேன்.

இன்றைக்கு நிலுவையில் உள்ள 3 லட்சம் பம்புசெட்டுகளுக்கும் மின்சார இணைப்புக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த 3 லட்சம் விண்ணப்பங்கள் பெரும்பாலும் வட ஆற்காடு மாவட்டத்திலே இருந்து வந்தவைதான். அவைகளுக்கு மின் இணைப்பு விரைவிலே கொடுப்பதன் மூலமாக விவசாயத்தைப் பெருக்கவும் உணவு உற்பத்தியைப் பெருக்கவும் வழிவகைகள் செய்ய வேண்டும்.

விவசாயத்திற்கு இப்போது 6 மணி நேரம் மின்சாரம் வழங்கப்படுகிறது. பயிர்கள் பாதிக்கப்படாத நிலையிலே நேரத்தை அதிகப்படுத்தி அதுவும் பகல் நேரத்திலே மின்சாரத்தை வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்திலுள்ள அனல் மின் திட்டங்களையும், புனல் மின் திட்டங்களையும் தமிழக அரசு முழுமையாக பயன்படுத்தி விட்டது. மாநில அரசு மத்திய அரசை பல ஆண்டுகளாக வற்புறுத்தி வந்த அனல்மின் திட்டங்களை செயல்படுத்த அனுமதிக்காது மத்திய அரசு மெத்தனம் காட்டுகிறது, அல்லது தட்டிக்கழிக்கிறது என்று நான் சொல்லவேண்டும். கல்பாக்கம் அனல்மின் திட்டத்தை உடனடியாக செயல்படுத்துவதற்கு மத்திய அரசு போர்க்கால நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும், மத்திய அரசை வற்புறுத்துவதற்காக இங்கே இருக்கக்கூடிய காங்கிரஸ் கட்சி நண்பர்கள் துணையாக இருக்க வேண்டுமென்றும், இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். கல்பாக்கம் அனல்மின் திட்டம் செயல்படுமேயானால் தமிழகத்தினுடைய தேவைகள் ஓரளவிற்கு பூர்த்தி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். குடிசைகளுக்கு மின் விளக்கு வழங்கியிருப்பது இன்றைக்கு தமிழகத்திலே ஒரு மிகப்பெரிய சாதனையாக இருக்கிறது. குடிசைகளில் விளக்கு ஏற்றி வைத்தவர் புரட்சித்தலைவர் அவர்கள் என்று ஏழை, எளிய மக்கள் பாராட்டுகிறார்கள். மற்ற மாநிலங்களை ஒப்பிடும்போது நம்முடைய மாநிலத்தில் குறைவான மின் கட்டணமே வசூலிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் மின் கட்டணத்தை உயர்த்தாது நமது அரசு சென்று போராடிக் கொண்டிருப்பதை எதிர்க் கட்சியினர் பாராட்டி நன்றி கூற வேண்டும்.

புதியதாக துவங்கப்படும் தொழில் பேட்டைகளில் தொழில்களுக்கு மின்வெட்டு கிடையாது என்று நமது அரசு அறிவித்திருக்கிறது. இதைப் பாரட்டி நன்றிசொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன் அதேபோல் மாநிலத்தில் எந்த இடத்திலும் ஒரு புதிய தொழிலைத் தொடங்கினாலும் அவைகளுக்கு ஒரு சில ஆண்டுகளுக்காவது மின்வெட்டு இல்லாத நிலையை உருவாக்கி தொழிற்சாலைகள் வளர்வதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

*திரு. கு. ரமணி: மதிப்பிற்குரிய மாற்றுத்தலைவர் அவர்களே, ஆரம்பத்திலே நான் சொல்ல விரும்பக்கூடிய ஒரு விஷயம், இந்த மின் வாரியத்தினுடைய அறிக்கையின் மீது விவாதத்திற்கு போதிய அவகாசம் இல்லாத நிலையை இந்த அரசு எப்போதுமே உருவாக்கிக் கொண்டிருக்கிறது, இது தவறு என்பதை மறுபடியும் எடுத்துக்கூற விரும்புகிறேன். சென்ற ஆண்டே இதை நாங்கள் சுட்டிக்காட்டினோம், இவைகள் மீது விரிவான விவாதம் தேவை என்று கூறினோம். இந்த அரசு, தான் நடத்தக்கூடிய ஒரு பிரம்மாண்டமான தொழில் இது தான் இதைவிட வேறு பெரிய தொழிலே கிடையாது. அதுபற்றி ஆயிரத்தெட்டு பிரச்சனைகள் இருப்பதை விவாதிப்பதற்கு அவகாசம் தராமல் இருப்பது ஒரு குறையாகும். அதை இனி மேலாவது கவனத்தில் கொள்வார்கள் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தில் எச்.டி. சப்ளைக்கு 100 சதவீதம் மின் வெட்டு போடப்பட்டிருக்கிறது. அதன்காரணமாக ஷிப்டுகள் குறைக்கப்பட்டு, வேலை வாய்ப்பு குறைக்கப்பட்டு பல்வேறு நெருக்கடிகள் உருவாகிக்கொண்டிருக்கின்றன. ஒட்டுமொத்த மின்வெட்டினால் சிறுதொழில்கள் பாதிக்கப்பட்ட நிலை இருக்கின்றது. சிறு தொழில்கள் பாதிக்கப்பட்டால் அவைகளால் நிற்கவேமுடியாது, அழிந்தே போய்விடும், அந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. அதே மாதிரி விவசாயத்திற்கு கொடுக்கவேண்டிய மின்சாரம் கொடுக்கப்படாமல் ஒரு நாளைக்கு தொடர்ச்சியாக 3 மணி நேரம் மின்சாரம் கொடுக்கப்படுமா என்று விவசாயிகள் கேட்கிறார்கள். ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 6 மணி நேரம் கொடுக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். அதனுடைய நிலைமை என்ன என்பதை அவர்கள் இன்றைக்காவது எடுத்துச் சொல்லவேண்டும்.

வீடுகளிலும், தெருக்களிலும் விளக்குகள் எரியாத நிலை இருக்கிறது. அதனால் ஏற்படுகிற தொல்லைகள் என்ன என்பதை நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். இப் பிரச்னையில் தமிழக அரசு என்ன செய்ய முடியும். எங்களுடைய சக்திகளை எல்லாம் பயன்படுத்திக் கொண்டாகி விட்டது என்று சொன்னால் ஜனங்கள் என்ன செய்யமுடியும்? ஆகவே அப்படி



சொல்வது சரியாகாது. ஆனால் அடிப்படையான ஒரு விஷயம் நெருக்கடிகளின் பிரதான காரணம் என்று அதனுடைய முதல் குற்றவாளியாக கூண்டிலே நிறுத்தவேண்டியது மத்திய அரசை என்பதை நாங்கள் பல ஆண்டுகளாக சொல்லிக் கொண்டு வருகிறோம். தேவைக்கேற்ற திட்டம் இல்லை; கையிலே எவ்வளவு பணம் இருக்கிறதோ அதற்கேற்ற திட்டம்தான் அவர்களுடையது. உலக ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து எவ்வளவு கடன் கிடைக்கிறதோ, ஐ.எம்.எப்.லே எவ்வளவு கடன் கிடைக்கிறதோ அதை வைத்துத்தான் மத்திய சர்க்கார் திட்டம் உருவாக்குவார்களே தவிர இந்திய மக்களுடைய செல்வாதாரத்தை திரட்டி அதன் மூலமாக செய்யவேண்டிய காரியத்தை முறையாக செய்ய திட்டம் இடாதது; திட்டத்தில் கோளாறு; அதனால் ஏற்பட்டுள்ள பலவீனம் என்பது தான் காரணம் என்று நாங்கள் கருதுகிறோம். வேகமாக வளர்ந்து வரக்கூடிய விவசாயம், கல்வி, நாகரிகம் ஒரு சமுதாயத்தில் 20,30 ஆண்டுகளுக்குப் பிறகு என்ன நிலையில் இருக்கும் என்பதை கணக்கு போட்டு அந்த முறையில் திட்டம் கிடையாது.

(பிற்பகல் 1—00)

பல ஆண்டுகளுக்குப் பின் ஏற்படும்படியான தேவைகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு அவர்கள் திட்டமிட வேண்டும், அப்படி செய்வதில்லை. அதனால்தான் ஒவ்வொரு திட்டத்திலும் மத்திய சர்க்கார் திட்டம் நிறைவேறுவதில்லை; அவர்கள் இலக்கு நிறைவேறுவதில்லை. தோல்வி அடைகிறார்கள். உதாரணமாக முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே, போட்டத்திலே 20% நிறைவேறவில்லை, பாக்கியைத்தான் நிறைவேற்ற முடிந்தது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே, 36 சதவீதம்நிறைவேற வில்லை; பாக்கியைத்தான் நிறைவேற்ற முடிந்தது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 35% நிறைவேறவில்லை; பாக்கியைத் தான் நிறைவேற்ற முடிந்தது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் அப்படித்தான். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 31.47% நிறைவேற முடியவில்லை. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது. அதிலும் 3 வருடம் தாண்டியாயிற்று. 6,000 மெகாவாட்தான் இதுவரைக்கும் சாதனையாக இருக்கிறது. ஆனால், மொத்தம் 19,000 மெகாவாட் உற்பத்தி செய்யவேண்டும். இனி, 13,000-க்கு மேற்பட்ட உற்பத்தி இரண்டு வருடத்தில் நடக்குமா? ஆகவே, அதனுடைய தலைவிதி என்ன என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். அதுதான் இப்போதைய நிலை. ஆகவேதான் சொல்கிறோம், மைய அரசு திட்டமிடுவதில் ஒரு பயங்கரமான கோளாறு நாடு முழுவதிலும் இருப்பதால், இப்படிப்பட்ட பயங்கரமான நெருக்கடியில் கொண்டுபோய் தள்ளிவிட்டிருக்கிறது. அதனுடைய ஒரு பகுதிதான் தமிழகத்தினுடைய நெருக்கடி. இதை நமது ஆளுங்கட்சியைச் சேர்ந்த மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் புரிந்துகொண்டால் நல்லது அவர்களுக்குப் புரியவில்லையென்று நான் குற்றம் சாட்டவில்லை. அவர்கள் என்ன சொல்கிறார்கள்? அதிக உணர்வோடு. இந்த

அரசு எல்லாவற்றையும் சாதித்துவிட்டது மாதிரி சொல்கிறார்கள் தன்னிறைவு பற்றுவிட்டது மின்சார வாரியதிலே என்று சொல்கிறார்கள். சொல்லலாமா அவர்கள் என்பதை யோசிக்க வேண்டும். இதற்கான காரணம் என்ன? ஏன் இப்படி மத்திய சர்க்கார் தோற்றுப்போயிருக்கிறது. ஒன்று கட்டுமானப் பணிகளில் எக்கச்சக்கமான தாமதம்; அதனால் போட்ட திட்டங்கள் நிறைவேறவில்லை. இழுத்துக்கொண்டே போகிறது இயந்திரங்கள் அவர்கள் நினைத்த மாதிரி கிடைப்பதில்லை. கான்ட்ராக்டர்கள் வேலைகளைத் தாமதப்படுத்துகிறார்கள். அவர்களுக்குக் கொடுத்த காலத்தில் செய்யாமல், விலைவாசி ஏறிவிட்டது, சிமென்ட், இரும்பு விலைகள் ஏறிவிட்டன, சகலமும் விலை ஏறிவிட்டது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இழுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஊழல்கள் எக்கச்சக்கமாகத் தலைதூக்கி நிற்கிறது. எவ்வளவு பேர்களுக்கு அவர்கள் பணம் பங்கு போடுகிறார்கள்.—— கான்ட்ராக்டர்களோடு பேசும்பொழுது இந்த உண்மைகள் வெளிவருகின்றன. அதே மாதிரி தொடர்ந்து விலைவாசி ஏற்றம். எந்த ஒரு திட்டமும், எந்த ஒரு அரசாங்கம் போட்டாலும், அந்தத் திட்டம் ஒரு வருஷத்திற்குள்ளோ- போட்டதைவிட 15, 20 சதவீதம் அதிகப்படி பணம் செலவு செய்யாமல் நிறைவேறியதா? இதுதான் நம்முடைய நாட்டினுடைய பொருளாதார நெருக்கடியினுடைய அச்சாணியாக உள்ளது. இதைப் புரிந்து கொள்ளவில்லையென்றால் நாம் என்னதான் புரிந்துகொள்ளப் போகிறோம் என்பதைச் சிந்திக்க வேண்டும்:

கல்பாக்கம் அணு மின்நிலையம் 1973-லேயே வேலையை ஆரம்பித்திருக்க வேண்டும். அதில் வெள்ளோட்டம் பார்த்து நிறுத்தப்பட்டிருக்கிறது. 1979—லேயே உற்பத்தியைத் துவக்கியிருக்க வேண்டும். என்ன பிரச்னை? ஹெவி வாட்டர் இல்லை. அதற்கு நமக்கு வேண்டிய சப்ளை கிடைக்கவில்லை. மகாராஷ்டிரத்திலே அந்தப் பிரச்னை வந்தது. அப்பொழுது அமெரிக்கா மற்றும் சில ஏகாதிபத்திய நாடுகளுடைய கட்டுப்பாட்டை நம்முடைய தலையிலே திணித்து, அதற்குள்ளே நாம் நிற்க வேண்டிய ஒரு நிலைமையை எதிர்த்து, பிரெஞ்சு நாட்டோடு கலந்து பேசி, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறார்கள் ஆனால், பூரணமான. திருப்திகரமான முடிவுகள் வந்தன என்று நான் சொல்லவில்லை. ஆய்வு நடக்கிறது. இங்கே நமக்கு நிறுத்தப்பட்டிருக்கிறது. மின் நிலையம் நடப்பதற்கு எந்த வழியும் கிடையாது. அந்த வகையில் இருக்கிறது நான் கேட்கிறேன், நமது அமைச்சர் அவர்களும், நமது அரசாங்கமும் என்ன சொல்கிறார்கள்? நாம் தந்தி அனுப்பிவிட்டோம், காகிதத்தை எழுதி விட்டோம். போகிறபொழுதெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம், என்று சொல்கிறார்கள். இப்படி 100 வருஷம் சொல்லலாம். ஆனால், அங்கே அது ஏறினால்தானே, நடந்தால்தானே. அப்படியானால், தமிழக மக்களையும், இந்த நாட்டிலிருக்கிற மக்களையும் அரசியல் கட்சிகளையும் நம்பிக்கையிலே எடுத்துக்கொள்ள நீங்கள் தயாரா?



அவர்கள் முழுவதையும் திரட்டி, என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அதை எடுக்க வேண்டும் என்ன நடவடிக்கை என்று நான் இங்கே சொல்ல விரும்பவில்லை. அதற்கு நீங்கள் முன்வரவேண்டும். நீங்கள் முன் வராவிட்டாலும் பரவாயில்லை. உங்களுடைய கொள்கைகளுக்கு அடித்தளமே இல்லாமல் போகும் போது, நாங்கள் மத்திய அரசிடம் கேட்டிருக்கிறோம், சொல்லியிருக்கிறோம் என்ற வார்த்தைகளை சொல்லி காட்டுகிறீர்கள். ஆனால் உண்மையிலே உங்களுடைய நடவடிக்கைச் சரியானதா? அல்ல, நீங்கள் மக்களை நம்பி இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதுதான் பிரச்னையைத் தீர்க்க சரியான வழி.

அடுத்து, நம்முடைய மாநில மின் உற்பத்தியை எடுத்துக் கொள்வோம். நீர் மின் நிலையங்கள் நமக்குக் கொடுக்கக் கூடியது கிட்டத்தட்ட 1200 மெகாவாட். அது பரிபூரணமாக மழையும், தண்ணீரும் இருந்து நல்லமுறையிலே இயந்திரங்கள் வேலை செய்தால் கிடைக்கக்கூடியது. அப்படிப்பட்ட நிலைமை வேண்டும். ஆகவே அது இன்ஸ்டால்ட் கப்பாசிட்டி நிறுவு திறன் ஆகும். ஆனால், நாம் 50 சதவீதத்திற்குக் கீழேதான் உற்பத்தி செய்கிறோம். அதே மாதிரி அனல் மின் நிலையம். அதிலேயும் அப்படித்தான்.

நம்முடைய தேவைக்கு 1700 மெகாவாட் மேலே உற்பத்தியாக வேண்டும். ஆனால் அந்த அளவிற்கு வருவதில்லை. இரண்டையும் சேர்த்துப் பார்த்தால்கூட வருவதில்லை. 3.200 மெகாவாட் தான் நிறுவுத் திறனாக இருக்கிறது. ஆனால் நமக்கு என்ன கிடைக்கிறது. இது நீங்களே தருகின்ற கணக்குதான். 1,400 மெகாவாட்தான் உற்பத்தியாகிறது. இதில் எங்கேயிருந்து தன்னிறைவு வரும்? எங்கேயிருந்து மின்சாரம் கிடைக்கும்? இதுதான் இப்பொழுது இருக்கின்ற நிலைமை. இரண்டிலேயும் 50 சதவீதத்திற்கும் கீழேதான் மின்சார உற்பத்தி நமக்குக் கிடைக்கிறது. 1,400 மெகாவாட்டுக்கு மேலே உங்களுக்குக் கிடைக்கவில்லை. நமக்கோ 2100 மெகாவாட் மின்சாரம் தினமும் தேவைப்படுகிறது. மீதியுள்ள 700 மெகாவாட் மின்சாரம் தினசரி நமக்குப் பற்றாக்குறையாக இருக்கின்றது. அந்தப் பற்றாக்குறையை எப்படித் தீர்க்கப் போகிறோம் என்பதுதான் பிரச்னை. ஆனால் நம்முடைய நுகர்வோர் எண்ணிக்கை ஜாஸ்தியாக இருக்கிறது, 44 இலட்சத்திற்குப் போய் இருக்கிறது விவசாயிகள், இன்டஸ்டீரியலிஸ்ட்ஸ், பேக்டரிஸ் என்று எடுத்துக்கொண்டால். ஆகவே, இந்த உற்பத்தியை உறுதிப்படுத்தி, நமது தேவையை உறுதிப்படுத்தி, ஜனங்களுக்குச் சப்ளை செய்யமுடியவில்லை என்பதுதான் உண்மை. மத்திய அரசாங்கத்திற்குத்தான் சகல பொறுப்புகளும் என்றுசொல்கிறார்கள். அதுமட்டுமல்ல, இந்த மாநில அரசும் தன்னுடைய சொந்தக் குறை என்ன இருக்கிறது என்று

பரிசீலித்துப் பார்க்க வேண்டும். இல்லையென்றால் பயன் இல்லை மழை இல்லாததால்தான் எல்லாம் போயிற்று என்று சொல்வது முற்றிலும் சரியா? மழை இருந்திருந்தால் மட்டும் எவ்வளவு வரும்?

18 நீர் மின் நிலையங்களை வைத்திருக்கிறோம். ஒன்பது மின் நிலையங்கள் பாசனத்தோடு இணைக்கப்பெற்றவை. அங்கே மழை பெய்திருந்தாலும், நீர் நிறைய இருக்கும்பொழுதும்கூட முழு உற்பத்தியைப் பெற்று விட முடியுமா? பாக்கி உள்ள ஒன்பது நிலையங்களிலேயிருந்துதான் உற்பத்தி செய்ய முடியும். இப்படியெல்லாம் சேர்ந்து எல்லா ஏற்பாடுகளும் முறையாக இருந்தாலும்கூட அதிலேயிருந்து 50 சதவிதத்திற்கும் குறைவாகத்தானே உற்பத்தி ஆகிறது. ஆகவே, என்ன செய்தாலும் இன்றைக்கிருக்கின்ற நீர் மின் நிலையங்களை நம்பி மட்டும் நம் காரியங்கள் நடக்க முடியாது. அதைக்கொண்டு நாம் பிரச்னையைத் தீர்க்க முடியாது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

நெய்வேலி மின் நிலையத்தில் 600 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி இருக்கிறது. அவர்கள் கிட்டத்தட்ட தங்கள் உற்பத்தியை ஓரளவுக்குச் சரி செய்து கொண்டிருக்கிறார்கள். நிறவுத் திறனில் 49, சதவிதத்திற்குக் கீழே நமது உற்பத்தி என்று சொல்லும்பொழுது அதிலே நெய்வேலியை உட்படுத்தி விடக்கூடாது. காரணம் நெய்வேலியில் புரடக்ஷன் கெப்பாசிட்டி அதிகம். எண்ணூர் அனல் மின் நிலையத்தில் 450 மெகாவாட் உற்பத்தியில் என்ன நிலைமை? அதிலே ஆரம்ப வடிவமைப்பே தவறு என்று சொல்கிறார்கள். அதையே சரிப்படுத்த முடியவில்லை. நீராவியைக் கொண்டு ஓடும் இயந்திரங்கள் அங்கே இருக்கின்றன. அந்த நீராவியைச் சிறிய பைப்புகளிலே கொண்டு வந்து கடலிலேயிருந்து தண்ணீரை பெரியபைப்புகளில் கொண்டு வந்து அதற்குள் கூலிங் சிறியபைப்புகளை விட்டு குளிரச் செய்து எடுக்கக்கூடிய இடத்தில், அந்த பைப்புகளிலே கடல் தண்ணீர் பாதிதான் ஃப்ளோ ஆகிறது மீதியிடத்தில் கல்லும், மண்ணும், சேறும், கடல் பிராணிகளின் ஓடுகளும் அடைத்துக்கொண்டிருக்கின்றன. இப்படியிருந்தால் என்னென்ன நிலைமைகள், என்னென்ன விளைவுகள் ஏற்படும் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். இதை ஒழுங்குபடுத்த முடியவில்லை.

நிலக்கரி போதுமானதாக இல்லை. சிங்கரேணியிலிருந்தோ அல்லது பீகாரிலிருந்தோ கொண்டு வருவதற்கு வேகன்கள் இல்லை. அதிலே 40 சதவீதம் சாம்பல் கலந்து வருவதாக சொலகிறார்கள். ஆகவே, நல்ல நிலக்கரியைக் கொண்டு வந்து விட்டால் இருக்கின்ற பாய்லர்களுக்காவது கேடின்றி பயன் படுத்தலாம். நிலைமை எவ்வளவு மோசமாக இருக்கிறது மத்திய அரசின் நடவடிக்கையால்? மத்திய அரசு கோல் மைனைச்



சொந்தமாக நடத்துகிறார்கள். அங்கிருந்து கரியைக் கொண்டு வருவதற்குத் தேவையான வேகன்களைத தரவில்லை. இது ஒரு பெரிய அநீதி. அந்த வேகன்கள் இல்லையென்றால், கரி வராது. அதனால் உற்பத்தி நடக்காது. அந்தக் கரியைக் கொண்டு வந்து கொட்டினால் தான், அந்தக் கரி எண்ணூர் அனல் மின் நிலையததிற்கு வந்து சேர்ந்தால்தான் இங்கே உற்பத்தி செய்ய முடியும். இதற்காகவே கரி வேகன்களை தூக்கி கொட்டு வதற்கு இரண்டு இயந்திரங்கள் வாங்கியதாகச் சொல்லப்படுகிறது அந்த இயந்திரங்கள் ஐந்தாறு வருடங்களாகவே * ஓடவில்லை என்று தெரிகிறது. அவை இயங்கினால் சுலபமாக வேலைகளை செய்யமுடியும். அனல் மின் நிலையத்தில் இப்படி உண்டாகக் கூடிய பரியபேர்களை நாம் செய்ய முடியாது என்று சொல்லப் படுகிறது. எனவே, அங்கே லஞ்ச ஊழல் தலைதூக்கி நிற்கிறது. வேகன்களுக்குப் பதிலாக லாரிகளையோ, காண்ட்ராக்டர் களையோ வைத்துச் செய்வதற்கு காண்டிராக்டர்கள் கைக்கூலி கொடுக்கபபடுகின்ற நிலைமையும் இருக்கிறது. அதனால்தான் இந்த மெஷின்கள் கடந்த ஐந்தாறு வருடங்களாக வேலை செய்யவில்லை. எத்தனை லட்சம் ரூபாய் செலவில் இந்த இயந்திரங்கள் வாங்கப்பட்டன என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். தொடர்ந்து பலவிதமான டிபெக்ட்ஸ் ஏற்பட்டால் தொடர்ந்து அதில் உற்பத்தியை எடுக்க முடியாது.

(பிற்பகல 1–10)

அதே மாதிரி கோதையாறு மின் திட்டம், நான் ஒன்றிரண்டு மட்டும் சொல்கிறேன், காரணம் நேரம் கிடையாது. விவாதத்திற்கு நேரம் கிடையாது. கோதையாறு இரண்டாவது மின் திட்டத்திலே நீங்கள் வைத்திருக்கக் கூடிய இயந்திரம் மேலே தூக்கி கிளீன் செய்யும்போது தூக்கும் கிரேன் இயந்திரத் தினுடைய எடை 110 டன். ஆனால் அது தூக்குகின்ற இயந்திரத் தின் எடை 120 டன். அதனால் அதை லிப்ட் பண்ண முடிய வில்லை அதை கிளீன் பண்ண முடியாத நிலை. அமைச்சர் அவர் கள் சிரிக்கிறார்கள். பரவாயில்லை. நான் சொல்வது தப்பு என்றால், பிளீஸ் கரக்ட் இந்த மாதிரி நிலை இருக்கின்றது.

மாண்புமிகு திரு. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நான் அதற்காக சொல்லவில்லை இயந்திரம் 120 டன்கள். அதைத் தூக்குகிற கிரேன் 110 டனகள். இதைப் பார்க்கிற போது ரெடிக்குலசாக இருக்கிறதே என்பதற்காகத்தான்.

* திரு. கு. ரமணி: இல்லை நான் தவறாகச் சொன்னால் கூட நீங்கள் கரெக்ட் பண்ணலாம். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், அமைச்சருடைய சொந்தக் குற்றம் என்று சொல்ல வில்லை. இதை அவர்கள் வடிவமைக்கிற காலத்திலே, சென்ற காலத்திலே முடிக்கின்ற நேரத்தில் எப்படிப்பட்ட திறமை உள்ளவர்கள் அங்கே போய் பார்த்தார்கள். என்ன செய்தார் கள். இயந்திரத்தின் அடிமட்டத்திலே போய் அதைக் கிளீன் பண்ண முடியவில்லை. அது நெருக்கமாக இருப்பதாலே, மனிதன்

அதற்குள்ளே போய் உட்கார்ந்து கிளீன் செய்வதற்கு கூட வழி இல்லாமல், வைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட பல நடவடிக்கைகள் இன்றைக்குப் பல்வேறு நிலையங்களில் நடக்கின்றன. இந்த இயந்திரங்களை வைத்திருக்க முடியாத, ரிப்பேர் பண்ண முடியாத ஒரு கெட்டுப்போன இயந்திரத்தை சரிபடுத்த முடியாத ஒரு அவலநிலையிலே நாம் இருக்கிறோம். இது திறமையற்ற நிலை என்று ஏன் சொல்லக்கூடாது? அப்படிச் சொன்னால் கோபித்துக் கொள்ளக் கூடாது? அதுதான் உண்மை. அப்படிப்பட்ட நிலை இருக்கிறது. இதை மாற்ற வேண்டும். இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உதாரணத்திற்கு தூத்துக்குடியிலே ஆரம்பித்த நேரத்திலே அங்கே சில கெடுதல்கள் வந்தன. ஒரு புதிய இயந்திரம் வருகிற போது டீத்திங் டிரபிள் எல்லாம் வரலாம் பி.எச்.இ.எல்-லே இருந்து இயந்திரம் சப்ளை செய்து வந்தார்கள். அவர்கள் ரிப்பேர் செய்ய வந்தார்கள். இரண்டு நாளிலே வந்து ரிப்பேர் பண்ணினார்கள். அவர்களிடம் என்ன ஆகர்ஷண சக்தி இருக்கிறதா? ஏன் அந்த மாதிரி மற்ற இடங்களிலே நடக்கமாட்டேன் என்கிறது. அந்த பி.எச்.இ.எல் இயந்திரங்கள் கெட்டதா? அப்படியானால் அவர்கள் பல மாநிலங்களுக்கு அனுப்புவது வெளி நாடுகளுக்கு அனுப்புவது எல்லாம் இப்படி இருந்தால் அந்த கம்பெனி இவ்வளவு பெரியதாக ஆகியிருக்காது. ஆகவே அவர்கள் நம்முடைய குறைபடுகள் எப்படி இருக்கின்றது என்பதைப் பார்க்கவேண்டும் அப்படிப்பட்ட இயந்திரங்களை ஒழுங்காகப் பராமரித்துக் கொண்டு போகமுடியாத மிகப்பெரிய குறைபாடுகளும் ஊழலும், லஞ்ச லாவண்யமும், திறமையற்ற நிலையும் அரசாங்கத்தின் நடவடிக்கையிலே இருக்கின்றன. அவர்கள் என்ன சாதித்தார்கள் என்பதை நான் மறுக்கவில்லை 15, 20 வருடத்திற்கு முன்னாலே இருந்ததை விட அதிகமாக மின்உற்பத்தி ஆகி இருக்கிறது. ஆனால் 44 லட்சம் பேர்கள் இதைப் பயன்படுத்திக் கொள்கிற நிலை இருக்கிறது. அதையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

மத்திய அரசாங்கத்தின் மற்றொரு நிலையை நான் சொல்ல விரும்புகிறேன் எனர்ஜி குரோத்தைப் பற்றி அவர்கள் கணக்கிட்டு இருபது பத்தாவது வருடாந்தர பவர் கமிட்டி நிர்ணயித்திருப்பது 7.9. 1..-வதில் நிர்ணயித்திருப்பது 5.7. ஆனால் தமிழக அரசு நிர்ணயித்திருப்பது 17.3. இப்படி கணக்கு வைத்தால் நம்முடைய தலையை மொட்டையடிப்பதை தவிர வேறு என்ன நோக்கம், எனவே இதை ஆலோசிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நமக்கு என்ன செய்து விட்டார்கள். 5 வது திட்டத்திலே ஒரு 350 மெ.வா. கொடுத்திருக்கிறார்கள். ஆனால் நமக்கு வருடத்திற்கு 400 மெ.வா. தேவை. அப்படியானால் ஐந்தாண்டுகளில் 2 ஆயிரம் மெ.வா. தேவை. ஆனால் நமக்குக் கொடுத்திருப்பது 350 மெ.வா இதற்குத்தான் மத்திய சர்க்காரோடு அந்தப்



போக்கினை மாற்ற எதிர்த்துப் போராட வேண்டும். இப்போது கூட, நம்முடைய ஆளும் கட்சி மாண்புமிகு உறுப்பினர்கள், காங்கிரஸ் கட்சி நண்பர்களை கேட்டார்கள் உதவி செய்யும்படி. நீங்கள் போராடுகிற போது நாங்களும் உதவி செய்வோம் என்று சொல்லியிருக்கிறார்கள். நாமே முறையாகப் போராடித் தானே அவர்களை ஆகர்சிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே இது யோசிக்க வேண்டிய பிரச்சினை.

அனுமதி கொடுக்காத நீர் மின் திட்டம் எத்தனை? பார்சன் வேலி 30 மெ.வா. சோ முட்டிபுழா 60 மெ.வா. பாண்டியாறு புன்னமபுழா 150 மெ.வா. இதிலே இரண்டு மாநிலங்களுக்கு இடையே தகராறு இருக்கிறது. 1965லே திட்டக் கமிஷன் கிளியரன்ஸ் கொடுத்து நமக்கு கரண்ட் மட்டும் எடுக்கலாம் தண்ணீர் யாருக்கு என்ற சண்டையில் அது நிற்கிறது. நெல்லித் துறை 50 மெ.வா. ஒகேனக்கல் 250 மெ.வா. இதுவும் இன்டர் ஸ்டேட் தகராறு இருக்கிறது. அதே மாதிரி நீராறு, நல்லாறு திட்டம் அது அமலாகவில்லை. மைக்ரோ மின்திட்டம் அதுவும் ஒரு 10 அல்லது 16 மெ.வா. நமக்கு உண்டாக்கித் தரும் சிறு சிறு திட்டங்கள். இவைகளை எல்லாம், சேர்த்து 700 மெ.வா. கிடைக்கும். இதற்கு இன்று வரையிலே அனுமதியை அளிக்க அவர்கள் தயாராக இல்லை. இன்டர் ஸ்டேட் தகராறு இருந்தால் தீர்த்து வைக்கும் பொறுப்பு மத்திய அரசுக்கு இருக்கிறது. அதையும் தீர்த்து வைக்கத் தயாராக இல்லை. அதை செய்து வைப்பதற்கு இந்த மாநில சர்க்கார் மத்திய அரசுக்கு தைக்கிற மாதிரி செய்ய தயாரா? கடிதமெழுதுவதும் கலந்து பேசுவதும் மட்டும் போதாது அவையெல்லாம் ஆரம்பதிசையில் நடக்கக்கூடிய நடவடிக்கை, அதற்கு மேலே என்ன செய்தீர்கள்? இந்த சட்டமன்றத்திலே நாம் அத்தனை பேரும் சேர்ந்து மத்திய சர்க்காருடைய இந்த போக்கு சரியில்லை, தமிழகத்தை இருளாக ஆக்குகிற தொழிலை முடமாக்கிற, விவசாயிகளை பட்டினி போடுகிற லட்சக்கணக்கான தொழிலாளிகளுக்கு வேலை இல்லாமல் செய்கிற முறைக்கு முடிவு காணவேண்டும். இதை மறுக்கிற அந்த கொள்கையை நாங்கள் கண்டிக்கிறோம் என்று இந்த சட்டமன்றத்திலே தீர்மானம் நிறைவேற்ற நீங்கள் தயாரா?

அங்கே வருகிற போது தான் உங்களுக்கு இருக்கும்படியான ஒருவிதமான குறைவு. அந்த மத்திய சர்க்காரோடு நீங்கள் சேர்ந்து நின்று கொண்டு வந்த நடவடிக்கைகளுடைய நிலை இப்படி வந்து நிற்கிறது. அதனால்தான் நீங்கள் எதிர்த்துப் பேசுகிறோம் என்று சொல்கிறீர்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் அந்த நிலையை மாற்றி இன்றுள்ள நிலையைப் பார்த்து எவ்வளவு சக்தியான நடவடிக்கை தேவை என்பதை நீங்கள் பார்க்க வேண்டும் அதே மாதிரி நார்த் மெட்ராஸ் தெர்மல் நிலையம் நமக்கு புதியதாக உண்டாக்க வேண்டியது. 600 மெகாவாட் உற்பத்தி செய்யக்கூடியது. அதற்கும் அனுமதி இல்லை பேசின் பிரிட்ஜிலே புதுப்பிக்க வேண்டியது. அதற்கும் அனுமதி கிடைக்கவில்லை. மேட்டூரிலே வேலை நடக்கிறது. நெய்வேலியிலே

லாளர்கள் ஒன்று பட்டு நிற்பார்கள் வேறு வழி அவர்களுக்குக் கிடையாது இப்படிப்பட்ட நிலைமை அவர்களுக்கு உண்டாக்கப் படுகிறது. இது அரசுக்குப் பெரிய கெடுதலை உண்டாக்கப் போகிறது. இது ஐ. எம். எப். பிடிப்பின் விளைவுதான் என்பதை ஞாபகத்தில் கொள்ள வேண்டும். ஆள் குறைப்பு என்ற பெயரில் 60000 பேர்களை வைத்து நடத்தப்போகிறீர்கள் இந்த நிலைமை ஒருவேளை இந்த அரசு ஏற்றுக் கொள்ளாமல் இருக்கலாம். ஆகவே, விஸ்தரிப்புக்கு ஏற்றவாறு அதிகத் தொழிலாளர்களை நியமிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

போனஸ் உயர்த்தவேண்டும் என்று கேட்டபோது மறுத்து விட்டீர்கள். உங்களுடைய அறிக்கையில் கொடுத்து இருக்கிறீர்கள். மின் துறையில் இந்த ஆண்டு எந்தவிதமான கிளர்ச்சியோ, வேலை நிறுத்தமோ ஏற்படவில்லை என்பதால் சுமுக உறவுக்கு இது எடுத்துக்காட்டாக இருக்றகிது என்று சொல்லியிருக்கிறீர்கள் வேலை நிறுத்தம் இல்லை என்று சொன்னால் உலகம் பூராவும் சுமுகமான சூழ்நிலை என்று நீங்கள் ஒரு கொள்கை வைத்து இருக்கிறீர்கள். இது ஒரு அடிப்படை பிரச்னையாக வந்து இருக்கிறது. அதை இப்போது நான் விவாதிக்க விரும்பவில்லை. அதைப் பற்றி பின்னர் இந்தச் சட்டமன்றத்தில் நாங்கள் பேசுவோம். மேலும் சொல்லி இருக்கிறீர்கள். பணியாளர் பிரச்னைகளைப் பரிவுடன் கவனித்து நிர்வாகம் செயல்பட்டதால் மின் துறை தொழிலாளர்கள் செவ்வனே பணியாற்றியுள்ளனர். ஆள் குறைப்பு என்ற கத்தி தலையில் தொங்கிக்கொண்டு இருக்கிற நிலையிலும், அந்தத் தொழிலாளர்கள் நல்ல முறையில் உழைத்தார்கள் என்று சொல்லியிருப்பது பாராட்டக்கூடியது தான். இது எங்களைப்போன்றவர்களுக்கு சமாதானம் தருகிறது.

நீங்கள் தொழிலாளர்கள் பக்கம் எப்படி இருக்கிறீர்கள்? போனஸ் உயர்த்திக் கேட்டார்கள். நீங்கள் என்ன சொன்னீர்கள். யோசித்துப் பாருங்கள். இன்ஜினியர்களிலிருந்து அனைத்துத் தொழிலாளர்களும் ஒன்றுபட்டுக் கூறினார்கள் — நீங்கள் அங்கீகரித்த ஒரு சங்கத்தைத் தவிர பாக்கி அத்தனை பேரும் ஒன்று சேர்ந்து கேட்டார்கள். நீங்கள் வெறும் 8⅓ போனஸ் தான் கொடுத்தீர்கள். இதை அதிகரிக்க வேண்டும் என்று அங்கீகரிக்கப்பட்ட அவர்களும் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். எங்களோடு சேர்ந்து அவர்கள் கேட்கவில்லை, எங்கள் கிளர்ச்சிகளில் அவர்கள் ஈடுபடவில்லையென்றாலும், அவர்களும் இந்தக் கோரிக்கையை வைத்தார்கள். நீங்கள் என்ன பதில் அளித்தீர்கள், நஷ்டம்' நஷ்டம் ஆகவே, முடியாது என்று சொன்னீர்கள்.

இந்த போனஸ் கொடுப்பதை மட்டும் நெஞ்சைப்பிடித்து தடுத்து வைத்து விட்டால் நஷ்டம் நின்று விடுமா? கறி சாப்பிட வேண்டும் என்று சொன்னால், காதுகுத்துகிற வீட்டிற்குப் போகக் கூடாது. ஆடுவெட்டும் இடத்திற்குத்தான் செல்லவேண்டும். ஆகவே, தொழிலாளிக்குக் கொடுக்கவேண்டியதை நீங்கள் கொடுத்து விட்டு, பிறகு அதைப்பற்றிப் பேசவேண்டும்



தொழிலாளிக்கு கொடுக்காமல் இருப்பதால் மட்டும் நஷ்டம் நின்று விடாது. இந்தச் சூழ்நிலை ரொம்ப நாள் நடக்காது. ஆகவே, நான் சொல்கிறேன், நீங்கள் தொழிலாளர்களின் நல்லெண்ணத்தை பெறத் தவறிவிட்டீர்கள். அதைத்தான் நாங்கள் சொல்கிறோம். ஆகவே, அவர்களுக்கு அதிக போனஸ் அளித்து இருக்கவேண்டும். காலியிடங்களை நிரப்பியிருக்க வேண்டும்.

அதைப்போலவே கார்ட் பில்லிங் சிஸ்டம் எப்படித் தோல்வி அடைந்தது என்பது உங்களுக்குத் தெரியும். அது உங்களுடைய ரிக்கார்டில் இருக்கிறது. அதை நான் எடுத்துச்சொல்லவிரும்ப வில்லை. கேஷியர்களுக்கு வேலையில்லாமல் போய்விட்டது. அது எல்லாம் உங்களுக்குத் தெரியும், இது எல்லாம் சுமுகமான சூழ்நிலைக்கு எடுத்துக்காட்டா? இதனையெல்லாம் அனுபவித்துக் கொண்டு தான் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இந்த நிலையை நீங்கள் மாற்றியமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அரசுக்கு கெட்டபெயரை வாங்கிக்கொடுக்கும் இன்னொரு கொத்தடிமை முறையையும், (கான்ட்ராக்ட் லேபர் முறை) நான் இங்கே சொல்லியாகவேண்டும்.

உங்களுடைய அந்த விஸ்தரிப்பு திட்டம் ஏற்படுகிறபோது, ஆட்களையும் குறைத்துக்கொண்டு வருகின்ற காரணத்தால் வேலை நடக்காது நிர்ப்பந்தமான சூழ்நிலையில் சமாளிக்கவேண்டி 15000க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள்; கான்ட்ராக்ட் லேபர் சட்டத்தின் கீழும் அவர்கள் வரவில்லை, பாக்டரி சட்டத்தின் கீழும் வரவில்லை' தொழிலாளர் தகராறு சட்டத்தின் கீழும் வரவில்லை, அந்த தொழிலாளர்கள் அந்தக் கூலிகளாக, கிடைக்கின்ற நேரத்தில் கிடைக்கின்ற இடத்தில் வேலை பெற்று, சில அதிகாரிகளிடத்தில் பணத்தைக்கொடுத்து, சில ஏஜென்டுகளைப் பிடித்து அன்றாடம் கூலிகளாக, எந்த விதமான ரிக்கார்டின் அடிப்படையிலும் தொழிலாளர்கள் என்று வராமல் பணி செய்து கொண்டு இருக்கிறார்கள். நமது மதிப்பிற்குரிய மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இதை ரொம்ப தூரம் கவனிக்கவேண்டும். அவரது சகோதர அமைச்சரின் இலாகாவில் இது நடக்கிறது. இந்தக் கொத்தடிமை எங்காவது நடக்குமா என்று சற்று யோசித்துப் பாருங்கள். நாம் கான்ட்ராக்ட் ரெகுலேஷன் அன்ட் அபாலிஷன் ஆக்ட்டிற்கு அடி பணிந்து, தலைவணங்கி செயல்பட்டுக் கொண்டு இருக்கிறோம். இன்றைக்கு மின்சார வாரியத்தில் எந்தவிதமான ரிக்கார்டும் இல்லாமல், சலுகைகளும் இல்லாமல், அதிகாரிகளிடத்தில் பணத்தைகொடுத்து வேலை வாங்கி வரும் நிலை இருக்கிறது. இது ஊழல் தலை விரித்தாட வழிவகுக்கிறது.

நான் சென்ற கூட்டத்தில் லோயர் மேட்டூர் பகுதியில் நடக்கக்கூடிய ஊழலைப் பற்றிச்சொன்னேன். அமைச்சர் அவர்கள் விவரம் கேட்டார்கள் கொடுத்தேன். அது என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. ஒரு வேளை ஜாதகம் தயாராகவில்லையோ

என்னவோ? இன்றைக்கு எங்களைப்போன்ற தொழிலாளர் சங்கங்களை அணுகிக் கேட்டால் எங்கெங்கே ஊழல் நடைபெறுகிறது என்ற விவரங்களை நாம் உங்களுக்குத் தெரிவிக்க முடியும். உங்களுக்கும் அந்த விவரங்கள் தெரியும், ஆகவே, அதைத் தடுக்க நீங்கள் நடவடிக்கை எடுக்கத் தயாரா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அந்தமாதிரி குடும்ப பென்ஷன் திட்டம் இருக்கிறது. நன்றாக யோசனை செய்து பாருங்கள். குடும்பபென்ஷன் திட்டத்தைக் கொண்டு வந்து, பிராவிடன்ட் ஃபண்டோடு இணைத்து பணம் வசூல் செய்யப்பட்டது. எண்ணூர் மின் திட்டத்தில் பணிபுரியும் தொழிலாளர்களிடம் வசூலிக்கப்பட்ட அந்தப் பணம் பிராவிடன்ட் ஃபண்டுக்குப்போக வேண்டும். 6,80,000 ரூபாய் வசூல் செய்து அது அங்கு போகாமல், தொழிலாளர் கையில் அந்தக் கணக்கும் கொடுக்கப்படாமல், அது இன்றைக்கு எங்கோ போய் உட்கார்ந்து கொண்டிருக்கிறது.

தமிழ்நாடு முழுவதும் இருக்கும்படியான இந்தத் திட்டத்தின் கீழ் இன்றைக்கு எத்தனை பேர்களுக்கு பென்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை உங்களால் தெரிவிக்க முடியுமா' கொடுத்ததாக செய்தி வந்திருக்கிறதா? எங்களைப் பொறுத்து வரையில், இந்த குடும்ப பென்ஷன் திட்டத்தின்கீழ் யாருக்கும் கொடுக்கவில்லை என்ற செய்திதான் வந்திருக்கிறது. அது உண்மையா? இல்லையா? 5, 6, வருஷம் ஆகியும் பி.எஃப். கணக்கினை தொழிலாளர்களிடம் கொடுக்க முடியவில்லை என்றால் அதன் அர்த்தம் என்ன? அதற்கு என்ன காரணம்? அரசாங்கம் இதை கவனிக்க வேண்டும்.

அதே மாதிரி அரிசன வகுப்பைச் சேர்ந்த சுமார் 1500 பேர்களுக்கு அண்மையில் பல்வேறு பிரிவுகளில் வேலை கொடுக்கப்பட்டது. இப்போது அவர்கள் வெளியே அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அரிசன மக்களைப்பற்றி அடிக்கடி சகோதரர் இளையபெருமாள் அவர்கள் இங்கே வாதாடி வருகிறார்கள். எதனால் அவர்கள் வெளியேற்றப்பட்டார்கள் என்று தெரியவில்லை அப்படி அவர்கள் வெளியேற்றப்பட்டிருந்தால் அது நியாயமல்ல; அதை பரிசீலிக்க வேண்டும்.

இப்போது கரண்ட் கட் வந்திருக்கிறது. திருச்செந்தூர் தேர்தலிலே யாரும் மைக் வைத்து பேச முடியாது. அப்படியானால் எப்படி தேர்தல் பிரச்சாரம் செய்வது மைக் வைக்ககூட கரன்ட் இல்லை. எல்லோரும் ஜெனரேட்டர் வைத்துக்கொள்ள வேண்டியதுதான். அது முடியுமா? நாம் எவ்வளவோ மின்சாரத்தை ஜெனரேட் பண்ணிக் கொண்டிருக்கிறோம். தேர்தல் பிரச்சார மைக் வைப்பதற்குகூட நாம் ஜெனரேட்டர் வைத்துக்கொள்ள வேண்டுமென்பது அநியாயம். இப்படி காரியங்கள் செய்வது சரியல்ல. இந்த நிலை நீடிக்கக்கூடாது. அதற்காக தமிழக சர்க்கார் நடவடிக்கைகளைஎடுக்க வேண்டும்.



மின்சார பற்றாக்குறையைப் போக்க இங்கே நிறைய அனல் மின் நிலையங்களை உருவாக்க வேண்டும். கல்பாக்கம் அணு மின் நிலையத்தை உடனடியாகச் செயல்படுத்த வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இன்னும் தேவையான அளவிற்கு மின்சாரத்தை உற்பத்தி செய்யவும். விநியோகம் செய்யவும் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இப்படி எதை எடுத்தாலும் இன்றைக்கு பற்றாக்குறையாக இருக்கிறது. பற்றாக்குறையின் உச்சக் கட்டத்திற்கு நாம் போய் கொண்டிருக்கிறோம். இந்த நிலையில் நீங்கள் என்ன செய்தாலும் எதைப் போட்டாலும் 'பாட்டம்லெஸ் பிட்டிங் போல இருப்பதினால் கீழே போய்விடும், கண்டுபிடிக்க முடியாது. உங்களால் தாங்க முடியாது. மத்திய சர்க்காரை கேளுங்கள். கொடுக்கவில்லை என்றால் மக்களைத் திரட்டி, மக்கள் சக்தியை மத்திய சர்க்காருக்குக் காட்டினால்தான் அவர்களுக்குப் புரியும் அதை நீங்கள் செய்யவில்லை என்றால் நீங்கள் சொல்லக்கூடிய வார்த்தைகளை காப்பாற்ற முடியாது உங்கள் திட்டத்தை நிறைவேற்ற முடியாது அடிப்படை இல்லாமல் போய்விடும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு உரையை முடிக்கிறேன்.

## 9. அறிவிப்பு.

### பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு இணங்க பேரவையின் நிகழ்ச்சிகள் கீழ்க்கண்டவாறு தீர்மானிக்கப்பெற்றன என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்,

| | | |
|---|---|---|
| 5-2-1983 (சனிக்கிழமை) | .. | தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1982–83 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீதும் 1981-82 ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கையின் மீதும் விவாதம். |
| 6–2–1983 (ஞாயிற்றுக்கிழமை) | .. | விடுமுறை |
| 7–2–1983 (திங்கட்கிழமை) | .. | தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1982–83 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீதும் 1981–82ம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கையின்மீதும் விவாதம், |
| 8–2-1983 (செவ்வாய்க் கிழமை) 9–2–1983 (புதன் கிழமை) | .. | அரசினர் சட்டமுன்வடிவுகள்—ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும். |

| | |
|---|---|
| 10–2–1983 .. (வியாழக்கிழமை) | காலை—தனியார் அலுவல்கள் மாலை—அரசினர் சட்ட முன் வடிவுகள் ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும் |
| 11–2–1983 .. (வெள்ளிக்கிழமை) 12–2–1983 (சனிக்கிழமை) | அரசினர் சட்ட முன் வடிவுகள். ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும். |

பேரவை வழக்கம் போல் காலை 9.00 மணிக்குக் கூடும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 5-2-1983 காலை 9.00 மணிக்கு மீண்டும் கூடும்.

பின்னர் பேரவைபிற்பகல் 1.29 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## 10. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

132. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து 18.10.1982 ஆம் தேதியிடப்பட்ட உள்துறையின் 2590–ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (1939–ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

133. தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு திரைப்பட முறைப் படுத்துதல் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து 27.9.1982–ஆம் தேதியிடப்பெற்ற உள்துறையின் 2474-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு திரைப்பட (முறைப்படுத்துதல்) சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் (9) 1955/10 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

134. தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் 1981-ஆம் ஆண்டிற்கான ஆறாவது ஆண்டறிக்கை (தமிழ், ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் மத்தியச் சட்டம் 1/1951) 619–அ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது]

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

17. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1982–83 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை குறித்தும் 1981-82 ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கை குறித்தும் விவாதத்தைத் தொடங்கி வைத்து மின்துறை அமைச்சர் மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் அவர்கள் ஆற்றும் திருத்திய உரை (தமிழ்) ஆங்கிலம்)



18. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1981–82 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தின் போது சட்டமன்ற உறுப்பினர்கள் வழங்கிய கருத்துரைகளும் அக்கருத்துக்கள் மீதான குறிப்புரைகளும் அடங்கிய, திருத்திய விவர அறிக்கை (தமிழ், ஆங்கிலம்)

19. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1976-77 மற்றும் 1977–78–ஆம் ஆண்டுகளுக்கான (வணிகத்துறைகள் பற்றிய) பொது நிறுவனங்கள் குழுவின் இருபதாவது அறிக்கை. (தமிழ் ஆங்கிலம்)

20. 1976–77 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கையில் சதர்ன் பிரிக் ஒர்க்ஸ் லிமிடெட் குறித்த 3.01 முதல் 3.05 ஆம் பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தி ஒன்றாம் அறிக்கை (தமிழ் ஆங்கிலம்)

21. 1972-73 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (வணிகம்) அறிக்கையில் கண்ட தமிழ்நாடு மின்சார வாரியம் தொடர்பான குறிப்புரைகளின் மீது பொது நிறுவனங்கள் குழு (1977–79) அளித்த ஒன்பதாவது அறிக்கையில் அடங்கியுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தி இரண்டாம் அறிக்கை.

22. 1973-74 ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப் பெற்ற மானியங்களுக்கும், சாட்டப்பெற்ற நிதி ஒதுக்கீடுகளுக்கும் மிகையாகச் செலவழித்த தொகைகள் பற்றி குழுவின் (1977-79) ஆறாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்கிக் குழுவின் பதினேழாவது (ஏழாவது சட்ட மன்றப் பேரவை) அறிக்கை (தமிழ், ஆங்கிலம்

## இணைப்பு.

[78ம் ....பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க] 1

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

அவை முன் வைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மின்வாரியத்தின் 1982–83 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையையும் 1981-82 ஆம் ஆண்டு துணை நிதிநிலை அறிக்கையையும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் முன் மொழிகிறேன்.

2. தமிழ்நாடு மின்வாரியம், தமிழ்நாடு மின்சார ஆலோசனைக் குழுவின் ஒப்புதலுடன், இந்த நிதிநிலை அறிக்கைகளை 1948 ஆம் ஆண்டு மின்சக்தி (வழங்கல்) சட்டத்தின் 61-ஆம் பிரிவிற்கேற்ப அனுப்பி வைத்துள்ளது. மின்வாரியம் செயல்படுவது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை அரசும், வாரியமும் கருத்தில் கொள்ளும். கடந்த ஆண்டு நடைபெற்ற விவாதத்தின்போது மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கள் மீது வாரியம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை விளக்கும் அறிக்கை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தனியே அனுப்பப்பட்டுள்ளது.

3. மாண்புமிகு உறுப்பினர்களின் எண்ணங்களில் மின் சக்தி வழங்கப்படும் நிலைமையே மேலோங்கி நிற்கும் என்பது இயல்பானதே. நம்முடைய பொருளாதாரத்தின் அனைத்து துறைகளுக்கும், அது வேளாண்மைத்துறையாக இருப்பினும், தொழில் துறையாக இருப்பினும், வணிகத்துறையாக விருப்பினும் அனைத்திற்கும் மின்சாரம் இன்றியமையாததாய் இருப்பது தான் இதற்குக் காரணம். 1981-82 (ஜுலை—ஜுன்) ஆம் ஆண்டில் இம் மாநில அரசு மின்சார தட்டுப்பாட்டினை பெருமளவில் சமாளித்து விட்டது. அக்கால அளவில் மார்ச் 1982 முதல் நான்கு திங்கள் கால அளவிற்கு உச்ச மின் தேவையில் 25 சதவீதம் முதல் 40 சதவீதம் வரையில் தான் மின்வெட்டு அமுலில் இருந்தது. மின்சக்தியில் வெட்டு இல்லை. 2 எம். வி. எ. மின்திறனுக்கு மேல் மின்சுமையுள்ள குறிப்பிட்ட சில தொழில்களுக்கு மட்டுமே. இந்த உச்ச மின் தேவையின் மீது மின்வெட்டு செயல்படுத்தப்பட்டது. பருவமழை தொடங்கியவுடன் 1—7-1982—ல் மின் வெட்டு தளர்த்தப்பட்டது.

4. 1981—82 ஆம் ஆண்டில் கிட்டிய மின்சக்தி அளவு குறித்த விவரம் கீழே தரப்பட்டுள்ளது:—

| | ஜுலை. ஜுன். | ஏப்ரல்— மார்ச். |
|---|---|---|
| | (மில்லியன் | யூனிட்) |
| புனல் மின்சாரம் | 4,936 | 4,658 |
| அனல் மின்சாரம் .. .. | 3,204 | 3,173 |
| நெய்வேலி .. .. | 2,846 | 2,686 |
| கேரளா .. .. | 996 | 993 |
| பிறவாயில்கள் .. .. | 126 | 144 |
| | 12,108 | 11,654 |

நம்முடைய மாநிலத்தின் மின் உற்பத்தி நிலை நீர்த்தேக்கங்களில் நீர் நிரம்பி இருத்தல், வாரியத்தின் அனல் மின் நிலையங்களில் மின் உற்பத்தி நிலை, நெய்வேலியிலிருந்து கிடைக்கக்கூடிய மின் சக்தி கேரள மாநிலத்திலிருந்து வாங்கப்படும் மின்சக்தி ஆகியவைகளைப் பொறுத்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இவை அனைத்திலிருந்தும கிடைக்கும் மின்சக்தியின் அளவு நமது மாநிலத்தின் பெருகி வரும் மின்சக்தித் தேவையளவை ஈடு செய்ய வேண்டியுள்ளது.



6. மின்சக்தியைப் பொறுத்தமட்டில், 1982-83 ஆம் ஆண்டில் இம்மாநிலம் எதிர்நோக்கியுள்ள இடர்பாடான சூழ்நிலையை பின்வரும் அட்டவணையிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

| | 1981-82—ன் புள்ளி விவரம். | 1982-83-ல் எதிர் பார்ப்பு. | சதவீதம் உயர்வு(+) குறைவு (—) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ஜுலை-ஜுன்) (மில்லியன் யூனிட்டுகள்) | | |
| (அ) புனல் மின் சக்தி (மேட்டூர் தவிர) | 4,080 | 2,449 | (—)40.0 |
| மேட்டூர் .. | 856 | 200 | (—) 76. 6 |
| | 4,936 | 2,649 | (—) 46.3 |
| (ஆ) அனல் மின்சக்தி | | | |
| பேசின்பிரிட்ஜ் .. | 239 | 255 | (+) 6.7 |
| எண்ணூர் .. | 1,457 | 1,750 | (+) 20. 1 |
| தூத்துக்குடி . | 1,508 | 2,386 | (+)58. 2 |
| | 3,204 | 4,391 | (+) 37. 0 |
| (இ) நெய்வேலி .. | 2,846 | 2,676 | (—) 6.0 |
| (ஈ) கேரளாவிலிருந்து வாங்கப்படுவது | 996 | 45 | (—) 95. 5 |
| ஏனையவை . | 126 | 70 | (—) 44. 4 |
| .. | 3,968 | 2,791 | (—) 29. 7 |
| மொத்தம் .. | 12,108 | 9,831 | (—) 18. 8 |

புனல் மின் உற்பத்தி அளவில் பெருஞ்சரிவிற்குக் காரணம் கடந்த ஆண்டு வடகிழக்குப் பருவ மழை பொய்த்ததும், இவ்வாண்டு தென்மேற்குப் பருவ மழை வட கிழக்குப் பருவமழை ஆகிய இரண்டும் பொய்த்ததுந்தான். கீழே கொடுக்கப்பட்டுள்ள நீர் தேக்கங்களின் நீர்வரத்து, அவற்றில் உள்ள நீர்மட்டம் போன்ற விவரங்களிலிருந்து இது புலனாகும்.

(இருப்பு மில்லியன் யூனிட்டுகளில்)

| | 1981-82—ன் புள்ளி விவரங்கள். | 1982-83-ல் எதிர் பார்ப்பு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1-7—1982-ல் உள்ளபடி இருப்பு .. | 715 | 286 |
| நீர்வரத்து— | | |
| நீலகிரி மலைப்பகுதிகளில் | 2,247 | 1,204 |
| பரம்பிக்குளம் ஆளியாறு மலைப் பகுதிகளில். | 707 | 339 |
| பெரியாறு | 580 | 251 |
| கோதையாறு | 283 | 138 |
| பாபநாசம் | 124 | 62 |
| சுருளியாறு | 91 | 41 |
| மொத்தம் | 4,032 | 2,035 |

காவிரியாற்றிலிருந்து மேட்டூர் நீர்த்தேக்கத்திற்கு கருநாடகம் போதுமான அளவில் நீர் விடாததாலும், கேரளத்திலிருந்து பெறும் மின்சாரத்தின் அளவு பெரிதும் குறைந்ததாலும் நிலைமை மிகவும் மோசமாயிற்று. பருவ மழை பொய்த்ததனால் இவ்வாண்டு கேரளமும் பெரும் இடர்ப்பட்டிருக்கிறது.

7. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் 210 மெகாவாட் திறனுள்ள மூன்றாம் நிலையம் இவ்வாண்டு (1982 ஏப்ரலில்) செயல்படத் தொடங்கியது. இதன் முதல் ஆண்டு இயக்கத்தின் மூலம் 525 மி. யூனிட் மின் சக்தி கிடைக்கக் கூடும். எனினும் மின்சாரம் இருப்பு குறைந்தும் தேவை



பெருகியுமிருந்த காரணத்தால் தேவையளவை ஈடு செய்ய முடியவில்லை. இவ்வாண்டில் புனல்மின் நிலையங்களின் உற்பத்திக் குறைவினாலும் கேரள மாநில மின்சக்தியின்மையாலும் 3,238 மில்லியன் யூனிட்டுகள் பற்றாக்குறை ஏற்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:—

| | | மி. யூ. |
|---|---|---|
| 1. | புனல் மின் உற்பத்தியில் பற்றாக்குறை | 1,631 |
| 2. | மேட்டூர் உற்பத்தியில் பற்றாக்குறை | 656 |
| 3. | கேரளத்திலிருந்து பெறும் மின்சார அளவில் பற்றாக்குறை | 951 |

8. மத்திய அரசுத் துறையைச் சேர்ந்த நெய்வேலி நிலையத்தையும் அனல் மின் நிலையங்களை மட்டுமே இம்மாநிலம் நம்பியிருக்க வேண்டியுள்ளதால், 1983 ஜனவரி முதல் ஜூன் வரையிலான கால அளவில் தொடர்ந்து மின் வழங்கல் நிலைமை கடினமானதாகவே இருக்கும். இயந்திர வடிவமைப்பிலுள்ள குறைபாடுகளால் இயந்திரங்கள் அவ்வப்போது நின்றுவிடுகிற நிர்பந்தமிருப்பினும், வழங்கப்படுகிற நிலக்கரியின் தரம் மோசமானதாக இருந்தபோதிலும், இம்மாநிலத்திலுள்ள அனல் மின் நிலையங்களில் இவ்வாண்டு உற்பத்தியாகும் மின்சாரத்தின் அளவு 37 சதவீதமாக அதிகரிக்கப்படும்.

9. 1982ம் ஆண்டு சனவரித் திங்களில் எந்தவித தடைகளுமின்றி முழு அளவிற்கு மின்சக்தி விநியோகிக்கப்படும் நிலையில் தமிழ்நாடு மின் இணைப்பு 2,100 மெ. வா. உச்சத்தேவையளவை எட்டியது. நாளொன்றுக்கான மின்சார பயனீட்டளவு 38.5 மில்லியன் யூனிட்டாக இருந்தது. மின்சக்தி உற்பத்தி நிலை, மின் தேவை நிலை ஆகிய இவ்விரண்டிலும் ஏற்பட்டிருந்த கடும் பற்றாக்குறை காரணமாக தொடர்ந்து மின் வெட்டுக்களும் மின் வழங்கு கட்டுப்பாடுகளும் விதிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

தென்மேற்கு பருவமழை பொய்த்தபோது அனைத்து உயரழுத்தத் தொழிற்சாலை, 75ம் அதற்கு மேலும் பரித்திறன் கொண்ட குறைவழுத்தத் தொழிற்சாலைகள் ஆகியவற்றின் மீது 3.10.1982 லிருந்து மின் சக்தியில 30 சதவீத மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டது. 18-11-1982 லிருந்து இம்மின்வெட்டு 45 சதவீதமாக உயர்த்தப்பட வேண்டியதாயிற்று. வட கிழக்குப் பருவமழையும் பொய்த்தால் மின் உற்பத்தி நிலை மேலும் மோசமடைந்ததால் 13-12 1982 லிருந்து மின்வெட்டு 60 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டதுடன் வீட்டு பயனீட்டாளர்கள், வணிக நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு அளிக்கப்படும் மின்சக்தியின் மீதும் மேலும் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

இதையடுத்து தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் இடர்பாடுகள் ஏற்பட்டன. அங்கே முதல் மின் நிலையத்தில் டர்பைன் குழாயில் நீராவிக் கசிவு ஏற்பட்டு உற்பத்தி தடைப்

3-வது சுரங்கத்திட்டம் அவர்கள் உண்டாக்கப்போகிறார்கள். 2-வது வேலைதிட்டம் நடந்து கொண்டிருக்கிறது. 3-வது திட்டத்திலாவது தமக்கு பற்றாக்குறை இருக்கும்போது அந்த பழுப்பு நிலக்கரி நம்முடைய இந்த மண்ணிலிருந்து எடுக்ககூடியது மண்ணின் மைந்தர்கள் என்ற கொள்கையை நான் சொல்லவில்லை ஆனால் அது இந்த நாடு முழுமைக்கும் தேவையானது. ஆனால் தமிழகம் இப்படி பட்டினி கிடந்து இருட்டிலே இருக்கும்போது, அங்கே வெட்டக்கூடிய அந்தச் சுரங்கத்திலே இருந்து கிடைக்கிற கரியைக் கொண்டு ஒரு தெர்மல் நிலையம் உண்டாக்க வேண்டியது நம் கடமை, வாகன் பிரச்னை இல்லை. வேறு பிரச்னை இல்லை. கப்பல் பிரச்னை இல்லை. நமக்கு அங்கேயே கரி கிடைக்கும், அங்கேயே அது ஓடும். அந்த ஒரு மின் நிலையத்தை கட்டுவதற்கு முயற்சி எடுத்துக்கொண்டு இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். என்ன முயற்சி? கடிதம் தானே கடிதம் என்று சொன்னால் நீங்கள் நினைக்கிறது நடக்கும் என்று நாங்கள் நினைக்கவில்லை. அந்த மின்நிலையம் நமக்குத் தேவை. அனல் மின் நிலையத்தை நம்பித்தான் நாம் நிற்கமுடியும். இன்றைக்கு இருக்கிற நீர்மின் நிலையத்தை மட்டும் நம்பி நாம் நிற்கமுடியாது ஆகவே அனல் மின் நிலையத்தை அதிகப்படியாக உண்டாக்குவதற்கும், அது மட்டுமல்ல, தேவையான அளவிற்கு 2 100 மெகாவாட்டுக்கு மேலே உற்பத்தியாகிற அளவுக்கு இப்போது நெய்வேலி மின் நிலையம் ஏற்பட்டால் கிடைக்கலாம் நமக்கு தேவைகள் இனிமேல் அதிகமானால் இது நமக்கு, தேவைப்படும் மேலும் திடும்பிரவேசமாக நெருக்கடி வரும்போது உடனே ஈடு கட்டுவதற்கான, உடனே ஸ்டார்ட் பண்ணி நடத்தக்கூடிய. கால் மின் நிலையங்கள் வேண்டுமென்று நம்முடைய அவர்கள் கேட்டதாய் சொன்னார்கள். அப்படி 300 மெகாவாட் கேட்டும், அதையும் தரமாட்டோம் என்று சொல்லி விட்டார்கள் என்று சொன்னால், என்னதான் அவர்கள் நினைக்கிறார்கள் மத்திய சர்க்கார் தமிழக மக்கள் வாழ வேண்டுமா, வேண்டாமா எனவே அப்படி ஸ்டான்ட்—பை ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அப்போதுதான் அனல் மின் நிலையத்தை நம்பிக் கொண்டு திடும்பிரவேசமாக வரக்கூடிய பிரேக் டவுன்களை நாம் சரிப்படுத்தி சப்ளை செய்ய முடியும் விவசாயிகளையும், தொழிலாளர்களையும் பட்டினி போடாமல் இருக்க முடியும் அப்படிப்பட்ட ஒரு கொள்கைக்கு இந்த அரசு முன் வரவேண்டும் இது கண்ணாமூச்சி விளையாட்டு அல்ல இந்தக் கொள்கை வெற்றி பெறாது. நீங்கள் மத்திய சர்க்காரை எதிர்த்து நின்று, தமிழகத்தில் இருக்கிற அனைத்துக் கட்சிகளையும், மக்களையும் என்ன கொள்கை வேண்டுமானாலும் இருக்கட்டும் — அத்தனை மக்களுடைய ஜீவாதார தேவையை தண்ணீர் எப்படி இன்று மனிதனுக்கு தவிர்க்க முடியாதோ, அதே போன்று மின்சாரம் இல்லாமல் மனிதன் இருக்கமுடியாது என்று ஆகிவிட்டது. இன்றைக்கு இதிலே நீங்கள் வரவில்லை என்றால், [illegible] என்று கூறிக் கொள்கிறேன்.



அடுத்து தொழிலாளர்களைப் பற்றி சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு தொழிலாளர்களுக்கு ஒரு பேரபாயம் இந்த மின் வாரியத்திலே, டி.என்.ஈ.பி.யிலே வர இருக்கிறது, எங்களைப் பொறுத்தவரையில், அதுவும் ஐ எம் எப்பினுடைய கடன்களை வாங்கியதன் விளைவு தான் அவர்கள் இந்த நாடு முழுவதற்கும் திட்டம் போட்டு இருக்கிறார்கள். மின்வாரியத்திற்கு எத்தனைத் தொழிலாளர்கள் வேண்டுமென்று அவர்கள் திட்டம் போட்டிருக்கிறார்கள். நம் மின் வாரியத்திற்கு 60,000 பேர்கள் போதும் என்பதாக ஒரு அக்கவுன்ட் இருக்கிறது. நமக்கு இருந்தது எத்தனை. 1,12,682 பேர்கள் தற்போது வேலையில் இருப்பவர்கள் 87,550 பேர்கள் காலியிருப்பது எத்தனை 25,132. இந்த 87550—லிருந்து 60,000 என்று சொன்னால் இன்னும் 27,550-ஐ வெளியிலே தள்ளவேண்டும் என்பதுதான் இந்த ஐ.எம். எப்பினுடைய திட்டம். நான் கேட்கிறேன். நீங்கள் இந்தக் காரியத்தைச் செய்ய முடியுமா? தமிழ்நாட்டில் உங்களைச் செய்ய விடுவார்களா? இதை ஐ.எம்.எப் கொண்டு வருகிறது. இது இங்கே இருக்கிற அதிகாரிகளையெல்லாம் சொன்னால் நடக்காது. வருகின்ற உத்தரவை நிறைவேற்றவேண்டும் அந்த நிலை இருக்கிறது அவர்களுக்கு. இந்த அபாயத்தை தொழிலாளர் வர்க்கம் அனுமதிக்கப் போவதில்லை என்பதை நான் திட்டவட்டமாக, வேதனையோடு உங்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த விஷயத்தைப் பற்றியெல்லாம் நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்க வேண்டும். இதை நாங்களே தேடிக் கண்டுபிடித்துக் கொண்டு வர வேண்டியதாக இருக்கிறது அது மாதிரி மேலும் விஸ்தரிப்பு ஏற்படுகிறது மின் வாரியத்திலே விஸ்தரிப்பு செய்து உற்பத்தி செய்து கொடுக்கப்போகிறோம் என்றால், நல்லது குடிசைகளுக்கு 3½ லட்சம் விடுகளுக்கு அரிஜனங்களுக்கு விளக்குப் போட்டிருக்கிறோம் இதெல்லாம் அபிவிருத்தி இந்த அரசு செய்த நல்ல காரியம் நாம் 24 லட்சம் உபயோகிப்பாளர்கள் என்று இருந்ததை 44 லட்சமாக இன்றைக்கு உயர்ந்திருக்கிறபோது நீங்கள் எந்த அளவுக்கு தொழிலாளர்களின் எண்ணிக்கையை உயர்த்தியிருக்கிறீர்கள் உயர்த்தவில்லை குறைத்திருக்கிறீர்கள் இதற்காகத்தான் கார்ட் பில்லிங் திட்டம், வேறு சில திட்டம் இப்போது இந்த டிபார்ட்மென்டினுடைய ஒவ்வொரு பகுதிக்கும் சொல்லி அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள் உயர் மட்டத்தில் இருக்கிற அதிகாரிகளுக்கு மிச்ச தொழிலாளர்கள் எத்தனை சதவீதம் எங்கே இருக்கிறது என்று கணக்குத் தயார் பண்ணிக்கொடுங்கள். சர்ப்ளசை வைத்துக்கொண்டு இருக்க முடியாது என்று சொல்லி சர்ப்ளசை உண்டாக்குகிற திட்டத்துக்குத்தான் இது ஒரு இன்டிகேஷன் சர்ப்ளஸ் உண்டாக்கவேண்டும் அவ்வளவுதான்

[பிற்பகல் 1—20]

அப்படியானால்தொழிலாளர்களின் ஒரு பகுதியை வெளியேற்றுவதற்கான அபாயம் இருக்கிறது இதை எதிர்ப்பதிலே சங்கம் வித்தியாசம், கொடி வித்தியாசம் வேறு எந்தவிதமான வித்தியாசம் இல்லாது கொள்கை வித்தியாசம் இல்லாது தொழி

பட்டது. மூன்றாம் மின் நிலையத்தில் பீட் பம்பு இயங்கத் தவறியதால் உற்பத்தி நின்றது. இதே சமயத்தில் இரண்டாம் மின் நிலையத்திலும் முழு அளவில் செப்பனிடு வேலை நடந்து கொண்டிருந்தது. இவைகளினால் மின்சார உற்பத்தி அளவு மிகமிகக் குறைந்தது. எனவே பத்து இலட்சம் விவசாய மின் இணைப்புகளுக்கு சீராக மின் சக்தியை வழங்கி, மின்சக்தி இன்றியமையாத விவசாயப் பணிகளையும் விளைபொருள் களையும் காப்பாற்றுவதற்காகவே 1982 டிசம்பர் 29—லிருந்து 15 நாட்களுக்கு எல்லாத் தொழிற்சாலைகளுக்கும் மின்சாரம் வழங்குவதை நிறுத்தும்படி அரசு ஆணை இட வேண்டி வந்தது.

தூத்துக்குடியில் பதினைந்து நாட்களுக்குள் இயந்திரங்கள் பழுது பார்க்கப்பட்டு மின் உற்பத்தி நிலை சீர் செய்யப்பட்டது. எனினும் விவசாயத்துக்கு போதுமான அளவு மின்சக்தி வழங்குவதை உறுதி செய்வதற்காக, உயரழுத்த தொழிற் சாலைகளின் தேவை மீதான மின்வெட்டு அளவு 75 சதவீதமாக உயர்த்தப்பட்டதெனினும், மின்வெட்டு அளவு 60 சதவீத நிலையிலேயே நின்றது. உயரழுத்தத் தொழிற்சாலைகளுக்கு மேற் குறிப்பிட்ட அளவு மின்வெட்டும், குறைவழுத்தத் தொழிற்சாலைகளுக்கு 45 சதவீத மின்வெட்டும், வீடுகளுக்கும் பிறவற்றிற்கும் விதிக்கப்பட்டுள்ள வரம்புகளும் செயற்படுத்தப் பட்டால். மேலும் மின்வெட்டு கொண்டு வரும் அவசியமின்றி அடுத்த பருவமழை காலமான 1983 ஜூலை வரையில் நாம் நிலைமையை சமாளிக்கலாம்.

10. தூத்துக்குடியில் பெறப்படும் நிலக்கரியின் தரம் மோசமாயிருப்பது அங்கு மின்சக்தி உற்பத்தி மிகக் குறைந்திருப் பதற்கான மற்றொரு காரணமாகும்; வங்காளம் பீகார் பகுதி களிலிருந்து ஹால்டியா துறைமுகம் வழியாக இரயில்—கடல் மூலமாக தூத்துக்குடிக்கு நிலக்கரி வருகிறது ஹால்டியா துறைமுகம் செயல்படுவதிலுள்ள குறைபாடுகள் காரணமாக, மாதமொன்றுக்கு தேவைப்படும் 1.8 இலட்சம் டன் நிலக்கரி ஒதுக்கப்பட்டு அனுப்பப்படுவதற்கு மாறாக சராசரி 80 000 டன் நிலக்கரி மட்டுமே தூத்துக்குடிக்கு வருகிறது. மின்சார தட்டுப்பாடு உள்ள ஆறு மாத காலத்தை சமாளிக்க வேண்டுமென்றால், தரமான நிலக்கரி போதிய அளவில் தூத்துக் குடிக்கு கிடைக்க வேண்டும். இந்நோக்கத்தை நிறைவு செய்திட உதவிடுமாறு, 1981 லிருந்து நாம் இந்திய அரசின் நிலக்கரி, மின்சக்தி, கப்பல் போக்குவரத்து, இரயில்வே நிதித்துறை போன்ற பல்வேறு துறைகளை தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளோம். ஹால்டியா துறைமுகத்தின் செயல்திறனை மேம்படுத்துவதற்கு மத்திய அரசு தீவிர முயற்சி எடுத்து வருகிறது. இதன் பயனாக நிலக்கரி வழங்கும் நிலை ஓரளவுக்கு சீரடைந்தாலும் தேவைப்படும் அளவிற்கு இன்னும் சீரடையவில்லை. ஹால்டியா துறைமுகம் செம்மை யாகச் செயல்படத் தொடங்கும் வரையில் நிலைமையை சமாளித்திட தூத்துக்குடியில் கையிருப்பாக வைத்திருக்க சுமார் 5 இலட்சம் டன் நிலக்கரியை இறக்குமதி செய்வதே



இப்பிரச்சினையை சமாளிப்பதற்குரிய ஒரே வழி என்று நாம் கருதுகிறோம். இவ்வாறு இறக்குமதி செய்வதற்கு அனுமதிக்கு மாறு மத்திய அரசை நாம் கேட்டுள்ளோம். நம்முடைய வேண்டுகோளை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும் என்று நம்புகிறோம். நிலக்கரி வழங்கும் நிலை சீரடையாவிட்டால் தூத்துக்குடியில் மின்சாரம் உற்பத்தி செய்வதற்காக எரி எண்ணெயை பயன்படுத்த இவ்வரசு முடிவு செய்துள்ளது. எரி எண்ணெய்ச் செலவை ஈடு செய்வதற்காக உயரழுத்துப் பிரிவுகளுக்கு வழங்கப்படும் மின்சக்திக்கு யூனிட் ஒன்றுக்கு 45 காசு எரி பொருள் சர்சார்ஜ் கட்டணமாக வசூலிக்கப்படும்.

11. எண்ணூரில் ரூ. 35 கோடி மதிப்பீடுச் செலவில் அந்த மின் நிலைய எந்திரங்களை மேம்பாடு செய்வதற்கான திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டு வருகிறது. இது 1983—84 இறுதிக்குள் முடிக்கப்பட்டு விடும். இதனால், குறைந்தளவு 50 மெகாவாட் மின்சாரம் கூடுதலாக உற்பத்தி செய்ய முடியும் எண்ணூரிலும், தூத்துக்குடியிலும் எந்திரங்கள் அவ்வப்போது நின்றுவிட்டபடியால், அங்கே முறையே 18.1 சதவீதத்திலிருந்து 29 8 சதவீதம் வரையும், 14.8 சதவீதத்தி லிருந்து 40.8 சதவீதம் வரையும் முறையே உற்பத்தி அளவு குறையும் நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது இது, நாட்டின் மற்றப் பகுதிகளில் இயங்கி வருகின்ற மின் நிலையங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் குறைவாக இருந்த போதிலும், இதன் செயல் திறனை மேலும் மேம்படுத்த வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

12. நடைபெற்று வரும் திட்டங்கள்.—மத்திய, மாநிலத்துறை களில் விரைவில் உற்பத்தி தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படு கிற நடைமுறையில் உள்ள திட்டங்கள் வருமாறு.—

| ஆண்டு | கூடுதல் திறன். | மின் நிலையத்தின் பெயர். |
|---|---|---|
| 1982—83 | 210 மெகாவாட் | தூத்துக்குடி 3-ம் பிரிவு (1982 ஏப்ரலில் மின் உற்பத்தி துவக்கப் பட்டது). |
| 1983—84 | 235 மெகாவாட் | சென்னை அணுமின் நிலையம், முதல் பிரிவு (அணு) |
| | 15 மெகாவாட் | கீழ் பேட்டூர் (புனல்) |
| 1984—85 | 20 மெகாவாட் | சேர்வலாறு (புனல்) |
| | 200 மெகாவாட் | கடம்பறை (உச்சத் தேவை) (புனல்). |

| ஆண்டு. | கூடுதல் திறன். | மின் நிலையத்தின் பெயர். |
|---|---|---|
| 1984-85—தொடர்ச்சி | | |
| | 75 மெகாவாட் | கீழ் மேட்டூர் (புனல்) |
| | 20 மெகாவாட் | குந்தா 5-ம் நிலை கூடுதல் பிரிவு (புனல்). |
| | 16 மெகாவாட் | கீழ்பவானி, பைகாரா. வைகை—சிறிய நீர் மின் திட்டங்கள். |
| | 235 மெகாவாட் | சென்னை அணுமின் நிலையம் 2—வது பிரிவு (அணு). |
| | 210 மெகாவாட் | நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் இரண்டாவது மின் நிலையம் (அனல்). |
| 1985–86 | 30 மெகாவாட் | கீழ் மேட்டூர் (புனல்) |
| | 30 மெகாவாட் | பார்சன்ஸ் பள்ளத்தாக்கு (புனல்). |
| | 200 மெகாவாட் | கடம்பாறை (உச்சத் தேவை) (புனல்). |
| | 210 மெகாவாட் | மேட்டூர் அனல் மின் நிலையத்தில் முதல் பிரிவு (அனல்). |
| | 420 மெகாவாட் | நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் இரண்டாம் மின் நிலையம் (அனல்). |
| 1986–87 | 210 மெகாவாட் | மேட்டூர் அனல் மின் நிலையத்தின் முதல் பிரிவு. |



அனல்—அனல் மின் நிலையம்; புனல்—புனல் மின் நிலையம்; அணு—அணுமின் நிலையம்.

13. நெய்வேலி இரண்டாம் அனல் மின் திட்டம் உட்பட மத்திய மின் திட்டங்களில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத் திறனைப் பங்கிடுவது குறித்து மத்திய அரசு வகுத்துள்ள நெறிமுறை கவலை தருவதாக உள்ளது. சம்பந்தப்பட்ட மாநிலங்களில் நிலவும் பற்றாக் குறையின் அடிப்படையில் 'மின் சக்தியை பங்கிடுவதற்குப் பதிலாக மத்திய அரசு மத்திய நிதி உதவி அடிப்படையில் நெறி முறை ஒன்றை வகுத்துள்ளது. கடந்த 27-8-1982 அன்று நடைபெற்ற மின்சார அமைச்சர்களின் மாநாட்டில் இது குறித்து நமது நிலையை வலியுறுத்திக் கூறியுள்ளேன்.

"புனல் மின் ஆதாரங்கள் அனைத்தையும் பயன்படுத்தி விட்ட நிலையில், தமிழ்நாடு தனது எதிர்காலத் தேவைகளுக்கு அனல் மின் நிலையங்களையே நம்ப வேண்டியுள்ளது. நிலக்கரிச் சுரங்கங்களின் அருகில் அமைக்கப்படும் பெரும்பேரனல் மின் நிலையங்கள் இச்சுரங்கங்களின் நிலக்கரியை முழுவதுமாகப் பயன்படுத்திடும் வகையில் வடிவமைக்கப்படுவதால் புதிதாக அனல் மின்நிலயங்கள் தமிழகத்தில் ஏற்படுத்த நிலக்கரி கிடைக்காது. புதிய அனல்மின் நிலையங்கள் ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு இல்லாத சூழ்நிலையில் மத்திய அரசினால் ஏற்படுத்தப்படும் பெரும்பேரனல் மின் திட்டங்களின் மூலம் தங்கள் தேவைகளை நிறைவு செய்து கொள்ள மின்சாரம் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் விரும்புவது இயற்கையே. மாநிலங்களிலும் மற்றும் மண்டலங்களிலும் நிலவுகின்ற மின்சார பற்றாக்குறையை கருத்தில் கொள்ளாமல் முந்தைய ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்ட மின் துய்ப்பு, மாநிலங்களுக்கான மத்திய அரசின் திட்ட நிதி உதவி ஆகியவற்றின் அடிப்படையில் மத்திய அரசின் பெரும்பேரனல் மின் நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தைப் பகிர்ந்து கொள்வது சம்பந்தமான கொள்கை 1978-ஆம் ஆண்டு வகுக்கப்பட்டது.

மத்திய அரசின் கொள்கை பகுத்தறிவிற்கு ஒவ்வாது ஆகவும் உண்மை நிலைக்குப் புறம்பானதாகவும் அமைந்துள்ளதால், மத்திய மின் திட்டங்களிலிருந்து பெறப்படும் மின்சாரம் மண்டலத்திலுள்ள மாநிலங்களில் மின் பற்றாக்குறை விகிதாச்சார அடிப்படையில் பகிர்வு செய்யப்பட வேண்டும் என தமிழ்நாடு அவ்வப்போது வலியுறுத்தி வருகிறது. இதனால், மின்சார வளர்ச்சித் திட்டங்களில் போதுமான முதலீடு செய்யாத மாநிலங்களும் பயன் அடைந்துவிடும் என்ற அச்சத்தினை மத்திய அரசு தெரிவித்தது. திட்டங்களில் முதலீடு செய்யத் தயாராக இருந்தும், அதே சமயத்தில் போதுமான மின் உற்பத்தி ஆதாரங்கள் இல்லாத மாநிலங்களுக்கும், மின் உற்பத்தி ஆதாரங்கள் இருந்தும் மின்சார வளர்ச்சித் திட்டங்களில் முதலீடு செய்ய விருப்பமில்லாத மாநிலங்களுக்கும் வேறுபாடு உள்ளது. திட்டக்குழு தான் ஆண்டு திட்டத்திற்கும், ஐந்தாண்டுத் திட்டத்திற்கும் ஒப்புதல் அளிக்கிறது. வேண்டுமென்றே பற்றாக்குறை ஏற்பட அனுமதிக்கும் மாநிலங்களை திட்டக்குழு தான் கண்டிக்க வேண்டும். ஆனால்

மின் திட்டங்களில் முதலீடு செய்யத் தயாராக இருந்தும் அதற்கான வாய்ப்புகள் இல்லாத தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கு மத்திய திட்டங்களிலிருந்து கிடைக்கும் மின்சக்தியின் பயனை மறுக்கக்கூடாது.

இது சம்பந்தமாக நெய்வேலி இரண்டாவது சுரங்க மின்சக்தி குறித்து கவனத்தை ஈர்க்க விழைகிறேன். நெய்வேலி இரண்டாவது சுரங்க வெட்டிலிருந்தோ, சென்னை அணுமின் நிலையத்திலிருந்தோ கிடைக்கும் மின்சாரம் முழுவதுமாக நமக்கே கொடுக்க வேண்டுமென்று நாம் கேட்கும் போதெல்லாம் குறுகிய மனப்பான்மையுடைய கோரிக்கை என தவறாகக் கருதப்படுகிறது. நெய்வேலி இரண்டாவது சுரங்கமும் சென்னை அணுமின் நிலையமும், இம்மாநிலத்தில் இருப்பதால் மட்டுமே இங்கு உற்பத்தியாகும் முழு அளவு மின்சக்தியையும் நமக்கே அளிக்க வேண்டும் என்று நாம் கேட்கவில்லை. ஆனால் தென் மாநிலங்களில் நமது பற்றாக்குறையே மிக அதிகமாக இருப்பதாலேயே இத்தகைய கோரிக்கையை எழுப்புகிறோம் என்பதை நான் தெளிவுபடுத்துகிறேன். 1970 ஆம் ஆண்டுகளில் ஆரம்பத்தில் அதாவது, நெய்வேலி இரண்டாவது சுரங்க வெட்டுக்கு அனுமதி அளிக்கும் முன்பே நெய்வேலி இரண்டாவது சுரங்க வெட்டில் உற்பத்தி செய்யவிருக்கும் மின்சாரம் முழுவதையும் நாமே பெற்றுக் கொள்வோம் என்று உறுதி மொழி அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டோம். நாமும் அவ்வாறே உறுதி அளித்தோம். 1970-ஆம் ஆண்டுகளில் நாம் புதிய திட்டங்களுக்கு அனுமதி கோரும்போதெல்லாம் நெய்வேலி இரண்டாவது சுரங்கத்திலிருந்தும், சென்னை அணு மின் நிலையத்திலிருந்தும் கிடைக்கவிருக்கும் முழு அளவு மின்சாரமும் இம்மாநிலத்தின் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டது. நெய்வேலி இரண்டாவது சுரங்கம் மற்றும் சென்னை அணுமின் நிலையம் ஆகியவற்றின் முழு அளவு மின்சக்தியும் இம்மாநிலத்திற்குக் கிடைக்கும் என்ற அடிப்படையிலேயே ரூ. 128 கோடி மதிப்புள்ள காடம்பாறை நீர் ஏற்று மின் திட்டத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டது. ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட நெய்வேலி இரண்டாவது சுரங்க மின் திட்டத்திற்கு, அதற்குப் பின்னால் 1978 ஆம் ஆண்டில் வகுக்கப்பட்ட கொள்கையை அமுல்படுத்த முற்படுத்துவது முன்னுக்குப்பின் முரணானது; இது ஏற்புடையது அல்ல''.

14. புதிய அனல் மின்திட்டங்களின் அதாவது மேட்டூர் அனல் மின் திட்ட விரிவாக்கம் (2×210 மெகாவாட்), வட சென்னை அனல் மின் நிலையம் (5×210 மெகாவாட்), தூத்துக்குடி அனல் மின் திட்ட விரிவாக்கம் (1×210+1×500 மெகாவாட்), 6 எரிவாயு மின் நிலையங்கள் (ஒவ்வொன்றும் 50 மெகாவாட் திறனுடையது) ஆகியவற்றை அமைப்பதன் தேவை 1981 நவம்பரில் நடைபெற்ற மின்சக்தி அமைச்சர்கள் மாநாட்டில் கொள்கையளவில் ஒப்புக் கொள்ளப்பட்டது. மின்சக்தி அமைச்சகமும் மத்திய மின்சார அதிகார மன்றமும் இம்முடிவுக்குக் கட்டுப்பட்டவையாகும்.



15. இதனைத் தொடர்ந்து இத்திட்டங்கள் அனைத்திற்கும் உரிய திட்ட அறிக்கைகள் 1981 டிசம்பரில் மத்திய மின்சார அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டங்களுக்கு இசைவு அளிக்குமாறு அரசு அளவிலும் சென்னையில் 1981 சூலையில் மின் சக்தி அமைச்சகமும், 1982 சூலையில் திட்டக் குழுவும் நடத்திய ஆய்வுக் கூட்டங்களிலும், வலியுறுத்தப்பட்டது. பின்னர் 1981, 1 8.-இல் டில்லியில் நடைபெற்ற மின்சக்தி அமைச்சர்கள் மாநாடுகளிலும், டில்லிக்கு செல்கின்ற போதெல்லாம் பேலும் அண்மையில் கூட 1983 ஜனவரியிலும் மத்திய மின்சக்தி அமைச்சரையும், நிதி அமைச்சரையும், இரயில்வே அமைச்சரையும், திட்டக் குழுவையும் இத்திட்டத்திற்கு அனுமதி அளிக்குமாறு மீண்டும் மீண்டும் கேட்டு வந்துள்ளோம். என்றாலும், மேட்டூர் அனல் மின் விரிவாக்கத் திட்டத்திற்கு மட்டுமே இசைவளிக்கப்பட்டுள்ளது. ஏனைய திட்டங்களுக்கு இசைவளிக்கப்படவில்லை.

16. ரூ.113 கோடி மதிப்பீட்டுச் செலவில் 6×50 மெகாவாட் திறன் கொண்ட காஸ்டர்பைன் (எரிவாயு) மின் நிலையங்களை நிறுவுவதற்கு மத்திய அரசுக்குச் செயற் குறிப்புகளை அனுப்பியுள்ளதாக கடந்த ஆண்டு நான் குறிப்பிட்டேன். எரி எண்ணெயை இறக்குமதி செய்வதற்கு அந்நியச் செலவாணி தேவைப்படுகிறதென்கிற காரணங்காட்டி இந்நிலையங்களை அமைப்பதற்கு இன்னும் அனுமதி வழங்கப்படவில்லை. மராட்டிய மாநிலத்தில் காஸ்டர்பைன் (எரிவாயு மின்) நிலையங்களை (4×60 மெகாவாட்) இயக்குவதற்கு அண்மையில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. நமது திட்டத்திற்கு விரைவில் இசைவளிக்குமாறு நாம் மத்திய அரசை மீண்டும் அணுகியுள்ளோம். இத்திட்டம் மின் சுமையால் ஏற்படும் மின் நிறுத்தங்களையும் தடைகளையும் மின்சாரம் அதிகமாகப் பயன்படுத்தப்படும் நேரத்தின் தேவைக் கட்டுப்பாடுகள் போன்ற நிலைமைகளையும் தவிர்க்கும். காஸ்டர்பைன்கள் (எரிவாயு மின்) மூலம் ஒரு சில நிமிடங்களில் மின்சக்தியை உற்பத்தி செய்ய முடியுமாதலால் அனல் மின் நிலையங்களில் பிரிவுகள் ஏதேனும் பழுதடைந்து விட்டால், தடையின்றி மின்சக்தியை வழங்குவதற்கு காஸ்டர்பைன் (எரிவாயு) மின் உற்பத்தித் திட்டம் சிறந்ததொரு சாதனமாக அமையும்.

17. வருங்காலத்தில் மாநிலத்திற்கு இன்னும் அதிக மின்சக்தி தேவைப்படும் என்பதைக் கருதி நெய்வேலியில் மத்திய அரசு வெட்டவிருக்கும் மூன்றாவது சுரங்கத்திலிருந்து கிடைக்கும பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தி தனது சொந்தச் செலவில் மின் நிலையம் ஒன்றை அமைக்க தமிழ்நாடு அரசு முன்வந்துள்ளது. நெய்வேலியில் 812 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் 5×210 மெகாவாட் திறன் கொண்ட மூன்றாவது அனல் மின் நிலையத்தை அமைப்பதற்கான சாத்தியக்கூறு அறிக்கையை தயாரித்துள்ளோம். இத்திட்டத்தைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தும்.

24. மரக்கட்டையை எரிபொருளாகக் கொண்டு ஒரு மெகாவாட் திறனுள்ள அனல் மின்சக்தி நிலையமொன்றை நிறுவுவதற்காக நீர், மரம், நிலம் ஆகியவை கிடைக்குமா என்பது பற்றிய சாத்தியக்கூறு ஆய்வுகளும் புள்ளி விவரச் சேகரிப்பு பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பல்வேறு இடங்களில் நீர். நிலம், மரம் ஆகியவை எந்த அளவுக்குக் கிடைக்கின்றன என்பது பற்றிய ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. செட்டிநாட்டிலும்; புதுக்கோட்டையிலும் ரூ. 8 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 50 கிலோவாட் கோபர் வாயு மின்சக்திப் பிரிவுகள் இரண்டை நிறுவுவதற்கான செயற் குறிப்புகள், புது டெல்லி கிராமப்புற மின்சக்திக் கழகத்தால் ஏற்பளிக்கப்பட்டுள்ளன.

25. மின் அனுப்புகை-மின் விநியோக முறைகளை வலுப்படுத்தப்படுத்துவதற்காக கடந்த சில ஆண்டுகளாக நாம் முக்கியத்துவம் அளித்து வந்துள்ளோம். இதற்கான நிதி ஒதுக்கீடு 1976-77-ல் ரூ. 13 கோடியாக மட்டுமே இருந்தது. நடப்பு ஆண்டில் இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 77.21 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. 1981-82-ம் ஆண்டில் 407 கி. மீட்டர் நீளத்திற்குக் கூடுதல் உயரழுத்த மின் கம்பித் தொடர் அமைக்கபட்டது. கூடுதல் உயரழுத்த மின் கம்பித் தொடர் துணை நிலையங்கள் 12 தொடங்கப்பட்டன. 1982-83 ஆம் ஆண்டு திட்ட இலக்கு, 1,200 கிலோ மீட்டர் கூடுதல் உயரழுத்த மின் கம்பித் தொடர் அமைப்பதும், 34 துணை நிலையங்களை ஏற்படுத்துவதுமாகும்.

26. தமிழகத்தில் உள்ள 15,735 கிராமங்கள், 47,838 சிற்றூர்கள் ஆகியவற்றில் 1982 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் நாள் வரை 15,611 கிராமங்களுக்கும், 47,468 சிற்றூர்களுக்கும் மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. 1982–83-ல் 49 கிராமங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 31-12-1982 அன்றைய நிலவரப்படி 15,627 கிராமங்களுக்கும், 47,485 சிற்றூர்களுக்கும் மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது. மின் வசதி அளிக்கப்பட வேண்டிய எஞ்சிய கிராமங்களும், சிற்றூர்களும் மலைப் பகுதிகளில் அமைந்துள்ளன. மேலும் அவற்றை அடைவதற்குச் சரியான சாலை வசதிகளும் இல்லை.

27. 1979 மார்ச்31, முடிவிற்குள் ஆதித் திராவிடர் குடியிருப்புகளில் அன்றுவரை இருந்த 25,526 குடியிருப்புகள் அனைத்திற்கும் மின்வசதி அளித்துள்ள பெருமை தமிழ்நாட்டிற்குரியதாகும். 1–4–1979-க்குப் பின்னர் உருவான குடியிருப்புகள் உள்பட 31-12-1982 வரையில் 25,955 ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது. புதிய குடியிருப்புகள் தோன்றத் தோன்ற சம்பந்தப்பட்ட ஊராட்சிகளிடமிருந்து தெரு விளக்குகள் போடுவதற்கான விண்ணப்பங்கள் வரப்பெற்றதும் அப் புதிய குடியிருப்புகளுக்கும் மின்வசதி அளிக்கப்படும்.



28. 1981–82 ஆம் ஆண்டில் 26,209 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது. 31-3-1983 அன்றுள்ளவாறு மொத்த விசையேற்றங்களின் எண்ணிக்கை 9,45,520 ஆகும். விவசாய பம்பு செட்டுகளுக்குப் புதிதாக மின் இணைப்பு வேண்டி இன்னும் விண்ணப்பங்கள் வந்துகொண்டிருக்கின்றன. தற்போது 3 இலட்சம் விவசாய பம்பு செட்டுகளுக்கான விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளது. தற்போதைய மின் பற்றாக்குறை நீங்கியதும், இவ்விண்ணப்பங்கள் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

29. கிராம ஊராட்சியிலுள்ள குடிசைகளுக்கு மின் வசதி அளிக்கும் சிறப்பு நல்வாழ்வுத் திட்டம் முதலில் 1979, மே திங்களில் தொடங்கப்பட்டது. 31–12–1983 வரையில் சுமார் 5.03 இலட்சம் குடிசைகளுக்கு மின் வசதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது 31,728 தகுதியான விண்ணப்பங்கள் மட்டுமே நிலுவையில் உள்ளன. 1980-ல் மின் வாரியம் தெரு விளக்குகளை பராமரிக்கும் பொறுப்பை எடுத்துக் கொண்டதிலிருந்து தெரு விளக்குகள் எரிவதில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இது வரையில் 41,378 குண்டு பல்புகளையும் இரண்டு அடி குழல் விளக்குகளையும் மாற்றி நான்கு அடி குழல் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

30. கடந்த ஆண்டில் செயல்படுத்தியதுபோல் கிராமப்புற மின் விநியோகத்தில் தொகுதி நேரக் கட்டுபாட்டுக் காலங்களிலும் குடிநீர் வழங்கும் பணிகளுக்கென இடைவிடாமல் தடையின்றி மின் சக்தி வழங்கும்பொருட்டு, தெரிந்தெடுக்கப்பட்ட குடிநீர்ப் பணிகளுக்குத் தனி மின் கம்பித் தொடரை அமைப்பதற்கு ரூ. 150 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் 40 குடிநீர் வழங்கும் பணிகளுக்குத் தனி மின் கம்பித் தொடர்கள் அமைக்கப்பட உள்ளது.

31. 1981-82 ஆம் ஆண்டில் கிராமப்புற மின் இணைப்புத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக, ரூ. 8.61 கோடி கடன் வசதியை இந்திய கிராமப்புற மின் இணைப்புக் கழகத்திடமிருந்து நாம் பெற்றுள்ளோம். நடப்பு ஆண்டில் இக்கழகத்திடமிருந்து ரூ. 9 கோடி கடன் வசதிபெறக் கருதப்பட்டுள்ளது.

18. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கூடங்குளத்தில் இரண்டாவது அணு மின் நிலையத்தை அமைப்பதற்கு இம் மாநில அரசு மத்திய அரசை நீண்ட நாட்களாக வற்புறுத்தி வந்துள்ளது. இந்த இடம், மத்திய அரசு இடத் தேர்வுக் குழுவால் தெரிந்தெடுக்கப்பட்ட இடமாகும். குழு தனது அறிக்கையை ஏற்கனவே மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது எனத் தெரிய வருகிறது. இம் மாநிலத்தின் உடனடி மின் தேவையை உணர்வதற்கறிகுறியாக இத்திட்டத்தைச் செயல் படுத்த முன்வர வேண்டும்.

19. ஒகேனக்கல் (800 மெகாவாட்), பாண்டியாறு—புன்னம் புழா (150 மெகாவாட்), நெல்லித் துறை (50 மெகாவாட்), போன்ற திட்டங்கள் பிற மாநிலங்களுக்கிடையே ஆற்று நீரைப் பகிர்ந்து கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தொடர்புள்ளவை. பாண்டியாறு—புன்னம்புழா திட்டத்தைப் பொறுத்த வரையில் 1982 நவம்பர் திங்களில் கேரள-தமிழக அமைச்சர்கள் மட்டத்தில் நடந்த பேச்சு வார்த்தைகளில் சில முன்னேற்றங்கள் காணப்பட்டுள்ளன. ஒருமித்த உடன்பாடு ஏற்படலாமென நம்பப்படுகிறது. அதன்மூலம், மாநிலங்களுக்கிடையேயான திட்டங்களைச் செயல்படுத்த வழியேற்படும்.

20. மாநிலத் திட்டத்தில் மின் சக்தி மேம்பாட்டுக்கு எப் போதுமே முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1980—85), மின்சக்திக்கு ரூ. 1,022.80 கோடி (அதாவது, மின் உற்பத்திக்கு ரூ. 572 கோடி, மின் அனுப்புதல்-விநியோகத்திற்கு ரூ. 325 கோடி, ஊரக மின் வழங்குதலுக்கு ரூ. 115 கோடி, பல்வகைப் பணிகளுக்கு ரூ. 10.50 கோடியும்) நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 1980-81, 1981-82 ஆம் ஆண்டுகளில் ஆன செலவு முறையே ரூ.158.61 கோடி; ரூ. 174.53 கோடியாகும். நடப்பாண்டின் (1982-83 ஆம் ஆண்டின்) திருத்த மதிப்பீடு ரூ. 220.25 கோடியாகும். 1983-84 ஆம் ஆண்டின் திட்ட நிதி ஒதுக்கம் ரூ. 272 கோடியாகும். நடப்பாண்டு நிதி ஒதுக்கத்திற்கு மேலாக ரூ. 52 கோடி அதிகரித்திருப்பதை இது காட்டுகிறது. மின் உற்பத் திக்கு மட்டும் இந்த நிதி ஒதுக்கத்தில் ரூ. 40.28 கோடி அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. நிறைவேற்றப்பட்டு வரும் திட்டங்களுக்காகவும் அனைத்து மின் உற்பத்தி திட்டங்கள் குறித்து முன் நடவடிக்கை மேற்கொள்வதற்காகவும், மேலும் அதிக நிதி ஒதுக்கம் செய்ய வேண்டிய தேவையை இது எடுத்துக் காட்டுகிறது.

21. கிடைக்கக்கூடிய எல்லா வாயில்களிலிருந்தும் மின் சக்தி உற்பத்தியைப் பெருக்கும் நோக்குடன், மைக்ரோ, மினி மற்றும் சிறு அளவு நீர் மின் சக்தித் திட்டங்களை உருவாக்கி நிறை வேற்றுவதில் நாம் முழு மூச்சுடன் தீவிர நடவடிக்கையில் ஈடு பட்டுள்ளோம். ஏற்கெனவே ரூ. 11.71 கோடி மதிப்பீட்டு செலவில் 3 மைக்ரோ நீர் மின்சக்தித் திட்டங்களுக்கு, மத்திய அரசு இசைவளித்துள்ளது. இத் திட்டங்களுக்கு, ஜப்பான் நாட்டு



பென் குழுவின் விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டங்கள் தவிர, ரூ. 2.4 கோடி மதிப்பீட்டுச் செலவில் சிறுவாணியில் 3 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட மைக்ரோ நீர்மின் திட்டம் ஒன்றுக்கான செயற் குறிப்பு, 1982 சனவரியில் மத்திய மின் கழகத்தின் இசைவுக்காக அனுப்பப் பட்டுள்ளது. மேலும், ரூ. 85 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் பரம்பிக்குளம் ஆழியாறு தொகுதியில் புனாச்சியில் ஒரு மெகாவாட் திறன் கொண்ட இரண்டு நிலையங்களுடன் மற்றொரு திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அத்தகைய மைக்ரோ மினி நீர் மின்சக்தித் திட்டங்கள் பலவற்றிற்கு நாம் திட்டங்கள் தீட்டியுள்ளோம். அண்மையில் நடைபெற்ற மின் சக்தி அமைச்சர்களின் மாநாட்டில் கருத்து தெரிவித்தது போல், இந்தத் திட்டங்களுக்கு அனுமதி வழங்கும் அதிகாரங்கள் மாநில அளவில் ரூ. ஒரு கோடி என்று 1948-ல் நிர்ணயித்துள்ளதை இந்திய அரசு அதிகப்படுத்தி திட்டமொன்றிற்கு ரூ. 10 கோடி என்றாவது உயர்த்த வேண்டும்.

22. இம் மாநிலத்தில் இயற்கை வள வாயில்களைப் பயன் படுத்தி மின் உற்பத்தி செய்வது ஒரு வரம்புக்குட்பட்டேயுள்ளதால், மின் சக்தி பெறுவதற்கான மாற்று வாயில்களைப் பயன்படுத்து வதில் நாம் ஆர்வம் காட்டி வருகிறோம். இந்த வகையில் நாம் மேற்கொண்டுள்ள முயற்சிகளை எனது முந்திய வரவு செலவுத் திட்ட உரைகளில் எடுத்துக் கூறியுள்ளேன். செங்கற்பட்டு மாவட்டம், உத்தண்டி கிராமத்தில் ஒரு (போட்டோ வோல்டைக்) சூரிய ஒளிக்கதிர்களால் இயங்கும் பம்ப் ஒன்று 1982 மே திங்களில் செய்முறை விளக்கத் திட்டமாக நிறுவப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். அந்தப் பம்ப் இயங்குவது பொதுவாக திருப்தி அளிப்பதாக உள்ளது எனத் தெரிய வந்துள்ளது. அந்த பம்புகள் குறைந்த விலைக்குக் கிடைக்குமானால், மேலும் அத்தகைய பம்புகளை வாங்கி நாம் நிறுவலாம்.

23. 1982-83-ல் மின் சக்தி சேமிப்பு இயக்கம் ஒன்றை நாம் தொடங்கினோம். மின் அனுப்புகை முறையில் சில மாற்றங்கள் செய்வதன் மூலம் மின்சக்தியைச் சேமிப்பதற்கான வாய்ப்பு உள்ளது என்பதை, செங்கற்பட்டு மின் திட்டத்திலுள்ள ஒரு கிராமத்தில் விசையேற்றங்களை ஆய்வு செய்வதன் மூலம் தெரிய வந்துள்ளது. தொழிற்சாலை உரிமையாளர்கள் தாம் பயன் படுத்தும் மின் சக்தியைச் சிக்கனமாகப் பயன்படுத்த பல நட வடிக்கைகளை மேற்கொள்ளலாம். மின்சக்தி சேமிப்பின் தேவை குறித்துப் பத்திரிகைகள் மூலமும், வானொலி மூலமும் தொலைக் காட்சி மூலமும் மின் நுகர்வோருக்குப் பிரசாரம் செய்யப்படுகிறது. வீடுகளில் மின்சாரம் பயன்படுத்துவோர், வணிக நிறுவனங்கள், உழவர்கள் ஆகிய பல்வகை மின் நுகர் வோருக்குக் கருத்துரைகள் வழங்கும் வெளியீடு ஒன்று தயாரிக்கப் பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

(19.8 சதவீதம்) ஆகும். மின் கம்பித் தொடர் இணைப்பும் பம்பு செட்டுகளின் எண்ணிக்கையும் தமிழகத்தைக்காட்டிலும் இம் மாநிலங்களில் மிகக் குறைந்திருந்த போதிலும், அவற்றில் காணப்படுகிற மின் கம்பித் தொடர் இழப்பு அதிகமாகவே உள்ளது.

36. எரிபொருளைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல், மின் சக்தி திருட்டையும், தவறாகப் பயன்படுத்துவதையும் கண்டு பிடிக்க தீவிர முறையில் வரிவிதிப்பு செய்தல், மின் கட்டணப் பட்டியல்கள் தயாரித்துப்பணம் வசூலித்தல், பணியாளர்களை ஆங்காங்கே வேலைக்குப் பிரித்தனுப்புதல் போன்ற ஏனைய பல்வேறு நடவடிக்கைகளையும் நாம் மேற்கொண்டுள்ளோம். மின்சக்தி திருட்டையும், மீட்டர்களைத் தவறான முறையில் இயங்கச் செய்வதையும் தடுப்பதற்காக முறையாகவும், அடிக்கடியும் சென்று ஆய்வு செய்வதன்மூலமும், பெருமளவில் திடீர் சோதனைகள் திடீர் ஆய்வுகள் நடத்துவதன் மூலம் தீவிரத் தடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளோம். 1981-82 ஆம் ஆண்டில் இத்தகைய முறைகேடுகள் 1.2 இலட்சம்அளவில் கண்டுபிடிக்கப்பட்டு, கூடுதலாக ரூ. 33.40 இலட்சம் வருவாய் கிட்டியது. நடப்பாண்டில், 56,010 மின் இணைப்புக்களில், முறைகேடுகள் செய்யப்பட்டுள்ளது கண்டு பிடிக்கப்பட்டு, கூடுதலாக ரூ. 11.35 இலட்சம் வருவாய் கிடைக்க கட்டண விதிப்பு செய்யப்பட்டுள்ளது.

37. மின் கட்டணத்தை அந்தந்த இடத்திலேயே மின் கட்டண அட்டையில் குறிப்பிடுதல் பட்டியிட்டு கட்டணத் தொகை வசூலிக்கும் முறை 1982 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து செயலுக்குக் கொண்டு வரப்பட்டு அது இடைவிடாமல் மேம்பாடடைந்து வருகிறது.

38. கடந்த ஆண்டில் அரசுக்கும் மின்துறைப்பணியாளர்களுக்கும் இடையே பயனுள்ளவகையில் ஒத்துழைப்பு நிலவி வந்ததைக் குறிப்பிடுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். மின் துறையில் இவ்வாண்டு எந்த வகையான கிளர்ச்சிகளோ வேலை நிறுத்தங்களோ நடைபெறவில்லையென்பதே இந்த சுமுக உறவுக்கு எடுத்துக் காட்டு. பணியாளர்களின் பிரச்சினைகளை பரிவுடன் கவனித்தது நிர்வாகம். மின்துறை செவ்வனே இயங்க அக்கறையோடு பணிபுரிந்தனர் தொழிலாளர்கள்.

39. மின் உற்பத்தியைப் பெருக்க மாபெருந் திட்டத்தை நாடு தீட்டியுள்ளது. இப்பணியில் மாநிலங்கள் பெரும் பங்கேற்க வேண்டியுள்ளது. இத்துறைப் பணிகளை மேன்மேலும் பரவலாக்கி நடவடிக்கைகள் எடுப்பதன் மூலமாகத்தான் இம்மாபெரும் பணியை நாம் சாதிக்க முடியும். ராஜாத்யக்ஷா குழு அளித்துள்ள கருத்துப்படி, இத்துறையின் பணிகளை அளவுக்கு மீறி ஓரே இடத்தில்குவிப்பதால், மைய அரசுக்குப் பெருஞ்சுமையே



ஏற்படும். இதன் விளைவாக திறமைக்குறைவு ஏதேனும் ஏற்படுமானால் அதனால் நாளடைவில் நாடு முழுவதும் சீர்கேடுகள் உண்டாகும். நாடெங்கிலும் மின்ஏற்பாடுகளைநிருவகிக்கஆதாயம் தரும் சிறு அளவிலான அமைப்புகளை உருவாக்கி அவற்றைத் தேசிய அளவில் ஒருங்கிணைப்பதுதான் நல்லது. ராஜாத்யக்ஷா குழு பின்வரும் பெரும் மாறுதல்களைச் செய்ய வேண்டுமென்று கருத்து தெரிவித்துள்ளது. வட்டார மின் ஆதிகார மன்றங்களை ஏற்படுத்துதல், மின் வழங்கல் சட்டம் முதலியவற்றிற்குத் திருத்தங்கள் கொண்டு வருதல், மாநில மின் வாரியங்களிடமிருந்து அவற்றின மின் உற்பத்தியில் பெரும் பகுதியையும் மாநில மின் அனுப்புகை உயரழுத்த மின்கம்பி இணைப்புத் தொடர்களின் பெரும் பகுதியையும் எடுத்துக்கொண்டு, நாட்டின் மொத்த மின் உற்பத்தியின் 45 விழுக்காட்டினை மத்திய அரசுத் துறையில் வைத்தல் போன்ற இப்பரிந்துரைகளை அக்குழு அளித்துள்ளது. வட்டார மின் அதிகார மன்றம் அமைத்தல் மின் ஏற்பாடுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்பதும், மின் உற்பத்தி நிலையங்களின் முழுப்பயனளவிற்கும் அவற்றை பயன்படுத்த வேண்டும் என்பதும், புனல் மின் நிலையங்கள் அனல் மின் நிலையங்கள், அணுமின் நிலையங்கள் போன்ற மின் நிலையங்களின் மின் உற்பத்தியைத் தக்கவாறு இணைக்க வேண்டுமென்பதும், மின் திட்டங்களில் போதிய அளவில் முதலீடு செய்ய வேண்டுமென்பதும் அக்குழு தெரிவித்துள்ள முக்கியமான மேலும் சில பரிந்துரைகளாகும். மின் ஏற்பாடுகள் ஒருங்கிணைத்து செயல்படுவதற்கும், மின் உற்பத்தியை முழுப் பயனளவிற்கும் பயன்படுத்துவதற்கும், மத்திய அரசு, தனக்கே சொந்தமான மின் உற்பத்தி நிலையங்களை அமைத்திட வேண்டும் என்பது அவசியமில்லை. ஐரோப்பாவில் தனித்தனி நாடுகள்கூட ஒன்றாக இணைந்து, தங்கள் மின் இணைப்புகளை ஒருங்கிணைந்த முறையில் இயக்கி வருகின்றன. அதே நேரத்தில் தத்தம் மின் நிலையங்களின் உடைமை உரிமையையும் அவை தங்களிடமே வைத்து வருகின்றன. எனவே, இதில் வேண்டுவதெல்லாம் ஒப்புக்கொள்ளும் கோட்பாடுகளுக்கிணங்க மின் உற்பத்தி நிலையங்களைத் திறம்பட ஒருங்கிணைத்து, மாநிலங்கள் தங்களுக்கிடையே ஒத்துழைப்பை உருவாக்குவதும், மத்திய அரசு பயன்தரத்தக்க வகையில் உறுதுணையாக இருப்பதும்தான். வட்டார மின்சார மன்றங்களைத் தோற்றுவிப்பது இதற்குப் பரிகாரமல்ல, இப்பொருள் பற்றி, இவ்வரசும், இம்மாநில மக்களும் பெரிதும் கவலை கொண்டிருக்கிறார்கள். இப்பிரச்சினையைப்பற்றி, கடந்த மின்சார அமைச்சர்கள் மாநாட்டில் நான் குறிப்பிட்டு, மைய அரசு மின் உற்பத்தியில் பெரும் பகுதியையும், மின்சார அனுப்புகை ஏற்பாடுகளில் பெரும்பகுதியையும் ஏற்றுக்கொள்வதற்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளிக்காது என்பதையும் தெரிவித்துள்ளேன். முக்கியமான இப்பிரச்சினையின் மீது மாண்புமிகு உறுப்பினர்களின் ஆய்ந்த கருத்துக்கள் பெரிதும் பயன்தரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

32. 1981-82, 1982-83 ஆகிய ஆண்டுகளுக்குரிய வரவு—செலவு விவரங்கள்:

| (1) | 1981-82 (திருத்த மதிப்பீடு.) (2) | 1982-83 (வரவு செலவு திட்ட மதிப்பீடு) (3) |
|---|---|---|
| | | (ரூபாய் கோடியில்.) |
| 1. மின்சக்தி விற்பனை .. | 276.26 | 304.88 |
| 2. பல்வகை வருவாய் .. | 6.51 | 7.00 |
| | 282.77 | 311.88 |

செலவினங்கள்.

| (1) | 1981-82 (திருத்திய மதிப்பீடு.) (2) | 1982-83 (வரவு செலவுத் திட்ட மதிப்பீடு.) (3) |
|---|---|---|
| | | (ரூபாய் கோடியில்.) |
| 1. எரிபொருள், மின்சாரம் வாங்கியது மின் உற்பத்திக்கான ஆயத்தீர்வை வகையில். | 215.56 | 286.11 |
| 2. [illegible] அனாமத்துச் செலவு உட்பட இயக்கிப் பராமரிக்கும் வகையில். | 99.73 | 124.27 |
| 3. சேமநிதி | 37.42 | 41.70 |
| 4. வட்டி | 69.79 | 84.78 |
| | 422.50 | 536.86 |
| வருவாயில் துண்டு விழும்தொகை | 139.73 | 224.98 |

33. 1976-77 ஆம் ஆண்டில் ரூ. 188.13 கோடியாக இருந்த வாரிய வருவாய் அளவு 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 282.77 கோடி அளவுக்கு உயர்ந்த போதிலும், வாரியத்தின் நிதி நிலைமையில் முன்னேற்றம் இல்லை. ஏனென்றால், 1976-77 ஆம் ஆண்டில் ரூ. 210 கோடியாக இருந்த வாரிய செலவினங்களின் அளவு 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 422.50 கோடி அளவிற்கு உயர்ந்துள்ளது. நிலக்கரி, உலை எண்ணெய், சரக்குக் கட்டணம், வெளியிலிருந்து வாங்கும் மின்சாரம் ஆகியவைகளின் விலையேற்றம் காரணமாக வருவாய் தொடர்பான செலவினம் அதிகரித்துள்ளது.

34. 1977-82 ஆம் ஆண்டில் ரயில்வே சரக்குக் கட்டணம் தவிர, அனல் மின் நிலையங்களுக்குரிய எரிபொருள்கள் (நிலக்கரி, உலை எண்ணெய்) ஆகியவற்றின் விலைகள் மிக உயர்ந்து விட்டன. நிலக்கரியின் விலை டன் ஒன்றுக்கு ரூ. 88 ஆக இருந்தது டன் ஒன்றுக்கு ரூ. 194 ஆக உயர்ந்திருக்கையில், உலை எண்ணெயின் விலை கிலோ லிட்டருக்கு 1,024 ரூபாயிலிருந்து 2,691 ரூபாயாக அதிகரித்தது. நிலக்கரியை அனுப்புவதற்கான ரயில்வே சரக்குக் கட்டணம் டன் ஒன்றுக்கு 56 ரூபாயிலிருந்து 125 ரூபாயாக அதிகரித்துள்ளது. கடல் வழியாக நிலக்கரியை அனுப்புவதற்கான கடல் வழிச் சரக்குக் கட்டணம், இதரக் கட்டணங்கள் டன் ஒன்றுக்கு ரூ. 197 ஆக இருந்தது. ரூ. 315 ஆக அதிகரித்துள்ளது. இவ்வாண்டில் எல்லா வகையான இவ்விலை ஏற்றங்கள் காரணமாக வாரியத்துக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 124.57 கோடி கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது.

35. மின் திட்டத்திலிருந்து கிடைக்கும் நிதியை ஒழுங்குபடுத்தி, வருவாயினை அதிகரிக்கும் பொருட்டு, நாம் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். தமிழகத்தில் மின் விநியோகத்தில் கிராமப்பகுதி, குன்றவழுத்த மின் பங்கீடு பெரும் பகுதியாக (அதாவது 75 சதவீதம் இருந்தபோதிலும், 1974-75ல் மின் கம்பி வழியான மின்சார இழப்பு 21.5 சதவீதம் எனக் கணக்கிடப்பட்டது. மின் இணையத்தில் தொடர்ந்து மின்சுமை அதிகரிக்கப்பட்ட போதிலும், திட்டமிட்ட நடவடிக்கைகள் மூலம், தமிழ்நாடு மின்வாரியம், 1974-75ல் 21.5 சதவீதமாக இருந்த மின்சார இழப்பை 1981-82-ல் 18.9 சதவீதமாகக் குறைத்துள்ளது. இந் நாட்டிலுள்ள பிற மாநிலத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், அதாவது, இந்நாட்டிலுள்ள மொத்த மின் அமைப்பில், தமிழ்நாட்டில் மட்டும் 3 இலட்சம் கிலோ மீட்டர் மின் கம்பித் தொடர் இருப்பதையும் இந்த மின் இணைப்பில் பல லட்சக்கணக்கான பம்பு செட்டுகள் இயங்குவதையும் கருத்திற்கொண்டு பார்த்தால், இந்த அளவுக்கு மின் இழப்பு குறைந்திருப்பது ஒரு மாபெரும் சாதனையாகும். இதர மாநிலங்களுடன் ஒப்பு நோக்கிப் பார்க்கும்போது, 1979-80 ஆம் ஆண்டின் புள்ளி விவரங்களின்படி ஆந்திரப் பிரதேசம் ([illegible] சதவீதம்), கர்நாடகம் (21.2 சதவீதம்), ஹரியானா ([illegible] சதவீதம்), மத்தியப் பிரதேசம் (22.5 சதவீதம்), பஞ்சாப்

...ப தமிழ்நாடு மின்வாரியத்தின் காலாண்டு ... வரவு-செலவுத் திட்டத்தை இம்மாமன்றத்தின் முன் வைத்து அதன் மீது மாண்புமிகு உறுப்பினர்களின் பல்வேறு கருத்துக்களை ... அறிய விழைகின்றேன். [illegible]

## இணைப்பு 2.

### வருடாந்திர திட்டம்.

(ரூபாய் கோடியில்)

| (1) | அனுமதி அளிக்கப் பட்ட தேதி. (2) | அனுமதி அளிக்கப் பட்ட தேதியும் தணிக்கை செலவும். (3) | தணிக்கை செலவு. (தற்போது). (4) | 3-1-80வரை செலவு. (5) | ஆறாவது திட்டம் (1980-85 ஒப்புதல் அளிக்கப் பட்டது). (6) | 1980–81 ஒப்புதல் அளிக்கப் பட்டது. (7) | 1980–81 கணக்குகள். (8) | 1981–82 ஒப்புதல் அளிக்கப் பட்டது. (9) | 1981–82 கணக்குகள். (10) | 1982–83 ஒப்புதல் அளிக்கப் பட்டது. (11) | 1982–83 திருத்திய மதிப்பீடு (12) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. மின் உற்பத்தி— | | | | | | | | | | | |
| முடிவுற்ற நீர்மின் திட்டங்களும் அனல் மின் திட்டங்களும் .. .. .. | .. | 90.19 | 196.84 | 181.48 | 0.17 | 0.17 | 7.57 | .. | .. | 0.58 | 0.50 |
| 1. *தூத்துக்குடி முதல்நிலை (2×210 மெ.வா.(2,200 மி.யூ. .. .. .. | நவம்பர் 1973. | 75.05 | 178.00 | 160.07 | 17.93 | 7.00 | 7.86 | 10.93 | 1.46 | 8.70 | 6.55 |
| 2 *தூத்துக்குடி இரண்டாவது நிலை (0×210 மெ.வா.) 1,100 மி.யூ. | செப்டம்பர் 1977. | 71.21 | 88.75 | 48.47 | 36.53 | 24.70 | 21.68 | 10.00 | 10.52 | 4.90 | 6.59 |
| 3 *சுருளியாறு (1×35 மெ.வா.) 114 மி.யூ. | மே 1973. | 6.59 | 26.62 | 22.19 | 3.36 | 0.99 | 5.13 | 0.41 | 0.13 | .. | .. |
| 4 *மேல் கொடுமண்-லோன் பள்ளத்தாக்கு திருப்புத் திட்டம். | .. | 0.44 | 1.48 | 1.18 | 0.39 | 0.17 | 0.11 | 0.15 | 0.07 | .. | .. |
| 5 *சேர்வலாறு நீ.மி.தி. (1×20 மெ.வா.) (I & II 27MU ) | ஜூலை 1974 75/மி யூ | 8.35 | 34.67 | 5.14 | 13.07 | 2.00 | 2.78 | 5.00 | 8.74 | 4.65 | 5.75 |
| 6 *காடம்பாறை நீரேற்று மி.தி. (41×00மெ.வா.) 79 மி யூ. 1977 மீ | பிப்ரவரி 1973 டிசம்பர் 1977 | 35 12 | 128 21 | 30 58 | 65.00 | 13.00 | 13.64 | 23.00 | 18.43 | 25.00 | 23.00 |
| 7. பாண்டியாறு-புன்னம்புழா நி.மி. (2×50மெ.வா.) 391 மி.யூ. | அக்டோபர் 1968. | 15.25 | 110.00 | 0.77 | 30.00 | .. | .. | 1.00 | 1.00 | .. | .. |
| 8 நெல்லித்துறை நி.மி. (1×50 மெ.வா.) 109 மி.யூ. | ஜூன் 1974. | 8.54 | 23.70 | 0.45 | 10.00 | .. | .. | 1.00 | .. | .. | .. |
| பகுதி மொத்தம் (நடைபெறும்) உற்பத்தி. | .. | 310.74 | 788.37 | 450.38 | 176.45 | 48.03 | 58.77 | 51.49 | 39.87 | 43.75 | 42.29 |

## இணைப்பு

### திட்டக்காலங்களில் தமிழ் நாட்டில் மின் வளர்ச்சி

| விவரங்கள். | முதலாவது திட்டத்திற்கு முன்பு (1951 மார்ச் திங்கள் 31-ம் தேதி). | முதலாவது திட்டம் 1951–56. | இரண்டாவது திட்டம் 1956–61. | மூன்றாவது திட்டம் 1961–66. | வருடாந்திர திட்டம்/ (1966–69.) | நான்காவது திட்டம்/ 1969–74. | ஐந்தாவது திட்டம்/ 1974–75 | 1981–82 தோராயமாக. |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| அ. மின் உற்பத்தி— | | | | | | | | |
| 1. நிறுவப்பட்ட திறனளவு (மெகாவாட்டுகளில்). | 156 | 256 | 571 | 1,070× *300 | 1,070× *400 | 1,654× *600 | 1,824× *600 | 2,329 *600 |
| 2. மின் உச்சத் தேவை (மெகா வாட்டுகளில்). | 110 | 172 | 381 | 717 | 997 | 1,207 | 1,641 | 1,995 |
| 3. உற்பத்தி செய்யப்பட்ட மின் சாரமும் வழங்கப்பட்ட மின் சாரமும் (மில்லியன் யூனிட்டுகளில்). | 630 | 1,053 | 2,214 | 4,041 | 5,260 | 6,948 | 9,453 | 11,509 |
| இ. மின் அனுப்புதலும் வினியோகித்தலும்— | | | | | | | | |
| 1. கூடுதல் உயர் அழுத்த-உயர் அழுத்தக் கம்பிகளின் நீளம் (கிலோ மீட்டர்களில்). | 6,936 | 11,479 | 24,194 | 39,806 | 48,336 | 68,737 | 72,689 | 84,364 |
| 2. குறைவு அழுத்தக் கம்பி களின் நீளம் (கிலோ மீட்டர்களில்). | 5,728 | 13,055 | 35,352 | 73,198 | 1,04,977 | 1,97,017 | 2,22,659 | 2,67,121 |
| 3. கூடுதல் உயர் அழுத்தத் துணை நிலையங்கள். | 31 | 48 | 70 | 98 | 119 | 146 | 174 | 220 |
| 4. உயர் அழுத்தத் துணை நிலையங்கள். | 25 | 41 | 73 | 103 | 114 | 125 | 150 | 186 |
| 5. மின் பங்கீட்டு நிலையங்கள் .. | 1,591 | 3,773 | 10,004 | 17,360 | 22,842 | 37,453 | 43,666 | 58,685 |
| 6. மின்சாரம் பயன்படுத்துவோர் எண்ணிக்கை (இலட்சத்தில்). | 2.5 | 4.5 | 7.7 | 13.6 | 18.22 | 27.07 | 34.00 | 48.06* |
| 7. நபர் ஒருவர் பயன்படுத்தும் மின்சாரத்தின் அளவு (யூனிட்டுகளில்). | 12 | 21* | 60 | 92 | 116 | 127 | 157 | 185 |

*நெய்வேலி.

*நடப்பாண்டில் 1.45 இலட்சம் குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டதும் உள்ளடங்கும்.

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| புதிய உற்பத்தி திட்டங்கள் (ஒப்புதலளிக்கப்பட்டது) 1980-81 துவக்கம். | | | | | | | | | | | |
| 9. *கீழ் மேட்டூர் நி.மி. (8×15×120 மெ.வா.) 537 மி.யூ. | செப்டம்பர் 1980. | 83.60 | 111.42 | 3.23 | 86.02 | ** 20.00 | 3.95 | 10.00 | 6.62 | 29.50 | 29.50 |
| 10. *மேட்டூர் அனல் மின் நிலையம் (2×210 மெ.வா.) 2,247 மி.யூ. | செப்டம்பர் 1980. | 189.70 | 253.68 | 0.01 | 161.30 | புதிய திட்டங்களுக்காக. | 0.10 | 12.00 | 19.98 | 31.00 | 16.75 |
| 11 *குந்தா கூடுதல் யூனிட் பவர் அவுஸ் (1×20 மெ.வா.) 36 மி.யூ. | மே, 1980. | 5.03 | 5.03 | .. | 5.03 | .. | 0.15 | 1.97 | 0.23 | 2.00 | 0.20 |
| 12. வைகை அணை (சிறு நீ.மி.தி.) 6 மெ.வா./ 24 மி.யூ. | ஆகஸ்ட் 1981. | 3.97 | 3.97 | .. | .. | .. | .. | .. | .. | 4.00 | 0.15 |
| 13. பைக்கார அணை (சிறு நீ.மி.தி.) 2 மெ.வா/.10 மி.யூ. | ஷை | 1.49 | 1.49 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 14. கீழ்பவானி (சிறுநீ.மி.தி.) 8 மெ.வா./39 மி.யூ. | ஷை | 6.26 | 6.26 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| பகுதி மொத்தம்(ஒப்புதலளிக்கப்பட்ட(புதிய) திட்டங்கள். | ஷை | 290.05 | 381.85 | 3.24 | 252.35 | 20.00 | 4.20 | 23.97 | 26.83 | 56.50 | 46.60 |

நீ.மி.தி. — நீரேற்று மி.தி.

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| II. புதிய உற்பத்தி திட்டங்கள் (ஒப்புதல் அளிக்கப்படாதது). | | | | | | | | | | .. | |
| 1. எண்ணூர் மேம்பாடு திட்டம் | .. | 18.04 | 35.00 | .. | .. | .. | .. | .. | 0.22 | .. | .. |
| 2. பேசின் பிரிட்ஜ் மேம்பாடு திட்டம். | .. | .. | .. | 3.77 | 18.50 | .. | .. | .. | 6.89 | 7.00 | 3.75 |
| 3. மேல் அமராவதி (1 × 30 மெ.வா.) 104 மி.யூ. | .. | .. | 19.33 | .. | .. | .. | .. | 3.10 | .. | .. | .. |
| 4. ஷண்முகாநதி (1 × 30 மெ.வா.) 125 மி.யூ. | .. | .. | 20.51 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 5. ஒகேனகல் (1 × மெ.வா.) 53 மி.யூ. | .. | .. | 75.00 | .. | .. | .. | .. | 3.00 | .. | .. | .. |
| 6. சோழத்திபுழா .. | .. | .. | 23.46 | .. | 125.00 | .. | 0.03 | 3.00 | 0.04 | 10.00 | 10.00 |
| 7. * வடசென்னை (603 மெ.வா.) 3,370 மி.யூ. | .. | .. | 273.37 | .. | | | | | | | |
| 8. * பேசின் பிரிட்ஜ் பவர் ஹவுஸ் (110 மெ.வா) 550 மி.யூ. | .. | .. | 153.65 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 9. சின்னார்-சித்தார் 19 மி.யூ.). | .. | .. | 1.15 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| பகுதி மொத்தம் (ஒப்புதலளிக்கப்படாத புதிய திட்டங்கள்). | .. | .. | 601.46 | .. | 143.50 | .. | 0.03 | 6.10 | 6.17 | 17.00 | .. |
| ஆக மொத்தம் (உற்பத்தித் திட்டங்கள்.) | .. | .. | 1,786.16 | .. | 572.30 | 68.03 | 63.00 | 81.56 | 72.39 | 104.04 | .. |
| மொத்த மின் அனுப்புதல் பங்கீடு செய்தல் மொத்த உற்பத்தி திட்டங்கள். | | | | | .. | .. | .. | .. | .. | .. | .. |
| மின் அனுப்புதல் பங்கிடுதல் மின் இழப்பு. | | | | | .. | 4.00 | .. | 65.00 | 68.72 | .. | .. |

* 1,050 மெ.வா. 5,617 மி.யூ. 614.45 கோடி தற்பொழுது டிசம்பர் 1981-ல் திருத்தப்பட்டது.

** வட சென்னை அனல் மின் திட்டத்துடன் இணைக்கப்பட்டுவிட்டது.

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மின் இழப்பு திட்ட மேம்பாடுகள் .. .. | .. | .. | .. | .. | .. | 28 | .. | .. | .. | .. | .. |
| மொத்த மின் அனுப்புதல்; பங்கீடு செய்தல் மாநில திட்டத்தில் ரயறுக்கப் பட்டது .. .. | .. | .. | .. | .. | 325.00 | 70.00 | 60.50 | 65.00 | 68.22 | 77.21 | 77.21 |
| III மொத்த கிராம மின் வசதி.. .. .. | .. | .. | .. | .. | 115.00 | 15.53 | 34.59 | 19.50 | 32.64 | 24.54 | 39.00 |
| IV ஆய்வு, ஆராய்ச்சி, பல்வகை .. .. | .. | .. | .. | .. | 10.50 | 0.40 | 0.52 | 1.00 | 1.34 | 1.00 | 1.00 |
| நிகர மொத்த I லிருந்து IV வரை .. .. | .. | .. | .. | .. | 1,022.80 | 154.96 | 158.13 | 167.06 | 174.73 | 220.00 | .. |

*ஓதுக்கீடு செய்யப்பட்ட திட்டங்கள் (மின் உற்பத்தி).

ஓதுக்கீடு செய்யப்பட்ட திட்டங்கள் (பகுதி).

×குந்தா மூன்றாம் நிலை (245), பரம்பிக்குளம்-ஆழியார் திட்டம், (185 மெ.வா.), பேசின் பிரிட்ஜ் விரிவாக்கம் (30 மெ.வா.), கோடையாறு (100 மெ.வா.), எண்ணூர் (340 மெ.வா.), எண்ணூர் அ.மி.நி. விரிவாக்கம் (110 மெ.வா.), நடு வட்டம் திருப்பு விட்டம் (69 மி.யூ.).

** புதிய திட்டங்களுக்கு.

## இணைப்பு III

மின் அனுப்புதலும் வினியோகித்தலும்:
கீழ்க்கண்ட 230 கே.வி. கம்பித் தொடர்கள் இயக்கி வைக்கப்பட்டுள்ளன:

| பெயர். | நீளம். (கிலோ மீட்டர்களில்). | இயக்கிவைக்கப்பட்ட தேதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 தூத்துக்குடி-மதுரை .. | 450 | 22-6-79 |
| 2 குந்தா-இங்கூர்—மேட்டூர் ... | 172 | 31-1-80 (குந்தா-இங்கூர்.<br>23-9-81 (இங்கூர்-மேட்டூர்). |
| 3 கல்பாக்கம்—விழுப்புரம்-நெய்வேலி | 129 | 18-11-81 (விழுப்புரம்-நெய்வேலி வரை).<br>12-4-82 (கல்பாக்கம்—விழுப்புரம்). |
| 4 தூத்துக்குடி-காரைக்குடி-திருவாரூர்-நெய்வேலி. | 440 | 2-10-80 (தூத்துக்குடி-காரைக்குடி).<br>10-10-80 (காரைக்குடி-திருவாரூர்).<br>30-8-81 (திருவாரூர்-நெய்வேலி). |
| 5 கல்பாக்கம்-சிங்கப்பெருமாள் கோயில். | 35 | 4-4-77 |
| ட்டூர்—சிங்கப்பெருமாள் கோயில் (செங்கல்ப...) | 55 | 23.6-82. |
| 7 கயத்தார் மதுரை (இருவழி) .. | 131 | 21—8—82. |
| 8 சிங்காரப்பேட்டையில் இருந்து கொரட்டூர் தானியங்கும் துணை மின் நிலையம் கம்பித் தொடர். | 12 | 31—10—82. |





| அமைக்கப்பட்டுள்ள கம்பித் தொடர். | கிலோ மீட்டர். | முன்னேற்றம். | குறியீடு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 கல்பாக்கம்—ஆரணி .. .. | 95 | 80% | 82.83 |
| 2 தூத்துக்குடி-கயத்தார் சர்கியூர்ட் | 52 | 86% | 82.83 |
| 3 திருச்சி—பெரம்பலூர் II.. .. | 64 .. | 63% | 82.83 |
| 4 இடுக்கி-உடுமலைப்பேட்டை .. | 28 | 73% | 82.83 |

இயக்கி வைக்கப்பட்ட 230 கே.வி. துணை மின் நிலையங்கள்:

| | | | |
|---|---|---|---|
| 1 மேட்டூர் தானியங்கும் துணை மின் நிலையம் | ... | 27—1—79 | 2×50 எம்.வி.ஏ. |
| 2 தூத்துக்குடி தானியங்கும் இரண்டாவது நிலை. | .. | 22—6—79 | 1×50 எம்.வி.ஏ. |
| 3 காரைக்குடி துணை மின் நிலையம் .. | .. | 14—10—80 | 1×50+1×25 எம்.வி.ஏ. |
| 4 திருவாரூர் துணை மின் நிலையம் .. | .. | 25—10—80 | 1×50 எம்.வி.ஏ. |
| 5 இங்கூர் தானியங்கும் துணை மின் நிலையம் | .. | 24—11—80 | 1×50 எம்.வி.ஏ. |

| அமைக்கப்பட்டு வரும் கம்பித் தொடர். | கிலோ மீட்டர். | முன்னேற்றம். (சதவீதத்தில்) | குறியீடு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 6 விழுப்புரம் தானியங்கும் துணை மின் நிலையம் | .. | 14—12—81 | 1×50 எம்.வி.எ. |
| 7 உடுமலைப்பேட்டை துணை மின் நிலையம் .. | .. | 25—1—82 | 1×80 எம்.வி.ஏ. |
| 8 சிங்கபெருமாள் கோவில் துணை மின் நிலையம் | .. | 4—7—72 | 2×75 எம்.வி.ஏ. |
| 9 திருவலத்தில் சிங்கரணைஸ் கண்டன்சர் .. | .. | 29—4—82 | 1×25 எம்.வி.ஏ. |
| அமைக்கப்பட்டு வரும் 230 கே.வி. துணை மின் நிலையம்: | | | |
| 1 ஆரணி துணை மின் நிலையம் .. | .. | 2×50 எம் வி.ஏ. 84 | 1982—83 |



## இணைப்பு. IV

### கிராமப்புற மின்வசதி.

கிராமப்புற மின்வசதியின் முன்னேற்றம்.

கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன:

| வரிசை எண்ணும் இனமும். | தற்போதுள்ளவை. | 1982-83 ஆம் ஆண்டில் மின் வசதி செய்யப்பட்டவை. 31—3—82 வரை. | 1982 ஏப்ரல் முதல் ஜூலை மாதம் வரை சாதனை. | 31—8—82 வரை. | சதவீதம். | 31-12-82 அன்று மின் வசதி செய்யப்பட வேண்டிய நிலுவையில் உள்ளவை. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 நகரங்கள் .. | 439 | 439 | .. | 439 | 100 | .. |
| 2 கிராமங்கள் .. | 15,735 | 15,611 | 16 | 15,627 | 99.31 | 108 |
| 3 சிற்றூர்கள் .. | 47,838 | 47,468 | 17+4 | 47,485+4 | 99.26 | 353 |
| 4 நகரங்கள், கிராமங்கள் மற்றும் சிற்றூர்கள். | 64,012 | 63,518 | 33+4 | 63,551+4 | 99.28 | 461 |
| 5 ஆதி திராவிடர் குடியிருப்புகள். | .. | 25,864 | 91 | 25,955 | .. | .. |
| 6 பம்பு செட்டுகள். | 12,00,000 | 9,45,520 | 18,972 | 9,64,492 | .. | .. |
| 7 குடிசைகளுக்கு மின் வசதி .. | | 4,50,112 | 52,564 | 5,02,676 | .. | .. |

தன்னிறைவுத் திட்டம்.

தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் குடிசைகளுக்கு மின்வசதி, மேல்நிலை மற்றும் தரைநிலை நீர்த் தொட்டிகளுக்கான மின்இணைப்பு ஆகியவற்றின் முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

1980–81 முதல் நிலை .. .. 69 வட்டாரங்கள்.

1980–82 இரண்டாம் நிலை .. 150 வட்டாரங்கள்.

| | மின் வசதி அளிக்கப்பட்ட குடிசைகளின் எண்ணிக்கை | | | மின் இணைப்புக் கொடுக்கப்பட்ட தரைநிலை மற்றும் மேல்நிலை நீர்த் தொட்டிகள். | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆதி திராவிடர் பகுதி. | ஆதி திராவிடர் அல்லாத மற்ற பகுதி. | மொத்தம். | ஆதி திராவிடர் பகுதி. மற்ற பகுதி. | ஆதி திராவிடர் அல்லாத மற்ற பகுதி | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1980–81 .. .. | 33,472 | 44,259 | 77,731 | 233 | 887 | 1,120 (முதல் நிலை. |
| 1981–82 .. .. | 33,645 | 54,919 | 93,564 | 199 | 517 | 636 (இரண்டாம் நிலை) |
| 1982–88 .. .. | .. | .. | .. | (மூன்றாவது நிலை). | 159 | வட்டாரங்கள். |

(12–4–1982 நாளிட்ட அரசாணை 545-ன் படி).

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 31–3–1982 வரை. | 58,326 | 81.692 | 1,40,018 | 552 | 1,127 | 1,679 |
| ஏப்ரல் முதல் நவம்பர் வரை. | 12,173 | 15,042 | 27,215 | 86 | 434 | 520 (மூன்றாம் நிலை). |
| 31–7–1982 வரை | 70,499 | 96,734 | 1,67,233 | 638 | 1,561 | 2,199 |
| மின் வசதி அளிக்கப்பட வேண்டிய நிலுவை. | 7,799 | 10,393 | 18,192 | 40 | 114 | 154* |

*நிலுவையிலுள்ள 154 தொட்டிகளில் 49-க்கான பணிகளை மின்வாரியம் ஏற்கெனவே முடித்துவிட்டது. ஆனால் தமிழ்நாடு குடிநீர் வாரியம் பஞ்சாயத்துக்கள் மின் இணைப்புப் பெற்றுக் கொள்ளவில்லை. 10 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன.



இணைப்பு

[5-7-82 தேதியிட்ட அரசாணை எண் (நிலை) 954படி 146 நகர பஞ்சாயத்துக்கள்]

| | மின் இணைப்புக் கொடுக்கப்பட்ட தரை நிலை மற்றும் மேல்நிலைத் நீர்த் தொட்டிகள். | | |
|---|---|---|---|
| | ஆதி திராவிடர் பகுதி. | ஆதிதிராவிடர் இல்லாத பகுதி. | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) |
| 31-7-82 .. .. .. .. | 22 | 54 | 76 |
| 1982 ஆகஸ்டு, நவம்பரில் .. | 7 | 13 | 20 |
| 30-11-92 வரை .. .. .. | 29 | 67 | 96 |
| நிலுவையில் உள்ள மின் இணைப்புகள் | .. | 6 | 6 |

கிராமப்புற மின்வசதிக் கழக வேலைகள்.

| | | 30-11-82 வரை. |
|---|---|---|
| எஸ். பி. ஏ. திட்டங்கள்— | | |
| (அ) 1—4—1977 முதல் அனுமதி அளிக்கப்பட்டவை | | 115 |
| கடன்— | | |
| (ஆ) கிராமப்புற மின் வசதி கழகம் வங்கிகள் .. | ரூ. 17.25 கோடி<br>ரூ. 26.36 கோடி | 43.61 கோடி |
| மொத்தம் .. | ரூ. 43.61 கோடி | |



| | |
|---|---|
| (இ) திட்டமிடப்பட்டுள்ள விவசாய மின் இணைப்புகள் | 70,658 |
| (ஈ) கொடுக்கப்பட்ட விவசாய மின் இணைப்புகள் .. .. .. | 34,759 |
| (உ) நிலுவையிலுள்ள மின் இணைப்புகள் .. .. ... .. | 35,899 |

| விவரம். | 1981-82 | | 1982-83 | |
|---|---|---|---|---|
| | குறியீடு. | சாதனை. | குறியீடு. | சாதனை. (ஏப்ரல் முதல் ஜூன் வரை). |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 விவசாய பம்பு செட்டுகள் .. | 10,000 | 13,075 | 10,000 | 5,990 |
| 2 கிராமங்களுக்கு மின் வசதி .. | 28 | 24 | 29 | 3 |

* 1981-82 ஆம் ஆண்டு இறுதியில் அனுமதி அளிக்கப்பட்ட 61 திட்டத்துக்கான 39,817 பம்பு செட்டுகளுக்கும் உட்பட்டது.

| விவரம். | 1981–82 | | 1982-83 | |
|---|---|---|---|---|
| | குறியீடு. | சாதனை. | குறியீடு | சாதனை (ஏப்ரல் முதல் ஜூன் வரை). |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 விவசாய பம்பு செட்டுகள் .. | 10,000 | 13,075 | 10,000 | 5,990 |
| 2 கிராமங்களுக்கு மின் வசதி .. | 28 | 24 | 29 | 3 |

கிராமப்புற மின்வசதிக் கழக கடன்.

(ரூபாய் கோடியில்).

| விவரம். | 1981-82 | | 1982-83 | |
|---|---|---|---|---|
| | திட்டம். | கொடுக்கப் பட்ட நிதி. | திட்டம் | கொடுக்கப் பட்ட நிதி. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| நடைமுறை திட்டங்கள். | | | | |
| (அ) எஸ்.பி.ஏ. | 1.20 | 1.40 | 2.75 | 1.00 |
| (ஆ) ரசாரா(ஆ) சாதாரணம் (எஸ்.பீ.ஐ. எஸ்பிடி. ஓஏ.ஒபி. எஸ்.யூ.) | 1.60 | 1.64 | 3.00 | 0.18 |
| (இ) ஏஸ்.ஐ... | 1.50 | 1.27 | .. | .. |
| (ஈ) தனிக் கடன் | .. | 0.03 | .. | .. |
| பகுதி மொத்தம் | 4.30 | 4.34 | 5.70 | 1.18 |
| புதிய திட்டங்கள். | | | | |
| (அ) எஸ்.பி.ஏ. | 1.60 | 3.18 | 1.50 | .. |
| (ஆ) சாதாரணம் | 1.62 | 1.09 | 0.54 | .. |
| பகுதி மொத்தம் | 3.22 | 4.27 | 2.04 | .. |
| மொத்தம் | 7.52 | 8.61 | 7.74 | 1.18 |

# இணைப்புகள்

## இணைப்பு ஐந்து.

### 1980–81 மற்றும் ஆண்டுகளில் மின்வெட்டு விபரம்.

| நாள். | விவசாயம். | விட்டு உபயோகம். | குழைவழுத்த தொழிற் சாலைகள். | குறைவழுத்த வணிகம். | முக்கிய பணிகள். | உயர் அழுத்த தொழிற் சாலைகள். | உயர் அழுத்த வணிகம். | குறைவு மற்றும் உயர் அழுத்த உச்சத்தேவையில் வெட்டு. |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1–3–1980 முதல் 6–7–1980 வரை. | மின் வெட்டு இல்லை. | மின் வெட்டு இல்லை. | மின் வெட்டு இல்லை. | மின் வெட்டு இல்லை. | மின் வெட்டு இல்லை. | தொடர்ச்சி 30 சத வீதம் தொடர்ச்சி யற்ற 60 சதவீதம். | பொதுக் காரியங்கள் 30 சதவீதம் (மின் கட்டணம் V). | உயர் அழுத்த தொடர் இயக்க தொழிற்சாலைகள், 30 சதவீதம் உயர் அழுத்த தொடர்ச்சி யற்று இயங்கும் தொழிற்சாலை 40 சதவீதம் உயர் அழுத்த பொதுக் காரியங்கள் 20 சத வீதம் (மின் கட்டணம் V). |
| 7–7–1980 முதல் 16–7–1980 வரை. | டிை | டிை | டிை | டிை | டிை | மின்வெட்டு இல்லை. | மின்வெட்டு இல்லை. | தொடர்ந்து மற்றும் தொடரா இயக்கத் தொழிற்சாலைகள் பொதுக்காரியங்கள் 20 சதவீதம். |
| 16–7–1980 | .. | .. | .. | .. | .. | — | — | உச்சத்தேவையை வெட்டு நீக்கப் பட்டது. |
| 1–12–1980 முதல் 8–3–1981 வரை. | .. | .. | 75 குதிரை திறனுக்கு அதிகம் இணைப்பு பளு உள்ள தொழிற் சாலைகள் 30 சத வீதம். | டிை | டிை | தொடர்ச்சி 30 சத வீதம் தொடர்ச்சி யற்ற 30 சதவீதம். | மின்வெட்டு இல்லை. | தொடர்ந்து மற்றும் தொடரா இயக்கமுள்ள தொழிற்சாலைகள் 30 சதவீதம். |
| 9–3–1981 முதல் 18–6–1981 வரை. | மின் வெட்டு. இல்லை. | | டிை | மின் வெட்டு இல்லை. | 15 சத வீதம். | டிை | பொதுக்காரியங்கள் 30 சதவீதம். | தொடர் மற்றும் தொடரா இயக்க தொழிற்சாலைகள் மற்றும் பொதுக்காரியங்கள் 30 சதவீதம். |
| 19–6–1981 முதல் 21–6–1981. | டிை | டிை | டிை | டிை | டிை<br>மின் வெட்டு இல்லை. 75 குதிரை திறனுக்கு அதிகம் இணைப்பு பளு உள்ள தொழிற் சாலைகள் 30 சத வீதம். | டிை | டிை | தொடர் மற்றும் தொடரா இயக்க தொழிற்சாலைகள் மற்றும் பொதுக்காரியங்கள் 30 சதவீதம் மற்றும் முக்கிய பணி கள் 15 சதவீதம். |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 22-6-1981 முதல் 24-6-1982 வரை. | மின் வெட்டு இல்லை. | மின் வெட்டு இல்லை. | மின் வெட்டு இல்லை. | மின் வெட்டு இல்லை. | மின் வெட்டு இல்லை | மின்வெட்டு இல்லை. | மின்வெட்டு இல்லை. | தொடர் மற்றும் தொடரா இயக்க தொழிற்சாலைகள் மற்றும் பொதுக் காரியங்கள் 30 சதவீதம் மற்றும் முக்கிய பணிகள் 15 சதவீதம். |
| 25-6-1981 .. | | மின்வெட்டு நீக்கப்பட்டது. | | | | | | |
| 4-3-1982 முதல் 30-6-1982. வரை. | மின் வெட்டு இல்லை. | மின் வெட்டு இல்லை. | இல்லை. | வெட்டு இல்லை. | வெட்டு இல்லை. | டிட்டோ | டிட்டோ | 2 எம். வி. ஏ-க்கு அதிகமான உயர் அழுத்தத் தொழிற்சாலை 25 சதவீதம், உயர் அழுத்த பஞ்சாலைகள் 45 சதவீதம். |
| 29-12-1982 .. | மின் வெட்டு இல்லை. | உயர் அழுத்த 15 சத வீதம் குறை வழுத்தத்தில் மின் வெட்டு இல்லை. | 75 குதிரை திறனுக்கு மேல் 45 சத வீதம். | 75 குதிரை திறனுக்கு மேல் 45 சத வீதம். .. | 15 சத வீதம். | 29-12-1982—ல் இருந்து தொடர்ச்சியாக 15 நாட்களுக்கு உயர் அழுத்த தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் கொடுக்கப்படவில்லை. | 45 | சத வீதத்தில்.<br>எல்லா உயர் அழுத்த தொழிற்சாலைகள் .. 100<br>உயர் அழுத்த வணிகம் .. 30<br>உயர் அழுத்த அத்தியாவசியமான நிறுவனம் .. 15<br>உயர் அழுத்த வீட்டு நிர்வாகம். 15 |
| 1-1-1983 .. | மின் வெட்டு இல்லை. | உயர் அழுத்த 250 யூனிட்டுக்கு 15 சதவீதம். | மின் கட்டணம் VIII-ல் மூன்று வழி தொடருக்கு சதவீதம். | மின் கட்டணம் VIII-ல் மூன்று வழி தொடரில் 45 சதவீதம். | 15 சத வீதம் | 29-12-1982—ல் இருந்து தொடர்ந்து 15 நாட்களுக்கு மின்சாரம் இல்லாத உயர் அழுத்த தொழிற்சாலைக்கு 60 சதவீதம். | 45 | எல்லா உயர் அழுத்த தொழிற் சாலைகள் .. 59<br>உயர் அழுத்த வணிகம் .. 30<br>உயர் அழுத்த அத்தியாவசியமான நிறுவனம்.. .. 15<br>உயர் அழுத்த வீட்டு உபயோகம் .. .. 15 |
| 14-1-1983 .. | மின் வெட்டு இல்லை. | டிட்டோ | டிட்டோ | டிட்டோ | 15 சத வீதம். | எல்லா உயர் அழுத்த தொழிற்சாலைகள் 60 சதவீதம். | 45 | எல்லா உயர் அழுத்த தொழிற் சாலைகள் .. .. 67<br>உயர் அழுத்த பணிகள் .. 30<br>உயர் அழுத்த அத்தியாவசியமான நிறுவனம்.. .. 15<br>உயர் அழுத்த வீட்டு நிர்வாகம் .. .. 15 |
| 1-7-1982 .. | .. | .. | .. | .. | மின் வெட்டு நீக்கப் பட்டது. | | | |
| 3-10-1982 முதல் 17-11-1982. வரை | மின் வெட்டு இல்லை. | மின் வெட்டு இல்லை. | 75 குதிரை திறனுக்கு அதிகம் 30 சத வீதம். | 75 குதிரை திறனுக்கு அதிகம் 30 சத வீதம். | மின் வெட்டு இல்லை. | 30 சதவீதம். | 30 சதவீதம். | மின்வெட்டு இல்லை. |

| | | | | | | (7) | (8) | (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 18-11-1982 முதல் 11-12-1982. | மின் வெட்டு இல்லை. | மின் வெட்டு இல்லை. | 75 குதிரை திறனுக்கு அதிகம் 45 சத வீதம் விடுமுறை யுடனும் 60 சத வீதம் விடுமுறை யின்றி. | 75 குதிரை திறனுக்கு மேல் 45 சத வீதம். | மின் வெட்டு இல்லை. | விடுமுறையுடன் 45 சதவீதம் விடுமுறையினை 60 சதவீதம். | 45 சதவீதம். | மின்வெட்டு இல்லை. |
| 13-2-1982 முதல் 28-12-1982. | ஷை | உயர் அழுத்தத் திற்கு 15 சத வீதம் குறை வழுத்தத் திற்கு மின் வெட்டு இல்லை. | 75 குதிரை திறனுக்கு மேல் 45 சத வீதம். | 75 குதிரை திறனுக்கு மேல் 45 சத வீதம். | 15 சத வீதம். | 2 MYA உச்ச தேவைக்கு மேல் 60 மற்ற உயர் அழுத்தத் தொழிற் சாலைக்கு 45 சத வீதம். | 45 சதவீதம். | சத வீதம்.<br>எம்.டி. 2 எம்.வி.ஏ.-க்கு மேல் உள்ள உயர் அழுத்த தொழிற்சாலைக்கு 59<br>மற்ற உயர் அழுத்த தொழிற் சாலைகளுக்கு .. 40<br>உயர் அழுத்த வணிகம் .. 30<br>உயர் அழுத்த அத்தியாவசிய நிறுவனம் .. 15<br>உயர் அழுத்த வீட்டு உப யோகம் .. .. 15 |

சென்னை-600 008.
135975